॥ श्रीः ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

ஸர்வ வேதாந்த தாத்பர்ய ஸங்க்ரஹமான

ஸ்ரீமத்

# ரஹஸ்யத்ரய ஸாரம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமிகளால்

எளிதான தமிழ் நடையில்

எழுதப்பட்ட வ்யாக்யானத்துடன் கூடியது

சென்னை, கோமளேசுவரன் பேட்டை

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ப்ரசாரண ஸபை

1920

# முகவுரை.

வேதம், வேதாந்தம், ஆகமம், இதிஹாஸம், புராணம், ஸூத்திரம், திவ்ய பிரபந்தம், ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள் முதலிய பல முகங்களால் வெளியிடப்பட்டிருக்கும் அத்யாத்ம சாஸ்திர ஸம்பிரதாயமென்னும் ஸ்ரீ விசிஷ்டாத்வைத வேதாந்தமதத்தை அந்தணரந்தியரெல்லேயுள் நின்ற அனைவரும் உணர்ந்து ஆஸ்திகர்களாய்ப் போந்து கடைத்தேறும் பொருட்டுக் கடல்கடைந் தமுதங்கொண்டாற்போல் அத்யாத்ம சப்தராசிகளென்னும்படியான ஸம்ஸ்க்ருத த்ராவிட ரூபங்களான உபயவேதாந்தங்களினுடையவும் ஸாரதமாம்சங்களைத் திரட்டி பிரமாணங்களோடு மிகுதி குறைவற ச்ரோதவ்ய சேஷமில்லாதபடி எளிய மணிப்ரவாள நடையில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்திருக்கும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார மென்னும் இந்நூலை ஆஸ்திகர்கள் யாவரு மறிவார்கள். காலவைகுண்யத்தால் இவ்வருமையான கிரந்தம் ப்ரசாரத்திலிருந்து மறைந்து வருவதையும், இதன் பொருளையும் பெருமையையும் எளிதாய் விளக்கும்படியான தமிழ் வ்யாக்யான மொன்று மிகவும் அவச்யமென்பதையும் கணிசித்துச் சில ஆஸ்திகர்கள் நியமித்ததை முன்னிட்டு இக்ரந்த ப்ரசாரணமாகிற கைங்கர்யத்தை ஆரம்பித்தோம்.

இதற்கு உற்சாகத்துடன் முதலில் இந்த ஸபையின் அத்யக்ஷரான திருவல்லிக்கேணியிலிருக்கும் ஸ்ரீ உப. ராஜமன்னார்கோவில் ஈயுண்ணி எஸ். ராஜகோபாலாசார்யார் ஸ்வாமி முன் வந்து ரூ.500 கொடுத்துதவியதும், அதன்பின் இதனடியில் கண்டிருக்கும் ஸ்ரீமான்களும் விசேஷமாக உபகரித்ததும், ஸ்ரீ உப. வே. திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் நரஸிம்மாசார்ய ஸ்வாமிகள் இந்த க்ரந்தத்துக்கு ஆசார்யாதி ஸம்மதமான இந்த எளிய வ்யாக்யானத்தை

இயற்றி அதை ஸ்வயம்ப்ரயோஜனமாக நமக்களித்து இக்கைங்கர்யத்தைத் தலைக்கட்டிக் கொடுத்ததும், ஸர்வஸுஹ்ருத்தான சரண்யனுடையவும் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுடையவும் அனுக்ரஹ விசேஷங்களென்பதற்கு ஸந்தேஹமில்லை. இவர்களெல்லோருக்கும் அடியோங்களுடைய ப்ரணாமத்தை இதன் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## த்ரவ்ய ஸஹாயம் செய்து உதவி புரிந்தவர்களின் திருநாமங்கள்.

—*—

| | | |
|---|---|---|
| ஸ்ரீ. உப. ஈயுண்ணி எஸ். ராஜகோபாலாசார்யார், புரொப்ரைட்டர், எஸ். ஆர். சாரி அன்டு கம்பெனி, மதராஸ் ... ... ... | | 500 |
| ,, சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் நரஸிம்மாசார்யார் (சிஷ்யர்கள்) ... ... | | 250 |
| கோமடம் ஸ்ரீநிவாஸய்யங்கார் ... | 25 | |
| களத்தூர் ராகவாசார்யார் ... | 30 | |
| அரும்புலியூர் வேதம் சேஷாசார்யார் ... | 30 | |
| அரும்புலியூர் கௌடி ஸ்ரீநிவாஸாசார்யார் | 25 | |
| வீரவல்லி ஸ்ரீநிவாஸாசார்யார் ... | 25 | |
| கங்கையாடி ராமய்யங்கார் ... | 15 | |
| நடாதூர் ஸுந்தராசார்யார் ... | 25 | |
| கோமடம் ரங்கஸ்வாமி அய்யங்கார் ... | 10 | |
| காளி ஸ்ரீநிவாஸாசார்யார் ... | 10 | |
| சில்லரை வஸூல் ... | 55 | |
| ,, டி. நரஸிம்மய்யங்கார், ஹைகோர்டு வக்கீல், திருவல்லிக்கேணி ... ... ... | | 100 |
| ,, ஸர் வி. ஸி. தேசிகாசார்யார், மைலாப்பூர் ... | | 50 |
| ,, ராவ் பஹதூர் என். ஸி. ராஜகோபாலாசார்யார், எழும்பூர் ... ... ... | | 50 |
| ,, ராவ் ஸாஹெப் வி. டி. கிருஷ்ணமாசார்யார், விஜயநகரம் ... ... ... | | 25 |

| | | |
|---|---|---|
| ஸ்ரீ உப. | கே. கோவிந்தாசார்யார், பெஸ்டு அண்டு கம்பெனி, மதராஸ் ... ... ... | 50 |
| ,, | வி. ஸி. சேஷாசார்யார், ஹைகோர்டு வக்கீல், மைலாப்பூர் ... ... ... | 25 |
| ,, | ராய்ஸாஹெப் எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், யுனிவர்ஸிடி புரொபெஸர், மைலாப்பூர் ... | 25 |
| ,, | கே. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஹைகோர்டு வக்கீல், மைலாப்பூர் ... ... ... | 50 |
| ,, | டி. வி. நீலமேகாசார்யார், ஹைகோர்டு வக்கீல், கீள்பாக்கம் ... ... ... | 15 |
| ,, | ஹானரபில் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார், அட்வொகேட் ஜெனரல், மைலாப்பூர் ... ... | 200 |
| ,, | பூண்டி துரைஸாமி அய்யங்கார், ஹைகோர்டு வக்கீல், மதராஸ் ... ... ... | 10 |
| ,, | காயார் வி. தேசிகாசார்யார், ஹைகோர்டு வக்கீல், மதராஸ் ... .. ... | 10 |
| ,, | வி. எஸ். வெங்கடாசார்யார், ஹைகோர்டு வக்கீல், எழும்பூர் .. ... ... | 25 |
| ,, | ஸ்ரீ வேங்கடாசார்யார், தேனார்விளாகம் ... | 25 |
| ,, | என். எஸ். நரஸிம்மாசார்யார், டிஸ்டிரிக்டு முன்ஸிப், புரோதத்தூர் ... ... | 25 |
| ,, | ராவ் பஹதூர் டி. விஜயராகவாசார்யார், திவான், கொச்சி ... ... ... | 50 |
| ,, | ரங்கநாத தாதாசார்யார், லக்ஷ்மிநாயக்கன்பாளையம் | 250 |
| ,, | ஆராவமுத அய்யங்கார், ஹைகோர்டு வக்கீல், பெங்களூர் ... ... ... | 25 |
| ,, | கே. பாஷ்யம் அய்யங்கார், ஹைகோர்டு வக்கீல், மைலாப்பூர் ... ... ... | 20 |
| ,, | எஸ் ராகவய்யங்கார், ஸப் ஜட்ஜ், திருச்சினாப்பள்ளி | 10 |
| ,, | என். எஸ். ராமஸ்வாமி அய்யங்கார், ஹைகோர்டு வக்கீல், கோயம்பத்தூர் ... ... | 25 |
| ,, | எஸ். ஆர். ரங்கஸாமி அய்யங்கார், வக்கீல், ஈரோடு. | 20 |
| ,, | கே. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், ரெவின்யூ கமிஷனர், பெங்களூர் ... ... ... | 15 |

ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஹைகோர்டு வக்கீல்,
மதராஸ் ... ... ... 50

,, ஏ. வி. கோபாலாசார்யார், ஹைகோர்டு வக்கீல்,
திருச்சிறுப்பள்ளி ... ... ... 20

,, என். கோபாலஸ்வாமி அய்யங்கார், ஸ்பெஷல்
டிப்டி கலெக்டர், மைலாப்பூர் ... ... 25

,, ராவ் பஹதூர் வி. ஆர். திருவேங்கடாசார்யார்,
ஜட்ஜ், மைலாப்பூர் ... ... 25

,, ராமஸ்வாமி அய்யங்கார், மேலப்பாளையம் ... 10

,, ஸ்ரீநிவாஸாசார்யார், மேலப்பாளையம் ... 10

,, கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஹைகோர்டு
வக்கீல், திருவல்லிக்கேணி ... ... 10

,, டி. ஸி. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஹைகோர்டு வக்கீல்,
மதுரை ... ... ... 25

,, டி. டீ. ஸ்ரீநிவாஸமூர்த்தி அய்யங்கார், நியோபதி
டாக்டர், திருவஹீந்திரபுரம் ... ... 10

,, வி. பத்மநாபய்யங்கார், ஹைகோர்டு வக்கீல்,
மைலாப்பூர் ... ... ... 10

,, நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யார், ஹைகோர்டு வக்கீல்,
புரசைபாக்கம் ... ... ... 25

,, வன்பாக்கம் வெ. தேசிகாசார்யார், ரங்கபவனம்,
எழும்பூர் ... ... ... 25

,, எஸ். டீ. கிருஷ்ணய்யங்கார், ஹைகோர்டு வக்கீல்,
மதுரை ... ... ... 25

,, ஐயா யாமுந தாதாசார்யார், ஸ்ரீரங்கம் ... 40

ஸர்வ வேதாந்தஸாரமான இந்த க்ரந்தம் 'திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ' என்று நாடெங்கும் பரவிச் செழித்தோங்கும் வண்ணம் ச்ரிய:பதியான புருஷோத்தமனை அநவரதம் ப்ரார்த்திக்கின்றோம்.

நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யார்,
வன்பாக்கம் வெ. தேசிகாசார்யார்,
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸார ப்ரசாரண ஸபையின்
கார்யதரிசிகள்.

மதராஸ்,
10—2—20.

# உபோத்காதம்.

॥ श्रीः ॥

॥ श्रीमते निगमान्त महादेशिकाय नमः ॥

॥ श्रीमते श्रीनिवासरामानुजमहादेशिकाय नमः ॥

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரமென்னும் இந்த க்ரந்தத்தை அருளிச்செய்த ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் கலி 4370-வது விபவ (இங்கிலீஷ் 1268) வருஷத்தில் புரட்டாசிமீ சிரவண நக்ஷத்திரத்தில் காஞ்சீபுரத்தில் ஹிமவனம் என்றும், திருத்தண்கா என்றும், சொல்லப்படுகிற விளக்கொளி (தீபப்ரகாசர்) எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் நியமித்த எழுபத்து நாலு ஸிம்ஹாஸனாதிபதிகளில் ஒருவராய் விச்வாமித்திர குலதிலகரான அநந்த ஸோமயாஜியாருடைய திருப்பௌத்திரரான அநந்தஸூரியாருக்கும் தோதாத்ரி யம்மைக்கும் திருக்குமாரராக அவதரித்தருளினார். இவருடைய அவதார வைபவத்தையும் ப்ரபாவத்தையும் கணிசித்து இவர் குமாரரான நயினார் 'वेंकटेशावतारोयं तत्घण्टांशोथवाभवेत्। यतींद्रांशोथवेत्येवं वितर्क्यायास्तु मंगळं॥' என்றும், 'அன்றிவ்வுலகினையாக்கி அரும்பொருள் நூல் விரித்து ** பின்னும் வென்றிபுகழ் திருவேங்கடநாதனென்னும் குருவாய்நின்று நிகழ்ந்து' என்றும் அருளிச்செய்தார். இவர் திருவேங்கடமுடையானுடைய அவதார விசேஷம் என்பது ஸம்ப்ரதாய நிஷ்டர்கள் அறிந்த விஷயம். இத்தைக் கணிசித்திறே 'श्रीमद्वेंकटनाथार्यै' என்றனுஸந்தித்தார்கள். திருவேங்கடமுடையானே தமது ஸ்வர்ண கண்டையை இவர் தாய் தந்தையர்க்குக் கொடுத்ததாக அவர்கள் கனவுகண்டு அந்தவ்யாஜமடி

திருவவதாரம்.

யாக இவர் அவதரித்தார் என்பதைக் கணிசித்து 'तत्घण्टांशः' என்றருளிச்செய்தது. ஸ்ரீபாஷ்யகாரர் அவதார ஸமாபன தசையில் கலங்கியிருந்தசிஷ்யர்களைப்பார்த்து கொங்குப் பிராட்டியைக்கேட்டு ஸம்சய நிவ்ருத்திசெய்து கொள்ளும்படி அவர்களை நியமித்தார். அவர்கள் அப்படியே அப்பிராட்டியிடம் செல்ல அவளும் ஸ்ரீபாஷ்யகாரர் திருவடி ஸம்பந்திகளான அம்மஹாத்மாக்களை ஸேவித்து அவர்கள் நடுவில் உட்கார்ந்து, அலைந்திருந்த தன் கூந்தல்களை எண்ணை தடவி வாரி முடித்து, சிவந்த நிறமுள்ள பட்டுக் கயிற்றினால் ஒரு கட்டுக்கட்டி, அதன்மேல் வெண்மையான பட்டுக் கயிற்றினால் பின்னும் அழுத்தமாய்க் கட்டிவிட்டு, அவர்களை மறுபடியும் ஸேவித்து, 'தேவரீர்கள் என்னைத் தேடிவந்த கார்யம் இதுதான், இனித் தேவரீர்கள் எழுந்தருளலாம்' என்று விண்ணப்பம் செய்தாள். இதனபிப்ராயத்தையறியாமல் அவர்கள் திரும்பவும் ஸ்ரீபாஷ்ய காரரிடம் விஜ்ஞாபிக்க, அவர், அவள் வேதங்களின் அவதாரமென்றும், அவளுடைய அலைந்த கூந்தல்கள் துர்வாதிகளின் அபார்த்தங்களினால் கலைக்கப்பட்ட வேத வாக்யங்கள் என்றும், சிவந்த கயிற்றினால் கட்டியது 'நாம் ஸந்யாஸி ரூபமாய் அவதரித்து வேதார்த்தங்களை ஒன்று சேர்த்து பரிஷ்கரித்தது' என்றும், பிறகு வெண்கயிற்றினால் அழுந்தக்கட்டியது 'நாமே இன்னொரு அவதாரம்செய்து க்ரஹஸ்தாச்ரமத்திலிருந்து அவைகளை ப்ரதிவாதிகள் அசைக்கவொண்ணாதபடி உறுதிப்படுத்தப்போகிறோம்' என்றும் அபிப்ராயங்களைத் தெரிவிக்கின்றனவாகையால் சோகிக்க வேண்டாம் என்று தேற்றினார். ஸ்ரீயதிராஜஸப்ததியில் 'चिरन्तनसरस्वती चिकुरबन्धसैरन्ध्रिका:' என்னும் ச்லோகத்தில் அபிப்ரேதமென்று பெரியோர்கள் சொல்லும் இந்தச் சரித்திரம் இங்கு 'यतींद्रांशोथवा' என்று அருளிச்செய்யப்பட்டது.

**அவதார வைபவம்.**

'आप्रादुर्भावं प्रकटितपरब्रह्म भावः' என்கிற ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தைப் போலவே ஸ்ரீ தேசிகனும் தம்முடைய அதி மானுஷ சக்தியை வெளியிட்டருளினார் என்பது இவர் சரித்திரத்தில் பல வ்ருத்தாந்தங்களாலும் தெரியவரும். உதாஹரணமாய் இவர் ஐந்து வயதிலேயே ஸ்ரீ அம்மாள் காலக்ஷேப கோஷ்டிக்குத் தம்முடைய மாதுலரான அப்புள்ளாருடன் சென்று அவரை தண்டன் ஸமர்ப்பித்து நிற்குங்

கால் இவருடைய திவ்ய தேஜஸ்ஸைப் பார்த்து மோஹித்து அதிலீடு பட்டு காலக்ஷேபத்தில் விட்ட இடம் தெரியாமல் சிஷ்யர்கள் திகைத்து நிற்கும்பொழுது இவர் அந்த இடத்தை எடுத்துச்சொல்லி அர்த்த விசேஷங்களை நிரூபிக்க, ஸ்ரீ அம்மாளும் 'प्रतिष्ठापित वेदान्तः प्रतिक्षिप्त बहिर्मतः। भूयास्त्रैविद्यमान्यस्त्वं भूरिकल्याण भाजनं॥ (வேதாந்தங்களை ஸ்தாபித்து புறச் சமயங்களை தோற்பித்து வேதங்களும் வைதிகர்களும் கொண்டாடும்படி அநந்த கல்யாண குணங்களுக் கிருப்பிடமாவாய்)' என்று ஆதரவுடன் அனுக்ரஹித்ததை இவர் தாமே தம் க்ரந்தங்களில் பல இடங்களில் அருளிச்செய்திருக்கிறார். ஒரு ராத்திரியில் ஒரு யாமத்தின் பாதியில் ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தை யருளிச் செய்ததும், ப்ரபோதசந்திரோதயத்தைப் பாரீர் என்று ப்ரதிவாதி கொடுக்க அதே க்ஷணத்தில் ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தை அருளிச் செய்ததும் லோகப்ரஸித்தமிறே.

**வித்யாப்யாஸம்.**

இவர் வேதாந்தோதயனர் என்று விளங்கும் மடப்பள்ளியாச்சானுடைய கொள்பேரனும் தமது மாதுலருமான வாதிஹம்ஸாம்புதாசார்யர் என்று பெயர் பெற்ற ஆத்ரேயராமானுஜர் (அப்புள்ளார்) ஸ்ரீ பாதத்திலே, ஸ்ரீக்ருஷ்ணன் ஸாந்தீபினியினிடத்தில் அறுபத்து நாலு கலைகளையும் அறுபத்துநாலு நாள்களில் அப்யஸித்தாப்போலே இருபது வயதிற்குள்ளே ஸகல சாஸ்திரங்களையும் சிக்ஷித்தார் என்பதை 'विंशत्यब्दे विश्रुत नानाविध विद्यः' என்றிவர் தாமும், 'रामानुजार्यादात्रेयान्मातुलात्सकलाः कलाः। अवाप विंशत्यब्दे' என்று தூப்புல் நயினாரும் அருளிச்செய்தார்கள்.

**குணநிசயம்.**

இதற்குப்பிறகு தம்மாசார்யனால் உபதேசிக்கப்பட்ட கருடமந்திரத்தை ஆவ்ருத்திசெய்வதற்காக மஹாநதி, திவ்ய க்ஷேத்திரம், பர்வதம் இம்மூன்றும் ஓரிடத்தில் சேர்ந்த மஹாஸித்தி க்ஷேத்திரமாகிய திருவஹீந்திரபுரத்தை நாடி ஸித்திபெற்று, ஸ்ரீகருடன் உபதேசித்த ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவ மந்திரத்தை ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மன் ஸந்நிதியில் ஓர் அச்வத்த வ்ருக்ஷத்தின் அடியில் ஆவ்ருத்திசெய்து ஸ்ரீஹயக்ரீவ ப்ரஸாதத்தாலே 'அருள்தருமடியவர்பால் மெய்யைவைத்துத் தெருள்தரநின்ற தெய்வ நாயகா' என்றிவர் தாமும், 'तुरगवदनतेजो बृंहिताश्चर्यशक्तिः' என்று பின்

புள்ளாரும் அனுஸந்தித்தபடியே அபரிமித ஜ்ஞாநசக்தியுக்தராய், விசுவாமித்திரருபதேசத்துக்குப் பிறகு ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகனுக்கு அஸ்திரதேவதைகள் நேரில் நின்று 'इमेस्म परमोदार किंकरास्समुपस्थिताः' என்று விண்ணப்பம் செய்ததுபோல வித்யாபிமானி தேவதைகளெல்லாம் தாங்களேவந்து வரிக்கும்படியான விசேஷ கடாக்ஷத்தைப் பெற்றார். இதை ஸ்ரீஹயக்ரீவஸ்தோத்திரத்தில் 'मनोगतं पश्यति यस्सदा त्वां मनीषिणां मानसराजहंसं। स्वयं पुरो भावविवाद भाजः किं कुर्वते तस्य गिरो यथार्हं ॥' என்றருளிச் செய்தார். இதைத் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீரங்கநாயகியும் பின்பு 'ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர:' என்றிவருக்குத் திருநாம மனுக்ரஹித்தாள். இப்படி இவருக்கு அஸாதாரணமான ஜ்ஞான வைபவத்தை 'दूषण्यादौ तार्किकाग्रेसरत्वं दृश्यं श्रीमद्वेंकटेशस्य सूरेः। अन्या लभ्या चातुरी पद्यगुंभे सर्वज्ञत्वं तत्वमुक्ताकलापे ॥ (இவர் தார்க்கிகர்களுக்குள் ச்ரேஷ்டர் என்பதைச் சததூஷணீ முதலிய க்ரந்தங்களிலும், ஸர்வஜ்ஞரென்பதையும், கவிதையில் பிறர்க்கு நிலமல்லாத சாதுர்யத்தையுடையவரென்பதையும் ஸ்ரீதத்வமுக்தாகலாபத்திலும் அறியலாம்)' என்று ஸ்ரீதொட்டயாசார்யர் அருளிச்செய்தார் இப்படிப்பட்ட ஜ்ஞானத்துக்கனுகுணமான இவருடைய வைராக்யம் விஜயநகரம் மஹாராஜாஸபையில் வித்யாரண்யருக்கும் அக்ஷோப்யமுனிவருக்கும் நடந்த விவாதத்தில் மத்யஸ்தராயிருக்கும்படிக்கும் அதற்காக விசேஷ தனத்தை ஸமர்ப்பிப்பதாகவும் ப்ரார்த்தித்தகாலத்தில் அதற்குப் பதிலாக எழுதியனுப்பிய வைராக்யபஞ்சகத்தின் அர்த்தானுஸந்தானத்தாலும், ஸ்ரீதொட்டையாசார்யர் அருளிச்செய்த 'घनानि * * समलोष्टरुक्मं ॥' என்கிற வைபவ ப்ரகாசிகா ச்லோகத்தினாலும், மற்றும் இவர் சரித்திரத்தினாலும் ஸுவ்யக்தம். இப்படிப்பட்ட அஸாதாரணமான வைபவத்தைத் திருவுள்ளம்பற்றி 'ज्ञानवैराग्य भूषणं' என்றனுஸந்தித்தார்கள்.

**திவ்யதேச ப்ரதிஷ்டாதிகள்.**

இவர் இந்த லோகோபகாரமாகச் செய்த திவ்யதேச ஸ்தாபநம் முதலியவைகளும் ஸ்ரீவிசிஷ்டாத்வைத மதாபிவ்ருத்திக்கும், ஜ்ஞான ப்ரவர்த்தனத்துக்கும் செய்திருக்கும் விசேஷ உபகாரங்களும் எண்ணிறந்தவை. அவைகளில் ப்ரதானமானவை—ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் துலுக்க கலாபத்தில் வெளியில் எழுந்தருளப்பண்ணப்பட்டிருந்த ஸ்ரீரங்கநாதனை செஞ்சி ராஜாவாகிய கோபணார்யனைக்

கொண்டு மறுபடியும் திருப்ரதிஷ்டாதிகள் செய்வித்தருளினதும், தில்லைத் திருச்சித்திரகூடத்திலிருந்து கீழ்த்திருப்பதியில் எழுந்தருளப்பண்ணப்பட்டிருந்த ஸ்ரீகோவிந்தராஜனை மறுபடியும் அவ்விடத்தில் திருப்ரதிஷ்டை செய்வித்தருளினதும், ஸ்ரீரங்கத்தில் ஒரு திருவத்யயன உத்ஸவத்தில் ஆழ்வாராதிகளுக்கு ப்ரதிஷ்டையும் ஆராதனுதிகளும் அவர்களுடைய ப்ரபந்த படநாதிகளும் கூடாதென்று ஆக்ஷேபித்தவர்களை நிராகரித்து அவைகளை ஸ்தாபித்தருளினதும், பெருமாள் கோயிலில் ஸ்ரீதேவப் பெருமாளுக்கு ப்ரும்மோத்ஸவம் நடக்கும்பொழுது சைவர்கள் நடத்தக்கூடாது என்றுக்ஷேபிக்க ச்ரிய:பதியின் பாத்வத்தை ஸ்தாபித்து வாதிகளை நிரஸித்து உத்ஸவாதிகளை யதாக்ரமம் நடத்திவைத்தருளினதும். இச்சமயத்தில் ஸ்ரீவரதராஜன் தம்முடைய திருச்சின்னங்களில் ஒன்றை இவருக்கு பிருதாக அனுக்கிரகித்தது இப்போதும் அந்த ஸந்நிதியில் ஒற்றைத்திருச்சின்னம் ஊதிவருவதினாலும், வைசாக கருடோத்ஸவத்தில் ஸ்ரீதேசிகனுக்கு நடக்கும் விசேஷமர்யாதைகளினாலும் பிரஸித்தம்.

கிரந்தங்கள்.

இவர் ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின்படி தத்வஹித புருஷார்த்தங்களை நிருபித்திருக்கும் ப்ரகாரம்—பரதத்வமான எம்பெருமான் எல்லா அவஸ்தைகளிலும் லக்ஷ்மியுடன் பிரிவில்லாத சேர்த்தியையுடையவன் என்பதையும், லக்ஷ்மீதத்வத்தைப்பற்றி உண்டாகும் சங்கைகளுக்கெல்லாம் ஸமாதான மருளிச்செய்து அத்தத்வத்தையும் பரக்க நிரூபித்து, தத்வஸ்திதியை ஒருவராலும் கலக்கமுடியாதபடி பூர்ணமாக ஸ்தாபித்தருளினர். இவ்விஷயமான க்ரந்தங்கள் :— ஸ்ரீமந் ந்யாயபரிசுத்தி, ஸ்ரீமந் ந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீசதுச்லோகீபாஷ்யம் முதலியவை. நாராயணனே பரதேவதை என்னுமர்த்தத்தை ஸ்ரீஸ்தோத்ரரத்னபாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் ஸ்தாபித்தருளினர். மற்ற அவரதத்வங்களைப்பற்றி ஸ்ரீமந்ந்யாய ஸித்தாஞ்ஜனம், ஸ்ரீமந் ந்யாயபரிசுத்தி, ஸ்ரீதத்வமுக்தாகலாபம், ஸ்ரீஸர்வார்த்தஸித்தி முதலிய க்ரந்தங்களில் நிருபித்தருளினர். ஸர்வாதிகாரமாய் ஸர்வஸுலபமாயிருக்கும் ப்ரபத்தியே பரமஹிதமென்னுமர்த்தத்தை ஸ்ரீநிக்ஷேபரக்ஷை, ஸ்ரீமத்கீதாபாஷ்ய தாத்பர்யசந்திரிகை, ஸ்ரீமந்ந்யாய ஸித்தாஞ்ஜனம், ஸ்ரீகத்யத்ரய பாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் அருளிச்செய்தார். பரி

பூர்ண ப்ருஹ்மானுபவமும் அதின் பரீவாஹமான கைங்கர்யமும் பரம புருஷார்த்தமென்னு மர்த்தத்தை ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீகத்ய பாஷ்யம், ஸ்ரீதத்வமுக்தாகலாபம், ஸ்ரீஸர்வார்த்தஸித்தி முதலிய க்ரந்தங்களில் வெளியிட்டருளினர். ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்துக்கு விரோதமாக வேதங்களுக்கு அபார்த்தங்களைச் சொல்லுமவர்களை ஸ்ரீசததூஷணீ, ஸ்ரீதத்வமுக்தாகலாபம், ஸ்ரீஸர்வார்த்தஸித்தி, ஸ்ரீந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீந்யாயபரிசுத்தி, ஸ்ரீபரமதபங்கம் முதலிய க்ரந்தங்களில் நிராகரித்து இந்த ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தியருளினர். ஸ்ரீமத் அதிகரணஸாராவளீ, ஸ்ரீமத் தத்வடீகை, ஸ்ரீமத் தாத்பர்யசந்திரிகை, ஸ்ரீமத் கத்யத்ரய பாஷ்யம், இந்த க்ரந்தங்களில் ஸ்ரீபாஷ்யகாருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு அவருடைய திருவுள்ளத்துக்கு அனுகுணமாக வ்யாக்யானம் அருளிச்செய்தார். ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை ஸ்ரீ சதுச்லோகீ ஸ்தோத்ர ரத்ன பாஷ்யங்கள், இவைகளில் ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீஸூக்திகளுக்கு ப்ரமாணனுகுணமான வ்யாக்யானம் அருளிச்செய்தார். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமான சங்கசக்ராங்கனம், திருமண்காப்பு, பகவதாராதனம், பகவத் ப்ரஸாதத்தின் மஹிமை முதலியவைகளை ஸ்ரீஸச்சரித்ரரக்ஷை ஸ்ரீபாஞ்சராத்திர ரக்ஷை முதலியவைகளில் ஸம்சய விபர்யயங்களற நிரூபித்தருளினர். பரமஹிதமாகிய ப்ரபத்தியின் உபாயத்வத்தைபற்றிச் சொல்லப்படும் ஆக்ஷேபங்களை யெல்லாம் அனுவதித்து அவைகளை ஸ்ரீநிக்ஷேபரக்ஷையில் நிராகரித்தருளி, ந்யாஸவித்யையின் அங்காங்கி விபாகாதிகளை ஸ்ரீமந்யாஸவிம்சதி, ஸ்ரீமந்யாஸதிலகம், ஸ்ரீமந்யாஸதசகம் இவைகளில் நிரூபித்தருளினர். இவ்வர்த்தங்களை யெல்லாம் சாஸ்திர பரிசய மில்லாதவர்களும் ஸுலபமாய் அறியும்பொருட்டு எளிதான மணிப்ரவாள நடையில் அவரவர்கள் புத்திக்கும், சக்திக்கும் தக்கபடி ஸங்க்ரஹங்களாயும், விஸ்தாரங்களாயும் முப்பத்தொரு ரஹஸ்யங்களில் அருளிச்செய்தார். இவ்வர்த்தங்களையெல்லாம்தழுவி ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயமென்கிற நாடகத்தையும் அருளிச்செய்தார். அனேகம் திவ்யதேசத்து எம்பெருமான்கள் விஷயமாக ஸ்தோத்திரரூபமாக த்வாத்ரிம்சத் ஸ்தோத்திரங்களையருளிச்செய்தார். ரஹஸ்யத்ரயார்த்தங்களை ஸுலபமா யறியும்பொருட்டு திருமந்திரச்சுருக்கு முதலிய தமிழ் ப்ரபந்தங்களை யருளிச்செய்தார். ஸ்ரீக்ருஷ்ணவதாரத்தைப்பற்றி விஸ்தாரமாய் ஸ்ரீயாதவாப்

யுதயம் என்னும் காவ்யமருளிச்செய்தார். இப்படியே மற்றும் ஸ்ரீஹம்ஸ ஸந்தேசம், ஸ்ரீஸுபாஷிதநீவி முதலிய அனேகம் க்ரந்தங்களை அருளிச் செய்தார். திருவாய்மொழியின் அர்த்தங்களை ஸங்க்ரஹித்து அவை களின் ஸங்கதி முதலியவைகளை ஸ்ரீமத்த்ரமிடோபநிஷத்ஸாரம் என் னும் க்ரந்தத்திலும். திருவாய்மொழியின் ஒவ்வொரு பாட்டின் அர்த் தத்தையும் ஸங்க்ரஹித்து ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்ன வளீ என்னும் க்ரந்தத்திலும் அருளிச்செய்தார். இப்படிக் கீழ்க் கூறிய க்ரந்தங்களில் அங்கங்கு நிரூபிக்கப்பட்ட அர்த்தவிசேஷங்களை யெல்லாம் ஸ்வல்பகாலத்தில் அறியமுடியாதாகையினால் அவைகள் எல்லாவற்றின் ஸாராம்சத்தை ஒருங்கத்திரட்டி இந்த ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸார மென்னும் க்ரந்தத்தை ஸங்க்ரஹருசிகளுக்கு இனியொரு க்ரந்தத்திலு மலையவேண்டாதபடி பரிபூர்ணமாக நிரூபித்தருளினார். இதன் பெருமையை 'अविज्ञातं विजानतां विज्ञात मविजानतां। रहस्यत्रयसाराख्यं परं ब्रह्मास्तु मे हृदि ॥ (இதன்பெருமை இவ்வளவென்று அளவிட்டறிந்த வர்களுக்கு இதின் பெருமை அறியப்படாதது, அப்படி அளவிட்டறி யாதவர்களுக்கு இது உண்மையாயறியப்பட்டது, ஆகையால் இது பரப்ருமத்தைப்போன்ற பெருமையையுடையது, இது எக்காலும் என் மனதை விட்டகலா மலிருக்கவேண்டும்)' என்று பின்புள்ளார் கள் பல படிகளாலும். அனுஸந்தித்தார்கள். இப்படி ஸ்ரீபாஷ்யகாரர் முதலிய பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு க்ரந்த முகேன தாத்பர் யார்த்தங்களைப் பரக்க நிரூபித்த உபகாரத்தைத்திருவுள்ளம்பற்றி 'रामानुजदयापात्रं' என்றனுஸந்தித்தார்கள்.

**ஸித்தாந்தத்தின் ப்ரதான கோள்கைகள்.**

இப்படிப் பஹுமுகமாக க்ரந்தத்தினாலும், அனுஷ்டானத்தினாலும், வேதாந்தஸித்தாந்தத்தை நிலைநிறுத்தின இவ ருடைய ப்ரதானக்கொள்கை யென்னவென் றால்:—எல்லாஜ் ஜாதியரும் அவரவர்கள் ஜாதிக்குரியதாய் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட தர்மங்களைப் பகவானுடைய கட்டளைகளிவை யென்றெண்ணி அவைகளை யனுஷ்டிக்கவேண்டுமென்பதும், அப்படி அனுஷ்டிக் கும்போது பகவத்ப்ரீதியொன்றையே பலமாக உத்தேசித்துத் தன் சக்திக்கனுகுணமாகச் செய்யவேண்டும், ஒரு காலத்திலும் அவைகளை விடக்கூடாது என்பதும், இப்படித் தங்கள் தங்கள்

ஜாதிக்கனுகுணமான கார்யங்களைச் செய்து வரும் எல்லா ஜாதியரும் சரணாகதியென்றும், ப்ரபத்தியென்றும் சொல்லப் படுகிற உபாயத்தை அனுஷ்டித்து மறு ஜன்மமில்லாமல் பரம புருஷார்த்தமாகிற மோக்ஷமென்னும் மீட்சியில்லா வாழ்ச்சியைப்பெற லாமென்பதும், ப்ரபத்திக்குப் பிறகு சாஸ்திரத்துக்கு வசப்பட்டவனாய் நடக்கவேண்டும், அப்படி நடக்கத்தவறினால் பகவந் நிக்ரஹமுண்டாகும் என்பதும், ப்ராயச்சித்தாதி முகேன அவைகள் நிவ்ருத்தித்துவிடுமாகையினால் பரமபுருஷார்த்த லாபத்திற்குத் தடையாகாது என்பதும், பகவானிடத்தில் பக்தியுடையவர்கள் எந்த ஜாதியாரயினும் அவர்கள் விஷயத்தில் சாஸ்திர ஸம்மதமான கௌரவாதிகளில் குறைவுசெய்யக்கூடாதென்பதும், அப்படிச் செய்தால் பகவானுடைய நிக்ரஹம்வரும் என்பதும், ஸர்வ ப்ராணிகளுக்கும் ஹிதமாக நடந்துகொள்ளவேண்டுமென்பதும், அப்படி ஹிம்ஸாதிகளைச் செய்தால் பகவதப்ரீதிக்குப் பாத்திரனாவான் என்பதும். இப்படி வேதாந்தார்த்தங்களைப் பரக்க நிரூபித்த உபகாராதிசயத்தைத் திருவுள்ளம் பற்றி 'वन्दे वेदान्तदेशिकं' என்றனுஸந்தித்தார்கள்.

**இவர் விஷயமான சில அபிப்ராயங்கள்.**

ஸ்ரீபாஷ்யகாரர் தாராளமானமனதையுடையவரென்றும், அதை இவர் குறுக்கிவிட்டனர் என்றும், மதத்தில் இவர் ஆக்ரஹமுள்ளவர் என்றும், மற்றும் இப்புடைகளில் இவரைப்பற்றிச் சிலர் சொல்வது இவருடைய க்ரந்தங்களில் பரிசயமில்லாதவர்கள் பிதற்றும்வார்த்தை. ஸ்ரீபாஷ்யகாருடைய அனுஷ்டானத்துக்கும், க்ரந்தங்களுக்கும் முற்றிலும் விருத்தமான கதைகளை கல்பித்து மூடர்கள் சொல்லும் ஐதிஹ்யங்களைப் புத்திமான்கள் அங்கீகரியார்கள். இவ்விஷயங்கள் இந்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தை ஒருதரம் ஸேவித்தவர்களுக்கு நன்கு புலப்படும். இவரைப்போலத் தாராளமான மனதுடையவர்கள் ஒரு மதத்திலும் இல்லையென்று திண்ணமாய்ச் சொல்லலாம். க்ரந்தமுகமாக அந்தணர்முதல் சண்டாளர் வரையிலான ஜாதியர்களில் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குரிய கர்மானுஷ்டானத்தினாலும், உபாயானுஷ்டானத்தினாலும் பரமபுருஷார்த்தத்தையடையலாம் என்று நிரூபித்தவர் இந்த மஹான் ஒருவரே. மற்றும் ஆபாதப்ரதீதியாய் சாஸ்திரவிருத்தம்போல் தோன்

றும் வாக்யங்களைக்கண்டு நம்போலியர்கள் ப்ரமிக்காமலிருக்கும்படி அவைகளையெல்லாம் எடுத்து அவைகளுக்குத் தாத்பர்யார்த்தங்களை நிரூபித்திருக்கிறார்.

இந்த க்ரந்தத்தில் ச்ருதிகள், பாஞ்சராத்திரம், இதிஹாஸம், புராணங்கள், ஸ்ரீபாஷ்யகாரர் வரையிலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகள், இவைகள் ப்ரமாணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமத்ஸம்ப்ரதாய பரிசுத்தியில் இவர் தாமே 'ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்யப்ரசிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் அர்த்தவிரோதமில்லை, யோஜனா பேதமேயுள்ளது' என்றருளிச் செய்திருக்கிறபடியே பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளைலோகாசார்யர் முதலியவர்களுடைய வாக்யங்களில் சில மேல்பார்வையாய் ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளத்துக்கு விரோதம் போல் தோன்றினபோதிலும் அவ்வாக்யங்களுக்கு ப்ரமாணானுகுண மானவர்த்தங்களை இக்ரந்தத்தில் நிரூபித்திருக்கிறார். ஆகையினால் இக்ரந்தம் ஸர்வ சாஸ்திரங்களுக்கும் ஸாரமென்று பெரியோர்களினால் ஆதரிக்கப்பட்டது.

க்ரந்த ஸங்க்ரஹம்.

இதில் முதல் இருபத்திரண்டதிகாரங்கள் அடங்கிய அர்த்தானு சாஸந பாகத்தில் ஆஸ்திகர்கள் சாஸ்திரங்களில் அவச்யம் அறிந்துகொள்ளவேண்டிய தத்வஹித புருஷார்த்தங்களை நிரூபித்தருளினார். மேல் நாலு அதிகாரங்களடங்கிய ஸ்திரீகாணபாகத்தில் கீழ் நிரூபிக்கப்பட்ட அர்த்தங்களில் நேரிடுகிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் அருளிச்செய்தார். இதற்குமேல் மூன்றதிகாரங்கள் அடங்கிய பதவாக்ய யோஜனாபாகத்தில் இப்படி நிரூபித்த ஸகல சாஸ்திரார்த்தங்களும் ரஹஸ்யத்ரயங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறபடியை நிரூபித்தருளினார். முடிவில் மூன்றதிகாரங்களடங்கிய ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகத்தில் இவ்வர்த்தங்களை உபதேசிக்கும் ஆசார்யனிருக்கும்படியும், உபதேசம் பெறும் சிஷ்யன் இருக்கும்படியும், க்ரந்த நிகமனமும் முறையே அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இவ்வதிகாரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஸங்கதி முதலியவைகளை வ்யாக்யானத்தில் அங்கங்கே கண்டு கொள்வது. ஆக 'பரமாத்மா ஒன்றை யறிந்தால் ஸர்வமும் அறியப்பட்டதாகும்' என்று ச்ருதியில் சொல்லியிருப்பதைப்போல

இக்ரந்தம் ஒன்றைப் பூர்த்தியாயறிந்தால் விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயார்த்தங்கள் எல்லாம் அறியப்பட்டதாகும்.

**அவதார ஸமாபனம்.**

இவர் விபவதசையில் நூற்றொருவருஷம் எழுந்தருளியிருந்து கலி 4471வதான ஸௌம்ய வருஷத்தில் கார்த்திகைமீ க்ருத்திகா நக்ஷத்திரத்தில் தம்முடைய அவதாரத்தை ஸமாபனம்செய்து தம்முடைய அவதாரத்துக்கு வ்யாஜமான கண்டாக்ருதியை அடைந்தார். இவ்வர்த்தம் ‘अब्दे सौम्ये च वारे गतवति तरणौ वृश्चिकं कृत्तिकर्क्षे राकायां वेंकटेशो यतिनृपतिमतं सर्वतः स्थापयित्वा । वेदान्ताचार्यवर्योविरचितविविधानेकदिव्यप्रबन्धः श्रीशैलाधीश घण्टाकृति वपुरभवद्देशिकेन्द्रो दयालुः ॥’ என்று ஸ்ரீநைநாராசார்யரால் அனுஸந்திக்கப்பட்டது.

**நிகமனம்.**

இக்ரந்தத்துக்கு அனேக வ்யாக்யானங்கள் இருந்தாலும் அவைகள் எல்லாம் சாஸ்திரங்களில் விசேஷ பரிசயமுள்ளவர்களுக்கே அறியக்கூடியவைகளாயிருக்கிறபடியினால் அந்த வ்யாக்யானங்களையெல்லாம் தழுவி ஸத்ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்ததாய் எளிதான தமிழில் ஒரு வ்யாக்யானம் எழுதும்படி அனேகம் பெரியோர்கள் நியமித்ததை சிரஸாவஹித்து அடியேன் இந்த வ்யாக்யானத்தை எழுதத் துணிந்தேன். இந்த வ்யாக்யானத்தில் அச்சுப் பிழைகளும், அஜ்ஞானத்தினால் ஸஹஜமாய் உண்டாகக்கூடிய மற்றப் பிழைகளும் இருந்தபோதிலும், ‘तद्धरिणयेन ठविया (உம்முடைய ஸபையில் வேதங்களெல்லாம் உம்மை ஸ்தோத்திரம் செய்துநிற்க அவைகளின் நடுவில் மந்தபுத்தியையுடைய அடியேன் ஸ்தோத்திரம் கொல்லையில் மிறள் வைத்ததைப்போல த்ருஷ்டிதோஷ பரிஹாரத்துக்காவது உபயோகப் படட்டும்)’ என்று அருளிச்செய்திருக்கிறப்போலவும் ‘शुनालीडाकामं भवतु सुरसिन्धु र्भगवती तदेषाकिं भूता सेतु सपादि सन्तापरहितः’ என்றுமருளிச்செய்திருக்கும் ந்யாயத்தினால் இந்த க்ரந்தத்துக்கு அவைகளினால் ஒருவிதந்யூநதையும் வாராதென்பதையும், அல்பஜ்ஞனான அடியேனுடைய புத்தியும் வாக்கும் பரிசுத்தமானபடியையும் நினைத்து இதை க்ருபையுடன் பெரியோர்கள் அங்கீகரிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

இதில் குறிக்கப்பட்டிருக்கும் ப்ரமாணங்களின் ஆகாரங்கள் ஸ்ரீ உப. வே. திருக்கோட்டியூர் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமிகளினுடைய ப்ரமாணத்திரட்டுடன் ஒத்துப்பார்க்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. இப்படி இந்த ப்ரமாணத்திரட்டைக்கொடுத்து உதவி புரிந்த அந்த ஸ்வாமியினிடத்தில் மிகவும் க்ருதஜ்ஞதை உடையவனாயிருக்கிறேன்.

இந்த க்ரந்தத்தை அச்சிட்டு வெளியிட முன்வந்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரப்ரசாரண ஸபை அத்யக்ஷர் ஸ்ரீஉப எஸ்.ராஜகோபாலாச்சார்யருக்கும், இக்ரந்தம் பூர்த்தியாவதற்கு பரிச்ரமப்பட்ட கார்யதர்சிகளான ஸ்ரீ. உப. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யருக்கும், வன்பாக்கம் வெ. தேசிகாசார்யருக்கும், இக்ரந்த ப்ரசாரணமாகிய இக்கைங்கர்யம் நிர்விக்னமாய் நிறைவேறும்படி இந்த ஸபையின் மற்ற எல்லாக் கார்யங்களையும் ச்ரத்தையுடனும், ஊக்கத்துடனும் செய்து வந்த உதவி கார்யதரிசி ஸ்ரீ. உப. கோமடம் ஸ்ரீநிவாஸய்யங்காருக்கும் நாமெல்லோரும் நம்முடைய நன்றியைச்செலுத்தக் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றோம்.

விக்தார்த்திஸு
தைமீ 28உ

தி. சே. நரஸிம்மன்.

## விஷயஸூசிகை


| | | பக்கம். |
|---|---|---|
| முகவுரை | | |
| உபோத்காதம் | | |
| குருபரம்பராஸாரம் | ... ... ... | 1 |
| 1. அர்த்தானுசாஸந பாகம். | | |
| 1. | உபோத்காதாதிகாரம் ... ... ... | 69 |
| 2. | ஸாரநிஷ்கர்ஷாதிகாரம் ... ... ... | 107 |
| 3. | ப்ரதான ப்ரதிதந்திராதிகாரம் ... ... | 126 |
| 4. | அர்த்த பஞ்சகாதிகாரம் ... ... ... | 164 |
| 5. | தத்வத்ரய சிந்தனாதிகாரம்... ... ... | 205 |
| 6. | பரதேவதா பாரமார்த்யாதிகாரம் ... ... | 273 |
| 7. | முமுக்ஷுத்வாதிகாரம் ... ... ... | 315 |
| 8. | அதிகாரி விபாகாதிகாரம் ... ... ... | 333 |
| 9. | உபாயவிபாகாதிகாரம் ... ... ... | 359 |
| 10. | ப்ரபத்தியோக்யாதிகாரம் ... ... ... | 382 |
| 11. | பரிகரவிபாகாதிகாரம் ... ... ... | 394 |
| 12. | ஸாங்கப்ரபதனாதிகாரம் ... ... ... | 429 |
| 13. | க்ருதக்ருத்யாதிகாரம் ... ... ... | 457 |
| 14. | ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம் ... ... | 474 |
| 15. | உத்தரக்ருத்யாதிகாரம் ... ... ... | 491 |
| 16. | புருஷார்த்த காஷ்டாதிகாரம் ... ... | 532 |
| 17. | சாஸ்திரீயநியமனாதிகாரம் ... ... | 558 |
| 18. | அபராதபரிஹாராதிகாரம் ... ... | 580 |
| 19. | ஸ்தானவிசேஷாதிகாரம் ... ... ... | 618 |
| 20. | நிர்யாணாதிகாரம் ... ... ... | 637 |
| 21. | கதிவிசேஷாதிகாரம் ... ... ... | 662 |
| 22. | பரிபூர்ணப்ருஹ்மானுபவாதிகாரம் ... ... | 680 |

| | | பக்கம். |
|---|---|---|
| **2. ஸ்தீரீகரண பாகம்.** | | |
| 23. | ஸித்தோபாயசோதனுதிகாரம் | 707 |
| 24. | ஸாத்யோபாயசோதனுதிகாரம் | 760 |
| 25. | ப்ரபாவவ்யவஸ்தாதிகாரம் | 826 |
| 26. | ப்ரபாவரக்ஷாதிகாரம் | 885 |
| **3. பதவாக்யயோஜனு பாகம்.** | | |
| 27. | மூலமந்திராதிகாரம் | 916 |
| 28. | த்வயாதிகாரம் | 1058 |
| 29. | சரமச்லோகாதிகாரம் | 1132 |
| **4. ஸம்ப்ரதாயப்ரக்ரியா பாகம்.** | | |
| 30. | ஆசார்யக்ருத்யாதிகாரம் | 1317 |
| 31. | சிஷ்யக்ருத்யாதிகாரம் | 1339 |
| 32. | நிகமனுதிகாரம் | 1358 |

ப்ரமாணஸங்க்ரஹம்.

ப்ரமாணங்களின் அகராதி.

|| श्रीः ||

# ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத் தனியன்கள்.

[ஸ்வாசார்யன் முதலாகப் பகவான் வரையிலாக உள்ள ஆசார்ய பரம்பரையை அவரவர்கள் ஸம்ப்ரதாய க்ரமப்படி அநுஸந்தித்த பிறகு இந்த ச்லோகங்களை அநுஸந்திக்கவும்.]

विगाहे निगमान्तार्यं विष्णुपादसमुद्भवां ।
रहस्यत्रय साराख्यां त्रिस्त्रोतसमकल्मषां ॥

अविज्ञातं विजानतां विज्ञात मविजानतां ।
रहस्यत्रयसाराख्यं परं ब्रह्मास्तु मे हृदि ॥

சீரொன்று தூப்புற் றிருவேங்கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

PAGES 1—24, PRINTED BY S. V. & CO., MADRAS.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீஹயவதந பரப்ரஹ்மணே நம: ॥

॥ ஸ்ரீமதே [illegible] மஹாதேசிகாய நம: ॥

॥ ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேஶிகனருளிச்செய்த

# ஸ்ரீ குரு பரம்பரா ஸாரம்.

[குரு பங்க்தி பஜனம்—பகவானுடைய ப்ரதமாசார்யத்வம்—ஆசார்ய பரம்பரா க்ரமம்—ஆசார்ய பக்தி அவஶ்யம் செய்யவேண்டு மென்பது—அப்படிச் செய்யாவிடில் ப்ரத்யவாயம்—நித்ய நைமித்திகங்களில் அதின் அந்வயம்—ஸுலபமாக குருபங்க்தி ஸ்மரணார்த்தம் தத் ஸங்க்ரஹப்பாட்டு—விஶேஷோபகாரக ஆசார்ய விஷய காதாத்ரயம்.]

குருப்யஸ்தத்குருப்யஶ்ச நமோவாகமதீமஹே ।
வ்ருணீமஹே ச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம் பதீ ॥

॥ श्रीः ॥

॥ अरजम्बुवनन्दिनी हेमाब्जनायिकासमेत
श्रीदेवनाथ परब्रह्मणे नमः ॥

॥ श्रीमते वकुलाभूषण महादेशिकाय नमः ॥

॥ श्रीमते रामानुजाय नमः ॥

॥ श्रीमते निगमान्त महादेशिकाय नमः ॥

॥ श्रीमते श्रीनिवासरामानुज महादेशिकाय नमः ॥

---

यं ब्रह्माज्ञाद्यविशेषाः श्रुतिषु
    शंजितं लक्ष्मणार्यानुहादेश्य
श्रीशैलार्येश सद्गुणं
    शंसितं निगमव्याक्रिया प्रक्रियायाम् ।
वेदान्ताचार्यपूर्वं विदुर्य
    महिते सम्प्रदाये नवाये
वन्दे श्रीवास रामावरजगुरुवरं
    पूर्ण्यं वर्ण्यं श्रीधनाढ्यं ॥

श्रीदेवाधीश पद्मा वकुलधरमुनि
    ह्रज्जमाना ग्रहागम्
नाथ श्रीयामुनेय प्रथित यतिपति
    श्रोत्रार्यवत्स्यहागाम् ।
त्रय्यन्ताचार्यपूर्वान् विगर्ण तरलस्क
    पूर्वपूर्वगणं सहांगम्
वन्दे मान्यां गुरूणां विमलगुणगणां
    मञ्जितां पञ्जितां ते प्रत्यहः ॥

वन्दे हस्तिशैल महापूर्णस्वामिपादौ श्रीविष्णुचित्तं मुनिम्
श्रीमत्कूरकुलेश्वरं च विमलं श्रीपोणिवासं मुनिम् ।
श्रीहस्ताद्रिवरात् सम्भविमनवं श्रीहस्तिसारं मुनिम्
श्रीमत्कौशिकवेदिवर्णं मुनिवरं दीर्घाद्धरां प्रद्योतावहाम्
यः पूर्वं द्रुतदशकायिवनगरवरे
    प्रादुरासीत् तुष्टेशः

ஶ்ரீமத்யஞாவாயு ஹெமெதா
ரய தாமரமஃமவஸ்தவஸ்தவெஸாஷிதாத்ரா।
ஜகா ஷாஷாஃஜ்ஞதம் ஸ்வம்
ஶ்ரீமதிமணஃஹிதஜ்ஞாநஸம்வத்ஸஃஜ்ஞிம்
ஜெவெ ஜெவ்யா ஸஃஜெதா
ஜிஶதம ஃஃ ஃதிம் ஸம்வ்ருஜாயஸ்ய ஜொவ்த்ர ॥
நஃாஜி ஶம்மெவஸிவெண வகமஉஃாஜிகாயாஸிவெண
ரஃாவதிமமணாஃஜெத நிஹ்யதநிஹுரம் ஃஜ்ஜெத ॥
வ்ருவஞஜநஸஞஜெத ஹமுவநஃாந்ய கூடுஷ்யதா
வஜெவிஜுஸஜெத ஸஜெத ஶ்ரூ விஃஜெவஜஃமத்வஶ்யஜெத ॥
ஃயமரகவி வஜெணயம் ஃளஜிநா தம் ஹஜெஜஹம்
ஹமவதி விநியமத்காது யஶ்வு ஸம்பாஸஜெஹாது ।
ஜஶ ஶம்ஜிதி க்யகா யந்யஜந்ஜ்ர ஃமநீம்ஜ்ரு:
மாமதர மமரமஹத்ஜெக்: ஃாமுஜஶீஃ பஹடுவ ॥
ஜ்ராக்ஷா ரகுக்ஷதரா ஃமயாzஃரஸமயா ஃ்வ்ஜிகஃமஜெஜமஜம்
க்ஷீரம் க்ஷாரதரம் ஸிதாவிஹஸிதா ஜெஃாவாவி நீவாயிதா ।
மம்மாதமம்மதரம்மஹம்மி ஸமஹஜெஜெ யுஅாஹூஜெஜெரஸ்நிஹுஜெரெ:
ஶ்ரீமத்யஞ ஶ்ரீமதமளரவம் மமரமஃணிஞம்ஜெவக்ஜடுஶம்ஶ்ரயெ ॥
வாவாம்ஶ்ரீ கவிவாதிகெஸரிமமஜெராவ்யாவ்யாவியளஸ்யாத்வ்ஹம:
ஜெஹஷாஜெவாஷவிநாஶிதா ஶ்ரீ ததஜெஃாஜெஷாஜெஷாஹயாஸ்ய:வ
தஜெஞ்ஞ வாவ்யஜிஜெஸ்வதஞ்ஞ விஹஜெவாzயம்ஸமுஶிரவாயவா[ர:
கொவா கெவஞகெஜிகீரதநம வாஶ்ரீவ்யெமா ஜஜெநா ஃாஜூஶ: ॥

கயவா மமரமஹத்க்வ்யாஹம்
ஶ்ரீ நியியொஶ்ரீம்ஜ்ரமமரம க்யத வ்யாவ்யாம் ।
ரவயது ஜ்ராவிஃவாண்யாம்
க்வ்விஜவி வஸிஹாஸ்யதாம் ந யாயாம் ஹி ॥

## ஸ்ரீ அவதாரிகை.

ஸ்ரிய:பதியான திருவேங்கடமுடையான் ஆவாரார் துணையென்று அலைநீர்க் கடலு ளழுந்தும் நாவாய்போல், பிறவிகடக்

லுள் நின்று துளங்குகிற சேதனர்களை ஶாஸ்திரமாகிற ஜ்ஞானக் கை தந்து உஜ்ஜீவிப்பிக்க வேண்டுமென்கிற திருவுள்ளத்தினால் நம்மாழ்வார் முதலான ஆசார்ய ரூபேண தத்தத் காலங்களில் அவதாரம் செய்து தம்மால் ப்ரதிஷ்டிதமான ஸம்ப்ரதாயத்திற்கு பாஹ்யாந்தர குத்ருஷ்டிகளாலே பல முகங்களான கலக்கங்கள் நேரிட்ட ஸமயத்தில் அந்த க்ஷோபத்தை ஶமநம் செய்யத் திருவுள்ளம்பற்றி, இது நாவீறுடைய ஒருவனை முன்னிட் டல்லது முடியாதென்று கணிசித்து, சக்கரவர்த்தித் திருமகனா யவதாரம் செய்வதற்குப் பாயஸ மென்கிற ஒரு வ்யாஜத்தை முன்னிட்டாப் போலே தம்முடைய ஸ்வர்ண கண்டையை அதிஷ்டானம் செய்து, அதின் மூலமாகத் தாம் விலக்ஷணமாக **ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேஶிக** ரூபேண அவதாரம் செய்தருளினா னென்பது 'वेङ्कटेशावतारोऽयम्', 'उदेष्यति [illegible]', 'அன்றிவ் வுலகினையாக்கி', என்றிவை முதலிய ப்ரமாணங்களினால் ஸித்தம். இப்படிப்பட்ட அவதார வைலக்ஷண்யத்துடன் கூடியவராய், பன்னுகலை நால் வேதப் பொருளை யெல்லாம் பரிமுகமா யருளிய பரமனுடைய அருள் பெற்று ஸகல ஶாஸ்திரங்களிலும் நிபுணராய், ஸ்ரீரங்க நாதனாலேயே அநிதரஜந லப்யமான உபய வேதாந்தாசார்ய பிருத ப்ரதானத்தாலும் தத் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியாரால் ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ர ரென்கிற பிருத ப்ரதானத்தாலும் விஶேஷ கடாக்ஷம் செய்யப்பட்டவராய், ஆசார்யத்வோப யுக்த ஸகல கல்யாணகுண பரிபூர்ணராய், ஸுப்ரக்யாத வைபவரான நம் தேஶிகன், முமுக்ஷுக்களான ஸர்வ ஜனங்களும் எளிதாகத் தத்வ ஹித புருஷார்த்தங்களை ஸம்ஶய விபர்யயங்களறத் தெளிந்து கொள்ள வேண்டுமென்கிற அபார காருண்யத்தினாலே ஸகல ஶ்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராண, பாஞ்சராத்ர, ஆசார்ய ஸ்ரீ ஸூக்த்யாதிகளின் ஸாரதமார்த்தங்களை ஸங்க்ரஹித்து **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்** என்கிற ப்ரபந்த ரத்னத்தை அருளிச் செய்யத் திருவுள்ளம் பற்றி, முதலில் குரு பஜன கர்த்தவ்யதா ஸ்தாபகமான **ஸ்ரீ குரு பரம்பரா ஸார** மென்னும் க்ரந்தத்தை யருளிச் செய்கிறார்.

இக் குரு பரம்பரா ஸார மென்னும் க்ரந்தம் இந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தோடு சேர்ந்ததா? தனிப்பட்டதா? தனிப்பட்டதா யிருந்தால் நியமேந எல்லா ஸ்ரீகோஶங்களிலும் சேர்த்தே ஏறியருளிப் பண்ணி யிருப்பதும், காலக்ஷேபோபதேஶாதிகளில் சேர்த்தே அநுஸந்திப்பதும் விரோதிக்குமே? மேலும் இந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸார க்ரந்தத்தில் அருளிச் செய்யப்படும் அர்த்த விஶேஷங்கள் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களினுல் தெளிந்தோம் என்கிற உபகார ஸ்ம்ருதியாலே ஆழ்வார் விஷயமாக மங்களாசரணம் இந்த க்ரந்தத்தின் ஆரம்பத்தில் செய்தருளி யிருப்பது விரோதியாதோ? மேலும் குரு பரம்பரா ஸாரத்தில் 'பகவதீ ஜகதாம் பதீ' என்றுபக்ரமித்து, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் நடுவில் 'ஶேஷீ பகவதி' என்று ப்ரஸ்தாவித்து, கடைசியில் 'ஶரண்யோ பகவதி விஶ்ராம' என்று உபஸம்ஹாரம் செய்திருப்பதினுல் உபக்ரம உபஸம்ஹார ந்யாயத்தினுலே ஒன்றென்று தோற்றுவதற்கு விரோதமாகாதோ? மேலும் இவரால் அருளிச் செய்யப்பட்ட க்ரந்தங்களைத் தனித்தனியே நிர்தேஶம்பண்ணின பின்புள்ளவாசார்யர்கள் இதைத் தனித்து ஒரு க்ரந்தமாக நிர்தேஶிக்காததும் விரோதியாதோ? என்றிவை முதலிய ஶங்கைகள் உதிக்கலாம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்துடன் சேர்ந்ததென்னில் உபோத்காதாதிகாரத்தோடு ஏகாதிகாரமா? தனித்த அதிகாரமா? என்று விவேகிக்க வேண்டும். உபோத்காதாதிகாரத்தோடு சேர்ந்ததா யிருந்தால் இதின் கடைசியில் 'குருபரம்பராஸார ஸம்பூர்ண:' என்றருளிச் செய்திருப்பதும், உபோத்காதாதிகாரத்தில் தனித்து மங்களம் அருளிச்செய்திருப்பதும், மற்ற அதிகாரங்களைப்போல ஆத்யந்தங்களில் ஶ்லோகங்களும் பாட்டுக்களும் தனித்தருளிச் செய்திருப்பதும் விரோதிக்குமே? உபோத்காதாதிகாரத்தி லருளிச் செய்யப்பட் டிருக்கிறபடியே, இந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரமாகிற க்ரந்தம் மோக்ஷமாகிற பலத்திற்குப் பரம்பரையாகக் காரணமாகையினுல் எல்லோராலும் அவஶ்யம் அறியத்தக்கது என்று ஸ்தாபிக்கிறதாகிற அர்த்தமும், ஆசார்ய பக்தி பண்ண வேண்டு மென்று இங்கு ஸமர்த்தனம் செய்கிற அர்த்தமும் அத்யந்தம் பின்னமாகையினுலே இவை இரண்டும் வெவ்வேருக இருக்கவேண்டுமே?

தனித்த அதிகாரமாயிருந்து ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தோடு சேர்ந்திருந்தால் ‘ஸாரஸாரம்ஸாரஸாரஃ ப்ரதமஃ’, ‘உபோத்காதாதிகாரோ த்விதீயஃ’ என்றருளிச்செய்திருக்க வேண்டாவோ? மேலும் ‘முப்பத்திரண்டிவை’ என்று முப்பத்திரண்டு அதிகாரங்கள் என்றருளிச் செய்திருப்பதும் விரோதிக்குமே? ‘ஸந்த்ருஷ்டஃ’ என்கிற ஶ்லோகத்திலும், நிகமனதிகாரத்திலும், இக் குருபரம்பரா ஸாரத்தினர்த்தத்தை அனுவதியா தொழிந்ததும் விரோதிக்குமே? அதிகார ஸங்க்ரஹப் பாட்டுக்கள் ‘திருவுடன்’ என்றாரம்பித்து ‘மொழித்திருவே’ என்கிற வரையில் அந்தாதியாக வருளிச் செய்யப்பட் டிருப்பதினுலும், இந்தக் குரு பரம்பரா ஸாரத்தில் பாட்டுக்கள் அப்படி அந்த அந்தாதியுடன் சேராம லிருப்பதினுலும் விரோதிக்குமே? என்றிவை முதலிய ஶங்கைகள் உதிக்கலாம். இப்படி இது பின்னம், அபின்னம், என்கிற பக்ஷத்தில் உண்டாகும் ஶங்கைகளில் இது தனி ப்ரபந்தம் தான் என்று ஸ்தாபிப்பதில், உபக்ரம உபஸம்ஹார ந்யாயம் ப்ரபலமான பாதகமல்ல, தனி ப்ரபந்தங்களிலும் அப்படி ஶப்த ப்ரயோகம் காணப்படுகிற படியினுல். ஆழ்வார்களும் உபகாரகாசார்யர்களாகையினுலும், அவர்களுடைய அவதாரங்களையும் மேலே ஸங்க்ரஹிக்கப் போகிற படியினுலும், அவர்களைப்பற்றி மங்களா சரணம் பண்ணியிருப்பது விரோதமாகாது. குரு பங்க்தி பஜனம் செய்ய வேண்டுமென்கிற வேதாந்தார்த்தத்தை உபகரித்தருளினதற்காக ஆழ்வார்கள் விஷயமாக இங்கு மங்களம் அருளிச் செய்திருப்பது பொருந்துமாகையினுல், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அருளிச் செய்யப்படும் அர்த்த விஶேஷங்களுக்கு அவர்களிடத்தில் உபகார ஸ்ம்ருதி இது என்பதற்கு விஶேஷ நியாமகமொன்றுமில்லை. நியமேந உபதேஶமும், ஸ்ரீகோசங்களில் ஏறியருளிப் பண்ணி யிருப்பதும் ஸ்ரீ சதுஶ்லோகீ ஸ்ரீ ஸ்தோத்ரரத்னத்தைப்போலஉபபந்நமாகலாம் என்று சிலர் ஸமாதானம் சொல்லுகிருர்கள். சிலர் ‘தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே’ என்பதினுல் மேலருளிச் செய்யப்போகிற அர்த்த விஶேஷங்களைத் தெரிவித்ததாகிய உபகார ஸ்ம்ருதி ‘பொய்கை முனி’ என்கிற பாட்டில் வ்யக்தமாயருளிச் செய்யப் பட்டிருக்கிறபடியினுலும், உபக்ரம உபஸம்ஹாரங்களில் ‘ஓம்

**पती'** ஶப்தப்ரயோகத்தினுலும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்துடன் ஒன்றுனது. ஆனுல் தனித்து மங்களா சரணம் செய்திருப்பது ஒரு க்ரந்தத்திலேயே அவாந்தர ப்ரகரணுரம்பங்களில் மங்களம் செய்கிற ந்யாயத்தினுலுபபந்நமாகும். அப்படியே ஶததூஷணீ முதலிய க்ரந்தங்களில் ஒவ்வொரு ப்ரகரணுரம்பத்திலும் மங்களமருளிச் செய்யப்பட்டிருக்கிறது என்று இது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தோடு சேர்ந்தது என்பதற்கு ஸமாதானம் சொல்லுகிறுர்கள். ஆனுல் இக் குரு பரம்பரா ஸாரம் தனி ப்ரபந்தமேயாகிலும் '**गुरुभ्यस्तद्गुरुभ्यः**', என்றும், '**ஶூஹமவத்த:**' என்று மருளிச் செய்யப்பட்ட குருபஜனம் அவஶ்யம் கர்த்தவ்யம் என்று நிரூபிப்பதற்காக ஏற்பட்டபடியினுல் உபோத்காதாதிகாரத்திற்குச் ஶேஷமாக இருந்துகொண்டு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தோடு சேர்ந்திருக்கிறதென்று ஸம்ப்ரதாய பரிசயமுள்ளவர்கள் ஸமாதானம் சொல்லுகிறுர்கள்.

இப்படி ஆரம்பிக்கப்படும் க்ரந்தம் நிர்விக்னமாக முடிவதற்காகவும், எல்லா விடங்களிலும் பரவுகிறதற்காகவும், க்ரந்தத்தை ஆரம்பிக்கிற பொழுதெல்லாம் மங்களம் செய்ய வேண்டு மென்று நைமித்திக கர்மமாகப் பெரியோர்களினுல் நிஶ்சயிக்கப்பட்டிருக்கும் மங்களா சரணத்தைச் செய்தருளா நின்றுகொண்டு, இப்படித் தம்மாலருளிச் செய்யப்பட்ட மங்கள ஶ்லோகத்தை யனுஸந்திப்பதனுல் ஶிஷ்யர்களுக்கு விஶேஷமான மங்கள முண்டாக வேண்டு மென்கிற அனுக்ரஹ விஶேஷத்தினுல் அதை க்ரந்தா ரூடமாக அருளிச் செய்கிறுர்— '**गुरुभ्यः**' என்றுரம்பித்து.

ப-ரை] **गुरुभ्यः** - ஆசார்யர்களின் பொருட்டும், **तद्गुरुभ्यश्च** - அவர்களின் ஆசார்யர்களின் பொருட்டும், **नमोवाकं** - 'नमः' என்கிற வார்த்தையை, **अधीमहे** - அத்யயனம் செய்கிறோம், அதாவது அடிக்கடி சொல்லுகிறோம், **तत्र** - அந்த ஆசார்ய பரம்பரையில், **आद्यौ** - முதலாவதாகிய, அல்லது எல்லாவற்றிற்கும் காரணமாகிய, **जगतां** - லோகங்களுக்கு, **पती** - ஶேஷிகளான, **दंपती** - பிராட்டியும் எம்பெருமானுமாகிய தம்பதிகளை, **वृणीमहे** - வரிக்கிறோம், அதாவது ஆஶ்ரயிக்கிறோம்.

இந்த ஶ்லோகத்தில், முதலில் 'गुरुभ्यः' என்று தம்முடைய ஆசார்யனைப் பன்மையாகச் சொல்லியிருப்பது கௌரவத்தைக் காட்டுவதற்காக. 'तद्गुरुभ्यः' என்கிற இடத்தில் இருக்கும் பன்மையோவெனில், அவருடைய ஆசார்யன் முதலாகப் பகவான் வரையிலுள்ள ஆசார்யர்களைக் குறிக்கிறது. 'गुरून् पूर्वं प्रयतः तद्गुरूंश्च तथा हरिम्' என்று ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் இவர் தம்மாலேயே உதாஹரிக்கப்பட்டிருக்கும் வசனத்தையனுஸரித்து இங்கிப்படி வ்யாக்யானம் செய்யப்பட்டது. நமஸ்காரத்தைச் செய்கிறோம் என்று மாத்திரம் அருளிச் செய்யாமல் 'नमः' என்கிற வார்த்தையை அத்யயனம் செய்கிறோம் என்றருளிச் செய்திருப்பது 'नमः' என்கிற பதத்தின் அர்த்தங்களெல்லாம் இந்த ஆசார்யர்கள் விஷயத்தில் செய்ய வேண்டும் என்கிற தாத்பர்யத்தை வெளியிடுகிறது. 'अधीमहे' என்பதினால் வேதாத்யயனம் விஹிதமானாற்போலே இதுவும் விஹிதமென்பது தெரிவிக்கப்படுகிறது. 'अधीमहे', 'वृणीमहे' என்று ஏகாராந்தமான பாடமே உபதேஶ பரம்பரையில் வந்திருக்கிறது. 'वृणीमहे' என்பதோடு ப்ராப்யர்களாகவும் ப்ராபகர்களாகவும் (प्राप्यौ च नः, प्रापकौ च नः)' என்று சேர்த்துக் கொள்ளவேண்டும். ஆசார்யனைப்போல ஜ்ஞான ப்ரதானம் மாத்திரம் பண்ணுகிறவர்களல்ல என்று தெரிவிப்பதற்காக 'जगताम्पती' என்றருளிச் செய்யப்பட்டது. இத்தால் ஶேஷிகளாகையினால் ரக்ஷகர்களென்றும், கைங்கர்யத்திற்கு உத்தேஶ்யர்களென்றும் அருளிச் செய்யப்பட்டதாகிறது. ஜகத்திற்கு ஈஶ்வரர்கள் இருவராகுமே என்கிற ஸந்தேஹத்தைப் பரிஹரிப்பதற்காக 'दम्पती' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. பத்நீ எப்பொழுதும் பர்த்தாவிற்குச் ஶேஷமாகையினால் ஈஶ்வர த்வித்வ ஶங்கை உதியாது என்று தாத்பர்யம். இந்த ஶ்லோகத்தினால் இந்த க்ரந்தத்திற்கு குருபங்க்தி பஜனம் விஷயமென்றும், பரம்பரையாக மோக்ஷம் ப்ரயோஜனமென்றும், அதில் ஆசையுடையவன் அதிகாரீ என்றும் தெரிவிக்கப்பட்டதாகிறது.

ஆசார்யர்கள் செய்தருளிய உபகாராதிஶயங்களும் அவர்களின் குண விஶேஷங்களும் அநுஸந்தேயமென்று ஶ்ருதியில்

போய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார்
தண் பொருநல் வருங் குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகர னம்பாணநாதன்
தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி
வையமெலா மறை விளங்க வாள் வேலேந்து
மங்கையர் கோனென்றிவர்கள் மகிழ்ந்து பாடுஞ்
செய்ய தமிழ் மாலை கணுந்தெளிய வோதித்
தெளியாத மறை நிலங்க டெளிகின்றோமே. 1

சொல்லப்படுகிறபடியினுல் அவர்கள் செய்தருளின உபகார ஸ்ம்ருதியை முன்னிட்டு அவரவர்களுக்கு அஸாதாரணமான ப்ரபாவ விஶேஷங்களுடன் அவர்களை அனுஸந்தானம் பண்ணிக் கொண்டு ஒரு மங்களமருளிச் செய்கிறார்—'போய்கை முனி' என்றாரம்பித்து. இங்கு 'ஹ்ருவாரவஹாருத்தி ஸஅஸா வாஹ்லாதிகெவி' என்று இவர் தாமே யருளிச் செய்திருக்கிறபடியே அவர்களுடைய வஸ்துக்களை யனுஸந்தானம் செய்வதும் குரு பக்தி பண்ணவேண்டும் என்கிற விதிக்கு தாத்பர்யமென்பது, அவர்களுடைய வஸ்துக்களாகிய திவ்ய ப்ரபந்தங்களையும் அவர்களுடைய இடங்களையும் அனுஸந்தானம் செய்ததினுல் தெரிவிக்கப்படுகிறது. அப்படியே பூர்வாசார்யர்களும் 'திருவழுதி நாடென்றும் தென்குருகூரென்றும்' என்றிவை முதலியது அருளிச் செய்திருக்கிறார்கள். அன்றிக்கே 'வராஶர ஹூவஸாஉவி வெஷாஜ ரஹஸ்ய வெஸதாதிஶப ஹெதா ஹாநி தெை:, ஸஷ்: வாரோதநி விதாஞ்ஜகதஜெ: ஸவெஷாவ ஜீஜெவ்ய ராவஹ்ரஹூமிணெ:' என்று ஸ்ரீ ஸ்தோத்ர பாஷ்யத்திலும், 'யதகு க்ருத்யம் ஶ்ருதீநாம் உநிமண விஹிதெை: ஸெதிஹாஸெ: வராணெ: தத்ராஸள ஸஃவஸீநு: ஶம யேந உநெ ஸஂஹிதா ஸாவகுளஸீ॥' என்று ஸ்ரீ த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலும் இவர் தாமே யருளிச் செய்திருக்கிறபடியே அத்யாத்ம விஷய ப்ரபந்தங்களில் த்ரமிடோபநிஷத்துக்கள் ஸாரதமங்க ளாகையினுல் அவைகளை உபகரித்தருளின ஆழ்வார்களைக் குறித்து மங்களம் அருளிச் செய்கிறாராகவுமாம்—'போய்கை முனி' என்றாரம்பித்து.

ப-ரை] **பொய்கைமுனி** - தடாகத்தில் அவதரித்தவரும் முனியா யிருந்தவருமான பொய்கை யாழ்வார், **பூதத்தார்** - பூதத்தாழ் வார், **பேயாழ்வார்** - பேயாழ்வார், **தண்** - குளிர்ச்சி பொருந்திய, **பொருநல்** - தாம்ரபர்ணியில், அதாவது அதின் கரையில், **வரும்**- அவதரித்தவரான, **குருகேசன்** - குருகூர் என்கிற திருநகரிக்கு நிர் வாஹகரான நம்மாழ்வார், **விட்டுசித்தன்** - பெரியாழ்வார், **துய்ய** - பரிசுத்தரான, **குலசேகரன்** - குலசேகராழ்வார், **நம்** - நம்முடையவரான, **பாணநாதன்** - திருப்பாணுழ்வார், **தொண் டரடிப்பொடி** - தொண்டரடிப்பொடி யாழ்வார், **மழிசைவந்த** - திருமழிசை என்கிற திவ்ய க்ஷேத்திரத்தி லவதரித்தவரான, **சோதி** - தேஜோரூபியானவர், அதாவது திருமழிசை யாழ்வார், **வையமெலாம்** - உலகங்க ளெல்லாவற்றிலும், **மறை** - வேதம், அதாவது வேதார்த்தம் என்று தாத்பர்யம், **விளங்க** - ப்ரகாஶமாவதற்காக, **வாள்வேலேந்தும்** - வாள், வேல், என்கிற ஆயுதங்களைத் தரித்துக் கொண்டு நின்றவரான, **மங்கையர்கோன்**- திருமங்கை யாழ்வார், **என்றிவர்கள்** - என்று சொல்லப்படுகிற இந்த ஆழ்வார்கள், **மகிழ்ந்து** - ப்ரீதியுடன், **பாடும்** - பாடினவை யான, **செய்ய** - கபடஸ்வபாவமில்லாத, அதாவது தன்னர்த்தங் களை ஸந்தேஹ விபர்யயங்க ளில்லாதபடி எளிதில் தெளிவிக்கும தான, **தமிழ் மாலைகள்** - எம்பெருமானுக்கு மாலைபோல் ப்ரீதி ஹேதுக்களாகிய த்ரமிட ப்ரபந்தங்களை, **நாம், தெளிய** - ஸந் தேஹம் முதலியவைக ளில்லாமல் நன்ருகத் தெளியும்படி, **ஓதி** - அத்யயனம் செய்து, **தெளியாத** - இதற்கு முன் தெரிந்து கொள்ளப்படாதவைகளான, **மறை நிலங்கள்** - வேதத்தின் தாத்பர்யார்த்தங்களை, **தெளிகின்றோம்** - தெளிந்து கொள்ளு கிறோம்.

இங்கு '**பொய்கை முனி**' என்பதினுல் அவர் அவ தரித்த இடமாகிய பொய்கையும், அவருடைய பக்தியாகிற குண விஶேஷமும் அநுஸந்திக்கப் பட்டதாகிறது. '**முனி**' என்னும் பதத்திற்கு மனனஶீலர் என்றர்த்த மாகையினுல் இவர் எப்பொழுதும் பகவத் த்யானமே பண்ணிக் கொண்டிருந் தாரென்ப தேற்படுகிறது. '**பூதத்தார்**' என்பதற்கு 'கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்' இத்யாதிகளிற்படியே '**பூத**'

என்னும் பதம் நித்ய ஸூரியைச் சொல்லுகிறபடியினுல் அப்படிப்பட்ட நித்ய ஸூரியின் அவதாரம் இவர் என்று தாத்பர்யம். அன்றிக்கே '**ஸூரி ஸுதாயாம்**' என்று தாத்வர்த்தமாகையினுல் 'ப்ரும்ம ஜ்ஞான முடையவனே இருக்கிறவனென்று சொல்லப்படுகிருன்' என்கிற ஶ்ருத்யர்த்தத்தின்படி ப்ரும்ம ஜ்ஞானமுடையவர் என்று தாத்பர்யமாகவுமாம். '**பேயாழ்வார்**' என்பதற்கு '**பேய்**' என்னும் பதம் பெரிய என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறபடியினுலும், '**மஹதாஹ்வய**' என்று பூர்வாசார்யர்கள் நிர்தேஶம் செய்திருப்பதினுலும், மஹாயோகி என்கிற திருநாமத்தை யுடையவர் என்று தாத்பர்யம். அன்றிக்கே '**ஸூதஸரோவேதாஜாய**' என்கிற ஸ்ரீ ஸூக்தியை யனுஸரித்து 'பேயரே எனக்கு யாவரும் யானுமோர் பேயனே' என்கிறபடியே பகவத்குணனுபவத்தினுலுண்டான ஆநந்தத்தினுல் **ஸஸம்**ப்ரம நர்த்தனுதிகளைப் பண்ணிக்கொண்டு பேய் பிடித்தவரைப் போலிருந்தவராகையினுல் '**பேயாழ்வார்**' என்று திருநாமமாயிற்று என்றுகவுமாம். இங்கு '**தண்பொருநல்**' என்று அருளிச் செய்திருப்பது அந்தத் தாம்ரபர்ணீ நதியின் சீதளத்வம் ஆழ்வார் திருவுள்ளத்தில் குடிபுகுந்திருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்காக. 'அருள்கண்டீ ரிவ்வுலகினில் மிக்கதே' என்றல்லவோ மதுரகவிகளின் பாசுரம். '**பொருநல்**' என்று தாம்ரபர்ணீ நதியை இங்கருளிச்செய்திருப்பது '**கலௌ வலு ஹவிஷ்யந்தி**' என்றுரம்பித்து '**தாம்ரபர்ணீ நதீ யத்ர**' என்று இவரையே மஹருஷி முதலில் நிர்தேஶித்தான் என்பதைத் தெரிவிப்பதற்காக. '**விட்டுசித்தன்**' என்பதினுல் '**விஷ்ணு: சித்தே யஸ்ய ஸ:**' (விஷ்ணு எவருடைய சித்தத்தில் இருக்கிருரோ அப்படிப் பட்டவர்)' என்கிற வ்யுத்பத்தியின்படி 'பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டோடி வந்தென் மனக்கடலில் வாழவல்ல மாயமணுள நம்பீ'என்றும்,'அரவத்தமளியினேடு மழகிய பாற்கடலோடு மரவிந்தப் பாவையுந்தானுமகம்படி வந்து புகுந்து' என்றும் சொல்லுகிறபடியே பெரியாழ்வார் திருவுள்ளத்திலேயே ஸபரிவாரமாகப் பகவான் எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருந்தான் என்பது தெரிவிக்கப்படுகிறது. அன்றிக்கே '**விஷ்ணௌ சித்தம் யஸ்ய ஸ:** (எவருடைய மனது பகவானிடத்திலேயே இரு

க்கிறதோ)' என்கிற வ்யுத்பத்தியினல் பகவானையே இவர் ஸதா த்யானித்துக் கொண்டிருந்தார் என்றர்த்தமாகவுமாம். அதுவுமன்றிக்கே '**வித்தம்**' என்னும் பதம் ஹ்ருதய ஶப்தபர்யாயமாகையினுலும், ஹ்ருதயஶப்தம் '**ஆத்மா வை புத்ர நாமாஸி**' இத்யாதி ப்ரயோகங்களில்போல புத்ரன் என்னும் அர்த்தத்தைச் சொல்லுமாகையினுலும், இவருடையதிருமகளாராகிய ஆண்டாளைச்சொல்லி, எவருடைய திருமகளாரான ஆண்டாள் பகவானிடத்திலேயே இருக்கிருளோ அப்படிப்பட்டவர் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம். இத்தால் '**ஸ்வஸுதாஸமர்ப்பணேந ரங்கநாயகஸ்ய ஶ்வஶுராஸ**' என்பதின் அர்த்தம் சொல்லப்பட்டதாகிறது. இங்கு திவ்யப்ரபந்தமுகேந உபகாரம் செய்தருளின ஆண்டாளைத்தனித்தருளிச் செய்யாதொழிந்தது, இவ்வாண்டாள் 'விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசுவருவிப்பரேல் அதுகாண்டுமே' என்றருளிச் செய்தபடியே தன்னுடைய பிதாவுக்கு அத்யந்தம் பரதந்த்ரையாயிருந்த உத்கர்ஷம் தோற்றுகைக்காகப் பெரியாழ்வாரை யருளிச்செய்ததினலே அவளும் அர்த்தாத் ஸித்தை என்கிற திருவுள்ளத்தினல், என்று **ஸ்ரீஸாராஸ்வாதிநீ** வ்யாக்யானத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. விஷ்ணுசித்த பதத்திற்கு கீழ்ச்சொன்ன மூன்ருவது யோஜனையைத் திருவுள்ளம்பற்றி ஆண்டாள் கண்டோக்தமானுள் என்று நிர்வஹிப்பாருமுண்டு. '**துய்ய**' என்பதற்கு 'ஆரங்கெடப் பரனன்பர் கொள்ளாரென்று அவர்கட்கே வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்ட' என்கிறபடியே பாகவதர்களிடத்தில் தோஷாரோபணத்தை ஸஹியாமையாகிய பரிசுத்தியையுடையவர் என்று தாத்பர்யம். '**பாணநாதன்**' என்பதற்கு '**பாண்**' என்பது கானத்தைச் சொல்லுகிறபடியினுல் பகவத்விஷய கானத்தையே தனக்கு நிரூபகமாக வுடையவரென்று இவருக்குப் '**பாணநாதன்**' என்கிற திருநாமம் உண்டாயிற்றென்று தாத்பர்யம். அங்கு '**நம்**' என்று விஶேஷித்திருப்பது தமக்கும் திருப்பாணுழ்வாருக்கு முள்ள அஸாதாரண ஸம்பந்தத்தைக் காட்டுகிறது. அதாவது பெரிய பெருமாளுடைய அனுக்ரஹ விஶேஷத்திற்கு அஸாதாரண பாத்ர பூதர்கள் தாங்களிருவர்களும் என்று தாத்பர்யம். எப்படியென்னில்:—ஸ்ரீரங்கநாதனே லோகஸாரங்கமாமுனிக்குஇவரைத்தோளிலே ஏற்றிவரும்

படிநியமித்து இவர்தம் ஸந்நிதி வந்தவாறே இவருக்கு முனிவாஹனர் என்கிற திருநாமம் சாற்றினதும், அப்படியே தமக்கும், '**ஸ்வஸ்திஹஸ்தம் யா॰ூநவெஷா ஆ வ்யத்யா வ்யவ்யண॰த நிஶோஹா வாயபூகூம் வெ॰கடெிஶ:**' என்றும், '**விஶ்வஸிஹா॰ர॰வோண) ந॰விஹிதவதா தெதந ஜெவெந ஷத்ரா॰ வெஷாஹாவாயபூவஸ॰ ஜ்ஞா॰**' என்றும், இவர் தாமே யருளிச்செய்யும்படி உபய வேதாந்தாசார்யர் என்கிற திருநாமத்தைச் சாற்றினதும் அநுஸந்திக்கப்பட்டதாகிறது. '**வஷகாஷஶாஹெ விதாநா॰ கூ॰பூாகூ**' என்றும், பஞ்சஸம்ஸ்காரகாலத்தில் ஆசார்யன் தாஸ்யநாமம் சாத்தவேண்டும் என்றும் சொல்லுகிற ஶாஸ்திரார்த் தங்களை யநுஸந்தித்துத் தங்களிருவருக்கும் நாமகரணம் செய்தருளிய பிதா ஒருவராகையினால் ஜ்யேஷ்ட ப்ராத்ருபாவத்தை இந்த ஆழ்வாரிடத்தில் அநுஸந்தித்தபடி தெரிவிக்கப்பட்டதாகிறது. '**தொண்டரடிப்பொடி**' என்பதினால் **தொண்டர்** - பாகவதர்களுடைய, **அடி** - திருவடிகளிலிருக்கிற, **பொடி** - தூள் என்றர்த்தமாகையினால் பக்தாங்க்ரிரேணு என்கிற இவருடைய திருநாமம் விவரிக்கப்பட்டதாகிறது. இவருக்கு வீரநாராயணயோகி என்று திருநாமமிருக்கச் செய்தே '**தொண்டரடிப்பொடி**' என்று குணக்ருத நாமத்தை ப்ரயோகித்தது இதினாலேயே இவ்வாழ்வாருடைய பாகவத ப்ரதிபத்தி முதலிய ஸாரமான குணங்கள் விவக்ஷிதமாகின்றன என்கிற திருவுள்ளத்தினால். '**மழிசைவந்தசோதி**' என்பதினால் இவ்வாழ்வார் பெரும்புலியூர் யாகஸதஸ்ஸில் எழுந்தருளினதைக்கண்டு அங்கே இருந்த ருத்விக்குக்கள் முதலியவர்கள் பரிபவம் பண்ண அப்பொழுது யஜமானனுடைய ப்ரார்த்தனையினால் அப்ராக்ருத அவதார வைபவத்தைக் காண்பிக்கத் திருவுள்ளம் பற்றித் தேஜோரூபமான திவ்ய மங்கள விக்ரஹத்தோடு ஸேவைஸாதித்த சரித்திரம் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. அன்றிக்கே இவர் சக்ரத்தாழ்வாருடைய அவதாரமாக ப்ரஸித்த ராகையினாலே தேஜோமயமான அவ்வவதார வைபவத்தை நினைத்து இப்படி நிர்தேஶிக்கப்பட்டதாகவுமாம். திருமங்கை யாழ்வாருடைய லோக ஶாஸ்திர விலக்ஷணமான குரூபஸதன ப்ரகாரத்தை யரு

ளிச் செய்கிறார்—'**வையமெலாம்**' என்றாரம்பித்து. லோகத்தில் மஹாருஷிகளுமுள்பட தந்தாமுக்கு வேதாந்தார்த்தம் ப்ரகாஶிப்ப தற்காக ப்ரணிபாத பரிப்ரஶ்நாதிகளைச் செய்து அஞ்ஜலிபந்தம் செய்து கொண்டும் ஸர்வஸ்வதானம் பண்ணிக்கொண்டும் நிற்கிறார் கள்.இது மைத்ரேய ஜாநஶ்ருத்யாதி வ்ருத்தாந்தங்களில் ப்ரஸித் தம். இவரொருவமே லோகத்தில் ஸகலருக்கும் வேதாந்தார்த்தம் ப்ரகாஶிப்பதற்காக வாளும் வேலுமேந்திக்கொண்டு ஆசார்யனாகிய ஶ்ரிய: பதியினிடத்தில் ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணிக்கொண்டு ஸம்யக் ஜ்ஞானோபதேஶத்தைப்பெற்றார். இது ஒரு ஶிஷ்ய வைலக்ஷண்யமிருக்கும்படி என்று விஸ்மிதராகிறார். அதாவது லோகோஜ்ஜீவனார்த்தம் பகவந் நியமனத்தினாலே ஶார்ங்கமென் னும் நித்ய ஸூரியின் அம்ஶமாக அவதரித்த இவர் திறத்தில் எம் பெருமான் லோகோஜ்ஜீவன புத்யா இப்படி உபதேஶம்செய்தார். ஆகையினாலிது உபபங்நமென்று திருவுள்ளம். '**மங்கையர்கோன்**' என்பதற்கு '**மங்கை**' என்பது இவ்வாழ்வார் அவதரித்த திருநக ரிக்குப் பெயராகையினால் அதில் வஸிப்பவர்கள் மங்கையர், அவ ர்களுக்கு இவர் நிர்வாஹகர் என்று ஸ்ரீ ஸாராஸ்வாதிநியில் வ்யாக் யாதம். இங்கு '**மறை விளங்க**' என்று விஶேஷித்து நிர்தேஶித் திருப்பது '**யஜுஷாஶேஷேண**' இத்யாதிகளிற்படியே ஸர்வ வேதாந்தார்த்தங்களையும் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கும் திருமந்திரத்தின் அர்த்தத்தை இவர் ஸர்வேஶ்வரன் பக்கல் க்ர ஹித்து,'வாடினேன்வாடி' என்றுபக்ரமித்துப் பரக்க நிரூபித்தரு ளினவிஶேஷஉபகாரத்தைத்தெரிவிக்கிறது. இவர்களில் பொய்கை யாழ்வார்காஞ்சீபுரத்தில்யதோக்தகாரிஸந்நிதிமுன் இருக்கும்தாம ரைத் தடாகத்தில் தாமரைப் புஷ்பத்தில் ஸ்ரீபாஞ்சஜந்யாம்ஶராய் த்வாபரயுகம்,862901-வதான ஸித்தார்த்தி௵,ஐப்பசிமீ",•சுக்ல பக்ஷம், அஷ்டமீ, செவ்வாய்க்கிழமை கூடின திருவோண நக்ஷத் திரத்தில் திருவவதரித்தருளினார்.இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது முதல்திருவந்தாதி. இது நூறுபாட்டடங்கி யது. பூதத்தாழ்வார் திருக்கடல் மல்லையில் குருக்கத்தி மலரில் த்வாபரயுகம் 862901 - வதான ஸித்தார்த்தி௵, ஐப்பசிமீ", சுக்லபக்ஷம், நவமீ, புதன்கிழமை கூடின அவிட்ட நக்ஷத்திரத் தில் ஸ்ரீ கதாம்ஶராய் திருவவதரித்தருளினார். இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது இரண்டாம் திருவந்தாதி

இது நூறு பாட்டடங்கியது. பேயாழ்வார் மைலாப்பூரில் ஒரு திருக்கிணற்றில் செவ்வல்லிமலரில் த்வாபரயுகம் 862901-வதான ஸித்தார்த்தி௵, ஐப்பசி௴, சுக்லபக்ஷம், தசமீ, வியாழக்கிழமை கூடின சதய நக்ஷத்திரத்தில் ஸ்ரீ நந்தகாம்ஸராய் திருவவதாரம் செய்தருளினர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது மூன்றாந் திருவந்தாதி. இது நூறுபாட்டடங்கியது. நம்மாழ்வார் திருக்குருகூரில் கலி 43-வது நாள், ப்ரமாதி ௵, வைகாசி௴, பௌர்ணமீ, வெள்ளிக்கிழமை கூடிய விசாகா நக்ஷத்திரத்தில் ஸ்ரீ ஸேநேஸாம்ஸராய்க் காரியாருக்கும் உடைய நங்கையாருக்கும் திருக்குமாரராகத் திருவவதரித்தருளினர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் நான்கு. அவையாவன திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி. இவை முறையே நூறு, ஏழு, எண்பத்தேழு, ஆயிரத்து நூற்றிரண்டு பாட்டுக்களடங்கியவை. பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் கலி 47-வதான க்ரோதந௵, ஆனி௴, சுக்லபக்ஷம், ஏகாதசீ, ஞாயிற்றுக்கிழமை கூடின ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் ஸ்ரீகருடாம்ஸராய் ப்ராம்மண குலத்தில் பதுமையாருக்கும் முகுந்தாசார்யருக்கும் குமாரராகத் திருவவதாரம் செய்தருளினர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது பெரியாழ்வார் திருமொழி. இது நானூற்றெழுபத்து மூன்று பாட்டடங்கியது. இவருடைய குமாரத்தியான ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் துளவவனத்தில் கலி 98-வதான நள௵, ஆடி௴, சுக்லபக்ஷம், சதுர்த்தீ, செவ்வாய்க்கிழமை கூடின பூர நக்ஷத்திரத்தில் பூமிப்பிராட்டி அம்ஸமாய் திருவவதரித்தருளினள். இவளருளிச்செய்த ப்ரபந்தம் இரண்டு. அவையாவன திருப்பாவை, நாச்சியார் திருமொழி. இவை முறையே முப்பது, நூற்றுநாற்பத்து மூன்று பாட்டுக்களடங்கியவை. குலசேகராழ்வார் கொல்லிநகரில் கலி 28-வதான பராபவ௵, மாசி௴, சுக்லபக்ஷம், துவாதசீ, வெள்ளிக்கிழமை கூடின புனர்வஸு நக்ஷத்திரத்தில் ஸ்ரீ கௌஸ்துபாம்ஸராய் சந்திரகுலத் தரசராகிய த்ருடவ்ரதருக்குப்புத்ரராகத் திருவவதரித்தருளினர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது பெருமாள் திருமொழி. இது நூற்றைந்து பாட்டடங்கியது. திருப்பாணாழ்வார் திருஉறையூரில் செந்நெற்பயிரில் கலி 343-வதான துன்மதி௵, கார்த்திகை௴,

க்ருஷ்ண பக்ஷம், த்விதீயை, புதன்கிழமை கூடின ரோகிணீ நக்ஷத்திரத்தில் ஸ்ரீவத்ஸாம்ஸராய் திருவவதரித்தருளினர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது அமலனுதிப்பிரான். இது பத்துப்பாட்டடங்கியது. தொண்டரடிப்பொடி யாழ்வார் திருமண்டங்குடி யென்கிற க்ராமத்தில் கலி 289-வதான ப்ரபவ ஸஂ, மார்கழிமீ, க்ருஷ்ணபக்ஷம், சதுர்த்தஸீ, செவ்வாய்க்கிழமை கூடின கேட்டை நக்ஷத்திரத்தில் ஸ்ரீ வநமாலிகாம்ஸராய் திருவவதரித்தருளினர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் இரண்டு. அவையாவன திருமாலை, திருப்பள்ளி யெழுச்சி. இவை முறையே நாற்பத்தைந்து,பத்துப்பாட்டுக்களடங்கியவை. திருமழிசையாழ்வார் திருமழிசையில் த்வாபரயுகம் 862901-வதான ஸித்தார்த்திஸஂ, தைமீ, க்ருஷ்ணபக்ஷம், ப்ரதமை, ஞாயிற்றுக்கிழமை கூடின மகாநக்ஷத்திரத்தில் பார்க்கவருக்கும் கநகவதியாருக்கும் குமாரராகத் திருவவதாரம் செய்தருளினர். இவரருளிச்செய்த ப்ரபந்தம் இரண்டு. அவையாவன திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி. இவை முறையே நூற்றிருபது, தொண்ணூற்றுபாட்டடங்கியவை. திருமங்கையாழ்வார் திருவாலி திருநகரி என்கிற திருக்குறையலூரில் கலி 398-வதான நளஸஂ, கார்த்திகைமீ, பௌர்ணமீ, வியாழக்கிழமை கூடின க்ருத்திகா நக்ஷத்திரத்தில் ஸ்ரீஸார்ங்காம்ஸராய் நீலன் என்பவருக்குக் குமாரராகத் திருவவதாரம் செய்தருளினர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் ஆறு. அவையாவன பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல்,பெரிய திருமடல், திருவெழுகூற்றிருக்கை.இவை முறையே ஆயிரத்தெண்பத்து நாலு, இருபது, முப்பது, நாற்பது, எழுபத்தெட்டு, ஒன்று பாட்டடங்கியது. இதற்கடுத்த பாட்டிலருளிச் செய்யப்படும் மதுரகவி யாழ்வார் திருக்கோளூரில் த்வாபரயுகம் 863879-வதானஈஸ்வரஸஂ,சித்திரைமீ,சுக்லபக்ஷம்,சதுர்த்தஸீ, வெள்ளிக்கிழமை கூடின சித்திரை நக்ஷத்திரத்தில் ஸ்ரீ வைநதேயாம்ஸராய் திருவவதரித்தருளினர்.இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது கண்ணிநுண் சிறுத்தாம்பு.இது பதினொரு பாட்டுக்களடங்கியது. கீழ்க்கூறிய இருபத்து மூன்று ப்ரபந்தங்களும், ஸ்ரீ பாஷ்யகாரர் விஷயமாய் திருவரங்கத்த முதனர் திருவாய்மலர்ந்தருளிய இராமாநுஜ நூற்றந்தாதி என்கிற நூற்றெட்டுப் பாட்டுக்களும் சேர்ந்து ப்ரஸித்தமாக நாலாயிரம்

என்று வழங்கிவரும் திவ்ய ப்ரபந்தம். இவ் வாழ்வார்களின் வைபவம், இவர்கள் க்ரந்தங்களின் வைபவம், முதலியவைகள் க்ரந்தம் விஸ்தரிக்கும் என்று எண்ணி இங்கு எழுதப்படவில்லை. மூவாயிரப்படி குருபரம்பரை, ஸ்ரீ பார்க்கவ உபபுராணம், ப்ர பந்தஸாரம், ஆழ்வார்கள் வைபவம் என்றச்சிடப்பட்டுவரும் க்ரந்தம், முதலியவைகளில் பரக்கக் கண்டு கொள்ளுவது. இப்படித் தனித்தனியே ஆழ்வார்களின் குணவிஷயங்களை யனு ஸந்தானம் செய்து இவ்வாழ்வார்களுடைய சேர்த்தியின் போக் யதையை யனுஸந்திக்கிறார்—'**என்றிவர்கள்**' என்று. அன்றிக்கே இவர்களுடைய குணானுஸந்தானத்தினா லுண்டான ப்ரீதி ப்ரகர் ஷத்தினால் மறுபடியு மனுஸந்திக்கிறாராகவுமாம். அப்படியே ஒரு ஹாரத்திலிருக்கும் ரத்னங்களின் குணங்களைத் தனித்தனியே யனுபவித்து ஹாரமாய்க் கோர்த்துச் சேர்த்தனுபவிக்கும் பொழு து உண்டாகும் ஶோபை அந்யாத்ருஶமா யிருக்குமிறே. குருபங் க்தியும் '**ஹேதீ ஶ்ரேணிஸ்த்ரிதஹாரயஷ்டிஃ விபாதி யா நாம ஹ்ருத யங்கமா விஹாதி**' என்று இவர் தம்மாலேயே அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. ஸ்ரீ தேவநாதன் ஸந்நிதியில் திருவத்யயன உத்ஸவத்தில் திருமொழித்திருநாளில் ஆழ்வார் கோஷ்டியை ஸேவித்தவர்களுக்கு இந்த ஸமுதாயானுஸந்தானத்தின் ஸ்வா ரஸ்யம் தெரியவரும். '**மகிழ்ந்து பாடும்**' என்பதற்குப் பகவதனுப வத்தினாலுண்டாகிய ஆநந்தம் உள்ளடங்காமல் அதினுடைய பரீ வாஹமாய்க்கொண்டு அவர்கள் பாடியவைகளாகிய என்றர்த்தம். ஒரு க்ரௌஞ்ச பக்ஷியை ஒரு வேடனடிக்கப் பெண் பக்ஷியின் ஶோகத்தைக்கண்டு தாம் காருணிகராகையினால் ஶோகம் மிகுத்து அதினாலே ஶோக வேக ஸமீரிதராய்ச் சொல்லிய வார்த்தை,ஶ்லோ கமாய் ஸ்ரீமத்ராமாயணத்திற்கு ஆரம்பமாக நின்றது.அதைப்போ லன்றியே பகவதனுபவத்தினாலுண்டான ஆனந்தத்தின் பரீவா ஹங்களான ஆழ்வார்கள் ஸ்ரீ ஸூக்திகள் போக்யதம மென்பது கைமுதிகந்யாய ஸித்தமென்பது விவக்ஷிதம். '**ஶோகஃ ஶ்லோகத்வ மாகத இதி நயதஃ ஶார்ங்கதன்வாபதானப்ரஹ்லாதாநந்த நாதாநமவரஸபரீவாஹதஃ ஶ்ராவ்யவேதாஃ**' என்று ஸ்ரீத்ரமி டோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் அருளிச்செய்யப்பட் டிருப்பது இங்கனுஸந்தேயம். '**செய்ய**' என்பதற்கு 'இவ் வர்த்தங்களை விஸ்த்ருதமாகத்தோடு ஸங்க்ரஹமாக மெளிதாகத்

தெளிவிக்குமவற்றில்' என்றிவர் தாமே யருளிச்செய்தபடியே தன்னர்த்தங்களை எளிதில் தெளிவிக்குமதான என்றர்த்தம். '**தமிழ் மாலைகள்**' என்பதற்குப் பகவான் திருவடிகளில் புஷ்பங்களைப் போல் ஸமர்ப்பிக்கக் கூடியவைகளாயும், பகவானுக்கு ஸ்ப்ருஹணீயங்களுமான தமிழ் ப்ரபந்தங்கள் என்று தாத்பர்யம். 'கலிகன்றியொலிமாலை கொண்டு தொண்டீர் தூமாண் சேர் பொன்னடிமேல் சூட்டுமின் நும் துணைக்கையால் தொழுது நின்றே' என்றுரிரே திருமங்கை யாழ்வார். 'செய்யசுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை', 'என்னுடைச் சொற்களென்னும் தூயமாமாலை கொண்டு சூட்டுந்தொண்டனேனே' இத்யாதிகள் இங்கு விவக்ஷிதம். '**நாம்**' என்பதற்கு இப்படிப்பட்ட ஸ்ரீ ஸூக்திகளை அத்யயனம் செய்யப் பெற்ற பாக்யாதிஶயத்தைத் திருவுள்ளம் பற்றி 'போற்றி யென்றே கைகளாரத்தொழுது சொன் மாலைகள் ஏற்ற நோற்றேற்கினி யென்ன குறை யெழுமையுமே' இத்யாதிகளிற்படியே தம்மைக் கௌரவித்து அருளிச் செய்கிறார் என்று தாத்பர்யம். அன்றிக்கே தம்மையும் தம்மோடொக்க ஆழ்வார்களின் ஸ்ரீ ஸூக்திகளை அப்யஸித்த பாக்ய ஶாலிகளையும் சேர்த்துக்கொண்டு அருளிச் செய்கிறாராகவுமாம். '**தெளியவோதி**' என்பதற்கு வேதத்தைப்போல இதுவும் ஆசார்யோச்சாரணாநுச்சாரணரூப அத்யயனத்தினாலே க்ரஹிக்கவேண்டுமென்றும், அந்த அத்யயன விதியினாலேயே ஸித்தமென்றும் தாத்பர்யம். '**தெளிய**' என்பதற்கு அர்த்த ஜ்ஞான பர்யந்தமாக அத்யயனம் செய்து என்று தாத்பர்யம். '**தெளியாத**' என்பதற்கு இதற்கு முன் அனேக ந்யாயங்களினாலும், உப ப்ரும்மணங்களினாலும் நிஶ்சயம் பண்ணப்படாத என்று தாத்பர்யம். **மறை நிலங்கள்**-வேதத்தின் பூமிகளை. இங்கு '**நில**' மென்றது தாத்பர்யார்த்தத்தை, அதாவது தாத்பர்ய பர்யவஸான பூமியைச் சொல்லுகிறது. '**தெளிகின்றோம்**' என்பதற்கு அஜ்ஞான ஸம்ஶய விபர்யயங்களற நிஶ்சயம் செய்கின்றோம் என்று தாத்பர்யம். வேதங்களில் அக்னீந்திராதி தேவதாராதனரூபமாகக் கர்மங்களும், ஜகத்காரணத்வாதி ஸ்வபாவங்களை யுடையதாகப் பரமாத்மாவும், ப்ரதி பன்னமாயிருந்தாலும், 'அவரவர் தமதமது', 'திருவில்லாத் தேவரைத் தேறேல்மின்', 'திருக்கண்டேன்', இத்யாதி ஸ்ரீ ஸூக்திகளின்

அர்த்த ஜ்ஞானத்தினல் ஸர்வகர்ம ஸமாராத்யன் ஶ்ரிய:பதி என்கிற அர்த்தம் நிஶ்சிதமாயிற்று. உபநிஷத் பாகங்களில் ‘ அதுவே அக்னி ’ என்றர்த்தமுள்ள வாக்யமுதலாக ஆரம்பித்துச் சொல்லும் வாக்யங்கள் ஶ்ரிய:பதி ஸர்வந்தர்யாமி என்பதைச் சொல்லுகின்றன என்கிற அர்த்தம் நிர்ணயபர்யந்தமாயிற்று என்று தாத்பர்யம். **‘நாம் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே’** என்றந்வயம். இதினல் ‘வீண்பெரிய விரி திரை நீர் வையத்துள்ளே வேதாந்த வாரியனென்றியம்ப நின்றோம்’ என்றிவர் அருளிச்செய்திருக்கிறபடியே ஸர்வேஶ்வரனுய் ஸத்ய ஸங்கல்பனுன ஸ்ரீரங்கநாதனுல் அனுக்ரஹிக்கப்பட்டு ஸர்வலோகங்களும் அப்யுபகமம் பண்ணும்படியான உபய வேதாந்தாசார்யத்வ பிருதாங்கிதரான தமக்கு இவ்வாழ்வார்களின் ஸ்ரீ ஸூக்திகளின் அர்த்த ஜ்ஞானத்தினுலே வேதாந்த தத்வார்த்தங்களை அறியவேண்டிற்ருகில் மற்றையவர்களுக்கு இது கைமுதிக ந்யாய ஸித்தம் என்பது திருவுள்ளம்.

இப்படி ஆழ்வார்கள் விஷயமாகப் பொதுவாக மங்களாசரணம் செய்துவிட்டுப் பிறகு குருபக்தி அவஶ்யம் செய்யவேண்டுமோ? குருபக்தி செய்யாமற் போனபோதிலும் **‘ஸாக்ஷாத்காரம் மஹதா ஸுக்ருதா ஸாத்யோ ஜநார்த்தநம்’** என்றும், **‘வர்ண்யம் ஸுஜ்ஞாநம் வஸுபதி’** என்றும் சொல்லுகிறபடியே பகவத் பக்தி, ஸுக்ருதங்கள், முதலியவைகளினுல் ஜ்ஞானம் ஸம்பாதித்து மோக்ஷம் பெறலாமே என்னில் இதற்கு ஸமாதானமாக ஆசார்ய பக்தியே செய்யவேண்டுமென்கிற விஷயத்தில் ப்ரமாணங்களை உதாஹரிக்கத் திருவுள்ளம்பற்றி, **‘தர்மஜ்ஞ ஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச’** என்கிற ப்ரமாணத்தை யனுஸரித்து தர்மஜ்ஞஸமயமாகிற ப்ரமாணத்தை ஸ்ரீ மதுரகவிகளின் அனுஷ்டான முகத்தாலே காட்டியருளுகிருர்—‘ **இன்பத்தில்** ’ என்ருரம்பித்து. இத்தால் இப்பொழுது நிரூபிக்கப்படுகிற குருபக்தி ஆவஶ்யகம் என்கிற அர்த்தத்திற்கு அனுஷ்டானத்தினுலும் க்ரந்த முகத்தினுலும் உபகாரம் செய்தருளினவராகையினுலே ப்ரதான ப்ரவர்த்தகரான ஸ்ரீமதுரகவி யாழ்வார் விஷயத்தில் ஸ்துதிரூபமான மங்களமும் செய்தருளினதாயிற்று. அன்றிக்கே **‘இன்பத்தில்’** என்ருரம்பிக்கும் பாட்டும் இப்படிப்பட்ட குருஸ்துத்யாத்மக மங்களாசரணரூபம், **‘ வாஸிஷ்ட: ’** என்ருரம்பித்து ப்ரபந்தாரம்ப

இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும்பேற்றி
லிகழாதபல்லுறவி லிராகமாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கிற் றகவோக்கத்திற்
றத்துவத்தை உணர்த்துதலிற் றன்மையாக்கில்
அன்பர்க்கே யவதரிக்கு மாயனிற்க
வருமறைக டமிழ் செய்தான் றுளே கோண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந்
தோல் வழியே நல்வழிக டணிவார் கட்கே. 2

மாகவுமாம். இப்படி இவர் ப்ரதானமான அர்த்தத்திற்கு ப்ரதானேபகாரரானது பற்றியே இவர் விஷயமாக தனித்து ஒரு மங்களம் செய்யப் பட்டிருக்கிறது என்பதும் ஸூசிதமாயிற்று என்று நிர்வஹிப்பாரு முண்டு. இப்படி ஆசார்ய பக்தி செய்யவேண்டியது அவஶ்யமானாலும், மோக்ஷத்திற் குபாய மாகிய பக்தி ப்ரபத்திகளுக்கு உபயுக்தமான ஜ்ஞானப்ரதத்வ மாகிய ஆகாரத்தைக்கொண்டு தானே பக்தி செய்யவேண்டும் என்கிற ஶங்கையை நிராகரித்து ப்ராப்யத்வ ப்ராபகத்வாதி ஆகாரமாகவும் பக்தி செய்யவேண்டுமென்று நிரூபிப்பதற்காக 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிற இந்த ஸ்ரீ மதுரகவியாழ் வார் அருளிச்செய்த ப்ரபந்தத்தின் பத்துப் பாட்டுக்களின் அர்த்தங்களைப் பத்துப் பதங்களினால் ஸங்க்ரஹித்தருளுகிறார்— '**இன்பத்தில்**' என்றாரம்பித்து.

ப - ரை] **இன்பத்தில்** - ஆநந்தத்தில், **இறைஞ்சுதலில்** - ஆஶ்ர யிக்கவேண்டியதில், **இசையும்** - அங்கீகரிக்கக் கூடியதான, **பேற் றில்** - புருஷார்த்தத்தில், **இகழாத** - ஶாஸ்திரங்களில் நிந்திக்கப் படாத, அன்றிக்கே உபேக்ஷியாத, அதாவது ஒருகாலத்திலும் விடாத, **பல்லுறவில்** - பலவிதமான பந்துத்வத்தில், **இராகம்** - இதர விஷயங்களில் ஆசையை, **மாற்றில்** - மாற்றுவதில், **தன்பற் றில்** - தானேவந்து விஷயீகரிப்பதில், **வினைவிலக்கில்** - பாபத் தைப் போக்குவதில், **தகவு** - க்ருபையின், **ஓக்கத்தில்** - உத்கர் ஷத்தில், **தத்துவத்தை** - தத்வங்களை, **உணர்த்துதலில்** - தெளி விக்கும் விஷயத்தில், **தன்மையாக்கில்** - தன்னுடைய ஸ்வபாவத்

தை உண்டாக்குவதில், அன்றிக்கே ஜீவாத்மாக்களினுடைய ஸ்வாபாவிகமான ஸ்வரூபத்தை உண்டாக்குவதில் என்ருகவுமாம், **அன்பர்க்கே** - தன்னிடத்தில் பக்தி செய்கிறவர்களுக்காகவே, **அவதரிக்கும்** - அவதரிக்குமவனுன, அதாவது கீழ்ச் சொல்லிய பத்துவிதமான கார்யங்களை தன் பக்தர்களுக்குச் செய்வதற்காகவே அவதரித்த, **ஆயன்** - ஸ்ரீ க்ருஷ்ணன், **நிற்க** - ஸித்தஸங்கல்பனுயிருக்க, **அருமறைகள்** - துர்ஜ்ஞேயங்களான வேதங்களை, **தமிழ் செய்தான்** - த்ரமிட ப்ரபந்தங்களாகச் செய்தருளிய ஆழ்வாருடைய, **தாளேகோண்டு** - திருவடிகளையே ஆஸ்ரயித்து, **துன்பற்ற** - தோஷமில்லாதவரான, **மதுரகவி** - ஸ்ரீ மதுரகவியாழ்வார், **தோன்றக்காட்டும்** - ஸர்வருக்கும் ப்ரகாஸமாகும்படி காட்டின, **தோல்வழி** - அநாதியான ஆசார்ய பக்தியாகிற மார்க்கமே, **துணிவார்கட்கு** - விஸ்வாஸமுடையவர்களுக்கு, அல்லது மோக்ஷோபாய மனுஷ்டிக்கவேண்டுமென்று அதில் ப்ரவ்ருத்திப்பவர்களுக்கு, **நல்வழிகள்**-நல்லவழிகளான பக்தி ப்ரபத்திகள். '**காயெபூ காரணாவவாரு:**' என்கிற ந்யாயத்தினுல் பக்தி ப்ரபத்திகளுக்குக் காரணமும், அவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய யோக்யதை யுண்டாக்கக்கூடியதும், அவைகளை வ்ருத்தி செய்யக் கூடியதுமான ஆசார்ய பக்தியை இதுவே பக்தி ப்ரபத்திகள் என்று ஔபசாரிகமாகச் சொல்லி யிருக்கிறது.

பகவத் விஷயத்தில் அனுஸந்திக்க வேண்டிய ஆகாரங்களெல்லாவற்றையும் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிற ப்ரபந்தரூபமாய் ஆசார்யன் விஷயத்தி லனுஸந்தித்தார் என்பதை வெளியிடுகிறது '**இன்பத்தில்**' என்றுரம்பிக்கும் இந்தப்பாட்டு. '**இன்பத்தில்**' என்பதினுல் பகவத் விஷயம் ஆநந்தாவஹம் என்று 'எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ் சோலை கோனேயாகி நின்றெழிந்தான்' என்றும், 'தேனும்பாலும் கன்னலு மமுதுமாகித் தித்திப்ப யானுமெம்பிரானையே யேத்தினேன்' என்றும் ஆழ்வார் அனுஸந்தித்ததுபோல அந்த ஆநந்தாவஹத்வத்தை 'இவர் என்னப்பனில் நண்ணித்தென் குருகூர் நம்பி யென்றக்கால் அண்ணிக்கு மமுதூறும்' என்றுசார்யன் விஷயத்தி லனுஸந்தித்தார் என்பது காட்டப்படுகிறது. '**இறைஞ்சுதலில்**' என்பதினுல் முமுக்ஷுக்களால்

ஆஶ்ரயிக்கவேண்டிய விஷயம் ஶ்ரிய:பதியே என்று 'கண்ண னல்லா லில்லைகண்டீர்சரண்' இத்யாதிகளான அனேக இடங்க ளில் ஆழ்வாரால் நிஷ்கர்ஷிக்கப்பட்டதை இவர் ஆசார்யன் விஷ யத்தில் 'மேவினேனவன் பொன்னடி மெய்மையே' என்று அநுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. **'இசையும் பேற் றில்'** என்பதினால் வேறொரு காரணத்தினாலல்லாமல் ஸ்வயமாக ஒப்புக்கொள்ளவேண்டிய புருஷார்த்தம் ஶ்ரிய:பதியின் திருவடி களே என்று'தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே', 'நின்செம்மா பாதபற்புத்தலை சேர்த்தொல்லை கைம்மாதுன்பம் கடிந்தபிரானே அம்மாவடியேன்வேண்டுவதீதே' இத்யாதிகளில் அருளிச் செய்த தை இவர் அப்படி ஶ்ரிய:பதி திருவடி தனக்கு உபேயமாவதும் ஆழ்வா ருகந்தருளியதாகையினால் ஆழ்வார் திருவடிகளே தமக்கு **ஸ்வத** ஏவ புருஷார்த்தமென்று 'தேவபிரானுடைக் கரிய கோலத்திருவுருக்காண்ப நான் பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கா ளாரியேனாய்' என்று அநுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படு கிறது. **'இகழாத பல்லுறவில்'** என்பதினால் 'தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாயவை யல்லனாய்', 'என்னைப்பெற்ற அத்தா யாய்த் தந்தையா யறியாதன வறிவித்த அத்தா' என்றிவை முத லிய ஸ்ரீ ஸூக்திகளில் ஒருநாளு மழியாத ஸம்பந்தத்தையுடைய வன் ஶ்ரிய:பதியே என்று நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தத்தை இவர் ஆசார்யன் விஷயத்தில் 'அன்னையாயத்தனாய்' என்றநுஸந் தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது.**'இராகம் மாற்றில்'**என்பதி னால் 'கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலும்' இத்யாதிகளில் இதர புருஷார்த்தங்களில் ருசியை நிவ்ருத்திப்பவன் ஶ்ரிய:பதியே என்கிற அர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் விஷயத்தில் 'செம் பொன்மாடத் திருக்குருகூர் நம்பிக்கன்பனாய் அடியேன் சதிர்த் தேன்' என்றநுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. **'தன்பற்றில்'** என்பதினால் தானே விஷயீகரித்துத் தன்னுடைய குணங்களை ஸ்தோத்திரம் பண்ணுமளவாக க்ருபை பண்ணு வது ஶ்ரிய:பதியே என்று 'ஆமுதல்வனிவனென்று தற்றேற்றி என் நாமுதல் வந்து புகுந்து நல்லின் கவி தூமுதல் பத்தர்க்குத் தான் தன்னைச்சொன்ன என் வாய் முதலப்பனை' என்றும், 'யானாய்த் தன்னைத் தான் பாடி' என்றும், நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தத்தை இவர் ஆசார்யன் விஷயத்தில்'இன்றுதொட்டுமெழு

மையு மெம்பிரான் நின்று தன் புகழேத்தவருளினன்' என்றநுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. **'வினைவிலக்கில்'** என்பதினால் **'ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி'** என்று ஸங்கல்பிப்பது ஶ்ரிய:பதியே என்று 'என்னைக்கொண்டு என் பாவம் தன்னையும் பாறக்கைத்து', 'சார்ந்த விருவல்வினைகளும் சரித்துமாயப் பற்றறுத்து' இத்யாதிகளில் நிஷ்கர்ஷித்த வர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் திறத்தில் 'காரிமாறப்பிரான் பண்டை வல்வினை பாற்றியருளினன்' என்றநுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. **'தகவோக்கத்தில்'** என்பதினால் 'எதிர்சூழல் புக்கெனைத்தோர் பிறப்பும் எனக்கேயருள் செய்யவிதி சூழ்ந்ததால்', 'அருளாழியம்மானை' இத்யாதிகளில் அபார கருணாவான் ஶ்ரிய:பதி என்றருளிச் செய்த அர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் திறத்தில் 'அருள்கொண்டாயிர மின்தமிழ்ப் பாடினனருள் கண்டீரிவ்வுலகினில் மிக்கதே' என்றநுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. **'தத்துவத்தை யுணர்த்துதலில்'** என்பதினால் 'மயர்வறமதிநல மருளினன்', 'அவனுடை யுணர்வுகொண்டுணர்ந்தே' இத்யாதிகளில் தத்வஜ்ஞானோத்பாதனம் பண்ணுவது ஶ்ரிய:பதி என்று நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் திறத்தில் 'மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினன்' என்றநுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. **'தன்மையாக்கில்'** என்பதினால் 'தன்மைபெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க்கொள்ளுமப்பன்' இத்யாதிகளில் தன்னுடைய ஸ்வபாவத்தை யுண்டாக்குமவன் ஶ்ரிய:பதி என்றருளிச்செய்த அர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் திறத்தில் 'செயல் நன்றாகத்திருத்திப்பணி கொள்வான்' என்றநுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. இப்படி இந்தப் பத்துவிதமான உபகாரங்களைப் பகவான் தன்னை யாஶ்ரயித்தவர்களுக்குச் செய்கிறான் என்கிற விஷயத்தில் ப்ரமாணமாக ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளே கீழ் உதாஹரிக்கப்பட்டன. **'யத்தத் க்ருத்யம் ச்ருதீநாம் முநிகண விஹிதை: ஸேதிஹாஸை: புராணை: தத்ராஸௌ ஸத்த்வஸீம்ந: ஶடமதநமுநே: ஸம்ஹிதா ஸார்வபௌமீ॥'** என்று இவர் தாமே இந்தத் திருவாய்மொழியில் ஶ்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராணாதி

களில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தம் அருளிச்செய்யப்பட்டிருக்கி றது என்று திருவுள்ளம்பற்றி யிருப்பதினுல் ஶ்ருத்யாதிகளிலும் இவ்வர்த்தம் ஸங்க்ரஹீதமானுலும் அந்தப்ரமாணங்களை உதாஹ ரியாதது க்ரந்த விஸ்தரபயாத் என்பது அறியத்தக்கது. இப்படிப் பட்ட பத்துவிதமான உபகாரத்தையும் ஆசார்யன்ஶிஷ்யனுக்குப் பண்ணுகிருன் என்னுமர்த்தத்தை இவர்தாமே ஸ்ரீந்யாஸவிம்ஶதி யில் ஆசார்யலக்ஷணத்தை நிரூபிக்குமிடத்தில் '[Grantha] யாஃ' என்கிற ஶ்லோகத்தில் அருளிச்செய்திருப்பதற்கு இந்த க்ரந்தமே மூலமென்பது ஸூசிதம். இவ்விடத்தில் 'இன்பத்தில்' என்பதை '[Grantha]' என்றும், 'இறைஞ்சுதலில், இசையும் பேற்றில், இகழாத பல்லுறவில்' என்பதை '[Grantha]' என்றும், 'இராகம் மாற்றில், தன்பற்றில்' என்பதை '[Grantha]' என்றும், 'தகவோக்கத்தில்' என்பதை '[Grantha]' என்றும், 'வினைவிலக்கில்' என்பதை '[Grantha]' என்றும், 'தத்துவத்தை யுணர்த்துதலில்' என்பதை '[Grantha]' என்றும், 'தன்மையாக்கில்' என்பதை '[Grantha]' என்றும் அங்கு ஸங்க்ரஹித்தருளி யிருக்கிருர். 'அன்பர்க்கே'. இத் யாதிஶேஷம் '[Grantha]' இத்யாதி ம்ருதியினுல் ஸூசிப்பிக்கப்படு கிறது. ஆக இத்தால் 'தேவதையைப்போலவே ஆசார்யனை உபா ஸனம் செய்யவேண்டும்' என்றர்த்த முள்ள ஶ்ருதி வாக்யத்தின் தாத்பர்யம் மதுரகவி யாழ்வாரால் அனுஷ்டானத்திலும் ப்ர பந்தரூபத்தினுலும் வ்யக்தமாக்கப்பட்டது என்பது தெரிவிக்கப் படுகிறது. 'அன்பர்க்கே' என்பதற்கு இவ்விதமான உபகாரங்களைப் பக்தர்களுக்காகச் செய்யவே என்று தாத்பர்யம். 'அவதரிக்கும் ஆயன்நிற்க' என்பதினுலே '[Grantha]' என்ப தே அவதாரத்தின் முக்ய ப்ரயோஜனம், துஷ்க்ருத்விநாஶாதிகள் நடுவில் நேரும் அவாந்தர ப்ரயோஜனம் என்பது தெரிவிக்கப்படு கிறது. 'அருமறைகள் தமிழ்செய்தான்' என்பதற்கு '[Grantha]' என் கிறபடியே 'தமிழ்' என்கிற பதத்தை 'மறைகள்' என்பதோடு அந்வயித்துக் கொண்டு த்ரமிட வேதாந்தத்தை ப்ரவசனம் செய் தவரான என்று தாத்பர்யம். அன்றிக்கே ஒருவராலுமறிய

முடியாத வேதார்த்தங்களைத் தமிழ் பாஷையாக ப்ரவசனம் செய்தவரான என்றும் தாத்பர்யமாகவும் மாம். '**வேதாய...ங்களில்** வேண்டும் **ஸாரதரோம்ஸங்களை ஸவ..ருக்கு ...க்கலான ஹாலெஷயாலே ஸங்ரு** ஹித்துக் காட்டியும்' என்றிவர் தம்மாலேயே அருளிச் செய்யப்பட்டது இங்கனுஸந்தேயம். '**தானே கோண்டு**' என்கிற இடத்தில் அவதாரணத்தினுல் (ஏகாரத்தினுல்) பகவானை அநாதரித்து ஆழ்வாரை **ஆஸ்ரயித்த** படி சொல்லப்படுகிறது. '**துன்பற்ற**' என்பதற்கு ப்ரம விப்ரலம் பாதி தோஷங்களொன்று மில்லாதவரான என்றர்த்தம். இத்தால் இவருடைய ஆப்ததமத்வம் (மிகவும் **விஸ்வாஸம்** செய்யக்கூடிய தன்மை) தெரிவிக்கப்பட்டதாயிற்று என்று **ஸ்ரீஸாரா ஸ்வாதினி**யின் நிர்வாஹம். பாகவத பக்தியுண்டாவதற்கு விரோதியான பாபங்களற்ற என்று **ஸ்ரீ** ஸாரப்ரகாஸிகையின் நிர்வாஹம். புருஷார்த்தங்களில் ப்ரதமபர்வத்தை விட்டு சரமபர்வத்தில் நிலை நின்றவராகையினுலே வால்மீகி மஹருஷியினுல் சொல்லப்பட்ட '**கூநவஃ**' என்னும் பதத்திற்குப் பாத்ரபூதரான என்று **ஸ்ரீ** ஸாரஸங்க்ரஹத்தின் நிர்வாஹம். [அதாவது கேவல பகவத் பக்தியோடு நிற்காமல் பாகவத பக்தி பர்யந்தம் சென்றவராகையினுலே '**கூநவஃ**' என்று சொல்லப்பட்டார் என்று தாத்பர்யம்.] '**ஷிஃ ஷுவதி வாநெதி ஷஃஷபொரவ்ரூத ஹெவிநாஂ। நஷஃஷயொ தூ தக ஷகு வரிவயாா ர தாதநாஂ॥**' என்கிறபடியே பல ஸித்தியில் ஸம்ஸயத்தினு லுண்டாகிற துக்கமில்லாதவரான, அதாவது '**துன்பு**' என்பது துன்பம் என்கிற பதத்தின் பர்யாயமாகையினுல் துக்கம் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது என்று **ஸ்ரீ**ஸாரதீபிகை **ஸ்ரீ** ஸார விவரணிகளின் நிர்வாஹம். '**ஆயன் நிற்க**' என்பதினுல் 'என்னப்பனில் நண்ணி' என்பதினர்த்தம் ஸூசிதம். '**தோன்றக்காட்டும்**' என்பதற்கு தன்னுடைய அனுஷ்டானத்தில் மாத்திரம் பர்யவஸியாதே க்ரந்தரூபமாய் வெளியிட்டபடியினுல் பின்புள்ள ஸகல காலவர்த்திகளும் அறியும்படி ப்ரகாஸமாகக் காட்டப்பட்ட என்றர்த்தம். '**தோல்வழி**' என்பதினுல் இது கேவலம் மதுரகவிகள் தன்னுடைய ருசிமூலமாகச் செய்ததுமாத்திரமன்றிக்கே ஸ்ருதிஸித்தமாய், அதினர்த்தத்தை உப ப்ரும்மணம்பண்ண

‘வாஸிஷ்ட: [illegible] | [illegible]

---

வந்த ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீ சத்ருக்னுழ்வானுடைய வ்ருத்தாந்த முகத்தாலே பரக்கப்பேசப்பட்ட மார்க்கம் என்பது தெரிவிக்கப்படுகிறது. ‘தோல்வழியே நல்வழிகள்’ என்பதினுல் இந்தக் குருபஜனத்தைத் தவிரப் பக்தி ப்ரபத்யாதிகளுக்கு வேறு மார்க்கமில்லை என்பது தெரிவிக்கப்படுகிறது. ஆக இத்தால் பக்தி ப்ரபத்திகளாகிற மோக்ஷஸாதனங்கள் குருபக்தியைத் தவிர வேறு மார்க்காந்தரத்தாலே யதாவத்தாக முடிவுபெறுது, கார்யகரமுமாகாது என்பது திருவுள்ளம் என்று ஸ்ரீ ஸாரா ஸ்வாதிநியில் வ்யாக்யாதம். மோக்ஷோபாயங்களில் ஏதாவதொன்றை யவலம்பிக்கவேண்டு மென்று ப்ரயத்னம் செய்கிறவர்களுக்கும் மதுரகவி தோன்றக்காட்டும் ஆசார்யாபிமான நிஷ்டையே (துணியப்படுவது அதாவது ப்ரவ்ருத்திக்கப்படுவது). ஆசார்யாபிமான நிஷ்டையே பக்தி ப்ரபத்திகள் செய்யும் பலத்தைக் கொடுக்கும் என்கிற முன்யோஜனையில் பக்த்யாதி ஸாம்யமும், இந்த யோஜனையில் அவைகளைக் காட்டிலும் உத்கர்ஷமும் ஸித்திக்கிறது என்று ஸ்ரீஸாரதீபிகையின் நிர்வாஹம். முன் ஆசார்யபரம்பரையிலே உபதேஶபரம்பரையாய் வந்தபடியினுல், ஆசார்யர்களினுலே அனுஷ்டிக்கப்பட்ட ப்ரபத்தியாகிற ஆசார்ய நிஷ்டையே மஹா விஸ்வாஸமுடையவர்களுக்கு நல்ல மார்க்கம் என்பது ஸ்ரீஸார ப்ரகாசிகை ஸ்ரீஸாரவிவரிணிகளின் நிர்வாஹம். புருஷார்த்த காஷ்டாபூதமான ஆசார்ய ஸ்துதியில் ப்ரவ்ருத்தரானதுகொண்டு இவருக்கு ‘மதுரகவி’ யென்று திருநாமமாயிற்று. ஆகையினுல் நேரில் பகவதாஶ்ரயணத்தைவிட ஆசார்ய ஸமாஶ்ரயணம் பகவானுடைய ப்ரீத்யதிஶயத்திற்குக் காரணம் என்பது இதினுலேயே த்யோதிதம் என்று திருவுள்ளம்.

இப்படித் தர்மஜ்ஞஸமயமாகிற ப்ரமாணத்தைக் காட்டி ஶ்ருதியாகிற ப்ரமாணத்தைத் திருவுள்ளத்தில் வைத்துக் கொண்டு தந்மூலகமான ஸ்ம்ருதி வாக்யத்தை உதாஹரித்தருளுகிறுர்—‘வாஸிஷ்ட:’ என்றுரம்பித்து. அன்றிக்கே இந்த க்ரந்தத்தில் அருளிச் செய்யப்போகிற குருபக்திக்கு ப்ரதான உபகாரகரான ஸ்ரீ மதுரகவிகள் விஷயமாகத் தனித்

**வாநுஹவெசு ॥'** என்று **ஆவாயவத்தையே ஸவருக்கும் ஷொக்ஷகாரண** மென்றறுதியிட்டார்கள். **உாஉாக்ஷா**

---

தொரு மங்களாசாரணம் செய்தருளி, இனி குருபக்தி அவஸ்யம் செய்யவேண்டு மென்பதற்கு ப்ரமாணத்தை உதாஹரித்தருளுகிறாராகவுமாம்—**'வாவிஷுஃ'** என்றாரம்பித்து. அதுவு மன்றிக்கே ஸ்ரீ மதுரகவிகள் 'நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும் புன்மையாகக் கருதுவராதலின்' இத்யாதி ஸ்வ வாக்யத்தாலே பாபப்ரசுரராகையினால் அவருக்குக் குருபஜனாதிகளபேக்ஷிதமா யிருந்தபோதிலும், **'வாண்யஂ ஜுஜூாஂவஸயதி'** இத்யாதி வசனங்களாலே உத்க்ருஷ்ட ஸுக்ருதம் தானே ஜ்ஞானத்தை வ்ருத்தி பண்ணுமென் றேற்படுகிறபடியினால் அந்த உத்க்ருஷ்ட ஸுக்ருத ஶாலிகளுக்கு குருபக்தி ஆவஸ்யகமில்லை என்கிற ஶங்கைக்குப் பரிஹாரமாக் அப்படிப் பட்ட உத்க்ருஷ்ட ஸுக்ருத சாலிகளுக்கும் குருபக்தி ஆவஸ்யகமென்று காட்டுவதற்காக ப்ரமாணத்தை உதாஹரித்தருளுகிறாராகவுமாம்—**'வாவிஷுஃ'** என்றாரம்பித்து. **வாவிஷுஃ** - மிகுந்த பாபியான, **க்ஷத்ரவஸுஸ்ரூ** - க்ஷத்திர பந்துவும், **வாண்ய கரசு** - புண்யம் செய்தவனாகிய, **வாண்ரீகஸ்ரூ** - புண்டரீகனும், **ஆவாயவதயா** - ஆசார்யனை ஆஸ்ரயித்ததினால், **உாகளா** - மோக்ஷத்தை யடைந்தார்கள், **தஹாசு** - ஆகையினால், **ஆவாயவாநு** - ஆசார்யனை அடைந்தவனாக, **ஹவெசு** - ஆகவேண்டும். இத்தால் புண்யம் ஜ்ஞானத்தை வ்ருத்தி செய்யும் என்று சொல்லி இருப்பதற்கு ஆசார்யனை அடைந்திருப்பவனுக்குப் புண்யம் உதவியாகும் என்பதில் தாத்பர்யம் என்று திருவுள்ளம். **'க்ஷத்ர வஸுாஸிதிவ்யாஜெதா ராஜாவஹாணிவிஹிஂஸகஃ', 'ஸஜ்ஜொகெ வஸு ரொஜெக தஹிநு உாவநாதவெதவி। விஶாஂ வகார ஸஊாநிஃ க்ஷத்ரவஸுள ஷயாவரஃ ॥'** என்கிற பாத்மோத்தர வசனத்தின்படியே க்ஷத்திரபந்து என்கிற ஒரு ராஜா காட்டில் வஸித்துக்கொண்டிருந்து அங்கிருந்த மஹருஷி முதலியவர்களை ஹிம்ஸித்துக்கொண்டிருந்தான். இப்படிப் பல ப்ரும்ம வித்துக்களினிடத்தில்செய்யப்பட்டபாபங்கள் அதிகமாயிருந்த போதிலும் ஏதோ ஒரு ஸுக்ருதம் பலிக்கும்

காலத்தில் நாரத மஹருஷியை ஸந்திக்கும்படி நேர்ந்தது. இவன் தன்னுடைய வழக்கப்ரகாரம் அவரை அடிக்கத் தடியை ஓங்கிக்கொண்டு அவரை நோக்கிச் செல்ல அவர் 'நீ இப்பொழுது என்னை அடிக்க வருகிறாயே? இது பாபமா, புண்யமா, என்று உனக்குத் தெரியுமா? பாபமா யிருந்தும் குடும்ப ரக்ஷணாதிகளுக்காகச் செய்கிறாயேயாகில் நீ யாருக்காக இந்தப் பாபத்தைச் செய்கிறாயோ அவர்கள் இந்தப் பாபத்தில் ஒரு பாகத்தை ஏற்றுக்கொள்ளுவார்களா என்றறிந்துவா. நான் அதுவரையில் இங்கேயே இருக்கிறேன். நீ திரும்பிவந்து உன்னிஷ்டப் பிரகாரம் செய்' என்று சொல்ல, இவனுக்கும் பாகவதோத்தமராகிய அவருடைய தர்ஶனத்தினால் கொஞ்சம் ஜ்ஞானம் உண்டாகி, வீட்டிற்குச்சென்று பார்யாதிகளைப் பாபத்தில் பங்கு பெறுவார்களா என்று கேட்க, அவர்கள் மாட்டோம் என்று மறுக்க, நாரதரிடம் திரும்பி வந்து 'நான் இதுவரையில் தெரியாமல் அனேகம் பாபங்களைச் செய்துவிட்டேன். இதிலிருந்து தப்புவதற்கு உபாயம் ஒன்று சொல்ல வேண்டும்' என்று ப்ரார்த்திக்க, கருணாநிதியான அவர் இவனுக்கு உபதேஶாதிகளைச் செய்து உபாயானுஷ்டானம் பண்ணி மோக்ஷத்தை யடையும்படி செய்தார் என்று இவனுடைய சரித்திரம் உபதேஶ பரம்பரையில் வந்து கொண்டிருக்கிறது. 'க்ஷத்ரபந்து' என்னும் பதத்திற்கே க்ஷத்ரியர்களுக்குள் அதமன் என்றர்த்தம். இவன் ராஜாவாயிருந்தபோதிலும் இவனுடைய நடத்தைப் பிசகினால் இவனுடைய பந்துக்கள் ப்ரஷ்டன் என்று தள்ளிவிட இவன் காட்டில் வருபவர்களை ஹிம்ஸித்து அதனால் ஜீவிக்கும்படி நேர்ந்தது. புண்டரீக வ்ருத்தாந்தம் ஸ்ரீ பாத்மோத்தர புராணத்தில் ஆறாவது பாகத்தில் எண்பத்தோராவது அத்யாயத்திலும் இதிஹாஸ ஸமுச்சயத்தில் முப்பத்திரண்டாவது அத்யாயத்திலும் அடியில் ஸங்க்ரஹிக்கப் பட்டிருக்கும் விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புண்டரீகன் என்பவர் ஒரு தனிகனான ப்ராம்மணன், வேதாத்யயனம் முதலியவைகளை யதாக்ரமம் செய்து தர்மானுஷ்டானத்தில் நிலை நின்றிருந்தார். மாதா பிதாக்களுடைய ஶுஶ்ருஷைகளை யதாஶாஸ்திரம் நடத்திப் போந்து தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார். அனேகம் புண்ய க்ஷேத்

**வுக்காவாயஃவம்ஶம் ஹ௨வானளவும் செல்ல வ ஈ^ஸாயி க்கவேணுமென்றோதப்பட்டது.** 1

திரங்களில் வஸித்து ஸகல பாபங்களேயும் போக்கடித்துக் கொண்டு பக்தியோகம் பண்ணிக்கொண் டிருந்தார். ஆகிலும் பகவத் ஸாக்ஷாத்காரம் ஏற்படவில்லே. இப்படி இருக்கும்பொழுது ஒரு ஸமயத்தில் நாரத ஸமாகமம் இவருக்கு நேர்ந்தது. நாரதர் திருவஷ்டாக்ஷரத்தின் பெருமையைப் பரக்க நிரூபித்து அதை இவருக்கு உபதேஶித்து அதில் நிஷ்டையை யுடையவரா யிருக்கும்படி நியமிக்க, இவரும் அப்படியே அதில் நிஷ்டையை யுடையவராய் அதினுல் பகவானே ஸாக்ஷாத்கரித்து மோக்ஷத்தை யடைந்தார்-என்று. இந்த இரண்டு வ்ருத்தாந்தங்களினுலும் உத்க்ருஷ்ட புண்யம், பக்தி, முதலியவைகள் மாத்திரம் மோக்ஷ ஸாதநமாகாது, ப்ரபலமான பாபங்களும் தடங்கலாகாது என்பது தெரிவிக்கப்படுகிறது என்று '**ஆவாயஃவத்தையே**' என்கிற இடத்தில் ஏகாரத்திற்கு தாத்பர்யம். '**ஸவஃருக்கும்**' என்பதற்கு புண்யசாலிகளுக்கும், பாபிகளுக்கும் என்று தாத்பர்யம். '**அறுதியிட்டார்கள்**' என்பதற்கு நிஶ்சயித்தார்கள் என்றர்த்தம். இந்த வசனத்தினுல் ஆசார்யனே அடைய வேண்டுமென்பது ஏற்பட்ட போதிலும் ஶ்லோகத்தில் '**ம^ஈ ஹ்ூ, தஜ^ஈஹ்ூ**' என்றருளிச் செய்திருக்கிறபடியே ஆசார்யானு ஸந்தானத்தின் ஆவஶ்யகதை ஏற்படவில்லேயே? அப்படி ஆவஶ்யகதை ஏற்பட்டாலும் மற்றைய பரமாசார்யர்களின் அநுஸந்தானம் அவஶ்யமென்பதேற்படவில்லேயே? '**தஜாஃஹ்ள**' என்று அந்தக் குருபரம்பரையில் பகவானே முதலாக நிர்தேஶித்தது ஸங்கதமாகுமோ? என்றிவை முதலிய ஶங்கைகளுக்குப் பரிஹாரமாக இதின் மூலமான ஶ்ருதி வாக்யத்தின் தாத்பர்யத்தை அநுவதிக்கிறுர்— '**உ^உ^க்ஷ^ வுக்கு**' என்றுரம்பித்து. '**ஆவாயஃவம்ஶம்**' என்பதற்கு ஆசார்ய பரம்பரை முழுவதும் என்றும், '**ஹ௨வானளவும் செல்ல**' என்பதற்கு ஸ்வாசார்யனிடமிருந்து ஆரம்பித்து பகவான் வரையில் என்றும் தாத்பர்யம். '**வம்ஶம்**' என்பது இங்கு பரம்

1. ரஹஸ்யாம்நாய ப்ராம்மணம்.

பகவானுடைய ப்ரதமாசார்யத்வம்

1 'தஸ்மை ஸர்வஸம்பந்ந ஆசார்யஶ்ச பிதா குருஶ்ச' என்றும், 2 'ஜ்ஞாநவ்ருத்தோ லோகாநாம் குருர்நாராயணோ குரு:' என்றும், 3 'ஸர்வலோகஸ்ய கு

---

பரையைச் சொல்லுகிறது. **'ஓதப்பட்டது'** என்பதற்கு இந்த அர்த்தம் ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது என்று தாத்பர்யம். இங்கு ஶ்ருதி வாக்யத்தை உதாஹரித் தருளாததின் கருத்து இக்ரந்தம் ஸ்திரீ ஶூத்ராதி வ்யத்யாஸமில்லாமல் ஸகலருக்கும் உபஜீவ்யமாகவேண்டுமென்கிற திருவுள்ளத்தினுல்.

எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் பகவான் பரமாசார்யனென்பது எப்படி ஸங்கதமாகும்? சதுர்முக ப்ரும்மா முதலாகவரும் ஸம்ப்ரதாய நிஷ்டருக்கல்லவோ பகவான் பரமாசார்யனுவான்? இப்பொழுதுள்ள நமக்குப் பகவான் பரமாசார்யனுவதெப்படி? இப்பொழுது மனுஷ்ய ஜாதியிலிருக்கும் நம்முடைய ஆசார்யர்கள் நாரத பராஶராதிகளைப்போலப் பஜனீயர்களோ? அவர்கள், பக்தி முதலிய குணங்களினுல் சிறந்தவர்களாகையினுலும், பகவானுடைய அம்ஶாவதாரமென்று ப்ரஸித்தர்களாகையினுலும் பஜனீயர்களாயிருக்கை ஸம்பவிக்கக்கூடும். இந்தக்காலத்திய ஆசார்யர்கள் அப்படியில்லாமையினுல் அதுஸம்பவிக்காதே? என்றிவை முதலிய ஶங்கைகளுக்கு பாரதாதி வசனங்களினுல் பகவான் ஸர்வருக்கும் பரமாசார்யன் என்பதேற்படுகிறபடியினுல் அவனுலேயே பஹுவிதமாக ஸம்ப்ரதாயம் ப்ரவசனம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், இதற்கு முன் நாரதாதிகளாலே செய்யப்படாத பாஷண்டிமத நிரஸனம் முதலிய உபகாராதிஶயத்தாலும், இவர்கள் பகதவதாரமென்று வசனங்கள் சொல்லுகிறபடியினுலும், இவர்கள் அவர்களைவிடப் பஜநீய தமர்களென்று ஸமாதான மருளிச்செய்கிருர்-'**தஸ்மை**' என்றுரம்பித்து, '**ஸ்வதர்ஶித்தருளினுன்**' என்னுமளவாக. **தஸ்மை**-அப்படிப்பட்ட இந்த, **ஸர்வ ஸம்பந்ந** - அக்ரபூஜையை அடைவதற்குத் தகுந்த ஸர்வாகாரங்களினுலும் பூர்ணரான, **ஆசார்யஶ்ச** - ப்ரும்ம வித்யையை உபதேஶம் செய்தவராயும், **பிதா** - தகப்பனுராயும், **குருஶ்ச** - வேதாத்யயனம் செய்வித்தவராயுமிருக்கிற. இவ்விடத்

---

1. பா-ஸ-41-21.[ஸஹாதேவன் வார்த்தை.] 2. வி-பு-5-1-14. 3. ஶ-க.

**ப³ந்து⁴ஸ்த்வமேவ' என்றும், 1 'கு³ருரஸி க³திஶ்சாஸி ஜக³தாம்' என்றும் சொல்லுகிறபடியே ஸர்வலோகத்துக்கும் ப்ரதமாசார்யனை ஸர்வேஶ்வரன் ப்³ரஹ்மாவுக் கடியிலே வேதங்களைக் கொடுத்தும், அவற்றிற்கு அபஹாரம் பிறந்தபோது மீட்டுக்கொடுத்தும், இவன் மூலமாக ஶாஸ்த்ரங்களைப் ப்ரவர்த்திப்பித்தும், இவன் புத்ரர்களான ஸநத்குமாராதிகளை 2 'ஸ்வயமாக³த விஜ்ஞாநநிவ்ருத்திம் த⁴ர்மமாஸ்தி²தா:' என்னும்படி பண்ணி அவர்கள் மூல**

---

தில் 'கு³ரு' என்னும் பதம் ஸாமாந்யமாக வித்யோபதேஷ்டாவையும், '**ஆசார்ய**' என்னும் பதம் ப்ரும்மவித்யோபதேஷ்டாவையும் சொல்லுகிறது. **ஸர்வலோகாநாம்** - எல்லா லோகங்களுக்கும், **கு³ரு:** - ஆசார்யனாகிய, **நாராயண:** - நாராயணன், **மமாபி** - எனக்கும், **கு³ரு:** - ஆசார்யன். இங்கு '**ஸர்வ**' என்பதினால் தன் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களும் சேராதவர்களும் ஸங்க்ரஹிக்கப்படுகிறார்கள். **த்வமேவ** - நீரே, **ப³ந்து⁴:** - பந்துவும், **த்வமேவ**-நீரே, **கு³ரு:**-ஆசார்யனும். **ஜக³தாம்** - லோகங்களுக்கு, **கு³ரு:**-ஆசார்யனாகவும், **க³தி:** - அடைய வேண்டிய வஸ்துவாகவும், **அஸி** - ஆகிறீர். '**ப்ரதமாசார்யன்**' என்பதற்கு இவர் தாமே ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தியில் லருளிச்செய்திருக்கிறபடியே 'இவனொருவனுமே தனக்கொரு **ஆசார்யனி**ல்லாத **ப்ரதமாசார்யன்**' என்றர்த்தம். **அடியிலே** - முதலிலே, அதாவது ஆரம்பத்திலே. '**அபஹாரம் பிறந்தபோது**' என்கிற இடத்தில் மதுகைடபாதிகளினால் என்று சேர்த்துக்கொள்ளவும். இங்கு பகவான் ஜ்ஞானத்தைக் கொடுத்தது நான்குவிதம். (1) தானே நேரில் உபதேசம் செய்தது, (2) சில ஜீவர்களை ஶக்தியினால் அதிஷ்டானம் செய்து உபதேஶம் செய்தது, (3) தான் நியமித்து உபதேஶம் செய்யும்படி சிலரைத் தூண்டினது, (4) உபதேஶமில்லாமல் கேவலம் அனுக்ரஹ விஶேஷத்தினால் ஜ்ஞானத்தை யுண்டாக்கினது. அதில் ப்ரும்மா முதலியவர்களுக்கு முதலாவது செய்யப்பட்டது. வ்யாஸாதிமுகேந செய்தது

---

1. ஸ்ரீஸ்தோ-60. 2. பா-ஶா-349-72.

**ங்களாலே ஹித ப்ரவர்த்தனம் பண்ணுவித்தும், இப்படியே மற்றும் நாரத பராஶர ஶுக ஶௌநகாதிகளான பல மஹர்ஷிகளையிட்டு அத்யாத்மஸம்ப்ரதாயங் குலையாதபடி நடத்தியும், 1 ‘க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் | கோ ஹ்யந்யோ புவி மைத்ரேய மஹாபாரதக்ருத் பவேத் ||’ என்றும், 2 ‘மஹர்ஷே: கீர்த்தநாத்தஸ்ய பீஷ்ம: ப்ராஞ்ஜலிரப்ரவீத்’ என்றும் சொல்லுகிறபடி நிற்கிற வ்யாஸாதிகளை அநுப்ரவேஶித்து மஹா பாரத ஶாரீரகாதிகளைப் ப்ரவர்த்திப்பித்தும் ஹம்ஸ மத்ஸ்ய ஹயக்ரீவ நர நாராயண ஶ்ரீகீதாசார்யாத்யவதாரங்களாலே தானே வெளி நின்று**

---

இரண்டாவது. நாரதபராஶராதிகளை இட்டு உபதேஶம் செய்வித்தது மூன்றாவது. பராங்குஶாதிகளுக்குச் செய்தது நான்காவது என்று இந்த மஹாவாக்யத்தில் பிரிவுகள் அறியத்தக்கது என்று ஸ்ரீ ஸாரதீபிகையில் வ்யாக்யாதம். **ஸ்வயம்** - தானே, **ஆகதா**- வந்திருக்கிற, **விஜ்ஞாநா:**-விவேகஜ்ஞானத்தை யுடையவர்களாயும், **நிவ்ருத்திம் தர்மம்** - நிவ்ருத்தி தர்மத்தை, **அநுஷ்டிதா:** - அனுஷ்டித்துக் கொண்டு மிருக்கிற. ‘**நிவ்ருத்தி தர்ம**’மாவது பல ஸங்க கர்த்ருத்வாதி த்யாகத்தோடு பண்ணப்படும் கர்மங்கள், இப்படிச் செய்யாதது ப்ரவ்ருத்தி தர்மமென்னப் படுகிறது. **அத்யாத்மஸம்ப்ரதாயம்** - வேதாந்த ஶாஸ்திர ஸம்ப்ரதாயம், **குலையாதபடி**-நஶிக்காதபடி. **க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம்**-க்ருஷ்ணத்வைபாயனரென்கிற வ்யாஸரை, **ப்ரபும்**-ஸர்வ ஶக்தியை யுடையவனான, **நாராயணம்**-நாராயணனாக, **வித்தி** - அறி, **மைத்ரேய** - ஓ! மைத்ரேயனே, **புவி** - இந்தப் பூலோகத்தில், **அந்ய:** - வேறு, **க:**-யார், **மஹாபாரதக்ருத்**-மஹாபாரதத்தைச் செய்தவனாக, **பவேத்**-ஆவான். **தஸ்ய**-அந்த, **மஹர்ஷே:**-வ்யாஸ மஹருஷியினுடைய **கீர்த்தநாத்** - (பெயரைச்)சொல்லுவதினால், **பீஷ்ம:** - பீஷ்மர், **ப்ராஞ்ஜலி:**-கையைக் கூப்பிக்கொண்டு, **அப்ரவீத்** - சொன்னார். இத்தால் ஆசார்யர்க

---

1. வி-பு-3-4-5. 2. பா-ஆ-114-11.

**தத்வஹிதங்களைப் ப்ரகாஶிப்பித்தும், தானருளிச் செய்த வசனங்களை யெல்லாம் ஸ்ரீ பீஷ்மர் முதலான ஜ்ஞாநாதிகரையிட்டு முதலிப்பித்தும், 1 'பாஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்' என்கிற படியே அடியிலே தானருளிச் செய்த ஸமஸ்தஶாஸ்த்ரத்தை 'ப்ராஹ்மணா: க்ஷத்ரியா வைஶ்யாஶ்ஶூத்ராஶ்ச க்ருதலக்ஷணா:| அர்ச்சநீயாஶ்ச ஸேவ்யாஶ்ச நித்யயுக்தா: ஸ்வகர்மஸு | ஸாத்வதம் விதிமாஸ்தாய கீத**

---

ளுடைய திருநாமத்தைச் சொல்லும்பொழுது அஞ்ஜலிபண்ணிக் கொண்டு சொல்லவேண்டுமென்கிற ஆசாரம் ஸூசிப்பிக்கப்பட்டதாகிறது. '**தானே வெளி நின்று**' என்பதற்கு வ்யாஸாதிகளைப் போன்ற ஜீவர்களை அதிஷ்டானம் செய்யாமல் தானே ஸாக்ஷாத்தாக அவதாரம் செய்து நின்று என்றர்த்தம். **முதலிப்பித்தும்** - இதுவே வாஸ்தவார்த்தமென்று அவர்கள் சொல்லும்படி செய்வித்தும், அதாவது கீதோபதேஶம் யுத்தத்தில் உத்ஸாஹத்தை யுண்டாக்குவதற்காக மாத்திரமாக ஏற்பட்டதாகையினால் அந்யபரம், தத்வார்த்த உபதேஶபரமல்ல என்று சொல்லாமலிருக்கும்படி பீஷ்மாதிகளைக் கொண்டு அதுவே ஶாஸ்திரார்த்தம் என்று நிரூபித்து என்று தாத்பர்யம். அதாவது யுத்தத்திற்குப் பிறகு தர்மபுத்திரர் பீஷ்மரிடம் தர்மங்களை ஶ்ரவணம் பண்ணும்பொழுது பகவான் **ஸ்ரீ** கீதையி லுபதேஶித்தருளின கர்மயோக ஜ்ஞானயோக பக்தியோகாதிகளேயே மறுபடியும் தத்வார்த்தங்களென்று உபதேசித்தபடியினால் பீஷ்மர் பகவானுபதேஶத்தையே ஸம்வதித்தார் என்பதேற்படுகிறது. இத்தால் பௌத்தாதி உபதேஶங்கள் பகவானால் செய்யப்பட்டிருந்தபோதிலும் அது அப்படிப் பெரியோர்களினால் ஒப்புக்கொள்ளப் படாமையால் தத்வார்த்த மன்றென்று ஏற்படுகிறது. **க்ருத்ஸ்நஸ்ய** - எல்லா, **பாஞ்சராத்ரஸ்ய** - பாஞ்சராத்ர ஶாஸ்திரத்திற்கும், **நாராயண:**-நாராயணன், **ஸ்வயம்** - தானே, **வக்தா** - உபதேஶம் செய்தவர். **க்ருதலக்ஷணா:** - செய்யப்பட்ட ஶங்க சக்ராத்யங்கனங்களை யுடையவர்களாயும், **ஸ்வகர்மஸு** - தங்கள் தங்கள் வர்ணாஶ்ரம தர்மங்களில்,

---

1. பா-ஶா-359-68. 2. பா-பீ-66-39, 40.

ஸங்கர்ஷணேந யஃ । த்வாபரஸ்ய யுகஸ்யாந்தே ஆதௌ கலியுகஸ்ய ச ॥' என்கிறபடியே அவஸரங்களிலே ஆவிஷ்கரித்தும், 1 'பூர்வோத்பந்நேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌ ப்ரபுஃ । அநுப்ரவிஶ்ய

---

நித்யயுக்தைஃ-எப்பொழுதும் இருக்கிறவர்களுமான, ப்ராஹ்மணைஃ - ப்ராம்மணர்களினுலும், க்ஷத்ரியைஃ - க்ஷத்திரியர்களினுலும், வைஶ்யைஃ-வைஶ்யர்களினுலும், ஶூத்ரைஶ்ச - ஶூத்திரர்களினுலும், யஃ - எந்த (ஸாத்வதஶாஸ்திரம்), த்வாபரஸ்ய யுகஸ்ய - த்வாபர யுகத்தினுடைய, அந்தே - முடிவிலும், கலியுகஸ்ய - கலியுகத்தினுடைய, ஆதௌ ச - ஆரம்பத்திலும், ஸங்கர்ஷணேந - ஸங்கர்ஷணனுல், கீதஃ-சொல்லப்பட்டதோ (அப்படிப்பட்ட), ஸாத்வதம் விதிமாஸ்தாய-பாஞ்சராத்ர ஶாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விதியை யடைந்து, அர்ச்சநீயஶ்ச - பூஜை செய்யத் தகுந்தவர், ஸேவ்யஶ்ச - ஸேவிக்கத்தகுந்தவர். அவஸரங்களிலே - ப்ரகாஶம் செய்யவேண்டிய ஸமயங்களிலே, ஆவிஷ்கரித்தும் - ப்ரகாஶம் செய்தும். இங்கு 'கீதஃ' என்று சொல்லி யிருப்பதற்கு ஸங்கர்ஷணனுல் சொல்லப்பட்டது என்றர்த்தமாகையினுல், அவராலேயே முதலிலேயே பாஞ்சராத்திர ஶாஸ்திரம் அருளிச் செய்யப்பட்டது என்று சொல்லலாம்படி இருந்தபோதிலும், திருநாராயணீயத்தில் உபரிசரவஸுவின் சரித்திரம் சொல்லும் பொழுது பாஞ்சராத்திர ஶாஸ்திராநுஷ்டானங்களைப் பரக்க நிரூபித்து, அந்த உபரிசர வஸுவிற்குப் பின்பு அந்த ஶாஸ்திரம் மறைந்துவிடப் போகிறதென்று சொல்லியிருப்பதினுல், க்ருதயுகத்தில் அநுஷ்டானத்திலிருந்து வந்த ஶாஸ்திரமே பிறகு ஸங்கர்ஷணனுல் வெளியிடப்பட்டது என்றேற்படுகிறதென்று திருவுள்ளம் பற்றி 'ஆவிஷ்கரித்தும்' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ப்ரபுஃ - ஸர்வஶக்தனன, அச்யுதஃ - பகவான், கலௌ - கலியுகத்தில், பூர்வோத்பந்நேஷு - முன்னாலே பிறந்திருக்கிற, பூதேஷு - ப்ராணிகளிடங்களில், அதாவது ஜீவர்களிடங்களில், அன்

---

1. வி-த-108-50.

**குருதே யத்ஸமீஹிதமவ்யக்தஃ॥'** என்கிறபடியே **பரா ங்குஶ பரகாலாதி ரூபத்தாலே அபிநவமாக ஒரு தஶாவதாரம் பண்ணி சேதநங்கள் ஸமுஜ்ஜீவநத்தை**

---

றிக்கே 'கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்' என்றிவை முதலிய ப்ரயோகங்களை யனுஸரித்து நித்ய ஸூரிகளிடங்களில், **அநுப்ரவிஶ்ய** - அனுப்ரவேஶித்து, **யத்** - எது, **ஸமீஹிதம்** - தனக்கு இஷ்டமோ (அதை), **குருதே** - செய்கிறார். இங்கு பராங்குஶ பரகாலாதிகளைக் குறித்து விஶேஷியாமல் பொதுவாகச் சொல்லப்பட் டிருந்தபோதிலும் கலியுகத்தில் விஶேஷமாக உபகாரம் செய்தவர்கள் ஆழ்வார்களாகையினால் அவர்களே இதற்கு விஷயம் என்று திருவுள்ளம். இங்கு நம்மாழ்வார் கலியன் என்றிவை முதலிய பெயர்களினால் நிர்தேஶியாமல் **'பராங்குஶ பரகால'** என்று நிர்தேஶித் திருப்பதினால் கலியுகத்தில் அவர்கள் செய்த விஶேஷ உபகாரம் சொல்லப்பட்டதாயிற்று. ஸ்ரீ பாகவதத்தில் நான்காவது ஸ்கந்தத்தில், இருபத்தைந்தாவது அத்யாயத்தில், புரஞ்ஜநோபாக்யாநத்தில் நாரதர் ப்ராசீன பர்ஹிஸ் என்கிற ராஜாவிற்கு தத்வார்த்தத்தை ஒரு கதையாகச் சொல்லுமிடத்தில் **'உபயேஶ வீர்யவதாம் ஶ்ரேஷ்டஃ ஸர்வயஜ்ஞஃ । யாமி நிஜஜ்ஞ ராஜந்யாநு பார்ஷ்ணிஃ புரஞ்ஜயஃ॥'** என்றும், **'தஸ்ய வம்ஶ்யோ நாம தா ப்ரவணீ நரேஷ்விகா । தஸ் பார்ஷ்ணிஃ ஸர்வ ஶ்ரேஷ்டஸ் த்ர்யம்ஶஸ்ய ஜ்ஞாதிநோ ப்ரஜஜ்ஞ'** என்றும் சொல்லியிருப்பதும் பராங்குஶருடைய அவதாரத்தைக் குறிக்கிறதாகையினால் அதைஅனுஸரித்து இந்தஶ்லோகத்திற்கும் இப்படி அர்த்தம்சொல்லவேண்டியதென்று திருவுள்ளம்பற்றி அங்கு **'புரஞ்ஜயஃ'** என்பதைஇங்கு**'பராங்குஶ'** என்றருளிச் செய்திருக்கிறார். **'அபிநவமாக ஒரு தஶாவதாரம் பண்ணி'** என்பதற்கு 'சில ஜீவர்களை ஶக்தி விஶேஷத்தாலும் விக்ரஹ விஶேஷத்தாலும் அதிஷ்டித்து அதிஶயிதகார்யங்களை நடத்துகிறதும் விபவபேதம்' என்று தத்வத்ரயாதிகாரத்தில் இவர் தாமே யருளிச்செய்திருப்பதினால் ஆழ்வார்கள் ரூபமாக ஒரு தஶாவதாரம் பண்ணி என்று தாத்பர்யம். **'அபிநவமாக'** என்பதற்கு மத்ஸ்ய கூர்மாத்யவதாரங்களில் செய்யப்படாத உபகாராதிஶயம் செய்

**வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக வுமிழுமாப் போலே வேதாந்தங்களில் வேண்டும் ஸாரதமாம்ஸத்தை ஸர்வர்க்கு முபகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக் காட்டியும், இப்படித்தான் ப்ரதிபாதித்த ஸத்யத்துக்கு ப்ரகடராயும் ப்ரச்சந்நராயு மிருந்துள்ள பாஹ்யர்களாலுபரோதம் வாராமைக்காக 1 'ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் | மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா ||'**

---

படியான என்று தாத்பர்யம். '**ப்ரகடராயும்**' என்பதற்கு ப்ரகாஶமாயிருக்கிற என்றர்த்தம். அவர்களாகிறூர் ஸாக்ஷாத்தாக வேதத்திற்கு அப்ராமாண்யத்தைச் சொல்லி வேதேஶ்வர விதூஷகர்களான பௌத்த சார்வாகாதிகள். '**ப்ரச்சந்நராயும்**' என்பதற்கு மறைந்து கொண்டிருக்கிற என்றர்த்தம். அவர்களாகிறூர் வேதம் முதலியவைகளை ஒப்புக்கொண்டு ஈஶ்வர ஸ்வரூபாதிகளுக்கு அபலாபம் பண்ணும் பசுத்தோல் போர்த்துப்புலிப்பாய்ச்சல் பாய்கிறபடியினுலே கோமுகத்வீபிகளென்று சொல்லப்படுகிற பாஸ்கரஶங்கராதிகள். அதாவது வைதிக மதஸ்தாபன மென்கிற வேஷத்தைப் பூண்டு வேதங்களுக்கு அப்ராமாண்யத்தைச் சொல்லுகிறபடியினுல் ப்ரச்சந்நர்களென்கிறது. அப்படியே ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் '**ஶாக்யோலூக்யாக்ஷபாதக்ஷபணககபிலப்ரஜ்ஞபாத ப்ரவாத ப்ராயாநேகப்ரகாராந் உபதி கலய யுக்திகந்தோத்தமாம்ஶ்ச தீவ்யந்ஸ்வைர் வஹ்நய: க்ஷோபிதாவிஶ் ஶ்ருதிநிஷ்ட வஸந்த்யா ஜாயந்தேநந்த போதா: கால்யே கால்யே ஹி ஸந்த்யா ஸமுத்திஷ்டித தத்த்வக்ஷேத்ரா ரக்ஷாஸ்தாவகாம் ||**' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. **தேவ:** - தேவனுகிய, **நாராயண:** - நாராயணன், இங்கு '**திவ்**' என்கிறதாதுவின் அர்த்தங்களாகிய ஜயிக்கவேண்டுமென்கிற இச்சை, காந்தி, லீலை, முதலிய அர்த்தங்கள் அபிப்ரேதங்கள், **ஸாக்ஷாத்** - நேராக, **மர்த்யமயீம்** - மனுஷ்யரூபமான, **தநும்** - ஶரீரத்தை, **க்ருத்வா** - செய்துகொண்டு, அங்கீகரித்துக்கொண்டு என்றபடி, **காருண்யாத்**-கருணையினுல், **ஶாஸ்த்ர**

---

1. ஜயாக்யஸம்ஹிதை.

என்றும், 1 'பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து' என்றும் சொல்லுகிறபடியே ஊமஹூ ஷெவித

---

வாணிநா - ஶாஸ்திரமாகிய கையினாலே, உஹ்ராநு - முழுகியிருக்கிற, ஜொகாநு - ஜநங்களை, 'ஜொக' ஶப்தம் இந்த லோகத்திலிருக்கும் ஜனங்களை உபலக்ஷிக்கிறது, உஊரதெ - தூக்கிவிடுகிறார். இங்கு 'ஸாக்ஷாத்' என்பதினால் ஜீவாத்மாக்களை த்வாரமாகக் கொண்டல்லாமல் நேராகவே என்பதேற்படுகிறது என்று ஸ்ரீ ஸாரதீபிகையில் வ்யாக்யாதம். உவரோயம் - தடங்கல், அதாவது இங்கு ஸங்கோசம். பீதகவாடை - பீதாம்பரத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற, பிரானார் - உபகாரகனான பகவான், இதற்கு 'வீதவாஸாஜமஜவதிஃ' என்கிறபடியே புருஷோத்தமத்வ சிந்நமாயும், ஸர்வேஶ்வரத்வ சிந்நமாயுமிருக்கிற பீதாம்பரத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற ஸர்வேஶ்வரன் என்றர்த்தம். இங்கு பீதாம்பரம் மற்றைய சங்க சக்ராதி ஸர்வேஶ்வரத்வ சிந்நங்களுக்கு முபலக்ஷணம். 'ஶங்வக்ர மஷாவாணிஃ வீதவாஸா ஜமஜவதிஃ' என்றல்லவோ சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஸர்வேஶ்வரத்வ சிந்நங்களைக் காட்டியும் தன்னுடைய ஈஶ்வரத்வத்தைக்கொண்டு திருத்தவொண்ணாத சேதநர்களையும் 'பிரம குருவாகி வந்து' திருத்தும் படியாயிற்று என்றாசார்யர்களின் உபகாராதிஶயம் சொல்லப்பட்டதாகிறது. 'செய்த்தலை' என்கிற பாட்டிங்கனுஸந்தேயம். பிரம குரு வாகி வந்து - ப்ருமோபதேஶஞ் செய்யும் ஆசார்யரூபேண அவதரித்து. 'ஊமஹூ ஷெவிதமான தெஶத்திலே' என்பதினால் 'கலௌ ஜமதிம் விஷ்ணும் ஸவநூஸ ஷாா ஶீஸ்ரும் । நாவநூயிஷூஷி ஜெஜெஷூய வாஷிணாவஹதாஜநாஃ ॥' என்கிற வசனத்தில் கலியுகத்தில் பாகவதர்கள் கிடைப்பதரிது என்று சொல்லப்பட்டிருக்கிறபடியினால் அப்படிப் பாஷண்டிகளினால் நிறைந்த தேஶத்தில் பகவான் அவதரித்தானென்பதும், ஸத்வோத்தரர்களான ஆசார்யர்கள் அவதரித்தார்கள் என்பதும் விரோதியாதோ என்கிற ஶங்கை பரிஹரிக்கப்பட்டதாகிறது. எப்படி யென்னில்?

---

1. பெ-தி-5-2-8.

**மான தேசத்திலே அநேகதேசிகாவதேசத்தாலேயவ தரித்தருளினான். இத்தைக் கணிசித்து**[1] **'கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: | க்வசித் க்வசிந்மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிஶ: || தாம்ரபர்ணீ நதீ யத்ர**

---

அகஸ்தியர் முதலிய மஹாருஷிகளினால் பரிக்ரஹிக்கப்பட்ட தேசம் கலியுகத்திலு முண்டென்று ப்ரமாணங்களில் சொல்லப் பட்டிருப்பதினால் கீழ்க்கூறிய வசனம் பெரும்பாலும் அப்படி இருக்கும் என்கிற அபிப்ராயத்தை யுடையது. ஆகையினால் அப்படிப்பட்ட தேசங்களில் பகவானும் ஆசார்யர்களும் அவ தரிப்பது உபபந்நம் என்று தாத்பர்யம். '**தேசிகாவதேசத்தாலே யவதரித்தருளினான்**' என்பதற்கு பகவானே ஆசார்ய ரூபமாக அவதரித்தருளினபடியினால் இவ்வாசார்ய பக்தி ராம க்ருஷ்ணாத் யவதாராதிகளைக் குறித்துப் பண்ணும் பக்தியைப் போல பகவத்பக்தி ரூபமாயும் ஆகும் என்று தாத்பர்யம். அப்படியே ஸ்ரீஶததூஷணியில் அலேபகமத பங்கமென்கிற அறு பத்தைந்தாவது வாதத்தில் '**ஸூரி ஸக்தாஸ்ச அநந்தமார்பாவதீர்ணா த்ருஷ்டாவதாரா ஹேதா இதி வசநாநி ப்ரஸித்தம். தேந தேஷாம் ப்ரதிஷ்டாவதாரநாசிகம் ராம க்ருஷ்ணாதி ஸமவதாராணாமிவேதி ஸித்த: ப்ரதிஷ்டாஸ்யாஸ்த்ராநுஸாரேண திசோக்தவ்யம் |**' என் றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. **தேசிகாவதேசத்தாலே** - ஆசார்யர்கள் என்கிற வ்யாஜத்தினாலே. இப்படி '**க்வசித் த்ரமிடேஷு**' என்று பொதுவாக இருப்பதை ஆசார்யர்கள் விஷயமென்று நிர்ணயிப்பது எப்படி என்னில், இதற்கு ப்ரமாணாந்தர ஸம்வாதத்தை யருளிச்செய்கிறார்— '**இத்தைக் கணிசித்து**' என்றாரம்பித்து. '**இத்தை**' என்பதற்கு இப்படி ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அவதரித்து லோகோபகாரம் செய்யப்போகிறார்கள் என்கிற விஷயத்தை என்றும், '**கணிசித்து**' என்பதற்குத் தபோமஹிமையினால் இனி வரப்போகிறதை அபி ப்ராயத்தில் வைத்துக்கொண்டு என்றும் அர்த்தம். **கலௌ கலு** - கலியுகத்திலல்லவா, **நாராயண பராயணா:** - பகவானையே

---

1. ஸ்ரீபா-11-5-38,39.

**க்ருதமாலா பயஸ்விநீ | காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ ||** ' என்று மஹர்ஷியருளிச் செய்தான்.

ஆசார்யபரம்பரா க்ரமம்.

**இவ்வாசார்யர்களில் ஸம்ப்ரதாயப்ரவர்த்தகர் பிள்ளை நாதமுநிகள். இவர் ந்யாயதத்வம் என்கிற சாஸ்த்ரமும் யோகரஹ**

---

ப்ராப்ய ப்ராபகமாக ஆஸ்ரயித்திருக்கிற, **மஹாபாகா:** - மஹாநுபாவர்கள், **க்வசித் க்வசித்** - (மற்ற தேஸங்களில்) சிற்சில இடங்களிலும் **பவிஷ்யந்தி** - அவதரிக்கப்போகிறார்கள். **த்ரமிடேஷு ச** - த்ரமிட தேஸத்தில், **பூயிஷ்ட:** - அதிகமாக (அவதரிக்கப்போகிறார்கள்), (இது எவ்விடங்களில் என்னில்) **யத்ர**-எந்த இடத்தில், **தாம்ரபர்ணீ நதீ** - தாம்ரபர்ணீ என்கிறநதி இருக்கிறதோ, **க்ருதமாலா**-வைகையாறு(இருக்கிறதோ), **பயஸ்விநீ** - பாலாறு (இருக்கிறதோ), **மஹாபாகா** - மிகவும் ப்ரபாவமுள்ள, **காவேரீ ச** - காவேரீநதி (இருக்கிறதோ), **ப்ரதீசீ**-மேற்குஸமுத்திரத்தைக் குறித்துப்போகிற, **மஹாநதீ** - மஹாநதி இருக்கிறதோ (அப்படிப்பட்ட இடங்களில்.)

இப்படிப் பொதுவாக ஆசார்யர்களின் ப்ரபாவத்தை யருளிச்செய்து இவ்வாசார்யர்களை அவரவர்கள் செய்த உபகாரங்களுடன் அநுஸந்தானம்செய்யவேண்டுமென்கிறக்ரமத்தையருளிச் செய்கிறார் — ' **இவ்வாசார்யர்களில்** ' என்றாரம்பித்து. இதில் விஷ்வக்ஸேனர், பிராட்டி, நம்மாழ்வார்,இவர்களைவிட்டு ஸ்ரீமந்நாத முனிகளை உபக்ரமித்து அருளிச் செய்திருப்பது உபபந்நமாகுமோ வென்னில்? ' **ஸ்ரீநக ஜெபிகாவஜெயத்தாலே யவதரித்தருளினன்** ' என்று கீழ் ப்ரஸ்தாவித்து, ' **இவ்வாசார்யர்களில்**' என்றுபக்ரமித்திருப்பதினால்பிராட்டியும் விஷ்வக்ஸேனரும் அப்படி அவதாரம் செய்தருளவில்லை யாகையினாலும், ' **ஸ்வேச்சாவதாரமாக** ' என்று கீழ் நம்மாழ்வார் ப்ரஸ்தாவிக்கப் பட்டிருப்பதினாலும் உபபந்நமாகும் என்று திருவுள்ளம். அன்றிக்கே ' **வாஷ்ணீகளினால் உபத்ரவம் வாராமைக்காக** ' என்று கீழ் ப்ரஸ்தாவித்திருப்பதினால் அப்படிப்பட்ட பாஷண்டிமத நிரஸனத்தில் ஸ்வாநுபவ பரரான நம்மாழ்வார் இதம் பரமாக அவதரித்தவரல்லாமையினாலே அப்படிப்பட்டவர்

**ஸூத்ரமு மருளிச்செய்தார். இவருக்கு ஸ்ரீமதுரகவிகள் முதலாக வுண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும், திருவாய்மொழி முகத்தாலும், யோகதசையிலே**

---

களில் ஸ்ரீமந்நாதமுனிகள் ப்ரதானமாகையினால் அவரை முதலில் நிர்த்தேஶித்திருப்பது உபபந்நமாகும் என்று தாத்பர்யமாகவுமாம். 'இவர் **ந்யாயதத்வம் என்கிற ஶாஸ்த்ரமும்**' இத்யாதி வாக்யத்தினால் ஆசார்யர்கள் செய்தருளிய உபகாரங்களை அநுஸந்தானம் செய்யும் ப்ரகாரம் தெரிவிக்கப்பட்டது. இப்படியே மேலும் அவரவர்கள் க்ரந்தத்தை நிர்த்தேஶித்திருப்பதற்கு ப்ரயோஜனம் கண்டு கொள்ளுவது. ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு முன் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களை அருளிச் செய்யாததற்குக் காரணமென்ன? நம்மாழ்வார் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு ஆசார்யரானார் என்னில் இவர்கள் இருவருடைய காலம் வெகுதூரமா யிருப்பதினால் பொருத்த முடையதாகாதே? என்கிற ஶங்கைகளுக்குப் பரிஹார மருளிச்செய்கிறார்—'இவருக்கு' என்றாரம்பித்து. '**மதுரகவிகள் முதலாக வுண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும்**' என்பதற்கு மதுரகவிகள் வம்ஶத்தில் அவதரித்தவரான பராங்குஶதாஸரிடத்திலிருந்து 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிற ப்ரபந்தத்தை உபதேஶிக்கப் பெறுகையால் அந்தப் பராங்குஶதாஸருக்கு பித்ருபிதாமஹாதி க்ரமத்தினால் மதுரகவிகளும் அவருக்கு ஆசார்யனை நம்மாழ்வாரும் ஆசார்யரானார் என்று தாத்பர்யம். '**திருவாய்மொழி முகத்தாலும்**' என்பதற்கு திருவாய்மொழி என்கிற க்ரந்த முகத்தினால் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு உபகாரம் செய்தருளினபடியினாலும் என்றர்த்தம். இப்படி க்ரந்தமுகேந உபகாரகரானார் என்னுமர்த்தம் ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தியில் '**கலிப்ராரம்பத்தில் ப்ருகு நாரதாதி**களுக்குப் பின்பு நம்மாழ்வார் **ப்ரவர்த்தக**ரானார்' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. '**யோகதசையில் ஸாக்ஷாத்க்ருதராயும்**' என்பதற்கு ஸ்ரீமந் நாதமுனிகள் ஆழ்வாரைக்குறித்து தபஸ்ஸு செய்யும்பொழுது பகவானுடையஙிய மனத்தினால் நித்ய ஸூரியான தாம் ஆவிர்பவித்து ஸர்வ வேதாந்தார்த்தங்களையும் உபதேஶிக்கையாலும் என்றர்த்தம். அப்படியே '**காருணிகஶ்ரேஷ்டனான ஸர்வேச்வரனும் ஸம்ப்ரதாய ரக்ஷார்த்தம்**,

ஸாக்ஷாத்ஸூநுவாயும், நம்மாழ்வாராலாவிஷ்டரானார். நாதமுநிகள் பிள்ளை ஈஶ்வரபட்டாழ்வான். ஈஶ்வரபட்டாழ்வான் பிள்ளை ஆளவந்தார். இவரருளிச்செய்த க்ரந்தங்கள்—ஆகமப்ராமாண்யமும், மஹாபுருஷநிர்ணயமும், ஆத்மஸித்தி, ஈஶ்வரஸித்தி, ஸம்வித்ஸித்தி, என்கிற ஸித்தித்ரயமும், ஸ்ரீ கீதார்த்தஸங்க்ரஹமும், ஸ்தோத்ரமும், சதுஶ்ஶ்லோகியும், ஆக எட்டு. ஆளவந்தார் பிள்ளை என்னுச்சான். என்னுச்சான் பிள்ளைகள் நால்வர். இவர்களிலொருவர் பிள்ளையப்பர். பிள்ளையப்பர் பிள்ளை தோழப்பர். தோழப்பருக்குப் பெண் பிள்ளைகளிருவர். நாதமுநிகள் ஸ்ரீபாதத்தை யாஶ்ரயித்த முதலிகள்—உய்யக்கொண்டார், குருகைக் காவலப்பன், நம்பிகருணாகர தாஸர், ஏறு திருவுடையார், திருக்கண்ணமங்கை யாண்டான், வானமாதேவியாண்டான், உருப்பட்டூரோச்சான்பிள்ளை, சோகத்தூராழ்வான், ஆக எண்வர். உய்யக்கொண்டார் ஸ்ரீபாதத்தை யாஶ்ரயித்தவர்கள் ஐவர். அவர்களாகிறார்—மணக்கால் நம்பி, திருவல்லிக்கேணிப் பாண்பெருமாளரையர், சேட்டலூர் செண்டலங்காரர், ஸ்ரீ புண்டரீகதாஸர், உலகப்பெருமாள் நங்கை. மணக்கால் நம்பி ஸ்ரீபாதத்தை யாஶ்ரயித்த முதலிகள் ஐவர். அவர்களாகிறார்—ஆளவந்தார், தெய்வத்

---

ப்ரபிதாமஹஸ்ய ஸாக்ஷாதபி ஸர்வவேதநிஷ்ணாதாராவிஶேஷாம்’ என்றிவர் தம்மாலேயே ஸ்ரீ ஸ்தோத்ர பாஷ்யத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீமந் நாதமுனிகள் முதலான ஆசார்யர்களுடைய புத்திர பௌத்திராதிகள் ஆசார்ய பரம்பரையில் அந்வயிக்காவிட்டாலும் அவர்களை அநுஸந்தித்திருப்பது, ஆசார்யனுடைய வம்ஶத்தை அறியவேண்டுமென்று ஶ்ருதியில் விதித்திருக்கிறது ஆசார்யர்களுடைய ஶிஷ்ய பரம்பரையையும் புத்திராதி பரம்பரையையும் சேர்த்துச் சொல்லுகிறது என்கிற திருவுள்ளத்தினால். ‘ஶாஸ்த்ரவச் ஶாஸ்த்ராதௌ வ்ருத்தி:’ இத்

துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், சிறுப்புள்ளூராவுடைய பிள்ளை, ஆச்சி. ஆளவந்தார் ஸ்ரீ பாதத்தை யாஶ்ரயித்தவர்கள் பதினைவர். அவர்களாகிறார்—பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், ஆளவந்தாராழ்வார், திருமலை நம்பி, ஈசாண்டான், தெய்வவாரியாண்டான், சிறியாண்டான், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றார், தெய்வப்பெருமாள், திருமங்கையாளியார், பிள்ளை திருமாலிருஞ்சோலை தாஸர், மாறனேர் நம்பி, ஆள்கொண்டி. பெரிய நம்பி ஸ்ரீ பாதத்தையாஶ்ரயித்தவர்கள் அறுவர். அவர்களாகிறார்—எம்பெருமானார், மலை குனிய நின்றார், ஆர்ய ஸ்ரீ ஶடகோபதாஸர், அணியரங்கத்தமுதனார், திருவாய் குலமுடையான் பட்டர், திருக்கச்சி நம்பி. எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீ பாதத்திலே ரஹ

---

யாதிகள் இங்கனுஸந்தேயம். ஸ்ரீ ஆளவந்தார் குமாரர்கள் நால்வர் என்று குருபரம்பராதிகளில் சொல்லப்பட்டிருந்தபோதிலும் அவர்களில் இருவருக்கு ஸந்ததி இல்லாமையினாலும், தெய்வத்துக்கரசு நம்பி ஸந்ததியில், பெரிய திருமலைநம்பி குருபரம்பரையில் அனுஸந்திக்கப்பட்டிருப்பதினாலும், அப்படி ஆசார்யபரம்பரையில் சேராத குருபுத்திரபௌத்திராதிகளையும் அனுஸந்திக்கவேண்டுமென்று தெரிவிப்பதற்காக அப்படிப்பட்டவரான சொட்டை நம்பிகளின் திருவம்ஶம் மாத்திரம் அனுஸந்திக்கப்பட்டிருக்கிறது என்றறியத்தக்கது. ஸ்ரீ ஆளவந்தாருக்குப் பிறகு அப்படிப் புத்திர பௌத்திராதிகளை யருளிச் செய்யாதொழிந்தது புத்திராதி ஸந்ததியைக் காட்டிலும் ஜ்ஞான ஸந்ததியே ப்ரதானமாயனுஸந்தேயம் என்பதைக் காட்டுவதற்காக. **'முதலிகள்'** என்பதற்கு முதன்மையானவர்கள், அதாவது ப்ரதானர்கள் என்றர்த்தம். **'திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீ பாதத்திலே'** என்பதற்கு **'ஶ்ரீவாயபாதா:,' 'தாதபாதா:'** என்கிற ப்ரயோகங்களைப்போல் பூஜார்த்தமாகையினால் திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே என்று தாத்பர்யம். அன்றிக்கே **'ஸ்ரீ பாதத்திலே'** என்னும்

**ஸ்யார்த்தங்கள் ஶிக்ஷித்தார். திருமாலையாண்டான் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழிகேட்டார். ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழியுமோதி ஸ்தோத்ரமுமருளிச் செய்யும் நல்வார்த்தைகளுங்கேட்டருளினார். திருமலை நம்பி ஸ்ரீபாதத்திலே ஸ்ரீராமாயணங் கேட்டருளினார். இவரருளிச்செய்த க்ரந்தங்கள்—ஸ்ரீபாஷ்யம், தீபம், ஸாரம், வேதார்த்த ஸங்க்ரஹம், ஸ்ரீ கீதாபாஷ்யம், சிறிய கத்யம், பெரிய கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம், ஆக ஒன்பது. இவர் ஸ்ரீபாதத்திலாஶ்ரயித்த முதலிகளைத் தந்தாம் ஸம்ப்ரதாயப்படிகளிலே யறிந்து கொள்வது.**

---

பதத்தோடு ஆஶ்ரயித்து என்னும் ஒரு பதத்தைச் சேர்த்துக் கொண்டு அர்த்தம் சொல்லிக் கொள்ளவுமாம், இப்படியேகீழிலும் '**நாயனார்கள் ஸ்ரீபாதத்தை யாஶ்ரயித்த முதலிகள்**' இத்யாதி பிரயோகிக்கப்பட்டிருப்பதினால். இப்படியே மேலும் கண்டு கொள்வது. '**ரஹஸ்யார்த்தங்கள் ஶிக்ஷித்தார்**' என்பதற்கு முன்புக்ரஹித்தஅர்த்தங்களையே பரிஷ்காரம்செய்துகொண்டார் என்றர்த்தம்.ஆகையினாலேயிறே இவரைச்சிந்தனாசார்யராக அனுஸந்தித்துவருவது.'**திருவாய்மொழியுமோதி**'என்பதற்குஆசார்யோச்சாரணாநூச்சாரணமாக அத்யயனம் செய்து என்றர்த்தம். '**ஓதி**' என்பதற்கு அத்யயனம் செய்து என்றர்த்தம். இத்தால் இதை அத்யயனத்தினாலேயே க்ரஹிக்கவேண்டுமென்பதற்கு ஸ்ரீ பாஷ்யகாரருடைய அனுஷ்டானமாகிய ஶிஷ்டாசாரம் காட்டப்பட்டதாயிற்று. '**ஸ்தோத்ரமும்**' என்பதனால் ஸ்ரீ ஆளவந்தாரருளிச்செய்த ஸ்ரீ ஸ்தோத்ர ரத்னம், ஸ்ரீ சதுஶ்லோகீ முதலியவை சொல்லப்படுகின்றன. '**அருளிச் செய்யும் நல்வார்த்தைக**' ளாவன ஹிதோபதேஶ ரூபமாய் அவர்களினாலருளிச் செய்யப் படுகிற வார்த்தைகள். '**அருளிச் செயலும்**' என்று பாடாந்தரம். அப்பொழுது திருவாய்மொழியைத் தவிர மற்றைய மூவாயிரமும் என்றர்த்தம். '**தந்தாம் ஸம்ப்ரதாயப்படிகளிலே யறிந்துகொள்வது**' என்பதற்கு எம்பெருமானாருக்குப் பின்பு ஆசார்ய பரம்பரை அனேக விதமாகப் பிரிந்துவிட்ட படியினால் அவர்களை

ஆசார்ய பக்தி அவஶ்யம் செய்ய வேண்டு மென்பது.

[1] '**𑌗𑍁𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑍇𑌦𑍍𑌧𑍀𑌮𑌾𑌨𑍍 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌗𑍋𑌪𑌯𑍇𑌤𑍍 । 𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑍍𑌷𑍀𑌯𑍇𑌤𑍇 𑌸𑌂𑌪𑌦𑌾𑌯𑍁𑌷𑍀॥**' என்ருர்கள். **𑌗𑍁𑌰𑍁**வை யொருவன் **𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿**ப்பிக்கிறதுவும் ஒருவன் **𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿**ப்பியா தொழிகிறதுவும் **𑌗𑍁𑌰𑍁 𑌭𑌕𑍍𑌤𑍀**யின் **𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵**த்தாலேயிறே. **𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌷𑌯**த்திற்

எல்லாம் நிர்தேஶித்தால் க்ரந்தம் விஸ்தரிக்கும் என்பதினுல் அருளிச் செய்யப்படவில்லை என்று தாத்பர்யம்.

இப்படிக் குருபரம்பரானுஸந்தானத்திற்கு ஒரு நிதர்ஶன மருளிச்செய்து இப்படிக் குருபரம்பரையை யனுஸந்திக்கா விடில் ப்ரத்யவாயம் சொல்லப்பட்டிருக்கிறபடியினுல் இது நித்ய மென்றருளிச் செய்கிருர்—'**𑌗𑍁𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑍇𑌤𑍍**' என்ருரம்பித்து. **𑌧𑍀𑌮𑌾𑌨𑍍** - புத்திமானுனவன், **𑌗𑍁𑌰𑍁𑌂** - ஆசார்யனே, **𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑍇𑌤𑍍**-ப்ரகாஶம் செய்யவேண்டும், **𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂** - மந்திரத்தை, **𑌯𑌤𑍍𑌨𑍇𑌨**-ப்ரயத்னத்தினுல், **𑌗𑍋𑌪𑌯𑍇𑌤𑍍**-மறைக்க வேண்டும். **𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌭𑍍𑌯𑌾𑌂** - குருவைப்ரகாசம் செய்யாததினுலும், மந்திரத்தை ப்ரகாசம் செய்வதினுலும், **𑌸𑌂𑌪𑌦𑌾𑌯𑍁𑌷𑍀**-ஜ்ஞான ஸம்பத்தும், மந்திரத்தில் நிஷ்டையும், **𑌕𑍍𑌷𑍀𑌯𑍇𑌤𑍇**-குறைந்துபோகின்றன. இந்த வசனத்தில் குருவை ப்ரகாசம் செய்யவேண்டுமென்று விதித்திருக்கிறதே ஒழிய குருவினிடத்தில் பக்திசெய்ய வேண்டுமென்று விதிக்கவில்லையே? என்கிற ஶங்கைக்குப் பரிஹாரம் அருளிச் செய்கிருர்.—'**𑌗𑍁𑌰𑍁வை**' எனருரம்பித்து. ப்ரகாசம் செய்வது பக்தியினுலாகையினுல் ப்ரகாசம் செய்யவேண்டுமென்று விதித்திருப்பதினுலே அதற்குக் காரணமான பக்தி செய்யவேண்டுமென்ப தேற்படுகிறது என்றுதாத்பர்யம். இப்படி ப்ரகாஶத்தைச் சொல்லுகிற வசனத்திற்குப் பக்திவிதியில் தாத்பர்யம் கொள்ளுகைக்கு ப்ரமாணமென்ன ? அப்படிப் பக்தி பண்ணுவிடில் ஸம்பத்து க்ஷயிக்குமென்று சொல்லி யிருக்க அதை ஜ்ஞான ஸம்பத்து என்றர்த்தம் பண்ணுவதற்கும் நியாமக மென்ன ? என்கிற ஶங்கைகளுக்குப் பரிஹாரமாக குரு பக்திக்கும் ஜ்ஞானத்திற்கும் கார்ய காரண பாவம் சொல்லுகிற ஶ்ருதியை அதின் அர்த்தானுவாத பூர்வக

1 **ஶேஷஸம்ஹிதை-14-50.**

போலே ஆசார்ய விஷயத்திலும் பரையான பக்தியுடையவனுக்கு கதிதார்த்தங்களெல்லாம் ப்ரகாஶிக்குமென்னுமிடம் கம் ஜாவாலாதி ஶ்ருதிகளிலும் ஸஞ்ஜயாதி வ்ருத்தாந்தங்களிலும் ப்ரஸித்தம். இங்ஙனல்லாதார்க்கு இப்படி ஜ்ஞானஸம்வத்துண்டாகாதென்னுமிடம் ஶிஷ்யர்களுடைய ஜ்ஞான தாரதம்யத்தாலே

---

மாக உதாஹரித் தருளுகிறார்—'**தேவவிஷயத்தில்**' என்றாரம்பித்து. '**கம்**' ஶ்ருதியாவது 'எவனுக்குத் தேவதையினிடத்தில் விஶேஷ பக்தி இருக்கிறதோ எப்படி தேவதையினிடத்தில் (பக்தி இருக்கிறதோ) அப்படி ஆசார்யனிடத்திலும் (இருக்கிறதோ) அந்த மஹாத்மாவிற்கே உபதேஶிக்கப்பட்ட அர்த்தங்கள் ப்ரகாஶிக்கின்றன' என்றர்த்தமுள்ள வாக்யம். '**ஜாவாலு**' ஶ்ருதியாவது 'ஆசார்யனிடத்திலிருந்து அறியப்பட்ட வித்யையே ஸாதுதமத்வத்தையடையும்' என்றர்த்தமுள்ள வாக்யம். '**ஜாவாலாதி**'என்கிறஇடத்தில் '**ஆதி**'ஶப்தத்தினால் ஶ்வேதாஶ்வதரம், சாந்தோக்யம், முதலிய உபநிஷத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. அவையாவன 'ஆசார்யனையுடைய புருஷனே ப்ரும்மத்தை அறிகிறான்' என்றர்த்தமுள்ள வாக்யம் முதலியவைகள். '**ஸஞ்ஜயவ்ருத்தாந்தம்**' என்பதினால் '**வ்யாஸ ப்ரஸாதாச் ச்ருதவாந்**' என்று சொல்லியிருக்கிறபடியே ஆசார்யனாகிய வ்யாஸருடைய அனுக்ரஹத்தினால் திவ்ய த்ருஷ்டி கிடைத்த சரித்திரம் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. இந்த அர்த்தத்தை வ்யதிரேகத்தினாலும் (எதிர் நடையாலும்) ஸமர்த்தித்தருளுகிறார்—'**இங்ஙனல்லாதார்க்கு**' என்றாரம்பித்து. **இங்ஙனல்லாதார்க்கு** - குருவினிடத்தில் பரையான(அதிகமான)பக்தி இல்லாதார்க்கு. '**கண்டு கோள்வது**' என்பதற்கு ஒரே ஆசார்யனிடத்தில் காலக்ஷேபாதிகள் செய்த ஸமபுத்தியுள்ள ஶிஷ்யர்களுக்குள் ஜ்ஞானத்தில் தாரதம்யம் காணப்படுகிறபடியினாலும், அதற்கு வேறு காரணமில்லாமையினாலும், அது குருபக்தியின் தாரதம்யத்தினாலே வந்ததென்று ஊஹித்துக்கொள்ளவேண்டுமென்றர்த்தம்.இங்கு '**உத்ஸம்ய ஜ்ஞானதோ வயேத்**' என்றது உபபந்நமாகுமோ? குணாதிகரான ஶிஷ்யர்களுக்கு அர்த்தங்களை உபதேசிக்கா விட்டால் '**வாச்சூ**

கண்டு கொள்வது. மிகவும் குணாதிகரான ஶிஷ்யர் களுக்கும் கடுக ஸத்யார்த்த விஷயங்களை ப்ரகாசிப்பியா தார்க்கு நிந்தை குலையாதென்னுமிடம் ரைக்வ வ்ருத்தாந்தங்களிலே ப்ரஸித்தம். பெற்றது குணமாக உபதேசித்தால் 1 ‘ஶிஷ்ய பாபம் குரோரபி’ என்கையாலே ஆசார்யனுக்கு நிந்தை குலையும்படி யாமென்னுமிடம் வருவது விசாரியாதே அஜ்ஞனுக்குபதேசித்துத் தானும் ஸ்வவித்யையை மறந்து

---

**ஶோத்ரவிஜ்ஞாநம்**’ என்றிவை முதலிய வசனங்களுக்கும், அப்படி உபதேஶியாதவனை ஜ்ஞானகலன் என்று நிந்தித்திருக்கிறதற் கும் விரோதமாகாதோ? என்னில், அதற்குப் பரிஹாரம் அருளிச் செய்கிறார்—‘**மிகவும்**’ என்றாரம்பித்து. ‘**ரைக்வ**’ வ்ருத்தாந்தமாவது—ஜாநஶ்ருதி என்னும் ஒரு ராஜா ஹம்ஸங் களின் வார்த்தையைக் கேட்டு ரைக்வர் என்கிற ப்ரும்ம நிஷ்டரிடத்தில் ப்ரும்ம வித்யையை உபதேஶம் செய்து கொள்ள வேண்டுமென்று தன்னுடைய ஸம்பத்துக்களில் பாதி பாகத்தை ஆசார்யனுக்கு தக்ஷிணையாக எடுத்துக் கொண்டு போனபொழுது உபதேஶியாமல் திருப்பி யனுப்ப, பிறகு ஸர்வஸ்வத்தையும் ஸமர்ப்பித்தபொழுது அவைகளை ப்ரதிக்ரஹியாமலே உபதேஶித்த வ்ருத்தாந்தம் சாந்தோக் யத்தில் (4-2-5) சொல்லப்பட்டிருப்பது. ‘**ஆதி**’ ஶப்தத் தினால் உபகோஸல வ்ருத்தாந்தமும் ஸூசிப்பிக்கப்படுகிறது. அதாவது அனேக வருஷகாலம் காத்திருக்கும்படி செய்து அவனுடைய பொறுமை முதலிய குணங்களை அறிந்து பிறகு ஶிஷ்யனுக்கு உபதேஶம் செய்தாரென்பது. ‘பெற்றது **குண மாக**’ என்பதற்குத் தனக்குக் கிடைத்த ஶிஷ்யனே எல்லாக் குண ங்களையுமுடையவனாக நினைத்து என்றர்த்தம். அன்றிக்கே ஶிஷ்ய னைத்தான் பெற்றதே தனக்கு உத்கர்ஷாவஹம் என்று நினைத்து என்று தாத்பர்யமாகவுமாம். **ஶிஷ்ய பாபம் குரோரபி**.. ஶிஷ்யனுடைய பாபம்குருவையும்சேரும்.வருவது **விசாரியாதே**- மேலே வரப்போகிற பலத்தை யனுஸந்திக்காதே. ‘**அஜ்ஞனுக்**

---

1 மனு தர்மஶாஸ்திரம்.

தன்ஶிஷ்யனான நாரத பகவானையிட்டு ஸர்வேஶ்வர னுணர்த்திவிக்கவேண்டும்படியிருந்த அதர்வணவன் பக்கலிலே கண்டு கொள்வது. இப்படி 'அப்ரகாஶ ப்ரகாஶாப்யாம்' மென்கிற விரண்டுக்கும் 'க்ஷீயேதே ஸம்பதாயுஷீ' என்கிற ஶ்லோகங்களை ஔசித்யத்தாலும் புராண ப்ரஸித்தியாலும் க்ரமத்தாலே உதாஹரி

---

த்துவதேஶித்து' என்பதினால் ப்ருஹ்மா, இந்திரன் தனக்கு ஶிஷ்ய னாகக் கிடைத்ததையே விஶேஷமாக நினைத்து அவனுக்கு ஶிஷ்ய லக்ஷணம் பொருந்தியிருக்கிறதா என்று பார்க்காமல் உபதேஶித் தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'அப்ரகாஶப்ரகாஶாப்யாம்' என்கிற இடத்தில் அப்ரகாஶம், ப்ரகாஶம் இவைகள் இரண்டும் ஜ்ஞானநிஷ்டைகள் குறைவதற்குக் காரணம் என்று பொதுவா கச்சொல்லியிருக்க அப்ரகாஶத்தினால் ஜ்ஞானம் குலையுமென்றும், ப்ரகாஶத்தினால் நிஷ்டை குலையுமென்றும் தனித்துப் பிரித்த ந்வயம் சொன்னது ஸங்கதமாகுமோ? இதரேதரயோக த்வந் த்வ ஸமாஸ மாகையினால் இவை இரண்டும் சேர்ந்து இரண்டு பலத்திற்கும் ஸாதனம் என்று ஏற்படும். ஆகையினால் அப்ரகா ஶத்தினாலாவது, ப்ரகாஶத்தினாலாவது தனியாக ஒரு ப்ரத்யவா யம் நேரிடாது என்கிற ஶங்கைக்குப் பரிஹாரம் அருளிச் செய் கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'ஔசித்யத்தாலும்' என்பத தற்கு 'ப்ரகாஶயேத்', 'கோபயேத்' என்று தனித்தனியாக விதிவாக்ய மிருக்கிறபடியினாலே ஒவ்வொருவிதியும் தனித்தனியே பலத்தை எதிர்பார்க்கிறபடியினாலும், ஸமமான கணக்குடைய வஸ்துக்களுக்குக் கார்யகாரண பாவத்தைக் குறிக்குமிடத்தில் முறையே அந்வயிப்பது ந்யாயம் என்று ஶாஸ்திரஜ்ஞர்கள் ஒப்புக் கொண்டிருப்பதினாலும் இங்கு சொல்லியிருக்கும் இரண்டு பதங்களையும் இரண்டு வாக்யங்களுடன் முறையே அந்வயிப்பது உசிதமென்று தாத்பர்யம். 'புராண ப்ரஸித்தியாலும்' என்பதற்கு ஸஞ்ஜய வ்ருத்தாந்தம், கடஜா பால ஶ்ருதிகள், சதுர்முக வ்ருத்தாந்தங்கள், இவைகளினாலும் என்றர்த்தம். 'க்ரமத்தாலே உதாஹரித்த வித்தனை' என்ப தற்கு முறையே அப்ரகாஶ ப்ரகாஶங்களுக்கு ஜ்ஞானஸம் பத்தின் க்ஷயமும், நிஷ்டாஹாநியும், ஆகிய இரண்டு பலங்

த்தவித்தனே. இரண்டிலு மிரண்டு ஸமுச்சயித்தாலும் வாக்யத்தில் வரும் விரோதமில்லை. ஆகையால் ஸர்வாவஸ்தையிலும் ஆசார்யபக்தியின் வஶீகாரமாக மந்த்ரத்தை ப்ரகாஶிப்பிக்கவும், உதாரரத்நஸமுத்கமான மாணிக்கச் செப்புப் போலேயிருக்கிற திருமந்த்ரத்தினுடைய சீர்மையுந்தன் நிஷேத்யமுங் குலையாமைக்காகச்

---

களும் தனித்தனியே உதாஹரிக்கப்பட்டன என்றர்த்தம். '**இரண்டிலும்**' இத்யாதிக்கு, உத்தரார்த்தத்தில் இருக்கும் த்வந்த்வ ஸமாஸங்களினுடைய ஸ்வாரஸ்யத்தை அனுஸரித்து அப்ரகாஶத்திற்கும் இரண்டு பலம், ப்ரகாசத்திற்கும் இரண்டு பலம் என்று தாத்பர்யம் சொன்னபோதிலும் வாக்யங்களில் அந்யவத்திற்கு விரோதமில்லை என்றர்த்தம். இத்தால், கீழ் ஆக்ஷேபிக்கப் பட்டதைப்போல அப்ரகாஶ ப்ரகாஶங்கள் இவை இரண்டும் சேர்ந்து இரண்டு அநிஷ்ட பலங்களுக்குக் காரணமாகையினால் அப்ரகாஶம் மாத்திரத்தினாலேயாவது ப்ரகாஶம் மாத்திரத்தினாலேயாவது ப்ரத்யவாயமில்லை என்று சொல்லில் பூர்வார்த்தத்தில் குருப்ரகாஶத்தையும் மந்திரத்தின் அப்ரகாஶத்தையும் தனித்தனியே விதித்திருப்பதற்கு விரோதமாகும், என்று தாத்பர்யம். **ஸர்வாவஸ்தையிலும்**-ஜ்ஞானமுண்டாவதற்கு முன்பும், ஜ்ஞான முண்டானதற்குப் பின்பும். இத்தால் குருபக்தி செய்தவனுக்கு ஜ்ஞானமுண்டாகுமென்று கடஶ்ருதியில் சொல்லியிருக்கிறபடியினால் ஜ்ஞான முண்டாவதற்குமுன் குருபக்தி செய்யவேண்டி யிருந்தபோதிலும் ஜ்ஞான முண்டானபிறகு செய்யவேண்டியதில்லையே என்கிற ஶங்கை பரிஹரிக்கப்பட்டதாகிறது. எப்படி யென்னில்? உண்டான ஜ்ஞானம் குருபக்தி செய்யாவிடில் குறைந்துவிடும் என்று கீழ் உதாஹரிக்கப்பட்ட வசனத்தில் '**க்ஷீயதே**' என்று சொல்லப்பட்டிருக்கிறபடியினால். '**ஆசார்யபக்தியின் வஶீகாரமாக**' இத்யாதி—ப்ரகாஶம் செய்யவேண்டும் என்று விதித்திருப்பதற்கும் அதற்குக் காரணமான பக்தி செய்யவேண்டுமென்பதில் தாத்பர்யம் என்று கீழ் நிரூபிக்கப்பட்டது இங்கறியத்தக்கது. '**உதாரரத்ந**' இத்யாதி த்ருஷ்டாந்தத்தினால் திருமந்திரம் ஶப்தத்தினாலும் அர்த்தத்தினாலும் ஶ்லாக்ய

**சில்வான ப்ரயோஜநங்களைப்பற்ற ஶிஷ்யகுண ஸம்ருத்தியில்லாத சலர்க்கு வெளியிடாதே ஶாஸ்த்ரத்தை மிகவும் சேமிக்கவும் ப்ராப்தம். இவ்விடத்தில் குரு ஶப்தம் ஆசார்யர்களுக்கு உபலக்ஷணம், ஸாரஜ்ஞ**

---

மென்பது தெரிவிக்கப்பட்டது. '**சீர்மை**' யாவது உத்கர்ஷம், அதாவது ஶ்லாக்யமான ஸ்வபாவம். '**தன் நிஷ்டையும்**' என்பதற்கு ஆயுஸ் என்று கீழ்ச் சொல்லப்பட்ட மந்திரத்தில் நிஷ்டையும் என்றர்த்தம். **குலையாமைக்காக** - நசியாமலிருப்பதற்காக. **சில்வான ப்ரயோஜநங்களைப்பற்ற** - அல்ப ப்ரயோஜனங்களுக்காக, அதாவது 'பரக்கும் புகழ்வரும்' என்றாரம்பிக்கும் ஸ்ரீ அம்ருதாஸ்வாதிநிப் பாட்டின்படியே க்யாதி லாப பூஜாதிகளான ப்ரயோஜனங்களுக்காக என்று தாத்பர்யம். '**ஶிஷ்யகுண ஸம்ருத்தியில்லாத**' என்பதற்கு '**ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ**' என்றாரம்பித்து ஸ்ரீந்யாஸவிம்ஶதியில் நிரூபிக்கப்பட்டிருக்கும் குணங்கள் இல்லாத என்றர்த்தம். **சலர்க்கு** - சஞ்சல புத்தியுடையவர்களுக்கு, **சேமிக்க** - மறைத்துவைக்க. இவ்விடத்தில் ஶிஷ்யகுண பூர்த்தி யில்லாதவர்களுக்கு மந்திரோபதேஶம் செய்தால் மந்திரத்தின் சீர்மை குலையும், சபலபுத்திக்கு உபதேசம் செய்தால் தன் நிஷ்டைகுலையும் என்று தாத்பர்யம் என்பது ஸ்ரீ ஸாரதீபிகையின் நிர்வாஹம். இப்படியாகிலும், '**குரும் ப்ரகாஶயேத்**' என்கிற வசனம் தனக்கு நேராக ஜ்ஞான ப்ரதானம் பண்ணின குருவை ப்ரகாசம் செய்யவேண்டும், அப்படிச் செய்யாவிடில் ப்ரத்யவாயம்,என்று விதிக்கிறதே ஒழிய குரு பரம்பரையை ப்ரகாஶிப்பிக்கிறதற்கு ப்ரமாணமாகுமோ? என்கிற ஶங்கைக்குப் பரிஹாரம் அருளிச் செய்கிறார்—'**இவ்விடத்தில்**' என்றாரம்பித்து. அதாவது ஶ்ருதியில் ஆசார்ய வம்ஶத்தை அனுஸந்தானம் செய்யவேண்டுமென்று சொல்லி இருக்கிறபடியினால் அதை அனுஸரித்து இங்கிருக்கும் '**குரு**' ஶப்தமும் பகவான் வரையிலான குருக்களை உபலக்ஷிக்கிறது என்று தாத்பர்யம். இப்படி '**குரு**' ஶப்தத்திற்கு ஸ்வாசார்யனை மாத்திரம் அர்த்தமாக அங்கீகரித்து வசனாந்தரத்தை யனுஸரித்து உபலக்ஷணபரமென்று சொல்லுவது விளம்பித ப்ரதீதிகமென்று நினைத்து கல்பாந்தரமருளிச் செய்கிறார்—'**ஸாரஜ்ஞமாகவு**

மாகவுமாம். மந்த்ரமும் மந்த்ரார்த்தமும் முதலான ரஹஸ்யங்களுக்கும் உபலக்ஷணம். தானிந்த ரஹஸ்யங்களை அநுஸந்திக்கும் போதெல்லாம் ஆசார்ய ஸம்ப்ரதாயத்தை அநுஸந்திக்கையும் விதிஸித்தமாகவும். இவ்வாசார்யர்களுடைய ஸம்பாஷணம்[1] 'ஸம்பா

---

மாம்' என்று. அதாவது குருஶப்தத்திற்கு அஜ்ஞானத்தை நிவ்ருத்தி செய்கிறவன் என்றர்த்தமாகையினால் நேராக உபதேசம் செய்தாவது, பரம்பரையாக உபதேஶம் செய்தாவது அஜ்ஞானத்தை நிவ்ருத்தி செய்தவர்கள் இங்கு குருஶப்தத்தினால் சொல்லப்படுகிறார்கள். ஆகையினால் பரமகுருக்களும் குருஶப்தத்திற்கு நேரில் அர்த்தமாகிறார்கள் என்று தாத்பர்யம். மந்திரஶப்தமும் அப்படியே மந்திரார்த்தம், முதலிய ஸம்ப்ரதாயார்த்தங்களுக்கு உபலக்ஷணமென்றருளிச்செய்கிறார்—'மந்த்ரமும்' என்றாரம்பித்து. இப்படிக் குருபக்தி நித்யமென்றருளிச் செய்து இனி இது நைமித்திகமாகவும் கூடுமென்றருளிச் செய்கிறார்— 'தானிந்த' என்றாரம்பித்து. 'அநுஸந்திக்கும் போதேல்லாம்' என்பதற்குத் தன் காலக்ஷேபகாலத்திலும், ஶிஷ்யர்களுக்கு உபதேஶம் செய்யும் காலத்திலும் என்றர்த்தம். 'விதிஸித்தமாவும்' என்பதற்கு 'ஸ்வாசார்யாணாம் ஸ்வஶிஷ்யேப்ய: ப்ரதானம் ப்ராக்ருதம் ததா' என்று ஆதிம் ஶேஷவசனத்திலே ஸ்வாசாரவை ப்ரகாசிப்பியாதொழிகையும் விதிக்கப்பட்டது' என்று ஶிஷ்ய க்ருத்யாதிகாரத்தில் இவர் தம்மாலேயே உதாஹரிக்கப் பட்டிருக்கும் வசனத்தினால் ஏற்படுகிறது என்று தாத்பர்யம். இப்படி உபராக ஸ்நாந ஜாதேஷ்ட்யாதிகளைப்போன்ற நைமித்திகமென்று நிர்ணயித்துவிட்டுப் பிறகு ப்ராயஶ்சித்த ரூபமான நைமித்திகமுமாகலாம் என்றருளிச் செய்கிறார்— 'இவ்வாசார்யர்களுடைய' என்றாரம்பித்து. 'ஸம்பாஷ்ய புண்யக்ருதோ' இத்யாதி— 'ந ம்லேச்சாஶுச்யதார்மிகை: ஸஹ ஸம்பாஷேத' என்று இதற்கு முன் வாக்யம். அதாவது ம்லேச்சர்கள், அபரிஶுத்தர்கள், அதர்மிஷ்டர்கள், இவர்களுடன் பேசக்கூடாது, அப்படிப் பேசினால் புண்யம் செய்தவர்களை மனதினால் நினைக்கவேண்டும் என்றிரண்டு வாக்யங்களுக்கும்

---

1 கௌதம தர்மஶாஸ்திரம்-9-18.

ஷ்யோ வர்ணோ க்ருதோ உபஸாஸ்யாயேச:' என்கிறபடி யே ஸ்ரீதிஷித்தஸம்பாஷணத்திற்கு ப்ராயஸ்சித்தமுமாம்.

என் னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கி
  யானடைவே யவர் குருக்க ளிரை வணங்கிப்
பின் னருளாற் பெரும்பூதூர் வந்த வள்ளல்
  பெரியநம்பி யாளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை யவர்க்குரைத்த வுய்யக்கொண்டார்
  நாதமுனி சடகோபன் சேனை நாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்
  டெம் பெருமான் றிருவடிக ளடைகின்றேனே. 3

---

சேர்ந்தர்த்தம். '**ஸ்ரீதிஷித்தஸம்பாஷணத்திற்கு ப்ராயஸ்சித்தமுமாம்**' என்பதற்கு ஶாஸ்திரங்களில் பேசக்கூடாதென்று தடுக்கப்பட்டவர்களுடன் பேசினதற்கு ப்ராயஸ்சித்தமாக ஸாமாந்யமாய்ப் புண்யம் செய்தவர்களை த்யானம் செய்யும்படி விதித்த இடத்தில் மஹானுபாவர்களான பூர்வாசார்யர்களை த்யானிப்பது விஶேஷமானது என்பது கைமுதிக ந்யாயஸித்தம் என்று தாத்பர்யம்.

இப்படி நித்யமாகவும், நைமித்திகமாகவும், ப்ராயஸ்சித்த ரூபமாகவும் அவஶ்யம் செய்யவேண்டியதாக நிர்ணயிக்கப்பட்ட குரு பரம்பராநுஸந்தானத்தை ஸுலபமாய்ச் செய்வதற்காக ஒரு ப்ரயோகமருளிச் செய்கிறார்—'**என்னுயிர் தந்தளித்தவரை**' என்றாரம்பித்து. குரு பரம்பரானுஸந்தானத்திற்கு வாக்ய குரு பரம்பரையைப் போலவே இந்தப்பாட்டும் மந்திரமாகலாமென்பது திருவுள்ளம். இவ்விடத்தில், கீதை, பதினேழாவது அத்யாயம், பத்தாவது ஶ்லோக வ்யாக்யானத்தில் ஸ்ரீ கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில்'**தயா ஹீநவர்ணஷ க்ருதஸ்யாத்யாத்மநே ப்ரஸங்கதஸேவ விஷயே 'தத்த்வதோ ஜ்ஞாநம் ஸம்ப்ரதாயம்' இதி ஸ்மரணநந்நு ஸ்ரீணீதஸ்ய மாயா ஸீதாராமேவ ஸம்ப்ரதாயஸ்ய ஸாராதி ஸ்வோத்கம் ஸ்ரீதிவாக்யே.த|**' என்றிவர் தம்மாலேயே அருளிச்செய்யப்பட்டிருப்பது அனுஸந்தேயம்.

ப - ரை] **யான்** - நான், **என்**, **உயிர்** - ஆத்ம ஸ்வரூபத்தை, **தந்து** - உபதேஶம் செய்து, **அளித்தவரை** - ரக்ஷித்தவரை, **சரணம்புக்கு**-

ஶரணமாக அடைந்து, **அடைவே** - க்ரமமாக, **அவர் குருக்கள்** - அவர்களுடைய ஆசார்யர்களின், **நிரை** - வரிசையை, இது ப்ராசார்யன் முதலாக ஸ்ரீ பாஷ்யகாரர் வரையிலுள்ள ஆசார்யர்களை ஸங்க்ரஹிக்கிறது, **வணங்கி, பின்** - பிறகு, அதாவது இப்படி ஆசார்யர்களை ஸேவித்த பிறகு, **அருளால்** - க்ருபையினால், **பெரும்பூதூர்** - ஸ்ரீ பெரும்பூதூர் என்கிற திவ்யக்ஷேத்திரத்தில், **வந்த**-அவதரித்தவரான, ‘**வந்த**’என்பதினால்‘அடையார்கமலத்து’ என்கிற நூற்றந்தாதிப் பாசுரப்படிக்கும், ‘**வவூமெ வஹுஸிரா யாலெய ஜாூரானெஃ**’ என்கிற யதிராஜ ஸப்ததி ஶ்லோகப் படிக்கும் இவர் நித்யஸூரியின் அவதாரம் என்பது தெரிவிக்கப்படுகிறது. **வள்ளல்** - பரமோதாரரான எம்பெருமானார், **பெரிய நம்பி**-மஹாபூர்ணர், **ஆளவந்தார், மணக்கால் நம்பி** - ஸ்ரீ ராமமிஶ்ரர், **நன்னெறியை** - நல்ல மார்க்கத்தை, அதாவது ப்ரபத்திமார்க்கத்தை, இது தத்வ புருஷார்த்தங்களுக்கும் உபலக்ஷணம், **அவர்க்கு** - அந்த மணக்கால் நம்பிக்கு, **உரைத்த** - உபதேஶித்தவரான, **உய்யக்கொண்டார்** - ஸ்ரீ புண்டரீகாக்ஷர், **நாதமுனி, சடகோபன், சேனை நாதன்** - ஸ்ரீ விஷ்வக்ஸேநர், **இன்னமுதத்திருமகள்** - போக்யமான அம்ருதம் போன்ற லக்ஷ்மீ, அதாவது பகவானுக்கு அம்ருதம்போல் போக்யமான பெரிய பிராட்டியார் என்றபடி. அன்றிக்கே, **இன்** - தேவதைகளுக்குப் போக்யமான, **அமுத** - அம்ருதத்தில் உத்பவித்தவளான, அதாவது ‘அமுதில் பிறந்த பெண்ணமுது’ என்கிறபடியே அம்ருதம் சக்கையாய் அதின் ஸாரமாய் அவதரித்த, **திருமகள்**-பெரிய பிராட்டியார், என்றர்த்தமாகவுமாம். அதுவுமன்றிக்கே, **இன்** - ஸர்வருக்கும் போக்யமான பகவானுக்கும் போக்யமாகையினாலே நிருபாதிகபோக்யையான, **அமுத** - அம்ருத ஸத்ருஶையான, இத்தால் தேவதைகளுக்கு மாத்திரம் போக்யமான அம்ருதம் வ்யாவர்த்திக்கப்படுகிறது, ஆராவமுதாகிய பகவானுக்கும் போக்யமான இன்னமுது இவள் என்று தாத்பர்யமாகவுமாம். **என்றிவரை** - என்று சொல்லப்படுகிற இந்த ஆசார்யர்களை, அதாவது ஸ்வாசார்யன் முதல் பெரிய பிராட்டியார் வரையிலான ஆசார்யர்களை, **முன்னிட்டு** - முதலில் ஆஶ்ரயித்துக்கொண்டு, **எம்பெருமான்** - ஶ்ரிய:பதியினுடைய,

ஸந்தே ஸஹ்யா ஸதோஷாஸ்ஸக்ருத்
ஶமிதா க்ருத்யாய க்ருத்யாதய
ஶ்ருதிஷு ஸ்துதிநீய
விவிதா சரிதா ஸ்வசரிதா ஶிஷ்ய ।
ஶ்ரத்தாதவ்யா ஶரண்யாஸ்ஸம்வதி
தயா ஜீவ்யாவமா வ்யாவகா
ஸாஸூயா விப்லவ விப்ரலம்ப
வசஸ் ஸ்வைதேஶிகா தேஶிகா: ॥

---

திருவடிகள் - திருவடிகளை, அடைகின்றேன், 'ஏ' என்பது பாட்டின் பூரணார்த்தம்.

இப்படிக் குருபரம்பரானுஸந்தானம் அந்தக் குருக்களிடத்தில் பக்தி பூர்வகமாக இருக்கவேண்டுமென்று கீழிலருளிச் செய்யப்பட்டிருப்பதினால், அந்தக் குருபக்திதானும் ஸம்ஸாரதசையில் காமக்ரோதாதிகளினாலே கலங்கின மனதை யுடையவர்களுக்கு உண்டாவது அஸம்பாவிதமாகையினாலே அந்தக் குருபக்தி உண்டாவதற்கு விரோதியான காமக்ரோதாதி நிவ்ருத்தியும் அந்த ஆசார்யர்கள் கடாக்ஷத்தினால் உண்டாகவேண்டுமென்று அவர்களையே ப்ரார்த்திக்கிறார்—**'ஸந்தே'** என்றாரம்பித்து. காமக்ரோதாதிகளினாலே கலங்கின ஶிஷ்யர்களை அனுக்ரஹிப்பதற்காகத் தாமருளிச் செய்த ப்ரார்த்தனை இங்கு க்ரந்தாரூடமாக யருளிச் செய்யப்பட்டிருக்கிறது அவர்களும் இப்படியே ப்ரார்த்தித்து பக்தியை அடையவேண்டும் என்கிற திருவுள்ளத்தினால்.

ப - ரை] **ஶ்ருதிஷு** - வேதாந்தங்களினால், **ஸ்துதிநீய** - கொண்டாடத் தகுந்தவையான, **விவித** - அனேகம் விதங்களான, **சரிதா:** - சரித்திரங்களையுடைய, **ஸாஸூயா** - ப்ரமாணமான அர்த்தம் அயலரால் சொல்லப்பட்டதினால் அதை அந்யதா கரிப்பது, அயலாரை அவமானம் செய்யவேண்டு மென்கிற அபிஸந்தியாகவுமாம், **விப்லவ:** - அந்யதா ஜ்ஞானம், **விப்ரலம்ப:**- வஞ்சனை, அதாவது தான் ஸரியாக அர்த்தத்தை க்ரஹித்திருந்த போதிலும், அயலானுக்கு அப்படிச் சொல்லாமலிருக்கும்படி

யான எண்ணம், இவைகளின், **வஷவீ** - வழிகளுக்கு, **வெவெஷி ஶிகாஃ** - தூரதேஶத்திலிருக்கிற, **ஶ ஸாதவ**-நம்பக்கூடியவர்களாகிய, **ஶாரணா** - ஶரண்யர்களான, அதாவது ஶரணுகதிக்கு உத்தேஶ்யர்களான, **ஒவதி** - தம்பதிகளின், **ஒயா** - கருணையாகிற, **ஷிவாவமா** - கங்கையை, **வாவகாஃ** - தங்களிடத்தில் வ்யாபரிக்கச் செய்கிற, அல்லது ஶிஷ்யர்களிடத்தில் பரவும்படி செய்கிற, **வாதெ** - இந்த, **நாயாஒயஃ** - ஸ்ரீமந் நாதமுனிகள் முதலிய ஆசார்யர்கள், **உஹூ** - என் பொருட்டு, அதாவது எனக்கு, **ஃவொஜ** - தள்ளப்பட்ட, **உநய** - மன்மதனுடைய, **ஶாஃ** - பாணங்களினுலுண்டாகிய, **உநாயாய** - பீடையையுடையவனுகும்படி, அதாவது மன்மதனுடைய பாணங்களினுல் உண்டான பீடையை நிவ்ருத்திசெய்து என்று தாத்பர்யம், **ஜஹ** - இந்த ஸம்ஸார தஶையில், **வஷஹாம்**-ருசிக்கவேண்டும் (என்று ப்ரார்த்தனை).

இங்கு '**வாதெ**' என்பதினுல் இவர்களுடைய போக்யத்வம் ப்ரஸித்தம் என்பது தெரிவிக்கப்படுகிறது. '**உஹூ**' என்பதற்கு பால் பித்தோபஹதனுக்கு போக்யமாகாததுபோலக் காமாதிகளினுல் கலங்கிய மனதை உடைய எனக்கு இவர்கள் போக்யமாகத் தோற்றுவது மிகவும் கஷ்டமானது என்றும், அந்தப் பாலே பித்தரோகத்தையும் ஶமிப்பித்துத் தன்னுடைய போக்யதையைத் தெரிவிப்பதைப்போல இந்த ஆசார்யர்கள் காமாதிகளினுலுண்டான காலுஷ்யங்களை நிவ்ருத்தி செய்து தங்களுடைய போக்யதையை அனுபவிப்பிக்க வேண்டும் என்றும் தாத்பர்யம். '**உநயஶரொநாயாய**' என்றது க்ரோதாதிகளினுல் உண்டாகும் பீடைக்கு முபலக்ஷணம். அன்றிக்கே '**காமேஷ க்ரோயவஷஃ**' என்று தனித்து ஸ்ரீ கீதையில் அருளிச்செய்திருக்கச் செய்தே '**காமாக் க்ரோயொஜஷிஜாயதெ**' என்று க்ரோதத்திற்கும் காரணமாகக் காமத்தை யருளிச் செய்திருப்பதினுல் ஸர்வதோஷங்களுக்கும் காரணமான மன்மத ஶரோந்மாதம் நிவ்ருத்திக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்ததினுலேயே ஸர்வதோஷ நிவ்ருத்தியும் ப்ரார்த்திக்கப்பட்டதாயிற்று என்று திருவுள்ளமாகவுமாம். இதர விஷயங்களில் வைராக்யமுண்டாகி, அதனுல் மோக்ஷம் பெற வேண்டுமென்கிற

ஆஸை உதித்து, அதினுல் குருவை ஆஸ்ரயித்து, அதற்குப் பிறகு குருபக்தி வரவேண்டியதாகையினுல் குருபக்தியை அவஸ்யம் ப்ரார்த்தித்த பொழுதே காமாதி நிவ்ருத்திகள் முன்னேயே இருக்கவேண்டு மென்றேற்படுகிறபடியினுல் இங்கு 'மதந' என்றருளிச் செய்திருப்பது ஸாமாந்யமான மன்மதனையல்ல. ஆகையினுல் 'ஸாக்ஷாந்மந்மதமந்மத:' என்று ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்ட பகவான் சொல்லப்படுகிறுன். அவனுடைய ஸரங்களாவன அவனுடைய கல்யாண குணங்கள். அவைகளின் பீடைநிவ்ருத்திக்க வேண்டுமென்றுப்ரார்த்திக்கப்பட்டதாயிற்று. அதாவதுப்ரதம பர்வமாகிய பகவானுடைய குணங்களில் ஈடுபாடு அவனிடத்தில் கைங்கர்யத்திற்கே விரோதமாகலாமென்று ஸ்ரீமத் ராமாயணத்தில் 'ராமே ப்ரமாதம் மாகார்ஷி: புத்ர ப்ராத்ரா ஸஹ வ்ரஜந்' என்றருளிச்செய்யப்பட்டிருப்பதினுல் அது ஆசார்யபக்த்யாதிகளுக்கு விருத்தம் என்பது கைமுதிக ந்யாயஸித்தம். இப்படிஆசார்யகைங்கர்யத்திற்கு விருத்தமான பகவத் பக்த்யாதிகள் நிவ்ருத்திக்க வேண்டுமென்கிற ப்ரார்த்தனை இங்குசெய்யப்பட்டதாகிறது என்று ஸ்ரீ ஸாரதீபிகையின் நிர்வாஹம். 'நாதாத்ய:' என்றது 'நாதேநாவஜிதம் ப்ரவ்ருத்தம்' என்கிறபடியே ஸ்ரீமந் நாதமுனிகள் ஸம்ப்ரதாயப்ரவர்த்தகர் என்பதைத்திருவுள்ளம்பற்றி. 'ப்ரஸஸ்த ப்ரதிநந்தநீய விவிதாசாரா:' என்பதினுல் தைத்தரீய உபநிஷத்தில் 'யோக்யர்களாயும், ஒரிடத்திலும் பக்ஷபாதமில்லாவர்களாயும்'என்பது முதலாக அர்த்தமுள்ள வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கும் லக்ஷணங்கள் நம்மாசார்யர்களுக்கே பொருத்தமுடையதா யிருப்பதினுல் அவைகள் அவர்களையே குறிக்கின்றனஎன் றுதிருவுள்ளம். அன் றிக்கேநம்பூர்வாசார்யர்கள் 'நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேயப்ரபந்தை:' என்றுரம்பித்து யதிராஜஸப்ததியில் அருளிச்செய்திருக்கிறபடியே வேதாந்தங்களுக்கு ஸ்வரஸமான அர்த்தங்களை நிரூபித்து 'அவிதிதவிஷயாந்தரா:' என்கிறபடியே கெட்ட அர்த்தங்களை நிரஸநம் செய்ததினுலுண்டாகிய உபகாரஸ்ம்ருதியினுல் வேதாந்தங்கள் பகவானுடைய குணங்களை ஸ்துதித்திருப்பதுபோல ஸ்ரீ மந் நாதமுனி ப்ரப்ருதிகளான நம் பூர்வாசார்யர்களை ஸ்தோத்திரம் செய்திருக்கப் பொருந்

தும் என்று திருவுள்ளமாகவுமாம். அதுவுமன்றிக்கே வேதாந் தங்களினாலும் ஸ்துதிக்கத் தக்கவைகளே யன்றி இவர் களின் பெருமையை உள்ளபடியாகச் சொல்லமுடியாதென்று தாத்பர்யமாகவுமாம். 'உதஜ:' என்றது குணங்களுக் கும் உபலக்ஷணம். இதினால் பகவானைப்போல அஸங்க் யேய கல்யாணகுண மஹோததிகள் நம் ஆசார்யர்கள் என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. 'ஶூஜாதவ' இத்யாதியினால் ருத்திரன் கங்கையை தன் ஜடையில் அடக்கி வைத்துக் கொண்டிருப்பதுபோல பகவானுடைய கருணையாகிற ஒரு கங்கையை நம் ஆசார்யர்கள் தங்களிடத்தில் அடக்கி வைத் துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இவர்களுடைய ப்ரஸாதத்தினாலேயே பகவானுடைய க்ருபையை நாம் அடைய முடியும் என்பது த்யோதிதம். அன்றிக்கே 'கமலையுகந்த கடற்கிடைக் கடல் கருணை யுயர்ந்த திடர்க்கொருக்கினர்' என்று பரமதபங்கத்தில் இவர் தாமே யருளிச் செய்திருக்கிற படியே பகவானுடைய தயையாகிற கங்கையை அது ஏறிப் பாய்வதற்கு ப்ரஸக்தி இல்லாத மேட்டு நிலமான நம்மிடத் தில் பாயும்படி செய்கிறவர்கள் என்று தாத்பர்யமாகவுமாம். இத்தால் இவர்கள் செய்த உபகாராதிஶயம் த்யோதிதமாயிற்று. மேலும் இவர்கள் ஸகல கல்யாணகுண பரிபூர்ணரா யிருந்தது மாத்திரமன்றியே இவர்களுடைய கல்யாண குணங்கள் நம்மள வில் பர்யவஸிதமானபடி தெரிவிக்கப்பட்டதாயிற்று. ஆகையி னால் ஆழ்வார் 'உயர்வறவுயர் நலமுடையவன்' என்று அநந்த கல்யாண குணத்வத்தை முதலில் உபபாதித்து, அது தனக்கு முபகாரமாகப் பர்யவஸன்னமானபடியை 'மயர்வற மதிநலமரு ளினன்' என்று அருளிச்செய்த க்ரமம் இங்கு விவக்ஷிதம். 'ஸூஜா' இத்யாதியால் ஹேயப்ரத்யநீகத்வம் சொல்லப் படுகிறது. 'வஶவீ ெவெஶெஶிகா:' என்பதற்கு இவர்களு டைய பரம்பரா ஸம்பந்த முடையவர்களிடத்திலும் அப்படிப் பட்ட தோஷங்களில்லை யாகையினால் அவைகளுக்கு வெகு தூர த்திலிருப்பவர்கள் என்றர்த்தம். 'ஐஹ ஸூஷாரம்' என்ப தினால் முக்தி தஶையில் வரப்போகிற மஹா பலமாகிய குருபக்தி இஸ்ஸம்ஸார தஶையில் தனக்குக் கிடைக்கவேண்டு மென்று

[illegible]

---

ப்ரார்த்திக்கிறார். அன்றிக்கே எல்லோரும் தன்னை யாஶ்ரயிக்க அவதாரம் பண்ணி அதிமானுஷ சேஷ்டிதங்களைச் செய்து மனுஷ்ய ஸஜாதீயனாக 'தன்தெய்வநிலை யுலகிற் புகவிக்கு மெம்மான்' என்கிறபடியே தன்னுடைய ஶக்தி முதலியவைகளை ப்ரகாஶம் செய்து கொண்டிருக்கச் செய்தேயும் '**அவஜாநந்தி மாம் மூடா: மாநுஷீம் தநுமாஶ்ரிதம் । பரம் பாவமஜாநந்தோ மம பூதமஹேஶ்வரம் ॥**' என்று ஸ்ரீ கீதையில் பகவான் அருளிச் செய்திருக்கிறபடியே ஸஜாதீயத்வ ஶங்கை பண்ணுகிற இந்த லோகத்தில் அப்படிப் பகவானென்பதற்கு அடையாளங்கள் ஒன்றுமில்லாமல் கேவல ஸௌலப்யத்தையடைந்திருக்கிற ஆசார்யர்களிடத்தில் மிகுந்த பக்தியுண்டாவது மிகவும் அஸம்பாவிதமாகையினால், அப்படிப்பட்ட இந்த இடத்திலேயே விஶேஷபக்தி உண்டாக வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறாராகவுமாம்.

இப்படிக் குருபக்தியை ப்ரார்த்தித்தது மாத்திரத்தினாலேயே இவர் ப்ரார்த்தித்த ப்ரகாரம் ஆசார்யர்களுடைய கடாக்ஷத்தினால் குருக்களிடத்தில் நிரவதிக பக்தியுண்டாய் அந்தப் பக்தியின் பரீவாஹமாகத் தாம் செய்த அனுஸந்தானத்தை ஶிஷ்யானுக்ரஹார்த்தம் க்ரந்தத்தி லருளிச் செய்கிறார்—'**ஸஹஸ்ரா**' என்றாரம்பித்து. இது லங்கையின் நடுவில் திருவடி '**ஜயத்யதிபலோ ராம:**' என்றாரம்பித்து ஜயத்தை உத்கோஷித்தாப் போலிருக்கிறது என்று நம் பூர்வாசார்யர்கள் அருளிச் செய்யும்படி. அங்கு ராக்ஷஸர்களை ஜயித்ததினால் உண்டான ஹர்ஷாதிஶயம், இங்கு காமக்ரோதாதிகளான முக்திகண்டாபதத்தில்

தஸ்கரர்களைப்போன்ற ப்ரபல விரோதிகளை நிரஸித்த ஹர்ஷாதி ஶயம்.

ப-ரை] **ஹரஜ்ஞா** - மிகவும் ஆநந்தரூபமாகத் தோன்றுகிற, **ஹரஸவதூ** - தாமரைப் பூவைப்போலிருக்கும் ஹ்ருதய மென்று சொல்லப்படுகிற ஸ்தான விஶேஷமாகிற, **ஸிம்ஹா ஸந** - ஸிம்ஹாஸனத்தில், **ரஸிக-**மிகவும் ஆசையை யுடைய வராகிய, அல்லது மிகவும் ஆநந்தத்தை யுடையவராகிய, **ஹயக்ரீவ** - ஹயக்ரீவனுடைய, **ஹேஷாவிடிகோஷ** - ஸமுத்திரத்தின் அலைகளின் ஶப்தத்தைப் போன்ற கனைப்புகளினால், **க்ஷிப்த** - போக்கடிக்கப்பட்ட, **ஹதப்ரதிபக்ஷோத்ஸேகா** - ஶத்ருக்களின் கொழுப்பையுடைத்தான, **பஹுகுணா** - அனேகவிதமான குணங்களை யுடைத்தான, **திக்** - திக்குக்களாகிற, **வலய** - மெத்தைகளில், **நிபத்த** - கட்டப் பட்ட, **ஜைத்ர** - ஜயத்தைத் தெரிவிக்கக் கூடியவைகளான, அல்லது ஜயத்தைக் கொடுக்கக் கூடியவைகளான, **த்வஜ பட** - நிஶான்களில் கட்டப்பட்ட துணிகளினாலுண்டாகிற, **பவந** - காற்றினுடைய, **ஸ்ஃபாதி** - வீசுவதினால், **நிர்தூத**-தள்ளப்ப ட்ட, **தத்தத்** - அந்தந்த, **ஸித்தாந்த** - ஸித்தாந்தங்களினுடைய, **ஸ்தோம** - கும்பல்களாகிய, **தூலஸ்தபக** - பஞ்சுக்கொத்து களின், **விகம** - போவதினால், **வ்யக்த** - ப்ரகாஶமாயிருக்கிற, **ஸத்பதிநீகா** - நல்ல மார்க்கத்தையுடைய, அல்லது பெரி யோர்களின் மார்க்கத்தையுடைய, அன்றிக்கே அநாதியாக ஸித் தமான மார்க்கத்தையுடைய, **அஸ்மத்குரூணாம்** - நம் ஆசார் யர்களுடைய, **பங்க்திஃ** - பரம்பரை, **ஜயதி** - மேன்மை பெற்று விளங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தால் ஆசார்ய பரம்பரையினால் செய்யப்பட்ட பரமத நிராஸனமும், ஸ்வமதஸ்தாபனமுமாகிற உபகாரம் அனுஸந் திக்கப் பட்டதாகிறது. '**ஹரஜ்ஞா**' என்பதினால் 'ஶைவாநந்த ஸம்போலே விலக்ஷணமான இவ்வனுபவத்தை' என்று ஶிஷ்ய க்ருத்யாதிகாரத்தில் இவர் தாமே அருளிச் செய்திருக்கிறபடி யே மஹா ஆநந்த ரூபமான பகவதனுபவத்தைக் காட்டி லும் இவ்வாசார்ய பரம்பரானுஸந்தானம் மிகவும் ஆநந்

தாவஹமானபடி த்யோதிதம். '**ஹ்ருத்ஸு**' இத்யாதியினுல் பரமபதம், க்ஷீராப்தி முதலிய ஸ்தானங்களைவிட நம் பூர்வா சார்யர்களினுடைய ஹ்ருதயகமலம் பகவானுக்கு மிகவும் அபி மதமான வாஸஸ்தானம் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'கல் லும் கனைகடலும் வைகுந்தவானுடும் புல்லென்றெழிந்தன கொல் ஏபாவம் வெல்லநெடியான் நிறங்கரியான் உள்புகுந்து நீங்கான் அடியேனதுள்ளத்தகம்' என்கிற பெரிய திருவந் தாதிப் பாசுரமும், 'பனிக்கடலுள்' இத்யாதி பெரியாழ்வார் திருமொழிப் பாசுரமும் இங்கநுஸந்தேயம். நம் பூர்வாசார்யர் கள் பரவாதிகளை நிரஸனம் செய்வதற்காக அருளிச்செய்கிற வாக்யங்களை ஹயக்ரீவனுடைய ஹேஷாஶப்தமாகத் திருவுள் ளம்பற்றி '**ஹேஷாவிதவோஷ**' இத்யாதி அருளிச்செய் யப்பட்டிருக்கிறது. இதினுல் வாக்யத்தை அவர்கள் உச்சரிக் கும்பொழுது உண்டாகும் காம்பீர்யமும், தடங்கலில்லாமல் ப்ரஸரிப்பதும், ஶ்ரமமில்லாமல் உச்சரிப்பதும் தெரிவிக்கப் பட்டதாகிறது. ஸ்ரீ ஹயக்ரீவன் இவர்களுடைய ஹ்ருதய கமலத்தில் வஸிக்கப்பெற்றோமே என்கிற ஸந்தோஷத்தின் பரீவாஹமாய் ஹேஷாஶப்தத்தைச் செய்ய வஸ்து ஸ்வபாவத் தினுல் ப்ரதிவாதிகள் தானே நிரஸ்தரானுர்கள். '**ஸந்த்யம் தத்விஷஸம்ஸ்ருஷ்டம் ரஸ்யரோஷீக ஜநார்த்தன:**' என்கிறபடியே ரஸ்யமாக ஸ்தந்யபானம் செய்ய வஸ்து ஸ்வபாவத் தினுல் பூதனை தானே நாஶமடைந்தாப்போல என்று ஸ்ரீஸார தீபிகையில் வ்யாக்யாதம். '**ஸஹாகுணா**' என் பதினுல் ப்ரதிவாதி நிரஸனத்திற்கும், ஸ்வமதஸ்தாப னத்திற்கும் உபயுக்தங்களான ஜ்ஞானஶக்த்யாதிகள் மாத்திர மன்றிக்கே மற்றும் ஸகல கல்யாண குணங்களினுல் நிறைந்த வர்கள் என்பது தெரிவிக்கப்படுகிறது. '**திக்ஷ்வளயாவஸமெஜ த்ருஷ்வஜ**'ங்களாவது அந்தந்த இடங்களில் வஸித்துக்கொண் டிருக்கிற வென்றி புகழ்த்திருவேங்கடநாத னென்று சொல்லப் படுகிற தம்மைப்போன்ற ஶிஷ்யர்களை. அவர்களுடைய '**வாசு**' ங்களாவது ஸ்ரீதத்வடீகை, ஸ்ரீசதுஸ்லோகி பாஷ்யம், முதலிய க்ரந்தங்களை. அப்படியே '**யதிவதி ஹவோஹாஷ்யஸ்யாஜள யமா ஶ்ரூதவிதி தஷ்டவவந வியாவஷாவிம்ஶெஜயயுஜவஷ்டிகா**'

என்று ஸ்ரீதத்வடீகையிலும், '**வ்யாஸ ஶடநவ்ய க்ருத்ஸ்யா ஜய யுஜவடிகா**' என்று ஸ்ரீசதுஶ்லோகி பாஷ்யத்திலும் அருளிச் செய்யப்பட்டிருப்பது இங்கனுஸந்தேயம் என்று ஸ்ரீ ஸாராஸ்வாதினியில் வ்யாக்யாதம். ['**வ்யாஸ ஶடந**' என்கிற ஶ்லோகம் இப்பொழுது காணப்படும் ஸ்ரீகோசங்களில்விட்டுப்போயிருக்கிறது.] அவைகளின் '**வசந**'ங்களாவன அவைகளினுலறியப்படும் விஷயங்கள். அவைகளின் '**ஸாதி**'யாவது அவைகளைப்பற்றிய உத்தரோத்தரயுக்தி விசாரங்கள். '**தத்த்வஸித்தாந்த ஸூத்ர**'என்பதினுல்'**ஸூக்ஷ்ம ஸமஹிதாதிபி: தத்த்வஸித்தாந்த நாடகை: | உபந்யஸ்தஸ்ய தஸ்ய ஶாஸ்த்ரஸ்ய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகை: ||**' என்கிற ஶ்லோகம் ஜ்ஞாபகப்படுத்தப் படுகிறபடியினுல் ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜநம் இங்கு அனுஸந்தேயம் என்று திருவுள்ளம். '**ஸூத்ர**' என்பதற்கு ஒவ்வொரு யுக்தியே அநேக அபஸித்தாந்தங்களைத் தள்ளக்கூடிய ஶக்தியை உடையதாயிருக்கிறது என்று தாத்பர்யம். எப்படியென்னில், ஆத்மா ஜ்ஞாதா என்று ஸமர்த்தனம் செய்ததினுல் நான்குவித பௌத்தர்கள், மூன்றுவித அத்வைதிகள், இவர்களின் நிரஸனம் ஏற்படுவதைப்போல. அவைகளைப் பஞ்சுகளின் கும்பலாக நிரூபித்திருப்பதினுல் தன்னுடைய மதத்தை ஸ்தாபிக்கும்பொழுது அவைகள் ஸ்வயமே கழிந்து விடுகின்றன என்பது த்யோதிதம். '**ஸஅது-ரீகா**' என்பதற்கு வ்யாஸ போதாயனுதிகளினுலே ப்ரதிபாதிக்கப்பட்ட மார்க்கம் இப்பொழுது ப்ரகாஶம் செய்யப்பட்டதேயன்றி இது புதிதாய் உண்டாக்கப்பட்டதல்ல என்று தாத்பர்யம். '**நிர்தோஷம் யதா நிஜதிரஸ்கார விநோக்திஸ்ஸகலம் கஷாய ஹ்ருதய:**' என்று யதிராஜ ஸப்ததியில் அருளிச் செய்திருப்பது இங்கனுஸந்தேயம்.

இப்படிப் பொதுவாகக் குருபங்க்தியை அனுஸந்தானம் செய்து ஸித்தாந்தத்திற்கு அதிகமாக உபகாரம் செய்த ஆசார்யர்களைத் தனித்தனியே அனுஸந்தானம் செய்கிறுர். இப்படி அவர்களைத் தனித்து விஶேஷ கௌரவத்துடன் அனுஸந்திக்கவேண்டுமென்பது வாக்ய குரு பரம்பரையிலும் '**ஸ்ரீ**', '**ஸ்ரீ ரங்க**', '**ஸ்ரீ ரதே**' என்கிற ஶப்த ப்ரயோகங்களின்

**ஆரண நூல் வழிச்செவ்வையழித்திடுமைதுகர்க்கோர்
வாரண மாயவர் வாதக்கதலிகண் மாய்த்தபிரான்
ஏரணி கீர்த்தி யிராமா னுசமுனி யின்னுரைசேர்
சீரணி சிந்தையினேஞ் சிந்தியோமினித் தீவினையே.**

---

ஸ்வாரஸ்யத்தினல் தெரிவிக்கப்படுகிறது. அதில் முதலில் ஸ்ரீபாஷ்யகாரர் விஷயமாக அருளிச்செய்கிருர்— '**ஆரணநூல்**' என்ருரம்பித்து.

ப - ரை] **ஆரண நூல்**-வேதாந்த ஶாஸ்திரத்தின், அதாவது உபநிஷத்பாகத்தின், **செவ்வை** - நன்ருக அர்த்தத்தை ப்ரதிபாதிக்கும் தன்மையை, **அழித்திடும்** - கெடுக்கிற, **ஐதுகர்க்கு** - ஹேதுவாதம் பண்ணுகிறவர்களுக்கு, **ஓர்** - அத்விதீயமான, **வாரண மாய்** - யானையாய், **அவர்**-அவர்களுடைய, **வாதக்கதலிகள்**-வாதங்களாகிற வாழைகளை, **மாய்த்த** - நசிப்பித்த, **பிரான்** - உபகாரகரான, **ஏர்** - அனுரூபமான, **அணி** - பூமிக்கு அலங்காரமான, **கீர்த்தி** - கீர்த்தியையுடைய, **இராமாநுசமுனி** - ஸ்ரீபாஷ்யகாரருடைய, **இன்** - போக்யங்களான, **உரை** - ஸ்ரீ ஸூக்திகளை, **சேர்** - சேர்ந்திருக்கிற, **சீர்** - குணங்களினுல், **அணி** - அலங்கரிக்கப்பட்ட, **சிந்தையினேம்** - சிந்தையையுடைய நாம், **இனி** - இதற்குப்பிறகு, **தீவினை** - பாபத்தை, **சிந்தியோம்** - நினைக்க மாட்டோம். '**செவ்வை யழித்திடும்**' என்பதற்கு வேதங்கள் தானே ஒருவிதமான தடங்கலுமில்லாமல் அர்த்தத்தை ப்ரதிபாதிக்கும் தன்மை உடையவைகளாயிருக்க அவைகளில் சில பாகங்களை ப்ரமாணங்களன்றென்றும், ப்ரமாணமாக ஒப்புக்கொண்ட பாகத்திலும் லக்ஷணையாக அர்த்தம் சொல்லவேண்டும் என்றும், எல்லா வேதங்களும் அவித்யா கல்பிதமென்றும், இவை முதலிய வாதங்களினுல் வேதத்தின் ப்ரமாண்யத்தை யழிக்கிற' என்றர்த்தம். '**ஸ்வவ்யாஹதா: ஸ்வோக்தி நிஷ்டித தயாஸ்யம்வாதேத**' என்கிற ஸ்ரீமத் தத்வ ஸார ஶ்லோக மிங்கு அநுஸந்தேயம். அன்றிக்கே '**ஆரண நூல்**' என்பது வேதாந்த ஸூத்திரமாகவுமாம். அதின் வழியாவது உபநிஷத்தின் அர்த்தங்களை யுக்தியைக்கொண்டு விசாரிப்பதாயும், '**ஸ்வல்பாக்ஷரமஸந்திக்தம்**' என்றிவை முதலிய லக்ஷணத்தோடு கூடியதாயுமிருப்

பது. அதின் '**சேவ்வையை யழித்திடு**'கையாவது ஸூத்திராக்ஷரங்களுக்கு அனுகுணமான அர்த்தங்களைச் சொல்லாமல் தாங்கள் மனதிற்கொண்ட அர்த்தத்திற் கனுகுணமாக ஸூத்திரங்கள் கௌணமாக அர்த்தங்களைச் சொல்லுவதாக வ்யாக்யானம் பண்ணுகை. அப்படியே '[illegible]' என்று ஶங்கரபாஷ்ய அவதாரிகை. '**ஐதுகர்க்கு**' என்பதற்குக் கேவலம் யுக்தியையே தங்கள் மதத்திற்கு ப்ரதான ஸாதனமாகக் கொள்ளுகிறவர்களுக்கு என்றர்த்தம். '**வாரணமா**' யென்பதினால் ஒருவராலும் தடுக்க முடியாமையும், அதிக தீரஸ்வபாவமும், எதிரிகளை அநாதரித்திருப்பதும் விவக்ஷிதம். இங்கு 'பண்டருமாறன் பசும் தமிழ்' என்றாரம்பிக்கும் நூற்றந்தாதிப் பாசுரம் அனுஸந்தேயம். '**ஏரணிகீர்த்தி**' என்பதற்கு நம் மிராமானுசனுடைய கீர்த்தி ப்ரசாரத்தினாலே பூமி முழுவதும் அலங்கரிக்கப்பட்டதாகிறது என்று திருவுள்ளம். இவ்விடத்தில் 'அலர்ந்தவம்புயத்திருந்து' என்றாரம்பிக்கும் அம்ருதாஸ்வாதினிப் பாசுரம் அனுஸந்தேயம். '**இன்னுரை**' என்பதற்கு போக்யதா ப்ரகர்ஷத்தினாலே '[illegible]' என்று ஸ்ரீ பாஷ்யத்திலருளிச் செய்திருக்கிறபடியே ஸதா அனுபாவ்யம் என்று தாத்பர்யம். '**சேர் சீரணி சிந்தையினேம்**' என்பதற்கு '[illegible]' என்று நிகமனதிகார ஶ்லோகத்திலருளிச் செய்திருக்கிறபடியே அநவரதம் அதிலேயே ஊன்றியிருக்கிற புத்தியையுடைய நாம் என்று தாத்பர்யம். '**சீரணிசிந்தையினேம்**' என்பதினால் '[illegible]' என்றிவர் தாமே ஸ்ரீயதி ராஜஸப்ததியிலும், '[illegible]' என்று ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயத்திலும், '[illegible]' என்று ஸ்ரீ கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையிலும் அருளிச்செய்திருக்கிறபடியே பூர்வாசார்யர்களுடையவும், ஶ்ரிய:பதியினுடையவும் அனுக்ரஹ விஶேஷத்தினாலும், அவர்களுடைய க்ரந்தங்களில் அநவரத பரிசயத்தினாலும் உண்டாகிய குண விஶேஷங்களை

நீளவந்தின்று விதிவகையா னினைவொன்றிய நாம்
மீளவந்தின்னும் வினையுடம்பொன்றிவிழுந்துழலா
தாளவந்தாரென வென்றருடந்து விளங்கிய சீர்
ஆளவந்தாரடியோம் படியோமினி யல்வழக்கே.

---

யுடையது தம்முடைய சிந்தை என்பது தெரிவிக்கப்படுகிறது. '**சிந்தியோமினித் தீவினையே**' என்பதற்குக் கீழ்ச் செய்த பூர்வ பாபங்களைப்பற்றி இனி வ்யஸனப்பட மாட்டோம் என்றர்த்தம். அதாவது எம்பெருமானுர் அருளிச்செய்த ஸ்ரீ பாஷ்யம், கத்யம் முதலிய ஸ்ரீஸூக்திகளினுல் ப்ரபத்தியின் ப்ரபாவத்தை யதாவத்தாக அறிந்த பிறகு பூர்வபாபங்களைப்பற்றிக் கவலைப் படவேண்டாம் என்று தாத்பர்யம். இத்தால் ஆசார்யர்களின் ஸ்ரீ ஸூக்தி பரிசயத்தினுல் தனக்கு ஸர்வஶோக நிவ்ருத்தி உண்டானதைப்பற்றி அவர்களிடத்தில் உபகாரஸ்ம்ருதி செய்யப்பட்டதாயிற்று. அன்றிக்கே எம்பெருமானுருடைய ஸ்ரீ ஸூக்திகளில் தம்முடைய புத்தி சென்றபிறகு இனி பாபத்தைப் புத்தியினுல் யோசிக்கமாட்டோம் என்று தாத்பர்யமாகவுமாம். அதாவது உத்தராகத்திலிருந்து மனது நிவ்ருத்தமானபடி அநுஸந்திக்கப்பட்டது.

இப்படியே விஶேஷ உபகாரகரான ஸ்ரீ ஆளவந்தார் விஷயமாகவும் ஒரு மங்கள மருளிச் செய்கிருர்—'**நீளவந்தின்று**' என்ருரம்பித்து.

ப - ரை] **நீளவந்து** - நெடுங்காலமாக ஸம்ஸாரத்திலேயே ஸஞ்சரித்துக்கொண்டு வந்து, **இன்று** - இந்த ஜன்மத்திலே, **விதிவகையால்** - பாக்ய வசத்தினுலே, **நினைவு ஒன்றிய** - நல்ல எண்ணத்தை அடைந்த, **நாம்**, **இன்னம்** - இதற்கு மேலும், **மீளவந்து** - திரும்பவும் இந்த ஸம்ஸாரத்திலேயே வந்து, **வினையுடம்பொன்றி** - கர்ம ஸம்பந்தமுடைய ஶரீரத்துடன் சேர்ந்து, **விழுந்துழலாது** - கீழே விழுந்து ஸம்ஸாரத்திலேயே உழன்றுகொண்டிராமல், **ஆளவந்தாரென** - நம்மை ரக்ஷிக்க வந்தவர் என்று சொல்லும்படி, **வென்று** - ஜயித்து, **விளங்கிய** - ப்ரகாஶித்துக் கொண்டிருக்கிற, **சீர்** - கல்யாண குணங்களையுடைய, **ஆளவந்தாரடியோம்** - ஸ்ரீ ஆளவந்தாருக்குத் தாஸ

பூதர்களான நாம், **இனி** - இதற்குமேல், **அல்வழக்கு** - அல் லாத வழக்குகளை, அ தா வ து அபஸித்தாந்த ந்யாயங்களை, **படியோம்** - வாசிக்கமாட்டோம்.

'**நீளவந்து**' என்பதற்கு ஸம்ஸாரம் அநாதியென்பதும், '**விதி வகையால்**' என்பதற்கு நடுவில் ஒரு '**ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந்மதுஸூதந:**' என்கிறபடியே பகவா னுடைய கடாக்ஷத்தை ஏதோ ஒரு பாக்யவஶத்தால் பெற் ரோம் என்றும், '**நினைவொன்றிய**' என்பதற்கு தேஹத்தை விட ஆத்மா வேறு, அது பகவானுக்கு தாஸபூதமானது, என்கிற ஜ்ஞானத்தைப் பெற்ற என் றும் தாத்பர்யம். இத் தால் மோக்ஷமாகிற புருஷார்த்தத்தை அபேக்ஷிக்க ஸமர்த்த ரானோம் என்பது அர்த்தாத் ஸித்தமாகிறது. '**வினையுடம்பு**' என்பதினால் கர்மங்களினால் உண்டாக்கப்பட்டதாய் மேலும் கர்மங்களுக்குக் காரணமாகையினால் கர்மங்களோடு சேர்ந்தது ஶரீரம் என்பது த்யோதிதம். '**ஒன்றி**' என்பதற்குத் தேஹா த்ம ப்ரமம் முதலியவைகளை யடைந்து என்றர்த்தம். '**விழுந்து**' என்பதற்கு '**க்ஷிபாமி**' என்கிற ஸங்கல்பத்திற்கு விஷய பூதர் களாய், '**க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு**' என்கிற ஸ்ரீகீதா ஶ்லோகத்தின் படியே கீழேவிழுந்து என்றர்த்தம். '**உழலாது**' என்பதற்கு அந்த நரகாதிகளிலே அதி தீர்க்க காலம் ஸஞ்சரித்துக்கொண்டிராமல் என்றர்த்தம். அதாவது இப்படி **ஸ்ரீ** ஆளவந்தார் ந ம் மை க் கடாக்ஷிக்காவிடில் இந்த யாதனையிலேயே உழன்றுகொண்டிருப் போம் என்று திருவுள்ளம். '**ஆளவந்தாரெனவென்று**' என்பதி னால் '**யயா பராஜிதா: ஸர்வே ஸத்ஸு விதந்தவாதின:**' என்கிற படியே மிகவும் துரபிமானத்தோடு கூ டி ய நம்முடைய மன தையும் தனக்கடிமையாக்கிக் கொண்டபடியினால் நம்மை ரக்ஷி க்க வந்தவரென்று எல்லாரும் கொண்டாடும்படி அவதரித் தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. அன்றிக்கே இந்த ஆள வந்தார் ராஜ ஸபையில் ஆஸ்தான பண்டிதனைத் தோற்கடித்து அதினாலே தன்னுடைய ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றினபடியி னால் தனக்கு அடிமை வேலை வாராதபடி தன்னைக் காப்பாற்றினார் என்று ராஜ பத்னியே '**ஆளவந்தீரோ**' என்று இவரைக் கொண் டாடின வ்ருத்தாந்தம் தெரிவிக்கப்பட்டதாகிறதாகவுமாம். அவ்

கர்ளம் வலம்புரியன்ன நற்காதலடி யவர்க்குத் [ளல்
தாளம் வழங்கித் தமிழ்மறை யின்னிசை தந்த வள்
மூளுந்தவ நெறிமூட்டிய நாதமுனி கழலே
நாளுந்தொழு தெழுவோ நமக்கார் நிகர் நானிலத்தே.

**இதி ஸ்ரீ கவிதார்க்கிக ஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரஸ்ய**
**ஸ்ரீமத் வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு**
**ஸ்ரீ குருபரம்பராஸார: ஸம்பூர்ண:.**

---

**॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥**

சீரார்தூப்புத்திருவேங்கடமுடையான் திருவடிகளேஶரணம்.

---

விதமாகச் சொல்லும்படி, **வென்று** - பண்டிதனை வாதத்தில் ஜயித்து, **விளங்கிய** - அதனாலே ப்ரகாஶித்த, **சீர்**-கல்யாண குணங்களையுடைய என்றர்த்தம். இங்கு **'அடியோம்'** என்பதற்கு அவர்களுடைய **ஸ்ரீ** ஸூக்திகளில் பரிசயத்தைச் செய்து அதினாலே அவருக்குத் தாஸபூதர்களான நாம் என்றர்த்தம். **'படியோமினி அல்வழக்கே'**என்பதற்கு குத்ருஷ்டி முதலியவர்களின் மத க்ரந்தங்களைப் படிக்க மாட்டோம் என்றர்த்தம். இங்கு 'புலையறமாகி நின்ற புத்தொடு சமணமெல்லாம் கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதான்' என்கிற திருமாலைப் பாட்டும், 'தீக்குறளைச் சென்றோதோம்' என்கிற திருப்பாவைப் பாசுரமும், '**விஜ்ஞாபேஷ்வப்யஜ்ஞாநவச: க்ருதாந்தக்ருதிய: ஸிந்தாந்தா ந ஸந்த்யஜே யதிவர த்ருஸ்யாந்யஸாயிநி**' என்கிற யதிராஜ ஸப்ததி ஶ்லோகம் முதலியவைகளும் அநுஸந்தேயம். அன்றிக்கே, ப்ரதமபர்வமாகிய பகவத்தாஸ்யத்திலிருந்தவர்கள் அதிலிருந்து திரும்பினாலும் திரும்பலாம்; ஆசார்யதாஸ்யமாகிய சரமபர்வம் வரையில் வந்தவர்களுக்கு ஸ்வஶேஷத்வ அந்யஶேஷத்வங்களிலே திரும்ப வழியில்லை; ஆகையினால் இங்கு **'அல்வழக்கே'** என்பதற்கு ஸர்வேஶ்வரன் **'ஸ்வாமிந்'** என்று கைபிடிக்க **'ஸோஹம்'** என்று திமிரும்படியான மித்யா பூதமான வழக்கில், **படியோம்**-படியமாட்டோம் என்று தாத்பர்யமாகவுமாம்; என்று ஸ்ரீ ஸார தீபிகையில் வ்யாக்யாதம்.

இப்படியே ஸ்ரீமந்நாதமுனிகள் விஷயமாக ஒரு பாட்டருளிச் செய்கிருர்—**'காளம் வலம்புரி'** என்றுரம்பித்து.

ப - ரை] **காளம்** - காஹளவாத்யம், **வலம்புரி** - வலம்புரி ஶங்கம், **அன்ன** - இவைகளுக்கு ஸத்ருஶர்களான, **நற்காதல்**-ஶ்லாக்யமான பக்தியையுடைய, **அடியவர்க்கு** - தாஸபூதர்களான மேலையகத்தாழ்வான், கீழையகத்தாழ்வான் என்பவர்களுக்கு, **தாளம் வழங்கி** - தாள ஶாஸ்திரத்தை உபதேஶித்து, **தமிழ்மறை** - த்ரமிடவேதம் என்று சொல்லப்படுகிற திவ்ய ப்ரபந்தங்களினுடைய, **இன்னிசை** - இனிமையான கானத்தை, **தந்தவள்ளல்** - உபதேஶித்த பரமோதாரராயும், **மூளும்**-எல்லோராலும் அனுஷ்டிக்கக் கூடியதான, **தவநெறி** - பக்தி ப்ரபத்திகளாகிற மார்க்கங்களை, **மூட்டிய** - பரவச் செய்தவரான, **நாதமுனிகழலே** - ஸ்ரீமந்நாதமுனிகளின் திருவடிகளையே, **நாளும்** - தினந்தோறும், **தொழுதெழுவோம்** - ஆஶ்ரயித்து உஜ்ஜீவிப்போம், **நானிலத்தே** - நாலுவிதமான பூமியில், **நமக்கு**, **யார்**, **நிகர்**—ஸமானர்கள்.

**'காளம் வலம்புரியன்ன'** இத்யாதிக்கு காஹளம் முதலியவைகள் எப்படி ராஜாவின் விஜயத்திற்கு ஸூசகங்களோ அப்படியே இவர்களிருவரும் ஸ்ரீமந்நாதமுனிகளின் கல்யாண குணங்களுக்கு ப்ரகாஶகர்கள் என்று தாத்பர்யம். **'காளம்'** என்றால் சக்ரம், திகிரி வட்டம் காளம் ஸுதர்ஶநம் என்று சக்ரத்தின் பெயராகுமிவை என்று நிகண்டு என்று ஸ்ரீஸார தீபிகையில் வ்யாக்யாதம். இந்தப் பக்ஷத்தில் பகவானுக்கு சங்க சக்ரங்கள் எப்படி அஸாதாரண சின்னங்களோ அதைப்போல ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு இவர்கள் என்று திருவுள்ளம். **'அடியவர்க்கு'** என்பதற்கு **'கஶ்ஹீதாம் ததஃ வாதஸ ஶ்ரீநிவேஷஸ கூ¯ஶீஸவஸ'** என்று திருவடிகளை ஆஶ்ரயித்த குசலவர்களைப்போலே ஸ்ரீமந்நாதமுனிகள் திருவடிகளை ஆஶ்ரயித்தவர்க்கு என்றர்த்தம். **'மூளும் தவநெறி மூட்டிய'** என்பதினுல் **'ஜொகெஜவ தீண ஷவாரஶாய ஷஸஶ்ரஷக்தியொமாய நாஸஶ்ரீநபெ யதிநாம் வாாய'** என்கிற ஸ்ரீஸ்தோத்ர ரத்னஶ்லோகம் விவக்ஷிதம். **'கழலே'** என்கிற இடத்தில் ஏகாரத்திற்கு ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கக் கூடியது என்றர்த்தம். அன்றிக்கே **'நாஸஶ்ரீநபெ கத்ர வாத்ர வாவி நித்யம் யதீய வாணஸ ஶாணம் ஶீயம்'** என்

கிற்படியே உபாயதசையிலும் ப்ராப்யதசையிலும் உத்தேஶ்யத்வம் தாத்பர்யமாகவுமாம். **'நானில'**மாவது மருதம், குறிஞ்சி, நெய்தல், முல்லை, என்று நான்கு விதமாகப் பிரிக்கப்பட்ட பூமி. பாலை யெனுமைந்தாம்வகுப்பு மருகாந்தாரமாகையினாலே மனுஷ்ய ஸஞ்சாரமற்றதால் இங்கு எடுக்கப்படவில்லை.

இப்படிக்கீழ் மூன்று பாட்டுகளிலும் **'சிந்தியோ மினித் தீவினையே'** என்று பரிஶுத்த மனோவ்ருத்தியும், **'படியோமினி யல்வழக்கே'** என்று பரிஶுத்தமான வாக்வ்யாபாரமும், **'தொழு தெழுவோம்'** என்று பரிஶுத்தமான ஶரீரவ்யாபாரமும் தனித் தனியே அருளிச் செய்யப்பட்டிருந்தபோதிலும் ஒவ்வொரு ஆசார்யர்களிடத்திலும் இந்த மூன்றும் சேர்த்தனுஸந்தேயம் என்பது திருவுள்ளம். ஆக இத்தால் ஸதாசார்ய ஸம்பந்தத்தினாலே த்ரிகரணங்களினாலும் பரிஶுத்தமான வ்ருத்தியைச் செய்யப்பெற்றோம் என்று அவர்களிடத்தில் உபகார ஸ்ம்ருதி செய்யப்பட்டதாயிற்று. இப்படியே ஒவ்வொரு ஆசார்யர்களிடத்தில் செய்யவேண்டு மென்பதும் இதினாலேயே ஸூசிதம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்
**ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமிகளினால்**
செய்யப்பட்ட

**ஸ்ரீ குரு பரம்பராஸார வ்யாக்யானம்**
முற்றிற்று.



॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீஹயவதந பரப்ரஹ்மணே நம: ॥

॥ ஸ்ரீமதே வகுளபூஷண மஹாதேசிகாய நம: ॥

॥ ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனருளிச் செய்த

## ஸ்ரீ ம த்

# ரஹஸ்யத்ரய ஸாரம்.

## உபோத்காதாதிகாரம்.

[மங்களாசரணம்—மோக்ஷ ப்ராப்தியில் ஜீவாத்மாவின் ஸ்வரூப யோக்யதை—ததப்ராப்திக்குக்காரணம்—ஸாத்விக ஸம்பாஷணம்—ஆசார்ய ப்ராப்தி—வைராக்யஹேத்வர்த்தமாக ராஜ குமார த்ருஷ்டாந்தம்.]

ஶ்ருதவத: ஸ்ரீயதிராஜவிதா
சார்யாத் ஸங்கதிம் வந்தே ।
மநஸி மம யஸ்ய ஸ்ரீஸாராவஸதி
ரஹஸ்யத்ரயஸ்ய ஸாரோயம் ॥

॥ ஸ்ரீ: ॥

॥ தர்ஜஃரவநிநீ ஹெஶரவநாயிகாவஸஂதெ

ஸ்ரீதெவநாய வரஸஹஸெ நமஃ ॥

॥ ஸ்ரீமதெ வகுஉலாபுஷண மஹாதெஶிகாய நமஃ ॥

॥ ஸ்ரீமதெ ராமாநுஜாய நமஃ ॥

॥ ஸ்ரீ மதெ நிகமாந்த மஹாதெஶிகாய நமஃ ॥

॥ ஸ்ரீமதெ ஸ்ரீ நிவாஸராமாநுஜ மஹாதெஶிகாய நமஃ ॥

இப்படிக் கீழ் ஸ்ரீ குருபரம்பராஸார மென்னும் க்ரந்தத்தில் ரஹஸ்யார்த்தங்களை யனுஸந்திக்கும் போதெல்லாம் குரு பரம் பரானுஸந்தானம் விதிபல ப்ராப்தமென்றும், அப்படி அனு ஸந்தானம் செய்தால் தான் ஜ்ஞானமுண்டாகுமென்றும், ஸமர்த் தித்தருளினபடியே **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்** என்னும் இக்ரந் தத்தை யருளிச்செய்ய ஆரம்பித்து விதிபல ப்ராப்தமான குரு பரம்பரானுஸந்தானமாகிற மங்களத்தைச் செய்தருளி அதினால் தனக்கு அந்த ரஹஸ்யத்ரயங்களைப்பற்றிய ஜ்ஞானம் விஶதமாய் உண்டாயிற்றென்று அருளிச் செய்கிறார்—'**ஆபகவத்தஃ**' என்றாரம்பித்து.

ப - ரை] **ப்ரதிதாம்** - ப்ரஸித்தமாயும், **அநவாம்** - தோஷ மில்லாததுமான, **ஆசார்யஸந்ததிம்** - ஆசார்ய பரம்பரையை, அதாவது நேரில் தமக்கு ஆசார்யர்கள் முதலாக அவருக்கு ஆசார்யன் இத்யாதி க்ரமேண அந்த பரம்பரையை, **ஆபகவத்தஃ** - பகவான் வரையிலும், **வந்தே** - ஸேவிக்கிறேன். அல்லது **ஆபகவத்தஃ** - பகவான் வரையிலு மிருக்கிற, **ஆசார்யஸந்ததிம்** - ஆசார்ய ஸந்ததியை என்றர்த்தமாகவுமாம். **யத் ப்ரஸாதாத்** - எந்த ஆசார்ய பரம்பரையின் ப்ரஸாதத்தினால், **மம** - என்னுடைய, **மநஸி** - மனதில், **ரஹஸ்யத்ரயஸ்ய** - ரஹஸ்யத்ரயங்களினுடைய, **அயம்** - இந்த, **ஸாரஃ** - ஸாரார்த்தமானது, **வஸதி**-எப்பொழுதும் குடிகொண்டிருக்கிறதோ.

இங்கு '**ப்ரதிதாம்**' என்பதினால் கல்யாண குணங்களி னால் உண்டான ப்ரஸித்தியும், '**அநவாம்**' என்பதினால் ஹேய ப்ரத்யநீகத்வமும் ஸங்க்ரஹிக்கப்பட்டதாகிறது. இத்தால்

ஸ்ரீ குரு பரம்பராஸாரத்தில் '**த்ருயஜவு திநநீய**', '**ஹுஷூரா விஷவவிஷூலஂஹ**' இத்யாதி பதங்களினல் விஶதமாக நிரூபிக்கப் பட்ட அர்த்தங்கள் விவக்ஷிதமாகின்றன. '**ஶூஹ மவதூ**' என் பதினல் ரஹஸ்யாம்நாய ப்ராம்மண ஶ்ருதியில் விதிக்கப்பட்டிருக் கிற ப்ரகாரம் இங்கு அனுஸந்திக்கப்பட்டதென்று தெரிவிக் கப்பட்டதாயிற்று. '**ரஹஸ்ய த்ரயஸ்ய ஸாரோயம்**' என் பதினல் இந்த க்ரந்தத்திற்கு விஷயம் ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தமென்பதும், அந்த அர்த்தத்தை அறியவேண்டும் என் கிற ஆசையுடையவன் அதிகாரீ என்பதும், அந்த அர்த்தத் தை அறிவது ப்ரயோஜனம் என்பதும் தெரிவிக்கப்பட்ட தாகிறது. '**ஸயம்**' என்பதினல் '**தஸ் ஸவஂ யமு வீடுண யயாவஸஂஷூவஸ்ருதி**' என்று வால்மீகிமஹருஷி ராமவ்ருத் தாந்தத்தை தபோமஹிமையினல் ப்ரத்யக்ஷீகரித்தாப்போல ஆசார்ய ப்ரஸாதத்தினல் தமக்கும் இந்த அர்த்தங்கள் ப்ரத்ய க்ஷமாய்த் தோற்றினபடி தெரிவிக்கப்பட்டது. '**உஹஹுஷஂ த்ருஸஂவுதயிமேஷெண கஸ்ஷிநஹவதி । ஹுபிகதஷி ஹிதநியிவ ஷெஸிகுதெ வக்ஷா ஜநா: ॥**' என்று மேல் திருமந்திராதிகாரத்தில் அருளிச்செய்யப்பட்டது இங் கனுஸந்தேயம். '**வஸதி**' என்று வர்த்தமான நிர்தேஶமாக (நிகழ்காலமாக) அருளிச் செய்திருப்பதினல் யுக்திகளினல் சலிப்பிக்கமுடியாமல் ஸ்திர ப்ரதிஷ்டிதமானபடி தெரிவிக்கப்படு கிறது. இவ்விடத்தில் '**உஷ்டஂ ஹி விஷூஷாஂ ஸொகெஸூவ வ்யாஸபாரணம்**' என்கிற ந்யாயமாக மேலே அருளிச் செய் யப்படுகிற அர்த்தம் ஸூசிப்பிக்கப்படுகிறது. எங்ஙனே என் னில்? இந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் என்னும் க்ரந்தம் அர்த்தானுஶாஸநபாகம், ஸ்திரீகரண பாகம், பதவாக்யயோஜனு பாகம், ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகம், என்று நான்கு பாகங்க ளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் முதலாவது பாகத்தில் முமுக்ஷுவிற்கு அவஶ்யம் ஜ்ஞாதவ்யங்களாய் ரஹஸ்யத்ரயங் களில் அபிப்ரேதங்களான அர்த்தங்கள் இருபத்திரண்டு அதி காரங்களில் விஶதமாக நிரூபிக்கப்படுகின்றன. இரண்டாவது பாகத்தில் கீழ்ச் சொல்லப்பட்ட அர்த்தங்களைப்பற்றிய ஆக்ஷே பங்களுக்கு ஸமாதானம் நாலு அதிகாரங்களில் அருளிச்செய்யப்

𑌕𑌰𑍍𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑍇 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌕𑍌𑌤𑌸𑍍𑌕𑍁𑌤 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌾𑌨𑍍 ।
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌹𑌸𑍍𑌤𑌿𑌗𑌿𑌰𑍀𑌶𑌸𑍍𑌯
𑌵𑍀𑌥𑍀𑌶𑍋𑌧𑌕 𑌕𑌿𑌙𑍍𑌕𑌰𑌾𑌨𑍍 ॥

---

படுகிறது. மூன்ருவது பாகத்தில் ரஹஸ்யத்ரயங்களுக்கு பத வாக்ய யோஜனை மூன்றதிகாரங்களில் உபபாதிக்கப்படுகிறது. நான்காவது பாகத்தில் இதை உபதேஶிக்கும் ஆசார்யன், உபதேஶம் பெறும் ஶிஷ்யன் இவர்களுடைய க்ருத்யமும் நிகமனமும் மூன்றதிகாரங்களில் தெரிவிக்கப்பட்டிருகிறது. இவைகளில் '**𑌰𑌹𑌸𑍍𑌯𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾𑌰𑍋𑌯𑌂**' என்பதினுல் அர்த்தானுஶாஸந பாகத்தின் அர்த்தமும், பத வாக்ய யோஜனு பாகத்தின் அர்த்தமும், '**𑌵𑌸𑌤𑌿**' என்பதினுல் ஸ்திரீகரண பாகத்தின் அர்த்தமும், '**𑌯𑌶𑍍 𑌶𑍍𑌰𑌵𑌸𑌾𑌷𑌾𑌶𑍍**' என்பதினுல் ஆசார்யன் கேவலம் க்ருபையினுல் உபதேஶிக்க வேண்டுமென்றும், அப்படிப்பட்ட ஆசார்யனிடத்தில் ஶிஷ்யன் ஸதா க்ருதஜ்ஞதானு ஸந்தானம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டும் என்று நிரூபிக்கிற ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகத்தினர்த்தமும் ஸங்க்ரஹிக்கப்பட்டதாகிறது. இந்த ஶ்லோகத்தினுல் க்ரந்த ஆரம்பத்தில் செய்யவேண்டும் மங்களாசரணமும் செய்யப்பட்டதாகிறது.

இப்படிக் கீழ்க் குரு பரம்பரானு ஸந்தானம் செய்து, மங்கள பூயஸ்த்வார்த்தமாக தனக்கு விஶேஷ உபகாரம் செய்தருளின ஸ்ரீ அப்புள்ளார் விஷயமாக மங்களம் அருளிச் செய்கிருர்— '**𑌕𑌰𑍍𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑍇**' என்றுரம்பித்து. இந்த ஶ்லோகம் இவருக்குத் திருவாய்மொழிமூலம் உபதேஶம் செய்தவராகிய ஆசார்யனைக் குறிக்கிறது என்று யோஜிப்பாருமுண்டு.

ப-ரை] **𑌕𑌰𑍍𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑍇** - கர்ம ஸ்வரூபமாயும் ப்ரும்ம ஸ்வரூபமாயுமிருக்கிற, **𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇** - ஶாஸ்திரத்தில், அதாவது கர்மவிசாரரூபமாயும், ப்ரும்மவிசார ரூபமாயுமிருக்கிற பூர்வோத்தரமீமாம்ஸா ஶாஸ்திரத்தில் என்று தாத்பர்யம், **𑌕𑍌𑌤𑌸𑍍𑌕𑍁𑌤 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌾𑌨𑍍** - கேவலம் யுக்தி வாதம் சொல்லுகிறவர்களை

நிவர்த்திசெய்கிற, **ஹஸ்திகி³ரீஶஸ்ய** - ஹஸ்திகிரிக்கு நாதனான ஸ்ரீ தேவப்பெருமாளுடைய, **வீதீ²ஶோத⁴க கிங்கராந்**-திருவீதியை ஶோதனம் செய்வதாகிய கைங்கர்ய நிஷ்டரான ஆசார்யர்களை, **வந்தே** - ஸேவிக்கிறேன்.

ஸ்ரீ அப்புள்ளார் தனியனில் '**[illegible]**' என்றருளிச் செய்யப்பட்டிருப்பது இங்கு '**[illegible]**' என்பதினால் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறபடியினால் இது ஸ்ரீ அப்புள்ளார் விஷயமான மங்களம் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்பொழுது '**ஹஸ்திகி³ரீஶஸ்ய வீதீ²ஶோத⁴ககிங்கராந்**' என்பதற்கு ஶ்ரிய:பதியினால் ப்ரவர்த்திக்கப்பட்ட பக்தி ப்ரபத்யாதி மார்க்கங்களில் த்ருணாதிகளைப்போல மறைத்துக்கொண்டிருக்கிற பரமதங்களை நிரஸனம் செய்து அந்த மார்க்கத்தை மறுபடியும் ப்ரகாஶம் செய்வதாகிய கைங்கர்ய நிஷ்டரான என்றர்த்தம். இதில் பூர்வார்த்தத்தினால் '**ஹ்ருத்³யாஹ்ருத்³யதம:ஸம்ஹாரகாந்**' இத்யாதியின் தாத்பர்யமும், உத்தரார்த்தத்தினால் '**ஶிக்ஷயா**' இத்யாதியின் அர்த்தமும் ஸங்க்ரஹிக்கப்பட்டதாகிறது. '**வீதீ²ஶோத⁴க கிங்கராந்**' என்றருளிச் செய்திருப்பதினால் தமக்குத் திருவாய்மொழியை அத்யயனம் செய்வித்த ஆசார்யன் ஸ்ரீ தேவப்பெருமாள் ஸந்நிதியில் 'கடைத்தலை சீய்க்கப்பெற்றால்', 'உன்கோயில் சீய்த்து' இத்யாதிகளில் ப்ரதிபன்னமான திருவிலகு ஶோதன கைங்கர்யம் செய்துகொண்டிருந்தபடியினால் அவரைக்குறிக்கிறதுஎன்பதேற்படுகிறது. அன்றிக்கே '**வீதீ²ஶோத⁴ககிங்கராந்**' என்றது நம்பண்ணமரும் தமிழ்வேதமறிந்த பகவர்களையாகவுமாம். எப்படியென்னில்? '**உத்³கா³யதீநாமரவிந்த³லோசநம் வ்ரஜாங்க³நாநாம் தி³வமஸ்ப்ருஶத்³த்⁴வநி: । த³த்⁴நஶ்ச நிர்மந்த²நஶப்³த³மிஶ்ரிதோ நிரஸ்யதே யேந தி³ஶாமமங்க³லம் ॥**' என்கிறபடியே பகவத் குணங்களை ப்ரதிபாதிக்கிற திவ்ய ஸூக்திகளை குழாங்களாய்க் கூடிப்பாடுகிற த்வநி விஶேஷத்தினாலே பகவானெழுந்தருளுகிற வீதியில் உள்ள அமங்களங்களை நிரஸனம் செய்து கொண்டுபோகிறபடியினாலும், '**[illegible]**' என்று சொன்ன

**ஆளுமடைக்கலமென்றெம்மை யம்புயத்தாள் கணவ தாளிணை சேர்ந்தெமக்கு மவைதந்ததகவுடையார்[ன் மூளுமிருள்கள்விள்ளமுயன்றேதியமூன்றினுள்ளம் நாளுமுகக்க விங்கே நமக்கோர் விதிவாய்க்கின்றதே.**

---

பிராட்டியைப்போல பாஷண்ட்யாதி ஜனங்களுடைய ஸஞ்சாரத்தினலே பகவானெழுந்தருளுவதற்கு அநர்ஹங்களான பாகங்களைத் தங்களுடைய ஸஞ்சாரத்தினல் பரிஶுத்தம் செய்கிறபடியினுலும், என்று தாத்பர்யம். இவ்விடத்தில், 'தீர்த்தங்களாயிரத்துளிவையு மொருபத்தும் வல்லார்களைத் தேவர் வைகல் தீர்த்தங்களேயென்று பூசித்து நல்கியுரைப்பர்தம் தேவியர்க்கே' என்கிற நம்மாழ்வாருடைய பாசுரமும், '**ஸ்ரீரங்க வ்ருஷகிரிஸத்ய வ்ரதயது கிரிவாராஹக்ஷேத்ர வாணாரங்க ஹஸ்திகிரி ஷ்ரீயாஹிவ்ருத்தி ஹ்ருஷீகேஶ யஶோஹிதை யாத்ராதஸ்வ ஸேவா ஹேவாக விஹித கதாகத வைகுண்டவாரண நவநயவிஷ வடுவவித்ராக்ஷாதமனை:**' என்று ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய வாக்யமும் அநுஸந்தேயம். இந்த ஶ்லோகத்தில் அவ்வோ ஆசார்யர்களின் திருநாமங்களைக் கண்டரவேண அருளிச்செய்யாமைக்கும், பஹு வசனத்தின் ஸ்வாரஸ்யத்திற்கும், இந்த யோஜனை பொருத்தமுடையதாயிருக்கிறது.

இப்படி இந்த ப்ரபந்தத்தினல் நேராகவும் பரம்பரையாகவும் உண்டாகக்கூடிய ப்ரயோஜனங்களை விஶதமாகவருளிச் செய்துகொண்டு இப்படி ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தாநுஸந்தானத்தினல் ஆநந்தாநுபவம் செய்யும்படியான தனக்குண்டான பாக்யாதிஶயத்தைக் குறித்து விஸ்மிதராகிருர்— '**ஆளும்**' என்றுரம்பித்து.

ப-ரை] **எம்மை**-நம்மை, **அம்புயத்தாள் கணவன்** - தாமரைப் புஷ்பத்தில் வஸித்துக்கொண்டிருக்கிற லக்ஷ்மியின் பர்த்தாவாகிய பகவான், **அடைக்கலம்**-ரக்ஷ்ய வஸ்துவாக(க்கொண்டு), **ஆளும்** - ரக்ஷிப்பன், **என்று** - என்று நிஶ்சயித்து, **தாளிணை சேர்ந்து** - (அந்த அம்புயத்தாள் கணவனுடைய) திருவடிகளிரண்டையு மாஶ்ரயித்து, **எமக்கும்** - தம்மை யாஶ்ரயித்தவர்களான நமக்கும், **அவை தந்த** - அந்தத் திருவடிகளிரண்டையும் உபாய

மாகவும் உபேயமாகவும் காட்டித் தந்த, **தகவுடையார்** - க்ருபை யை யுடையவர்களான நம் பூர்வாசார்யர்கள், **மூளும்** - வ்யாபித் துக்கொண்டிருக்கும், **இருள்கள்**-அஜ்ஞாநாந்தகாரங்கள், **விள்ள**- நசிப்பதற்காக, **முயன்று** -ப்ரயத்தனம் செய்து, **ஓதிய** - அப்யா ஸம் செய்த, **மூன்றின்** - ரஹஸ்யத்ரயங்களின், **உள்ளம்** - தாத் பர்யார்த்தத்தை, **நாளும்** - தினந்தோறும், **உகக்க** - ஸந்தோ ஷிக்க, அதாவது ரஹஸ்யார்த்தங்களை அனுஸந்தானம் செய்து அதினால் ஸந்தோஷிக்க என்று தாத்பர்யம். **இங்கே** - இந்த ப்ர க்ருதி மண்டலத்தில், **நமக்கு**, **ஓர்** - ஒப்பற்ற, **விதி**- பாக்யம், **வாய்க்கின்றதே** - ப்ராப்தமாகிறது.

'**இங்கே**' என்பதற்கு இப்படிப்பட்ட அனுபவத்திற்கு விரோதமாகப் பகவத் ஸ்வரூபத்திற்குத் திரோதானாதிகளை(மறை ப்பு முதலியவைகளை)ச் செய்கிற இந்த ப்ரக்ருதி மண்டலத்தி லே என்றர்த்தம். '**உகக்க**' என்பதற்கு 'கூனுள நெஞ்சுகளால் குற்றமெண்ணி' என்கிறபடியே அஸூயாதிகளினால் ஆஸுர ஸ்வ பாவத்தை யடைந்து பகவானுடைய குண விபூத்யாதிகளில் பொறுமை கொண்டிருக்கிற இந்த லோகத்திலே இதைக் கேட்டு உகக்கும்படியான பாக்கியம் பெற்றோமே என்று தாத்பர்யம். '**ஹ்ரவக்ஷ்யாம்யநஸூயவே**' என்று ஸ்ரீ கீதையில் அஸூயை இல்லாமையே குணமாகச் சொல்லப்பட்டது. அப்படித் தோஷா பாவம் மாத்திரத்தில் நின்று விடாமல் உகக்கும்படியான விசே ஷம் சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் '**ஓர் விதி**' என் றருளிச் செய்கிறார். இங்கு '**ஓர் விதி**' என்றது பகவானுடைய அனுக்ரஹ விசேஷத்தைக் காட்டிலும் மிகவும் விலக்ஷணமான ஆசார்ய கடாக்ஷத்தைக் குறிக்கிறது. **நமக்கு** - அந்த ஆசார் யன் திருவடிகளை யாஸ்ரயித்திருக்கிற நமக்கு. '**வாய்க்கின்ற தே**' என்பதினால் 'கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க் கின்றோர் எண்டானு மின்றியே வந்தியலுமாறு' என்றும், 'வரவாறென் றில்லையால் வாழ்வினிதால்' என்றும் அருளிச் செய்திருக்கிறபடியே ஸத்ருஸமான ஹேது இன்னதென்று தெரியாமலிருக்கப் பெரிய லாபம் தானே வந்து கிட்டா நின்றது என்பது த்யோதிதம். 'ஏ' என்பது ஸந்தோஷாதிக்யத் தைக் காண்பிக்கிறது. '**மூன்றி னுள்ளம் நாளு முகக்க**' என்

பதினல் ரஹஸ்யத்ரயங்களின் அர்த்த ஜ்ஞானமும், அதின் வழியாக அம்புயத்தாள் கணவன் தாளிணை சேர்வதும், அதினலேயவன் நம்மை யடைக்கலமாக ஆளுவதும், இந்த க்ரந்தத்திற்கு ப்ரயோஜனம் என்று த்யோதிதம். க்ருதக்ருத்யனுக்கு '**அபயேடிா நஸஸாடேஜ ஸஹ ஸலெஷவம் வகூா**' என்று இந்த ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தத்தை அனுஸந்தித்து ஆநந்தானுபவம் செய்வதே ஸ்வயம் ப்ரயோஜனம் என்பது '**நாளு முகக்க**' என்பதினல் காட்டப்படுகிறது.

இப்படி இந்த க்ரந்தத்திற்கு பரம்பரையாக மோக்ஷம் ப்ரயோஜனம் என்றருளிச் செய்தது கூடுமோ? கர்மபரவஶர்களான நமக்கு அது எப்படி ஸம்பவிக்கக்கூடும்? மேலும் கைங்கர்யம் புருஷார்த்தமாவதெப்படி? '**ஸவடும் வரவஸம் துஃவம்**' என்கிறபடியே அயலானுக்கு வஶப்பட்டிருக்கை துக்கமயமாகக் காணப்படுகிறதல்லவா? ஸ்வரூப ப்ராப்தமாகையினலே அது புருஷார்த்தமாகலாம், ஸம்பவிக்கவும்கூடுமென்னில் ஒருநாளும் இதற்கு முந்தி அநாதிகாலத்தில் நம்மால் அனுபவிக்கப்படாத பகவதனுபவ கைங்கர்யங்கள் ஸ்வரூப ப்ராப்தமென்றும், அதற்கு விருத்தமாக அநாதியாக அனுபவிக்கப்பட்டு வருகிற ப்ரக்ருதி ஸம்பந்தம் வந்தேறியென்றும் சொல்லுவது ஸங்கதமாகுமோ? ஆகையினல் மோக்ஷமாகிற ப்ரயோஜனம் ஸித்திப்பதற்காக இந்த க்ரந்தம் அநாரம்பணீயம், என்கிற ஶங்கைகளுக்கு ஸமாதானமாக, நம்மால் அனுபவிக்கப்படாதது ஸ்வாபாவிகமென்றும், அனுபவிக்கப்பட்டு வருவது ஔபாதிகமென்றும் நிரூபிப்பதற்கு ஶ்ருதி முதலிய ப்ரமாணங்கள் இருக்கிறதென்பதைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு அது ஸம்பாவிதமென்று மாத்திரம் காட்டுவதற்காக ஒரு ராஜ குமார வ்ருத்தாந்தத்தை த்ருஷ்டாந்தமாக அருளிச்செய்து இந்த ஶாஸ்திரம் ஆரம்பிக்க வேண்டுமென்றருளிச் செய்கிறபடியினல் இந்த அதிகாரத்திற்கு உபோத்காதாதிகாரமென்று பெயர். '**விஜாாம் ஹகூடிக ஸிஜ்யடிரா உவொஜாதம் விஷவடுயாஃ**' என்று ப்ரக்ருத கார்யம் ஸித்திப்பதற்காக விசாரிப்பது உபோத்காதம் என்று லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இந்த அதிகாரத்தில் விஸ்தாரமாக உபபாதிக்கப்போகிற அர்த்தத்தை

**கௌஸ்துப இவ மணிர் நித்யஹ்ருதயஸ்தோபி ஜீவः**
**கலுஷமதிரவிந்தந் கிங்கரஸாம்ராஜ்யம்।**
**விதிபரிணதிபேதாத் வீக்ஷிதஸ்தேந காலே**
**குருபரிஷதுபஜ்ஞம் ஸ்வம் ப்ராப்ய ஸாம்ராஜ்யதி ஸ்வம்॥**

---

ஸுலபமாக அறிவிப்பதற்காக ஒரு ஶ்லோகமருளிச் செய்கிறார்—'**கௌஸ்துப**' என்றாரம்பித்து.

ப-ரை] **ஜீவः** - ஜீவாத்மா, **கௌஸ்துப இவ** - கௌஸ்துப ரத்னம்போல, **நித்ய ஹ்ருதயஸ்தோபி**-எப்பொழுதும் ஹ்ருதயங்கமனாயிருந்தபோதிலும், **கலுஷமதிः** - கலங்கின புத்தியை யுடையவனாய்க்கொண்டு, **கிங்கர ஸாம்ராஜ்யம்** - கைங்கர்யமாகிற ஸாம்ராஜ்யத்தை, **அவிந்தந்** - அடையாமல், அதாவது அடையாதவனாயிருந்துகொண்டு, **காலே** - ஒரு காலவிஶேஷத்திலே, **விதி** - கர்மங்களினுடைய, **பரிணதி** - பரிபாகத்தின், **பேதாத்** - பேதத்தினால், **தேந**-அந்தப் பகவானால், **வீக்ஷிதः** - கடாக்ஷிக்கப்பட்டவனாய்க்கொண்டு, **குருபரிஷத்**- ஆசார்ய பரம்பரையை, **உபஜ்ஞம்** - முதற் காரணமாக உடைத்தாயிருக்கும்படி, **ஸ்வம்** - தன்னை, அதாவது தன் ஆத்ம ஸ்வரூபத்தை, **ப்ராப்ய** - அடைந்து, அதாவது அறிந்து, **ஸாம்ராஜ்யதி**-ரக்ஷிக்கிறான், அதாவது அந்த ஆதி ராஜ்யத்தை அடைகிறான் என்று தாத்பர்யம்.

இவ்விடத்தில் '**நித்ய ஹ்ருதயஸ்தோபி**' என்கிற வரையிலுள்ள பதங்களினால் இவன் நிர்மலனென்பதும், ஶ்ரிய:பதிக்கு அதிஶயத்தைச் செய்யக்கூடியவனென்பதும், இவைகள் ஸ்வாபாவிகங்களான ஆகாரங்கள் என்பதும் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன. இங்கு '**அபி**'ஶப்தத்தினால் ஆக்ஷேபம் த்யோதிதமாயிற்று. அதாவது இப்படிப்பட்ட ஸ்வபாவத்தை யுடையவனுக்கு துக்காதி ஸம்பந்தம் எப்படி ஏற்பட்டது என்று.'**கலுஷமதிः**' இத்யாதியினால் இப்பொழுது ஸம்ஸாரத்திலிருக்கும் இருப்பு ஔபாதிகம், அநாதியான அவித்யையின் திரோதானத்தினால் உண்டானது, என்கிற ஸமாதானம் சொல்லப்பட்டதாயிற்று. '**கிங்கர ஸாம்ராஜ்யம்**' என்பதினால் ஸுஜன ஸார்வபௌமனை பிதா

ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுக்கு ஶ்ரீகௌஸ்துப ஸ்தாநீயனாய்க்கொண்டு ஸ்வரூபஜ்ஞனாய் தாஸனென்றும், புத்ரனென்றும், ஶிஷ்யனென்றும், ஶேஷி

ஜீவாத்மாவின் ஸ்வரூப யோக்யதை.

---

வினிடத்தில் புத்திராதிகளுக்குப்போல ஸ்வரூபமானது கைங்கர்யம் என்பது த்யோதிதம். 'விதிவஶாதி ஜேஷாஸ'என்பதற்கு யாத்ருச்சிக ஸுக்ருதம் முதலிய ஆசார்ய ப்ராப்திக்குக் காரணங்களான கர்மங்களின் பரிபாகத்தினுலே என்று தாத்பர்யம். 'வீக்ஷித ஸத்வ நகாலே' என்பதற்கு ஜாயமாந தஶையில் ஸத்வ வ்ருத்திக்குக் காரணமான பகவத் கடாக்ஷத்திற்குப் பாத்ரபூதராய் என்று தாத்பர்யம். 'ஆசார்யவரிஷ்டாவஜ்ஞம்' என்பதற்கு ஆசார்ய கடாக்ஷத்தினுலே அர்த்த விஶேஷங்களைத்தெளிந்தாலல்லது மோக்ஷபர்யந்தமாகாது என்று ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தியில் இவர் தம்மாலேயே அருளிச்செய்யப்பட்ட வர்த்தம் விவக்ஷிதம். அதற்கு மூலமான ஶ்ருதியும் கண்டுகொள்வது. 'ஆசார்யவரிஷ்டாவஜ்ஞம் ஸ்வம்' என்பதற்கு ஆசார்யபரம்பரையை முதற்கொண்டு வருகிற பகவத் கைங்கர்யமாகிற தன்னுடைய புருஷார்த்தத்தை என்று ஸ்ரீ ஸாரஸங்க்ரஹத்தில் வ்யாக்யாதம். இந்த யோஜனையில் 'ஸ்வாஷ்யாரி நஃ காலயநம்' என்கிற ஸ்ரீ ஸ்தோத்ர ரத்ன ஶ்லோகமிங் கனுஸந்தேயம். 'மொவாயதி' என்பது மறுபடியும் விச்சேதமில்லாமலிருக்கும்படியைக் கணிசிக்கிறதாகவுமாம். [இத்தால் ஸ்வரூபப்ராப்தமானபுருஷார்த்தத்திற்கு ப்ரதிபந்தகம்அநாதியான அவித்யாதிகளின் ஸம்பந்தம். அதற்கு உத்தேஜகம் யாத்ருச்சிகஸுக்ருதாதிகளடியாக குரூபதேஶம் வரையிலாகவரும் பரிபாகங்கள். என்பது த்யோதிதமாயிற்று. ப்ரதிபந்தகமாவது தானிருக்கும்பொழுது கார்யமுண்டாகாமல் தடுத்துக்கொண்டிருப்பது. உத்தேஜகமாவது அப்படித் தடங்கலிருக்கும்பொழுதே அந்தத் தடங்கலின் ஶக்தியை அடக்கிக்கார்யத்தை உண்டாக்கக் கூடியது.]இப்படிஶ்லோகத்தில் ஸங்க்ரஹேண அருளிச்செய்த அர்த்தங்களை விஸ்தாரமாக அருளிச்செய்கிறுர்—'ஶ்ரிய:பதியான' என்றாரம்பித்து. 'ஶ்ரீ கௌஸ்துபஸ்தாநீயனாய்' என்பதற்குக் கௌஸ்துபம் ஜீவாத்மாக்களுக்கு அபிமானி தேவதை யென்று

**னென்றும், ஶேஷபூதனென்றும், தாஸபூதனெ
ன்றும், அவ்வோ ஶாஸ்த்ரங்களிலே ப்ரதிபந்நனாயிரு
க்கும் ஜீவாத்மா, இவன் தனக்கு வகுத்தஶேஷியாய்,
அயர்வறுமமரர்களதிபதியாய், உயர்வற வுயர் நல**

---

ப்ரஸித்தமாகையினால் அந்தக் கௌஸ்துபத்தினிடத்தில் பண்ணும் ப்ரீதிவிஶேஷத்தை அதினால் அபிமானிக்கப்படும் ஜீவர்களிடத்திலும் பண்ணுகிறான் என்று தாத்பர்யம். அந்தந்த ப்ரமாணங்களில் ஜீவாத்மாவைச் சொல்லும் விதங்களை நிர்தேஶித்தருளுகிறார்—**'க்ஷேத்ரஜ்ஞனென்றும்'** என்றாரம்பித்து. ப்ரமாணங்களாவன—**'அவிஜ்ஞாதா: க்ஷேத்ரஜ்ஞா:', 'மஹாபூதாத்மவேதநா:,' 'ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி மாம்' 'ப்ரேஷ்ய: ப்ரஸாதகாங்க்ஷ்ய:' 'ஶேஷோ ஹி பரமாத்மந:', 'தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே'**, இத்யாதிகள். **அவ்வோ ஶாஸ்த்ரங்களிலே** - அந்தந்த ஶாஸ்திரங்களில், **ப்ரதிபந்நனாயிருக்கும்** - அறியப்பட்டவனா யிருக்கிற. **'ஜீவாத்மா'** என்பது **'யதாவத்ப்ரகாஶஸஹிதனாய் நிற்க'** என்பதோடு அந்வயிக்கிறது. அன்றிக்கே **'ஜீவாத்மா ப்ரதிபந்நனாயிருக்கும்'** என்று ஒரு தனிவாக்யமாகவுமாம். ஜீவாத்மா என்பதற்கு மேல் அந்வயம் சொல்லும் பக்ஷத்தில் **'இவன் தனக்கு'** என்பதற்கு இப்படிப்பட்டவனான தனக்கு என்று முழுச்சொல்லாக அர்த்தம் சொல்லிக்கொள்ள வேண்டியது. முழுவாக்யம் என்கிற மற்றொரு பக்ஷத்தில் **'இவன், தனக்கு'** என்று பிரித்த பதமாய் அந்வயித்துக் கொள்ளவேண்டியது. அப்பொழுது **'இவன்'** என்பது **'இட்டுப் பிறந்து'** என்பதோடு அந்வயிக்கிறது. இவ்வளவால் பகவத் கைங்கர்யமாகிற புருஷார்த்தம் ஸ்வத: ப்ராப்தமென்பதற்கும், அது புருஷார்த்தமென்பதற்கும் காரணம் தெரிவிக்கப்பட்டதாகிறது. **வகுத்தஶேஷியாய்** - ஸ்வபாவத்திலேயே ப்ராப்தமான ஶேஷியாய். **அயர்வு** - அஜ்ஞானம், **அறும்** - அற்றவர்களான, அதாவது இல்லாதவர்களான, **அமரர்கள்** - நித்யஸூரிகளுக்கு, **அதிபதியாய்** - ஸ்வாமியாய், **உயர்வற** - இதர வஸ்துக்களுக்குத் தன்னைக்காட்டிலும் உத்கர்ஷ மில்லாமலிருக்கும்படி, **உயர்** - உயர்ந்துகொண்டிருக்கிற, **நலமுடையவனாய்** - கல்யாணகுணங்களை யுடையவனாய், இத்தால் ஸர்வஸ்மாத்பரன் என்றருளிச் செய்யப்பட்டதாயிற்று. இப்படி அவன்

முடையவனாய், நமக்கும் பூவின்மிசை நங்கைக்கு மின்பனாய், ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமானான ஸர்வேச்வரன் 'வைகுண்டே து பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: । ஆஸ்தே'

---

பரனாகில் நமக்குத்துர்லபனாகையால்புருஷார்த்தம் கிடைப்பதெப்படி என்கிற ஶங்கை உண்டாகாமைக்காக அவனுடைய ஸௌலப்யாதிகளை யருளிச்செய்கிறார்—'**நமக்கும்**' என்றாரம்பித்து. **நமக்கும்** - அத்யந்த நிக்ருஷ்டர்களான நமக்கும், **பூவின்மிசை** - புஷ்பத்தின்மேல் வஸிக்கிற, **நங்கைக்கும்**-குணங்களினால் பூர்ணையான பிராட்டிக்கும், **இன்பனாய்** - ஸ்நேகத்தைச் செய்பவனாய், **ஞாலத்தார் தமக்கும்** - பூமியிலிருக்கிறவர்களுக்கும், **வானத்தவர்க்கும்**-பரமபதத்திலிருக்கும் நித்ய முக்தர்களுக்கும், **பெருமானை**-ஸ்வாமியான, இந்த இரண்டு உதாஹரணங்களினால் நித்யமுக்தர்களுக்கு எப்படி ஸ்வாமியோ அதைப்போல நமக்கும் ஸ்வாமியாகையினால் அவர்களிடத்தில் ப்ரீதி செய்வதைப்போல நம்மிடத்திலும் ப்ரீதியுடையவன், ஆகையினால் நித்யமுக்தர்கள் கைங்கர்யம் செய்வதுபோல நாமும் கைங்கர்யம் செய்யவேண்டுவது ஸ்வபாவிகமென்பதும், அவன் எல்லாரிடத்திலும் ஸஹ்ருதயனாயிருக்கிறானென்பதும் தெரிவிக்கப்படுகிறது. அனுபவிக்கப்போகிற பலம் நிரதிஶய போக்யமாகையினால் அதை எல்லோரும் அபேக்ஷிக்கவேண்டும் என்று தெரிவிப்பதற்காக பலத்தின் ஸ்வரூபத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்—'**வைகுண்டே து**' என்றாரம்பித்து. **வைகுண்டே து** - வைகுண்டமென்று சொல்லப்படுகிற, **பரே லோகே** - உயர்ந்த லோகத்தில், **ஜகத்பதி:** - ஸர்வலோகத்திற்கும் பதியான பகவான், **ச்ரியா ஸார்த்தம்** - லக்ஷ்மியுடன், **ஆஸ்தே** - இருக்கிறார். **ஒண்** - அழகான, **தொடியாள்** - தோடாவை யுடையவளான, **திருமகளும்** - லக்ஷ்மியும், **நீயுமே நிலாநிற்ப** - நீயுமே நின்று கொண்டிருக்கும் பொழுது, 'நில்லா நிற்ப' என்பது 'நிலாநிற்ப' என்று மெலிந்து கிடக்கிறது. **தெளிவிசும்பு** - தெளிவைக் கொடுக்கிற விசும்பு, அதாவது ஜ்ஞான விகாஸத்தைக் கொடுக்கிற இடமாகிய பரம

என்றும், [1] 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப' என்றும் சொல்லுகிறபடியே பெரிய பிராட்டியாரோடேகூடத் தெளிவிசும்பிலே [2] 'யாயோத்⁴யேதி விஶ்ருதா நாகஸ்ய ப்ருஷ்டே ஸ்தி²தா' என்கிறபடியே அயோத்⁴யாதிஶப்³தவாச்யமான கலங்காப் பெரு நகரிலே ஸஹஸ்ரஸ்தூ²ணாதி³ வாக்யங்களாலே யோதப்படுகிற திருமாமணிமண்டபத்திலே களஷீதகீ

பதம்; அன்றிக்கே தெளிந்த விசும்பு-ஜ்ஞானஸ்வரூபமான ஆகாஶம் என்றர்த்தமாகவுமாம். அயோத்⁴யேதி - ஒருவராலும் எதிர்த்து யுத்தம் செய்ய முடியாததென்றும், அபராஜிதேதி-ஒருவராலும் ஜயிக்கமுடியாததென்றும், விஶ்ருதா - ப்ரஸித்தமாயிருக்கிற, யா - எந்தப் பட்டணம், நாகஸ்ய ப்ருஷ்டே-ஸ்வர்க்கலோகத்திற்கு மேல்பாகத்தில், ஸ்தி²தா - இருக்கிறதோ. 'விஶ்ருதா' என்றது ஶ்ருதியிலும் 'அயோத்⁴யை' என்றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறது என்பதை குறிக்கிறது. கலங்காப் பெரு நகரிலே - ஒருவிதக் கலக்கமுமில்லாத பெரிய பட்டணத்திலே. இத்தால் யுக்திகளினால் இந்த லோகங்களை உதாஹரணமாக்கிக்கொண்டந்த லோகமும் அநித்யம் என்பது முதலியது ஶ்ருதிகளுக்கு விரோதமாகையினால் ஸாதிக்கமுடியாது, ஆகையினால் அப்படிப்பட்ட நகர் ஸித்திக்கிறபடியினாலே கைங்கர்யாதிகளுக்கு விச்சேதமில்லை என்பது த்யோதிதம். 'ஸஹஸ்ரஸ்தூ²ணாதி³வாக்யங்களாலே' என்பதற்கு [3] 'ஆயிரம் தூண்களையுடையதாகவும், அதிக விஸ்தாரமானதாயும், உறுதியாயும், மிகவும் ப்ரகாஶமுமாகிய எந்த மண்டபத்தில் நித்யஸூரிகளுக்குத் தேவனான பகவான் இருக்கிறாரோ' என்றர்த்தமுள்ள வாக்யம் முதலியவைகளில் என்றர்த்தம். திருமாமணி மண்டபத்திலே - மிகவும் அழகு பொருந்திய ஶ்லாக்யங்களான ரத்னங்களினால் இழைக்கப்பட்ட மண்டபத்திலே, அன்றிக்கே 'திருமா' என்பது மண்டபத்திற்கே விஶேஷணமாகவுமாம். அப்பொழுது மிகவும் அழகுள்ளதும், விஸ்தாரமானதும், ரத்னங்களினால் இழைக்கப்

1. திருவாய்மொழி-4-9-10.
2. ஸ்ரீ குணரத்ந கோஶம்-23.　　3. தலவாகார உபநிஷத்.

ஹ்மணாதிகளிலேயோதப்படுகிற பர்யங்கவிஶேஷத்திலே [1] 'சென்றால் குடையாமிருந்தால் சிங்காதனமாம்' என்றும், [2] 'நிவாஸ ஶய்யாஸந' என்றும் சொல்லுகிறபடியே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களையும் ஸர்வவித ஶரீரங்களாலே பரிக்ரஹித்து, ஶேஷத்வமே தனக்கு நிரூபகமாகையாலே ஶேஷனென்றே திருநாமமாம்படியான திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளி மெத்தையிலே வானிளவரசாய்க்கொண்டுதான் வாழ்

---

பட்டதுமானமண்டபத்திலே என்றர்த்தம். 'கௌஷீதகிப்ராஹ்மண'மாவது [3]'அந்த முக்தனை ஜீவன் அளவிறந்த ப்ரகாஶத்தையுடைய ஸிம்ஹாஸனத்தைக்கிட்டுகிறான், அந்த ஸிம்ஹாஸனத்தில் பரமாத்மா இருக்கிறான்' என்றர்த்தமுள்ள வாக்யம் முதலியவை. **பர்யங்கவிஶேஷத்திலே**-ஸிம்ஹாஸனத்திலே, **சென்றால்**-நடந்தால், **குடையாம்** - குடையாகும், **இருந்தால்** - உட்கார்ந்துகொண்டால், **சிங்காதனமாம்** - ஸிம்ஹாஸனமாகும், **என்றும்** புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம் திருமாற்கரவு' என்று பூர்ணபாசுரம். ஶ்ரிய:பதிக்கு ஆதிஶேஷன் நிற்கும்போது பாதுகையாகவும், ஸமுத்திரத்தில் தெப்பமாகவும், மணிமயமான தீபமாகவும், அழகு பொருந்திய பட்டாகவும், ஶயனித்துக்கொள்ளும் பொழுது தலையணையாகவும் இருக்கும் என்றர்த்தம். 'நிவாஸ ஶய்யாஸந பாதுகாம்ஶுகோபதாந வர்ஷாதப வாரணாதிபி:। ஶரீரபேதைஸ்தவ ஶேஷதாம் கதை: யதோசிதம் ஶேஷ இதீர்யதே ஜநை:॥' என்று பூர்ணஶ்லோகம். **நிவாஸ**-இருப்பிடம், **ஶய்யா**-படுக்கை, **ஆஸநம்**-ஸிம்ஹாஸநம், பாதுகை, பீதாம்பரம், தலையணை, மழை வெய்யில் இவைகளைத்தடுக்கும் குடை, இவை முதலியவைகளாக மாறியிருக்கிற ஶரீரங்களைக்கொண்டு (பகவானுக்கு) கைங்கர்யம் செய்கிறபடியினால் அதற்குத்தக்கபடி ஜனங்களினால் ஶேஷனென்று சொல்லப்படுகிற என்றர்த்தம். **வானிளவரசாய்**-பரமபதத்திலிருக்கும்

---

1. முதல் திருவந்தாதி-53.
2. ஆள-ஸ்தோ-40. 3. கௌஷீதகீ-4-1-5.

கிற வாழ்வை ஸர்வாத்மாக்களுமநுபவித்து க்ருதார்த்தராகவேணுமென்று ஸுஹ்ருதயனாயிருக்கிற விருப்படியாக நித்யாநுபவம் பண்ணுகிற அந்தமில் பேரின்பத் தடியரான நித்யஸூரிகளோடொக்கத் தானும் ஸர்வவித கைங்கர்யத்துக்கு ஸ்வரூபயோக்யதையாலே யிட்டுப் பிறந்து வைத்து, அநாதிமா

---

யுவராஜாவாய். இங்கு 'இளவரசு' என்பதினால் யுவராஜா வ்ருத்த மந்திரிகளின் அபிமதப்படி ராஜ்யம் நடத்துவதைப்போல 'ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத் ததாநுஜாநந்தமுதாரவீக்ஷணை:' என்கிறபடியே ஸேநாபதியாழ்வான் முதலியவர்களின் அபிமதப்படி விபூதிகளை நடத்துகிறான் என்பது விவக்ஷிதம். அன்றிக்கே நித்யயுவாயிருக்கிற அவஸ்தை தெரிவிக்கப்பட்டதாகவுமாம். '**ஸுஹ்ருதய**'னாவது இவர்களுடைய நன்மையை விரும்பிக்கொண்டிருக்கிறவன். '**ஸர்வாத்மாக்களும்**' என்பதினால் நித்யமுக்தர்களுமுள்பட எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவாக அவன் ஸங்கல்பித்திருக்கிறபடியினால் அவர்களைப் போல இவனும் இட்டுப்பிறந்தவன் என்பது தெரிவிக்கப்படுகிறது. **அந்தமில்**-அளவில்லாத, அதாவது காலம், தேஶம், வஸ்துக்கள், இவைகளினால் அளவிடமுடியாத, **பேரின்பத்து** - பெரிய ஆநந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிற, **அடியரான** - தாஸர்களாகிய. இத்தால், இந்தப்பாட்டில் 'அடியரோடிருந்தமை' என்று ஆழ்வார் தாம் நித்யமுக்தர்களோடு ஸமமான அனுபவம் பெற்றமையை தனக்கு என்று நிர்தேஶியாமல் பொதுவாக அருளிச்செய்திருப்பதினால் ஸர்வாத்மாக்களும் நித்ய ஸூரிகளோடு துல்யமாகப் பகவத்கைங்கர்யம் செய்யயோக்யமானவர்கள் என்பது தெரிவிக்கப்படுகிறது. **ஒக்க**-ஸமமாக, **இட்டுப்பிறந்து வைத்து**-ஸ்வபாவத்தினாலேயே ப்ராப்தியுடையவனாக இருந்து 'இட்டுப்பிறக்கை'யாவது எப்படிப் புத்திரன் பிதாவினுடைய தனத்தை அடைவதற்குத்தான் பிறந்தபொழுதேயோக்யதை யுடையவனாகிறானோ அதைப்போலஜீவாத்மாக்களும் பகவத் கைங்கர்யத்திற்கு ஸ்வபாவத்திலேயே யோக்யர்களாயிருக்கை. **அநாதிமாயையாலே** - அநாதியான ப்ரக்ருதி

யெயாலே ஸுப்தனாய், [1] ‘அநேகஜந்ம ஸாஹஸ்ரீம்

ததப்ராப்திக்குக் காரணம்.

ஸம்ஸாரபதவீம் வ்ரஜந் | மோஹச்ரமம் ப்ரயாதோஸௌ வாஸநா ரேணுகுண்டித:||’ என்கிறபடியே ப்ரக்ருதி யாகிற பாழிலே விழுந்து, ஓடியோடிப்பல பிறப்பும்பிறந்து தட்டித்தாவற்று அழுக்கடைந்தொளியழிந்தபடியாலே, தத்வஹிதவிஷயமாய் யதாவஸ்

---

யினாலே, அதாவது ப்ரக்ருதியின் ஸம்பந்தத்தினாலே, ஸுப்தனாய் - தூங்கிக்கொண்டிருந்து, அதாவது மிகவும் சுருங்கின ஜ்ஞானத்தை யுடையவனாய், இத்தால் ப்ரளயதசை சொல்லப் படுகிறது. ‘அநேக ஜந்மஸாஹஸ்ரீம்’ இத்யாதி ஸ்ருஷ்டி தசையைச் சொல்லுகிறது. அதாவது அநாதிகாலமாய்த் தூங்கிக் கொண்டிருந்தமையினாலும், பிறகு விழித்தது பாலைவனத்திலே யாகையினாலும், பரம புருஷார்த்தத்தை அறிய ஹேது வில்லை என்று தாத்பர்யம். அநேகஜந்மஸாஹஸ்ரீம்- அனேகம் ஆயிரம் ஜன்மங்கள், ஸம்ஸாரபதவீம் - ஸம்ஸாரமார்க்கத்தில், வ்ரஜந் - ஓடிக்கொண்டிருந்து, வாஸநாரேணு குண்டித: கர்மவாஸனைகளாகிற புழுதியினால் பூசப்பட்டவனான, அஸௌ - இந்த ஜீவன், மோஹச்ரமம் - அஜ்ஞானம், ஸ்ரமம், இவைகளை, ப்ரயாத: - அடைந்தான். பாழிலே - தண்ணீரில்லாத பாலை வனத்திலே, ஒன்றுமில்லாத காட்டிலே என்றுமர்த்தமாகவுமாம், ஓடியோடி - நடுவில் விஸ்ரம ஸ்தானமில்லாமல், பலபிறப்பும்பிறந்து-அநேக ஜன்மங்களையுமடைந்து, தட்டி-தான் அடைய வேண்டிய புருஷார்த்தத்தை விட்டுத் தவறி, தாவற்று - ஓரிடத்திலும் இளைப்பாறும் இடமில்லாதவனாய். இத்தால் கீழ் உதாஹரிக்கப்பட்ட வசனத்தில் ‘மோஹச்ரமம் ப்ரயாத:’ என்கிற பதத்தின் தாத்பர்யம் தெரிவிக்கப்பட்டதாகிறது. அழுக்கடைந்து - வாஸனையாகிற அழுக்கினாலே பூசப்பட்டு, ஒளியழிந்து - தர்மபூத ஜ்ஞானத்தின் ப்ரகாஸமில்லாமல், அதாவது அதின் ப்ரகாஸம் குறைந்தபடியினாலே. இதினால் ‘வாஸநா ரேணுகுண்டித:’ என்பதின் அர்த்தம் விவக்ஷிதம். இங்கு

---

1. விஷ்ணு புராணம்-6-7-19.

**ப்ரகாஶரஹித**னாய் நிற்க; ஒரு **ராஜா ஸாந்த:புரத்**துடனே வேட்டைக்குச் சென்று விளையாட்டிலே **ஸ்தநந்தய**னவளவிலே **வாஸநை** யறிவதற்கு முன்பே வழிதப்பின **ராஜகுமார**ன் எடுத்தார் கையிற் பிள்ளையாய், ஏதேனுமொரு குறிச்சியிலேவளர அவன் தனக்கில்லாத **ஶபரஸ்வஜாதி**களை யேறிட்டுக்கொண்டு

---

‘ **ஒளி யழிகை** ’ யாவது தர்மபூத ஜ்ஞானத்திற்கு அந்தந்த வஸ்துக்களை யதாவத்தாக ப்ரகாஶம் செய்யும் தன்மை குறைந்திருக்கை. ‘ **ஸத்வஹிதவிஷயமாய்** ’ என்றது புருஷார்த்தத்திற்கும் உபலக்ஷணம். ‘ **ஸத்வ** ’ மாவது ஜீவாத்ம பரமாத்மாக்களின் ஸ்வரூபம். ‘ **ஹித** ’ மாவது ஸ்வரூபத்திற்குத் தகுந்த புருஷார்த்தத்தை அடைவதற்கு ஸாதனமான உபாயம். இவைகளைப் பற்றி என்றர்த்தம். **யதாவஸ்துப்ரகாஶரஹித**னாய் - உண்மையான ப்ரகாஶமில்லாதவனாய். இங்கு ‘ **ப்ரகாஶரஹித**னாய் ’ என்பது ‘ **வேற்றுருக்கொண்டு நிற்க** ’ என்பதோடு அந்வயிக்கிறது. ‘ **ப்ரகாஶரஹித**னாய் **நிற்க** ’ என்று பாடமானால் ப்ரகாஶமில்லாம லிருக்கிறபடியினாலே என்றர்த்தம். அந்வயம் முன்போலவே. ‘ ஒரு**ராஜா** ’ என்றாரம்பித்து த்ருஷ்டாந்தம். **ஸாந்த:புரத்**துடனே - அந்த: புரஜனங்களுடனே, **எடுத்தார் கையில் பிள்ளையாய்** - எவர்கள் எடுத்து வளர்த்தார்களோ அவர்களுக்கே பிள்ளையாய், இது அவித்யாதிகளுக்குப் பரவஶனாயிருப்பதற்கு த்ருஷ்டாந்தம். **குறிச்சி** - வேடுவச்சேரி, அன்றிக்கே குடிசையாகவுமாம். ‘ **அவன் தனக்கு** ’ என்று ஒரேபதம். அன்றிக்கே இப்படி வளருகிற தனக்கு என்று பிரித்தர்த்தம் சொல்லிக்கொள்ளவுமாம். **ஶபரஸ்வஜாதி**-வேடஜாதி. **ஏறிட்டுக்கொண்டு** - ஆரோபித்துக்கொண்டு. இது ஸாத்விக ஸஹவாஸாதி யோக்யதை இல்லாமைக்கும், தனக்கில்லாத தேஹத்தின் ஆகாரங்களானதேவத்வம், மனுஷ்யத்வம், இவைகளை ஆரோபித்துக்கொண்டதற்கும் த்ருஷ்டாந்தம். இப்படி இருந்தபோதிலும் ஸம்ஸர்க்கத்தினாலும் தன் ஸ்வபாவ ஸித்தமான குணங்கள் மாறாது என்பது ‘ **ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி * [illegible]** ’ என்கிற மஹாபாரத வசனத்தினாலும், ‘ **ப்ரக்ருதிஸ்த்வாம் நியோக்ஷ்யதி** ’ என்கிற ஸ்ரீகீதா ஶ்லோகத்

1 'ஶாதாவெ௱கா விதாவெ௱கோஊ தஸ௱ வ வக்ஷிண: அஹம்ஊ நிலிஶாநீத ஸ வா நீதொ மவாஶவெநெ:॥ அஹம் ஊநீநாம் வவநம்ஶ௱ணொஶி மவாஶநாநாம் ஸ வவஶ௱ணொதி॥ ஹூதூக்ஷஜெதஷ வதாவி ஶூஷம் ஸம்ஸமஜா ஷொஷமணா ஹவஂதி॥' என்கிறபடியே வேடுவச்சேரி

தினாலும், பரசுராம விஶ்வாமித்ர வ்ருத்தாந்தங்களினாலும் ஏற்படுகிறபடியினால், வேடுவச்சேரியில் வளர்ந்த ராஜகுமாரனுக்கு ராஜகுமாரனுக்கேற்கும் குணங்கள் வருமேயன்றி வேடர்களுக்குரிய குணவ்ருத்தங்கள் வாராதே என்கிற ஶங்கைக்குப் பரிஹார மருளிச்செய்கிறார்—'**ஶாதாவெ௱கா**' என்றாரம்பித்து. ஒரு ருஷிகுமாரன் வேடுவச்சேரியின் ஸமீபத்திலிருந்த மார்க்கமாகச் செல்லும்பொழுது அங்கு ஒரு மரத்திலிருந்த கிளி 'இதோ ஒரு ப்ராம்மணன் வருகிறான். அவனுடைய தனங்களை அபஹரித்து அவனையும் ஆயுதங்களால் சேதியுங்கள்' என்பது முதலாகச் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு பயந்து ஓடிக்கொண்டிருக்கும் பொழுது மற்றொரு மரத்தில் உட்கார்ந்திருந்த கிளி 'ப்ராம்மணோத்தமர் வருகிறார், அவருக்கு அர்க்ய பாத்யாதிகளை ஸமர்ப்பியுங்கோள்' என்றிவை முதலியது சொல்லுவதைக்கேட்டு மிகவும் விஸ்மிதனாக, அந்தக் கிளி கீழிறங்கிவந்து சொல்லும் வார்த்தை இங்கு உதாஹரிக்கப்பட்டிருக்கும் ஶ்லோகங்கள். **ஊ** - எனக்கும், **தஸ௱வவக்ஷிண:** - அந்தப் பக்ஷிக்கும், **ஶாதா** - தாயார், **ஏகா** - ஒருத்தி, **விதாவி** - தகப்பனாரும், **ஏக:** - ஒருவர், **அஹம்** - நான், **ஜஷிலி:** - ருஷிகளினால், **ஆநீத:** - கொண்டு போகப்பட்டேன், **ஸவ** - அந்தப் பக்ஷியும், **மவாஶவெநெ:** - மாடு முதலியவைகளைப் புஜிக்கிற வேடர்களினால், **ஆநீத:** - கொண்டு போகப்பட்டது, **அஹம்** - நான், **ஊநீநாம்** - ருஷிகளினுடைய, **வவ:** - வார்த்தையை, **ஶ௱ணொஶி** - கேட்கிறேன், **ஸ:** - அந்தப்பக்ஷி, **மவாஶநாநாம்** - மாம்ஸாதிகளைப் புஜிக்கிறவர்களுடைய, **வவ:** - வார்த்தையை, **ஶ௱ணொதி** - கேட்கிறது, **ஷொஷமணா:** - தோஷங்களும், குணங்களும், **ஸம்ஸமஜா:** - சேர்க்கையினா

1.

யில் கிளிபோல அவர்கள் பழக்கிவைத்த பாசுரமே தனக்குப் பாசுரமாய், அவர்களுக்குப் பிறந்தவர்களைப்போலேயவர்களூணும் வ்ருத்தியுமே தனக்கூணும் வ்ருத்தியுமாய், தன் பிறவிக்குரிய ஹோமங்களிலும் ஆசாரஸம்ஸ்காராதிகளிலும் புதிய துண்ணுதே, ராஜ ஹோமவிராஜங்களான ஜுகுப்ஸித விஷயங்களிலே தனக்குப் பேறுமிழவும் ஹர்ஷசோகங்களுமாய்,

---

லுண்டானவைகளாக, பவந்தி - ஆகின்றன, ஏதத் - இது, பகவதாபி - உம்மாலும், ப்ரத்யக்ஷம் - ப்ரத்யக்ஷமாக, த்ருஷ்டம் - பார்க்கப்பட்டது. இத்தால் 'ஆஹாரம் யாதி,' 'ஆஹாரஸாம் நிஷேவயா,' என்றிவை முதலியவைகள் ஸத்வரஜஸ் தமோ குணங்களை யனுஸரித்து புத்திஉண்டாகிறது என்பதைச் சொல்லுகிறபடியினுலும், பரசுராமாதி வ்ருத்தாந்தங்கள் சில சருபேதமாகிற ப்ரபலகாரணத்தினுல் உண்டானபடியினுலும் விரோதமில்லை என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. **பாசுரமே** - வார்த்தையே, **ஊண்**-ஆகாரம், **வ்ருத்தி**-நடவடிக்கை, இது நாஸ்திக வாதாதிகளுக்கும் தேஹபோஷண மாத்திர வ்யாபாரத்திற்கும் ஐஹிகமான புருஷார்த்த ப்ரவ்ருத்திக்கும் த்ருஷ்டாந்தம். **பிறவிக்குரிய** - தன் ஜாதிக்குத் தகுந்தவைகளான, **ஆசாரம்** - ராஜ்யத்தைக் காப்பாற்றுவது, ஸந்த்யாவந்தனம் முதலிய நித்ய கர்மாதிகள், **ஸம்ஸ்காரம்** - உபநயநம்முதலியவை. **புதிய துண்ணுதே** - ஸர்வகாலத்திலும் செய்யாமற் போனபோதிலும் மாதிரிக்காவது ஒருதடவைகூட இவைகளைச் செய்யாமல், **ஜுகுப்ஸித விஷயங்கள்** - கேவலம் பார்ப்பதினுலேயே அருவருப்பை உண்டாக்கக்கூடிய மது மாம்ஸாதிகள், **பேறு** - ப்ரயோஜனம், **இழவு** - நஷ்டம், '**ஹர்ஷசோகங்களும்**', என்பதினுல் கீழ்க்கூறிய ஜுகுப்ஸிதமான புருஷார்த்தம் கிடைக்கும்போது ஸந்தோஷம், அப்படிக் கிடைக்காவிடில் துக்கம், என்று கார்ய காரண பாவம் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்தினுடைய லாபாலாபங்களில் வரவேண்டிய ஹர்ஷ சோகங்கள் ஸ்வரூபவிருத்தமான ஜுகுப்ஸித விஷயத்தில் உண்டாயிற்று என்று தாத்பர்யம். அன்றிக்கே இவைகள் கிடைக்கும்

**ராஜகுமார**னென்று தன்பிறவியறிவார் சில **ஶிஷ்ட**ருண்டானாலு மவர்களுக்குக் கிட்டவொண்ணாத **அவஸ்தை**யுடையவனாய், இப்படி **ஹீநஜந ஸஹவாஸாத்யவஸ்தை**யோடே யாவஜ்ஜீவம் நடக்கில் **உத்தரஜந்ம**ங்களிலு மொரு **யோக்ய**தை பெற விரகில்லாதபடியாய்த் தட்டுப்பட்டு நிற்குமாப்போலே, இவனும் **தேஹாத்மாபிமாநாதி**களாலே தன்னுருக் கொடுத்து

---

பொழுது ஶோகமும், கிடைக்காதபொழுது ஹர்ஷமுமுண்டாக வேண்டியிருக்க அது மாறிவந்திருக்கிறது என்றர்த்தமாகவுமாம். **தன் பிறவியறிவார்**-தன்னுடைய பிறப்பை அறிந்தவர்கள். '**தன்னடி யறிவார்கள்**' என்றுபாடாந்தரமாய் 'இப்படி இவனுக்கு ஶபரத்வாதிகள் வந்தத்தற்குக் காரணத்தை யறிவார்கள்' என்று ஸ்ரீஸாரதீபிகை ஸ்ரீஸாரவிவரிணியில் வ்யாக்யாதம். **ஶிஷ்டர்**-தர்மிஷடர்கள், அதாவது அயலாருடைய நன்மையைக் கோறுகிறவர்கள் என்றர்த்தம். **கிட்டவொண்ணாத**-ஸமீபத்தில் வரமுடியாத, இத்தால் அவர்கள் தங்களுக்குத் தெரிந்தகாரணங்களைத் தெரிவிக்க அவகாஶமில்லை என்பது த்யோதிதம். இது இச்சேதனனுக்கு ஸாத்விக ஸம்பாஷணாதிகளுக்கு யோக்யதையில்லாமைக்கு நிதர்ஶநம். ஆகிலும் அல்பகாலத்தில் நிவ்ருத்திசெய்யக்கூடிய இந்த ஶபரத்வாத்யவஸ்தை யாவதாத்மபாவியா யனுபவிக்கக்கூடிய அவித்யாதி யுக்தனுயிருக்கு மவஸ்தைக்கு நிதர்ஶனமாக இருக்கக்கூடுமோ? என்கிற ஶங்கைவரில் இதுவும் பரிஹாரம் செய்யாவிடில் யாவதாத்மபாவியாய் அனுவர்த்திக்கக்கூடுமென்று ஸமாதானமருளிச்செய்கிறார்—'**இப்படி**' என்றாரம்பித்து. அதாவது அந்த ஶபர ஜன்மத்தில் செய்யப்படும் பாபங்களினால் அதைவிடத் தாழ்ந்த ஜன்மமே உண்டாகும் என்று திருவுள்ளம். **யோக்யதைபெற** - ராஜகுமாரனாவதற்குத் தகுந்த யோக்யதையடைய, **விரகில்லாதபடி** - உபாயம் ஒன்றுமில்லாமல், **தட்டுப்பட்டிருக்குமாப்போலே** - தனக்கு ப்ராப்தமான ராஜ்யாதிகளை இழந்து நிற்குமாப்போலே என்றர்த்தம். '**தேஹாத்மாபிமாந**'மாவது தேஹமே ஆத்மா என்கிற அபிமானம். '**ஆதி**' ஶப்தத்தினால் ஸ்வதந்திராத்ம ப்ரமம் குறிக்கப்

வேற்றுருக்கொண்டு நிற்க; அந்த ராஜகுமார னுடைய லக்ஷணாதிகளாலே ஜாதி விசேஷத்தை யறிவார் சில யாத்ருச்சிகர் ஒரு விரகாலே யிவனைமீட்கப் பெற்றபிமானிக்க விவனுக்கு வந்தேறியான ஜாத்யஜ்ஞா

ஸாத்விக ஸம்பாஷணம்.

---

படுகிறது. 'தன்னுருக்கொடுத்து வேற்றுருக்கொண்டு நிற்க' என்பதற்கு தனக்கு ஸ்வாபாவிகங்களான பகவச்சேஷத்வ ஜ்ஞாநந்த ஸ்வரூபத்வாதிகளை இழந்து, அதாவது அறிந்துகொள்ளாமல், தன்னைவிட வேறுபட்ட ஶரீரம் முதலியவைகளுடையதாகிய அசேதனத்வாத்யாகாரங்களை ஆரோபித்துக்கொண்டு நிற்க என்று தாத்பர்யம். இவ்வளவால் அநாதியாக அனுபவிக்கப்பட்ட ஆகாரம் ஸ்வாபாவிகமானதல்ல என்று அருளிச் செய்யப்பட்டதாயிற்று. இனி இந்தத் தசையிலிருக்கும்பொழுது இவனுக்குபதேஶாதிகள் நேர்ந்து இந்த ப்ரமம் நிவ்ருத்தியாய் இந்தவிபரீதவாஸனை இருக்கும்பொழுதே ஸ்வரூபப்ராப்தமான புருஷார்த்தங்களில் ருசியும் அதற்கனுகுணமான குணங்கள், நடவடிக்கைகள், முதலியவைகளும்உண்டாகலாமென்பதற்கு மிந்த ராஜகுமாரனையே த்ருஷ்டாந்தமாகக்கொண்டு நிரூபித்தருளுகிறார்—'அந்த' என்றாரம்பித்து. **லக்ஷணாதிகளாலே**-ராஜகுமாரனுக்குரியசின்னம் முதலியவைகளினாலே. **'யாத்ருச்சிக'**ராவது அயலாருடைய நன்மையையே ப்ரயோஜனமாக எண்ணுமவர்கள். இத்தால் ஸத்துக்கள் இவனுடைய துர்தசையைக்கண்டு ஸஹிக்கமுடியாமல் இவன் கேட்காமலிருக்கும் பொழுதே சில ஸாமாந்ய கர்த்தவ்யாம்ஶங்களை உபதேஶிக்கிறார்கள் என்பது தெரிவிக்கப்பட்டது. 'ஒருவிரகாலே' என்பதற்கு அவனுக்குத் தன்னுடைய வார்த்தையில் நம்பிக்கை உண்டாகும்படி தங்களுடைய ஸாமர்த்தியத்தினாலே செய்து வைப்பதினால் என்றர்த்தம். **மீட்கப்பெற்றபிமானிக்க** - இவனைக்குறிச்சியிலிருந்து தங்களுடைய அருகில்வரவழைக்கும்படியான ஸமயத்தை யடைந்து அப்பொழுது இவனிடத்தில் அபிமானத்தைச்செய்ய, **வந்தேறியான ஜாத்யஜ்ஞாநத்தை** - நடுவில்வந்து ஆரோபிதமான ஶபரத்வ ஜாதியையுடையவன் என்கிற ப்ரமத்தை, **வழி விலக்கி**-வேறு வழியில் விலக்கி, அதாவது இவனைவிட்டு நிவர்த்திப்பித்து, அன்றிக்கே வழியினாலே விலக்கி, அதாவது அதற்குசித மார்க்

ராஹிதாநத்தை வழிவிலக்கி, த்ருஷ்டாத்ருஷ்ட ஸம்ஸ்காராதிகளாலே உத்தரோத்தர ஹிதஸாதநோபாயங்களுக்கு யோக்யனாம்படி விரகுசெய்து, இவனுக்கு ஸ்வஜாத்யநுரூபமான குணவ்ருத்தங்களைத் தங்களுபதேஶாநுஷ்டாநங்களாலே குடிப்புகிரவிட்டு, இவனுக்கநேகதோஷதுஷ்டங்களான ஶபராதிஹேயக்ஷுத்ர விஷயங்களை யருவருப்பித்து, ராஜாதிஹேயங்களான

---

கத்தைக்காண்பித்து விலக்கி, 'த்ருஷ்டாத்ருஷ்ட ஸம்ஸ்காராதிகளாலே' என்கிற இடத்தில் 'த்ருஷ்ட ஸம்ஸ்கார'மாவது தேஹத்தை அலம்புவது முதலியது. 'அத்ருஷ்ட ஸம்ஸ்கார'மாவது உபநயநம் முதலியவை. 'ஆதி' ஶப்தம் மேலே சொல்லப்படுகிற உபதேஶாநுஷ்டானங்களைச் சேர்த்துக் கொள்ளுகிறது. **உத்தரோத்தர**-இனிமேல் வரப்போகிற, **ஹிதஸாதநோபாயங்களுக்கு** - ஸுகங்களுக்கும் அதன் உபாயங்களுக்கும், 'ஹித' மென்பது உத்க்ருஷ்ட ஸுகங்களையும், 'ஸாதநோபாய' என்பது அதற்குபாயமான அத்ருஷ்டார்த்தமான வைதிக கர்மங்களையும் குறிக்கிறது. 'உத்தரோத்தர' என்பது ராஜ்யஸுகம் முதலியதும் ஸ்வர்க்கம் முதலியதுமான த்ருஷ்டாத்ருஷ்ட ஸுகத்தைச் சொல்லுகிறது. **ஸ்வஜாத்யநுகுண**மான-க்ஷத்திரிய ஜாதிக்கனுகுணமான, '**குணங்க**'ளாவது - ஶாந்தி, ஸாமர்த்தியம், வீர்யம், முதலியவைகள். **உபதேஶாநுஷ்டாநங்க**ளினாலே-உபதேஶத்தினாலும் அனுஷ்டானத்தினாலும். இங்கு '**உபதேஶ**'மாவது இவனுக்கு ஹிதமான ஶாஸ்திரார்த்தங்களைத் தெரிவித்தல். '**அநுஷ்டாந**'மாவது இவன் இப்படிப்பட்ட நல்லதஶையை அடைய வேண்டுமென்று பகவத் ஸந்நிதியில் ப்ரார்த்திக்கை என்று ஸ்ரீஸாரப்ரகாஶிகையில் வ்யாக்யாதம். **குடிப்புகிர விட்டு**-புதிதாக இவனிடத்தில் ப்ரவேஶிக்கும்படிசெய்து. **அநேகதோஷதுஷ்டங்க ளான** - அநேக தோஷங்களோடு கூடினவைகளான, **ஶபராதிஹேய** - வேடர் முதலிய தாழ்ந்தவர்களுக்குப் போக்யமான, **க்ஷுத்ரவிஷய**ங்களை - அல்ப விஷயங்களை, **அருவருப்பித்து** - அவைகளில் ஜுகுப்ஸை உண்டாகும்படிசெய்து. இது அனேக காலம் போக்யமாக அனுபவித்துக் கொண்டிருந்த விஷயங்களி

**அதிஶயிதஸாராம்ஶங்களை** யாய்ந்தெடுக்கவல்ல வளவுடைமையை யுண்டாக்கி நிறுத்துமாப்போலே, இவ்வாத்மாவுக்குச் சில ஆசார்யர்கள் **பித்ராதிமுகேந** நோடித்து, [1] '**புமாந் ந தேவோ ந நரோ ந பஶுர் ந ச பாதப:| ஶரீராக்ருதிபேதாஸ்து பூபைதே கர்மயோநய:||**' என்கிறபடியே உருவியந்த விந்நிலைமையை யுணர்த்தி, அதுக்க**நுரூப**மான **ஸாரார்த்தசதுஷ்டயங்களிலே** **அந்வயிக்கலாம்படி** விரகு

---

லும் அவைகளின் தோஷங்களை நிரூபித்து ஹேயத்வ புத்தியை உண்டாக்கலாம் என்பதற்கு உதாஹரணம். **அதிஶயிதஸாராம்ஶங்களை** - உத்க்ருஷ்டமான ஸாரங்களை, **ஆய்ந்து** - ஸாராஸார விவேகம் செய்து, **எடுக்கவல்ல** - பரிக்ரஹிக்கக் கூடியதான, **அளவுடைமை**-ஜ்ஞானத்தை யுடைத்தாயிருக்கை, '**நிறுத்துமாப்போலே**' என்பது '**நிறுத்தினவளவிலே**' என்பதோடன்வயிக்கிறது. இவ்**வாத்மா**வுக்கு - கீழ்ச் சொல்லியபடி ஸ்வரூப ப்ராப்தமான ஆகாரத்தைவிட்டு ஔபாதிகமான ஆகாரத்திலீடுபட்டிருக்கிற ஜீவாத்மாவிற்கு, **பித்ராதிமுகேந** - பிதா முதலியவர்களாயிருந்து. '**முக**' ஶப்தம் மற்றைய ஹிதைஷிகளைக்குறிக்கிறது.. அன்றிக்கே தாங்களே நேரில் உபதேஶித்தால் அநாதரிக்குமென்று பிதா முதலியவர்கள் மூலமாக உபதேஶிக்கிறார்கள் என்றர்த்தமாகவுமாம். **நோடித்து**-சொல்லி. **புமாந்**-ஜீவாத்மா, **நதேவ:**-தேவதையுமல்ல, **ந நர:**-மனுஷ்யனுமல்ல, **நபஶு:** - பசுவுமல்ல, **ந ச பாதப:** - மரமுமல்ல, **பூப** - ஓ! ராஜாவே, **ஏதே** - இவைகள், **கர்மயோநய:** - கர்மங்களைக் காரணமாகவுடைய, **ஶரீராக்ருதிபேதா:** - ஶரீரத்திலுண்டான ஆகாரத்தின் வ்யத்யாஸங்கள். **உரு** - ரூபத்தையுடையதாகிய ஶரீரத்தைக்காட்டிலும், **வியந்த** - விலக்ஷணமான (வேறுபட்ட), **இந்நிலைமையை**- இப்படிப்பட்ட ஸ்திதியை, **உணர்த்தி**-அறிவித்து, **அதுக்கநுரூபமான**-தேஹத்தைவிட வேறுபட்ட ஆத்மாவிற்கு அநுகுணமான '**ஸாரார்த்தசது**

---

1. விஷ்ணுபுராணம்-2-13-98.

செய்து, உடம்புதின்றூர்படி யன்றிக்கே ஒரு வெளிச் சிறப்புடையார்க்கு வரும் **ஜ்ஞாவஸ**ந்தங்களை யுண்டாக்கி, **ஹேயோபாதேயவிஹாகக்ஷ**னுமாக்கி நிறுத்தின வளவிலே, இவனுடைய வடியுடைமையையும் சில

---

**வாயங்**களிலே - லோகாந்தரத்தில் உண்டாகும் புருஷார்த்தங்கள், அதை அடைவதற்குபாயங்கள் இவைகளில், '**ஸுநயிக்கலாம்படி விரகுசெய்து** - அந்வயிக்கக்கூடியதான உபாயத்தைச் செய்து. இத்தால் தேஹாதிரிக்தாத்ம ஜ்ஞானமில்லாதவன் லோகாந்தரத்தில் அநுபவிக்கக் கூடிய புருஷார்த்த ததுபாயங்களில் ஆசைப்படமாட்டான் என்பதேற்படுகிறது. **உடம்புதின்றூர்படி** - ஶரீரத்தினுலே தின்னப்பட்டவர்களின் ப்ரகாரம், அதாவது ஶரீரத்தைவிட வேறு ஆத்மா இல்லை என்று நினைக்கிறபடியினுல் ஶரீரத்தினுல் மறைக்கப்பட்ட ஆத்மாவோடு கூடிய தேஹாத்மாபிமானிகளின் ப்ரகாரம் என்றர்த்தம், **அன்றிக்கே** - அவர்களைப்போலல்லாமல், **ஒரு வெளிச்சிறப்பு** - ஒரு வெளிச்சத்தின் சிறப்பு, அதாவது ஜ்ஞான விகாஸம், அதை உடையவர்கள், அதாவது தேஹாதிரிக்த ஆத்ம ஜ்ஞான முடையவர்கள், '**ஹேயோபாதேயவிஹாகக்ஷ**னுமாக்கி – விடத்தகுந்தது, க்ரஹிக்கத் தகுந்தது, இவைகளைப் பிரித்தறியக்கூடிய யோக்யதை உடையவனுகச் செய்து. அநாதியான ப்ரதிபந்தகமாகிய அவித்யாதிகளும், அதற்கும் காரணமான பகவானுடைய லீலா ரஸத்திற்கு விஷயமாயிருக்குந் தன்மையும் அநுவர்த்தித்து கொண்டு நிற்க நடுவில் ஆசார்ய உபதேஶம் முதலிய உத்தேஜகம் உண்டாவது எப்படி ஸம்பவிக்கும்? என்கிற ஶங்கைக்குப் பரிஹாரமாக அநாதியான ஸம்ஸாரத்தில் பூர்வ பூர்வகர்மங்களின் விசித்ரமான பரிபாகத்தினுல் யாத்ருச்சிக ஸுக்ருதாதிகள் ஸம்பவித்து அதினுலே பகவானுடைய நிக்ரஹ ஸங்கல்பம் ஶாந்தமாகிறபடியினுலே உத்தேஜகம் ஸம்பவிக்கலாம் என்று ஸமாதான மருளிச் செய்கிறூர்-'**இவனுடைய**' என்றூரம்பித்து.**அடியுடைமையையும்**- காரணத்தையுடையவனுயிருக்கையையும், அதாவது ஸ்வாபாவிகமான ஶேஷத்வமும், பகவானுடைய ஸஹஜகாருண்யத்திற்கு விஷயமாயிருக்கையையும், சில **யாத்ருச்சிக**டியாகவந்த **யோக்யதை**

யாத்ருச்சிகாதியாக வந்த **யோக்யதை**யையும் அளவுடை
ஆசார்ய ப்ராப்தி. மையையும் நேராகக்கண்டு **பரம**
**காருணிக**னான **பரமசேஷி**யாலே **ப்ரேரிதராய்த்**
தாங்களும் **காருணிகோத்தமரா**யிருப்பார்சில**தேசிக**ர்
1 ‘**ஈச்வரஸ்ய ச ஸௌஹார்தம் யத்ருச்சாஸுக்ருதம் ததா |**
**விஷ்ணோ: கடாக்ஷமத்வேஷமாபிமுக்யஞ்ச ஸாத்விகை: ||**
**ஸம்பாஷணம் ஷடேதாநி ஹ்யாசார்யப்ராப்திஹேதவ: |**’
என்கிறபடியே நேர்பட்டு, அந்த **ராஜகுமார**னுக்குச்

---

**யையும்** - சில தார்மிகர்களின் உபதேசாதிகளைக் காரணமாகக் கொண்டுண்டானயோக்யதையையும், **யோக்யதை** - ஆஸ்திக்யம், சாஸ்திரவச்யதை முதலியவை, **அளவுடைமை**-ஹேயோபாதேய விவேகத்தை உடையவனாயிருக்கை, **நேராகக் கண்டு** - விசதமாக அறிந்து, அன்றிக்கே நேராகத் தாங்கள் இவன் விஷயத்தில் செய்யப்போகிற உபதேசங்களுக்கு யோக்யங்களாக அறிந்து, **பரமசேஷி**யாலே - தனக்குமேல் சேஷியில்லாமல் எல்லாருக்கும் சேஷியான பகவானாலே, **ப்ரேரிதராய்**-அந்தர்யாமியாயிருந்து நியமிக்கப்பட்டவராய், இருப்பார்-இருக்கிற, **தேசிகர்**-ஆசார்யர்கள், **ஈச்வரஸ்ய** - பகவானுடைய, **ஸௌஹார்தம்** - கருணை, **ததா** - அப்படியே, **யத்ருச்சாஸுக்ருதம்** - யாத்ருச்சிகமாக நேருகிற புண்யம், **விஷ்ணோ: கடாக்ஷம்** - பகவானுடைய கடாக்ஷம், **அத்வேஷம்** - பகவானிடத்தில் த்வேஷமில்லாமை, **ஆபிமுக்யம்** - பகவானிடத்தில் ப்ரீதியுடையவனாயிருக்கை, **ஸாத்விகை:**-ஸாத்விகர்களுடன், **ஸம்பாஷணம்**-ஸம்பாஷிப்பது, **ஏதாநி** - இந்த, **ஷட்** - ஆறும், **ஆசார்யப்ராப்திஹேதவ:** - ஆசார்யனை அடைவதற்குக் காரணங்கள். ‘என்கிறபடியே’ என்பதற்கு கீழ் உதாஹரிக்கப்பட்ட ப்ரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கும் வரிசையாக என்றர்த்தம். **நேர்பட்டு** - ப்ராப்தர்களாய். இப்படித் தத்வஜ்ஞான முண்டானால் அத்யுத்க்ருஷ்டமான பரமாத்ம ஸ்வரூபத்தையும் தன்னுடைய நிகர்ஷத்தையும் பார்த்துத் தான் அநர்ஹன் என்று நினைத்து அந்தப் புருஷார்த்தத்தில் ப்ரவ்ருத்திக்காமல் போகும்படி ஸம்ப

---

1.

சில ராஜகுமாரர் நேர்பட்டுப்பிறவியையுணர்த்தி மேலுள்ள **ப்ரியதமங்களையும் ஹிததமங்களையுந்**தெளிவித்தொரு விரகாலே அந்த **ராஜா**வுக்கும் **ராஜகுமார**னுக்கும் **பரஸ்பர ஸம்ஶ்லேஷாகாங்க்ஷையை யுத்தம்பி**

---

விக்குமே? என்கிற ஶங்கைக்குப் பரிஹாரமாக அந்த ராஜபுத்திரனையே த்ருஷ்டாந்தமாகக் கொண்டு புருஷார்த்தத்தின் ஆநந்த ரூபத்வத்தையும், அது ஸ்வத: ப்ராப்தம் என்பதையும் உணர்த்தி அதில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்கிறார்கள் என்று ஸமாதான மருளிச்செய்கிறார்—'அந்த' என்றாரம்பித்து. 'நேர்பட்டு' என்பது மேலே 'இவனுக்கும்' என்பதோடன்வயிக்கிறது. இங்கு 'நேர்பட்டு' என்கிறவரையில் கீழ் அருளிச் செய்ததற்கு 'சில **ராஜகுமார**ர் நேர்பட்டு' என்கிற வரையிலும் உதாஹரணம். 'பிறவியை யுணர்த்தி' இத்யாதி மேல்வரும் 'இவனுக்கும்' இத்யாதிக்கு உதாஹரணம். '**உத்தம்பி**க்குமாப்போலே' என்பதற்கு '**தஶஸஹஸ்ராவ்ருத்த்யவாய**ங்களிலே முயன்று' என்பதோடு அந்வயம். **பிறவியை யுணர்த்தி**-இவனுடைய ராஜகுமாரனாகிய பிறப்பைத் தெரிவித்து, இது அநர்ஹத்வஶங்கையை நிராகரிக்கிறது. **ப்ரியதமங்கள்**-யௌவராஜ்ய பட்டாபிஷேகம் முதலியவைகள். **ஹிததமங்கள்**-இப்படிப்பிதாவான ராஜாவைக் கிட்டுவதற்குபாயங்கள், **பரஸ்பர ஸம்ஶ்லேஷாகாங்க்ஷையை** - ஒருவர்க்கொருவர் அந்யோந்யம் சேரவேண்டுமென்கிற ஆசையை, அதாவது பிதாவிற்குப் பிள்ளையை அடையவேண்டுமென்கிற இச்சையையும், பிள்ளைக்குப்பிதாவைச் சேரவேண்டுமென்கிற இச்சையையும், **உத்தம்பிக்குமாப்போலே** - வ்ருத்தி செய்யுமாப்போலே. இத்தால் பிதாவிற்கும் புத்திரனுக்கும் ஒருவர்க்கொருவர் சேரவேண்டுமென்கிற ஆசை இதற்கு முன்பே இருக்க அதை ராஜாந்தரங்கர்கள் வ்ருத்தி செய்கிறாப்போலே பகவானுக்கு ஸர்வ ஜீவகோடிகளைக் குறித்தும் பொதுவாக இருக்கும் ஸஹஜ காருண்யம் இவனுடைய கர்மங்களினால் தடுக்கப்பட்டிருந்தபடியினாலும், இஜ் ஜீவாத்மாவிற்குத் தத்வஜ்ஞானம் உண்டாகும் ஸமயத்திலேயே பகவானை அடையவேண்டுமென்கிற ஆசை இருந்தபோதிலும் அது அநர்ஹதாநுஸந்தாநாதிகளிலே தடுக்கப்பட்டிருந்தமை

க்குமாப்போலே, இவனுக்கும் [1] '**நாயம் தேவோ ந மநுஷ்யோ வா ந திர்யக் ஸ்தாவரோபி வா। ஜ்ஞாநாநந்தமய: ஸ்வாத்மா ஶேஷோ ஹி பரமாத்மந:॥**' என்றும், [2] '**தாஸபூதா: ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:**' என்றும் **ப்ரமா**ணங்கள் சொல்லுகிறபடியே பொங்கோதஞ் சூழ்ந்தபுவனியும் விண்ணுலகுமங்காதுஞ் சோராமே யாள்கின்ற செங்கோலுடைய **ஸ்ரிய:பதி நாராயண**

---

யாலும், இவ்விரண்டு ப்ரதிபந்தங்களையும் நீக்கி பரஸ்பரா காங்க்ஷையை ஆசார்யர்கள் வ்ருத்தி செய்கிறார்கள் என்பது த்யோதிதம். இதை ப்ரக்ருதத்தில் விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார்—'**இவனுக்கும்**' என்றாரம்பித்து. **இவனுக்கும்** - இந்த ஜீவாத்மாவிற்கும். **அயம்** - இந்த ஜீவாத்மா, **நதேவ:** - தேவதையுமல்ல, **நமநுஷ்யோவா** - மனுஷ்யனுமல்ல, **நதிர்யக்** - திர்யக்குமல்ல, **நஸ்தாவரோபிவா** - ஸ்தாவரமுமல்ல, **ஸ்வாத்மா** - ஆத்மாவானவன், **ஜ்ஞாநாநந்தமய:** - ஜ்ஞானத்தையும் ஆநந்தத்தையும் ஸ்வரூபமாக வுடையவன், **பரமாத்மந:** - பரமாத்மாவிற்கு, **ஶேஷ:** - ஶேஷபூதன். முன்பேயே ஆத்மா தேஹத்தை விடவேறுபட்டிருக்கிறது என்கிற உபதேஶம் செய்யப்பட்டது அருளிச்செய்யப்பட்டிருப்பதினால் இங்குபரமாத்மாவிற்குச்ஶேஷபூதன் என்பதை உபதேஶிக்கிறார்கள் என்பதில் இந்த வசனத்தை உதாஹரித்தத்திற்குத் தாத்பர்யம். **ஸர்வே ஆத்மாந:** - எல்லா ஆத்மாக்களும், **ஸ்வத:** - ஸ்வபாவத்தினாலேயே, **பரமாத்மந:** - பரமாத்மாவிற்கு, **தாஸபூதா:** - தாஸர்கள், **பொங்கு** - வ்ருத்தி யடைந்துகொண்டிருக்கிற, **ஓதம்** - ஸமுத்திரத்தினால், **சூழ்ந்த** - சூழப்பட்ட, **புவனியும்** - பூமியும், இது லீலா விபூதிக்கு உபலக்ஷணம், **விண்ணுலகம்** - பரமாகாஶத்திலிருக்கும் லோகம், அதாவது நித்யவிபூதி, **அங்கு** - இந்த இரண்டுவித விபூதிகளுக்குள்ளே, **ஆதும்** - கொஞ்சமும், **சோராமே** - விட்டுப் போகாமல், **ஆள்கின்ற** - நியமித்துக்கொண்டிருக்கிற, **செங்கோலுடைய** - ஆஜ்ஞையையுடைய, '**செங்கோல்**' என்னும் பதத்தினால் அதினால் செய்யப்படும் ஆஜ்ஞை விவக்ஷி

---

1.

2. மந்திரராஜபதஸ்தோத்ரம்.

னுடனே குடல் துவக்கைத் தெளிவித்து, இவனுக்கு தத்த்வஹிதோபாயங்களிலே முயன்று, இவன் பெறுகிறபேறே தங்களுக்குப் பொன்னுலகையும் புவனி முழுதையு மாளுகையாக வுகந்து, அதடியாக வன்றீன்ற கன்றுக்கிரங்கிச் சுரக்கும் தேநுவைப்போலே யித்தேசிக ரிவ்வாத்மாவுக்கு அஜ்ஞாநஸம்ஶயவிபர்யயங்கள் தீரவேணுமென்றுமிகுதிகுறைவறச்சுரக்கும்பாசுரங்களைக்கொண்டு [1] 'தத்த்வேந யஸ்ய மஹிமார்ணவ'

---

தம். **குடல்துவக்கு** - ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட ஸம்பந்தம், **முயன்று** - அபிநிவேஶம் செய்து, அதாவது பரஸ்பர ஸம்ஶ்லேஷாகாங்க்ஷ வ்ருத்தி யடையும்படி ப்ரயத்தனம் செய்து, **இவன் பெறுகிற பேறே** - இவன் அடைகிற ப்ரயோஜனமே, **பொன்னுலகையும்** - நித்ய விபூதியையும், **புவனி முழுதையும்** - லீலா விபூதி முழுவதையும், **ஆளுகையாக**-ரக்ஷிப்பதாகிற புருஷார்த்தமென்று, **உகந்து** - ஸந்தோஷித்து, அதாவது இவன் புருஷார்த்தத்தை யடைவதையே தங்களுக்கு உபய விபூதியின் ஆளுகை கிடைத்தாப்போலே ஸந்தோஷித்து என்றர்த்தம். இத்தால் 'பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ' என்கிற திருவாய்மொழிப்பாட்டில் ஆசார்யர்களுக்கு உபயவிபூதியும் ப்ரத்யுபகாரமாகமாட்டாதாகையினால் கேவலம் க்ருபையினால் செய்ய வேண்டுமென்று ஆழ்வார் அருளிச்செய்திருப்பது த்யோதிதமாயிற்று. '**இருவரும் பெறுகிற**' என்று பாடாந்தரம். அப்பொழுது ஶேஷ ஶேஷிகளிருவரும் பெறுகிற என்றர்த்தம். **அதடியாக** - அப்படிப்பட்ட நிரதிஶய க்ருபாமூலமாக, **அன்றீன்றகன்றுக்கு** - அப்பொழுது பெறப்பட்டிருக்கும் கன்றுக்கு, இத்தால் ஆசார்யர்களின் வாத்ஸல்யம் சொல்லப்பட்டதாயிற்று. '**இத்தேசிகர்**' என்பது '**சுரக்கும்**' என்பதோடன்வயிக்கிறது. **அஜ்ஞாநம்** - அறியாமை, **ஸம்ஶயம்** - ஸந்தேஹம், **விபரீதம்** - தப்பான ஜ்ஞானம், **தீரவேணும்** - நஶிக்கவேண்டும், **என்று** - என்று நினைத்து, **மிகுதி**-வேண்டாத அம்ஶங்களின் விஸ்தாரம், **குறைவு** - வேண்டிய அம்ஶங்களின் சுருக்குதல், **அற** - இந்தத் தோஷங்கள் இல்லாமல், இத்தால் ஶ்ருதி ஸ்ம்ருதி

---

1. ஆள-ஸ்தோ-4.

**ஐதிஹ்யாதிகளிற்படியே ஈஶ்வரனுடையவும் ஈஶிதவ்யங்களுடையவும் ஸ்வரூபஸ்வபாவஸம்பந்தங்களும்,**

---

இதிஹாஸபுராணாதிகளும் மற்றப் பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களுமிருக்க அவைகளைக்கொண்டு வேண்டும் அம்ஶங்களைத் தெரிந்து கொள்ளலாமே? ஆகையினால் ஆசார்யோபதேஶத்தினாலேயே அறியவேண்டுமென்கிற நியமம் கூடுமோ? என்கிற ஶங்கை பரிஹரிக்கப்பட்டதாகிறது. எப்படி யென்னில்:—ஶ்ருதி ஸ்ம்ருத்யாதி க்ரந்தங்கள் மிகவும் விஸ்தாரங்களாகையினாலும், பூர்வாசார்ய க்ரந்தங்கள் மிகவும் சுருக்கமாகையினாலும், இவைகளையெல்லாம் அல்பஜ்ஞானமுடையவர்கள் அறிவது கூடாமையினாலே, சீக்கிரத்தில் தத்வஜ்ஞானத்தைஉண்டாக்கக்கூடிய ஆசார்யோபதேஶமே மிகவும் ஆதரணீயம்—என்று. அப்படியே ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிஶுத்தியில் '**ஸத்ஸம்ப்ரதாயரஹிதரான ஶாஸ்த்ர**த்தால் **அதிகம்யம் அக்ஷரம், ஸாக்ஷாந்**தானாகிலும் **உபயுக்த**மாகாது' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஆசார்யர்களினால் உபதேஶிக்கப்பட்ட ஸம்ப்ரதாய அர்த்தங்களை எளிதில் தெளிவிப்பதினால் இந்த க்ரந்தம் ஆரம்பணீயம் என்பது திருவுள்ளம். முமுக்ஷுவுக்கு இவ்வளவு அர்த்தங்கள் ஜ்ஞாதவ்யங்கள் என்பதற்கு ப்ரமாணம் காட்டியருளுகிறார்—'**தத்த்வேந யஃ**' என்றாரம்பித்து. '**தத்த்வேந யஶ்சிதசிதீஶ்வர தத்ஸ்வபாவ போகாபவர்க ததுபாயகதீருதாரஃ। ஸந்தர்ஶயந் நிரமிமீத புராணரத்நம் தஸ்மை நமோ முநிவராய பராஶராய ॥**' என்று பூர்ணஸ்லோகம். இந்த ஸ்லோகத்தின் அர்த்தத்தையே அனுவதிக்கிறார்—'**ஈஶ்வர**னுடையவும்' என்றாரம்பித்து. **ஈஶிதவ்யங்களினுடையவும்** - நியமிக்கப்படுமவைகளினுடையவும், அதாவது பகவானால் நியமிக்கப்படுகிற சேதனாசேதனங்களினுடையவும் என்று தாத்பர்யம். இத்தால் தத்வத்ரயங்களும் அருளிச்செய்யப்பட்டதாயிற்று. '**ஸ்வபாவ ஸம்பந்த**ங்களும்' என்பதினால் '**தத்ஸ்வபாவ**' என்கிற பதம் விவரிக்கப்பட்டது. '**ஸ்வரூப**'மாவது அந்தந்த வஸ்துக்களின் அஸாதாரணமான தர்மங்களினால் நிரூபிக்கப்படும் தர்மி. '**ஸ்வபாவ**'மாவது அப்படிப்பட்டவஸ்துவின் நிரூபிதஸ்வரூப விஶேஷ

**போகாபவர்க்க**ங்களும், **த்யாஜ்யோபாதேய**ங்களான விவற்றினுடைய வுபாயங்களும், இவற்றின் **கதி ப்ரகார**ங்களும், **உக்தாநுக்த**ங்களான **மோக்ஷ விரோதி** களுமாகிற இவ்**விஷய**ங்கள் **முமுக்ஷு**வான இவ் **வாத்மா**வுக்கு **ஜ்ஞாதவ்ய**ங்கள். இவ்**விஷய**ங்களெல்லாம்

---

ணங்கள். '**ஸம்பந்த**'மாவது ஈஶேஶிதவ்யங்களின் ஶரீராத்ம பாவாதிகள். இந்த ஶ்லோகத்தில் '**ஸ்வபாவ**' என்பதினால் ஸம்பந்தமும் உபலக்ஷிதம் என்று திருவுள்ளம். '**போக**' மாவது ஸ்வர்க்காதி ஐஶ்வர்யானுபவம். '**அபவர்க**'மாவது மோக்ஷம். '**த்யாஜ்யோபாதேய**ங்களான' என்பதினால் முமுக்ஷுவான இந்த அதிகாரிக்குப் போகங்களும் அவைகளின் உபாயங்களும் எதற்காக அறியவேண்டும் என்கிற ஶங்கை பரிஹரிக்கப்பட்டதாகிறது. அதாவது போகங்கள் த்யாஜ்யம் என்று தெரிந்துகொள்ளுவதற்காக அவைகளில் தோஷ தர்ஶனம் அவஶ்யம் செய்யவேண்டுமாகையினால் அவைகளும் அறியத்தக்கவைகள் என்று தாத்பர்யம். அப்படியே உபாயம் முதலியவைகளை அறிவதற்கும் ப்ரயோஜனம் அறியத்தக்கது. ஜ்ஞாதவ்யங்கள் என்று சொல்லப்படும் அர்த்த பஞ்சகங்களில் சேர்ந்த ப்ராப்தி விரோதி ஶ்லோகத்தில் ஸ்பஷ்டமாக அருளிச்செய்யப்படாமையினாலே, அவைகள் குறிக்கப்படுகின்றன என்கிற திருவுள்ளத்தினால் '**உக்தாநுக்த மோக்ஷவிரோதிகளும்**' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அன்றிக்கே இந்த ஶ்லோகத்தில் மோக்ஷவிரோதி என்றருளிச் செய்யப்படாவிட்டாலும் அசித், போகம், ததுபாயம், என்கிற சில விரோதிகள் அருளிச் செய்யப்பட்டிருப்பதினால் அவைகளையும், இங்கருளிச் செய்யப்படாத அவித்யாகர்மவாஸனாதிகளையும் சேர்த்து அபிப்ராயத்தில் கொண்டு '**உக்தாநுக்த**' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறதாகவுமாம். **உக்த** - சொல்லப்பட்ட, **அநுக்த** - சொல்லப்படாத. இப்படி ஸம்ப்ரதாய ஸாரார்த்தமான இவைகள் ஆசார்யோபதேஶத்தினாலே முமுக்ஷுவுக்கு அவஶ்யம் ஜ்ஞாதவ்யங்களானாலும் அவைகளைப்பற்றி ஸம்ப்ரதாயார்த்தஸாரம் என்றருளிச் செய்யாமல் ரஹஸ்யத்ரயஸாரம் என்கிற இந்த க்ரந்தம் ஆரம்பித்திருப்பது எப்படிப்பொருந்தும்? என்கிற

**அத்4யாத்மவிஷயஶப்3த3ராஶியில் ஸாரதமமான ரஹஸ்ய த்ரயத்திலே ஸ்தி2தங்கள் ஸாரோத்3தா4ரேண ஸங்க்3ரஹிக் கப்படுகிறது.**

---

ஶங்கைக்குப் பரிஹாரம் அருளிச்செய்கிறார்—'இவ்வர்த்தங்க ளெல்லாம்' என்றாரம்பித்து. இதற்குக் கீழ் நிரூபிக்கப்பட்ட அர்த்தங்களெல்லாம் என்று தாத்பர்யம். மற்ற ஶாஸ்திரங்கள் இவைகளை எல்லாம் பூர்ணமாகவும், விஶதமாகவும், ஸங்க்ரஹிக் காமையினால் அப்படி ப்ரதிபாதிக்கிற ரஹஸ்யத்ரயமும் அதின் வ்யாக்யான ரூபமான இந்த க்ரந்தமும் அவஶ்யம் ஆரம்பணீயம் என்று திருவுள்ளம். **அத்4யாத்மவிஷய** - ஜீவாத்ம பரமாத்மாக் களை நிரூபிக்கும், **ஶப்3த3ராஶியில்** - ஶப்தரூபமான ப்ரமாணங் களின் ஸமுதாயத்தில், **ஸாரதமமான** - மிகவும் ஸாரமான, **ரஹஸ்யத்ரயத்திலே** - திருமந்திரம், த்வயம், சரமஶ்லோகம் என்கிற மூன்று ரஹஸ்யங்களிலே '**ஸ்தி2தங்க**'ங்களாவன நம் ஸித்தாந்தத்திற்கே அஸாதாரணமான அர்த்தங்கள். அவை களில் '**ஸார**'மாவது ப்ரதானார்த்தங்கள். அவைகளின் '**உத்3தா4ர**'மாவது ஶப்த ஶக்தியினாலேயே சொல்லுவது. அதாவது நம் ஸித்தாந்தத்திற்கு அஸாதாரணமான அர்த்தங்களில் ஸார மான அர்த்தங்களை நேரில் பதங்களினாலேயே சொல்லுகிறது. இப்படித் தம்முடைய க்ரந்தத்திற்கு மூலமான ரஹஸ்ய த்ரயங் களும் அவை மூலமாக ஸம்ப்ரதாய ஸாரார்த்தங்களும் ப்ரதி பாத்யங்களாகையினால் இக்ரந்தம் ஆரம்பணீயம் என்று திரு வுள்ளம். இங்கு ராஜகுமாரனை த்ருஷ்டாந்தமாக நிரூபித்திருப் பதினால் ஸ்ரீ பாஷ்யத்தில் ஸமந்வயாதிகரண ஸித்தாந்தத்தில் '**யதா2 ச கஶ்சித் ராஜகுமாரோ பா3ல்யக்ரீடா3ஸக்தோ நரேந்த்3ர ப4வநாந்நிஷ்க்ராந்த: மார்கா3த் ப்ரணஷ்ட: இதி ராஜ்ஞா விஜ்ஞாத: ஸ்வயஞ்சாஜ்ஞாத பித்ருக: கேநசித் த்3விஜவர்யேண வர்தி4த: அதி4கத வேத3ஶாஸ்த்ர: ஷோட3ஶவர்ஷ: ஸர்வகல்யாண கு3ணாகர: திஷ்ட2ந் 'பிதா தே ஸர்வலோகாதி4பதி: கா3ம்பீ4ர்யௌ தா3ர்ய வாத்ஸல்ய ஸௌஶீல்ய ஶௌர்ய வீர்ய பராக்ரமாதி3 கு3ண ஸம்பந்ந: த்வாமேவ நஷ்டம் புத்ரம் தி3த்3ருக்ஷு: ப்ரதீக்ஷமாணஸ் திஷ்ட2தி' இதி கேநசித3பி4யுக்ததமேந அப்4யுக்தம் வாக்யம்**

திருவுடன் வந்த செழுமணி போற்றிரு மாலிதயம்
மருவிட மென்ன மலரடிசூடும் வகைபெறுநாம்
கருவுடன் வந்த கடுவினையாற்றில் விழுந்தொழுகா
தருவுடனைந் தறிவாரருள் செய்ய வமைந்தனரே.

---

ஶ்ருணோதி சேஹ ததா நீசைவ 'அஹம் தாவஜ் ஜீவத: ப்ராது:
ஶேஷ பிதா ச ஸர்வ ஸம்பத்ஸ்வாம்ய:' இதி நிரதிஶயஹர்ஷஸ்ய ஸம்வேத்தா பவதி। ராஜா ச ஸர்வஸ்வம் ஜீவந்நேவாராமதிஷ்டேநா ஹாரதிகம் விஹித ஸம்பூர்ணபோக்யம் புத்ரஸ்ய ஸ்வாதந்த்ர்யேண ப்ராப்த்யோக்யம் பவதி। ஸர்வாத்மநா ச ஸ்வயம் ததே। ஸர்வாத்மநா ஸம்பந்நேதச' என்றருளிச் செய்யப்பட்டிருப்பதின் தாத்பர்யம் விஸ்தாரமாக ப்ரதிபாதிக்கப்பட்டதாயிற்று.

இப்படிக்கீழ் அருளிச் செய்யப்பட்ட அர்த்தங்களை யெல்லாம் முமுக்ஷுவான ஆத்மா தான் அநுஸந்திக்கும் ப்ரகாரத்தை எளிதில் எல்லாரும் விஶதமாக அறியும்பொருட்டு தமிழ்ப்பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்—**'திருவுடன்'** என்றாரம்பித்து. **திருவுடன்** - லக்ஷ்மியுடன், **வந்த** - உண்டான, க்ஷீராப்தியில் என்று தாத்பர்யம், **செழு** - ஶ்லாக்யமான, **மணி போல்** - கௌஸ்துப ரத்னம் போல, **திருமாலிதயம்** - ஶ்ரிய:பதியினுடைய திருமார்பு, **மருவிடம்** - வஸிக்கும்படியான ஸ்தானம், **என்ன** - என்று சொல்லும்படி, **மலரடி**-புஷ்பம்போன்ற திருவடிகளை, **சூடும்** - ஶிரஸாவஹிக்கும், **வகைபெறு நாம்** - ப்ரகாரத்தை அடைந்திருக்கிற நாம், **கருவுடன் வந்த** - கர்ப்பத்தோடே வந்ததான, **கடு** - க்ரூரமான, **வினையாற்றில்** - கர்ம ப்ரவாஹத்திலே, **விழுந்து ஒழுகாது** - அந்த ப்ரவாஹத்தின் வழியிலேயே ஓடாமல், **அருவுடன்** - ஸூக்ஷ்மமான அர்த்தத்துடன், அதாவது ஶரீராத்மபாவ ஸம்பந்தத்துடன், **ஐந்து**-ஐந்தர்த்தங்களையும், அதாவது அர்த்த பஞ்சகங்களையும், **அறிவார்**-அறிந்த ஆசார்யர்கள், **அருள்செய்ய** - நமக்கு க்ருபை செய்ய, அதாவது இவ்வர்த்தங்களை உபதேஶிக்கும்படி க்ருபை செய்ய, **அமைந்தனரே** - அமைந்தார்கள்.

**'திருவுடன்வந்த'** என்பதினால் த்வயமாகிற கரண மந்திரத்தைக்கொண்டு பிராட்டியைப் புருஷகாரமாக்கிச் ஶரணமடைந்த

நாம், பிராட்டி பரிக்ரஹமாகையினல் ஶ்ரிய:பதிக்கு மிகவும் அபிமான பாத்ர பூதர்கள் என்பது த்யோதிதம். அதாவது பிராட்டியுடன்கூட உண்டானதென்று எந்தக் கௌஸ்துபம் பகவானல் திருமார்பில் தரிக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல பிராட்டியை முன்னிட்ட நம்மிடத்திலும் விஶேஷ க்ருபையைச் செய்வான் என்று தாத்பர்யம். 'மாதவனென்றதே கொண்டென்னை யினி யிப்பால்பட்டது யாதவங்களும் சேர்கொடேனென்றென்னுள்புகுந்திருந்து' இத்யாதி திருவாய்மொழிப் பாசுரம் இங்கனுஸந்தேயம். **'சேழுமணிபோல்'** என்பதினல் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனகையினல் ஶ்லாக்யமென்பது விவக்ஷிதம். இத்தால் கௌஸ்துபம் ஜீவாத்மாக்களின் அபிமானி தேவதையாகையினலே அதில் பண்ணும் ப்ரீதியை அதினல் அபிமந்தவ்யமான ஜீவாத்மாவினிடத்திலும் பண்ணுகிறன் என்பதேற்படுகிறது. **'திருமால்'** என்பதினல் பிராட்டி பரிக்ரஹமான நம்மிடத்தில் க்ருபை பண்ணுவதற்குக் காரணம் 'அல்லிமலர் மகள் போகமயக்குகளாகியும் நிற்குமம்மான்' என்றும், 'பித்தர் பனிமலர் மேல் பாவைக்கு', **'யஸ்யாவீக்ஷ்ய முகம் ததிங்கித வராயநோ விதேயோ பவேத்'** என்றும் சொல்லுகிறபடியே, பிராட்டியினிடத்திலுள்ள வ்யாமோஹாதிஶயம் என்பது தெரிவிக்கப்பட்டது. இத்தால் மறுக்கவொண்ணத புருஷகாரத்தின் விஶேஷம் த்யோதிதம். **'மலரடி சூடும்'** என்பதினல் அந்த ஶ்ரிய:பதியின் திருவடிகளின் போக்யதாதிஶயம் ஸூசிதம். இது ஸர்வ கைங்கர்யங்களுக்கும் உபலக்ஷணம். **'யாவந்ந சரணௌ ப்ராது: பார்திவ வ்யஞ்ஜநாந்விதௌ । ஶிரஸா தாரயிஷ்யாமி ந மே ஶாந்திர் பவிஷ்யதி ॥'** என்கிறபடியே ஸர்வ தாபங்களையும் நிவ்ருத்தி செய்யக்கூடியது அந்தத் திருவடிகள் என்று தாத்பர்யம். அன்றிக்கே, **மலர்** - புஷ்பங்களை, **அடி** - திருவடிகளிலே, **சூடும்**-சூட்டும், **வகை**-ப்ரகாரத்தை, என்றர்த்தமாகவுமாம். அதாவது திருவடிகளில் மலர்களை சூட்டும்படியான பாக்யத்தையுடைய என்றர்த்தமாகையினல் மற்றைய கைங்கர்யங்களும் உபலக்ஷிதங்கள். இத்தால் 'நாடாத மலர்நாடி நாடோறும் நாரணன் தன் வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று' என்கிற திருவாய்மொழிப் பாட்டின் அர்த்தமும், **'கிங்கரஸ்யாமி**

**ராஜ்யம்'** என்கிற பதத்தின் அர்த்தமும் ஸூசிதம். **'நரம்'** என்பதினால் ஸூரிகளைப்போலவே இந்த அம்ஸத்தில் யோக்யதையுடைய ஸகல ஆத்ம வர்க்கங்களும் சேர்த்துச் சொல்லப் படுகிறது. அன்றிக்கே இப்படிப்பட்ட யோக்யதையை தம்மிடத்தில் கண்டு தம்மையே பஹுமானித்துப் பேசுகிறாராகவுமாம். **'கருவுடன் வந்த'** என்பதற்கு கர்ப்பவாஸத்திற்குக் காரணமாயும் கார்யமாயும் இத்துடன் சேர்ந்து வந்த என்றர்த்தம். அன்றிக்கே அநாதியாக நம்முடன் சேர்ந்திருப்பதினால் நமக்குத் தெரியாதபடி சேர்ந்திருக்கிற என்றர்த்தம். **'கடு'** என்பதற்கு இப்படிப்பட்ட மஹா புருஷார்த்தத்தைத் தடுத்துக்கொண்டிருக்கிற என்றர்த்தம். அன்றிக்கே **'யஸ்ஸ்ஹஸ்ரு நியாதாநாஸவேவ்யநாஶ்யம்'** என்றும், 'நானே நானாவித நரகம் புகுபாவம் செய்தேன்' என்றும் சொல்லுகிறபடியே நம்மால் பரிஹரித்துக்கொள்ள முடியாமை அர்த்தமாகவுமாம். **'விழுந்தொழுகாது'** என்பதினால் இப்படி ஆசார்யர்கள் க்ருபை செய்யாவிடில் அந்தக் கர்ம பரம்பரைகளிலேயே ஸஞ்சரித்துக் கொண்டிருப்போம் என்பது விவக்ஷிதம். ஒருகாலத்திலும் அதிலிருந்து உத்தரணம் பிறவாது என்று தாத்பர்யம். **'அருவுடன்'** என்பது ஶரீராத்மபாவம் நம் ஸித்தாந்தத்திற்கு ப்ரதானம் என்பது மேலே அனேக காரணங்களைக்கொண்டு ஸ்தாபிக்கப்படப் போகிறதைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்தபடி. இது நம் ஸித்தாந்திகளைத் தவிர மற்றவர்களினால் அறியப்படாமையினால் **'அரு'** என்றருளிச் செய்தபடியாகவுமாம். **'அமைந்தனரே'** என்பதினால் அந்தத் தஶையில் அந்த ஆசார்யர்களுடைய உபதேஶமே நம்முடைய அஜ்ஞானாதிகளைப் போக்கடிப்பதற்குப் பர்யாப்தமானது, மற்றவைகள் அபர்யாப்தமானவை என்பது தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் ஈஶ்வரன் கர்மத்திற்குத்தகுந்தபடி பலன் கொடுப்பவனாகையினால் அநாதியாக இவ்வளவு காலத்திலும் உண்டாகாத ஆசார்ய ப்ராப்திக்குக்காரணமான கர்மங்களும், ஈஶ்வரானுக்ரஹமும் இப்பொழுது உண்டாயிற்றென்பது அஸங்கத மாகாதோ? அப்படி நிஷ்காரணமாக வுண்டாகும் பக்ஷத்தில் ஸர்வருக்கும் உண்டாக வேண்டாவோ என்னில்? இதற்கு ஸமாதானமாக

கர்மாவித்³யாதி³சக்ரே ப்ரதிபுருஷம்
இஹாநாதி³சித்ரப்ரவாஹே
தத்தத்காலே விபக்திர்ப⁴வதி ஹி
விவிதா⁴ ஸர்வஸித்³தா⁴ந்தஸித்³தா⁴ ।
தத்³த்³ருஷ்ட்யா ஸ்வாவகாஶப்ரத²மகு³ரோ:
க்ருபாக்³ருஹ்யப்ராண: க²லாதே³:
ஆசார்யப்ராப்தஸம்ப³ந்த⁴நியதவி
ப⁴விதா க்ருஷ்டிஸீமம் விமுக்தே: ॥

இதி ஶ்ரீகவிதார்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்³வேங்கடநாத²ஸ்ய வேதா³ந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஶ்ரீமத்³ரஹஸ்யத்ரயஸாரே

உபோத்³கா⁴தாதி⁴கார: ப்ரத²ம:

॥ ஶ்ரீமதே நிக³மாந்த மஹாதே³ஶிகாய நம: ॥

சீரார் தூப்புற்றிருவேங்கடமுடையான் திருவடிகளேஶரணம்.

---

கீழ் **‘ஆணிவார:’** என்கிறஸ்லோகத்தில் அருளிச் செய்யப்பட்ட அர்த்தத்தை விஶதமாக நிரூபித்துக் கொண்டு அதிகாரத்தைத் தலைக்கட்டுகிறார்—**‘கர்மாவித்³யாதி³’** என்றாரம்பித்து.

ப-ரை] **இஹ** - இந்த லோகத்தில், **ப்ரதிபுருஷம்** - ஒவ்வொரு புருஷன் தோறும், **அநாதி³சித்ரப்ரவாஹே** - அநாதியாயும், விசித்ரமாயுமிருக்கிற பரம்பரையை யுடைத்தான, **கர்ம** - புண்ய பாபரூபமான கர்மங்கள், **அவித்³யா** - தேஹமே ஆத்மா என்றிவை முதலிய ப்ரமமாகிற அஜ்ஞானம், **ஆதி³** - இவை முதலியவைகளாகிற, **சக்ரே** - சக்கரத்தில், இவைகள் சக்கரம்போல் சுழன்றுகொண்டு வருகிறபடியினாலே இவைகளே சக்கரமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன, **ஸர்வஸித்³தா⁴ந்தஸித்³தா⁴** - எல்லா ஸித்தாந்தங்களிலும் ஏற்பட்டதான, **தத்தத்காலே** - அந்தந்தக் காலங்களில், **விவிதா⁴** - அனேகம் விதமான, **விபக்தி:** - பரிபாகமானது, **ப⁴வதி ஹி** - வருகிறதல்லவா, **தத்-**

ஆகையினுல், **ஶ்ரீ** - அடையப்பட்ட, **ஸ்ரீ** -தனக்கு, **அவகாஶ-** இடத்தை உடைத்தான, **ப்ரதமாசார்ய** - ப்ரதமாசார்யனுன பகவானுடைய, **க்ருபா** - க்ருபையினுல், **ப்ரஹ்மரண:** - பிடிக்கப்பட்டிருக்கிற,அதாவது விஷயமாக்கப்பட்டிருக்கிற, **கஶ்சித்-** ஒரு, **விபஶ்சித்** - ஜ்ஞாநீ, **இத்தம்** - இந்தமாதிரி, **ஐஶ்வர்ய முக்தஸம்பந்நிரவதி** - முக்தர்களுடைய ஐஶ்வர்யம் வரையில் உண்டாகிற ஸம்பத்துக்களுக்கு இருப்பிடமாகவும், **கதா சித்**-ஒரு ஸமயத்தில், **பவிதா** - ஆவான்.

இங்கு '**கர்மாவித்யாதி சக்ரே**' என்பதினுல் கர்மம், அவித்யை, வாஸனை, ருசி, ப்ரக்ருதி ஸம்பந்தம், இவைகள் ஒன்றுக்கொன்று கார்யமாகவும் காரணமாகவும் இடைவிடாமல் சுழன்றுகொண்டு வருகின்றன என்பது தெரிவிக்கப்படுகிறது. '**ப்ரதிவாராஷம்**' இத்யாதியால் ஒருவனுக்கிருப்பதைப்போல மற்ருெருவனுக்கு உண்டாகிறதில்லையாகையினுல் ஒருவனுக்கு உண்டாகாதது மற்ருெருவனுக்கு உண்டாகலாம் என்கிற பரிஹாரம் அருளிச் செய்யப்பட்டதாகிறது. '**அநாதி**' என்பதினுல் இன்ன காரணத்தினுல் உண்டானதென்று சொல்ல முடியாது என்பது விவக்ஷிதம். '**விசித்ரப்ரவாஹே**' என்பதினுல் இன்ன காலத்தில் இன்ன ஸுக்ருதம் பலிக்கும் என்றூஹித்தறிய முடியாது என்பது விவக்ஷிதம். '**ப்ரவாஹ**'மாவது நதியில் வெள்ளம் ஓடுவதைப்போல ஒரே கர்மமில்லாவிட்டாலும் அதைப்போன்ற கர்மங்கள் ஒன்றின்பின் ஒன்ருய் விடாமல் வந்துகொண்டேயிருப்பது. '**தத்தத்தக்ஷணே**' என்பதினுல் அந்தந்தக் கர்மங்களுக்குப் பலபரிபாககாலம் பகவானுல் ப்ரதி நியதமானது என்பது த்யோதிதம். '**விவிதா ஸவதிஷு**' என்பதற்கு ஒவ்வொரு கர்மங்களே அந்தந்த அதிகாரிக்குத் தக்கபடி அனேகம் விதங்களான பரிபாகங்களை யடைகின்றன என்பது லோகந்யாயத்தினுல் ஏற்பட்டிருப்பதுபோல என்று தாத்பர்யம். அதாவது ஒரு குற்றமே குற்றவாளியின் வயது,ஶக்தி, நடவடிக்கை, முதலிய வ்யத்யாஸங்களினுல் அனேக விதமான ஶிக்ஷைகளுக்குக் காரணமாயிருப்பதை கண்டிருக்கிருேமல்லவா என்று திருவுள்ளம்.

'**ஸவ்ரு ஸிஞாங ஸிஞா**' என்பதற்கு இப்படியே ஸித்தாந்திகள் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியது அவஶ்யம். அப்படிக்கில்லாவிடில் அவரவர்கள் ஸித்தாந்தங்களில் சொல்லப்படும் மோக்ஷங்களும் ததுபாயங்களும் இவ்வளவு காலமில்லாமல் இப்பொழுது உண்டாவதற்கும், சிலருக்கு இல்லாமல் சிலருக்கு உண்டாவதற்கும் காரணம் சொல்ல வழியில்லை என்று தாத்பர்யம். இங்கு '**ஸிஞா**' என்பதற்கு ஸித்த ப்ராயம் என்றர்த்தம். அதாவது பரலோகமென்றொன்றை ஒப்புக்கொள்ளாத சார்வாகனும் அவனால் மோக்ஷமென்று சொல்லப்படுமதைச் சிலரே அநுபவிப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் கர்மம் என்றே சொல்லித்தீரவேண்டுமாகையினால் அவனும் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது என்று திருவுள்ளம். '**ஞுஷ்வஹாவகாஶ**' இத்யாதிக்கு பகவானுடைய க்ருபை எல்லாச் சேதனர்களையும் உஜ்ஜீவிக்கச்செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் இருந்தபோதிலும் அநாதியான கர்மமாகிற சக்கரம் சுழன்றுகொண்டு வந்ததினால் அவகாஶம் ஏற்படாமலிருந்து, ஒரு ஸுக்ருத பரிணாம காலத்தில் கொஞ்சம் அவகாஶம் ஏற்பட அதின் வழியாக விஷயீகரித்தது என்று தாத்பர்யம். அதாவது அநாதியான பகவந் நிக்ரஹ ஸங்கல்பத்தை யாத்ருச்சிக ஸுக்ருதாதிகள் விலக்க பகவானுடைய ஸஹஜ காருண்யத்தினால் விஷயீகரிக்கப்படுகிறான் என்று திருவுள்ளம். '**யிஞ்: கஷஹகஷு நா விஷவேஜதிமீஶா உயா வஸிஜ ஹணகளதுக வ்ருயிச வாஶவஶ்ய்: வ்ருஹு: । வ்ஸஷீதவஸொஉ஧ெ வ்ஸுக்ஷதஷக்ஷணெ கஜ்ஞுவிஸவுணக்ஷதஷிவிக்ஷஃஉவநிவாதிந: வாதிந:॥**' என்று ஸ்ரீ ஸங்கல்ப ஸுர்யோதயத்தில் இவர் தம்மாலேயே யருளிச் செய்யப்பட்டிருப்பது இங்கு அநுஸந்தேயம். '**கஷா விஸ**' என்பதற்கு அந்த ஸுக்ருதாதி பரிணாம விஶேஷத்திற்கு இதுகாலம் என்றறிய முடியாதாகையினால் எப்பொழுதாவது ஒரு ஸமயத்தில் என்றர்த்தம். '**ஶுெகவஶய்ராஞ ஸம்வந்யிரவி**' என்கிற இடத்தில் '**ஸுஷி**' என்பது விரோதத்தைக் காட்டுகிறது. அதாவது '**யிமஶுவி஫வி நீசம்**' என்கிற ஸ்ரீ ஸ்தோத்ரரத்ந ஶ்லோகத்தின்படியே அத்யந்த நிஹீனரான

நமக்கும் மனதினுல்கூட எண்ணமுடியாத மோக்ஷ ஸாம்ராஜ்ய மும் கிடைக்கலாம் என்று தாத்பர்யம். '**ஐத்ஃம்**' என்பது லோகத்தில் அனுபவிக்கப்படுகிற கர்மபரிபாகவிஶேஷத்தை உதாஹரண மாகக் காட்டுகிறது. அதாவது இதற்குமுன் இல்லாதவைகளும் நமக்கு அத்யந்தம் அஸம்பாவிதங்களுமான ஸுகதுக்காதிகள் நாம் நினைக்காதிருக்கச் செய்தே கர்மபரிபாகத்தினுல் கிடைப்பதை இந்த லோகத்தில் ப்ரத்யக்ஷத்தில் கண்டறிந் திருக்கிருப் போலவே என்று தாத்பர்யம். அன்றிக்கே '**ஐத்ஃம்விவஸ்ரீக**' என்றந்வயமாய் கீழ் நிரூபித்தபடியே ஆசார்யகடாக்ஷத்தைப் பெற்று ஹேயோபாதேய விவேக முடையவனுன ஒருவன் என்றர்த்தமாகவுமாம். அப்பொழுது '**ஐத்ஃம்**' என்பதற்குக் கீழ்ச் சொல்லியபடி என்றர்த்தம். '**க்ஷவி**' என்பது . மற்ற ஸாம்ஸாரிக பலங்களேயும் சேர்த்துச் சொல்லுகிறது. அது த்ருஷ்டாந்தார்த்தம். அந்தந்தக் கர்மபரிபாகங்களினுல் ஸாம்ஸாரிக பலங்களே யனுபவிப்பது போல மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் அனுபவிப்பான் என்று திருவுள்ளம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்
**ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமிகளினுல்**
செய்யப்பட்ட

**ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார வ்யாக்யானத்தில்**
**உபோத்காதாதிகாரம்**
**முற்றிற்று.**

|| ஶ்ரீ: ||

|| ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ||

# ஸார நிஷ்கர்ஷாதிகாரம்.

[ரஹஸ்யத்ரயங்களின் உபயோக விஶேஷம்—மோக்ஷ ததுபாயங்களில் ஶப்தமே ப்ரமாணம்—அதில் ஸாரதமாம்ஶம் உபாதேயம்—ரஹஸ்யத்ரயமே மிகவும் உபாதேயம்.]

**ஶ்ருதிபதவிபரீதம் க்ஷ்வேளகல்பம் ஶ்ருதௌ ச**
**ப்ரக்ருதிபுருஷபோகப்ராபகாம்ஶோ ந பத்ய: |**
**ததிஹ விபுதகுப்தம் ஸாரதோ க்ருஹ்ணதா விந்த்வ**
**த்ரய்யவநிஷதஸ்ரதாப்யுபேதம் ஸாரஸாரம் ப்ரபந்நா: ||**

---

|| ஶ்ரீ: ||

|| ஶ்ரீமதே ஶ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேஶிகாய நம: ||

இப்படி ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களை விசாரிக்கும் ஶாஸ்திரம் ஆரம்பணீயம் என்று ஸித்தித்தாலும், ரஹஸ்யத்ரய வ்யாக்யான ரூபமான இந்த க்ரந்தம் ஆரம்பணீயம் என்பது எப்படிப் பொருந்தும்? வ்யாபக மந்திரங்களாகிய வேறு மந்திரங்களும் உபநிஷத்துக்களும் ஸம்ப்ரதாயார்த்தங்களை ப்ரதிபாதிக்கிறபடியினாலே அவைகளைவிட்டு ரஹஸ்யத்ரயங்களை மாத்திரம் பரிக்ரஹிக்கைக்கு நியாமகமென்ன? உபநிஷதாதிகளும் ஸாரதமமாகையினால் '**அத்யாத்மவிஷய ஶாஸ்த்ரராஶி**யில் **ஸாரதம**மான **ரஹஸ்யத்ரய**த்திலே' என்று கீழ் அருளிச் செய்தது ஸங்கதமாகுமோ என்னில்? அதற்கு ஸமாதானம் இந்த அதிகாரத்தில் அருளிச் செய்யப்போகிறவராய் அந்த அர்த்தங்களை யெல்லாம் ஸங்க்ரஹித்து ஒரு ஶ்லோக ரூபமாயருளிச் செய்கிறார்—'**ஶ்ருதிபதவிபரீதம்**' என்றாரம்பித்து.

ப - ரை] **ஶ்ருதிபதவிபரீதம்** - வேதத்தில் சொல்லப்படுகிற மார்க்கத்திற்கு விருத்தமான வழி, **க்ஷ்வேளகல்பம்** - விஷத்திற்கு ஸமானம், **ஶ்ருதௌ ச**-வேதத்திலும், **ப்ரக்ருதி**-ப்ரக்ருதி

யினுடையவும், வ ூ ூஷ - ஜீவாத்மாவினுடையவும், ஹொ - அனுபவங்களே, ஹ்ராவகாமஸ: - அடைவதற்குக் காரணமான பாகம், அதாவது அடைவதற்கு உபாயங்களை ப்ரதிபாதிக்கிற பாகம், ந வயூ:-பத்யமானதல்ல, அதாவது நீடித்த ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதல்ல, தக - ஆகையினால், ஐஹ- இந்த லோகத்தில், விவ ூய - பண்டிதர்களினாலே, அல்லது தேவதைகளினாலே, ஶ ூவும் - ரக்ஷிக்கப்பட்ட, உவ நிஷஷ ரு தாவெயூ: - உபநிஷத்தாகிற அம்ருத ஸமுத்திரத்தினுடைய, உத்தமம் ஸாரம் - உத்தமமான ஸாராம்ஸத்தை, ஃரதூ ஹீ தா:- ஸம்ஸாரத்திலிருந்து பயந்தவர்களான, அல்லது மரணத்திலிருந்து பயந்தவர்களான, ஸூயூா: - விவேகிகள், விவிநுஷி - ஸம்பாதிக்கிறார்கள், அதாவது ப்ரயத்தனப்பட்டு சேர்க்கிறார்கள் என்றர்த்தம்.

‘ கெஷுஹுகஷூ ’ என்பதினால் அனுபவிக்கும் பொழுதும் ஸுகமானதல்ல, பிற்பாடும் அநர்த்தத்திற்குக் காரணமானது என்பது தெரிவிக்கப்படுகிறது. ‘ ஶ ூதளவ ’ என்கிற இடத்தில் ‘ வ ’ என்பது ‘ கவி ’ என்பதின் அர்த்தத்தைச் சொல்லுவதாய்க் கொண்டு விரோதத்தைக் காட்டுகிறது. அதாவது ‘ஈநாதி நியநாவிஹீஷ ஸம்ஹூஷாய தயாz ஸம்ஹாவூாந ஷொஷமாஸம் (அநாதியாக இடைவிடாமல் வந்து கொண்டிருப்பதனால் தோஷம் உண்டாவதற்கு ஸம்பாவனையே இல்லாத)’ என்று சொல்லப்பட்டிருக்கும் ஶ்ருதியிலும் ‘ யாவாநயூ உஷவாநெ ஸவடூதஃ ஸம்ஸூ ூதொஷகெ । தாவாநு ஸவெடுஷ ூ வெஷெஷ ூ ஸாஹ்மணஸ்ய விஜாநதஃ ।’ என்று ஸ்ரீ கீதையில் அருளிச் செய்திருக்கிறபடியே முமுக்ஷுவிற்கு அநுபாதேயமான அம்ஸங்கள் இருக்கின்றன என்று தாத்பர்யம். ‘ ஹுகூதி ஹொஶ ’மாவது ஸ்வர்க்காதி ஸுகானுபவம். ‘ வ ூ ூஷஹொஶ ’மாவது கைவல்யானுபவம். ‘ ஹ்ராவகாமஸ: ’ என்பதற்கு அவைகளின் ஸ்வரூபங்களையும், அவைகளின் உபாயங்களையும் சொல்லுகிற பாகம் என்று தாத்பர்யம். ‘ ந வயூ: ’ என்பதற்கு அவைகள் அந்தந்தக் காலங்களில் ஸுகமாகத்

தோற்றினபோதிலும், புனர் ஜன்மாதிகளுக்குக் காரணமாகையி னுல் பின்னுல் ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளல்ல என்று தாத்பர்யம். 'தஸ' என்பது கீழ்ச் சொல்லியவைகள் காரணம் என்பதைத் தெரிவிக்கிறது. 'விபூயமாலம்' என்பதற்கு ப்ரஸித்தமான அம்ருதம் தேவதைகளினுல் ரக்ஷிக்கப்பட்டிருக் கிறது, இந்த அம்ருதம் 'வ...ஸம்ரக்ஷிதா' என்கிறபடியே ஸ்ரீமந் நாதமுனிகள் முதலாக ஸ்ரீ அப்புள்ளார் வரையிலான ஆசார்யர்களினுல் ரக்ஷிக்கப்பட்டது என்று தாத்பர்யம். இதினுல் ரஹஸ்ய த்ரயங்களுக்கு விபஸ்சித்தமர்க ளான பூர்வாசார்யர்களின் பரிக்ரஹ விஸேஷமாகிய மேன்மை சொல்லப்பட்டதாகிறது. இங்கு '...ஸம் ...ஸாரம்', 'யதிவரனுர் மடைப்பள்ளி வந்தமணம்' இத்யாதி விவக்ஷிதம். '...' என்பதற்கு ஸாதா ரணமான அம்ருதம் கேவலம் மரணத்திற்குப் பயந்தவர்களினுல் அங்கீகரிக்கத்தக்கது. இந்த அம்ருதம் ஸம்ஸாரமாகிற மரண த்திலிருந்து பயந்தவர்களினுல் அங்கீகரிக்கத்தகுந்தது என்று தாத்பர்யம். இவ்விடத்தில் 'ஸம்ஸாராக்நி விதீ... ...ணாத்ம ஸஞ்ஜீவிநீம்' என்று ஸ்ரீபாஷ்யத்திலருளிச்செய்யப்பட் டிருப்பது விவக்ஷிதம். 'விவிந்த்தி' என்பதற்கு அவர்கள் மிகுந்த ஸ்ரமப்பட்டு ஸம்பாதித்தார்கள் என்று அர்த்தம். இங்கு ஸ்ரீ பாஷ்யகாரர் திருக்கோட்டியூர்நம்பி பக்கலிலே அனேக ஆவ்ருத்தி உபஸதனம் பண்ணி ரஹஸ்யார்த்தங்கள் ஸிக்ஷித்த ப்ரகாரம் அனுஸந்தேயம். 'உபநிஷ...' என்பதற்கு உபநிஷத்து மிகவும் ஸாராம்ஸ மாகையினுல் அம்ருதமயமான ஸமுத்திரம், அதிலும் ஸாராம்ஸ மானது இந்த ரஹஸ்யத்ரயங்கள், இது அபூதோபமை, அதாவது, க்ஷீரஸமுத்திரத்திலிருந்து அம்ருதத்தைக் கடைந்தெ டுத்தாப்போல அம்ருதமயமான ஒரு ஸமுத்திரமிருந்து அதின் ஸாராம்ஸத்தைக் கடைந்தெடுப்பதைப் போலிருக்கிறது இந்த ரஹஸ்யத்ரயங்கள் என்று தாத்பர்யம். இங்கு உபநிஷத்தை அம் ருதஸமுத்திரமாக நிரூபித்ததினுல் உபநிஷத்துக்கள் அநந்தங்க ளென்பதும், அதிலும் ப்ரபந்நனுக்கு அனுபாதேயாம்ஸங்கள் உண்டென்பதும் த்யோதிதம். 'உத்தம் ஸாரம்' என்பதற்கு

இதைவிட மேல்பட்ட ஸாராம்ஶம் இல்லை என்று தாத்பர்யம். இங்கு 'விஶுத்தமாக்தம்', 'உத்தமஸாரம்' என்கிற பதங்களினுல் மற்றவைகளான வ்யாபக மந்திரங்களைவிட ரஹஸ்யத்ரயங்களின் மேன்மை காட்டப்பட்டது. 'ஶ்ரேயோஹீதா:' என்பதினுல் ஸம்ஸாரத்தில் மிகுந்த பயத்துடன் த்வரைப்படுகிறவர்கள் என்றேற்படுகிறபடியினுல் உபநிஷத்துக்களுக்கு வ்யாக்யானம் பண்ணுமைக்குக் காரணம் அருளிச் செய்யப்பட்டது. 'ஶுபதா:' என்பதற்கு மோக்ஷத்திற்குபாய மொன்றையே அறிந்து கொள்ளவேண்டுமென்கிற ஆசையை யுடையவர்கள் என்றர்த்தம். 'ஶுபாஷயா தா ஶு ஷோ: யேஷாம் தே ஶுபதா:' என்கிற வ்யுத்பத்தியினுலே நிஷ்பலமானதாகையினுல் ப்ரயோஜனமில்லாத அம்ஶங்களிலிருந்து வெகுதூரம் விலகின புத்தியை யுடையவர்கள் என்று தாத்பர்யம். ஆகையினுல் அனுபயுக்தங்களான மற்றைய வித்யா ஸ்தானங்கள் அவர்களுக்கு அனுபாதேயங்களாகையினுலே அவைகள் இங்கு வ்யாக்யானம் பண்ணப்படவில்லை என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. ஆக இத்தால் வேதம் க்ஷீர ஸமுத்திரமென்றும், உபநிஷத்துக்கள் அதில் கடைந்தெடுக்கப்பட்ட அம்ருதமென்றும், அதிலும் அநுபாதேயங்கள் கலந்திருக்கிறபடியினுல் அதுவும் ஸமுத்திர ஸ்தாநீயமாய், அதிலிருந்து கடைந்தெடுத்த உத்தமமான ஸாரம் ரஹஸ்யத்ரயமென்றும் ஏற்படுகிறது. ஆகையினுல் அதற்கு வ்யாக்யாநமான இந்த க்ரந்தம் ஆரம்பணீயம் என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. இப்படி இந்த இரண்டு அதிகாரங்களும் இந்த ஶாஸ்திரம் ஆரம்பணீயம் என்கிற அர்த்தத்தை ஸமர்த்திக்கிறபடியினுல் இவை இரண்டும் சேர்ந்து ஒரு பேடிகை என்பது த்யோதிதம். இப்படியே மேல் ப்ரதான ப்ரதிதந்திர, அர்த்தபஞ்சக, தத்வத்ரய, பரதேவதா பாரமார்த்யாதிகாரங்கள் நான்கும் சேர்ந்து தத்வநிரூபண பரமாகையினுல் அவைகள் ஒரு பேடிகை. அதற்குமேல் ஆறதிகாரங்கள் அங்கங்களுடன் கூடிய உபாய விஶேஷத்தை நிரூபிக்கிறபடியினுல் ஒரு பேடிகை. அதற்கு மேல் பத்ததிகாரங்கள் புருஷார்த்தத்தை நிரூபிக்கிறபடியினுல் ஒரு பேடிகை. ஆக இந்த நாலு பேடிகைகளுமாகச் சேர்ந்து ஶாஸ்திராரம்பம், தத்வநிரூ

ரஹஸ்யத்ரயங்களின் உபயோகவிஶேஷம்.

இந்த ரஹஸ்யத்ரயத்தில் திருமந்த்ரம் [1] 'ஸர்வம் அஷ்டாக்ஷராந்தஸ்தம்' என்கிறபடியே தன்னர்த்தத்தை யறிய வெல்லா அர்த்தங்களையு மறிந்து தரும்படியா யிருக்கையாலும், சரமஶ்லோகம் [2] 'ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ' என்று தான் சொல்லுகிற உபாய மொன்றையுமே பற்றுவிக்க ஸர்வோபாய ஃபலஸித்தியுண்டாமென்று ஸூசிக்கையாலும், த்வயமும் கடவல்யாதிகளிற் சொல்லுகிற

---

ணம், உபாயநிரூபணம், புருஷார்த்த நிரூபணம், என் கி ற நாலு அர்த்தங்களைப் பற்றியதாகையினுல் இவை நான்குமான முதல் இருபத்திரண்டதிகாரங்களுமாகச் சேர்ந்து அர்த் தாநுஶாஸநபாகமாகிறது என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது.

இப்படிக் கீழ் ஶ்லோகத்தில் அருளிச் செய்திருக்கும் அர்த்தங்களை விஶதமாக நிரூபிக்கப்போகிறவராய், ஸாரதம மான வ்யாபக மந்திராதிகள் நிற்க இந்த ரஹஸ்யத்ரயங்களை வ்யாக்யானம் பண்ணுவதற்குக் காரணம் என்ன? என்கிற ஆக்ஷே பத்திற்கு ஶ்லோகத்தில் ஸங்க்ரஹமாய் 'உக்தம் ஸாரம்' என் றருளிச்செய்த ஸமாதாநத்தை விஶதீகரித்தருளுகிறார்—'இந்த ரஹஸ்யத்ரயத்தில்' என்றாரம்பித்து. ஸர்வம் - எல்லா அர்த் தங்களும், அஷ்டாக்ஷராந்தஸ்தம் - திருவஷ்டாக்ஷரத்திற்குள் ளடங்கியிருக்கிறது. அறிந்து தரும்படியா யிருக்கையாலும் - அறியும்படி செய்யக்கூடியதாயிருப்பதினுலும். 'சரமஶ்லோகம்' இத்யாதிக்கு 'ஸாத்ருக்ஷ்யேண ஶாஸ்த்ரேஷு: யேந யேநேஷ்ட ஹேதுநா । ஸர்வ தத்ராஹரேதேதி சரமஶ்லோகஸங்க்ரஹ: ।' என்றிவர் தம்மாலேயே அருளிச் செய்யப்பட்டிருக்கிறபடியே அந்தந்தப்பலங்களுக்குத் தனித்தனியே விதிக்கப்பட்ட உபாயங் களைவிட்டு ப்ரபத்தி ஒன்றையே அனுஷ்டித்தால் அவைகளினுல் வரக்கூடிய பலங்களெல்லாம் வரும் என்று சொல்லுகிறபடியி ஞலே என்று தாத்பர்யம். இங்கு த்வயத்திற்கு முந்தி சரம

---

1. நாரதீயகல்பம்-1-9. 2. கீதை-18-66.

படியே தன்னை யொருக்காலுச்சரித்தவனை ஸக்ருதுச்சாரத்தாலும் க்ருதக்ருத்யனுக்க வல்ல வைபவத்தை யுடைத்தாயிருக்கையாலும் ரஹஸ்யத்ரயமே முமுக்ஷுக்களுக்காதரணீயம்.

**அஸாரமல்பஸாரஞ்ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத் ।**
**பஜேத் ஸாரதமம் ஶாஸ்த்ரே ரத்நாகர இவாம்ருதம் ॥**

---

ஶ்லோகத்தை எடுத்தது அனுஷ்டானம் உண்டாவதற்கு முந்தி விதிவாக்ய விசாரம் இருக்கவேண்டுமென்கிற திருவுள்ளத்தினால். '**கம்**' ஶ்ருதியாவது 'ஒருதரம் த்வயம் சொல்லப்பட்டதாகில் ஸம்ஸாரத்தைத்தாண்டுவிக்கிறது' என்றர்த்தமுள்ள வாக்யம். '**க்ருதக்ருத்ய**'னாவது தன்னால் செய்யப்படவேண்டிய கார்யத்தைச் செய்து முடித்தவன், அதாவது, த்வயத்தைக் கொண்டு ஶரணாகதி பண்ணினவன், தான் செய்யவேண்டிய கார்யத்தைச் செய்து முடித்தவனாகையினாலும், அதற்குமேல் மோக்ஷத்திற்காகத் தான் செய்யவேண்டிய கார்யம் ஒன்றுமில்லாமையினாலும் '**க்ருதக்ருத்யன்**' என்று சொல்லப்படுகிறான். '**ரஹஸ்யத்ரயமே**' என்கிற இடத்தில் ஏகாரத்தினால் மற்றவைகளான வ்யாபக மந்திரங்கள், உபநிஷத்துக்கள், முதலியவைகள் வ்யாவர்த்திக்கப்படுகின்றன.

இப்படி ரஹஸ்யத்ரயமே ஆதரணீயம் என்று நிஷ்கர்ஷிக்கைகூடுமோ? வேதங்களிலும் அநுபாதேயாம்ஶங்கள் கலந்திருந்தபோதிலும் உபாதேயாம்ஶமும் இருக்கிறபடியினாலே அவைகளை அறிய வேதார்த்த விசாரம் பண்ணலாமே? என்கிற ஶங்கைகளுக்கு உதாஹரணத்தைக்கொண்டு ஸாரதமமே க்ராஹ்யம் என்று அருளிச்செய்கிறார்—'**அஸாரம்**' என்றாரம்பித்து. **அஸாரம்**-ஸாரமில்லாததையும், **அல்பஸாரம்** - கொஞ்சம் ஸாரமுள்ள பாகத்தையும், **ஸாரம்** - ஸாராம்ஶமான பாகத்தையும், **ஸாரதரம்** - மிகவும் ஸாரமான பாகத்தையும், **த்யஜேத்** - விடவேண்டும், **ரத்நாகரே** - ஸமுத்திரத்தில், **அம்ருதமிவ** - அம்ருதத்தைப்போல், **ஶாஸ்த்ரே** - ஶாஸ்திரத்தில், **ஸாரதமம்** - இதற்குமேல்பட்ட ஸாரமில்லையென்று

**வாரவ பாரஷாய ரூம் தவ பாயமும் ஷிதூ ஷாரி ஷிவாணங்களா** லறிய வொண்ணுதபடியாலே யிவற்றிற்கு [1] '**ஶாஸ்த்ராவே**

மோக்ஷ ததுபாயங்களில் ஶப்தமே ப்ரமாணம்.

**ழிஜநாதநம்**', [2] '**தஸ்மா ச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ**', [3] '**ஶப்த ப்ரஹ்மணி நிஷ்ணாதஃ பரம் ப்ரஹ்மாதிகச்சதி**'

---

சொல்லப்படுகிற உத்தமமான ஸாரத்தை, **ஸஜேத்** - அடையவேண்டும். இந்தக் காரிகையின் அர்த்தத்தை விஶதமாக மேலே உபபாதிக்கப்போகிறவராய் மோக்ஷ ததுபாயங்களை அறிவதற்கு ஶாஸ்திரமே அவஶ்யம் அபேக்ஷிதம் என்பது ஸித்தித்தாலல்லவோ ஶாஸ்திரத்தில் ஸாரதமாம்ஶம் உபாதேயம் என்பது ஸித்திக்கும்? என்கிற ஶங்கையைப் பரிஹரித்தருளுகிறார்—'**வாரவ பாரஷாய ரூம்**' என்றாரம்பித்து. '**ஷிதூஷாரி**' என்கிற இடத்தில் '**ஷாரி**' ஶப்தம் அனுமானத்தைக் குறிக்கிறது. அறியவொண்ணுதபடியாலே-அறியமுடியாதபடியினாலே. **ஶாஸ்த்ராத்** - ஶாஸ்திரத்தினாலே, **ஜநாதநம்** - பகவானை, **வேழி** - அறிகிறேன். **தஸ்மாத்** - ஆகையினால், **தே** - உனக்கு, **ஶாஸ்த்ரம்** - ஶாஸ்திரமே, **கார்யாகார்ய வ்யவஸ்திதௌ** - செய்யத்தக்கது, செய்யத்தகாதது, இவைகளை ஏற்படுத்துவதில், **ப்ரமாணம்** - ப்ரமாணம். **ஶப்த ப்ரஹ்மணி** - வேதத்தினால் உண்டாக்கப்பட்ட ஜ்ஞானத்தில், **நிஷ்ணாதஃ** - மிகுந்த ஸாமர்த்தியத்தை உடையவன், **பரம் ப்ரஹ்ம** - விவேகாதிகளினால் உண்டாக்கப்படுகிற பரமாத்மோபாஸனமாகிற ஜ்ஞானத்தை, **அதிகச்சதி** - அடைகிறான். இந்த ப்ரகரணத்தில் '**ஶப்த ப்ரஹ்மாதி ரேவம் பரம் ப்ரஹ்ம விவேகஜம்**' என்று விவரித்திருக்கிறபடியினால் பரப்ருஹ்மமாவது விவேகாதிகளினால் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானம் என்றர்த்தமாகிறது. இத்தால் ப்ரத்யக்ஷானுமானங்களினாலே தார்க்கிகாதிகளைப்போல யதாகதஞ்சித் ப்ருஹ்மத்தை அறிந்தாலும் அது கார்யகரமாகாது என்பது ஏற்பட்டது. '**ஶப்தம்**' என்பதற்கு

---

1. பார-உத்-68-5. 2. கீதை-16-24. 3. பார-ஶாந்தி-276-2.

என்றுஞ் சொல்லுகிறபடியே ஶப்தமே ப்ரமாணம். அவ்விடத்தில் [1] 'அநந்தபாரம் பஹுவேதிதவ்யம்

அதில் ஸாரதமாம்ஶம் உபாதேயம்.

அல்பஶ்ச காலோ பஹவஶ்ச விக்நா: | யத் ஸாரபூதம் ததுபாஸிதவ்யம் ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிஶ்ரம் ||' என்கிற

---

'அநாப்தாநாப்தவாக்ய ஜநிதம் யதார்த்த விஜ்ஞாநம் தச்ச ப்ரமாணம்' என்று ஸ்ரீமந் ந்யாய பரிஶுத்தியில் அருளிச் செய்யப்பட்டிருக்கிறபடியே அநாப்தர்களினால் சொல்லப்படாததும், அர்த்த ஜ்ஞானத்தை உண்டாக்குவதுமான ஶ்ருதி, ஸ்ம்ருதி, முதலியவைகள் என்று தாத்பர்யம். இப்படியானால் 'அங்காநி வேதாஶ்சத்வார:' என்கிறபடியே பதினாலு வித்யா ஸ்தானங்களும் ஜ்ஞாதவ்யங்கள் என்று வசனங்கள் சொல்லுகின்றனவே. அவைகளில் க்ரமமாக எல்லாவற்றையும் அப்யஸித்துக் கீழ்ச் சொல்லிய ஸாரதமாம்ஶத்தை நிஷ்கர்ஷித்துத் தெரிந்து கொள்ளலாமாகையினால் முதலில் ஸாரதமாம்ஶங்களையே அறியவேண்டும், மற்றவைகளை விட்டுவிடவேண்டும் என்பது விருத்தமாகாதோ? என்கிற ஶங்கைகளுக்கு வசனபூர்வகமாக ஸமாதானம் அருளிச் செய்கிறார்—'**அவ்விடத்தில்**' என்றாரம்பித்து. அன்றிக்கே கீழ் அருளிச்செய்த காரிகையில் ஶாஸ்திரத்தில் ஸாரதமாம்ஶம் உபாதேயம் என்றருளிச் செய்யப்பட்டிருப்பது சில ப்ரமாணங்களில் ஸாராம்ஶம் க்ரஹிக்கத்தக்கது என்று சொல்லி யிருப்பதற்கு விரோதியாதோ? என்கிற ஶங்கைக்கு ஸமாதானம் அருளிச்செய்கிறாராகவுமாம்—'**அவ்விடத்தில்**' என்றாரம்பித்து. '**அவ்விடத்தில்**' என்பது '**ஸாரதமஶப்தவாச்யம்**' என்பதோடந்வயிக்கிறது. **அநந்தபாரம்** - நிஶ்சயிக்கமுடியாத கரையையுடைய, **பஹு** - அநேக ஶாஸ்திரம், **வேதிதவ்யம்** - அறியவேண்டியது, **காலஶ்ச** - காலமும், **அல்ப:** - அல்பமானது, **விக்நா:** - தடங்கல்கள், **பஹவ:** - அநேகங்கள், (ஆகையினால்) **யத்** - எந்த, **ஸாரபூதம்** - ஸாரமாகிய அர்த்தம், **அம்புமிஶ்ரம்** - ஜலத்துடன் கலந்த, **க்ஷீரமிவ** - பாலைப்போல் (இருக்

---

1. உத்தரகீதை-3-1.

ஶ்லோகத்தில் 'ஸாரஸமுத்த்ருதம்' என்கிற பதத்தாலே ஶ்ருதிஸித்தமான நிருபாதிகஸாரத்தை விஷயீ கரிக்கிற ஸாரதமஶப்தமுபாதேயம். பாஹ்யகுத்ருஷ்டி ஶாஸ்த்ரங்கள் அஸாரால்பஸாரங்களாகையாலே யதா

---

கிறதோ), **தத்** - அதை, **ஹம்ஸோயதா** - ஹம்ஸம்போல, அன்றிக்கே, **ஹம்ஸோயதா**-ஹம்ஸத்தைப்போலிருக்கிற புரு ஷன், **உபாததீத** - க்ரஹிக்கவேண்டும். இந்த ஶ்லோகத்தில் **'ஸாரஸமுத்த்ருதம்'** என்று சொல்லியிருக்கிறது கீழ்க்காரிகையி லிருக்கும் **'ஸாரதம'** ஶப்தத்தையே குறிக்கிறது என்றருளிச் செய்கிறார்—**'ஸாரஸமுத்த்ருதம் என்கிற'** என்றாரம்பித்து. இங்கு **'அபூத தத்பாவே ச்வி:'** என்கிற ப்ரத்யயத்தைச்சேர்த்து **'ஸாரீஸமுத்த்ருதம்'** என்று சொல்லாமல் **'ஸாரஸமுத்த்ருதம்'** என்றிருப்பதினால் எல்லாவற்றையும்விட உத்க்ருஷ்டமான ஸாரமே சொல்லப்படுகிறது. ஆகையினால் **'ஸாரஸமுத்த்ருதம்'** என்பதற்கு **'ஸாரதம'** ஶப்தமாகிய ரஹஸ்யத்ரயமே அர்த்தம் என்று தாத்பர்யம். **'ஶ்ருதிஸித்தமான'** என்பது ஸாரதமஶப்தத்தோடன்வயிக்கிறது. **'நிருபாதிகஸாரத்தை விஷயீகரிக்கிற ஸாரதமஶப்தம்'** என்பதற்கு ஶப்தம் ஸாரதமம் என்பது அதின் அர்த்தத்தைப்பற்றி யாகையினாலே நிருபாதிகஸாரமான அர்த்தத்தைச் சொல்லுகிறபடியினால் ரஹ ஸ்யத்ரயமே **'ஸாரதமஶப்தம்'** என்று தாத்பர்யம். அன்றிக்கே இங்கு **'ஸாரஸமுத்த்ருத'** ஶப்தமும் நிருபாதிகஸாரமான ரஹஸ் யத்ரயத்தைச் சொல்லுகிறது, ஆகையினால் **'அஸாரம்'** என் றாரம்பிக்கும் காரிகையில் உபாதேயமாகச்சொல்லப்பட்ட **'ஸார தம'**மென்று நிரூபிக்கப்பட்டதே இங்கு **'ஸாரஸமுத்த்ருத'** ஶப்தத் தினாலும் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யமாகவுமாம். அப் பொழுது **'ஸாரதமஶப்தம்'** என்பதற்கு **'அஸாரம்'** என்கிற ஶ்லோகத்தில் **'ஸாரதம'** என்கிற பதத்தின் அர்த்தம் என்று தாத்பர்யம். **'உபாதேயம்'** என்பதற்கு அங்கீகரிக்கத்தக்கது என்றர்த்தம். கீழ்ச்சொன்ன **'அஸாரம்'** முதலியவைகளை நிரூ பித்தருளுகிறார்—**'பாஹ்யகுத்ருஷ்டி'** என்றாரம்பித்து. **'பா**

**வாச்யங்கள். வேதத்தில் கர்மபாகத்தில் ஐஹிக ஸாதந ப்ரதிபாதகமான பாகம் அத்யல்பஸாரமாகையாலே த்யாஜ்யம். ஆமுஷ்மிக ஸாதந ப்ரதிபாதகாம்ஶம் ஐஹிக ஸாதநத்திற் காட்டிலதிஶயித ஸாதநத்தை யுடைத்தாகையாலே சிலர்க்கு ஸாரமென்னலா யிருந்ததே யாகிலும் து:கப்ரசுரத்வாதி தோஷதுஷ்டமாகையாலே த்யாஜ்யம்.‘ஆத்மதச்ச ப்ராப்தத்ஸ்வாயநஶாஸ்த்ரத்தை ப்ரதிபாதிக்கும் அம்ஶம்**

---

**ஹ்ய**’ என்றது வேதத்திற்குப் புறம்பான ஸாங்க்ய, சார்வாக, பௌத்த,ஜைன,யோக,பாசுபதாதி மதங்களை. ‘**குத்ருஷ்டி**’ என்றது பூர்வமீமாம்ஸக, அத்வைதி, முதலியவர்களின் மதங்களை. ‘**அத்யந்தாஸாரங்க**’ளாயிருக்கையாவது ப்ரயோஜனம் இல்லாமை மாத்திரமன்றிக்கே அநிஷ்டபலத்தையும் கொடுக்கக் கூடியதாயிருக்கை. ‘**யா வேதபாஹ்யா: ஸ்ம்ருதய: யாஶ்ச காஶ்ச குத்ருஷ்டய: । ஸர்வாஸ்தா நிஷ்பலா: ப்ரேத்ய தமோநிஷ்டா ஹி தா: ஸ்ம்ருதா:॥**’ என்கிற மனுவசனம் இங்கு விவக்ஷிதம். ‘**கர்மபாக**’மாவது கர்மங்களை ப்ரதிபாதிக்கும் பாகம். ‘**ஐஹிக ஸாதந**’மாவது இந்த ஜன்மத்திலேயே அனுபவிக்கக்கூடிய பலங்களுக்கு உபாயங்களான கர்மங்கள். ‘**அத்யல்பஸார**மாகையாலே’ என்றது இது ப்ரத்யக்ஷ ஸித்தம் என்பதைத் தெரிவிப்பதற்காக. **ஆமுஷ்மிகஸாதந ப்ரதிபாதகாம்ஶம்** - லோகாந்தரங்களில் அனுபவிக்கக்கூடிய ஸ்வர்க்காதி ஸுகங்களுக்கு உபாயங்களைச் சொல்லுகிற பாகம், **சிலர்க்கு** - ஸாராஸாரவிவேகமில்லாதவர்களுக்கு, **ஸார**மென்னலாயிருந்த **போதிலும்** - ஸாரம் என்று சொல்லலாம்போலே இருந்தபோதிலும், ‘**து:கப்ரசுர**’மாவது துக்கத்தைக் காரணமாக வுடைத்தாயிருக்கை, அதாவது கஷ்டப்பட்டுச் செய்யவேண்டிய உபாயங்களினால் உண்டாகக் கூடியதாயிருக்கை. ‘**ஆதி**’ ஶப்தத்தினால் மேல் முமுக்ஷுத்வாதிகாரத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கும் அல்பத்வம், அஸ்திரத்வம், துக்கமிஶ்ரத்வம், துக்கோதர்க்கத்வம், விபரீதாபிமான மூலத்வம், ஸ்வாபாவிகா

மும் **ஸாரதரமா** யிருந்ததே யாகிலும் அதிலு **மத்யந்தாதிஶயிதமான பரமாத்மாநுபவ ஸாபேக்ஷர்க்கு அநுபாதேயம். பரமாத்ம தத்ப்ராப்தி ததுபாயங்களை** வெளியிடும் **ப்ரதேஶம் ஸாரதமமாகையாலே விவேகிக்கு உபாதேயம்.** அவ்வம்ஶத்திலும் **ப்ரமாண ப்ரதிபாத்யங்களான தத்வஹிதங்களுடைய ஸங்க்ரஹமாகையாலே** மிகவும் **ஸாரதமமாயிருக்கும் ரஹஸ்யத்ரயம்.**

ரஹஸ்யத்ரயமே மிகவும் உபாதேயம்.

---

நந்தவிருத்தத்வம், இவைகள் குறிக்கப்படுகின்றன. **ஶுத்தாத்மப்ராப்தி** - பரிஶுத்த ஜீவாத்மாவை அனுபவிப்பதாகிய கைவல்யம். **தத்ஸாதநம்** - அதற்கு உபாயம், **ஸாரதரமாயிருந்ததேயாகிலும்** - ஸாரம் என்று சொல்லப்படும் ஸ்வர்க்காதிகளைக் காட்டிலும் மேற்பட்டதாகையினால் மிகவும் ஸாரமானது என்று சொல்லக் கூடியதாயிருந்தாலும், '**அநுபாதேயம்**' என்பதோடு கீழ்ச்சொல்லப்பட்ட '**அல்பத்வ அஸ்திரத்வாதி தோஷதுஷ்டமாகையாலே**' என்பதைச் சேர்த்துக்கொள்ளவும், அப்படியே முமுக்ஷுத்வாதிகாரத்தில் 'இவற்றில் **யதா ஸம்பவ**முண்டான **வேதநாந்தராநுஷங்க தோஷ**ங்களையும்' என்றருளிச் செய்யப்பட்டிருப்பதினாலே கைவல்யானுபவத்திலும் துக்கமூலத்வாதி தோஷங்களில் சில உண்டென்று ஏற்படுகிறபடியினால் அவைகள் இங்கும் இது அநுபாதேயம் என்றருளிச்செய்திருப்பதற்குக்காரணமாகிறது என்று திருவுள்ளம். **விவேகிக்கு**- ஜீவாத்ம பரமாத்ம ஸ்வரூபங்களை பகுத்தறிந்தவனுக்கு, அதாவது கீழதிகாரத்திலருளிச் செய்தபடியே சில தார்மிகரடியாக ஹேயோபாதேய விபாகக்ஷமனான இவனுக்கு, **அவ்வம்ஶத்திலும்** - பரமாத்ம ஸ்வரூபாதிகளை ப்ரதிபாதிக்கும் உபநிஷத்பாகத்திலும், இத்தால் அல்பகாலவர்த்திகளாய் அநேக விக்னங்களையுடையவர்களான நமக்கு முக்யாம்ஶங்களைத் தெளிவிக்கும் திருமந்த்ராதிகளே மிகவும் ஸாரதமம் என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. ஆகிலும் கீழ் ஸாரதமம் உபாதேயம் என்று '**அஸாரம்**' என்கிற காரிகையில் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதினாலே, பரமாத்ம ஸ்வரூபாதிகளை ப்ரதிபாதிக்கிற உபநிஷத்பா

**ஆகையால்** [1] **'பஹுப்⁴யஶ்ச மஹத்³ப்⁴யஶ்ச ஶாஸ்த்ரேப்⁴யோ குஶலோ நர: | ஸர்வத: ஸாரமாத³த்³யாத் புஷ்பேப்⁴ய இவ ஷட்பத³: ||' என்கிறபடியே ரஹஸ்யத்ரயம் முமுக்ஷுவான இவ்வாத்மாவுக்கு மிகவுமுபாதே³யமாகக்கடவது.**

---

கம் ஸாரதமம் என்றிங்கருளிச் செய்யப்பட்டிருப்பதினாலும், அப்படி ஸாரதமமான உபநிஷத்பாகமும் உபாதேயமென்று ஸித்திக்கிறபடியினால் '**ரஹஸ்யத்ரயமே முமுக்ஷுக்களுக் காத³ரணீயம்**' என்று கீழ் அருளிச்செய்தது விரோதியாதோ? என்கிற ஶங்கைக்கு எல்லாவற்றிற்கும் ஸாரதமம் எதுவோ அதுவே உபாதேயம் என்று ஸமாதானம் வசன பூர்வமாக அருளிச் செய்கிறார்—'**ஆகையால்**' என்றாரம்பித்து. '**ஆகையால்**' என்பதற்கு கீழ்க்கூறிய காரணத்தினாலே என்றர்த்தம். அதாவது எல்லாவற்றையும்விட ரஹஸ்யத்ரயம் அத்யந்த ஸாரதமமாகையினாலே என்று திருவுள்ளம். இது மிகவும் '**உபாதே³ய**மாகக்கடவது' என்பதோடந்வயிக்கிறது. இதற்கு வசனம் உதாஹரித்தருளுகிறார்—'**பஹுப்⁴ய:**' என்றாரம்பித்து. **குஶலோ** - புத்திமானாகிய, அதாவது ஸாராஸார விவேகமுடைய, **நர:** - மனிதன், **பஹுப்⁴ய:** - அநேகங்களாயும், **மஹத்³ப்⁴ய:** - பெரியதுகளுமாயுமிருக்கிற, **ஶாஸ்த்ரேப்⁴ய:** - ஶாஸ்திரங்களிலிருந்து, **ஸர்வத:** - எல்லாவற்றைக்காட்டிலும், அதாவது ஸாரதமமென்று சொல்லப்படும் உபநிஷத்துக்களைக்காட்டிலும், **ஸாரம்**— ஸாராம்ஶத்தை, **ஷட்பத³:** - வண்டு, **புஷ்பேப்⁴ய இவ** - புஷ்பங்களிலிருந்துபோல, அதாவது வண்டு புஷ்பங்களிலிருந்து மிகுந்த ஸாராம்ஶத்தை எடுப்பதைப்போல, **ஆத³த்³யாத்** - எடுத்துக்கொள்ளவேண்டும். '**முமுக்ஷு**வான இவ்வாத்மாவுக்கு' இத்யாதிக்கு மோக்ஷத்திலாசையுடையவனாய் த்வரையோடு கூடின ஜீவாத்மாவிற்கு அதற்கபேக்ஷிதமான அர்த்தங்களைத் தெளிவிப்பதினால் ரஹஸ்யத்ரயமே மிகவும் உபாதேயம் என்று தாத்பர்யம். இத்தால் '**அஸாரம்**' என்கிற ஶ்லோகத்தில் '**ஸாரதமம்**' என்று சொல்லியிருப்பதும் உத்தமஸாரமாக இங்கு உதாஹரிக்கப்பட்ட வசனத்தை யனுஸரித்து ரஹஸ்ய

---

1. பார-ஶாந்தி-176-66.

அமையாவிவையென்னுமாசையினலறுமூன்றுலகிற்
சுமையானகல்விகள்சூழவந்தாலுந்தொகையிவையெ
றிமையாயிமையவரேத்தியவெட்டிரண்டெண்ணி[ன்
சமையாசிரியர் சதிர்க்குந்தனிநிலேதந்தனரே. [யநம்

---

த்ரயத்தைச் சொல்லுகிறபடியினுல் விரோதமில்லை என்பது த்யோதிதம்.

இப்படி அத்யந்த ஸாரதமமான ரஹஸ்யத்ரயம் உபாதேயமென்று ஸுலபமாய் நிஷ்கர்ஷம் செய்து அஸார அல்பஸாராதிகளிலே அலேயாமல் இருக்கும்படியான ஸ்திதியை நம்பூர்வாசார்யோபதேஸத்தாலே பெற்ரும் என்று அவர்கள் செய்தருளின உபகாராதிஶயத்தையும், ரஹஸ்யத்ரயங்கள் பூர்வாசார்ய பரிக்ருஹீதங்களாகையினுலே உபாதேயதமம் என்பதையும் அனுஸந்தானம் செய்துகொண்டு அதிகாரார்த்தத்தை ஒரு பாட்டாலே ஸங்க்ரஹிக்கிருர்—'**அமையாவிவை**' என்ருரம்பித்து.

ப-ரை] **இவை** - நம்மால் அப்யாஸம் செய்யப்பட்ட ஶாஸ்திரங்கள், **அமையா** - போதாது, **என்னுமாசையினுல்** - என்கிற ஆசையினுலே, **உலகில்** - இந்த லோகத்தில், **சுமையான** - பாரங்களான, அதாவது நிஷ்பலங்களான, **அறுமூன்று** - பதினெட்டு, **கல்விகள்**-வித்யா ஸ்தானங்கள், **சூழ**-முழுமையும் **வந்தாலும்** - இவனுக்கு ஸ்வாதீனங்களாய்க் கிடைத்தபோதிலும், **இவை** - இவைகள், **தொகை** - எண்ணிக்கை, அதாவது கேவலம் கணக்கிடுவதற்கு மாத்திரம் உபயோகம், **என்று** - என்று நிஸ்சயித்து, **இமையா** - இமைக்கொட்டுதலில்லாத, **இமையவர்** - தேவதைகள், அதாவது க்ஷணகாலமும் ஜ்ஞான ஸங்கோசமில்லாத நித்யஸூரிகள், **ஏத்திய** - ஸ்தோத்திரம்செய்த, **எட்டு** - திருவஷ்டாக்ஷரம், **இரண்டு** - மந்திர ரத்னமாகிய த்வயம், இது சரமஶ்லோகத்திற்கும் உபலக்ஷணம், அன்றிக்கே, **இரண்டு** - மற்றைய இரண்டாகிய த்வயம் சரமஶ்லோகம் என்றர்த்தமாகவுமாம்,(இவைகளை)**எண்ணிய**- அனுஸந்தானம் செய்தவர்களான, **நம் சமயாசிரியர்** - நம்முடைய ஸித்தாந்தத்திற்கு ப்ரவர்த்தகர்களான ஆசார்யர்கள், (**சமயம்** - ஸித்தாந்தம்), **சதிர்க்கும்** - சதுரமான, அதாவது சாதுர்யத்தை

உடையதாகிய, **தனிநிலை** - ஒப்பற்ற ஸ்திதியை, **தந்தனர்** - கொடுத்தார்கள். 'நமக்கு' என்று சேர்த்துக்கொள்ளவும்.

**'அறுமூன்றுலகில் சுமையான கல்விகள்'** என்பதினால் பதினெட்டு வித்யா ஸ்தானங்களில் உபநிஷத்பாகமும், அதற்குள்ளடங்கிய ரஹஸ்யத்ரயங்களும் அடங்கியதாகையினாலே அவைகளும் **'சுமையான கல்வி'** என்று சொல்லப்பட்டதாகிறதே என்று ஶங்கை பண்ணிக்கொண்டு, **அறுமூன்று** - பதினெட்டாகிய, **உலகில்** - வித்யா ஸ்தானங்களுக்குள்ளே, **சுமையான** - பரம புருஷார்த்த ஸாதனங்களல்லாமையினாலே நிஷ்பலமாய் சுமையான என்று ஸ்ரீ ஸாரதீபிகையில் வ்யாக்யாதம். ஸ்ரீ ஸாராஸ்வாதிநியில் மேல் **'எட்டிரண்டெண்ணிய'** என்று ரஹஸ்யத்ரயங்களை உபாதேயமாக அருளிச்செய்திருப்பதினால் **'கல்விகள்'** என்றது அதைவிட வேறுபட்ட கல்விகளைச் சொல்லுகிறது என்று வ்யாக்யாதம். **'உலகில் சுமையான'** என்பதினால் **'வதந்த்யேகே பரம் விப்ரா வாசஸ்பத்யம் ந விந்ததி। வேதாந்தார்த்த பராஸ்ஸர்வே ப்ராஹ்மணா மோக்ஷ்யதே ॥'** என்றிவை முதலியவை விவக்ஷிதம். **'சூழவந்தாலும்'** என்பதற்கு அவைகள் இவனைச் சூழ்ந்துகொண்டு வந்தாலும் என்றர்த்தம். அன்றிக்கே இது **'சதிர்க்கும்'** என்பதோடந்வயிக்கிறதாகவுமாம். அப்பொழுது தமக்கு ஸ்ரீ ஹயக்ரீவ கடாக்ஷம் உண்டானவுடனே விஸ்வாமித்திரருடைய அநுக்ரஹத்தினாலே **'உபதஸ்து²ர் மஹார்ஹாணி ஸர்வாண்யஸ்த்ராணி ராகவம்। ஊசுஶ்ச முதிதாஸ்ஸர்வே ராமம் ப்ராஞ்ஜலயஸ்ததா ॥ இமே ச பரமோதா³ரா: கிங்கராஸ்தவ ராகவ।'** என்று அஸ்த்ர தேவதைகள் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனை வரித்தாப்போலத் தம்மை எல்லா வித்யாஸ்தானங்களும் வரித்தன என்றும், அப்படி இருந்தபோதிலும் அவைகளை **'தோகையிவையென'** அநாதரித்து சதிர்க்கும் நிலையை எட்டிரண்டெண்ணிய நம் பூர்வாசார்யர்களுடைய அநுக்ரஹத்தினாலே பெற்றோம் என்று தாத்பர்யம். இந்த யோஜனையில் 'இமையாயிமையவர் ஏத்திய எட்டிரண்டெண்ணிய நம் சமயாசிரியர், அமையா இவை யென்னுமாசையினால் அறுமூன்றுலகில் சுமையான கல்விகள் சூழவந்தாலும் தொகையிவையென சதிர்க்கும் தனிநிலை, தந்தனர்' என்றந்வயம். இத்தால்

ஶாகா²நாமுபரிஸ்தி²தேந
மநுநா மூலேந லப்³தா⁴த்மக:
ஸத்தாஹேதுஸக்ருஜ்ஜபேந
ஸகலம் ஸாரம் ஸ்வயம் ஸம்வத³ந் ।
வேதோ³த்தம்ஸ விஹார ஸாரதி²
த³யா கு³ம்பே⁴ந விஸ்ரம்பி⁴த:
ஸாரஜ்ஞோ யதி³ கஶ்சித³ஸ்தி ப⁴வதே
நாத²ஸ்ஸ ஏவாஸ்து ந: ॥

இதி ஶ்ரீகவிதார்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்³வேங்கடநாத²ஸ்ய வேதா³ந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஶ்ரீமத்³ரஹஸ்யத்ரயஸாரே
ஸாரநிஷ்கர்ஷாதி⁴கார: த்³விதீய:

॥ ஶ்ரீமதே நிக³மாந்த மஹாதே³ஶிகாய நம: ॥

சீரார் தூப்புற்றிருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

---

அல்பஜ்ஞர்களான நமக்கு ரஹஸ்யத்ரயங்களே ஆதரணீயம் என்பது கைமுதிக ந்யாய ஸித்தம். ‘ஆசையினுல்’ என்பதோடு அப்யஸிக்கப்பட்ட என்னும் ஒரு பதத்தைச்சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்படி உலகத்தினரால் ஆசைப்பட்டு அப்யாஸபூர்வகமாகக் கற்கப்படும் வித்யைகள் தம்மிடத்தில் அயத்ன லப்தங்களாக வந்தபோதிலும் அவைகளைத்தாம் அநாதரித்தமை தெரிவிக்கப்பட்டதாகிறது. அப்படியே ‘**தத்³வாஞ்சி²த**த்தாலே நினைத்ததெல்லாம் **ஸாதி⁴**க்கவல்லராயிருக்கச் செய்தேயிறே நாம் **அநந்ய ஶரண**ராய்ப் போருகிறது’ என்று மேலே அருளிச் செய்யப்பட்டிருப்பது இங்கனுஸந்தேயம். அன்றிக்கே ‘**வந்தாலும்**’ என்றது அஸம்பாவிதமானதை ஸம்பவிக்கிறதாக வைத்துக் கொண்டு சொல்லியிருக்கிறதாகவுமாம். ‘**தோகை**’ என்பதற்கு ‘**வ்ருத்த்யநுப்ராஸவர்ணம்**’ என்கிறபடியே கேவலம் ஸங்க்யா பூரணமாகச் சொல்லக்கூடியவைகள் என்றர்த்தம். அல்ப ஶ்ரமத்தினுலே அதிக பலத்தை அடைவது ‘**சதிர்**’

(சாதுர்யம்), அப்படிப்பட்ட நிலை '**சதிர்க்கும் நிலை**'. '**தனி** நிலை' என்பதினால் இந்நிலை வானுளமர்ந்தவர்க்கும் வருந்தவரும் நிலையாகையினாலே ஒப்பற்றது என்பது தெரிவிக்கப்படுகிறது.

இப்படி ரஹஸ்யத்ரயங்கள் ஸாரதமமானாலும் இதை அறிந்தவன் ஸம்ப்ரதாயார்த்தங்களில் க்ருத்ஸ்நவித்தாகக் கூடியவனோ? என்கிற ஶங்கையையும், எல்லா அர்த்தங்களும் ஓரோரு ரஹஸ்யங்களிலும் இருக்கிறபடியினாலே ஒன்றே போராதோ? என்கிற ஶங்கையையும் பரிஹரித்துக்கொண்டு இந்த ரஹஸ்யத்ரயார்த்தங்களைப் பற்றிய ஜ்ஞானத்தை யுடையவனைக் கொண்டாடுகிறார்—'**ஶாகாநாம்**' என்றாரம்பித்து.

ப-ரை] **ஶாகாநாம்** - வேதஶாகைகளுக்கு, **உபரி** - மேல் பாகத்தில், அதாவது உபநிஷத்பாகத்தில், **ஸ்தி²தேந** - இருக்கிற, அதாவது ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற, **மநுநா மூலேந** - மூலமந்திரமென்று சொல்லப்படுகிற திருவஷ்டாக்ஷரத்தினால், **லப்³தா⁴த்மக:** - அறியப்பட்ட ஜீவாத்ம ஸ்வரூபத்தை யுடையவனாயும், **ஸத்தா** - ஸ்திதிக்கு, **ஹேதும்** - காரணமாகிய, **ஸக்ருஜ்ஜபேந** - ஒருதரம் உச்சரிப்பதை யுடைத்தாயிருக்கிற, **த்³வயேந** - த்வயம் என்கிற மந்திரத்தினாலே, **ஸகலம்** - எல்லா, **காலம்** - காலத்தையும், **க்ஷிபந்** - கழித்துக்கொண்டிருப்பவனாயும், **வேதோத்தம்ஸ**-வேதங்களுக்கு ஶிரோபூஷணமாயிருக்கிற, அதாவது உபநிஷத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற, **விஹாரஸாரதி²** - விளையாட்டினால் ஸாரதியான ஸ்ரீ க்ருஷ்ணனுடைய, **த³யாகு³ம்பே²ந** - தயையினாலுண்டான ஸந்தர்ப்பத்தினால், அதாவது க்ருபையினால் சொல்லப்பட்ட சரம ஶ்லோகத்தினால், **விஸ்ரம்பி⁴த:** - விஶ்வாஸத்தை உண்டாக்கப்பட்டவனாயும், **ஸாரஜ்ஞ:** - ரஹஸ்யத்ரயங்களின் ஸாரார்த்தத்தைத் தெரிந்து கொண்டவனாயும், **கஶ்சித்** - ஒருவன், **பு⁴வநே**-இந்த லோகத்தில், **அஸ்தி யதி³** - இருக்கிறானேயானால், **ஸ:** - அவன், **ந:** - நம்முடைய, **யூத²ஸ்ய** - கும்பலுக்கு, அதாவது ப்ரபந்ந ஸமுதாயத்திற்கு, **நாத²:** - யஜமானன்.

'**ஶாகாநாமுபரிஸ்தி²தேந**' என்பதினால் அதர்வ ஶிரஸ்ஸு முதலிய உபநிஷத்துக்களில் அக்ஷரஸங்க்யையுடன்

திருவஷ்டாக்ஷரம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரி விக்கப்படுகிறது. '**ஞூவ்யா த்மக:**' என்பதினுல் திருமந்திரம் ஸ்வரூப ப்ரதிபாதனபரம் என்பது விவக்ஷிதம். '**ஸத்தா ஹெ ததூ**' என்கிற இடத்தில் '**ஸதெ்தே**' யென்பது ஸ்வரூப பரமாஞலும் அது '**ஞூவ்யாத்மக:**' என்று சொல்லப்பட்டபடியினுல் அதின் அநுவ்ருத்தி ரூபமான ஸ்திதியைச் சொல்லுகிறது, அன்றிக்கே லக்ஷணையாக ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைச் சொல்லு கிறதாகவுமாம். அன்றிக்கே '**ஸதெ்தே**' என்றது ஸத்துக்களின் ஸ்வபாவம், அதாவது '**ஞூவவுஜெ்யி ஸஹூவம் ஐக்ஷ்ணவஸு) உஹாத்மந:**' என்று ஸ்ரீமத்ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக் கிறபடியே பகவத் கைங்கர்யம், என்றர்த்தமாகவுமாம். அதுவு மன்றிக்கே '**ஸதெ்தே**'யாவது 'ப்ரும்மத்தைப்பற்றிய ஜ்ஞானம் இருந்ததேயாகில் அவனை இருப்பவனுகஅறிகிருர்கள்'என்றர்த்த முள்ள ஶ்ருதிவாக்யத்தில் சொல்லப்படுகிற பகவதனுபவமாகவு மாம். '**ஸத்தாஹெததூ ஸகூஜ்ஜவெந**' என்பதற்கு ப்ரபத்தி செய்யும்பொழுதுகரணமந்த்ரமாகையினுல் ஒருதரம் ப்ரயோகிக் கப்பட்டதாய்க்கொண்டு கீழ்ச் சொல்லிய ஶேஷத்வ ஸ்வரூபாநு வ்ருத்தி, பகவத் கைங்கர்யம், பகவதனுபவம், இவைகளை உண் டாக்குகிற என்றர்த்தம். 'த்வயம் ஒருதரம் உச்சரித்தவனை ஸம்ஸாரத்தைத் தாண்டுவிக்கிறது' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் இங்கு விவக்ஷிதம். '**ஸகூஜும் காமும்**' என்பதினுல் '**அயமெ்ரா ந ஸாஸாரெந ஸஹ ஸஜெவம் வகூ**' இத்யாதிகள் விவக்ஷிதம். '**வெஜொத்தும்ஸ**' இத்யாதியினுல் உபநிஷத்துக்களில் சொல்லப்படுகிற பரம புருஷனே தன்னுடைய லீலைக்காக ஸாரதியாக வந்தான் என்பதினுல் ப்ரமவிப்ரலம்பாதி தோஷமில்லாமையும், ஆஶ்ரிதர்களிடத்திலுள்ள வாத்ஸல்யாதி ஶயமும் சொல்லப்படுகிறபடியினுல் ஆப்ததமத்வம் அருளிச் செய்யப்பட்டதாகிறது. ஸ்ரீ கீதா பாஷ்யத்தில் '**ஸ ஹஶவாநு வாஶஷொத்தம: ஸவெஶ்வரெஶ்வர: ஜஶஷவகூதிதஷ்: கூஶ்ஸ்வாத்ஸ்ய விவஶ: வாயம் ஶயிஙொதாநம் வ ஸாஶயிம் ஸவஜொக ஸாக்ஷீகம் வகாஶ**' என்றருளிச் செய்யப் பட்டிருப்பது இங்கு விவக்ஷிதம். **வெஜொத்தும்ஸ** - உப நிஷத்பாகங்களில், **விஹாஶ** - விஹாரத்தை யுடையவனுகிய,

அதாவது ப்ரதிபாதிக்கப்பட்ட, **ஸாரதி**, என்று அர்த்தம். அன்றிக்கே விஹாரத்திற்காக(லீலைக்காக)ஸாரதி என்றர்த்தமாகவுமாம். அதாவது '**நஹி ப்ரஜாநாமி**' என்று கேட்ட அர்ஜுநனுக்கு '**காலோஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ லோகாந் ஸமாஹர்த்துமிஹ ப்ரவ்ருத்த:**' என்று பகவானே கீதையில் ஸமாதானம் அருளிச் செய்திருக்கிறபடியே பூபாரநிவாரணமாகிய லீலைக்காக ஸாரதியானன் என்று தாத்பர்யமாகவுமாம். '**விஹார ஸாரதி**' என்பதினால் கர்மபரவஸர்களான நம்மைப்போல் ப்ரயோஜநாந்தரங்களுக்காக ஸாரத்யம் செய்யவந்தவனல்ல. '**ஸ்வஸ்யைவ ஸமர்த்தஸ்ய தாஸ்யேநாந்யஸ்ய பார்த்தந: । ஹயவத் ஹஸ்த ப்ரேஷகம்**' இத்யாதி இவர் தம்மாலேயே அருளிச் செய்யப் பட்டிருக்கிறபடியே லீலையினாலேயே ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தை வஹிக்கிறான் என்பது த்யோதிதம். '**தயா ஸம்ஹேந**' என்பதற்கு அர்ஜுநனிடத்தில் உண்டான நிரவதிக க்ருபை கரைபுரண்டு இந்த சரமஸ்லோக ரூபமாகப் பரிணமித்தது என்று தாத்பர்யம். இந்த அர்த்தம் மேலே சரமஸ்லோகாதிகாரத்தில் வ்யக்தயமாயருளிச் செய்யப்பட்டிருக்கிறது. பகவானே வக்தாவாகையினால் வக்த்ரு வைலக்ஷண்யத்தினாலும், க்ருபையின் பரீவாஹமாக வழிந்ததாகையினால் வசன வைலக்ஷண்யத்தினாலும், இது மிகவும் விஸ்வஸநீயம் என்பது த்யோதிதம். இத்தால் ரஹஸ்யங்களில் ஒவ்வொன்றிலும் எல்லா அர்த்தங்களுமிருந்தபோதிலும் ஸ்வரூபஜ்ஞானத்தை உண்டாக்குகை, ஒருதரம் உச்சரிக்கப் படுவதினால் ஸம்ஸாரத்தைத் தாண்டிவைக்கும் ஶக்தியுடன் காலக்ஷேபார்த்தமாக ஸர்வதா அநுஸந்தேயமாயிருக்கை, மஹா விஸ்வாஸத்தை உண்டு பண்ணுகை, ஆகிற ப்ரயோஜன விஶேஷங்கள் தனித்தனியாக இருப்பதினால் இவை மூன்றும் அநுஸந்தேயம் என்று ஸமாதானம் அருளிச்செய்யப் பட்டதாகிறது. '**ஸாரஜ்ஞ:**' என்பதினால் இப்படி ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தத்தை அறிந்தவன் க்ருத்ஸ்நவித்தாக இல்லாமற்போன போதிலும் ஸம்ப்ரதாயத்தில் அவஶ்யம் ஜ்ஞாதவ்யங்களான அர்த்த விஶேஷங்களை யறிந்தவனாகையினால் ஸம்ப்ரதாய ப்ரவசன துரந்தரனாவான், அஸாரமான அர்த்தங்களைத் தெரி

யாததினுல் ஒரு ந்யூநதையும் வாராது என்று ஸமாதானம் தெரிவிக்கப்பட்டதாகிறது. '𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌤𑌃' என்பதற்கு இப்படி ஸாரார்த்தங்களைப்பற்றிய அநுஷ்டான பர்யந்தமான ஜ்ஞானத்தையுடையவன் துர்லபன் என்று தாத்பர்யம். '𑌨𑌾𑌥𑌸𑍍𑌸 𑌯𑌸𑍍𑌯𑌸𑍍𑌸 𑌨𑌃' என்று பாடாந்தரம். அப்பொழுது இப்படிப்பட்ட ஸாரஜ்ஞன் அவனுடைய பரிஜனங்களோடு கூட நமக்கு நாதன், அதாவது அவனும் அவனுடைய பரிஜனங்களும் நமக்கு நாதர்கள் என்று தாத்பர்யம். '𑌨𑌃' என்கிற பஹுவசனம் தன்னையும் தன்னைப்போன்றவர்களையும் சேர்த்துச் சொல்லுகிறது.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்
**ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமிகளினுல்**
செய்யப்பட்ட

**ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார வ்யாக்யானத்தில்**
ஸாரநிஷ்கர்ஷாதிகாரம்
முற்றிற்று.

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

# ப்ரதானப்ரதிதந்த்ராதிகாரம்.

[ப்ரதிதந்திர ஶப்தார்த்தம்—ஶரீர ஶரீரி லக்ஷணம்—ஆதேயத்வாதி நிரூபணம்—நிரூபண ப்ரயோஜனம்—ரஹஸ்யத்ரயத்தில் இந்த அர்த்தங்கள் கிடைக்கும் ப்ரகாரம்—திருமந்திரார்த்தானுஸந்தானார்த்தம் அப்புள்ளாரருளிச்செய்த விரது—ஶேஷ ஶேஷிபாவ ஸம்பந்தத்தின் விஶேஷமான தாஸத்வ ஸ்வாமித்வ நிரூபணம்.]

ஆதேயத்வ ப்ரப்ருதி நியமைராதி கர்துஶ்ஶரீரம்
ஸத்தா ஸ்தேம ப்ரயதந ஃபலேஷ்வஸ்ய ததாயத்தவ்ருத்தே: ।
விஶ்வம் பஶ்யந்நிதி பகவதி வ்யாபகாதஸ்ய ஶேஷ-
ஶம்ஸீராணாம் அக்ருதககிராம் ஸாஹதே வித்தவ்ருத்திம் ॥

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே ஶ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

இப்படி ரஹஸ்யத்ரய வ்யாக்யான ரூபமான இந்த ஶாஸ்திரம் ஆரம்பணீயம் என்று கீழ் இரண்டதிகாரங்கள் அடங்கிய ஒரு பேடிகையினால் ஸமர்த்தித்தருளி, இனி ரஹஸ்யத்ரய வ்யாக்யானம் ஆரம்பிக்கப் போகிறவராய், அதில் ப்ரதிபாதிக்கப்படும் தத்வஹித புருஷார்த்தங்களை விஸ்தாரமாக நிரூபிக்க ஆரம்பித்து, அதில் உத்தேஶ க்ரமத்தினால் தத்வங்களை முதலில் நிரூபிக்கத்திருவுள்ளம்பற்றி, அதில் ப்ரதானமாயும், ஸித்தாந்தத்திற்கு ஆதாரமாயுமிருக்கிற ஶரீராத்மபாவத்தை இந்த அதிகாரத்தில் நிரூபித்தருளுகிறார் என்று கீழ்பேடிகையோடு இந்தப் பேடிகைக்கு ஸங்கதி கண்டுகொள்வது. 'ப்ரதிதந்த்ர' என்னும் பதம் 'ப்ரதிவாதி' இத்யாதி ப்ரயோகங்களைப்போல விருத்தமான அர்த்தம் என்பதைச் சொல்லலாமாகையினால் கீழ் அதிகாரத்தில் 'அவ்வம்ஶத்திலும் ப்ரதாந ப்ரதிதந்த்ரங்களான தத்வ ஹிதங்களுடைய ஸங்க்ரஹமாகையாலே மிகவும் ஸாரதமமாயிருக்கும்

ரஹஸ்யத்ரய' என்றருளிச்செய்திருப்பது ஸங்கதமாகுமோ? அதில் சில அர்த்தங்களை ப்ரதானம் என்று சொல்லியிருக்கிறபடியினால் நம் ஸித்தாந்தத்திற்கு அனேக ப்ரதிதந்திரங்கள் உண்டென்றும் அவைகளில் சில ப்ரதானம் என்றும் ஏற்படுகிறதே? நம் ஸித்தாந்த அர்த்தங்களெல்லாம் அவஶ்யம் ஜ்ஞாதவ்யங்களாயிருக்க அவற்றுள் சில ப்ரதானமாவதற்குக் காரணமென்ன? இத்யாதி ஆக்ஷேபங்களுக்கு இந்த அதிகாரத்தில் ஸமதானம் அருளிச்செய்கிறார் என்று கீழதிகாரத்துடன் இந்த அதிகாரத்திற்கு ஸங்கதி அறியத்தக்கது.

ப - ரை] **ஹமவதி**-பகவான், **வ்யாபகாதர்ஶ-த்ருஷ்டே (ஸதி)**-வ்யாபகமந்திரங்களாகிற கண்ணாடியினாலே பார்க்கப்பட்டிருக்கும்பொழுது, **ஸத்தா** - ஸ்வரூபம், **ஸ்திதி** - அது நீடித்திருத்தல், **ப்ரவ்ருத்தி** - ப்ரவ்ருத்தி, **ஃபலம்** - ப்ரயோஜனம், இவைகளில், **ததாயத்தம்** - இந்தப் பகவானுக்கு வஶப்பட்டதாகிய, **ஜகத்** - இந்த லோகம், **ஆதேயத்வ ப்ரப்ருதி**-ஆதேயத்வம் முதலியவைகளினுடைய, **நியமேந** - எப்பொழுதும் இருப்பதினாலே, அதாவது எப்பொழுதும் ஆதேயமாயும், விதேயமாயும், ஶேஷமாயும் இருப்பதினாலே, **ஆதிகர்த்து:** - முதலாவது கர்த்தாவாகிய பகவானுக்கு, **ஶரீரம்** - தேஹம், **இதி** - என்று, **விஶ்வம்** - ப்ரபஞ்சத்தை, **வஶ்யந்** - பார்க்கிறவன், **கம்பீராணாம்** - ஆழமுள்ள, அதாவது அறிவதற்கு அரிதான, **ஶ்ருதிஶிரஸாம்** - வேதங்களினுடைய, **சித்தவ்ருத்திம்** - தாத்பர்யார்த்தத்தை, **ஜாநீதே** - அறிகிறான்.

இங்கு 'ப்ரப்ருதி' என்னும் பதத்தினால் விதேயத்வமும், ஶேஷத்வமும் குறிக்கப்படுகின்றன. இத்தால் ஸர்வதா இந்த ப்ரபஞ்சம் ஆதேயமாயும் விதேயமாயும் ஶேஷபூதமாயும் இருக்குமென்றதாயிற்று. எந்தச் சேதனனுக்கு எந்த வஸ்து தானிருக்குமளவும் ஆதேயமாயும், விதேயமாயும், ஶேஷபூதமாயும் இருக்கிறதோ அப்படிப்பட்ட வஸ்து அந்தச்சேதனனுக்கு ஶரீரம்என்று லக்ஷணமேற்பட்டிருக்கிறது. '**ஆதேயத்வ**'மாவது அவனால் தாங்கப்பட்டிருக்கை. '**விதேயத்வ**'மாவது அவனாலே நியமிக்கப்படக்கூடியதாயிருக்கை. '**ஶேஷத்வ**'மாவது அவனுடைய ப்ரயோஜ

னத்திற்காகவே ஏற்பட்டிருக்கை. லோகத்தில் ஶரீரம், ஶரீரம் என்று சொல்லப்படுகிற தஸையுடன் இருக்கும்பொழுதெல்லாம் ஜீவாத்மாவினுல் தாங்கப்பட்டதாயும்,அவனுக்குநியாம்யமாயும், அவனுடைய ஸுகதுக்கங்களாகிற ப்ரயோஜனத்திற்காக ஏற்பட்டுமிருக்கிறது. அதைப்போலவே ப்ரபஞ்சம் முழுவதும் பகவானுல் தாங்கப்பட்டதாயும் அவனுக்கு நியாம்யமாயும், அவனுடைய ப்ரயோஜனத்திற்காக ஏற்பட்டுமிருக்கிற படியினுல் அவனுக்குச் ஶரீரம் என்று திருவுள்ளம். '**தததாயத்தம்**' என்பதற்கு பகவானுடைய ஸ்வரூபத்திற்கும் ஸங்கல்பத்திற்கும் அதீனப்பட்டதாயிருக்கிறதென்றர்த்தம். இது கீழ்ச் சொல்லப்பட்ட ஆதேயத்வ ப்ரப்ருதி நியமங்களை யுடையது என்று சொல்வதற்குக் காரணம். பகவானுடைய ஸ்வரூபத்தினுல் தாங்கப்பட்டிருப்பதினுல் ஆதேயம் என்கிறது. அவனுடைய ஸங்கல்பத்திற்கு வஶப்பட்ட ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளையுடையதாகையினுல் நியாம்யம் என்கிறது.பலத்திலும் அவனுடைய ஸங்கல்பத்திற்கு வஶப்பட்டிருப்பதினுல்,அதாவது அவனுடைய ப்ரயோஜனத்தையே தனக்கு ப்ரயோஜனமாக வுடையதாகையினுல், ஶேஷபூதம் என்கிறது. ஆக இத்தால் ஸத்தா ஸ்தேம ப்ரயதன பலங்களில் பகவானுக்கு அதீனப்பட்டிருக்கிறபடியினுல் இந்த ப்ரபஞ்சம் எப்பொழுதும் பகவானுக்கு ஆதேயமாயும் விதேயமாயும் ஶேஷமாயுமிருக்கிறதாகையினுல் ஶரீரமென்னப்படுகிறது என்று திருவுள்ளம். இதற்கு ப்ரமாணம் காட்டியருளுகிறுர்—'**ஹவதி வ்யாபகமந்த்ரேஷு**' என்று. '**வ்யாபகமந்த்ரேஷு**' என்பதற்கு வ்யாபக மந்திரங்களான திருவஷ்டாக்ஷரம், ஷடக்ஷரம், த்வாதஶாக்ஷரம்,இவைகளில் நாராயண விஷ்ணுவாஸுதேவ பதங்கள் இருக்கிறபடியினுல் அவைகள் கண்டரவேண பகவானுடைய ஸர்வாந்தர்யாமித்வத்தை ப்ரதிபாதிக்கின்றன என்று தாத்பர்யம். அதாவது ப்ரத்யக்ஷத்தில் பார்க்கும்பொழுது தெரியாத சில ஸூக்ஷ்ம பாகங்கள் பூதக் கண்ணுடியினுல் பார்க்கும்பொழுது தெரிவதைப்போல ப்ரத்யக்ஷத்தில் ஸ்வதந்திரமாகத்தோன்றும் இப்ரபஞ்சங்கள் வ்யாபக மந்திரங்களினுல் பார்க்கப்படும்பொழுது புகவானுக்குச் ஶரீரமாய்த்தோன்றுகின்றன என்று தாத்

ப்ரதிதந்த்ர ஸப்தார்த்தம்.

ப்ரதிதந்த்ரமாவது மற்றுமுள்ள விஜ்ஞாநிக ளொருவரு மிசையாதே தன்னுடைய விஜ்ஞாநத் துக்கே அஸாதாரணமான விஷயம். இங்கு வைதிக

---

பர்யம். 'ஶாஸ்த்ராணாம்' என்பதினால் இவ்வர்த்தம் அறியாதவனால் ஶ்ருதியின் அர்த்தம் அறிய முடியாது என்பது தெரிவிக்கப்படுகிறது. 'அக்ருதகஶிரஸாம்' என்பதினால் எல்லாப்பாகங்களும் ப்ரமாணதமமாகையினால் தனக்கு விருத்தமான சில ஶ்ருதிகளை அப்ரமாணம் என்று சொல்லுவது அஸங்கதம் என்பது த்யோதிதம். 'ஶாஹதே வித்தவ்ருத்திம்' என்பதற்கு இப்படி முழுமையும் ப்ரமாணமாய் இதரர்களாலே அறிய முடியாததுமான ஶ்ருதிகளின் தாத்பர்யார்த்தம் ஒரு ஶ்ருதிகளுக்கும் அப்ராமாண்ய கல்பனைபண்ணாமல் மிகவும் ஸுலபமாய் அறியப்படுகிறது என்றர்த்தம். இத்தால் இந்த ரஹஸ்யத்ரயத்தின் ஸாரார்த்தத்தைத்தெரிந்தவன் கிஞ்சிஜ்ஞனாயிருந்தபோதிலும் ஸம்ப்ரதாயத்தின் ஸாரார்த்தத்தை அறிந்தவனாகையினால் ஸம்ப்ரதாய துரந்தரனாவான் என்று கீழ் அதிகாரத்தின் ஸங்க்ரஹ ஶ்லோகத்திலருளிச்செய்யப்பட்டது விவரிக்கப்பட்டதாகிறது. எப்படியென்னில்:—ஸர்வஶ்ருதி தாத்பர்யார்த்தமான ஶரீராத்மபாவம் திருமந்திரத்தில் ப்ரதிபாதிக்கப் படுகிறபடியினால் இதை அறிந்தவன் ஸகலார்த்தங்களையு மறிந்தவனாகிறான்—என்று. ப்ரதான ப்ரதிதந்திரம் என்கிற பதத்திற்கு அர்த்தம் அருளிச்செய்கிறார்— 'ப்ரதிதந்த்ரமாவது' என்றாரம்பித்து. இவ்விடத்தில் ஸ்ரீமந் ந்யாய பரிஶுத்தியில் 'ஸ்வதந்த்ர ஸ்வ விஜ்ஞ: பரதந்த்ர நிஷித்த: ப்ரதிதந்த்ர விஜ்ஞாந:, யதா வையாகரணஸ்ய ஸ்போட:, ஸௌகதஸ்ய க்ஷணபங்க:, திகம்பரஸ்ய ஸப்தபங்கீ, காணாதஸ்யாதே: ஶப்தப்ரஹ்மவாதிந: ஶ்ருஜயதா, த்ரைவிதம் ஸம்ஶிதா: ஸர்வ ஶரீரவாதி ஜீவ விஜ்ஞாநாந்தராநப்யுபகம ப்ரதிஷிதாயா ஏவ ப்ரதிதந்த்ரா:' என்று அருளிச் செய்யப்பட்டிருப்பதும், இதின் வ்யாக்யானமாகிய ஸ்ரீ ந்யாயஸாரத்தில் 'ஸ்வதந்த்ரே தந்த்ர விஶேஷஸ்ய ப்ரதிதந்த்ராபியீபதே' என்று அருளிச் செய்யப்

**ளான நம்முடைய உபநிஷத்துக்கே அஸாதாரணமு மாய் ப்ரதாநமுமான அர்த்தமேதென்னில்:—சேதநா சேதநங்களுக்கு மீஶ்வரனுக்கு முண்டான ஶரீராத்ம பாவஸம்பந்தாதிகள். அதில் ஈஶ்வரனுக்கு ஶரீரித்வமா வது, சேதநா சேதந த்ரவ்யங்களைப்பற்ற நியமேந தாரகனுமாய், நியந்தாவுமாய், ஶேஷியுமாயிருக்கை.**

ஶரீர ஶரீரி லக்ஷணம்.

---

பட்டிருப்பதும் அநுஸந்தேயம். ப்ரதான ப்ரதி தந்திரம் என்று சொல்லப்படுகிற அர்த்தத்திற்கு ப்ராதாந்யம் ஸர்வ ஶ்ருதி களுக்கும் விரோதமில்லாமல் அர்த்தம் சொல்லுவதற்குக் காரணமாயிருக்கை, நம் ஸித்தாந்தத்திற்கு ஆதாரமாக இருக் கை, வாதிகளை ஜயிப்பதற்குக் காரணமாயிருக்கை, ஆகிய மூன்று. இவைகளில்முதல் காரணம் கீழ் ஶ்லோகத்தில் அருளிச் செய்யப்பட்டது. கடைசி காரணம் மேல் அதிகார ஸங்க்ரஹ ஶ்லோகத்தில் அருளிச் செய்யப்படப்போகிறது. மற்றொ ன்று அதிகாரவாக்யங்களில் அருளிச் செய்யப்படுகிறது. **இசை யாதே** - ஒப்புக்கொள்ளாதே. '**வேதாந்திகளான நம்முடைய உபநிஷத்துக்கே**' என்பதினால் த்வைதம், அத்வைதம், விஶிஷ் டாத்வைதம், ஆகிய மூன்றும் வேதாந்தங்களையே ப்ரமாண மாகக்கொண்டு அதிலிருந்து உண்டானவையாயிருக்க மற்றவர் களால் ஒப்புக்கொள்ளப்படாமல் நமக்கு மாத்திரம் அஸாதா ரணமான அர்த்தம் இருக்கக்கூடுமோ? அப்படி இருந்தாலும் அவைகளுக்குள் ப்ரதான அப்ரதான விவக்ஷை எப்படி? என்று ஶங்கையின் தாத்பர்யம் த்யோதிதம். '**ஸ்ருதி**' ஶப்தத்தி னால் ஸர்வஶப்த வாச்யத்வம், ஸர்வகர்ம ஸமாராத்யத்வம், ஸர்வ பலப்ரதத்வம், முதலியவை விவக்ஷிதம். **த்ரவ்யங்களைப்பற்ற** - த்ரவ்யங்களைக்குறித்து. **நியமேந**-அந்த வஸ்து உள்ளவரையி லும். இவ்விடத்தில் ஆத்மாவிற்கு தாரகனாயிருக்கையும் ஶரீரத் திற்கு தார்யமாயிருக்கையும் லக்ஷணம் என்று சொல்லில் சுமை களுக்கும், அவைகளைத் தரிக்கிற மனுஷ்யாதிகளுக்கும் ஶரீராத்ம பாவம்வரும்படி நேரிடும்; இப்படியே நியாம்யத்வம் மாத்திரமும் ஶரீர லக்ஷணமல்ல, ஏனெனில் யஜமானன் வேலைக்காரனை நிய மிக்கும் பொழுது ஶரீராத்மபாவம்வரும்படி நேரிடுமாகையினால்;

கேவலம்ஶேஷமாயிருக்கையும் ஶரீரமாயிருப்பதற்குலக்ஷணமல்ல, வஸ்திராதிகளைத் தரித்துக்கொண்டிருக்கும்பொழுது அந்த வஸ்திரம்இவனுக்குச்ஶரீரமாகவேண்டிவருமாகையினால்; இவைகளைத் தடுப்பதற்காக '**நியமேந**' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஶரீரலக்ஷணத்தில் '**த்ரவ்யமாயிருக்கை**' என்கிற விஶேஷணத்தை எல்லாவற்றுடனும் அந்வயித்துக் கொள்ளவேண்டும். ரூபம் முதலிய குணங்கள் அவ்வோ வஸ்துக்களினால் தரிக்கப்பட்டிருப்பதினாலும், க்ரியைகள் அந்தந்த த்ரவ்யங்களின் ஸங்கல்பப்படி நடத்தப்படுகிறபடியினாலும், கீழ்க் கூறப்பட்டவைகள் அந்தந்த த்ரவ்யங்களுக்குச் ஶேஷபூதமாகையினாலும் ரூபம்,க்ரியை, முதலியவைகள் த்ரவ்யங்களுக்குச் ஶரீரம் என்று சொல்லவேண்டிவருமாகையினால் அதை விலக்குவதற்காக '**த்ரவ்யமாயிருக்கை**' என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. இவை மூன்றும் தனித் தனியே மூன்று லக்ஷணங்களாக **ஸ்ரீ**மந் ந்யாயஸித்தாஞ்ஜனம் முதலிய க்ரந்தங்களில் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதெப்படி என்னில்:-எந்தச்சேதனனுக்கு எந்த அவஸ்தையையுடைய த்ரவ்யம் தான் அந்த அவஸ்தையோடு கூடியிருக்கும் வரையில் அவனால் தரிக்கப்பட்டதாயிருக்கிறதோ அது அவனுக்குச் ஶரீரம், அப்படித்தரிப்பவன் ஆத்மா என்றும்; எந்தச்சேதனனுக்கு எந்த அவஸ்தையையுடைய த்ரவ்யம்தான் உள்ளவரையில் அவனைவிட்டுப் பிரிந்திருக்கக் கூடாததாயும், தன்னால் ஶக்யங்களான கார்யங்களில் அந்தச் சேதனனால் நியமிக்கப்படக்கூடியதையே ஸ்வபாவமாகவுடையாதாயிருக்கிறதோ அது அவனுக்குச் ஶரீரம் என்றும் ; எந்தச் சேதனனுக்கு எந்த அவஸ்தையையுடைய த்ரவ்யம் தானுள்ளவரையில் அவனுக்குச் ஶேஷபூதமாகவே இருக்கிறதோ, அதாவது அவனுடைய ப்ரயோஜனத்திற்காகவே ஏற்பட்டிருக்கிறதோ, அது அவனுக்குச் ஶரீரம் என்றும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் இவை மூன்றும் சேர்ந்து ஶரீரத்திற்கு லக்ஷணங்களா ? தனித்தனியே லக்ஷணங்களா ? தனித்தனியே லக்ஷணங்கள் என்று சொல்லில் '**ஆதேயத்வ விதேயத்வ ஶேஷத்வாநி ஶரீரஶப்த ப்ரவ்ருத்தி நிமித்தாநி**'என்று மூன்றும் சேர்ந்து ஶரீரஶப்தத்திற்கு அர்த்தம் என்கிற **ஸ்ரீ**பாஷ்ய வாக்யத்திற்கு விரோதமாகும். மூன்றும் சேர்ந்து

**சேதநாசேதநங்களுக்கு ஶரீரத்வமாவது, நியமேந ஈஶ்வரனைப்பற்ற ஆதேயமுமாய், விதேயமுமாய், ஶேஷமுமான த்ரவ்யமாயிருக்கை. சேதநாசேதநங்களைப்பற்ற ஆதாரனுமாய், நியந்தாவுமாகையாவது, தன் ஸ்வரூபத்தாலும் ஸங்கல்பத்தாலும் யதார்ஹம் ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்குப் ப்ரயோஜகனாயிருக்கை. அதெங்ஙனே யென்னில்:—ஈஶ்வரன் தன் ஸ்வரூப**

ஆதேயத்வாதி நிரூபணம்.

---

லக்ஷணமென்னில் ப்ரயோஜனமில்லாமையினால் கௌரவம் வருகிறது. ஆகையினால் எந்தச் சேதனனுக்கு எந்த அவஸ்தையோடு கூடின த்ரவ்யம் அப்ருதக்ஸித்த விஶேஷணமோ அது அவனுக்குச் ஶரீரம். இங்கு அப்ருதக்ஸித்தமாயிருக்கையாவது தான் உள்ளவரையிலும் அத்துடன் ஸம்பந்தப்படாமல் இருக்கமுடியாததாயிருக்கை. ஆதேயத்வ விதேயத்வ ஶேஷத்வங்கள் ஸம்பந்தத்தைச் சொல்லுகிற அப்ருதக் ஸித்த மென்பதற்கு உள்ளடங்கிய அர்த்தங்களாகையினால் விரோதமில்லை யென்று ஸ்ரீமந் ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் ஸமாதானம் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ரூபமில்லாத ப்ரும்மஸ்வரூபம் ஆதாரமென்பதும், அசேதனங்களைப்பற்றி ஆஜ்ஞாபிக்கிறதாகிய நியமனமும் ஸம்பவியாதே என்று ஶங்கித்து ஆதேயத்வம் முதலியவைகளை நிரூபிக்கிறார்—'**சேதநாசேதநங்களை**' என்றாரம்பித்து. '**யதார்ஹம்**' என்பதற்கு அததற்குத் தக்கபடி என்றர்த்தம், அதாவது ஸ்வரூபத்தாலே ஸத்தா ஸ்திதிகளுக்குக் காரணமாயிருக்கை தாரகத்வமென்றும், ஸங்கல்பத்தினாலே ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்குக் காரணமாயிருக்கை நியந்த்ருத்வம் என்றும் தாத்பர்யம். இப்படிச் சேதனாசேதனங்களுடைய ஸ்வரூபங்களுக்கு இவன் ஆதாரமென்னில்,ப்ரத்யக்ஷத்தில் ஸ்வதந்திரங்களாக அவைகள் தோன்றுகிறபடியினால் விரோதமாகாதோ? ஸ்வவ்யதிரிக்தங்களான ஶப்தஸ்பர்ஶாதிகளுக்கும் ஆதாரமென்னில் '**ஈஶாவாஸ்யம்**' இத்யாதி வாக்யம் விரோதியாதோ? அப்படிக் கில்லை என்னில் ஸர்வஶரீரத்வபங்கம்வாராதோ? என்றிவை முதலிய ஶங்கைகளைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு அவைகளுக்கு ஸமாதானம் அருளிச்செய்கிறார்—'**அதெங்ஙனே யேன்**

**நிரூபக தர்மங்களுக்கும் நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான குணங்களுக்கும் போலே ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த த்ரவ்யங்களுக்கும் அவ்யவஹிதமாக ஸ்வரூபேண**

---

திக தஶையில் வந்தால் அவித்யா கல்பிதங்களென்றும், இப்படியே இன்னும் பலவிதமாகச் சொல்லுமவர்கள் வேதியர்களல்லவென்கையினால் அவர்கள் விலக்கப்படுகிறார்கள். இங்கு 'स्ववेदान्ताः स्वामी निहितममतयः संस्कारमते तदक्षः प्रामाण्यं प्रमितमिह वेदवचसाम् । [illegible] इति।' என்கிற ஸ்ரீதத்வஸார ஸ்லோகம் அனுஸந்தேயம். 'மெய்ப்பொருளே' என்பதற்கு மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் இதுவே என்று தாத்பர்யம். இங்கு 'வேதியர் மெய்ப்பொருளே' என்பதினால் ப்ரபந்த ஜனஸந்தான கூடஸ்தராய் கலியுகத்தில் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதம ப்ரவர்த்தகராய் பகவானால் மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார் 'திடவிசும்பு' என்கிற பாட்டில் நிஷ்கர்ஷித்தருளிச் செய்ததும், ஸ்ரீமந் நாதமுனி

ப்ரப்ருதிகளான நம்பூர்வாசார்யர்களினுல் அங்கீகரிக்கப்பட்டது மான தத்வார்த்தம் இதுவேஎன்பதும்தெரிவிக்கப்பட்டதாகிறது.

இப்படி இந்தச் ஶரீர ஆத்மபாவம் ப்ரதானமென்பதற்குக் கீழ் இரண்டு காரணங்களை யருளிச்செய்து மூன்றுவது காரணமாகிற வாதிகளை ஜயிப்பதற்குக் காரணமா யிருக்கையை ஸங்க்ரஹித்தருளுகிருர்—'**யஜெ௷தம்**' என்ருரம்பித்து.

ப - ரை] **ஏ௷தம்** - இந்த, **யதிஸாவ ஹஹளஃ**-ஸ்ரீபாஷ்யகாரரினுல், **க்ஷயிதம்**-ஸ்ரீபாஷ்யாதிகளில் அருளிச் செய்யப்பட்ட, **அவி௷ாதஃஹூத௷ஷம்**- அவித்யையாகிறஇருட்டுக்குவிடியற்காலமாயிருக்கிற,**ஹூதிதஞு ம்**-ப்ரதானப்ரதிதந்திரத்தை,**அஜிஃயாமெ**-இந்தக்கடைசி யுகத்தில், **விவஶ்விதஃ**-பண்டிதர்களுக்குள் சிறந்த, **கஶ்சிஃ** - ஒருவன், **விஜாஜீ** - அறிவானேயானுல், **தஜு ஏகஜெ** - அவன் ஒருவனிடத்திலேயே, **தததத**- அந்தந்த மதங்களுடைய, அன்றிக்கே அவரவர்களின் மதங்களினுடைய, **ஸூாவநா** - ஸ்தாபிப்பதில் உண்டான, **ஹெவாக**-குதூஹலத்தினுல், **ஹூயஶா ந** - வ்ருத்தி யடைந்திருக்கிற, இது '**கொலாஹல**'த்திற்கு விஶேஷணம், **ஹெதுக** - ஹேதுவாதம் பண்ணுகிறவர்களுடைய, **கயா** - வாதங்களாகிற, **கலொல** - அலைகளுடைய, **கொலாஹலஃ** - கோலாஹலம், **ஊடிதி** - சீக்கிரத்தில், **விலயம்**-நாஶத்தை, **உவெதி**-அடைகிறது.

இங்கு '**யதிஸாவஹஹளஃக்ஷயிதம்**' என்பதினுல் இவ்வர்த்தம் ஸ்ரீ பாஷ்யாதிகளில் ஸ்ரீ பாஷ்யகாரரினுல் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டது என்பது தெரிவிக்கப்படுகிறது. '**அவி௷ாதஃஹூத௷ஷம்**' என்பதினுல் இது உபாயானுஷ்டானத்திலே மூட்டி பரம்பரையாகக் கர்மங்கள் நஶிப்பதற்குக் காரணம் என்பது த்யோதிதம். '**அஜிஃயாமெ**' என்பதற்கு இது க்ருதயுகாதிகளில் ப்ரஸித்தமாயிருந்தது, இப்பொழுது யுகஸ்வபாவத்தினுல் மறைக்கப்பட்டிருக்கிறது என்றர்த்தம். '**கஶ்சிவிவஶ்சிதஃ**' என்பதினுல் 'வாஸுதெவஃ ஸவ஫ிதி ஸமஹாத்மா ஸுது஖ஹஃ', 'கஶ்சிநாம் வெதுதத்வதஃ' என்று சொல்லுகிறபடியே பகவானுடைய ஸர்வாத்மத்வத்தை அறிந்த அதிகாரி துர்லபன் என்றேற்படுகிறது. 'தஜு ஏகஜெ' என்பதினுல் பரமதங்

களும் பரவாதிகளும் அஸங்க்யேயர்களாயிருந்தபோதிலும் தத்வவித்தாகிய ஒருவன் அவர்களுடைய வாதங்களை நிவ்ருத்தி செய்ய ஶக்தி உடையவன் என்பது த்யோதிதம். அன்றிக்கே **‘தவெதூ௯தூ’** என்பதினுல் இந்த ப்ரதான ப்ரதிதந்திரத்தை அறிந்த ஒருவன் அந்தத் துர்வாதங்களை நிவ்ருத்தி செய்யக் கூடியவனே யொழிய மற்றெருவராலும் முடியாது என்று தாத்பர்யமாகவும்மாம். அந்த ஹேதுவாதம் செய்கிறவர்களுடைய வாதங்கள் நிரர்த்தகங்களென்பதும், ஶப்தாடம்பரத்தினுலே மாத்திரம் அயலாரை மயக்கக்கூடியவைகள் என்பதும், **‘௯யூா௯லெூாறு’** என்பதற்குத் தாத்பர்யம். **‘உவகரணயதெ்ுதெ ஸாஊாநாஉற ௯ாதஷிஹஊாநாவஉநிகஈரறாவஸ ஹ்ராயெ ரவநஸ்ஸநகெ8: ၊ ஶாஷாவநாவஸஶிக்ஷாவபி8கேடரடெஉரிவிஅக’** இத்யாதி ஸ்ரீஸங்கல்பஸூர்யோதய ஶ்லோகம் இங்கு விவக்ஷிதம். இந்த ப்ரதான ப்ரதிதந்திரார்த்தத்தையறிந்தவன் அந்த வ்யர்த்தமான ஶப்தாடம்பரங்களினுல் மயங்கமாட்டான் என்பதும் தாத்பர்யம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்
**ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமிகளினுல்**
செய்யப்பட்ட

**ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார வ்யாக்யானத்தில்**
**ப்ரதான ப்ரதிதந்த்ராதிகாரம்**
**முற்றிற்று.**

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

# அர்த்தபஞ்சகாதிகாரம்.

[அர்த்தபஞ்சக ஷடர்த்தங்களின் அபேதம்—அர்த்தபஞ்சக நிர்தேஶம்—பரமாத்ம ஸ்வரூபத்தில் ஶ்ரிய:பதித்வம்—அநந்த கல்யாண குணாகரத்வம்—திவ்யமங்களவிக்ரஹ விஶிஷ்டத்வம்—உபய விபூதியோகம்—லீலாரூப ஜகத்வ்யாபாரத்வம்—ஜீவாத்ம ஸ்வரூபத்தில் பத்தமுக்த நித்ய விபாகம்—ப்ராப்த்யுபாய பல ஸ்வரூப ஸங்க்ரஹ நிரூபணம்—ப்ராப்தி விரோதி—தந்நிவ்ருத்தி ப்ரகாரம்.]

**ஸூக்ஷ்ம ப்ராப்யம் பரம் அமலம் ப்ராப்த்ருரூபம் ச ஜீவம்**
**இஷ்டோபாயம் ஸ்வயமநமஸோர்வீக்ஷிதார்த்தம் பதார்த்தம்।**
**தத்ப்ராப்தேஸ் ஸகல நிரதிசய ப்ரீதி ஆநந்தம்**
**தஸ்யோபாயம் ச பயமபி விஷ்ணு ஸ்ம்ருதத்வம் ஸேவதீ ॥**

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே ஶ்ரீ நிவாஸராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

இப்படி ப்ரதான ப்ரதிதந்திரமாகிய ஶரீராத்மபாவமே ரஹஸ்யத்ரயத்தில் ஜ்ஞாதவ்யங்களான அர்த்தங்களில் ப்ரதானம் என்றருளிச் செய்தது ஸங்கதமாகுமோ? கீழ் உபோத்காதாதிகாரத்தில் '**தத்வேந யஶ்சித்அசித்ஈஶ்வர**' **இத்யாதி**களிற்படியே ❋❋ இவ்**வர்த்த**ங்கள் **முமுக்ஷு**வான இவ்**வாத்மா**வுக்கு **ஜ்ஞாதவ்ய**ங்கள்' என்றருளிச் செய்திருப்பது விரோதியாதோ? அவைகள் ரஹஸ்யத்ரயத்தில் எப்படி ப்ரதிபாதிக்கப்படுகின்றன? என்றிவை முதலிய ஶங்கைகளை இந்த அதிகாரத்தில் பரிஹரிக்கத் திருவுள்ளம்பற்றி அதிகாரார்த்தத்தை ஸங்க்ரஹேண ஒரு ஶ்லோக ரூபமாய் அருளிச் செய்கிறார்—'**ஸூக்ஷ்ம ப்ராப்யம்**' என்றாரம்பித்து.

ப - ரை] **அமலம்** - ஹேய குணங்களில்லாததும், **பரம்** - எல்லா வஸ்துக்களையும்விட உயர்ந்ததுமாயிருக்கிற, **ப்ராப்யம்**- அடையவேண்டிய ப்ரயோஜனமாகிய பரமாத்ம ஸ்வரூபத்தை, **ஸூக்ஷ்ம** - 'அ' என்கிற அக்ஷரம் முதலிய பதங்களிலும், **ப்ராப்த்ருரூபம் ச** - அடைகிறவனாகிய ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை, **மாக்ஷ்ம** - மகாரம் முதலிய பதங்களிலும், **இஷ்டோபாயம்** - இஷ்டமான பலத்திற்கு உபாயத்தை, **ஸ்வயமநம**

**ஞெ ா௯**-முறையேஅயநஶப்தத்திலும் நமஶ்ஶப்தத்திலும்,**ஶாஂஷி தாயடிஂ**-ஆஸைப்படப்பட்ட ப்ரயோஜனத்தை, **வதூ°யடிூாஂ**- (நாராயண ஶப்தத்திற்கு மேல் இருக்கும்) நான்காம் வேற்று மையிலும், **தவூாவாதஂ** - அந்த ப்ரயோஜனத்திற்கு விரோ தியை, இங்கு விரோதத்தைச் சொல்லுகிற பதம் விரோதி யைச் சொல்லுகிறது, **ஊ கூரதிமிரி** - '௨௨' என்பதின் அர்த் தத்தைச் சொல்லுகிற ஶப்தத்திலும், அதாவது 'ந௦௦' என் கிற பதத்திலிருக்கும் '௦௦' என்பதிலும், **வ்ூஂஜயஙூ** - ப்ர காஶம் செய்கிற, **தஂ** - அந்த, **உநஂ** - திருவஷ்டாக்ஷரத்தை யும், **தஜ ஷுாயஂவ** - அதற்கு ஸமானமாயிருக்கிற, **அய உஷி** - இரண்டையும், அதாவது த்வயத்தையும், சரமஶ்லோ கத்தையும், **விஷுநு** - தெரிந்துகொண்டவன், **ஶவடூவெஷீ**- எல்லாவற்றையும் தெரிந்தவனுக, **ஶஂஉதஃ** - எண்ணப்பட் டான்.

'**ஆூஜள**' என்பதற்கு '**கஃ ஆூஜிஃ யஸ்ூ**' (அகாரத்தை முதலாவதாக உடைய)' என்கிற வ்யுத்பத்தியினுல், ப்ரண வத்தில் இருக்கும் அகாரம், நாராயணஶப்தம், இவைகளில் என்றர்த்தம். '**வாஉஂ சுநவஂ**' என்பதற்கு ஹேயகுணங் களில்லாததென்றும், குணங்கள், விபூதிகள், இவைகளினுல் ஸர்வோத்க்ருஷ்டமென்றும் தாத்பர்யம். '**ஊஷள**' என் பதற்கு ப்ரணவத்திலிருக்கும் மகாரம், நாரஶப்தம், இவைக ளில் என்றர்த்தம். '**ஐஷொவாயஂ சுவயந நஉஞெ ா௯**' என்பதற்கு ஸித்தோபாயமாகிய பகவான் அயந ஶப்தத்தி லும், ஸாத்யோபாயமாகிய ப்ரபத்தி நமஶ்ஶப்தத்திலும் ப்ரதி பாதிக்கப்படுகிறது என்று தாத்பர்யம். '**தவூாவாதஂ ஊஊ கூரதிமிரி**' என்பதற்கு நமஶ்ஶப்தம் அநிஷ்ட நிவ்ருத்தி யைச் சொல்லுகிற யோஜனையில் '**௦௦**' என்பது அநிஷ்டங்க ளாகிற விரோதிகளைச் சொல்லுகிறது என்று தாத்பர்யம். '**ஊஊ கூரதிமிரி**' என்பதற்கு மமகாரத்தினுடைய ஶப்தம், அதாவது மமகாரர்த்தின் அர்த்தத்தைச் சொல்லுகிற '**௦௦**' என் கிற ஶப்தத்தில் என்றர்த்தம். '**தஂ உநஂ**' என்றது ப்ர ஸித்தமான திருவஷ்டாக்ஷரத்தை. இங்கு '**அயஂ**' என்றது மந்திர ரத்தினமாகிற த்வயத்தை. '**அவி**' என்பதினுல் சரம

அர்த்தபஞ்சக ஷடர்த்த அபேதம்.

**நாராயணாதி ஸூக்தங்களிலே விவக்ஷிதமான ஸம்பந்தவிசேஷத்தை ஸித்தாந்தத்துக்குத்தளமாக்கி இத்தை யதநுஸந்தித்திருக்குமர்த்த பஞ்சகத்தை சிலர் விவா**

---

ஸ்லோகம் குறிக்கப்படுகிறது. அன்றிக்கே **'த்வயே'** என்றதற்கு த்வயம் சரமஸ்லோகம் ஆகிய இரண்டையும் என்றர்த்தமாகவுமாம். **'ததுபாயம் ச'** என்பது திருமந்திரத்திலேபோல இந்த அர்த்த பஞ்சகங்கள் மற்றவைகள் இரண்டிலும் ப்ரதிபாதிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவிக்கிறது. இது மேலே அதிகாரத்தில் ஸ்பஷ்டமாக ப்ரதிபாதிக்கப் படுகிறது.

இவ்விடத்தில் ஸரீராத்மபாவ ஸம்பந்தமும், இந்த அர்த்த பஞ்சகங்களும் அவஸ்யம் அறியவேண்டியதாயிருக்கச் சிலர் அர்த்த பஞ்சகத்தை அறியவேண்டுமென்று தனித்தருளிச் செய்ததற்குக் காரணத்தை நிரூபித்தருளுகிறார்—'**நாராயணாதி**' என்றாரம்பித்து. **'ஆதி'**ஸப்தத்தினால் ப்ரணவம் குறிக்கப்படுகிறது. **'விவக்ஷிதமான'**என்பதற்கு நேரில் பதத்திற்கு அர்த்தமாகவல்லாமற் போனபோதிலும் தாத்பர்யத்தில் ஏற்பட்டதான என்றர்த்தம். **ஸம்பந்தவிசேஷத்தை**-ஸரீராத்ம பாவ ஸம்பத்தை. **தளமாக்கி** - ஆதாரமாக வைத்துக்கொண்டு, அதாவது விஸிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் சொல்லப்படுகிற எல்லா அர்த்தங்களுக்கும் இதுவே காரணமாகிறபடியினாலே இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு என்றர்த்தம். **இத்தை யதநுஸந்தித்திருக்கும்** - இதை அநுஸரித்திருக்கும், அதாவது இதைக் காரணமாகக்கொண்டு பின்தொடர்ந்திருக்கும் என்றர்த்தம். கீழ் அதிகாரத்திலே அருளிச் செய்தபடியே ஸரீராத்ம பாவத்திற்குள்ளடங்கிய ஸேஷஸேஷிபாவ நியந்த்ரு நியாம்ய பாவத்தாலே பகவானே உபாயம், அவன் திருவடிகளில் ப்ரபத்தி அதற்கு வஸீகரணம், அவனுடைய கைங்கர்யமே புருஷார்த்தம், அதற்கு விரோதி ஸ்வதந்த்ராத்ம ப்ரமாதிகள் என்பது ஏற்படுகிறது என்று தாத்பர்யம். **அர்த்தபஞ்சகத்தை** - ஐந்து அர்த்தங்களையும், அதாவது மேலே இந்த அதிகாரத்தில் நிரூபிக்கப் படுகிற ஐந்து அர்த்தங்களையும். 'சிலர் விவாரித்தார்கள்' [illegible] பதற்கு அர்த்த பஞ்சகங்களை யறிய[illegible] என்று சில ஆசா

ஸித்தார்கள். இஸ்ஸம்பந்தத்தோடேகூட ஷடர்த்தங்களென்று சிலர் அநுஸந்தித்தார்கள். இஸ்ஸம்பந்தமும் போலே முமுக்ஷுவுக்கு விசேஷித் தறியவேண்டுவதாகச் சேர்த்த அர்த்தபஞ்சகமேதென்னில்:— 1 'ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்ய

---

யர்கள் அருளிச் செய்திருப்பதற்கும் கீழ் சங்கையில் ப்ரஸ்துதமான உபோத்காதாதிகார வாக்யத்திற்கும், சரீராத்மபாவ ஸம்பந்தத்தை ஸித்தமாக வைத்துக்கொண்டு அதைத்துடர்ந்து நிற்கிற அர்த்தபஞ்சகங்கள் அவஸ்யம் அறியவேண்டுமென் றர்த்தமே ஒழிய ப்ரதான ப்ரதிதந்திரம் ஜ்ஞாதவ்யமல்ல என்று சொல்லுவதில் தாத்பர்யமில்லை யாகையினுல் விரோதமில்லை என்று தாத்பர்யம். ஆறர்த்தம் அறியவேண்டு மென்று சொன்னவர்களுக்கு இந்த ஸம்பந்தத்தைச்சேர்த்து ஆறர்த்தங்கள் அறியவேண்டுமென்று தாத்பர்யமேயல்லது இதைத் தவிர மற்றொரு அர்த்தம் ஜ்ஞாதவ்யம் என்பதில் தாத்பர்யமில்லை. ஆகையினுல் ஐந்தர்த்தங்கள் அறியவேண்டும் என்பவர்களுக்கும் ஆறர்த்தங்கள் அறியவேண்டும் என்பவர்களுக்கும் விரோதமில்லை என்றருளிச் செய்கிறார்—'இஸ்ஸம்பந்தத்தோடேகூட' என்றாரம்பித்து. '**முமுக்ஷுவுக்கு விசேஷித்தறியவேண்டியதாக**' என்பதற்கு அப்ரதானமான அர்த்தங்களைப்போலப் பொதுவாக அறியவேண்டியதாக இல்லாமல் மோக்ஷோபயோகிகளாகையாலே சரீராத்மபாவ ஸம்பந்தத்தைப்போல விசேஷித்தறியவேண்டுமென்று ஏற்பட்ட என்றர்த்தம். **சேர்த்த** - சரீராத்மபாவத்தோடு ஸத்ருசமாகச்சேர்த்த. இத்தால் இஸ்ஸம்பந்தமே இந்த ஸித்தாந்தத்திற்கு ப்ரதானமாகையினுல் விசேஷித்தறியவேண்டியதாக ஏற்பட்டபோதிலும் மற்ற அர்த்தங்கள் அவ்வளவு விசேஷித்தறியவேண்டியதில்லை என்கிற சங்கை பரிஹரிக்கப்பட்டதாகிறது. இந்த அர்த்த பஞ்சகங்களையறியவேண்டுமென்பதை ப்ரமாண பூர்வகமாக நிரூபித்தருளுகிறார்—'ப்ராப்யஸ்ய' என்றாரம்பித்து. **ப்ராப்யஸ்ய**-அடையவேண்டிய ப்ரயோஜநமாகிய, **ப்ரஹ்மண:**-பரப்ரும்மத்தின், **ரூபம்**-ஸ்வரூபத்தையும், இத்தால் ஸ்வபாவம், முதலியவைகள் உப

---

1. ஹாரீதஸம்ஹிதை.

காத்மந: | ப்ராப்த்யுபாயம் ஃபலஞ் சைவ ததா ப்ராப்தி விரோதி ச || வதந்தி ஸகலா வேதா: ஸேதிஹாஸபுராணகா: ||' என்று சொல்லப்பட்டன.

இவற்றில் ப்ராப்யமான ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபம் திருமந்த்ரத்தில் ப்ரணவாக்ஷரத்திலும் நாராயணபதத்திலும், த்வயத்தில் ஸவிசேஷணங்களான நாராயணபதங்களிலும், சரமச்லோகத்தில் 'மாம்', 'அஹம்', என்கிற பதங்களிலு

---

லக்ஷிதங்கள், ப்ராப்யஸ்ய - அடைகிறவனுகிய, ப்ராப்து: ப்ரத்யகாத்மந: - ஜீவாத்மாவினுடைய (ஸ்வரூபம் முதலியவைகளையும்), ப்ராப்த்யுபாயம் - அடைவதற்குபாயத்தையும், ஃபலம் - பலத்தையும், ததா - அப்படியே, ப்ராப்திவிரோதி ச - அடைவதற்கு விரோதியையும், ஸேதிஹாஸபுராணகா: - இதிஹாஸ புராணங்களோடுகூடிய, ஸகலா: - எல்லா, வேதா: வேதங்களும், வதந்தி - சொல்லுகின்றன. இதில் ரஹஸ்யத்ரயங்களில் ப்ராப்யமான ப்ரும்மஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கும் பாகங்களை நிரூபித்தருளுகிறார் — 'திருமந்த்ரத்தில்' என்றாரம்பித்து. ப்ரணவாக்ஷரத்திலும் - அகாரத்திலும். ஸவிசேஷணங்களான - 'ஸ்ரீமத்', 'ஸ்ரீமதே' என்கிற விசேஷணங்களோடு கூடின. இந்தப் பதங்களினால் நிரூபிக்கப்படும் ப்ராப்யமான ப்ரும்மத்தை அனுபவிக்கும்போது ஸ்வரூபம், குணம், விக்ரஹம், விபூதிகள், இவைகளோடு சேர்த்தனு ஸந்திக்கவேண்டும் என்று ஸப்ரமாணமாக உபபாதிக்கப்போகிறவராய் முதலில் ஸ்வரூபத்தை ப்ரமாண பூர்வமாக நிரூபித்தருளுகிறார். அதில் 'விசேஷணத்வயே தத்ப்ராதிபத்யைகவிஷயே | ஸம்ஸர்கம் ஜகா தைவ்ய ப்ரணயம் ஸ்ரீரிஹோதிதா ||' என்றிவர் தம்மாலேயே ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகையில் அருளிச் செய்யப்பட்டிருக்கிறபடியே லக்ஷ்மீ தேவதாந்தரங்களைவிட வ்யத்யாஸத்தைத் தெரிவித்துக்கொண்டு விசேஷணமாயிருப்பதினுல்பகவானுடைய ஸ்வரூப நிரூபக தர்மங்களுக்குள் ப்ரதானமாகையினுல் அதை முதலில் அருளிச் செய்கிறார். அதிலும் ஸர்வாவஸ்தைகளிலும் இவனுடன் பிரிவில்லாத சேர்த்தி உண்டென்பதற்கு ப்ர

**ம ஹாலக்ஷ்யம்.** அவ்விடங்களி ல ஹாஸ்ஸிக்கும்போது

ஶ்ரிய:பதித்வம். [1] '**ஶ்ரியாஸார்த்தம் ஜகத்பதி:**', [2] '**ஏஷ நாராயண: ஶ்ரீமாந்**', [3] '**ஸாக்ஷாந்நாராயணோ தேவ: ஶ்ரீமாந் சக்ராயுதோ விபு:**', [4] '**ஶ்ரீவத்ஸவக்ஷா நித்யஶ்ரீ:**', [5] '**விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ**', [6] '**ஸீதா**

---

மாணங்களை க்ரமேண உதாஹரித்தருளுகிறார்—'**ஶ்ரியா ஸார்த்தம்**' என்றாரம்பித்து. **ஜகத்பதி:** - லோகங்களுக்கு ஸ்வாமியான விஷ்ணு, **ஶ்ரியாஸார்த்தம்** - லக்ஷ்மியோடுகூட (இருக்கிறார்). இது பரதசையைப்பற்றியது. **ஏஷ:** - இந்த, **ஶ்ரீமாந்** - லக்ஷ்மியோடுகூடிய, **நாராயண:** - நாராயணன், இந்த ஶ்லோகத்தில் க்ஷீராப்தியில் இருக்கிறவன் என்று சொல்லப்படுகிறபடியினாலும், க்ஷீராப்தியில் வ்யூஹதசைக்கு ப்ரஸித்தியாகையினாலும் இது வ்யூஹதசையைக்குறிக்கிறது. **ஸாக்ஷாத்**- நீர், **ஶ்ரீமாந்** - லக்ஷ்மியோடுகூடியவராய், **சக்ராயுத:** - சக்கரத்தை ஆயுதமாகவுடையவராய், **விபு:** - ப்ரபுவாகிய, அன்றிக்கே எங்கும் நிறைந்தவராகிய, **தேவ:** - தேவனாகிய, **நாராயண:** - நாராயணன், இது விபவதசைக்கு உதாஹரணம். அன்றிக்கே முதலில் லக்ஷ்மீ ஸம்பந்தமும் மற்ற இரண்டு வசனங்களினால் '**மதுப்**' ப்ரத்யயத்தின் அர்த்தமாகிய நித்யயோகமும் சொல்லப்படுகிறதாகவுமாம். **ஶ்ரீவத்ஸவக்ஷ:**- ஸ்ரீவத்ஸம் என்கிற மருவைத் திருமார்பில் உடையவன், **நித்யஶ்ரீ:** - எப்பொழுதும் லக்ஷ்மியைத் தரித்துக்கொண்டிருப்பவன். இது ஸகல அவஸ்தைகளையும் குறிக்கிறது. அன்றிக்கே மதுப்பின் அர்த்தத்தை விவரிக்கிறதாகவுமாம். **ஶ்ரீ:** - லக்ஷ்மியானவள், **விஷ்ணோ:** - பகவானுக்கு, **அநபாயிநீ**-விட்டுப்பிரியாதவள். இத்தால் நித்யயோகம் வ்யதிரேகத்தினாலும் ஸ்தாபிக்கப்படுகிறது. **ஸீதா ஸமக்ஷம்** - ஸீதைக்கு முன்னிலையில், **காகுத்ஸ்தம்**-ஸ்ரீராமனை (குறித்து), **இதம்**-இந்த, **வசநம்**-

---

1 லிங்கபுராணம். 2 ஹரிவம்ஶம்-54-50.

3 ராமா-யுத்த-120-13. 4 ராமா-ஸு-14-15.

5 வி-பு-1-8-17. 6 ராமா-ஆர-15-6.

**ஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசநமப்ரவீத்**', [1] '**ஸீதாஞ்ச வாசாதியசா ராகவஞ்ச மஹாவ்ரதம்**', [2] '**அலமேஷா பரித்ராதும் ராகவாத்ராக்ஷஸீ கணம்**', [3] '**பவேயம் சரணம்ஹி வ:**', [4] '**பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா**', [5] '**தயா ஸஹாஸீநமநந்தபோகிநி**', [6] '**காந்தஸ்தே**

---

வார்த்தையை, **அப்ரவீத்** - சொன்னார். இது புருஷகாரமா யிருக்கைக்கு ப்ரமாணம். **அதியசா:** - மிகுந்த கீர்த்தியை யுடையவரான (இளையபெருமாள்), **ஸீதாம்** - ஸீதையைக் குறித்து, **உவாச** - சொன்னார், **மஹாவ்ரதம்** - உத்க்ருஷ்ட மான சரணாகத ஸம்ரக்ஷண வ்ரதத்தை யுடைய, **ராகவஞ்ச**- ஸ்ரீ ராமனையும் (குறித்துச்சொன்னார்). இது உபாயதசை யைப்பற்றியது. **ஏஷா** - இந்த ஸீதை, **ராகவாத்** - ஸ்ரீ ராமனிடத்திலிருந்து, **ராக்ஷஸீ கணம்** - ராக்ஷஸிகளின் கூட்டத்தை, **பரித்ராதும்** - ரக்ஷிப்பதற்கு, **அலம்** - போது மானவள், அதாவது சக்தியை யுடையவள். **வ:** - உங்களுக்கு, **சரணம்** - சரணமாக, **பவேயம்** - ஆவேன், இவை இரண்டும் உபாயத்வத்தை விசதீகரிக்கின்றன. **பவாம்ஸ்து** - நீர், **வைதேஹ்யாஸஹ** - பிராட்டியோடுகூட. '**கிரிஸாநுஷு ரம்ஸ்யஸே । அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஸ்ச தே ॥**' என்று மிகுதி ஸ்லோகம். மலைத்தாழ்வரைகளில் விளை யாடப்போகிறீர். நீர் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுதும், விழித்துக்கொண்டிருக்கும் பொழுதும் நான் எல்லாக் கைங்கர் யங்களையும் செய்யப்போகிறேன், அதாவது செய்யவேண்டும் என்று ப்ரார்த்தனை. **தயாஸஹாஸீநம்** - அப்படிப்பட்ட லக்ஷ்மியோடுகூட, **அநந்தபோகிநி** - ஆதிசேஷன் என்கிற ஸர்ப்பத்தின்மேல், **ஆஸீநம்** - உட்கார்ந்து கொண்டிருக் கிற. '**ஸ்வாமிந்நைகாந்திக நித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித:**' என்று மேல் இந்த ப்ரகரணத்தில் பலம் ப்ரார்த்திக்கப்படுகிறது. இவை இரண்டும் பலதசைக்கு

---

1 ராமா-அயோ-31-2.
2 ராமா-ஸு-58-87.
3 ராமா-ஸு-58-90.
4 ராமா அயோ-31-27.
5 ஆள-ஸ்தோ-39.
6 ஸ்ரீ சதுஸ்லோகீ-1.

**𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃**', 1 '**𑌸𑍍𑌵𑌪𑌰𑌿𑌚𑌰𑌣𑌭𑍋𑌗𑍈𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌿 𑌪𑍍𑌰𑍀𑌯𑌮𑌾𑌣𑍇**', 2 '**𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾𑌨𑌨𑍍𑌦𑍋𑌦𑌧𑌯𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌨𑌮𑌃**', 3 '**𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌕𑌾𑌨𑍍𑌤𑍋 𑌅𑌨𑌨𑍍𑌤𑍋 𑌵𑌰𑌗𑍁𑌣𑌗𑌣𑍈𑌕𑌾𑌸𑍍𑌪𑌦𑌵𑌪𑍁𑌃**', 4 '**𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑍇**', 5 '**𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑌤𑌿 𑌨𑌿𑌖𑌿𑌲𑌹𑍇𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍈𑌕𑌤𑌾𑌨**

ப்ரமாணம். **𑌤𑍇** - உமக்கு, **𑌕𑌾𑌨𑍍𑌤𑌃** - அனுரூபனாகிய பர்த்தா, **𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃** - புருஷோத்தமனாகிய பகவான். இது உபய விபூதி ஶேஷித்வத்திற்கு ப்ரமாணம். ஸ்ரீசதுஸ்லோகியில் அருளிச் செய்யப்பட்ட ஸ்வாமித்வம், உபாயத்வம், உபேயத்வம், நித்யயோகம், இவைகள் இங்கு விவக்ஷிதங்கள். **𑌸𑍍𑌵𑌪𑌰𑌿𑌚𑌰𑌣𑌭𑍋𑌗𑍈𑌃**-தன்னுடைய கைங்கர்யங்களாகிய போகங்களினால், **𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌿** - லக்ஷ்மியுடன் கூடிய பகவான், **𑌪𑍍𑌰𑍀𑌯𑌮𑌾𑌣𑍇** - ப்ரீதி அடைந்து கொண்டிருக்கும் பொழுது. இது கைங்கர்யங்களுக்கு உத்தேஶ்யை என்பதற்கு ப்ரமாணம். **𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇** - ஸ்ரீயை யுடையவனாயும், **𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾𑌨𑌨𑍍𑌦𑍋𑌦𑌧𑌯𑍇**-ஹேயகுணங்களில்லாத ஆநந்தத்திற்குஸமுத்திரமாகிய, **𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇**-விஷ்ணுவின் பொருட்டு, **𑌨𑌮𑌃**-ஸேவிக்கிறேன். **𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌃** - லக்ஷ்மிக்குப் பர்த்தாவாயும், **𑌅𑌨𑌨𑍍𑌤𑌃**-(மூன்றுவிதமான) அளவுகளில்லாதவனுயும், **𑌵𑌰𑌗𑍁𑌣𑌗𑌣𑍈𑌕𑌾𑌸𑍍𑌪𑌦𑌵𑌪𑍁𑌃** - உயர்ந்த கல்யாண குணங்களின் கூட்டங்களுக்கு முக்யமான இருப்பிடமாகிய ஸ்வரூபத்தையுடையவராகிய. **𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑍇**-லக்ஷ்மிக்கு இருப்பிடமாகிய பரப்ரும்மத்தினிடத்தில். **𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌪𑌤𑌿𑌃** - லக்ஷ்மிக்குப் பர்த்தாவாயிருக்கிறவனுயும், **𑌨𑌿𑌖𑌿𑌲𑌹𑍇𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕** - எல்லா ஹேயகுணங்களுக்கும் எதிர்நடையான, **𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍈𑌕𑌤𑌾𑌨** - கல்யாண குணங்களொன்றுக்கே இருப்பிடமாயும், **𑌅𑌨𑌨𑍍𑌤** - அளவில்லாததாயும், **𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌃**-ஜ்ஞானம், ஆநந்தம், இவைகளாயிருக்கிற ஸ்வரூபத்தை உடையவனுயிருக்கிற. இவைகள் ஸத்யத்வாதிகளைப்போல ஸ்ரிய:பதித்வமும் ஸ்வரூப நிரூபக தர்மம் என்பதற்கும், அவைகளிலும் ப்ரதானம் என்பதற்கும் ப்ரமாணம். கீழ் நிரூபித்தவை

1 ஆத்மஸித்தி.    2 வேதாந்தஸாரம்.
3 வேதாந்ததீபம்.    4 ஸ்ரீபாஷ்யம்.
5 கீதாபாஷ்யம்.

**நஜஜஹா நா நஷஹஸ்ர வெ ஃ**', 1 'நீயுந்திருமகளும் நின்ருயால்', 2 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப', 3 'கோலத்திருமாமகளோடுன்னே', 4 'நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்', 5 'உன்தாமரைமங்கையும் நீயும்', 6 'அகலகில்லே

---

களுக்கு ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளை ப்ரமாணமாகக் காட்டியருளுகிருர்—'**நீயும்**' என்ருரம்பித்து. **நீயும், திருமகளும்**-லக்ஷ்மியுமாக, **நின்ருயால்** - நிற்கிறபடியினுல். இது பரதத்வ நிர்த்தாரணத்திற்குக் காரணமான லக்ஷ்மீ ஸம்பந்தத்தைக் காட்டுகிறது, திருக்கோவலூர் இடைகழியில் முதலாழ்வார்களுக்கு ஸேவை ஸாதித்தபொழுது பகவானுடைய பரதஸையைப்பற்றி அனுஸந்தித்த ப்ரகாரமாகையினுல். **'ஒண்டொடியாள்'** இத்யாதி கீழ் வ்யாக்யாதம். இந்தப்பாட்டில் போக்யதாதிஶயத்தைச் சொல்லுகிறபடியினுல் இது ப்ராப்ய தஸையைக் குறிக்கிறது. **கோல** - உனக்கும் அலங்காரமாகிய, **திருமாமகளோடு** -லக்ஷ்மியோடு, **உன்னே,** 'கூடாதே தளர்வேனே'என்று மேலே அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. உன்னே அனுபவிக்காமல் இன்னும் இந்த ஸம்ஸாரத்தில் அவஸ்தைப்படுவேனே என்றர்த்தம். **நின்திருவருளும்**-உம்முடைய க்ருபையையும், **பங்கயத்தாள்** - லக்ஷ்மியினுடைய, **திருவருளும்** - க்ருபையையும், 'கொண்டுன்கோயில்சீய்த்து' என்று மேல்பாசுரம். இவைகளைப்பெற்று உம்முடைய ஸந்நிதியில் திருவிலகு சேர்ப்பதாகிய கைங்கர்யத்தைச் செய்து என்றர்த்தம். இத்தால் புருஷார்த்தம் இவ்விருவருடைய க்ருபையினுல் உண்டாகவேண்டுமென்றேற்படுகிறபடியினுல் இது உபாயத்வத்திற்கு உதாஹரணம். **உன்** - உனக்கு அஸாதாரணமான பத்னியாகிய, **தாமரைமங்கையும்**-லக்ஷ்மியும், **நீயும்**, 'மூவுலகுந் தொழவிருந்தருளாய்' என்று மேல்பாசுரம். இது ப்ராப்யத்வத்திற்கு ப்ரமாணம். இங்கு கீழே 'நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்' என்று இருவருக்கும் **ஸம்வஹிதவெஷெண உவாயகூவம்** சொல்லிற்று. இங்கிருவருக்கும் **ஷூாவ்யகூவம்** சொல்லுகிறது' என்று

---

1 முதல் திருவந்தாதி-86. 2 81-ம் பக்கம் பார்க்க.
3 திருவாய்மொழி-6-9-3. 4 திருவாய்மொழி-9-2-1.
5 திருவாய்மொழி-9-2-3 6 திருவாய்மொழி-6-10-10

னிறையும்', 1 'உணர்முழுநலம்', 2 'நந்தாவிளக்கே யளத்தற்கரியாய்' என்றும் ப்ரமாணங்கள் சொல்லு கிறபடியே ஸ்வரூபப்ரகாரத்தாலும் ஸர்வாவஸ்தையி லும் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியா ரோடு பிரிவில்லாத முழு நலமான ஸத்யஜ்ஞாநஸ்வ

---

இருபத்து நாலாயிரப்படியில் வ்யாக்யாதமா யிருப்பது அநுஸந் தேயம். **இறையும்** - க்ஷணகாலமும், **அகல** - பிரிவதற்கு, **கில்லேன்** - ஶக்தியுடையவளல்ல. இது உபாயத்வத்திற்கு உதாஹர ணம். **உணர் முழுநலம்** - முழு என்பது காகாக்ஷிந்யாயத்தினால் இரண்டு பதத்திலும் அந்வயிக்கிறது. **முழு உணர்** - முழுமையும் ஜ்ஞான ஸ்வரூபம், **முழுநலம்** - முழுமையும் ஆநந்த ஸ்வரூபம். **நந்தா** - நஶிக்காததான, இத்தால் ஸத்யத்வமும், **விளக்கே** - தீப மே, இத்தால் ஜ்ஞாநத்வமும், **அளத்தற்கு** - அளப்பதற்கு, **அரியாய்** - அஶக்யனானவனே, இத்தால் அநந்தத்வமும் அருளிச்செய் யப்பட்டதாகிறது. '**ஸ்வரூபப்ரகாரத்தாலும்**' என்பதற்கு '**காந்தஸ்தே**' என்றாரம்பிக்கும் ஸ்ரீசதுஸ்லோகி ஶ்லோகத்தில் அருளிச் செய்திருக்கிறபடியே ஸ்வரூபம், விக்ரஹங்கள், விபூதி கள், முதலிய எல்லா விதத்தாலும் என்றர்த்தம். '**ஸர்வாவ ஸ்தையிலும்**' என்பதற்கு பரம், வ்யூஹம், விபவம், முதலிய எல்லாத்தஶைகளிலும், உபாயத்வோபேயத்வ தஶைகளிலும் என்றர்த்தம். '**பிரிவில்லாத முழுநலமான**' என்பதினால் பகவானுடைய ஸ்வரூபம்போலப் பிராட்டியின் ஸ்வரூபமும் ஜ்ஞாநாநந்தஸ்வரூபம் என்பது தெரிவிக்கப்படுகிறது. '**ஸத்ய ஜ்ஞாநஸ்வரூபை**' என்பது ஶ்ரிய:பதியினுடைய ஸ்வரூபத் தில் அநந்தத்வாதிகளைக் குறிக்கிறது. '**முழு நலமான**' என்பது இப்படிப்பட்ட ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபையான பிராட்டி யோடு சேர்ந்திருக்கையாகிற ஆநந்தத்தைக் குறிக்கிறதாகை யினால் புனருக்தி இல்லை. இப்படி ஸ்வரூபம் அநுஸந்தேயம் என்று நிரூபித்து ஹேயப்ரத்யநீகத்வத்தை முன்னிட்டு மேலே கல்யாண குணாகரத்வத்தை யருளிச் செய்கிறார். குணங்கள் ஹேய ப்ரத்யநீகங்களா யில்லாவிட்டால் நிரதிஶயத்வம் ஸம்ப விக்காதாகையினால் அது முதலில் அருளிச் செய்யப்படுகிறது—

---

1 திருவாய்மொழி-I-1-2 2 பெரிய திருமொழி-3-8-1

ரூபமாக ஸுநாஸநிக்கவேணும். இப்படி 1 ‘ஸமஸ்த ஹேயரஹிதம் விஷ்ணவாக்யம் பரமம் பதம்’, 2 ‘பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேஶாதயஸ்ஸந்தி பராவரேஶே’ என்கிறபடியே ஹேயப்ரத்யநீகமாக ஸுநாஸந்தேயம். 3 ‘தைர்யுக்த: ஶ்ரூயதாம் நர:,’ 4 ‘தமேவம் குணஸம்பந்நம்,’ 5 ‘ஜ்யேஷ்டம் ஶ்ரேஷ்டகுணைர்யுக்தம்’, 6 ‘ஏவம் ஶ்ரேஷ்டகுணைர்யுக்த:,’

அநந்தகல்யாண குணகரத்வம்.

‘இப்படி’ என்றாரம்பித்து. **விஷ்ணவாக்யம்** - விஷ்ணுஎன்று பெயருடைய, **பரமம்** - மிகவும் உயர்ந்ததாகிய, **பதம்** - அடையவேண்டிய வஸ்துவானது, அதாவது பரம ப்ராப்யமான பகவத் ஸ்வரூபமானது, **ஸமஸ்தஹேயரஹிதம்** - ஒரு ஹேயகுணமுமில்லாதது. **பராவரேஶே** - உயர்ந்த வஸ்துக்கள், தாழ்ந்த வஸ்துக்கள், இவைகளுக்கு யஜமானனான, **யத்ர** - எந்தப் பகவானிடத்தில், **ஸகலா:**-எல்லா, **க்லேஶாதய:** - க்லேஶம் முதலியவைகள், ‘**க்லேஶ**’ ஶப்தத்தினால் அவித்யை, ராகம், த்வேஷம், முதலிய மற்ற கெட்டகுணங்கள் குறிக்கப்படுகின்றன, **நஸந்தி**- இல்லையோ (அவன்), **பராணாம்** - நம்மைவிட உயர்ந்தவர்களான ப்ரும்மாதிகளுக்கும், **பர:**-உயர்ந்தவன். அநந்த கல்யாணகுணாகரத்வத்திற்கு ப்ரமாணங்களை நிருபித்தருளுகிறார்— ‘**தை:**’ என்றாரம்பித்து. **தைர்யுக்த:**-அந்தக் கல்யாணகுணங்களோடு கூடிய, **நர:** - மனிதன், **ஶ்ரூயதாம்** - கேட்கப்பட்டும், அதாவது அப்படிப்பட்டவனைச் சொல்லுகிறேன், கேள் என்று தாத்பர்யம். **ஏவம்குணஸம்பந்நம்** - இப்படிப்பட்ட குணங்கள் நிறைந்தவனாகிய, **தம்**-அந்த ஸ்ரீராமனை, **ஜ்யேஷ்டம்** - மூத்தபிள்ளையாயும், **ஶ்ரேஷ்டகுணைர்யுக்தம்** - உயர்ந்த குணங்களோடு கூடினவனான அந்த ஸ்ரீராமனை. **ஏவம்**- இப்படிப்பட்ட, **ஶ்ரேஷ்டகுணைர்யுக்த:** - ஶ்ரேஷ்டமான குணங்களோடுகூடிய, **ராம:**-ஸ்ரீராமன், **குணை:**-குணங்களி

1 வி-பு-1-22-53
2 வி-பு-6-5-85
3 ராமா-பால-1-7
4 ராமா-அயோ-2-48
5 ராமா-பால-1-20
6 ராமா-அயோ-1-32

1 'குணைர்விருருசே ராம:', 2 'தமேவம் குணஸம்பந்நமப்ரத்ருஷ்யபராக்ரமம்', 3 'பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே', 4 'ஆந்ருஶம்ஸ்யமநுக்ரோஶஶ்ஶ்ருதம் ஶீலம் தமஶ்ஶம: | ராகவம் ஶோபயந்த்யேதே ஷட்குணா: புருஷோத்தமம்', 5 'விதிதஸ்ஸ ஹி தர்மஜ்ஞஶ்ஶரணாகதவத்ஸல:', 6 'ஶரண்யம் ஶரணஞ்ச த்வாமாஹுர்திவ்யா மஹர்ஷய:',

---

ணாலே, **விருருசே**-ப்ரகாஶித்தார். **தமேவம் குணஸம்பந்நம்**-இப்படிப்பட்ட கல்யாணகுணங்கள் நிறைந்தவனையும், **அப்ரத்ருஷ்ய பராக்ரமம்**-ஒருவராலும் ஜயிக்கமுடியாதவனையுமிருக்கிற, **தம்**-அந்த ஸ்ரீராமனை(பூமி ஆசைப்பட்டாள்). **ந்ருப**-ஓ! ராஜாவே, **தே**-உம்முடைய, **புத்ரஸ்ய** - பிள்ளைக்கு, **பஹவ:**-அனேகங்களான, **கல்யாணகுணா:**-கல்யாண குணங்கள், **ஸந்தி**-இருக்கின்றன. **ஆந்ருஶம்ஸ்யம்** - ஆஸ்ரிதர்களைக் காப்பாற்றும் தன்மை, **அநுக்ரோஶ:**-தயை, **ஶ்ருதம்**-ஶாஸ்திரம், அதாவது அதில் ஜ்ஞானம், **ஶீலம்** - ஜ்ஞானத்திற்குத் தகுந்த நல்ல அனுஷ்டானம், **தம:** - வெளி இந்திரியங்களை யடக்குதல், **ஶம:** - மனதை யடக்குதல், **ஏதே** - இந்த, **ஷட்குணா:** - ஆறுகுணங்களும், **புருஷோத்தமம்** - புருஷ ஸ்ரேஷ்டனாகிய, **ராகவம்** - ஸ்ரீராமனை, **ஶோபயந்தி** - அலங்கரிக்கின்றன. **ஸ:** - அந்த ராமன், **தர்மஜ்ஞ:**-தர்மங்களைத் தெரிந்தவன் என்றும், **ஶரணாகதவத்ஸல:** - ஶரணாகதி பண்ணினவர்களிடத்தில் மிகுந்த ப்ரீதியை யுடையவனென்றும், **விதித: ஹி** - ப்ரஸித்தனல்லவா, அதாவது எல்லோராலும் அறியப்பட்டவனல்லவா என்று தாத்பர்யம். **த்வாம்** - உம்மை, **திவ்யா:** - உயர்ந்தவர்களான, **மஹர்ஷய:**-மஹருஷிகள், **ஶரண்யம்**-எவ்லோராலும் ஶரணமாக அடையத்தக்கவராயும், **ஶரணம்** - அப்படி அடைந்தவர்களைக் காப்பாற்றுகிறவராகவும், **ஆஹு:** - சொல்லுகிறார்கள். **த்யாயிநாம்** - உபாஸநம் செய்கிறவர்

---

1 ராமா-அயோ-2-47 2 ராமா-அயோ-1-34
3 ராமா-அயோ-2-26 4 ராமா-அயோ-33-12
5 ராமா-ஸு-21-20 6 ராமா-யுத்-120-18

1 'நிவாஸவ்ருக்ஷஸ்ஸாதூநாமாபந்நாநாம் பரா கதி:', 2 'தேஜோ பலைஶ்வர்ய மஹாவபோத ஸுவீர்ய ஶக்த்யாதி குணைகராஶி:', 3 'ஸர்வபூதாத்மபூதஸ்ய விஷ்ணோ: கோ வேதிதும் குணாந்', 4 'யதா ரத்நாநி ஜலதேரஸங்க்யேயாநி புத்ரக। ததா குணாஸ்து தேவஸ்ய அஸங்க்யேயா ஹி சக்ரிண:॥', 5 'வர்ஷாயுதைர் யஸ்ய குணா ந ஶக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வதேவை:। சதுர்முகாயுர் யதி கோடி

களுக்கு, நிவாஸவ்ருக்ஷ: - வஸிக்கும்படியான வ்ருக்ஷம், அதாவது ஆஶ்ரயிக்குமிடம், தேஜ: - தேஜஸ்ஸு, பலம் - பலம், ஐஶ்வர்யம் - ஐஸ்வர்யம், மஹாவபோத - உயர்ந்த ஜ்ஞானம், ஸுவீர்யம் - வீர்யம், ஶக்தி-ஶக்தி, ஆதி குணைகராஶி: - முதலிய குணங்களின் கும்பல். ஸர்வபூதாத்மபூதஸ்ய-எல்லா ப்ராணிகளுக்கும் அந்தராத்மாவான, விஷ்ணோ: - பகவானுடைய, குணாந் - குணங்களை, வேதிதும் - அறிவதற்கு, (மஹேஶ்வராத் - ருத்திரனைக் காட்டிலும், அந்ய: - வேறாகிய) க: - எவன், ஶக்த: - ஶக்தியை யுடையவன். புத்ரக - ஓ! குழந்தாய், ஜலதே: - ஸமுத்திரத்தினுடைய. ரத்நாநி - ரத்தினங்கள், யதா - எப்படி, அஸங்க்யேயாநி - கணக்கிடமுடியாதவைகளோ, ததா - அப்படியே, சக்ரிண: - சக்ராயுதத்தைத்தரித்துக் கொண்டிருக்கிற, தேவஸ்ய-பகவானுடைய, குணாஸ்து - குணங்களும், அஸங்க்யேயாஹி-கணக்கிடமுடியாதவைகளல்லவா. யஸ்ய - எந்தப் பகவானுடைய, குணா:-குணங்கள், ஸமேதை:-ஒன்று சேர்ந்திருக்கிற, ஸர்வதேவை: - எல்லாத் தேவதைகளினாலும், வர்ஷாயுதை:-பதினாயிரம் வருஷங்களிலும், வக்தும் - சொல்லுவதற்கு, நஶக்யா: - முடியாதவைகளோ. க்வாபி - ஓரிடத்தில், நர:- ஒருமனுஷ்யன், சதுர்முகாயு:-ப்ரும்மாவினுடைய ஆயுஸ்

1 ராமா-கிஷ்-15-19　　2 வி-பு-6-5-85.
3 ப்ராம்மபுராணம்　　4 வாமனபுராணம்-74-40.
5 பார-கர்-83-15

வக்த்ரா ஹவெஹுஸ: ஸ்வாவி விஸுஜலவெதாஃ | ஸ தெ ஏு
ணா நாஊயுதெகஃஂஸஂ வஷெ ஹவா தெவவா ஹூஸீஉ ||',
1 'தவா நஜ ஏுணவஹுாவி ஷலெவ ஹூயெெ ஏுணாஃ |
யெஷூயெவ ஜ ஏ ஜ் கூக்ஷாவதெஸுவஹுஜ நிஃவெஸி
தாஃ ||', 2 'ஐஷுக்ஷயா நிவதூஜெ நாஜாஸிக்ஷக்ஷிதிக்ஷ
யாஜ் | உதிக்ஷயா நிவதூஜெ ந ஹொவிஉ ஏுணக்ஷ
யாஜ் ||', 3 'வல்வினையேனையீர்கின்ற குணங்களையுடை

---

ஸூக்கு ஸமமான வயதையுடையவனும், **கொடிவக்த்ரஃ** - கோடி முகங்களையுடையவனும், **விஸுஜலவெதாஃ** - பரிஸுத்தமான மனதையுடையவனும், **ஹவெஜ்** - இருந்தானேயாகில், **ஸஃ**- அவன், **தெ**-உம்முடைய, **ஏுணாநாம்** - குணங்களினுடைய, **ஊயுதெகஂ**-பதினுயிரத்தில் ஒன்றுகிய, **ஃஂஸஂ** - பாகத்தை, **வஷெஜ்**-சொல்லுவனே, **நவா**-மாட்டானே,(ஆகையினுல்) **தெவவா**-தேவஸ்ரேஷ்டனுகிய பகவானே, **ஹூஸீஉ** - அனுக்ரஹம் செய்யும். **ஃநஜஏுணவஹுாவி** - கணக்கிடமுடியாத குணங்களையுடையவனுயிருந்தபோதிலும், **தவ**-உமக்கு, **ஷலெவ**-(ஜ்ஞானம், ஶக்தி, முதலிய) ஆறு குணங்களே, **ஹூயெெ**-முக்யமான, **ஏுணாஃ** - குணங்கள், **யெஃ** - எந்தக் குணங்களினுல், **ஜஏஜ்** - இந்த லோகமானது, **ஷயா**-உம்மால், **கூக்ஷள ஐவ**- வயிற்றிலேபோல, அதாவது வயிற்றிலே வைக்கப்பட்டிருக்கிறது போலே, **ஃதெஸுவி**-மற்றக் குணங்களும், **ஃஜநிஃவெஸிதாஃ**- உள்ளடக்கிக்கொள்ளப்பட்டிருக்கின்றனவோ. **ஐஷுக்ஷயாஜ்**- பாணங்கள் செலவழிந்தபடியினுலே, **நிவதூஜெ** - திரும்புகிருர்கள், **ஃஜாஸிக்ஷக்ஷிதிக்ஷயாஜ்** - ஆகாஶத்தில் இடமில்லாமையினுலே, **ந** - இல்லை, (அதைப்போல) **உதிக்ஷயாஜ்** - புத்திக்குறைவினுலே, **நிவதூஜெ** - திரும்புகிருர்கள், **ஹொவிஉஏுணக்ஷயாஜ்** - பகவானுடைய குணங்களில்லாமையினுல், **ந**-இல்லை. **வல்வினையேனை**-ப்ரபலமான பாபங்களையுடைய என்னை, **ஈர்கின்ற**-ஹிம்ஸிக்கிற, **குணங்களை யுடையாய்**- கல்யாணகுணங்களையுடையவனே. இது விரஹிணியான பிராட்டி

---

1 2 3 திருவாய்மொழி-8-1-8.

யாய்', 1 'உயர்வற வுயர்நலமுடையவன்' என்கிற படியே ப்ராப்ய ப்ராபகத்வோபயுக்தங்களான குணங்களாலே விஶிஷ்டமாக வஸ்து ஜ்ஞேயம். 2 'ஸதைகரூபரூபாய', 3 'நித்யஸித்தே ததாகாரே

திவ்யமங்களவிக்ரஹ விஶிஷ்டத்வம்.

தத்பரத்வே ச பௌஷ்கர |
யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே

---

தலையில் சொல்லும் வார்த்தையாகையினுல் இப்படி யருளிச் செய்யப்பட்டிருக்கிறது. 'உயர்வற' இத்யாதி கீழே வ்யாக்யாதம். இங்கு ப்ராப்யத்வோபயுக்த குணங்கள், ப்ராபகத்வோபயுக்த குணங்கள், இவை இரண்டுக்கும் உபயுக்தமான குணங்கள், என்று குணங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ப்ராப்யத்வோபயுக்தங்களாவன எல்லாவற்றிற்கும் ஶேஷியா யிருக்கை, எல்லையில்லாத ஆநந்த ஸ்வரூபனுயிருக்கை முதலியவைகள். ப்ராபகத்வோபயுக்த குணங்களாவன தயை, வாத்ஸல்யம், ஔதார்யம் முதலியவைகள். இரண்டிற்கும் உபயுக்தங்களாவன ஜ்ஞானம்,பலம் முதலியவைகள். **விஶிஷ்டமாக** - இவைகளோடு கூடியதாக. இப்படி மேலே சொல்லப்போகிற திவ்ய மங்கள விக்ரஹத்தை ஈஶ்வரன் தரிப்பதற்குக் காரணமும் பகவானுக்கு நம்மிடத்திலுள்ள காருண்யம்,ஔதார்யம், வாத்ஸல்யம்,முதலிய குணங்களாகையினுல் அவைகளை கீழே நிரூபித்துப்பிறகு திவ்ய மங்கள விக்ரஹத்தை நிரூபிக்கனுகிருர்—'**ஸதைக**'என்ருரம்பித்து. **ஸதா**-எப்பொழுதும், **ஏகரூப** - ஒரே ஸ்வபாவத்தையுடையதாகிய, அதாவது பெருக்கம், சுருக்கம் முதலியவை ஒன்றுமில்லாத, **ரூபாய** - விக்ரஹத்தையுடையவனுகிய. **பௌஷ்கர** - தாமரைப்பூவில் அவதரித்தவனுகிய ப்ரும்மாவே! **நித்யஸித்தே** - எப்பொழுதுமிருக்கிற, **ததாகாரே** - அந்தப் பகவானுடைய ரூபத்திலும், **தத்பரத்வே ச** - அந்தப் பகவானுடைய மேன்மையிலும், அதாவது அவனுடைய ஸர்வோத்கர்ஷத்திலும், **யஸ்ய** - எவனுடைய, **ஹ்ருதயே** - மனதில், **ஸத்தா** - இருக்கிறது என்கிற எண்ணம், **அஸ்தி**-இருக்கிறதோ,

---

1 திரு-1-1-1 (79-ம் பக்கம் பார்க்க). 2 வி-பு-1-2-1.
3 பௌஷ்கர ஸம்ஹிதை.

**𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍||**', 1 '**𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌃 𑌶𑌕𑍍𑌤𑌯𑌶𑍍𑌚𑍈𑌤𑌾 𑌨𑍃𑌪 𑌯𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃 | 𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑍈𑌰𑍂𑌪𑍍𑌯𑌂 𑌰𑍂𑌪𑌮𑌨𑍍𑌯𑌦𑍍𑌧𑌰𑍇𑌰𑍍𑌮𑌹𑌤𑍍||**', 2 '**𑌇𑌚𑍍𑌛𑌾𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌭𑌿𑌮𑌤𑍋𑌰𑍁𑌦𑍇𑌹𑌃**', 3 '**𑌨 𑌭𑍂𑌤𑌸𑌙𑍍𑌘𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑍋 𑌦𑍇𑌹𑍋𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃**', 4 '**𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌾 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍**

---

**𑌤𑌸𑍍𑌯** - அவனுடைய, **𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌂** -ஸமீபத்தை, **𑌏𑌷** -இந்தப் பகவான், **𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍**-அடைவான்,அதாவது அவனாலே அடையக் கூடியவனாவான். அன்றிக்கே, **𑌤𑌸𑍍𑌯** - அந்தப் பகவானுடைய, **𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌂** - ஸந்நிதியை, **𑌏𑌷** - இந்த மனிதன், **𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍** - அடைவான் என்றர்த்தமாகவுமாம். **𑌨𑍃𑌪** - ஓ! ராஜாவே, **𑌏𑌤𑌾𑌃** - இந்த, **𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌃** - எல்லா, **𑌶𑌕𑍍𑌤𑌯𑌃** - ஶக்திகள், (அதாவது அசேதன ஶக்தி, க்ஷேத்ரஜ்ஞ ஶக்தி, கர்ம ஶக்தி என்று கீழ் நிரூபிக்கப்பட்ட மூன்று ஶக்திகளும்), **𑌯𑌤𑍍𑌰** - எந்த ரூபத்தில், **𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃** - (அஸ்திர பூஷணாதி ரூபங்களாக) ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவோ, **𑌤𑌤𑍍** - அப்படிப் பட்ட, **𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑍈𑌰𑍂𑌪𑍍𑌯𑌂** - ப்ரபஞ்சத்தில் பார்க்கப் படுகிற ரூபங்களைக்காட்டிலும் வேறுபட்டதாயும், அதாவது அமைப்பினால் அதைவிட வேறானதாயும், **𑌅𑌨𑍍𑌯𑌤𑍍** - வேறு த்ரவ்யமாயு மிருக்கிற, **𑌹𑌰𑍇𑌃** - பகவானுடைய, **𑌰𑍂𑌪𑌂** - ரூபமானது, **𑌮𑌹𑌤𑍍** - மிகவும் பெரியது. **𑌇𑌚𑍍𑌛𑌾** - ஸங்கல்பத்தி னாலே, **𑌗𑍃𑌹𑍀𑌤** - அங்கீகரிக்கப்பட்டவைகளாயும், **𑌅𑌭𑌿𑌮𑌤** - (அந்தப் பகவானுக்கும்) மிகவும் இஷ்டங்களாயும், அன்றிக்கே ஆஶ்ரிதர்களுக்கு அபிமதங்களாயும், **𑌉𑌰𑍁** - பெரியவைக ளாயும், அதாவது உத்க்ருஷ்டங்களாயும் இருக்கிற, **𑌦𑍇𑌹𑌃** - தேஹங்களையுடையவன். **𑌅𑌸𑍍𑌯** - இந்த, **𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃** - பர மாத்மாவினுடைய, **𑌦𑍇𑌹𑌃**-தேஹம், **𑌨 𑌭𑍂𑌤𑌸𑌂𑌘𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌃** - பஞ்சபூதங்களின் சேர்க்கையினாலுண்டான அமைப்பை யுடையதல்ல. **𑌤𑌸𑍍𑌯** - அந்தப் பகவானுக்கு, **𑌮𑌾𑌂𑌸𑌮𑍇𑌦𑍋𑌸𑍍𑌥𑌿𑌸𑌂𑌭𑌵𑌾**-மாம்ஸம், உயிர்த்தண்ணீர், எலும்பு இவைகளினு

---

1 வி-பு-6-7-70. 2 வி-பு-6-5-84.

3 பார-ஶாந்தி-206-60. 4 வராஹ புராணம்-34-40.

ஸூராம்ஶஶேஷாஸ்திஸம்பவா', 1 'புஜைஶ்சதுர்பிஸ்ஸமுபேதமேதத்ரூபம் விஶிஷ்டம் திவி ஸம்ஸ்திதஞ்ச', 2 'ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம்', 3 'தத்ரைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்நம்', 4 'பஶ்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே', 5 'அஸ்த்ரபூஷணஸம்ஸ்தாநஸ்வரூபம்'; 6 'பூஷணாஸ்த்ரஸ்வரூபஸ்தம் யதேதமகிலம் ஜகத்', 7 'தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர:' என்கிறபடியே ஸர்வஜகதாஶ்ரய

---

லுண்டாகிய, **ப்ராக்ருதா** - ப்ரக்ருதியின் பரிணாமமாகிய, **மூர்த்தி:** - ஶரீரம், **ந** - இல்லை. **சதுர்பி:**-நான்கு, **புஜை:**- கைகளோடு, **ஸமுபேதம்** - கூடியதாயிருக்கிற, **ஏதத்** - இந்த ரூபம், **விஶிஷ்டம்** - மிகவும் உயர்ந்தது, **திவி** - பரமபதத்தில், **ஸம்ஸ்திதம்** - இருக்கிறது. **ருக்மாபம்** - ஸ்வர்ணத்தின் காந்திபோன்ற காந்தியையுடையதாயும், **ஸ்வப்நதீகம்யம்** - கனவு கண்டாற் போலிருக்கிற யோகதசையிலுள்ள புத்தியினலறியத் தக்கதாயும். **தத்ர** - அந்த ரூபத்தில், **க்ருத்ஸ்நம்** - எல்லா, **ஜகத்**- லோகத்தையும், **ஏகஸ்தம்** - ஒரு பாகத்திலிருக்கிறதாக (அர்ஜுனன் பார்த்தான்). **தேவ** - ஓ! தேவனே, **தவ** - உம்முடைய, **தேஹே** - ஶரீரத்தில், **தேவாந்** - தேவதைகளை, **பஶ்யாமி** - பார்க்கிறேன். **அஸ்த்ரபூஷணஸம்ஸ்தாநஸ்வரூபம்** - அஸ்திரங்களுக்கும் ஆபரணங்களுக்கும் ஆதாரமாகிய விக்ரஹத்தை, அதாவது தத்வங்களாகிய அஸ்திர பூஷணங்களுக்கு ஆதாரமாகிய விக்ரஹத்தைப் பகவான் தரிக்கிறார் என்றர்த்தம். **இதம்**- இந்த, **அகிலம்**-எல்லா, **ஜகத்**-லோகமும், **யதா**-எப்படி, **பூஷணாஸ்த்ரஸ்வரூபஸ்தம்**-பூஷண ஸ்வரூபமாகவும், அஸ்திர ஸ்வரூபமாகவும்இருக்கிறதோ. **தமஸ:**-ப்ரக்ருதிக்கு, **பர:**-மேலான இடத்திலிருக்கிற, **தாதா** - உலகங்களை ஸ்ருஷ்டித்தவனாகிய பரமாத்மா, **ஶங்கசக்ரகதாதர:**-சங்கு, சக்கரம், கதை இவை

---

1 பார-மௌஸ-5-34.
2 மனுஸ்ம்ருதி-12-123.
3 கீதை-11-13.
4 கீதை-11-15.
5 வி-பு-1-22-76.
6 வி-பு-1-22-66.
7 ராமா-யுத்-114-15.

மான வஹாகூரதஷிவஜ ஊஜஐவிரு ஹவிஶிஷமாக வகு ஷஸ்லேயம். இவ்விருஹம் வா வூஹ விஹவ ஹா ஃஜாவதாராஸெணை வஸவஹகாரமாயிருக்கும் படியும், இவற்றிலுள்ள விஶெஷங்களும், ஹமவஹா ஷூஸஂஜஷாயத்தாலே யறியப்படும். 1 'விஷெணாஶெதா

---

களைத் தரித்துக்கொண்டிருக்கிற. ஷவஜஐமஷாஸ்யமான - பூஷணாஸ்திரரூபமான ஸர்வஜகத்திற்குமாஶ்ரயமான, அவஹாகூரத - ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத, அதாவது ஶுத்த ஸத்வ ஸ்வரூபமான, ஷிவ - ஆஶ்சர்யகரமான அமைப்பை யுடைய, ஊஂமஐ - த்யானம் செய்பவர்களின் பாபத்தைப் போக்கடிக்கக்கூடியதாயும், ஸுகமாக த்யானம் செய்யக்கூடியதாயுமிருக்கிறபடியினலே ஶுபாஶ்ரயமாயிருக்கிற. இவ்விருஹஂ - கீழ் நிரூபித்தருளினபடியே ஜகதாஶ்ரயத்வாதி விஶிஷ்டமான விக்ரஹம். 'வா' இத்யாதி - பரம், வ்யூஹம், விபவம், ஹார்த்தம், அர்ச்சை, என்கிற ஐந்து விதமான ரூபங்களுடைய பேதங்கள் மேல் தத்வத்ரயாதிகாரத்தில் விஸ்தாரமாக நிரூபிக்கப்படுகிறது. 'இவற்றிலுள்ள விஶெஷ'ங்களாவன:—இவற்றின் உபயோகங்கள், வர்ணங்கள், க்ருத்யங்கள் முதலியவைகள். ஹமவஹாஷூஂ - ஸ்ரீபாஞ்சராத்திர ஶாஸ்திரம், ஷஂஜஷாயஂ - பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகள். மேல், விக்ரஹங்களுக்கும் பஹிர்பூதமான விபூதிகளுக்கு ப்ரமாணம் காட்டியருளுகிறார்—'ஷதாஃ' என்றாரம்பித்து. ஷதாஃ - இவைகள், அதாவது கீழ் 'ஹஷா உக்ஷாஷயஃ காஷஃ' என்றாரம்பித்துச் சொல்லப்பட்ட வஸ்துக்கள் எல்லாம், விஷெணாஃ - பகவானுடைய, விஹூதயஃ - விபூதிகள், அதாவது அவனால் நியமிக்கப்படுமவைகள். ஒரு வஸ்துவுடன் சேர்த்து சொல்லப்பட்டிருக்கும் 'விஹூதி' என்கிற பதத்திற்கு நியமிக்கப்படுகிற வஸ்து என்றர்த்தம், அப்படி இல்லாவிடில் 'விஹூதி - என்னும் பதம் ஐஶ்வர்யத்தைச் சொல்லுகிறது என்று ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது இங்கனுஸந்

---

1 வி-பு-1-22-32.

விபூதய:', 1 'ஏஷா விபூதிஸம்ஸ்தாந:', 2 'நாந்தோஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப' இத்யாதிகளுடைய ஸங்க்ரஹமான 3 'யதண்டமண்டாந்தரகோசரஞ்ச யத்' என்கிற ச்லோகத்தின்படியே அநந்தவிபூதிவிசிஷ்டமாக அநுஸந்தேயம். இவ்விபூதிகளில் சேதநங்களாயு மசேதநங்களாயுமுள்ள விரண்டு வகையும் லீலார்த்தங்களாயும், போகார்த்தங்களாயும், விபக்தங்களாயிருக்கும். [illegible] பொது

உபயவிபூதியோகம்.

லீலாநுபஜகத்வ்யாபாரவத்வம்.

---

தேயம். ஏஷாவிபூதி ஸம்ஸ்தாந: - த்ரிபாத் என்று சொல்லப்படுகிற நித்யவிபூதியில் இருப்பையுடையது (இந்தப் பரமாத்மாவினுடைய ஸ்வரூபம்). பரந்தப-ஓ! அர்ஜுந, மம - என்னுடைய, திவ்யாநாம்-உத்க்ருஷ்டங்களான, விபூதீநாம்-ஐஸ்வர்யங்களுக்கு, அந்த: - முடிவானது, ந-இல்லை. ஸங்க்ரஹமான-இந்த ப்ரமாணங்களின் அர்த்தங்களைச் சுருக்கிச்சொல்லுகிற. 'யதண்டமண்டாந்தரகோசரஞ்ச யத் தசோத்தராண்யாவரணாநி யாநி குணா: ப்ரதாநம் புருஷ: பரம் பதம் பராத்பரம் ப்ரஹ்ம ச தே விபூதய:॥' என்று முழு ஸ்லோகம். அண்டம் - ப்ரம்மாண்டமாவது, யத் -எதுவோ, அண்டாந்தரகோசரஞ்சயத்-அண்டங்களும் அவ்வண்டங்களுக்குள்ளிருக்கும் வஸ்துக்களும்எதுவோ,அன்றிக்கே,வேறு அண்டங்களிலிருக்கும் வஸ்துக்களாகவுமாம், பதின்மடங்கதிகமான அண்டாவரணங்களும், ஸத்வ ரஜஸ் தமோகுணங்களும், அவைகளுக்காதாரமான ப்ரக்ருதியும், பத்த ஜீவர்களும், நித்ய விபூதியும், முக்தாத்மாக்களும், நித்யர்களும், பரவாஸுதேவ விக்ரஹமும், உம்முடைய விபூதிகள் என்றர்த்தம். லீலார்த்தங்களாயும் - பகவானுடைய லீலையையே ப்ரயோஜனமாகவுடையவைகளாயும், போகார்த்தங்களாயும் - பகவானுடைய போகத்தையே ப்ரயோஜனமாக உடையவைகளாயும், விபக்தங்களாயிருக்கும்-பிரிக்கப்பட்டிருக்கும். 'லீலை'யாவது ஒருவனுக்கில்லாத வேஷங்களை ஆரோ

---

1 வி-பு-5-6-50. 2 கீதை-10-40. 3 ஆள-ஸ்தோ-17.

**வாயிருக்க 𑌰𑌸𑌵𑍈𑌷𑌮𑍍𑌯த்தாலே 𑌲𑍀𑌲𑌾𑌭𑍋𑌗 𑌵𑌿𑌭𑌾𑌗𑌂 𑌯𑌥𑌾𑌲𑍋𑌕ங் கண்டுகொள்வது. அப்படியே**

---

பித்து அதைக் கண்டெல்லாரும் ப்ரமிக்கும்படி பண்ணுகை, அப்படியே பரத ஶாஸ்திரங்களில் ப்ரஸித்தமாகையினால். ஆத்மாவுக்கில்லாத தேவத்வாதி ஆகாரங்களையுண்டாக்கி எல்லாரையும் ப்ரமிக்கும்படி செய்கிறபடியினால் இதை லீலா விபூதியென்கிறது. இப்படிக்கில்லாமல் கேவலம் ஆநந்தமாத்திரத்தை யனுபவிப்பதினாலதை போக விபூதி என்கிறது. எல்லா வஸ்துக்களும் பகவானுக்கு அநுகூலமாயிருக்க வைஷம்யம் சொல்லுவதற்குக் காரணமென்ன? பகவான் ஸர்வஸமன் என்று சொல்லுகிற **'𑌸𑌮𑍋𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌨 𑌮𑍇 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑍋𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃'** இத்யாதிகள் விரோதியாதோ என்ன? அருளிச் செய்கிறார்— **'𑌆𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌂'** என்றாரம்பித்து. **𑌆𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌂**-பகவானுக்கு அநுகூலமாயிருக்கை. **போதுவாயிருக்க**-இந்தஉபயவிபூதிகளுக்கும் ஸமமாக இருக்கச்செய்தே, **𑌰𑌸𑌵𑍈𑌷𑌮𑍍𑌯த்தாலே**-லீலாரஸம், போகரஸம் என்கிற பேதத்தாலே. லீலையினாலுண்டாகிற ஆநந்தமும், போகத்தினால் உண்டாகிற ஆநந்தமும் துல்யமானாலும் ஆநந்தத்திற்குக் காரணம் வேறாகையினால் வைஷம்யம் சொல்லுகிறது. இத்தால் **'𑌸𑌮𑍋𑌹𑌂'** இத்யாதிக்கு ஸகல வஸ்துக்களும் பொதுவில் தனக்கு அநுகூலமாக இருக்கின்றன என்பதில் தாத்பர்யமே யொழிய அவைகளினால் உண்டாகும் ரஸத்தில் வைஷம்யமில்லை என்பதில் தாத்பர்யமில்லை என்பதேற்படுகிறது. ஆநந்தமே சில வஸ்துக்களினால் உண்டாகும்பொழுது லீலையென்றும், சில வஸ்துக்களினால் உண்டாகும்பொழுது போகமென்றும் சொல்லப்படுகிறது என்று **'𑌲𑍀𑌲𑌾𑌭𑍋𑌗𑌵𑌿𑌭𑌾𑌗𑌂'** என்பதற்குத் தாத்பர்யம். **'𑌯𑌥𑌾𑌲𑍋𑌕𑌂'** என்பதற்கு லோகத்தில் ராஜாதிகளுக்குத் தோட்டம் முதலியவைகள் எல்லாம் அநுகூலமாயிருக்கச் சில பாகங்கள் கந்துகாதி விளையாட்டிற்காக இருப்பதினாலே லீலோபகரணமென்றும், அந்தப்புர ஸ்திரீ ஜனங்களோடு ஸுகமனுபவிக்குமிடமாகையினாலே போகோபகரணமென்றும் பிரிக்கப்பட்டிருக்கிறாப்போலே என்று தாத்பர்யம். இந்த விபூதிகளில் அவன் செய்யும் வ்யாபார விஶேஷத்தை மேலருளிச்செய்கிறார். இத்தால் ப்ரும்ம லக்ஷணமும் ஸங்க்ர

1 '**ஜந்மாத்யஸ்ய யத:**', 2 '**க்ரீடா ஹரேரிதம் ஸர்வம்**', 3 '**க்ரீடதோ பாலகஸ்யேவ**', 4 '**பால: க்ரீடநகைரிவ**', 5 '**ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:**', 6 '**லோகவத்து லீலாகைவல்யம்**' என்கிறபடியே **லீலாரூபஜகத்வ்யாபாரலக்ஷண**மாக **வர்ணஸ்யேயம்.**

---

ஹீதமாயிற்று என்று திருவுள்ளம். **அஸ்ய** - இந்த லோகத்திற்கு, **யத:** - எந்தப் பகவானிடத்திலிருந்து, **ஜந்மாதி** - உத்பத்தி, ஸ்திதி, ப்ரளயங்கள் நடக்கின்றனவோ (அது ப்ரும்மம்). **இதம்** - இந்த, **ஸர்வம்** - எல்லாம், **ஹரே:** - பகவானுக்கு, **க்ரீடா** - விளையாட்டு. **க்ரீடதோபாலகஸ்யேவ** - விளையாடுகிற குழந்தையின் வ்யாபாரத்தைப்போல (அந்தப் பகவானுடைய வ்யாபாரத்தையும் பார்). **பால:** - குழந்தை, **க்ரீடநகைரிவ** - விளையாடும் கருவிகளாலேபோல (ப்ரும்மருத்ராதிகளைக்கொண்டு நீர் விளையாடுகிறீர்). **ஹரே**-பகவானே, **க்ரீடாகந்துகைரிவ** - விளையாடுவதற்குக் காரணமான பந்து முதலியவைகளைப் போலிருக்கிற, **ஜந்துபி:** - ஜந்துக்களினால், **விஹரஸி** - விளையாடுகிறீர். **லோகவத்** - லோகத்தில்போலே, **லீலாகைவல்யம்** - கேவலம் விளையாட்டு மாத்திரம் ப்ரயோஜனம், அதாவது வேறொரு ப்ரயோஜனமில்லை என்று தாத்பர்யம். '**அப்படியே**' என்பது '**லீலாரூப**' என்பதோடன்வயிக்கிறது. **அப்படியே** - லோகத்தில் கண்டிருப்பதைப்போலவே, அதாவது, நிரபேக்ஷனை ராஜா லீலார்த்தமாகச் சில வ்யாபாரங்களைச் செய்வதைப்போல அவாப்த ஸமஸ்த காமனை பகவான் லீலைக்காக ஜகத் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களைச் செய்கிறான் என்று தாத்பர்யம். **லீலாரூப** - லீலையாயிருக்கிற. **ஜகத்வ்யாபாரலக்ஷண**மாக - ஜகத்தைப் பற்றிய வ்யாபாரங்களாகிய ஸ்ருஷ்டிப்பது, ரக்ஷிப்பது முதலியவைகளை அடையாளமாக வுடையதாக.

ப்ராப்தாவான ஜீவாத்ம ஸ்வரூபத்தை அருளிச்செய்யப் போகிறவராய்க் கீழ் விஶதமாக உபபாதித்த ப்ராப்ய ஸ்வரூபத்

---

1 ஶா-ஸூ-1-12. 2 பார-ஶாந்-206-58. 3 வி-பு-1-2-18.
4 பார-ஸபா-12-57. 5 வி-த. 6 ஶா-ஸூ-?-1-33.

இப்படி லக்ஷ்மீஸஹாயமாய், அபரிச்சிந்நஜ்ஞாநாநந்தமாய், ஹேயப்ரத்யநீகமாய், ஜ்ஞாநசக்த்யாத்யநந்தகல்யாணகுணவிசிஷ்டமாய், திவ்யகல்யாணவிக்ரஹோபேதமாய், சரீரபூத விபூதித்வயயுக்தமாய், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரலீலமாய்க்கொண்டு ப்ராப்யமான ப்ரஹ்மத்தை ப்ராபிக்கும் ப்ரத்யகாத்மாவினுடைய பத்த முக்த நித்ய ஸாதாரண ரூபமும் முமுக்ஷுவாய் அதிகாரியான தனக்கிப்போது அஸாதாரணமான ரூபமும் அறியவேணும். இவர்களில் பத்தராவார், அநாதி கர்ம ப்ரவாஹத்தாலே அநவரதஸம்ஸார

ஜீவாத்ம ஸ்வரூபத்தில் பத்த முக்த நித்ய விபாகம்.

---

தை ஸுலபமாயறிவதற்காக அதை ஸங்க்ரஹித் தருளுகிறார்— 'இப்படி' என்றாரம்பித்து. 'லீலமாய்க்கொண்டு ப்ராப்யமான' என்பதினால் இவ்வாகாரங்களெல்லாம் ப்ராப்யதசையில் அநுபாவ்யங்கள் என்பது தெரிவிக்கப்படுகிறது. **ப்ராபிக்கும்**-அடைகிற, **ப்ரத்யகாத்மாவினுடைய** - ஜீவாத்மாவினுடைய, **அதிகாரி**யான - முமுக்ஷுவாய் அகிஞ்சனனாய் ப்ரபத்தியிலதிகாரியான. '**அஸாதாரணரூப**முமறியவேணும்' என்பதற்கு மற்றவர்களாகிய முக்த நித்யர்களுக்கு இல்லாமல் தனக்கு மாத்திரம் இருக்கும் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றர்த்தம். எதற்காகவென்னில்? நித்யர்களைப் போலத்தான் புருஷார்த்தத்தையடைய ஸ்வரூப யோக்யனென்றறிந்து, அப்படி இருந்தும் இப்பொழுது அடையாமலிருப்பதற்குக் காரணத்தைத் தெரிந்துகொண்டால் அதை நிவ்ருத்தித்துக்கொள்ள ப்ரவ்ருத்திப்பதற்காக என்று தாத்பர்யம். இது மேலே அதிகார ஸங்க்ரஹ ச்லோகத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இதில் ஜீவாத்மாக்கள் மூன்றுவிதமென்று '**பத்த**' இத்யாதி வாக்யத்தில் அருளிச்செய்யப்பட்டிருப்பதினால் அவரவர்களுக்குண்டான ஆகாரத்தை நிரூபித்தருளுகிறார்—'**இவர்களில்**' என்றாரம்பித்து. '**அநவரதஸம்ஸார**'ராயிருக்கையே பத்தர்களுக்கு லக்ஷணம். அதாவது தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற ஸம்ஸாரத்தை உடையவர்களாயிருக்கை என்றர்த்தம். '**அநாதி கர்ம ப்ரவாஹத்தாலே**' என்பது அதற்குக் கார

ராய் ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்த விஷமவிஷமங்களான க்ஷேத்ரஜ்ஞர். முக்தராவார் ஶாஸ்த்ரசோதிதங்களான உபாய விசேஷங்களா லுண்டான பகவத்ப்ரஸாதத்தாலே அத்யந்தநிவ்ருத்தஸம்ஸாரராய் ஸங்கோச ரஹிதபகவதநுபவத்தாலே நிரதிஶயாநந்தராயிருக்குமவர்கள். நித்யராவார் ஈஶ்வரனைப்போலே அநாதியாக ஜ்ஞானஸங்கோசமில்லாமையாலே 1 'ஸவயஸ இவ யே நித்யநிர்தோஷகந்தா:' என்கிறபடியே ஸ்வரூப

ணத்தைத் தெரிவிக்கிறது. 'ப்ரஹ்மாதி' இத்யாதி லக்ஷ்யத்தைக்குறிக்கிறது. 'ஸ்தம்ப' என்பதற்கு கோரை என்றர்த்தம். இத்தால் தேவதிர்யங் மனுஷ்ய ஸ்தாவரங்கள் ஸங்க்ரஹிக்கப் பட்டதாகிறது. விஷமவிஷமங்களான - பிரிவையடைந்திருக்கிற. 'க்ஷேத்ரம்' என்றால் ஶரீரம், 'ஜ்ஞர்' என்றால் அதை அறிகிறவன், 'இதம் ஶரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே। ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:॥' என்கிற கீதா ஶ்லோகம் இங்கு அநுஸந்தேயம். ஆகையினால் 'க்ஷேத்ரஜ்ஞர்கள்' என்பதற்கு இந்த ப்ரக்ருதி பரிணாமமான ஶரீரத்தைத் தங்களுடைய ஸுகதுக்கங்களுக்காகஏற்பட்டிருப்பதினாலே தங்களுடையதென்று அபிமானிப்பவர்கள்என்றர்த்தம். சோதிதங்களான - விதிக்கப்பட்டவைகளான, உபாயவிசேஷங்களால்-மோக்ஷத்துக் குபாயங்களாகிற பக்தி ப்ரபத்திகளுக்குள் ஒன்றால். 'அத்யந்தநிவ்ருத்தஸம்ஸாரராய்' என்பதற்கு மறுபடியும் ஸம்ஸாரம் வராமலிருக்கும்படியாக அதிலிருந்து நிவ்ருத்தியையடைந்தவர்கள் என்றர்த்தம். இத்தால் பகவதனுபவத்திற்குத்தடங்கலான கர்மத்துடன் கூடியகைவல்யதஶையை விட இது மேலானதஶை என்றதாயிற்று. ஸங்கோசரஹித - சுருக்கமில்லாத. இத்தால் உபாயத்தைச் செய்துகொண்டிருக்கும் தஶை வ்யாவர்த்திக்கப்படுகிறது. அதாவது பக்தி யோகத்தைச் செய்துகொண்டிருக்கும்பொழுது உண்டாகும் அனுபவம் குணம் முதலியவைகளினால் சுருக்கத்தை யடைந்திருக்கும்,முக்த தஶையில் அனுபவம் பரிபூர்ணமாயிருக்கும் என்று தாத்பர்யம். யே - யவர்கள், ஸவயஸ இவ - ஸமமான வயதையுடைய தோழன்மார்களைப்போல, நித்யநிர்தோஷகந்தா:-எப்பொழு

1 ஸ்ரீ குணரத்னகோசம்-27.

ஸம்ஸாரராய்க்கொண்டு நித்யகைங்கர்யம் பண்ணுகிற அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகள். இவர்களெல்லார்க்கும் ஸாதாரணமான ரூபம் அணுத்வ ஜ்ஞாநாநந்த அமலத்வாதிகளும், பகவச்சேஷத்வ பாரதந்த்ர்யாதிகளும். முமுக்ஷுவான தனக்கஸாதாரணமாக வறியவேண்டுமாகாரங்கள் உபோத்காதத்திலே சொன்னோம், மேலுங் கண்டுகொள்வது. இப்ப்ராப்தாவினுடைய ஸ்வரூபம் ப்ரணவ நமஸ்ஸுக்களில் மகாரங்களிலும், நாரஶப்தங்களிலும், 'ப்ரவிஶ்ய' என்கிற உத்தரனிலும்,

---

தும் தோஷத்தின் ஸம்பந்தமில்லாதவர்களோ, (அப்படிப்பட்ட நித்யஸூரிகள் எப்பொழுதும் கைங்கர்யம் செய்துகொண்டிருக்கிறார்கள்.) **அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரராய்**-ஒருக்காலத்திலும் ஸம்ஸார ஸம்பந்தமில்லாதவர்களாய். இத்தால் முக்தர்களைக் காட்டிலும் பேதம் தெரிவிக்கப்படுகிறது. '**அநந்த கருட**' இத்யாதி உதாஹரணம். இப்படி மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்ட பத்தமுக்த நித்யர்களான ஜீவாத்மாக்களின் பொதுவான ஆகாரத்தை யருளிச்செய்கிறார்—'**இவர்கள்**' என்றாரம்பித்து. **ஜ்ஞாநத்வம்**-ஸ்வயம்ப்ரகாஶமாயிருக்கை, **ஆநந்தத்வம்** - அநுகூலமாயிருக்கை, **அமலத்வம்** - ப்ரக்ருதியிலேற்பட்ட விகாராதிகள் ஸ்வரூபத்திலில்லாமலிருக்கை. இவ்வாகாரங்கள், தான் அநர்ஹன் என்று அகலாமலிருக்கிறதற்கு உபயுக்தங்கள். '**அமலத்வாதி**' என்கிற இடத்து '**ஆதி**' ஶப்தத்தினால் ஸத்யகாமத்வம் குறிக்கப்படுகிறது. '**பாரதந்த்ர்யாதி**' என்பதில் '**ஆதி**' ஶப்தத்தினால் தாஸத்வம் சொல்லப்படுகிறது. இவ்வாகாரங்கள் புருஷார்த்தத்தையடைய யோக்யன் என்கிற எண்ணம் உண்டாவதற்குக் காரணம் என்பதைத் தெரிவிப்பதற்காகத் தனித்தனியாகவருளிச்செய்யப்பட்டிருக்கிறது. **மேலும்**-முமுக்ஷுத்வாதிகாரத்திலும் அதிகாரி விபாகாதிகாரத்திலும். இப்படிப்பட்ட ப்ராப்தாவின் ஸ்வரூபம் ரஹஸ்யத்ரயங்களில் ப்ரதிபாதிக்கப்படும் இடங்களை நிரூபித்தருளுகிறார்—'**இப்ப்ராப்தாவினுடைய**' என்றாரம்பித்து. '**நாரஶப்தங்களிலும்**' என்பதினால் '**நராஜ்ஜாதாநி தத்வாநி**', '**நராணாம் ஸமூஹ:**' இத்யாதிகளில் ஜீவஸ்வரூபம் விவரிக்கப்படுவது அபிப்ரேதம். '**ப்ரவிஶ்ய**' என்கிற

‘வ்ரஜ’ என்கிற மத்யமனிலும், ‘த்வா’ என்கிற விபக்தியிலும், ‘ஶரணம்’ என்கிற வாக்யத்திலுமநுஸந்தேயம்.

**ப்ராப்த்யுபாய பல ஸ்வரூப ஸங்க்ரஹ நிரூபணம்.**

ப்ராப்த்யுபாயமுமிதின் பரிகரங்களும், பலஸ்வரூபமிருக்கும்படியும், மேலே ப்ராஸங்கிகங்களிலே பரக்கச் சொல்லக் கடவோம். இவற்றில் உபாயம் திருமந்த்ரத்தில் நமஸ்ஸிலும், ஶரணஶப்தத்திலும்,

---

உத்தமனிலும்’ என்பதோடு த்வயத்திலிருக்கிற என்று சேர்த்துக்கொள்ளவும். **உத்தமனிலும்** - உத்தம புருஷனை (தன்மையான) ஆக்யாதத்திலும் (தாதுவின்மேல் இருக்கும் ப்ரத்யயத்திலும்), அதாவது அடைகிறேன் என்பதில் தொக்கியிருக்கும் ‘நான்’ என்னும் பதத்தில். ‘**வ்ரஜ**’ என்பதோடு சரமஶ்லோகத்திலும் என்று சேர்த்துக்கொள்ளவும். **மத்யமனிலும்**- முன்னிலையான ஆக்யாதத்திலும், அதில் தொக்கியிருக்கும் ‘நீ’ என்பதிலும் ‘**ஶரணம்**’ என்கிற **வாக்யத்திலும்**’ என்பதற்கு இதற்குமுன் ஸோகாவிஷ்டனாயிருந்தமை தோற்றுகிறபடியினால் இதுவே உபாயத்தில் அதிகாரியான தன்னுடைய அஸாதாரணமான ஆகாரம் என்பது த்யோதிதமாயிற்று என்று தாத்பர்யம். **பரிகரங்களும்**-அங்கங்களும். பலம் ‘**உபரி ப்ரபஞ்சத: ப்ரஸ்தோஷ்யதே**’ என்று மேலே அருளிச் செய்யப்பட்டிருக்கிறபடியே வாக்கினால் அளவிட்டுச் சொல்ல முடியாதாகையினால், அது திங்மாத்திரம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிப்பதற்காக ‘**பலத்தையும்**’ என்றருளிச் செய்யாமல் ‘**பலஸ்வரூபமிருக்கும்படியும்**’ என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ‘**இருக்கும்படியும்**’ என்பதற்கு அபரிச்சின்னமாயிருக்கிறது என்கிற ப்ரகாரத்தையும் என்றர்த்தம். **ப்ராஸங்கிகங்களிலே** - சொல்ல வேண்டியதாக ஸங்கதி ஏற்பட்ட இடங்களிலே, **பரக்க**-விஸ்தாரமாக. இத்தால் இவ்விடத்தில் ஸங்கதி ஏற்பட்டிருந்தபோதிலும் பலம் அநேக க்ரந்தங்களைக்கொண்டு தனித்தனியே நிருபிக்கவேண்டியதாகையினால் இந்த ஒரு அதிகாரத்தின் கீழ் அவாந்தர ப்ரகரணமாக நிரூபிப்பது அஸம்பாவிதமாகையினாலே தனித்தனியாக மேலே நிரூபிக்கப்போகிறோம் என்று ஸமாதானம் த்யோதிதமாயிற்று. இந்த உபாயம் ரஹஸ்யத்ரயத்தில்

**த்வயத்தில் ஸித்தஸாதநத்திலும், சரமஶ்லோகத்தில் ஸித்தஸாதநத்திலு மந்வயம். புருஷார்த்தம் சதுர்த்யந்த பதங்களிலும், த்வயத்தில் நமஸ்ஸிலும், 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி'** என்கிற விடத்திலு **மந்வயம்.**

---

ப்ரதிபாதிக்கப்படும் இடங்களை நிரூபித்தருளுகிறார்—'**திருமந்த்ரத்தில்**' என்றாரம்பித்து. '**நமஸ்ஸிலும் அயநஶப்தத்திலும்**' என்பதற்கு நமஸ்ஸில் ஸாத்யோபாயமும், அயந ஶப்தத்தில் ஸித்தோபாயமும் என்றர்த்தம். '**ஸித்தஸாதநத்திலும்**' என்பதற்கு ஸவிஶேஷணமான நாராயண ஶப்தத்தில் ஸித்தோபாயமும், '**ஶரணம் ப்ரபத்யே**' என்பதினால் ஸாத்யோபாயமும் சொல்லப்படுகிறது என்றர்த்தம். '**மாம்**' என்பதினால் ஸித்தோபாயமும், '**ஶரணம் வ்ரஜ**' என்பதினால் ஸாத்யோபாயமும் சரமஶ்லோகத்தில் சொல்லப்படுகிறது. பலத்தை ப்ரதிபாதிக்கும் இடங்களை நிரூபித்தருளுகிறார்—'**புருஷார்த்தம்**' என்றாரம்பித்து. '**சதுர்த்யந்தபதங்களிலும்**' என்பதோடு திருமந்திரத்திலும் த்வயத்திலும் என்று சேர்த்துக்கொள்ளவும். நான்காம் வேற்றுமையை முடிவில் உடைய பதங்களில், அதாவது திருமந்திரத்தில் '**நாராயணாய**' என்கிற பதத்திலும், த்வயத்தில் '**ஶ்ரீமதே நாராயணாய**' என்கிற பதங்களிலும் என்று தாத்பர்யம். அந்தப்பதங்களின் கடைசியிலிருக்கும் நான்காம் வேற்றுமையினால் ஸாத்யோபேயமான கைங்கர்யமும், முன்னிருக்கும் பதங்களினால் ஸித்தோபேயமான ஶ்ரிய:பதியும் சொல்லப்படுகிறபடியினால் ஸித்த ஸாத்யரூபமான இரண்டுவித உபேயமும் அருளிச் செய்யப்பட்டதாயிற்று. த்வயத்தில் விஶேஷமருளிச்செய்கிறார்—'**த்வயத்திலும்**' என்றாரம்பித்து. '**நமஸ்ஸிலும்**' என்பதற்கு உத்தரகண்டத்தில் இருக்கும் நமஶ்ஶப்தம் பலதஶையில் உண்டாகக்கூடிய ஸ்வாதீன ஸ்வார்த்த கர்த்ருத்வாதி புத்தியைக் கழிக்கிறபடியினால் பலத்தைச் சொல்லுகிறது என்று தாத்பர்யம். '**ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்கிற இடத்திலும்**' என்பதற்கு ஸர்வபாப நிவ்ருத்தியைச் சொன்ன இடத்தில் ஸ்வாபாவிகமான பகவதனுபவ கைங்கர்யங்கள் அர்த்தாத் ஸித்தங்கள் என்று தாத்பர்யம்.

ப்ராப்தி விரோதி.

ப்ராப்திவிரோதியாவது அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்தரூபமான மோக்ஷப்ரதிபந்தகவர்க்கம். அதில் ப்ரதாநம் அநாதியாக ஸந்ததமான ஆஜ்ஞாதிலங்கநமடியாகப்பிறந்த பகவந்நிக்ரஹம். இது சேதநர்க்கு ஜ்ஞாநஸங்கோசகரமான

---

விரோதி ஸ்வரூபத்தை நிரூபித்தருளுகிறார்—'ப்ராப்தி விரோதியாவது' என்றாரம்பித்து. 'அவித்யை'யாவது 'அநாத்மந்யாத்மபுத்திர்யா அஸ்வே ஸ்வமிதி யா மதி:' என்று சொல்லப்பட்ட தேஹாத்மப்ரம ஸ்வதந்திராத்ம ப்ரம அஹங்காரமமகாரங்கள். 'ருசி' என்பதினால் ருசி வாஸனை, ப்ரக்ருதி ஸம்பந்தம் குறிக்கப்படுகிறது. இவைகளை நிவ்ருத்தி செய்வதற்கு. சரணாகதியே உபாயமென்று தெரிவிப்பதற்காகவும், இவைகளுக்கெல்லாம் காரணம் பகவந்நிக்ரஹம், அதற்குப் பரிஹாரம் பண்ணவே மற்றவைகள் தானே நிவ்ருத்தித்துவிடும் என்று தெரிவிப்பதற்காகவும், அதை முதலில் நிரூபித்தருளுகிறார்— 'அதில்' என்றாரம்பித்து. இத்தால் அவித்யை ஜ்ஞானத்தினாலும், கர்மங்கள் வர்ணாஶ்ரம தர்மானுஷ்டானத்தினாலும், நிவ்ருத்தி செய்யக்கூடியவைகளாயிருந்தபோதிலும் விரோதிகளனேகங்களாகையினாலவைகளுக்குத் தனித்தனியாகப் பரிஹாரம் செய்வது அஸாத்யமாகையினாலும் ப்ரபத்தியினால் அவைகளெல்லாம் ஸுலபமாகப் பரிஹரிக்கக் கூடுமாகையினாலும் இதுவே கர்த்தவ்யம் என்றறியத்தக்கது. அதில் - மோக்ஷ ப்ரதிபந்தகங்களுக்குள். 'ப்ரதாநம்' என்பதற்கு இவைகளுக்கெல்லாம் காரணமாயிருக்கிறபடியினால் முக்யமானது என்றர்த்தம். ஸந்ததமான - துடர்ச்சியாய்ச் செய்யப்பட்டுவருகிற. ஆஜ்ஞாதிலங்கநமடியாக-பகவானுடைய உத்தரவை மீறி நடப்பதைக் காரணமாகவுடைய. ஆஜ்ஞாதிலங்கனமும் பகவந் நிக்ரஹமும் பீஜாங்குரந்யாயத்தினால் அநாதியாக வந்து கொண்டிருக்கிறது என்று தாத்பர்யம். இது அவஶ்யம் பரிஹரிக்கவேண்டும் என்று தெரிவிப்பதற்காக இதுவிரோதம் செய்யும் ப்ரகாரங்களை விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார். 'இது' இத்யாதி ப்ரளயதசையில் விரோதமாகும் விதத்தைச் சொல்லுகிறது. ஜ்ஞாநஸங்கோசகர

த்ரிகுணாத்மக ப்ரக்ருதிஸம்ஸர்க்க விஶேஷத்தை யுண் டாக்கியும், ப்ரக்ருதி பரிணாம விஶேஷங்களான ஶரீரேந்த்ரியாதிகளோடே துவக்கி 1 'திண்ண மழுந் தக்கட்டிப் பல செய்வினை வன்கயிற்றால் புண்ணை மறைய வரிந்தென்னைப் போரவைத்தாய்புறமே' என் றும், 2 'அந்நாள் நீதந்த வாக்கையின் வழியுழல் வேன்' என்றும் சொல்லுகிறபடியே தேஹேந்த்ரியாதி

கரமான - மிகவும் ஜ்ஞானம் சுருங்கும்படி செய்கிற. த்ரிகு ணாத்மக - ஸாம்யாவஸ்தையையடைந்த மூன்று குணங்களை யும் உடையதான. 'ப்ரக்ருதி ஸம்ஸர்க்கவிஶேஷத்தை' என்பதினால் ஸ்ருஷ்டிக்குமுன் நாமரூப விபாகங்களில்லாமலும் ஶரீரம், இந்திரியம், முதலியவைகளில்லாமலும் ப்ரக்ருதியோடு ஏகீபவித்து நிற்கையாகிற ஸம்பந்தம் சொல்லப்படுகிறது. ஸ்ருஷ்டி தஶையில் பண்ணும் விரோதத்தை யருளிச் செய் கிறார்—'ப்ரக்ருதி' என்றாரம்பித்து. 'பரிணாமவிஶேஷ' மென்பதினால் ஸ்ருஷ்டி தஶையில் உண்டாகும் மாறுபாடுகள் சொல்லப்படுகின்றன. துவக்கி-ஸம்பந்தப்படுத்தி. திண்ணம்-த்ருட மாக, பல-பலவகைப்பட்ட, செய்வினை-(என்னால்) செய்யப்பட்ட கர்மங்களாகிற (பாபங்களாகிற), வன் - உறுதியான, அதாவது உன்னைத் தவிர மற்றொருவராலும் நிவ்ருத்தி செய்ய முடியாத, கயிற்றால் - பாசத்தினால், அழுந்தக்கட்டி - பேதம் தெரியவொட் டாமல் கட்டி, புண்ணை - வ்ரணத்தை, மறைய - மறையும்படி, வரிந்து - மூடி, அதாவது ஶரீரத்தை நிரூபித்துப் பார்த்தால் வ்ரணமயமாய் மேலே தோலினால் மூடப்பட்டிருக்கிற தென்ப தேற்படும் என்று தாத்பர்யம், என்னை - அஶக்தனானவென்னை, புறம் - பாஹ்ய விஷயங்களிலே, போரவைத்தாய் - போகும்படி செய்தாய். அந்நாள் - அந்த ஸ்ருஷ்டி காலத்திலே, நீதந்த - 'பொ ருளென் றிவ்வுலகம் படைத்தவன்' என்கிறபடியே ஹிதபுத்தி யாலே ஸௌஹ்ருத்தான நீ கொடுத்த, ஆக்கையின்வழி - ஶரீரத் தின் வழியிலே, உழல்வேன் - சுழன்றுகொண்டிருப்பேன். வஶ தஜ்ஞனுக்கியும் - அதற்கு வஶப்பட்ட ஜ்ஞானம், ப்ரவ்ருத்தி, இவைகளையுடையவனுக்கியும். தேஹேந்திரியாதிகளும் ஶாஸ்

1 திருவாய்மொழி-6-1-5 2 திருவாய்மொழி-3-2-1

**வாதஜ்ஞ**னுக்கியும், அவ்வவ**தஶை**யிலும் **ஶாஸ்த்ரவஶ்ய**தை கூடாத **திர்யகாதி தேஹ**ங்களிலே நிறுத்தியும், **ஶாஸ்த்ரயோக்ய**ங்களான **மநுஷ்யாதி ஜந்ம**ங்களில் **பாஹ்யகுத்ருஷ்டிமத**ங்களாலே கலக்கியும், அவற்றிலிழியாதவர்களையுமுள்பட 1 ‘**பகவத் ஸ்வரூபதிரோதாநகரீம் விபரீதஜ்ஞாநஜநநீம் ஸ்வவிஷயாயாஶ்ச போக்யபுத்தேர் ஜநநீம்**’ என்கிறபடியே இம்**மூலப்ரக்ருதி** முதலான **மோஹநபிஞ்சி**கைதன்னாலே **தத்த்வ**

---

திரீய கர்மானுஷ்டானாதிகளைச் செய்து மோக்ஷத்தை யடைவதற்குக் காரணமாகையினால் அதை விரோதியாக எடுப்பதற்குக் காரணம் நிரூபித்தருளுகிறார்—‘அவ்வவ**தஶை**யிலும்’ என்றாரம்பித்து. **ஶாஸ்த்ரவஶ்ய**தைகூடாத - ஶாஸ்திரத்திற்கு வசப்பட்டு நடக்க ஸம்பாவனை இல்லாத. **திர்யக்** - பசு, பக்ஷி, முதலியவைகள். ‘**ஆதி**’ என்பதினால் ஸ்தாவரம் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. **நிறுத்தி** - நிற்கும்படி செய்து. ஶாஸ்திரவஶ்யமான மனுஷ்ய ஜன்மங்களிலும் இது விரோதிக்கும் ப்ரகாரத்தை யருளிச் செய்கிறார்—‘**ஶாஸ்த்ரயோக்ய**ங்களான’ என்றாரம்பித்து. **ஶாஸ்த்ரயோக்ய**ங்களான - ஶாஸ்திரத்திற்கு வசப்பட்டு நடக்க யோக்யங்களான ‘**மநுஷ்யாதி**’ என்கிற இடத்தில் ‘**ஆதி**’ ஶப்தத்தினால் தேவதைகள் குறிக்கப்படுகிறார்கள். தேவதைகளுக்கும் உபாஸனாதிகளில் அதிகாரம் உண்டென்று ஶாரீரக ஶாஸ்திரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. **கலக்கியும்** - கலங்கும்படி செய்தும். **இழிவது** - இறங்குவது. **பகவத்** - பகவானுடைய, **ஸ்வரூப** - ஸ்வரூபத்திற்கு, **திரோதாநகரீம்** - மறைவைச் செய்கிறதாயும், **விபரீதஜ்ஞாநஜநநீம்** - விபரீத ஜ்ஞானத்தை உண்டாக்குகிறதாயும், **ஸ்வவிஷயாயா:** - தன்னைப் பற்றிய, **போக்யபுத்தே:** - இதுவே போக்யம் என்கிற புத்தியை உண்டாக்குகிறதாயும், இவை மூன்று ஸ்வபாவங்களும் மோஹன பிஞ்சிகைக்கு முண்டு. ‘**முதலான**’ என்பதினால் ஶரீரத்திற்குக் காரணங்களாகிய மஹத், அஹங்காரம், பஞ்சபூதங்கள் சொல்லப்படுகின்றன.

---

1 ஶரணாகதிகத்யம்.

**ராஜ்ஞாந விபரீதஜ்ஞாந விஷயஸ்ப்ருஹாவத்வங்களைப் பண்ணியும்,** இவையடியாக 1 'ஆவிதிகைக்கவைவர் குமைக்குஞ் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ' என்கிறபடியே **ஸுகஸாதநமான அக்ருத்யகரணாதிரூபமான ஆஜ்ஞாதிலங்கநத்தைப் பண்ணுவித்தும்,** 2 '**பாபம் ப்ரஜ்ஞாம் நாஶயதி க்ரியமாணம் புந:புந: | நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ**

---

'**ஶாம்பரபிஞ்சிகை**'யாவது இந்திரஜால வித்தை செய்கிறவர்கள் பார்க்கிறவர்களுடைய புத்தியை மயங்கச்செய்து மந்திரம் முதலியவைகளை உச்சரித்துக்கொண்டு கந்தர்வ நகரம் முதலியவைகளைக் காண்பிக்கும் மயில்தோகை. அதைப்போல பகவந்நிக்ரஹம் தேஹேந்திரியாதிகளை உபகரணங்களாக வைத்துக்கொண்டு இவன் புத்தியை மயக்குகிறது என்று தாத்பர்யம். '**அதத்வஜ்ஞாந**'மாவது உண்மையைத்தெரிந்துகொள்ளாமை. இது '**ஹ்ருதயஸ்த ஸர்வ**' என்கிற வாக்யத்தின் தாத்பர்யம். '**விபரீதஜ்ஞாந**' என்பது இரண்டாவது வாக்யத்தின் தாத்பர்யம். '**விஷயஸ்ப்ருஹாவத்வங்களை**' என்றது '**ஸ்வவிஷயாயா:**' இத்யாதியின் தாத்பர்யம். '**ஸ்ப்ருஹாவத்வ**'மாவது அதை அனுபவிக்காவிடில் க்ஷணகாலமும் பொறுக்கமுடியாமலிருக்கும்தசை. **ஆவிதிகைக்க**-ஜீவாத்மாப்ரமிக்கும்படி, அதாவது க்ருத்யாக்ருத்யநிஶ்சயமில்லாமல்போகும்படி, '**ஆவி**' என்பது ப்ராணவாயுவைச்சொல்லி அத்துடன் கூடவே இருக்கும் ஜீவாத்மாவைக் குறிக்கிறது, **ஐவர்** - பஞ்சேந்திரியங்கள், **குமைக்கும்** - ஹிம்ஸிக்கும், **பல**-அநேகவிதங்களான, **சிற்றின்பம்**-அல்பஸுகங்களை, **காட்டி** - எனக்குக்காட்டி, **நீ**-ஸர்வஜ்ஞ ஸுஹ்ருத்தான நீ, **பாவியேனை** - பாபியான என்னை, **படுப்பாயோ**-ஹிம்ஸிப்பாயோ. **ஸுகஸாதநமான** - அல்பஸுகத்துக்குக்காரணமான. '**ஆதி**' பதத்தினால் க்ருத்யாகரணம் குறிக்கப்படுகிறது. **அக்ருத்யகரணம்** - செய்யத்தகாத கார்யத்தைச்செய்கிறது. **க்ருத்யாகரணம்**-செய்யவேண்டிய கார்யத்தைச் செய்யாமை. **புந: புந:**-அடிக்கடி, **க்ரியமாணம்** - செய்யப்படுகிற, **பாபம்** - பாப

---

1 திருவாய்மொழி-6-9-9. 2 பார-உத்யோ-35-73,74.

புநராரபதே நர:||' என்கிறபடியே மேலும் அபாய பரம்பரைகளிலே மூட்டி யதின் ஸஹமாக 1 'க்ஷிபாம்யஜஸ்ரம்' இத்யாதிகளிற்படியே கர்ப்பஜந்மஜராமரணநரகாதி சக்ரபரிவ்ருத்தியிலே பரிப்ரமிப்பித்தும், க்ஷுத்ரபுருஷார்த்தாதிகளுக்கு ஸாதநமான ராஜஸதாமஸஶாஸ்த்ரார்த்தங்களைக்கொண்டு 2 'யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா: | ப்ரேதாந் பூதகணாம்ஶ்சாந்யே யஜந்தே தாமஸா ஜநா: ||' என்கிறபடியே தன்னோடொக்க வொழுகு சங்கிலியிலே கட்டுண்டுழலுகிற க்ஷுத்ரஜநர் காலிலே விழப்பண்ணியும், அவர்கள் கொடுத்த ஜ்ஞா

---

மானது, ப்ரஜ்ஞாம்-ப்ரஜ்ஞையை, நாஶயதி-நாஶம்செய்கிறது; நஷ்டப்ரஜ்ஞ:-நாஶமடைந்த புத்தியையுடையனாகிய, நர:-மனிதன், பாபமேவ-பாபத்தையே, புந:-மறுபடியும், ஆரபதே-ஆரம்பிக்கிறான். பரம்பரைகளிலே-வரிசைகளிலே. அஜஸ்ரம்-எப்பொழுதும், க்ஷிபாமி - (அஸுரஜன்மங்களிலேயே) தள்ளுகிறேன். கர்ப்ப - கர்ப்பவாஸம், ஜந்ம-பிறப்பு, ஜரா-கிழத்தனம். சக்ரபரிவ்ருத்தியிலே - சக்கரத்தின் சுழலில், பரிப்ரமிப்பித்தும் - சுழலும்படி செய்தும். 'ராஜஸஶாஸ்த்ரார்த்தங்க' ளாவது ஸ்வர்க்காதி பலங்களுக்கு ஸாதனமான கர்மங்கள், அதாவது ரஜோகுண முள்ளவர்களுக்கு க்ரஹிக்கவேண்டியதாக ஶாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கர்மங்கள். அப்படியே 'தாமஸஶாஸ்த்ரார்த்தங்க' ளாவது மிகவும் அல்பமாய் இஹலோக பலங்களுக்கு ஸாதனமான கர்மங்கள். ராஜஸா: - ரஜோகுணம் மேலிட்டவர்கள், யக்ஷரக்ஷாம்ஸி-யக்ஷர்களேயும், ராக்ஷஸர்களேயும் (ஆராதிக்கிறார்கள்), அந்யே-மற்ற, தாமஸா:-தமோகுணம்மேலிட்ட, ஜநா: - ஜனங்கள், ப்ரேதாந் - பிரேதங்களேயும், பூதகணாந் - பூதங்களின் கூட்டங்களேயும், யஜந்தே - ஆராதனம் செய்கிறார்கள். தன்னோடொக்க - தனக்கு ஸமமாக, ஒழுகுசங்கிலியிலே - நீண்ட சங்கிலியிலே, அதாவது பலரை விலங்கிட்டு வைத்திருக்கும் பெரியதான ஶங்கிலி என்றர்த்தம். இத்தால் ஒரே சங்கிலியில் கட்டுண்டிருக்கிற

---

1 கீதை-16-19. 2 கீதை-17-4.

ஜுகுப்ஸாவஹக்ஷுத்ரவிஷயங்களாலே க்ருமிகளைப் போலே க்ருதார்த்தராக மயக்கியும், யோகப்ரவ்ருத்தரான வர்களையும் க்ஷுத்ரதேவதாயோகங்களிலேயாதல் நாமாத்யசேதநோபாஸநங்களிலேயாதல் மூளப் பண்ணி சில்வானங்களான பலங்களாலே யோகத்தைத் தலைசாய்ப்பித்தும், ஆத்மஸாதகரையும் ஆகாரஸம்ஸ்ருஷ்டம் ஆகாரவியுக்தமென்கிற விவ்விரண்டுபடியிலும் ப்ரஹ்மத்ருஷ்டியாலேயாதல் ஸ்வரூபேணவாதல்

---

வர்களில் ஒருவன் அப்படிப்பட்ட மற்றொருவனை ஆஸ்ரயிப்பது போலிருக்கிறது க்ஷுத்ரதேவதாஸ்ரயணம் என்பது த்யோதிதம். ஜுகுப்ஸாவஹ-அருவருக்கக்கூடிய, க்ருமிகளைப்போல- (விஷ்டைகளில் இருக்கும்) புழுக்களைப்போல. க்ருதார்த்தராகமயக்கியும் - க்ருதார்த்தனாகத்தன்னை நினைத்து அதினாலே தன்னை மயங்கும்படி செய்தும். இவ்விடத்தில் 'மெல்லியலாக்கை கிருமிகுருவில் மிளிர்தந்தாங்கே செல்கிய செல்கற்று உலகையென்காணும்' என்கிற திருவிருத்தப்பாசுரம் விவக்ஷிதம். யோகப்ரவ்ருத்தர்களையும்' என்பதற்கு 'க்லேசாநாம் ச க்ஷயகரம் யோகாதந்யந்ந வித்யதே' என்று துக்க நிவ்ருத்திக்கு ஸாதானமாகச் சொன்ன யோகம் செய்ய ஆரம்பித்தவர்களையும் என்று தாத்பர்யம். 'நாமாத்யசேதநோபாஸந'ங்களாவன சாந்தோக்யத்தில் ஏழாவது ப்ரபாடகத்தில் பூமவித்யையில் சொல்லப்படும் நாமம், முதலிய அசேதனங்களையே ப்ரும்மமென்று உபாஸித்தல். தலைசாய்ப்பித்து-யோகத்தை உயர்ந்த தசைக்கு வளரும்படி செய்யாமல் பாதியிலேயே தடுத்து. ஆத்மஸாதகரையும் - ஜீவாத்மோபாஸகரையும், அதாவது அவர்களுக்குக் கீழ்ச்சொல்லிய விஷய ப்ராவண்யாதிகளும் அசேதனோபாஸனங்களும் இல்லையே என்கிறஸங்கை த்யோதிதம். ஆகாரஸம்ஸ்ருஷ்டம்- ஸரீரத்தோடு சேர்ந்தது, ஆகாரவியுக்தம்- ஸரீர ஸம்பந்தம் இல்லாதது. இவ்விருவகை உபாஸனங்களில் ப்ரும்ம த்ருஷ்டியாக உபாஸிக்கிறது, கேவலம் ஸ்வரூபம் மாத்திரத்தை உபாஸிக்கிறது என இருவகை, ஆக இந்த உபாஸனம் நான்குவிதம். 'ப்ரஹ்மத்ருஷ்டி'யாவது வாஸ்தவத்தில் ப்ரும்மமில்லாத வஸ்துவை

த்தாலேயாதல் உபாஸிக்கமுட்டி அவை நாலு வகைக்கும் ஸமமாக **ஸ்வல்பஸ்வாநுபவங்களைக்** கொடுத்துப் **புநராவ்ருத்தியைப்** பண்ணியும், **ப்ரஹ்மாத்மகஸ்வாத்மவி ஜ்ஞாநப்ரவ்ருத்தரானவர்களையும் ஸ்வாத்மஶரீரகப்ரஹ்மாத்மவி ஜ்ஞாநவந்தரையும் ஸாந்தராயமான ஸ்வாத்மாநுபவத்தா** லேயாதல் **அஷ்டைஶ்வர்யஸித்திகளாலேயாதல் வஸ்வாதி பதப்ராப்தி ப்ரஹ்மகாயநிவேஶநாதிகளாலேயாதல்**

---

இதுவே ப்ரும்மமென்று உபாஸிப்பது. **ஸ்வல்பஸ்வாநுபவங்களை**-பரமாத்மானுபவத்தைவிட மிகவும் அல்பமான ஜீவாத்மானுபவத்தை. **புநராவ்ருத்தியை**-ப்ரக்ருதி மண்டலத்துக்குதிரும்பி வருதலை. அப்படிப்பட்ட கேவலனுக்குத்திரும்பிவருதல் உண்டென்று ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகையில் எட்டாவது அத்யாயத்தில் விஸ்தாரமாக அருளிச் செய்யப்பட்டிருக்கிறது இங்கனுஸந்தேயம். மேல் ஸாக்ஷாத் பரவித்யையாகிய பரமாத்மோபாஸனத்தில் இழிந்தவர்களுக்கும் இது விரோதியாகும் ப்ரகாரத்தை நிரூபித்தருளுகிறார்—'**ப்ரஹ்மாத்மக**' என்றாரம்பித்து. பரமாத்மோபாஸனம் இரண்டுவிதம். பரமாத்மாவிற்குச் ஶரீரம் நான் என்று உபாஸிக்கையும், எனக்கு அந்தராத்மா அந்தப் பரப்ரும்மம் என்றுபாஸிக்கையும். இதில் நான் என்று தன்னைக்கடைசியில் வைத்துஉபாஸிக்கிறவனுக்கு ஜீவாத்மாவின் அனுபவமாகிய கைவல்யம் விளம்பத்துக்குக்காரணமாகிறது. பரமாத்மாவை ப்ரதானமாகவைத்து உபாஸனம் செய்கிறவனுக்கும் 'எண் சித்தி' யென்று மேல் திருமந்திராதிகார பாசுரத்தில் விவரிக்கும் அஷ்டைஶ்வர்யம் முதலிய ஸித்திகள் பரமாத்ம ப்ராப்திக்குத் தடையாகவருகின்றன. அந்தப் பரமாத்ம வித்யையிலேயே மதுவித்யா உபாஸகனுக்கு அஷ்டவஸுக்களில் ஒருவனாக இருந்து பிறகு பரமாத்ம ப்ராப்தி உண்டாகிறது. இன்னும் சில புராணாதிகளில் சொல்லுகிற உபாஸனங்களுக்கு ப்ரும்மாவினுடைய ஶரீரத்திலே சேர்ந்து ப்ரும்மாவுடன் அவராயுஸ் முடிந்ததும் மோக்ஷம் வருகிறது. இப்படி அந்தந்த வித்யாவிஶேஷங்களுக்குத் தக்கபடி அந்தராயம் வருகின்றன என்றுதிருவுள்ளம். இங்கு திர்யகாதி ஜன்மங்களோடு ஸமமாக ப்ரும்ம வித்யையை உபாஸனம் பண்ணுகிறவனுக்கும் இது ப்ராப்தி விரோதியாகும்

**அபிஷேகத்துக்கு** நாளிட்ட **ராஜகுமாரனுக்குச்** சிறையிலே யெடுத்துக் கைநீட்டின **சேடிமார்** பக்கலிலே கண்ணோட்ட முண்டாமாப்போலே **ப்ராரப்தகர்மாநுகுணமான தேஹேந்த்ரியங்களிலும் தத்ஸம்பந்திகளான புத்ரக்ருஹங்களிலும் தந்நிமித்தபோகங்களிலும்** கால்தாழப் பண்ணியாதல **விஷயப்ரவண**ராக்கியும், இப்படிப் பலமுகங்களாலே **பகவத் ப்ராப்திக்கு** விலக்கா

---

என்றது ஸங்கதமாகுமோ வென்ன அருளிச்செய்கிறார்—**'அபிஷேகத்துக்கு'** என்றாரம்பித்து. **அபிஷேகத்துக்கு** - யௌவராஜ்யாபிஷேகத்திற்கு. **சிறையிலே** - ராஜகுமாரர்கள் படிப்பதற்காகத்தனியாகப் பந்தோபஸ்துகளுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கல்விச்சாலையிலே. **'எடுத்துக்கை நீட்டின'** என்பதற்கு தாங்கள் தாழ்ந்தவர்களாகையினால் கிட்ட அணுகாமல் தூர நின்று கைங்கர்யம் பண்ணின என்றர்த்தம். **சேடிமார்** - வேலைக்காரர்கள். **கண்ணோட்டம்** - போகத்தில் ஆசை. இத்தால் ப்ருஹ்மோபாஸனம் செய்கிறவனுக்குப் பலம் அவஶ்யமாக வரக்கூடியதாயிருந்தபோதிலும் தத்காலம் அது தடைபட்டு நிற்பதற்குக் காரணமாகையினால் விரோதி என்று சொன்னது ஸங்கதமாகும் என்பது தெரிவிக்கப்படுகிறது. **'ப்ராரப்தகர்மாநுகுணமான'** என்பதினால் உபாஸகனுக்கும் ப்ராரப்தகர்மம் நிஶ்ஶேஷமாகக் கழியாதபோது தேஹேந்திரியாதிகளில் ஆஸக்தி உண்டாகலாம் என்பது தெரிவிக்கப்படுகிறது. **தத்ஸம்பந்திகளான புத்ரக்ருஹங்கள்**-தேஹத்தைச் சேர்ந்த பார்யா புத்ராதிகளும், க்ருஹாதிகளும். **தந்நிமித்தபோகங்கள்** - அதைக் காரணமாகக் கொண்டுண்டாகும் ஸுகங்கள். **கால்தாழப்பண்ணி** - சீக்கிரம் கால் எடுத்து வைக்கவொட்டாமல் தடுத்து. **விஷயப்ரவணராக்கியும்**-பரமாத்மானுபவம் இல்லாத வேறு விஷயங்களில் ஆசையை யுண்டாக்கியும். **பலமுகங்களாலே** - அநேக விதங்களாக, **விலக்காயிருக்கும்** - ப்ரதிபந்தகமாயிருக்கும் (தடங்கலாயிருக்கும்). ஆகிலும் புருஷார்த்தத்தை அறியவே ஸம்பாவனையில்லாத பசு முதலிய ஜன்மங்களுக்கும், பரமாத்ம ப்ராப்தி நிஶ்சயமாய் வரக்கூடியதாயிருக்கச் சில காலம் விளம்பம் உண்டாயிருப்பவர்களுக்கும் பகவந் நிக்ரஹம் பொதுவானது என்

யிருக்கும். முப்பத்திரண்டடியான துரவுதத்துவார் முன்னடியிலே விழுந்ததோடு முப்பதாமடியிலே விழுந்ததோடு வாசியில்லாதாப்போலே யேதேனுமொருபர்வத்திலே ப்ரமாத முண்டானாலு மிவன் ஸம்ஸாரத்தைக் கடந்தானாகான். உபக்ரமாதிகளில் ப்ரவ்ருத்தனுக்கு 1 'நேஹாபிக்ரமநாஶோஸ்தி' இத்யாதிகளிற்படியே யிட்டபடை கற்படையாயென்றேனுமொருநாள் ஸம்ஸித்தியுண்டாமென்ற விதுவும் கல்பாந்தர மந்வந்தர யுகாந்தர ஜந்மாந்தராதிகளிலெதிலே

---

பது ஸங்கதமாகுமோ? என்னவருளிச் செய்கிறார்—'**முப்பத்திரண்டு**' என்றாரம்பித்து. **துரவுதத்துவார்** - கிணற்றைத்தாண்டயத்தனித்தவர்கள். **முன்னடியிலே** - முதலாவதடியிலே, **வாசியில்லாதாப்போலே** - வ்யத்யாஸம் இல்லாததுபோல. அக்கரையைச் சேர்ந்தவனாகவில்லை என்கிற விஷயத்தில் இருவரும் துல்யம். அதைப்போல மோக்ஷத்தை யடைவதற்குத் தடங்கலான பகவந்நிக்ரஹம் இருவருக்கும் துல்யம். அவர்களுக்குள் ஶக்தி தாரதம்யம் போல பகவதநுக்ரஹத்தில் தாரதம்யமுண்டு என்று தாத்பர்யம். **ஏதேனுமொரு பர்வத்திலே** - ஏதாவது ஒரு ஸ்தானத்திலே, அதாவது பரிபூர்ணோபாஸனம் செய்கிற ஸ்தானத்திலும்கூட என்று தாத்பர்யம். இப்படியாகில் '**நேஹாபிக்ரமநாஶோஸ்தி**,' '**நஹி கல்யாணக்ருத்**', இத்யாதிகளில் உபாஸனத்தின்கீழ்ப்பர்வங்களாகியகர்மயோகத்திலிழிந்தவனையுமுள்பட ப்ரஶம்ஸை செய்திருப்பது விரோதியாதோ என்னவருளிச் செய்கிறார்—'**உபக்ரமாதிகளில்**' என்றாரம்பித்து. '**இட்டபடை கற்படையாய்**' என்பதற்கு ஒருசுவரில் கல்லாலே கட்டப்பட்ட படை அழிவில்லாமலிருக்குமாப்போலே அழியாமலிருக்கும் என்றர்த்தம். '**என்றேனு மொருநாள்**' என்பதற்கு அந்த வசனங்களில் ஒரு காலவிஶேஷம் குறிக்கப்படாமையினால் என்று தாத்பர்யம். '**தெரியாது**' என்பதற்கு ஒவ்வொருவருடையப்ராரப்தகர்மமும் விசித்ரமாகையினால் நிஷ்கர்ஷித்தறிய முடியாது என்றர்த்தம். கீழ்க்குறித்த வசனங்களில் விளம்பமுண்டென்றேற்படுகிறபடியினால்அவர்களுக்குப் பகவந்நிக்ரஹம்

---

1 கீதை-2-40.

யென்று தெரியாது. **ஆநுகூல்யமும்** மிகவுமுண்டாயிருக்க **வஸிஷ்டாதிகளுக்கு** விளம்பங்காணநின்றோம், **ப்ராதிகூல்யமும்** மிகவுமுண்டாயிருக்க **வ்ருத்ர க்ஷத்ரபந்து ப்ரப்ருதிகளுக்குக்**கடுக **மோக்ஷ**முண்டாகக் காணநின்றோம். ஆதலால் **விளம்பரஹிதமோக்ஷஹேதுக்க**ளான **ஸுக்ருதவிசேஷ**ங்கள் ஆர்பக்கலிலே கிடக்குமென்றுந் தெரியாது, **விளம்பஹேதுவான நிக்ரஹ**த்துக்குக் **காரண**ங்களான **துஷ்க்ருத விசேஷ**ங்களும் ஆர்பக்கலிலே கிடக்குமென்றுந் தெரியாது. இப்படி

தந்நிவ்ருத்தி ப்ரகாரம்.

**யநிஷ்ட பரம்பரை**க்கு **மூல**ங்களான **வாஜ்ஞாதிலங்கந**ங்களாலே வந்த **பகவந்நிக்ரஹவிசேஷ**மாகிற **ப்ரயாண விரோதி**க்குச் செய்யும் **பரிஹார**த்தை 1 '**தமேவ வசீகரணம் தச்சரணாகதிரேவ**' என்று 2 **கடவல்லி**யில் **வசீகார்ய பரம்பரை**யை

---

விளம்ப ஹேதுவாகக் குறையில்லை என்று தாத்பர்யம். இப்பொழுதிருக்கும் ஆசாரம், முதலியதைக் கொண்டு ஊஹிக்க முடியாதோ வென்னில்? அவைகள் காரணமாகாதென்று அருளிச் செய்கிறார்—'**ஆநுகூல்யம்**' என்றாரம்பித்து. **ஆநுகூல்யம்**-பகவானுடைய இஷ்டப்படி நடப்பது. **ப்ராதிகூல்யம்** - அதற்கு விரோதமாக நடப்பது. ஆகையினால் ஜந்மாந்தர ஸுக்ருதாதிகளே காரணம் என்று தாத்பர்யம். வ்ருத்ராஸுரன் என்பவன் விஸ்வகர்மாவினுடைய பிள்ளை. இவன் தேவதைகளையும் லோகங்களையும் மிகவும் பீடித்து வந்தான். '**ஸவை வ்ருத்ர இதி ப்ரோக்த: பாப: பரமதாருண:**' என்று ஸ்ரீபாகவதத்தில் ஆறுவது ஸ்கந்தத்தில் ஒன்பதாவது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. **விளம்பரஹித** - காலதாமதமில்லாத. **ஆர் பக்கலிலே** - யாரிடத்திலே. இப்படி அநிஷ்டங்கள் அனேகமா யிருந்தாலும் கூட அவைகளுக்கெல்லாம் மூலகாரணமான பகவந் நிக்ரஹ ஸங்கல்பம் நிவ்ருத்தி யடைந்தால் மற்றவைகள் எல்லாம் நிவ்ருத்திக்கும் என்றருளிச் செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. **தமேவ** - அந்தப் பகவானை, **வசீகர**

---

1 ஸ்ரீ பாஷ்யம்-1-4-1.      2 கடவல்லி-1-3-10,11.

வகுத்த விடத்திலே ஶ்ரீபாஷ்யகாரரருளிச் செய்தார். இவ்விரோதி வர்க்கத்தையெல்லாம் ரஹஸ்யத்ரயத்தில்வியிக்கிறவர்க்கங்களுடைய வ்யவச்சேதஶக்தியாலும், நமஸ்ஸுக்களில்ஷஷ்டிகளாலும், ஸர்வாவஸ்தத்தாலு மநாஸந்நித்து ஸம்ஸாரத்திலடிச் சூட்டாலே பேற்றுக்குறுப்பானவழிகளிலே ஸஞ்சரிக்க ஹேதுவும்.

பொருளொன்றென் நின்ற
பூமகளுதனவனடிசேர்ந்
தருளொன்று மன்பனவன்
கொளுபாய மமைந்த பயன்
மருளொன்றிய வினை வல்விலங்
கென்றிவை யைந்தறிவார்
இருளொன்றிலா வகை
யென்மனந் தேற வியம்பினரே. 10

---

**ணம்** - வஶப்படுத்துவதற்கு உபாயம், **தஸ்ய ஶரணாகதிரேவ** - அவனிடத்தில் ஶரணாகதி செய்வதே. '**வஶீகாரவர்க்கம் வரையை வகுத்த விடத்திலே**' என்பதற்கு 'இந்திரியங்களைவிட வஶப்படுத்த வேண்டியவைகளில் விஷயங்கள் சிறந்தவை. அவைகளைவிட மனது உயர்ந்தது' என்றாரம்பித்துச் சொல்லப்படும் ஶ்ருதிவாக்யத்திற்கு வ்யாக்யானம் பண்ணுமிடத்தில் என்றர்த்தம். **வகுக்கை** - பிரித்துக் காட்டுகை. '**வ்யவச்சேதஶக்தியாலும்**' என்பதற்கு ப்ரணவம் முதலிய இடங்களில் ஶேஷத்வ ஜ்ஞான ஸ்வரூபத்வ பாரதந்த்ர்யாதிகளைச் சொல்லுகிற இடங்களில் அந்தந்தப் பதங்களினால் அதற்கு விரோதியாகிய ஶேஷபூதனக இல்லாமலிருப்பதும், ஜடத்வம், ஸ்வாதந்த்ர்யம், முதலியவைகள் தடுக்கப்படுகிறபடியினால் அவைகள் எல்லாம் விரோதிகள் என்று தாத்பர்யம். **நமஸ்ஸுக்களில்**-திருமந்திரம், த்வயம், இவைகளில் இருக்கும் நமஸ்ஶப்தங்களில். **ஷஷ்டிகளாலும்** - 'மம' என்பதில் இருக்கிற ஆறும்வேற்றுமையினாலும். **அடிச் சூட்டாலே** - மிகுந்த த்வரையினாலே, அதாவது வெயிற்காலங்களில் நடக்கும்பொழுது காலில் பூமி சுடுகிறதைப் பொறுக்காமல்

த்வரிப்பதைப்போல ஸம்ஸாரத்திலுண்டாகிய தாபத்ரயத்தின் மிகுதியினால் கஷ்டத்தை ஸஹிக்காமல் த்வரைப்படுமது சொல்லப்படுகிறது. **பேற்றுக்குறுப்பான** - பரம ப்ரயோஜனமாகிய மோக்ஷத்துக்குக்காரணமான, **வழிகளிலே**-பக்தி ப்ரபத்தியாதி மார்க்கங்களிலே, **ஆர்வம்**-உசிதம்.

ப-ரை] **பொருள் ஒன்று**-இவன் ஒருவனுமே ப்ரயோஜனம், **என** - என்று சொல்லும்படி, **நின்ற** - நிற்கிற, **பூமகள் நாதன்** - லக்ஷ்மிக்குப் பர்த்தவாகிய பகவான், அதாவது தனக்கு ஸத்ருஶம் இல்லாத புருஷார்த்தமாயும், நித்யஸித்தனாயும், சேதனா சேதன விஶிஷ்ட வேஷத்தால் ஒரே தத்வமாயுமிருக்கிற ஶ்ரிய:பதி என்று தாத்பர்யம். **அவனடி** - அந்த ஶ்ரிய:பதியினுடைய திருவடிகளை, **சேர்ந்து** - ஶரணமாக ஆஶ்ரயித்து, **அருள்**-அவனுடைய க்ருபையோடு, **ஒன்றும்** - சேரும், அதாவது க்ருபையை அடையும், **அன்பன்** - அவனிடத்தில் ப்ரீதியையுடைய ஜீவாத்மா, அன்றிக்கே '**சேர்ந்து**' என்பது ப்ராப்தியையும், '**அருளொன்றும்**' என்பது நித்ய கைங்கர்யத்தினாலுண்டான பகவானுடைய க்ருபையையும் சொல்லுகிறதாகவுமாம். இது இப்படி க்ருபா பாத்ரமாவதற்கு ஸ்வரூபயோக்யதையுடையவன் என்பதைக் காட்டுகிறது. **அவன் கோள்** - அவனால் அங்கீகரிக்கப்பட்ட, அதாவது தனக்கு ஶக்யமென்று அங்கீகரிக்கப்பட்ட, **உபாயம்**, **அமைந்த**-ஶேஷபூதனான தன்னுடைய ஸ்வரூபத்திற்கு அநுகுணமான, **பயன்**-ப்ரயோஜனம், **மருள்**-அஜ்ஞானத்துடன், **ஒன்றிய** - சேர்ந்த, அதாவது கார்யமாயும் காரணமாயும் என்று தாத்பர்யம், **வினை** - கர்மங்களாகிற, **வல் விலங்கு** - உறுதியான விலங்கு, அதாவது தன்னுடைய ப்ரயத்னத்தினால் கழற்றிக்கொள்ள முடியாத விலங்கு என்றர்த்தம், **என்றிவை** - என்று சொல்லப்பட்ட இந்த அர்த்தங்கள், **ஐந்தறிவார்** - ஐந்தையும் அறிந்த பூர்வாசார்யார்கள், **ஒன்று** - ஒருவிதமான, **இருள்** - அஜ்ஞானமும், **இலாவகை** - இல்லாதிருக்கும்படியாக, அதாவது இந்த அர்த்தபஞ்சகங்களில் அஜ்ஞான ஸம்ஶய விபர்யயங்கள் ஒன்றுமில்லாம லிருக்கும்படியாக, **என்மனம்** - என்னுடைய மனது, **தேற** - தெளிவாயறியும்படி, **இயம்பினர்** - உபதேஶித்தார்கள்.

ப்ராப்யம் ப்ரஹ்ம ஸமஸ்தஶேஷி
பரமம் ப்ராப்தாஹமஸ்யோசித:
ப்ராப்தி ருபாயமயந க்ருபாஙிஹ
மம ப்ராப்தா ஸ்வதஸ்ஸம்ஸ்ரிவக: ।
ஹமைஞ்ஞா மதிவர்த்தவாநஹ
மஹ்மத்யா விமத்யாஶ்ரய
ஸ்வஸ்த்ரஸ்ஸம்ப்ருதி ஶேஷிகம் வதி
ஹர ந்யாஸஸ்த்ர ஜெ ஶிஷ்யதே ॥

இதி ஶ்ரீகவிதார்க்கிக ஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஶ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரே
அர்த்தபஞ்சகாதிகார: சதுர்த்த:

॥ ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ।

சீரார்தூப்புற்றிருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

---

இத்தால் இவ்வர்த்தங்கள் பூர்வாசார்ய ஸம்ப்ரதாயத்தாலே வந்தவைகள் என்பது தெரிவிக்கப்பட்டது.

இப்படி அர்த்தபஞ்சகத்தைத்தெரிந்து கொள்ளுவதினல் இஜ்ஜீவனுக்கு ஏற்படுகிற ப்ரயோஜனரூபமான அனுஸந்தான விஶேஷத்தை அருளிச்செய்கிருர்—'**ப்ராப்யம்**' என்ருரம்பித்து.

ப-ரை] **ப்ராப்யம்** - அடையவேண்டிய ப்ரயோஜனமாகிய, **ப்ரஹ்ம** - ப்ரும்மமானது, **ஸமஸ்தஶேஷி** - எல்லா வஸ்துக்களுக்கும் ஶேஷி, **பரமம்** - உத்க்ருஷ்டமானது, இத்தால் ப்ரும்மத்திற்குக் குணமில்லாமையினுலாவது, நமக்கு ஸம்பந்தமில்லாததினுலாவது மோக்ஷம்கிடைக்காமற்போகவில்லைஎன்பது த்யோதிதம். **ப்ராப்தா** - அடைகிறவனுகிய, **அஹம்** - நான், **அஸ்ய** - இந்தப் பரமாத்மாவிற்கு, **உசித:** - தகுந்தவன், நிருபாதிக தாஸனுகையினுலும், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனுகையினுலும் என்று தாத்பர்யம். இத்தால் நான் அதை அடைவதற்கு உரியவனல்லாமையி

ஞாலே இழக்கிறேனில்லை என்பது தெரிவிக்கப்பட்டது. **ப்ராப்தி:** - அந்தப் பகவானை அடைவது, **ஸூரிவத்** - நித்யஸூரிகளைப்போல, **தாயதநக்ரமாத்** - தாயதனம்போல. மிதாக்ஷரத்தில் வ்யவஹார காண்டத்தில் '**தத்ர தாயஶப்தேந யத்தநம் ஸ்வாமிஸம்பந்தாதேவ நிமித்தாதந்யஸ்ய ஸ்வம் பவதி தது்ச்யதே**' என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது எந்த த்ரவ்யத்தில் யஜமானனோடு ஸம்பந்தமிருப்பதாகிய காரணத்தினாலே மாத்திரம் தனக்கும் அயலாருக்கும் பாத்தியதை ஏற்படுகிறதோ அப்படிப்பட்ட த்ரவ்யம் '**தாய**' மென்னப்படுகிறது என்றர்த்தம். **மம** - எனக்கும், **ஸ்வத:** - ஸ்வபாவத்திலேயே, **ப்ராப்தா**-கிடைக்க வேண்டியது. அதாவது பிதாவின் தனம் முதலியவைகளில் பிள்ளைகளுக்கு அவனுடைய ஸம்பந்தம் மாத்திரத்தினாலேயேப்ராப்தி ஏற்படுகிறாப்போலே நித்யஸூரிகளுக்கும் நமக்கும் ஓரேவிதமான பாத்யதையுள்ளது என்று தாத்பர்யம். இத்தால் அடைவதற்கு மற்றொரு ஸம்பந்தம் தேடவேண்டியதினால் இழக்கிறேனில்லை என்றுசொல்லப்பட்டதாகிறது. '**ஹந்த**' என்பது துக்கத்தைத் தெரிவிக்கிறது, அதாவது இவ்வளவு ஸஹஜமாய்க் கிடைக்கக்கூடியபரமபதத்தை நம்முடையகுற்றத்தினாலே இழந்தோம் என்கிற துக்கத்தைக்காண்பிக்கிறது. **ஏநாம்**-இப்படிப்பட்டபகவானை அடைவதை, **விமூடாஶய:**-விபரீதமான புத்திக்கு இருப்பிடமாகிய, **அஹம்**-நான், **அஹம்மத்யா**-அஹங்கார மமகாரங்களினால், அதாவது நானே ஶேஷீ, நானே ஸ்வதந்திரன்,என்கிற ப்ரமத்தினாலும் அஹம் என்கிற பதத்திற்கு அர்த்தமில்லாத தேஹமே ஆத்மா என்கிற எண்ணத்தினாலும்என்றர்த்தம், **அதிவர்த்தவாந்**-இழந்துவிட்டேன், **ஸம்ப்ரதி**-இப்பொழுது, அதாவது அநாதியாக அவித்யாதிகளை அடைந்திருந்தபடியினால் அதிக பாபத்தை உடையவனாய், இவற்றால்மேல் ஜன்மங்களிலும் நல்ல ஸ்திதியை யடைவதற்கு யோக்யதையில்லாத இந்தத் தசையில், '**அநாகதாநந்தகாலஸமீக்ஷயாப்யத்ருஷ்டஸந்தாரோபாய:**' என்று கத்யத்தில் அருளிச்செய்திருப்பது இங்கு விவக்ஷிதம். இத்தால் ப்ரபத்திக்கு அஸாதாரணாதிகாரமான ஆகிஞ்சந்யத்தை அடைந்திருக்கும் தசை சொல்லப்படுகிறது. **மே** - எனக்கு, **ஶேஷிமம்வதி ஹரநாராஸ:** - ஶேஷிகளான

பகவானும் பிராட்டியுமான இருவர்களிடத்தில்பரந்யாஸமானது, **ஸாதந:** - (அந்தப் பலத்தை யடைவற்கு) உபாயமாக, **ஶிஷ்யதே** - (செய்யவேண்டிய கார்யங்களில்) மிகுதியா யிருக்கிறது, அன்றிக்கே ஶாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. ‘**ஶேஷஸம்வழி**’ என்று பாடாந்தரம், அப்பொழுது மிகுதியான ஸம்பத்தாகிய முக்தைஶ்வர்யத்தில் என்றர்த்தம் என்று ஸ்ரீ ஸாரதீபிகையிலும், ‘**ஶேஷிஸம்வதி**’ என்பதே ஸ்வாரஸ்ய முள்ள பாடமென்று ஸ்ரீ ஸாராஸ்வாதிநியிலும் வ்யாக்யாதம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்
**ஸ்ரீ உப. வே. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமிகளினல்**
செய்யப்பட்ட
**ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார வ்யாக்யானத்தில்**
**அர்த்தபஞ்சகாதிகாரம்**
**முற்றிற்று.**

|| ஸ்ரீ: ||

|| ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ||

# தத்வத்ரய சிந்தநாதிகாரம்.

---

[தத்வத்ரய நிரூபண ப்ரயோஜனம்—தத்வத்ரய விபாகம்—ஜீவாத்ம நிரூபணம்—பத்தஸ்வரூபம்—முக்தஸ்வரூபம்—நித்யஸ்வரூபம் — முக்தர்களுக்கு ஸர்வவித கைங்கர்ய ஸித்தி—தர்ம பூதஜ்ஞான நிரூபணம்—சுத்தஸத்வ நிரூபணம்—த்ரிகுணத்ரவ்ய நிரூபணம்—காலநிரூபணம்—ஈச்வரதத்வ நிரூபணம்—பர ரூபம்—வ்யூஹ ரூபம்—விபவரூபம் —அர்ச்சா ரூபம்—அந்தர்யாமி ரூபம்—அவதார ரஹஸ்யம்—லக்ஷ்மீதத்வ நிரூபணம்—தத்வங்களில் ஏறவும் சுருங்கவும் பண்ணும் விபாகங்களின் தாத்பர்யம்.]

ப்ரக்ருத்யாத்மப்ராந்தி: ஸ்வஹிதவிஷயவிலக்ஷணதியா
ததா ஜீவேசைக்யப்ரப்ருதிகலஹத்வம்விரஹஜநாத்।
அதோ போக்தா போக்யம் ததுபயநியந்தேதி நிகமை:
விபக்தம் நஸ்தத்த்வத்ரயமுபதிசந்த்யக்ஷததிய: ||

---

|| ஸ்ரீ: ||

|| ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகாய நம: ||

இப்படிக் கீழதிகாரங்களில் ஆறர்த்தங்கள் ஜ்ஞாதவ்யங்களென்று நிரூபித்திருக்க ச்ருதி, ஸம்ப்ரதாயம், முதலியவைகளில் தத்வத்ரயங்களே அறியப்படவேண்டும் என்று சொல்லப் படுகின்றனவே? இவைகள் தனித்தவைகளா? அவைகளுக்கு உள்ளடங்கினவைகளா? தனித்தவைகளாயிருந்தால் ஒன்பதர்த்தங்கள் என்று சொல்லவேண்டாவோ? உள்ளடங்கினவைகளாயிருந்தால் தனித்தருளிச் செய்வதற்குக் காரணமென்ன? என்றிவை முதலிய சங்கைகளுக்கு இந்த அதிகாரத்தில் ஸமாதானமருளிச் செய்யப்போகிறவராய் அதிகாரார்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்—'ப்ரக்ருதி' என்றாரம்பித்து.

ப-ரை] விஷயவிலக்ஷணதியா - சேதனங்கள், அசேதனங்கள், இவைகளினுடைய லக்ஷணத்தைப்பற்றிய புத்தியினால், அதாவது அவைகளை அறிவதினால், ப்ரக்ருத்யாத்மப்ராந்தி: -

ப்ரக்ருதியே ஆத்மா என்கிற ப்ரமம், அதாவது மூல ப்ரக்ருதியில் ஆத்மாவென்கிற ப்ரமம் உண்டாகாதாகையினால் அதனால் உண்டான தேஹமே ஆத்மா என்கிற ப்ரமம் என்றர்த்தம், 'ஶரீராத்யாஸம்' என்றருளிச்செய்யாமல் 'ப்ராணாத்யாத்யாஸம்' என்றருளிச்செய்திருப்பது இந்திரியம், மனது, ப்ராணன், இவைகளிடத்தில் ஆத்ம ப்ரமம் ஸம்பவிக்கும் என்பதைத் தெரிவிப்பதற்காக. அதாவது சேதனசேதன வஸ்துக்களின் அஸாதாரணங்களான ஸ்வபாவங்களைத்தெரிந்து கொண்டால் அசேதனங்களாகிய ப்ரக்ருதி பரிணாமங்களில் இதுவே ஆத்மா என்கிற ப்ரமம் உண்டாகாது என்று திருவுள்ளம், ஶமதி - நழுவுகிறது, அதாவது தானே நிவ்ருத்தித்துவிடுகிறது, ஜீவேஶைக்யப்ராப்தி கலஹ: - ஜீவாத்மாவும் பகவானும் ஒன்று என்பது முதலியவைகளைப்பற்றிய கலஹம், 'ப்ராப்தி' என்பதினால் ஈஶ்வரனில்லையென்பதும் குறிக்கப்படுகிறது. தத்விபஜநாத்-அவைகளைப் பிரித்துக்காட்டுவதினால், அதாவது அவைகளினுடைய அஸாதாரணமான தர்மங்களைக்கொண்டு பிரித்து நிரூபிப்பதினால், ததா - அப்படியே (நிவ்ருத்திக்கிறது), அத: - ஆகையினால், அதாவது கீழ்க்கூறிய ப்ரயோஜன மிருக்கிறபடியினால், போக்தா - (ஸுகதுக்கங்களை) அனுபவிக்கிறவன், போக்யம் - அனுபவிக்கப்படுகிற வஸ்துவாகிய அசேதனம், தத்த்வயநியந்தா-இவைகளிரண்டையும் நியமிக்கும் ஈஸ்வரன், இதி-என்று, நிகமை: - வேதங்களினால், இங்கு 'போக்தாவையும், போக்யத்தையும் நியந்தாவையும் தெரிந்துகொண்டு அவனால் அனுக்ரஹம் செய்யப்பட்டவனாய் மோக்ஷத்தை யடைகிறான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் விவக்ஷிதம், விபக்தம் - பிரிக்கப்பட்டிருக்கிற, தத்த்வத்ரயம் - தத்வத்ரயங்களையும், ந: - நமக்கு, அக்ஷததிய: - தடுக்கப்படாமலிருக்கிற புத்தியை யுடைய நம்பூர்வாசார்யர்கள், உபதிஶந்தி - உபதேஶிக்கிறார்கள். இத்தால் கீழ்க்கூறிய அர்த்த பஞ்சகங்களில் இவைகள் அடங்கினவைகளாயிருந்தபோதிலும் அவைகளை அவைகளின் அஸாதாரணமான ஆகாரங்களைக்கொண்டு அறிவதற்கு தேஹாத்ம ப்ரமம் முதலியவைகள் நிவ்ருத்திப்பதாகிய கீழ்க்கூறிய ப்ரயோஜனங்கள் இருக்கிறபடியினால் ஶ்ருதிகளும், பூர்வாசார்யர்களும்,

**ஸம்பந்தமும் ஸ்வரூபஞ்ஞானமுங் கூட வாறயமறி** யவேண்டியிருக்க இவற்றிலே **ஸகலவிஶேஷமான தகலத்ரய** த்தை **ஸாக்ஷாத்** வுக்கு **விஶே** ஷித்தறியவேணுமென்று **ஆசார்யர்கள்** வசித்துப் போருகைக்கடி யென்னென்னில்? அதுக்கடி **ஆஸ்திக்யமும் ஸ்வதந்த்ர்யமு** மிதுக்கு **நிதானமான** **வநீஶ்வரவாதமு** யுமாகிற **மஹாவிரோதி**களை முற்படக் கழிக்க **வேண்டு**மாகை. இத்தை நினைத்து **ஹோதாஹோதா நியந்த**

தத்வத்ரயநிரூபண ப்ரயோஜனம்.

---

இதைப்பிரித்து நிரூபித்திருக்கிறார்கள் என்பது தெரிவிக்கப் பட்டதாகிறது.

இதை விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார்—'**ஸம்பந்தமும்**' என்றாரம்பித்து. **ஸம்பந்தமும்** - ஶரீராத்மபாவ ஸம்பந்தமும். '**ஸகலவிஶேஷமான**' என்பதற்கு ப்ராப்யம் என்பதில் ஈஸ்வரனும், ப்ராப்தா என்பதில் ஜீவாத்மாவும், விரோதிவர்க்கத்தில் அசே தனமும் அடங்கியிருக்கிறது என்று தாத்பர்யம். **இதுக்கு**-கீழ்க் கூறிய ஸ்வதந்திராத்ம ப்ரமத்திற்கு, **நிதானமான**-காரணமான, **அநீஶ்வரவாதமு**யும் - ஈஸ்வரன் இல்லை யென்று சொல்லுவ தில் ஆசையும். **மஹாவிரோதி**களை - ப்ரபலமான மோக்ஷ விரோதிகளை, **முற்பட** - அர்த்த பஞ்சகங்களை யறிவதற்குமுன், அதாவது தேஹத்தைவிட ஆத்மா வேறு என்று தெரிந்து, அதற்கப்புறம் பரலோகத்தில் அனுபவிக்க வேண்டிய புருஷார்த் தத்தைப்பற்றி யோசனை உண்டாகி, பாரதந்த்ர்ய ஜ்ஞானத்தி ஞல் மோக்ஷமாகிய ப்ரயோஜனத்தில் ருசி பிறந்து, அதற்கு உபாயத்தை விசாரிக்கும்போது கீழ் ஶ்லோகத்தில் விவரித்த படி அர்த்த பஞ்சகஜ்ஞானம் ப்ரயோஜன முள்ளதாகிறது. அப்படிக்கில்லாமல் தேஹாத்ம ப்ரமமும், ஸ்வதந்திராத்ம ப்ரம மும் இருக்கும்பொழுது '**ஸர்வம் ஸஹ**' என்கிற ஶ்லோ கத்தி லருளிச்செய்த அனுஸந்தானம் உண்டாகாது. ஆகையி ஞல் அதற்குமுன் இது கழிக்கவேண்டு மாகையினலே அர்த்த பஞ்சக ஜ்ஞானத்திற்கு முந்தியே இந்த மஹா விரோதிகளைக் கழிக்கவேண்டும் என்று தாத்பர்யம். இப்படித் தத்வத்ரயங்களே அர்த்தபஞ்சகங்களுக்கு முன் தெரிந்துகொள்ளவேண்டியதாயி

**ரூபத்தாலே ஶாஸ்த்ரங்களிலே தத்வ விவேகம்** பண்ணுகிறது. இவற்றில் வைத்துக்கொண்டு 1 '**அசேதநா பராத்தா ச நித்யா ஸததவிக்ரியா | த்ரிகுணா கர்மிணாம் க்ஷேத்ரம் ப்ரக்ருதே ரூபமுச்யதே ||**', 2 '**அநாதிர் பகவாந் காலோ நாந்தோஸ்ய த்விஜ வித்யதே**', 3 '**கலாமுஹூர்த்தாதிமயஶ்ச காலோ ந யத்விபூதே: பரிணாம**

தத்வத்ரயவிபாகம்.

ருந்தாலும் ஶரீராத்மபாவ ஸம்பந்தத்தைக் காரணமாகவுடையவைகளாகையினால் ஸம்பந்தத்தை நிரூபித்தவுடனே அர்த்த பஞ்சகங்களை நிரூபித்திருக்கிறது. இத்தை நினைத்து-இப்படித் தேஹாத்ம ப்ரமாதி நிவ்ருத்தி மூலமாக தத்வத்ரய ஜ்ஞானம் பரம்பரையாக மோக்ஷ ஸாதனமாகிறது என்பதை நினைத்து, **ஶாஸ்த்ரங்களிலே** - வேதம் முதலிய ப்ரமாணங்களிலே. இந்த ப்ரமாணங்களை நிரூபித்தருளுகிறார்—'இவற்றில் வைத்துக்கொண்டு' என்றாரம்பித்து. இவற்றில் வைத்துக்கொண்டு - இந்த தத்வங்களில் உள்ளடங்கியதாகிய நினைத்து. **அசேதநா** - ஜ்ஞானமில்லாதது, **பரார்த்தா** - அயலாருடைய ப்ரயோஜனத்தையேப்ரயோஜனமாகவுடையது, **நித்யா**-நித்யமானது, **ஸதத விக்ரியா**-எப்பொழுதும் பரிணாமத்தையுடையது, **த்ரிகுணா**-ஸத்வரஜஸ் தமோகுணங்களை யுடையது, **கர்மிணாம்** - புண்ய பாபரூப கர்மங்களைச் செய்தவர்களுக்கு, **க்ஷேத்ரம்** - அதின் பலங்களாகிய ஸுகதுக்கங்கள் உண்டாகும் இடம் (என்று), **ப்ரக்ருதே ரூபமுச்யதே**-ப்ரக்ருதியின் ரூபம் சொல்லப்படுகிறது. **த்விஜ**-ஓ! ப்ராம்மணனே, **கால:**-காலஶரீரகனான பரமாத்மா, **அநாதி:**-ஆதியில்லாதவன், **அஸ்ய** இவனுக்கு, **அந்த:**-முடிவானது, **நவித்யதே**-இல்லை. இங்கு காலஶரீரகனான பரமாத்மாவைச் சொன்னபோதிலும் இந்த விஶேஷணங்கள் காலத்திலேயே அந்வயிக்கின்றன. அன்றிக்கே '**பகவாந் கால:**' என்றந்வயித்து பகவானுடைய விபூதியான காலம் என்றர்த்தமாகவுமாம். **கலா** - விநாடி, **முஹூர்த்த** - முகூர்த்தம், **ஆதிமய:** - இவை முதலியவைகளை ஸ்வரூபமாகவுடைய, **கால:** - காலம், **யத்விபூதே:** - எந்த (ஶுத்தஸத்வமயமான) விபூதிக்கு, **பரிணாம**

1 பரமஸம்ஹிதை-2. 2 வி-பு-1-2-26. 3 வி-பு-4-1-84.

ஹேதவ:', 1 'ஜ்ஞாநாநந்தமயா லோகா:', 2 'காலம் ஸ பசதே தத்ர ந காலஸ் தத்ர வை ப்ரபு:' இத்யாதிகளிலே த்ரிகுணகாலஶுத்தஸத்வரூபங்களான த்ரிவியாசேதநங்களுடைய ஸ்வபாவஞ் சொல்லிற்று. 3 'ஶாஶ்வதோ தேவோ ந பர:', 4 'ந ஜாயதே தேவோ ந ம்ரியதே வா', 5 'க்ஷர: ஸர்வாணி பூதாநி கூடஸ்தோऽக்ஷர உச்யதே', 6 'யத்ர பஶ்யந்தி ஸூரய:' இத்யாதிகளாலே த்ரிவியஜீவர்களுடைய ஆகாரம் விவேகிக்கப்பட்டது. 7 'ஸர்வஜ்ஞஸ் ஸர்வத்ருக் ஸர்வஶக்தி ஜ்ஞாநபலர்த்திமாந் | க்லமதந்த்ரீபயக்ரோ

---

ஹேதவ: - பரிணாமத்திற்குக் காரணமாக, ந- ஆகிறதில்லையோ. ஜ்ஞாநாநந்தமயா லோகா:-ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான லோகங்கள். தத்ர-அந்த விபூதியில், ஸ: - அந்தப் பரமாத்மா, காலம்- காலத்தை, பசதே-பரிபாகம்செய்கிறார், அதாவது நியமிக்கிறார், தத்ர - அந்த விபூதியில், கால:-காலம், ந ப்ரபு: -(பரிணாமத்தை உண்டாக்கும்) ஶக்தியுடையதல்ல. க்ஷர: - க்ஷரனென்று சொல்லப்பட்ட வஸ்து, ஸர்வாணி பூதாநி - ஸகலப்ராணிகளும் அதாவது பத்த சேதனர்கள் என்று தாத்பர்யம். கூடஸ்த: - ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத ஜீவாத்மா, அதாது முக்தாத்மா, அக்ஷர: - அக்ஷரமென்று, உச்யதே- சொல்லப்படுகிறது. ஸூரய: - நித்யஸூரிகள், யத் - எந்த ஸ்தானத்தை, பஶ்யந்தி - பார்க்கிறார்களோ. த்ரிவிய ஜீவர்களுடைய - பத்த முக்த நித்யர்கள் என்கிற மூன்று விதமான ஜீவாத்மாக்களுடைய. ஸர்வஜ்ஞ: - எல்லாவற்றையும் அறிந்தவன், ஸர்வத்ருக் - எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறவன், ஸர்வஶக்தி ஜ்ஞாநபலர்த்திமாந் - எல்லா விதங்களான ஶக்தி, ஜ்ஞானம், பலம், இவைகளின் நிறைவையுடையவர், க்லம - ஶ்ரமம், தந்த்ரீ - சோம்பல், பயம் - பயம், க்ரோத-கோபம், காமாதிபி: - காமம் முதலியவைகளோடு,

---

1 ஸ்ரீ பாஞ்சராத்திரம். 2 பார-ஶா-196-9. 3 91-ம் பக்கம் பார்க்க. 4 95-ம் பக்கம் பார்க்க. 5 கீதை-15-16. 6 வி-பு-1-6-39. 7 வி-பு-5-1-47.

யகாராதிபிரஸம்யுத:॥' இத்யாதிகளாலே ஈசஸ்வ பாவ முபதிஷ்டமாயிற்று. இவ்வீசேசிதவ்யரூப மான தத்த்வத்ரயம் நிற்கும் நிலையை 1 'ஸ்வாதீந த்ரிவிதசேதநாசேதந ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திபேதம்' என்று சுருங்க வருளிச் செய்தார். த்ரிவிதசேதந ரென்றது பத்தரையும் முக்தரையும் நித்யரையும். த்ரிவிதாசேதநமென்றது த்ரிகுணத்ரவ்யத்தையும் காலத்தையும் சுத்தஸத்வமான த்ரவ்யத்தையும். ஸ்வரூப மென்றது ஸ்வாஸாதாரணதர்மத்தாலே நிரூபிதமான வஸ்துவை. ஸ்திதியாவது இதினுடைய காலாந்தராநுவ்ருத்தி. இதுதான் நித்யவஸ்துக்களுக்கு நித்யையாயிருக்கும், அநித்யவஸ்துக்களுக்கு ஈச்வர-

---

**அஸம்யுத:** - சேராதவர். **ஈசன்** - ஈஸ்வரன், **ஈசிதவ்ய** - அவனால் நியமிக்கப்படுகிற சேதநாசேதநங்கள். **நிற்கும் நிலை** - அஸாதாரணமான ஸ்வரூபங்களோடு வெவ்வேறுபட்டிருக்கும் ப்ரகாரம், அதாவது எல்லாம் ஈஸ்வரனுக்குப் பராதீனமாயிருக்கும் ப்ரகாரம். 'அருளிச்செய்தார்' என்பதோடு ஆத்மஸித்தியில் **ஸ்ரீ** ஆளவந்தாரும் கத்யத்தில் **ஸ்ரீ**பாஷ்யகாரரும் என்று சேர்த்துக்கொள்ளவும். இதில் '**த்ரிவித**' என்னும் பதம் சேதனத்திலும் அசேதனத்திலும் அந்வயிக்கிறது என்று திருவுள்ளம்பற்றி முதலில் த்ரிவிதசேதனங்களை நிரூபித்தருளுகிறார்—'**த்ரிவிதசேதநர்**' என்றாரம்பித்து. அப்படியே அசேதனங்களை மூன்றுவிதம் என்று நிரூபித்தருளுகிறார்—'**த்ரிவிதாசேதநம்**' என்றாரம்பித்து. **த்ரிகுணத்ரவ்யம்** - ஸத்வரஜஸ் தமோகுணங்களை யுடையதான வஸ்து. **சுத்தஸத்வமான த்ரவ்யம்** - சுத்த ஸத்வத்தையுடையதாகிய வஸ்து, அதாவது இந்தவிபூதியில் வஸ்துக்களெல்லாம் ப்ரக்ருதியின்பரிணாமங்களாயிருப்பதைப்போல நித்ய விபூதியிலிருக்கும் வஸ்துக்களெல்லாம் இதின் பரிணாமம் என்று தாத்பர்யம். ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்கு வ்யாக்யானம் அருளிச் செய்கிறார்—'**ஸ்வரூப**' என்றாரம்பித்து. **நிரூபிதமான வஸ்து**வை - மற்ற வஸ்துக்-

---

1 ஆத்மஸித்தி, **ஸ்ரீ**வைகுண்ட கத்யம்.

ஸங்கல்பத்துக்கீடாக ஏறியுஞ் சுருங்கியுமிருக்கும். இங்கு ப்ரவ்ருத்தியாவது ப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூபமான வ்யாபாரம். இவையெல்லாம் வஸ்துக்கள்தோறும் ப்ரமாணஸித்திநியதமாயிருக்கும். ப்ரமாணங்கள் வஸ்துக்களைக் காட்டும்போது அவ்வோ வஸ்துக்களின் ஸ்வரூபத்தையும் ஸ்வரூப நிரூபக தர்மங்களையும் நிரூபித ஸ்வரூப விசேஷணங்களையும் வ்யாபாரங்களையுங்காட்டும். அதில் ஸ்வரூபத்தை ஸ்வரூப நிரூபக தர்மங்களாலே விசிஷ்டமாகவே காட்டும்.

---

களைவிட வேறுபட்டதாக நிரூபிக்கப்பட்ட வஸ்துவை. **காலாந்தராநுவ்ருத்தி** - மற்றக் காலங்களிலும் தொடர்ந்திருக்கை. **ஈடாக** - அனுரூபமாக. **ஏறியும்**-அதிகக்காலமிருப்பதாயும், **சுருங்கியும்** - கொஞ்சக்காலம் இருப்பதாயும். ஸ்ரீமத் கத்யபாஷ்யத்தில் ‘**நிவ்ருத்திரப்யகரண ஸங்கல்ப ரூப ப்ரவ்ருத்தி விசேஷ:**’ என்றிவர் தம்மாலேயே வ்யாக்யானம் செய்யப்பட்டிருப்பதினால் நிவ்ருத்தியும் ப்ரவ்ருத்தி செய்கிறதில்லை என்கிற ஸங்கல்பரூப மனோவ்யாபாரமாகையினாலே ப்ரவ்ருத்தி என்பதற்கு அர்த்தம் என்று திருவுள்ளம். ‘**ப்ரவ்ருத்தி**’ என்றது வ்யாபாரம். எல்லாம் பகவானுக்கு வசப்பட்டதென்று சொல்லும் ப்ரகரணமாகையினால் இப்படியே அர்த்தம் கொள்ளவேண்டும் என்று தாத்பர்யம். இப்படி ஸ்வரூபாதிகள் வஸ்துக்கள் தோறும் வெவ்வேறாயிருக்கும் என்று நிரூபித்தருளுகிறார்—‘**இவையெல்லாம்**’ என்றாரம்பித்து. **ஸித்திநியதமாயிருக்கும்**-ப்ரமாணங்கள் காட்டுகிறபடி வெவ்வேறாக ஏற்படுத்தப்பட்டிருக்கும். வஸ்துக்களைக் காட்டும் ப்ரமாணங்களே அவைகளின் ஸ்வரூபாதிகளையும் காட்டுகிறது என்றருளிச்செய்கிறார்—‘**ப்ரமாணங்கள்**’ என்றாரம்பித்து. ப்ரமாணங்களாவது ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்தம். ‘**ஸ்வரூப நிரூபக தர்மங்க**’ளாவது மனுஷ்யன், பசு, முதலிய வஸ்துக்களைப்பார்க்கும் பொழுது எந்த ஆகாரங்களை அறியாவிட்டால் மனுஷ்யன், பசு, என்றறிய முடியாதோ அப்படிப்பட்ட ஆகாரங்கள். ‘**நிரூபிதஸ்வரூபவிசேஷணங்க**’ளாவது மனுஷ்யன், பசு, என்று வஸ்து நிரூபிக்கப்பட்ட பிறகு அறியக்கூடிய ஆகாரங்கள். **விசிஷ்டமாகவே**-

அந்தஸ்வரூபத்தைச் சொல்லும்போது அவ்வோ விசேஷணங்களை யிட்டல்லது சொல்லவொண்ணாது. அவற்றைக் கழித்துப் பார்க்கில் சசவிஷாணதுல்யமாம்.

ஜீவாத்ம நிரூபணம்.

ஆகையால் ஜீவஸ்வரூபத்தை ஜ்ஞாநாநந்தத்வ அமலத்வ அணுத்வாதிகளான நிரூபகவிசேஷணங்களை யிட்டு நிரூபித்து ஜ்ஞாநாநந்த அமல அணு வென்றிம் சப்தங்களாலே சொல்லக்கடவது. இஜ்ஜீவதத்வம் ஸர்வேச்வரனுக்குச் சேஷமாயேயிருக்குமென்றும், அவனுக்கே நிருபாதிக

---

ஆவைகளோடு சேர்ந்ததாகவே. ஶப்த ப்ரமாணமும் விஶிஷ்டமான வஸ்துவையே சொல்லுகிறது என்றருளிச்செய்கிறார்—'அந்த' என்றாரம்பித்து. 'இட்டல்லது' என்பதற்கு அந்த ஸ்வரூபநிரூபக விஶேஷணங்களைக் கொண்டே சொல்லவேண்டும், அப்படிக்கில்லாமல் சொல்ல முடியாதென்று தாத்பர்யம். இத்தால் வஸ்துக்கள் நிர்விஶேஷமானவை என்று சொல்லுவது அஸங்கதம் என்பது த்யோதிதம். அப்படிப் பார்ப்பதில் விரோதத்தை நிரூபித்தருளுகிறார்—'அவற்றை' என்றாரம்பித்து. அவற்றை - ஸ்வரூப நிரூபக தர்மங்களை, கழித்து - தர்மியைவிட்டு விலக்கி. சசவிஷாணதுல்யம் - முயல் கொம்புக்கு ஸமானம், அதாவது அப்ரஸித்தம் என்றர்த்தம். ஒரு வஸ்துவைப்பார்க்கும்பொழுது உருண்டை, நீளம், முதலிய ஆகாரத்தோடேயே பார்க்கிறோம். சொல்லும்பொழுதும் மனுஷ்யன், பசு, முதலிய பதங்களினால் வ்யவஹரிக்கிறோம். ஶுத்த ஸ்வரூபத்தைச்சொல்லும் ஜ்ஞானம் ஆநந்தம் முதலிய பதங்களும் ஜ்ஞாநத்வ ஆநந்தத்வங்களை யுடையவைகளென்றே சொல்லுகின்றன. ஆகையினால் ஒரு விஶேஷணமுமில்லாத வஸ்து என்று தெரிவிக்கக்கூடிய ப்ரமாண மில்லாமையினால் அப்படிப் பட்டவஸ்துக்கள் அப்ராமாணிகம் என்று தாத்பர்யம்.

ஆகையால்-ஸ்வரூப நிரூபக தர்மத்தாலேயே ஸ்வரூபத்தை நிரூபிக்கவேண்டியதாகையினால் ஶேஷத்வமும் ஜீவாத்மாவிற்கு ஸ்வரூப நிரூபகதர்மமாகையினாலே. அதை அப்படி அருளிச்செய்யாமைக்குக்காரணம் நிரூபித்தருளுகிறார்—'இஜ்ஜீவதத்வம்' என்

**ஶேஷ**மென்றும், **அயோகாந்யயோகவ்யவச்சேத**ங்களாலே **ப்ரயோக**த்தில் தோற்றின **ஶேஷத்வம் ஸம்பந்தரூப**மாகையாலே **ஸம்பந்திஸ்வரூபம் நிரூபித**மானாலல்லதறியவொண்ணாமையாலே ஜீவனுக்கிது **நிரூபிதஸ்வரூபவிஶேஷண**மென்னலாம். **அணுத்வே ஸதி சேதநத்வம்**போலே **ஸ்வதஶ்ஶேஷத்வே ஸதி சேதநத்வ**மும் ஜீவ**லக்ஷண**மாக வற்றாகையாலே இச்

---

றாரம்பித்து. '**அயோகவ்யவச்சேத**'மாவது இந்த ஆகாரத்தின் ஸம்பந்தமில்லாமையை விலக்குகிறது. '**அந்யயோகவ்யவச்சேத**'மாவது இந்த ஆகாரத்திற்கு வேறொரு வஸ்துவினிடத்தில் ஸம்பந்தமிருப்பதை விலக்குகிறது. '**ஶேஷ**மாயே யிருக்கு' மென்றது அயோகவ்யவச்சேதம். 'அவனுக்கே * **ஶேஷம்**' என்றது அந்யயோகவ்யவச்சேதம். **ஸம்பந்தரூப**மாகையாலே-ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உள்ள ஸம்பந்தமாகையாலே. '**ஸம்பந்தி**' இத்தியாதிக்கு இந்த ஸம்பந்திகளாகிற இருவரையும் தெரிந்தாலல்லது இந்த ஸம்பந்தத்தை யறியமுடியாது என்றர்த்தம். '**நிரூபிதஸ்வரூபவிஶேஷண மென்னலாம்**' என்பதற்கு ஸ்வரூப நிரூபக தர்மமாகில் இதைவிட்டுத் தனித்து ஸ்வரூபத்தை யறியமுடியாதாகையினாலே ஸ்வரூபம் தெரிந்த பிறகு அறியவேண்டிய ஶேஷத்வம் ஸ்வரூப நிரூபக தர்மமாகாது என்று தாத்பர்யம். ஸ்வரூப நிரூபக தர்மமன்றாகில் ஜீவாத்மலக்ஷணங்களைச் சொல்லுமிடங்களில் '**ஸ்வதஶ்ஶேஷத்வே ஸதி சேதநத்வம்**' என்று லக்ஷணம் சொல்லப்பட்டிருப்பதினாலே லக்ஷணம் என்பதற்கு மற்ற வஸ்துக்களைவிட வேறுபட்டதாகத் தெரிவிக்கக்கூடிய தென்றர்த்தமாகையினால் ஶேஷத்வமும் ஸ்வரூப நிரூபகமாகாதோ என்னில்? ஆகாராந்தரத்தாலே (அதாவது ஈஶ்வரனைவிட வேறுபட்டதாக) அறியும்பொழுது ஸ்வரூபநிரூபக தர்மமாகலாம் என்றருளிச்செய்கிறார்—'**அணுத்வே ஸதி**' என்றாரம்பித்து. **அணுத்வே ஸதி சேதநத்வம்**- அணுபரிமாணமாகிற சேதனனாயிருக்கை. **ஸ்வதஶ்ஶேஷத்வே ஸதி சேதநத்வம்** - ஸ்வபாவத்திலேயே ஶேஷபூதனாகிய சேதனனாயிருக்கை. **லக்ஷண**மாக வற்றாகையாலே - லக்ஷண

**ஶேஷத்வம் ஜீவனுக்கு ஸ்வரூபநிரூபக**மென்னவுமாம். இப்படி **விபுத்வஸஹித சேதநத்வமும், அநந்யாதீநத்வநிருபாதிக ஶேஷித்வாதிகளும் ஈஶ்வரலக்ஷணங்**கள். **ஜீவேஶ்வரரூப**மான **வஸ்துத்வயத்**துக்கெல்லாம் பொதுவான **லக்ஷணம் சேதநத்வமும் ப்ரத்யக்த்வமும். சேதநத்வ**மாவது **ஜ்ஞாநாஶ்ரய**மாகை. **ப்ரத்யக்த்வ**மாவது தனக்குத்தான் தோற்றுகை. அப்போது **தர்மபூதஜ்ஞாநநிரபேக்ஷ**மாக நான் என்று தோற்றும். இப்படி **சேதநத்வாதிகள்** ஈஶ்வரனுக்கும் ஜீவனுக்கும் பொதுவாகையாலே அவனிற் காட்டில் **வ்யாவ்ருத்தி** தோற்றுகைக்காக **ஜீவலக்ஷணத்தில் ஸ்வத**.

---

மாகக் கூடியதாகையாலே. ஈஶ்வரனைவிட வ்யத்யாஸத்தைக் காட்டும் ப்ரகாரத்தை விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார்— ‘இப்படி’ என்றாரம்பித்து. **விபுத்வஸஹித சேதநத்வம்** - எங்கும் நிறைந்தவனாகிய சேதனனாயிருக்கை. **அநந்யாதீநத்வம்** - வேறொருவருக்கும் வசப்படாதவனாயிருக்கை. **நிருபாதிகஶேஷித்வம்**-ஒரு காரணமில்லாமல் ஶேஷியாயிருக்கை. இந்த ஜீவேஶ்வர லக்ஷணங்களில் இருவருக்கும் பொதுவான லக்ஷணங்களையும், ஒருவருக்கொருவர் வ்யத்யாஸத்தைக்காட்டுகிற விஶேஷணங்களையும் நிரூபித்தருளுகிறார்—‘**ஜீவேஶ்வர**’ என்றாரம்பித்து. **ஜ்ஞாநாஶ்ரய**மாகை - தர்மபூத ஜ்ஞானத்திற்கு ஆதாரமாக இருக்கை. **அப்போது** - தனக்குத்தானே ப்ரகாஶிக்கும்போது. ‘**நான்**’ என்பதற்கு வெளி வஸ்துக்களையறியும்பொழுது ‘**இதமஹம் ஜாநாமி** (இந்த வஸ்துவை நான் அறிகிறேன்)’ என்றனுபவம் உண்டாகிறபடியினால் அறிகிறவனும், அறியப்படுகிற வஸ்துவும், அறிவும், வெவ்வேறாகத் தோன்றுகிறது. நான் என்றறியும்பொழுதோவெனில் அறியப்படுற வஸ்துவும், அறிவிக்கிற ப்ரமாணமும், அறிவுக்கு ஆஶ்ரயமானவனும் ஒன்றென்று தோன்றுகிறது என்று தாத்பர்யம். இப்படித் தோன்றும்பொழுது தர்ம பூத ஜ்ஞானத்தை அபேக்ஷிக்கிறதில்லை. ‘**ப்ரத்**’ஶப்தம் ப்ரத்யக்த்வத்தைச் சொல்லுகிறது. **வ்யாவ்ருத்தி** - வ்யத்யாஸம். **அவனிற்காட்டில்** - ஈஶ்வர

ஶ்ருத்யாதிகள் சொல்லுகிறது. ப்ரணவாக்ஷரத்தில் சதுர்த்தியில்தோற்றின தாதர்த்யத்துக்குபாதியில்லாமையாலே ஸர்வரக்ஷகனான ஶ்ரிய:பதிக்கு ஜீவாத்ம நிருபாதிகஶேஷமாயே யிருக்குமென்றிப்படி யாவத் ஸ்வரூபம் ஸம்பந்தஞ் சொல்லுகை அயோகவ்யவச்சேதம். உகாராக்ஷரத்தில் அவதாரணஸாமர்த்த்யத்தாலே அவனுக்கே நிருபாதிகஶேஷம், வேறொருத்தருக்கு நிருபாதிகஶேஷ மன்றென்கை அந்யயோகவ்யவச்சேதம். இச்ஶேஷத்வம் பாகவதஶேஷத்வபர்யந்தமாக வளரும்படி மேலே சொல்லக்கடவோம். இப்

---

னைக்காட்டில். அயோக அந்யயோக வ்யவச்சேதங்களை நிரூபித்தருளுகிறார்—'**ப்ரணவாக்ஷரத்தில்**' என்றாரம்பித்து. **சதுர்த்தியில்** - அகாரத்தின் பேரில் சேர்த்துக்கொள்ளப்பட்டு பிறகு லோபித்திருக்கும் நான்காம் வேற்றுமையில். '**உபாதியில்லாமையாலே** - காரணம் சொல்லப்படாமையாலே, அதாவது ஒரு காரணத்தினால் உண்டாகியிருந்தால் சில காலத்திலிருந்து சிலகாலத்தில் இல்லாமலிருக்கக்கூடும், அப்படிக்கில்லாமையினால் இவ்விடத்தில் யாவத் ஸ்வரூபம் ஶேஷமாயிருக்கை விவக்ஷிதம் என்று தாத்பர்யம். **யாவத்ஸ்வரூபம்** - (ஜீவாத்மாவின்) ஸ்வரூபம் உள்ளவரையிலும். '**ஶேஷமாயேயிருக்கும்**' என்பதற்கு ஶேஷபூதமாக இல்லாமல் ஒரு காலத்திலும் இராது என்றேற்படுகிறபடியினாலே என்றர்த்தம். **அவதாரணஸாமர்த்த்யத்தாலே** - '**உ**' என்பது '**ஏவ**' என்பதினர்த்தமாகிய அவதாரணத்தைச் சொல்லுகிறபடியினாலே. அந்ய ஶேஷத்வத்தைக் கழிக்கிறதாகில் பகவானைத் தவிர அந்யர்களாகிய பாகவதர்களைக் குறித்து ஶேஷத்வம் கழிக்கப்படுமே என்னில்? ஸமாதான மருளிச் செய்கிறார்—'**இச்ஶேஷத்வம்**' என்றாரம்பித்து. '**வளரும்படி**' என்பதினால் தனக்குள்ளடங்காததான அந்ய ஶேஷத்வம் கழிக்கப்படுகிற தாகையினாலே தன்னுடைய வ்ருத்தியாகிற தனக்குள்ளடங்கிய பாகவத ஶேஷத்வம் அந்யயோக ஶப்தத்திற்கு அர்த்தமல்ல என்பது தெரிவிக்கப்படுகிறது. **மேலே** - புருஷார்த்த காஷ்டாதிகாரத்திலே. **ஸ்வரூபத்தை**

**படியிருக்கிற சேதநருக்குப் ப்ரவ்ருத்தியாவது ஸ்வாதீநமுமாய் ஸ்வார்த்தமுமான கர்த்ருத்வமும் போக்த்ருத்வமும். ஈச்வரன் தன் போக்த்ருத்வார்த்தமாக இவர்களு**

---

யருளிச் செய்தபடியினாலே அதின் தொடர்ச்சியாகிற ஸ்திதியும் அர்த்தாத்ஸித்தமாயிற்று என்று திருவுள்ளம்பற்றி மேலே ப்ரவ்ருத்தியை நிரூபித்தருளுகிறார்—'**இப்படி**' என்றாரம்பித்து. இத்தால் அத்யந்த பரதந்த்ரரான இவர்களுக்கு ஒரு ப்ரவ்ருத்தி உண்டோ என்கிற ஶங்கை த்யோதிதமாயிற்று. '**சேதநருடைய**' என்பதினால் தன்னுடைய ப்ரயோஜனத்தைக் கருதாமல் ஶேஷியினுடைய ப்ரயோஜனத்திற்காகவே ப்ரவ்ருத்திக்கை ஸம்பவிக்குமோ? அப்படித் தன்னுடைய ப்ரயோஜனத்திற்காக ப்ரவ்ருத்தி செய்யில் எப்பொழுதும் நிருபாதிக ஶேஷபூதன் என்றது ஸங்கதமாகுமோ? என்கிற ஶங்கை த்யோதிதம். இதற்கு ஸமாதானம் அருளிச் செய்கிறார்—'**ஸ்வாதீந**' என்றாரம்பித்து. '**ஸ்வாதீந**' இத்யாதியினால் பாரதந்த்ர்யத்திற்கு விரோதமில்லை யென்பதும், '**ஸ்வார்த்தமான**' என்பதினால் ஶேஷத்வத்திற்கு விரோதமில்லை என்பதும் தெரிவிக்கப்பட்டது. **கர்த்ருத்வம்** - கர்மங்களைச் செய்கை, **போக்த்ருத்வம்** - ஸுகதுக்கங்களை யனுபவிக்கை. ஜீவாத்மாவின் போக்த்ருத்வம் எல்லாம்பரார்த்தமென்பது ஸங்கதமாகுமோ? பசியின் நிவ்ருத்தி முதலிய தன்னுடைய ப்ரயோஜனத்திற்காக ஸாப்பிடுவது முதலிய வ்யாபாரங்கள் செய்யக் காண்கிறோமே என்னில்? ஸமாதானமருளிச்செய்கிறார்—'**ஈச்வரன்**' என்றாரம்பித்து. **தன் போக்த்ருத்வார்த்தமாக**-தான் இவைகளைக்கொண்டு லீலை முதலிய ரஸங்களை யனுபவிப்பதற்காக. இங்கு '**அசேதந**மான குழமணனை யழித்துப் பண்ணியும் * * வாசியில்லையிறே **நிரபேக்ஷ**ரான **ரஸி**கர்க்கு' என்கிற ஸாங்க ப்ரபதனாதிகார வாக்யமும், '**போக்யம் ஸுகாஸுகமஹேதுகசேதநேஷு போக்த்ருத்வமாத்மநி நிவேஸ்ய நிஜேச்சயைவ ஸாம்ஸாரிகாந் ஸுகவிஶேஷண போகதாயீ ஸம்ஸாரிவத் ஸ யதோ ஸஹ போகவேஷ:॥**' என்கிற ஶரணாகதி தீபிகா ஶ்லோகமும் அனுஸந்தேயம். இத்தால் ப்ரதானமான ப்ரயோஜனத்தை யடைகிறவன் ஈஶ்வர

க்குக் கர்த்ருத்வபோக்த்ருத்வங்களை யுண்டாக்குகையாலிவை பராதீநங்கள். பத்தசேதநருக்கு நீக்கியுள்ளாரில் பேதம் அவித்யா கர்ம வாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்த யுக்தரா யிருக்கை. இவர்களுக் கந்யோந்யம் வரும் ஜ்ஞாநஸங்கோசாதி பேதத்தை ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்தங்களான வகுப்புக்களிலே கண்டுகொள்வது. இப்பத்தசேதநர் தந்தாமுக்குக் கர்மாநுரூபமாக ஈஶ்வரனடைத்த சரீரங்களை தர்மிஸ்வரூபத்தாலும் தர்மபூத ஜ்ஞாநத்தாலும் தரியா நிற்பர்கள். தர்மியால் வருகிற தாரணம் சரீரத்தினுடைய ஸத்தைக்குப் ப்ரயோஜகமாயிருக்கும். ஜாக்ரதாத்யவஸ்தையில் தர்ம

பத்தஸ்வரூபம்.

---

ஞைகயினால் ஜீவாத்மாவின் கர்த்ருத்வாதிகள் பரார்த்தங்கள் என்றது ஸங்கதம் என்பது தெரிவிக்கப்படுகிறது. பத்தர்களுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகளை நிரூபித்தருளுகிறார்—'பத்த' என்றாரம்பித்து. நீக்கியுள்ளாரில்-மற்றவர்களான முக்தநித்யர்களைக் காட்டிலும். **'கண்டு கொள்வது'** என்பதற்கு பத்தர்களுக்குள் இருக்கும் பேதம் அவரவர்களுக்குள்ள ஜ்ஞான ஸங்கோசாதிகளைக் கொண்டு நிரூபிக்கவேண்டும், அந்த ஜ்ஞான ஸங்கோசாதிகளும் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களைக் கொண்டறியவேண்டும், இங்கு க்ரந்தம் விஸ்தரிக்கு மாகையினாலருளிச் செய்யப்படவில்லை, அவரவர்கள் நிரூபித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றர்த்தம். இந்தப் பத்தர்களுக்குப் பந்தகமான சரீரம் வந்த காரணத்தை நிரூபித்தருளுகிறார்—'இப்பத்த' என்றாரம்பித்து. அடைத்த-தனித்து ஸங்கல்பித்த, அதாவது தன்னுடைய ஸங்கல்பத்தினால் அவரவர்களுக்கு வசமாக்கின. **'கர்மாநுரூபமான'** என்பதினால் அப்படி ஈஸ்வரன் தேவமனுஷ்யாதி சரீரங்களைக் கொடுத்ததும் அவரவர்களின் கர்மங்களுக்கு அநுகுணமாக என்பது தெரிவிக்கப்படுகிறது. **தர்மி** - ஜீவாத்மா. இதில் தர்மியால் வரும் தாரணத்தையும், தர்மபூத ஜ்ஞானத்தினால் வரும் தாரணத்தையும் பிரித்து நிரூபித்தருளுகிறார்—'**தர்மியால்**' என்றாரம்பித்து. [**ப்ரயோஜகமாயிருக்கும்** -

**ஸஹிதஜ்ஞாநத்தாலே வருகிற ஶரீரதாரணம் ஸ்வர்க்கா த்யப்யுதய ததுபாயாநுஷ்டாநங்களுக்கும், க்ருதப்ரபத்திகனான பரமைகாந்திக்கு பகவதநுபவகைங்கர்யங்களுக்கு முபயுக்தமாயிருக்கும். பாபக்ருத்துக்களுக் கிச் ஶரீரதாரணம் விபரீதபலத்துக்கு ஹேதுவா யிருக்கும். இஜ்ஜீவர்கள் இச்ஶரீரத்தை விட்டா லிதின் ஸங்காதங் குலையுமித்தனை. ஶரீரத்துக்குவா**

---

காரணமாயிருக்கும். இத்தால் தர்மபூத ஜ்ஞானத்தின் வ்யாபார மில்லாத ஸுஷுப்த்யாதி தஶைகளில் கேவலம் ஸ்வரூபத்தாலே தாங்கப்படுகிறது என்பது தெரிவிக்கப்பட்டது. **ஸ்வர்க்காத்யப்யுதயங்கள்**-ஸ்வர்க்கம் முதலியவைகள். **ததுபாயாநுஷ்டாநம்**-அவைகளுக்கு உபாயங்களான யஜ்ஞம் முதலியவைகளை அனுஷ்டித்தல். **க்ருதப்ரபத்திகனான** - ப்ரபத்தி செய்தவனான, **பரமைகாந்திக்கு**-அநந்ய ப்ரயோஜனனுக்கு. இத்தால் உபாயம் செய்யப்பட்டபடியினாலே மேலே ஶரீர தாரணம் ஏன் செய்ய வேண்டும் என்கிற ஶங்கை த்யோதிதமாயிற்று. உபாயத்திற்காக இல்லாவிட்டாலும் உபாயக்ஷணம் துடங்கி பகவதனுபவ கைங் கர்யங்களாகிற புருஷார்த்தங்களை யனுபவிக்கலா மாகையினாலே அப்பொழுது ஶரீரதாரணம் புருஷார்த்தங்களை யனுபவிப்பதற் குபயுக்தமாகிறது என்று ஸமாதானத்தின் அபிப்ராயம். **பாப க்ருத்துக்களுக்கு** - பாபம் செய்கிறவர்களுக்கு. **'விபரீதபலம்'** மாவது நரகங்களும், மேல்மேல் ஜன்மங்களில் செய்யப்படும் பாபங்களும். இஜ்ஜீவன் ஶரீரத்தை ஸ்வரூபத்தினால் தரிக்கிறா னென்பது ஸங்கதமாகுமோ? ஜீவாத்ம ஸ்வரூபமில்லாம லிருக்கச்செய்தே ப்ரேத ஶரீரம் காணப்படுகிறதே என்னில்? ஸமாதானம் அருளிச் செய்கிறார்—'**இஜ்ஜீவர்கள்**' என்றாரம் பித்து. **ஸங்காதங் குலையுமித்தனை** - ஶரீரம் என்று சொல்லப் படுவதற்குக் காரணமான சேர்க்கைகள் ஜீவாத்மாவிட்டவுடன் கலைந்துவிடுகின்றன, ஶரீரமாயிருந்த ஸ்தூலமான சில த்ரவ் யங்கள் மாத்திரம் நிற்கின்றன. '**இத்தனை**' என்பதற்கு இவ்வளவே யிருக்கின்றன வேறில்லை என்றர்த்தம். இத் தால் முன்னால் ஶரீரமாயிருந்த பாகங்களின் ஏகதேஶம் இருப் பதினால் ஶரீரம் என்று வ்யவஹரிக்கப்படுகிறதே ஒழிய

சகமான த்ரவ்யங்களை ஸ்வசரீரமாய்க்கொண்டு கிடக்கும். பத்தசேதநர்க்கிதரரிற்காட்டில் ஸ்திதிபேதம் ஸம்ஸாரஸம்பந்தம் யாவந்மோக்ஷம் அநுவர்த்திக்கை. ப்ரவ்ருத்திபேதம் புண்யபாபோதாஸீநங்களா

**முக்தஸ்வரூபம்.**

ன த்ரிவித ப்ரவ்ருத்திகளும். முக்தருக்கு நீக்கியுள்ளாரில் பேதம் ப்ரதிபந்தக நிவ்ருத்தியாலே ஆவிர்பூதஸ்வரூபரா யிருக்கை. ஸ்திதிபேதம் பூர்வாவதியுண்டான ஆவிர்பாவத்துக் குத்தராவதியன்றிக்கேயிருக்கை. இவர்

---

அது ஶரீரம் என்கிற பதத்திற்கு முக்யமான அர்த்தமல்ல என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. 'சரீரத்துக்குவாசக த்ரவ்யங்க'ளாவது 'மஹாபூதாந்யஹங்காரோ புத்திரவ்யக்தமேவ ச' என்று சொல்லப்பட்ட ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்கள், ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், என்பவை. இந்திரியாதிகளும், ப்ராணவாயுவுமில்லாமையினால் ஸங்காதம் குலைந்துவிட்டது என்று தாத்பர்யம். அந்த வஸ்துக்கள் இருப்பதற்குக் காரணத்தை நிரூபித்தருளுகிறார்—'ஸ்வசரீர' என்றாரம்பித்து. பகவான் ஸர்வாந்தர்யாமி யாகையாலே என்று தாத்பர்யம். பத்தர்களின் ஸ்திதியை நிரூபித்தருளுகிறார்—'பத்தசேதநர்க்கு' என்றாரம்பித்து. **யாவந்மோக்ஷம்** - மோக்ஷம் வருகிறவரையில். '**உதாஸீந**'மாவது புண்யபாப மிரண்டுமில்லாத கண்ணைக்கொட்டுவது முதலிய வ்யாபாரங்கள். முக்தர்களுடைய ஸ்வரூபாதிகளை நிரூபித்தருளுகிறார்—'முக்தருக்கு' என்றாரம்பித்து. **ப்ரதிபந்தக நிவ்ருத்தியாலே** - தடங்கலாயிருந்த கர்மங்கள் நிவ்ருத்தியடைந்தபடியினாலே. **ஆவிர்பூத ஸ்வரூபராயிருக்கை** - ப்ரகாஶத்தை அடைந்த அபஹதபாப்மத்வம் முதலியஸ்வரூபத்தை உடையவர்களாயிருக்கை. '**ஆவிர்பூதஸ்வரூப**' என்பதினால் பத்தரைக்காட்டில் பேதமும், '**ப்ரதிபந்தகநிவ்ருத்தி**' என்பதினால் நித்யரைக்காட்டிலும் பேதமும் தெரிவிக்கப்படுகிறது. **பூர்வாவதியுண்டான**-உத்பத்திக்கு முன்எல்லையோடு கூடிய, அதாவதுமுக்தர்களுக்குஸ்வரூபம்ஆவிர்பவிப்பதற்குமுன் பின் என்கிற அளவுகளுண்டு என்று தாத்பர்யம். **உத்தராவதி**

களுக் கந்யோந்யம் ஸ்திதிபேதமாவிர்பாவத்தில் முற்பாடுபிற்பாடுகளாலுண்டான முன்புற்ற வேற்றச்சுருக்கம். ப்ரவ்ருத்திபேதம் அநாதிகாலமுமிழந்துபெற்ற பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ ஜநித ப்ரீதிகாரிதமான யதாபிமத கைங்கர்யவிசேஷங்கள். நித்யருக்கு நீக்கியுள்ளாரில் பேதம் அநாத்யாவிர்பூதஸ்வபாவராய் பரதந்த்ரராயிருக்கை. இவர்களுக்கு நீக்கியுள்ளாரிற் காட்டில் ஸ்திதிபேதம் அநாத்யநுவ்ருத்த

நித்யஸ்வரூபம்.

---

யன்றிக்கே-மேல் எல்லை இல்லாமல். இவர்களுக்குள் ஸ்வரூபத்தில் அந்யோந்யபேதம் கீழ் நிரூபிக்கப்பட்டபடியே ஸித்தம் என்று திருவுள்ளம்பற்றி ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதங்களை அருளிச் செய்கிறார்—'இவர்களுக்கு' என்றாரம்பித்து. '**அநாதிகாலமும்**' என்பது '**இழந்து**' என்பதோடு அந்வயிக்கிறது. **பரிபூர்ண** - குணம், விபூதி, முதலியவைகளினால் நிறைந்த, **ப்ரஹ்மாநுபவ ஜநித** - பகவானுடைய அநுபவத்தினால் உண்டாக்கப்பட்ட, **ப்ரீதிகாரிதமான** - ப்ரீதியினால் செய்யப்படுகிற, **யதாபிமத** - தன்னிஷ்டப்படி செய்யப்படுகிற. நித்யர்களுடைய ஸ்வரூபாதிகளை நிரூபித்தருளுகிறார்—'**நித்யருக்கு**' என்றாரம்பித்து. **அநாத்யாவிர்பூதஸ்வபாவராய்** - அநாதியாக ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற அபஹத பாப்மத்வாதிகளை உடையவர்களாய். '**அநாதி**' இத்யாதியினால் பத்தமுக்தர்களைக் காட்டிலும் பேதம் காண்பிக்கப்படுகிறது. '**பரதந்த்ரராய்**' என்பதினால் ஈஸ்வரனைவிட பேதம் தெரிவிக்கப்படுகிறது. **சேஷித்வாநுபவம்** - சேஷிகளான ஸ்ரீ, ஸ்ரிய:பதி, இவர்களை உள்ளபடியே, அதாவது சேஷிகளாக அநுபவிப்பது. இத்தால் பிராட்டி பகவானைத் தனக்குச் சேஷியாக அநுபவித்தபோதிலும் சேஷிதத்வங்களாகிய இருவரையும் தனக்குச் சேஷியாக அநுபவிக்கவில்லையாகையினால் அவளைவிட வ்யாவ்ருத்தி காட்டப்பட்டது. பகவானும் தன்னைத்தானே யநுபவித்தாலும் தனக்குச் சேஷியாக இருவரையும் அநுபவிக்கவில்லையாகையினால் அவனைவிட வ்யத்யாஸம் தெரிவிக்கப்பட்டது. இதைத் தெரிவிப்பதற்காகவே '**சேஷ்யநுபவம்**' என்றருளிச் செய்யா

மான ஶேஷித்வாநுபவம். இது நித்யர்க்கெல்லாம் பொதுவானபடியாலே யிவர்களுக்கந்யோந்யம் ஸ்திதியில் வைஷம்ய மில்லை. இவர்களுக்குப் ப்ரவ்ருத்தியிலே ஆம் அநாதிப்ரவாஹநித்யங்களான கைங்கர்யவிஶேஷங்கள். அநந்தகருடாதிகளுக் கதிகாரவிஶேஷங்க

நித்ய முக்தர்களுக்கு ளும், ததிச்சாஸிதகைங்கர்யங்க

ஸர்வவித கைங்கர்ய ஸித்தி. ளும், ப்ரவாஹஸித்தங்களாயிருக்க நித்யர்க்கும் முக்தர்க்கும் ஸர்வவிதகைங்கர்யஸித்தி யுண்டென்கிற வசநங்கூடுமோவென்னில்? ஸ்வாமி

---

மல் 'ஶேஷித்வாநுபவம்' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. பொதுவானபடியாலே - ஒரேவிதமாகையாலே. அநாதிப்ரவாஹ நித்யங்களான - அநாதியாகவும், ப்ரவாஹமாக நித்யங்களாயுமிருக்கிற. இத்தால் கைங்கர்யம் க்ரியை யாகையினால் அது நஶ்வரமாகையினால் அநித்யமாகுமே என்கிற ஶங்கை பரிஹ்ருதம். 'கைங்கர்ய விஶேஷங்க'ளாவது ஆதிஶேஷன் கருடன் முதலியவர்களுக்கு ப்ரஸித்தமாயிருக்கிற படுக்கையாயிருக்கை, வாஹனமாயிருக்கை, முதலியவைகள். இத்தால் நித்யஸூரிகளுக்கு ப்ரவ்ருத்தியில் பேதம் நிரூபிக்கப்பட்டது. நித்யஸூரிகளுக்குக் கைங்கர்யம் ப்ரதிநியதமாயிருந்தால் 'அஶேஷஶேஷைகரதிரூப நித்ய கைங்கர்ய ப்ராப்த்யபேக்ஷயா' என்கிற கத்யவாக்யத்தினால் முக்தருக்கு முள்பட ஸர்வவித கைங்கர்யஸித்தி உண்டென்று ஏற்படுகிறது ஸங்கதமாகுமோ என்றாக்ஷேபித்துக்கொண்டு அதற்கு ஸமாதான மருளிச்செய்கிறார்—'அநந்தகருட' என்றாரம்பித்து. 'அதிகார விஶேஷங்க'ளாவது வாஹனமாயிருக்கை, ஶயனமாயிருக்கை, முதலியவை. 'ததிச்சாஸித கைங்கர்யங்க'ளாவது பகவானுடைய ஸங்கல்பப்படி தன்னுடைய ஶரீரங்களை அமைத்துக்கொண்டு நிற்பது நடப்பது முதலியவைகள். ப்ரவாஹஸித்தங்களாயிருக்க - பகவத் ஸங்கல்பத்தினாலே, தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்க. 'உண்டென்கிறவசநம்' என்பதற்கு ஸர்வவித கைங்கர்யஸித்தி உண்டென்று கத்யத்தில் அருளிச் செய்திருப்பது என்றர்த்தம். 'ஸ்வாமி' இத்யாதிக்கு நித்யமுக்தர்களுக்குப் பகவானுடைய ஸங்கல்பத்தை

னுடைய ஸங்கல்பத்துக் கீடாகத் தனக் கபிமதங்க ளான கைங்கர்யங்களிலே கிடையாதவை யொன்று மில்லாமையாலும், ஓரொருத்தருக்கு ஸ்வாபிமதங்க ளான கைங்கர்யங்களைத் தாங்கள நுஷ்டிக்கவேணு மென்கிற ஸங்கல்பம் வேறொருத்தருக்குப் பிறவாமை யாலும், ஆரேனுமொருவர நுஷ்டிக்கும் கைங்கர்ய மும் ஸ்வாமிக்குப் ப்ரியமானபடியிலே ததநுஷ்டிதகைங்கர் யங்களும் ஸர்வருக்கும் ப்ரியமாய் கைங்கர்யரஸமுமா ன ரீதியில் வாசியில்லாமையினாலும் ஸர்வருக்கும் ஸர்வவித கைங்கர்யஸித்தியுண்டென்கையில் விரோத

தர்ம பூத ஜ்ஞான நிரூபணம்.

மில்லை. இவ்வாத்மாக்களெல் லார்க்கும் ஸ்வரூபஸாம்யம்போலே ஸங்கல்பஸ்திதஜ்ஞாந

---

யனுஸரித்தே இஷ்டமுண்டாகிறபடியினாலே, அப்படி இருவருக் கும் அபிமதமாயிருக்கும்பொழுது 'தாவகீ ஸர்வ கைங்கர்யவா ணீ ஹஶவாது லெவகீ ஸாதஃ' என்று சொல்லுகிற ந்யாயத்தி னும், 'அவன் ஒருவனாகிறான் இருவனாகிறான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தினாலும், பகவானும் நித்யமுக்தர்களும் அனேக ரூப பரிக்ரஹம்பண்ணலாமாகையினால் ஸர்வருக்கும் ஸர்வவித கைங்கர்யம் கிடைக்கும் என்பது விரோதிக்காது என்று தாத் பர்யம். ஆகிலும் ப்ரதி நியதமான கைங்கர்ய விஶேஷங்கள் கிடைக்காமையினாலே விரோதியாதோ என்னில்? ஸமாதான மருளிச் செய்கிறார்—' **ஓரோருத்தருக்கு** ' என்றாரம்பித்து. இப் படியாகிலும் மோக்ஷத்தில் ஆநந்த தாரதம்யம் அங்கீகரிக்க வேண்டிவருமே என்னில்? அதற்கு ஸமாதானம் அருளிச் செய் கிறார்—' **ஆரேனுமோருவர்** ' என்றாரம்பித்து. ஆக இப்படி ஸர்வவித கைங்கர்யஸித்தி உண்டென்பதற்குத் தனக்கபிமதங் களான ஸர்வவித கைங்கர்யஸித்தி உண்டென்றுவது, ஸர்வவித கைங்கர்யங்களினால் உண்டாகும் பலமாகிற ப்ரீதி உண்டென்று வது அர்த்தமாகையினால் விரோதமில்லைஎன்று தெரிவிக்கப்பட்ட தாகிறது. **ஸர்வருக்கும்** - கைங்கர்யம் செய்பவர்களுக்கும், அதைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும், வாசி-வ்யத்யா ஸம். தர்மபூத ஜ்ஞானத்தை அசேதனத்தோடு சேர்த்தருளிச் செய்யாததற்குக் காரணத்தையருளிச் செய்கிறார்—'**இவ்வாத்மா**'

மும் த்ரவ்யமாயிருக்க இதின் ஸ்வரூபத்தைத் தனித் திங்கருளிச் செய்யாதொழிந்தது சேதநரென்றெடுத்த விசிஷ்டத்திலே விசேஷணமாய்ச் சொருகிநிற்கை யடியாக. இத்தர்மபூதஜ்ஞாநம் விஷயப்ரகாசநவேளை யிலே ஸ்வாச்ரயத்துக்கு ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கும்.

---

என்றாரம்பித்து. 'இவ்வாத்மாக்கள்' என்பது 'தர்மிஸ்வரூபம்' என்பதோடன்வயிக்கிறது. இத்தால் பத்த தசையில் அவித்யையினால் ஜ்ஞாத்ருத்வம் உண்டாகிறது. முக்தநித்யர்களுக்கு ஸ்வரூபத்தைத் தவிர ஜ்ஞானம் என்று ஒன்றில்லை என்கிற அத்வைதி பக்ஷம் நிராகரிக்கப்பட்டது. 'தர்மிஸ்வரூபம்போலே' என்கிற த்ருஷ்டாந்தத்தினால் தர்மிஸ்வரூபத்தைஒப்புக்கொண்டு தர்மபூத ஜ்ஞானத்தை இல்லையென்னில் துல்ய ந்யாயத்தினாலே தர்மபூத ஜ்ஞானத்தை ஒப்புக்கொண்டு தர்மிஜ்ஞானத்தையில்லை என்னலாம், யுக்திகளும் யதாகதஞ்சித் ஸம்பவிக்கும், ஆகையினால் ப்ரமாணஸித்தமான தர்மி ஸ்வரூபத்தைப்போல ப்ரமாண ஸித்தமான தர்மபூத ஜ்ஞானத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'த்ரவ்யமாயிருக்க' என்பதினால் ஸங்கோச விகாஸாதிகளை யடைகிறபடியினால் இது த்ரவ்யம் என்று ஸ்ரீமந் ந்யாயஸித்தாஞ்சனம் முதலிய க்ரந்தங்களில் நிர்த்தாரணம் செய்திருப்பது ஸித்தவத்கரிக்கப்படுகிறது. இங்கு-'ஸ்வாதீந' இத்யாதி வாக்யத்தில், 'சேதந' இத்யாதிக்கு சேதநர்என்பதற்குத் தர்மபூத ஜ்ஞானத்தை யுடையவர்கள் என்றர்த்தமாகையினால் அதற்குள் தர்மபூத ஜ்ஞானம் விசேஷணமாய் அடங்கியிருக்கிறது என்று தாத்பர்யம். **சொருகி நிற்கை** - உள்ளடங்கி இருக்கை. தர்மபூத ஜ்ஞானத்தின் ஸ்வரூபாதிகளை நிரூபித்தருளுகிறார்—'இத்தர்மபூத ஜ்ஞாநம்' என்றாரம்பித்து. **விஷயப்ரகாசநவேளையிலே** - வெளி வஸ்துக்களை ப்ரகாசம் செய்யும்பொழுது, **ஸ்வாச்ரயத்துக்கு** - தனக்கு ஆதாரமான ஜீவாத்மாவிற்கு, **ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கும்** - தானே தோன்றுவதாயிருக்கும், அதாவது அந்தந்த ஆத்மாவின் தர்மபூத ஜ்ஞானம் அவரவர்களுக்கு வெளி விஷயங்களைக் காட்டும் பொழுது ஸ்வயம் ப்ரகாசம், ஒவ்வொருவருடைய தர்மபூத ஜ்ஞானம் மற்றவர்களுக்கும், அவரவர்களுடைய தர்மபூத ஜ்ஞானமும்

இது ஈச்வரனுக்கும் **நித்ய**ர்க்கும் **நித்யவிபு**வாயிருக்கும். மற்றுள்ளார்க்கு **ஸம்ஸாரதசை**யில் **கர்மாநுரூப**மாக **ஸங்கோச விகாஸ**வத்தாய் **முக்தாவஸ்தை**யிலே **ஏகவிகாஸ**த்தாலே பின்பு **யாவத்ஸத்தம் விபு**வாயிருக்கும். இதுக்கு **ப்ரவ்ருத்தி**யாவது **விஷய**ங்களை **ப்ரகாசி**ப்பிக்கையும், **ப்ரயத்நாவஸ்தை**யிலே **சரீராதி**களை **ப்ரேரி**க்கையும், **ஸம்ஸாரதசை**யில் **ஸங்கோச விகாஸ**ங்களும், **ஆநுகூல்ய ப்ராதிகூல்ய ப்ரகாசரூப**த்தாலே **போக**மென்கிற **அவஸ்தை**யை யடைகையும். **போக**மாவது தனக் க**நுகூல்ய**மாக

---

விஷய ப்ரகாஶவேளையைத் தவிர மற்ற ஸமயங்களிலும் அஸ்வ. யம்ப்ரகாஶம் என்று தாத்பர்யம். இதின் ஸ்வரூபத்தின் உட்பிரிவுகளைநிரூபிக்கிறார்—'இது'என்றாரம்பித்து. **நித்யவிபுவாயிருக்கும்** - எப்பொழுதும் எல்லா வஸ்துக்களிலும் பரவியிருக்கும். **ஸங்கோச விகாஸவத்தாய்**-அனேகவிதங்களான சுருங்குதல்,பரவுதல்இவைகளையுடையதாய்.'**கர்மாநுரூபம்**' என்பது இதற்குக் காரணத்தைக் குறிக்கிறது. **ஏகவிகாஸத்தாலே**-ஒரேவிதமான பரவுதலால், அதாவது முக்தர்களுக்கெல்லாம் இந்த விகாஸம் ஒரேவிதம் என்று தாத்பர்யம். '**நிஜவிகாஸத்தாலே**' என்று பாடாந்தரம், ஸ்வபாவத்திலேற்பட்ட விகாஸத்தாலே என்றர்த்தம். இது நித்யமாகையினால் ஸ்திதியை நிரூபித்தருளாமல் ப்ரவ்ருத்தியை நிரூபித்தருளுகிறார்— '**இதுக்கு**' என்றாரம்பித்து. **ப்ரயத்நாவஸ்தை** - தர்மபூதஜ்ஞானத்திற்கே ஆத்மா ஶரீராதிகளை அதிஷ்டானம் செய்யும் பொழுது உண்டாகும் அவஸ்தை. இத்தாலே ப்ரயத்னம் தனியாக ஒரு குணம் என்னும் தார்க்கிகர்களின் பக்ஷம் நிராகரிக்கப்பட்டது. '**ஆநுகூல்யம்**' இத்யாதியோடுவஸ்துக்களை என்று சேர்த்துக்கொள்ளவும். '**போகமாவது**' இத்யாதிக்கு அனுகூலமாக ஒன்றை யனுபவிப்பது ஸுகம், ப்ராதிகூலமா யொன்றை யனுபவிப்பது துக்கம் என்று தாத்பர்யம். இவைகளில் எல்லா வஸ்துக்களுக்கும் அனுகூலமாயிருப்பதே ஸ்வபாவம். ப்ராதிகூலமாய்த்தோன்றுவது முதலியது அவரவர்களின் கர்மங்களுக்கு அனுகுணமாகப் பகவானால் ஸங்கல்பிக்கப்பட்டதே ஒழிய

வாதல் ப்ராதிகூல்யமாகவாத லொன்றை யநுபவிக்கை. ஸம்ஸாரவிபூதியான ஸர்வவஸ்துவுக்கு மாநுகூல்யமும் ஸ்வபாவமாயிப்படி யீஶ்வரனும் நித்யரும் முக்தருமநுபவியா நிற்க ஸம்ஸாரிகளுக்கு கர்மவஶத்தாலும் வாஸநாவஶத்தாலும் ருசிவஶத்தாலும், அநுகூல்யமாயும் ப்ரதிகூல்யமாயு முதாஸீநமாயு மிருக்கிற இவ்விகாரங்களெல்லா மிவ்வஸ்துக்களுக்கு ஸ்வாபாவிகங்களன்று. இது இவர்களுடைய கர்மங்களுக்கீடாக ஸத்யஸங்கல்பனான ஈஶ்வரனிவர்களுக்கு ஸம்விதாநம் பண்ணின ப்ரகாரம். இக்கர்மஃபல மநுபவிக்கைக்கு பத்தருக்கு ஸ்வரூபயோக்யதையும் ஸஹகாரியோக்யதையுமுண்டு. ஸ்வரூபயோக்யதை ப்ரத்யக்சேதநத்வம். ஸஹகாரியோக்யதை ஸாபராதத்வம். நித்யருக்கும் முக்தருக்கும் ப்ரத்யக்சேதநதையாலே ஸ்வரூபயோக்யதை யுண்டேயாகிலும் ஸம்ஸாரஹேது விபரீதாநுஷ்டாநமில்லாமையாலே ஸஹகாரியோக்யதை யில்லை. ஸம்ஸாரன் ஸர்வ

---

அவைகள் ஸ்வாபாவிகமானதல்ல. ஆகையினால் ஒரே வஸ்து சிலருக்கு அனுகூலமாயும் சிலருக்கு ப்ரதிகூலம் முதலியதாயும் தோன்றுவது விருத்தமல்ல என்றருளிச் செய்கிறார்—'ஸம்ஸார' என்றாரம்பித்து. 'அநுகூல்யமாயும்' என்பதினால் இந்த ஸம்ஸாரதஸையில் சில வஸ்துக்கள் அனுகூலமாய்த் தோன்றினாலும் ஈஸ்வராதிகளுக்குப்போல அவைகளுடைய ஸ்வாபாவிகமான ஆனுகூல்யம் தோன்றுகிறதில்லை என்பது தெரிவிக்கப்படுகிறது. எல்லா ஆத்மாக்களும் ஸமானமாயிருக்க பத்தர்கள்மாத்திரம் கர்மபலத்தை யனுபவிப்பதற்குக் காரணத்தை யருளிச்செய்கிறார்— 'இக்கர்மஃபலம்' என்றாரம்பித்து. **ஸ்வரூபயோக்யதை**-ஸ்வரூபத்தினாலேயே யோக்யனாயிருக்கை. **ஸஹகாரியோக்யதை** - ஓத்தாசைக் காரணத்தினால் யோக்யனாயிருக்கை. '**ப்ரத்யக்சேதநத்வம்**' என்பதினால ஈஸ்வரனும், அசேதனமும் வ்யாவர்த்திக்கப்படுகிறது. **ஸர்வஶேஷிதாவாய்** - எல்லா

ப்ரகாசிதாவாய்த் தானொருத்தருக்கு ஶாஸநீயனன்றிக்கே நிற்கையாலே பரதந்த்ரசேதநத்வமாகிற ஸ்வரூபவைரூப்யமுமில்லை, ஸ்வதந்த்ராஜ்ஞாதிலங்கநமாகிற ஸாபராதத்வமுமில்லை. ஜீவேஶ்வரரூபரான வாத்மாக்க ளெல்லாருடையவும் ஸ்வரூபம் ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாசம். இத்தர்மிஸ்வரூப ப்ரகாசத்துக்கு பத்தருக்கு முள்பட வொருகாலத்திலும் ஸங்கோசவிகாஸங்களில்லை. ஸர்வாத்மாக்களுடையவும் தர்மபூதஜ்ஞாநம் விஷய ப்ரகாசநவேளையிலே ஸ்வாஶ்ரயத்துக்கு ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கும். ஜ்ஞாநத்வமும் ஸ்வயம்ப்ரகாசத்வமும் தர்மதர்மிகளுக்கு ஸாதாரணம். தர்மபூதஜ்ஞாநத்துக்கு விஷயித்வமேற்றம்:

---

வஸ்துக்களையும் நியமிக்குமவனுய், **ஶாஸநீயனன்றிக்கே** - நியாம்யனுக இல்லாமல். '**ஸ்வதந்த்ராஜ்ஞாதிலங்கநமாகிற**' இத்யாதிக்கு அபராதமென்பது ஸ்வாமியினுடைய உத்தரவைமீறி நடத்தலாகையினுலே இவனுக்கு வேறொரு ஸ்வாமியில்லாமையினுல் ஸ்வதந்திரனுன ஸ்வாமியினுடைய உத்திரவைமீறி நடப்பதாகிய ஸாபராதத்வம் இல்லை, தன்னுடைய உத்திரவை மீறி நடப்பது அபராதமாகாது என்று தாத்பர்யம். தர்மிஞானத்திற்கும் தர்மபூத ஜ்ஞானத்திற்கும் வ்யத்யாஸத்தை யருளிச்செய்கிறுர்—'**ஜீவேஶ்வர**' என்றுரம்பித்து. **ஸ்வஸ்மை**-தன்பொருட்டு. **பத்தருக்குமுள்பட** - பத்தாத்மாக்களுக்கும்கூட. இத்தால் தர்மி ஜ்ஞானம் தர்ம பூத ஜ்ஞானத்தைப்போல் ஸங்கோசவிகாஸாதிகளை அடைகிறதில்லை, என்பதும் நித்ய முக்தர்களுக்குப்போலவே பத்தர்களுக்கும்**ஸ**மமான**து**என்பதும் த்யோதிதம். தர்மபூத ஜ்ஞானத்தின் ஸ்வபாவத்தை நிரூபித்தருளுகிறுர்—'**ஸர்வாத்மா**' என்றுரம்பித்து. தர்ம தர்மி ஜ்ஞானங்களுக்குப் பொதுவான ஆகாரத்தை யருளிச்செய்கிறுர்— '**ஜ்ஞாநத்வமும்**' என்றுரம்பித்து. கீழ் '**ஜீவேஶ்வர**' என்றுரம்பித்து இரண்டு வாக்யங்களினுல் தர்ம தர்மிகளிரண்டுக்கும் பொதுவான ஸ்வபாவங்களை நிரூபித்தார். '**தர்மபூதஜ்ஞாநத்துக்கு**' என்றுரம்பித்து ஒவ்வொன்றுக்கும் அஸாதா

**யஹியான ஆத்மத்வத்துக்கு ப்ரத்யக்த்வமேற்றம். ஜ்ஞாநத்வமாவது ஸ்வஸந்நிதியில் ப்ரகாசகத்வம், அதாவது தன்னுடையவாகவுமாம், வேறொன்றினுடையவாகவுமாம், ஏதேனுமொன்றினுடைய வ்யவஹாராநுகுண்யத்தைப் பண்ணுகை. ஸ்வயம்ப்ரகாசத்வமாவது தன்னை விஷயீகரிப்பதொரு ஜ்ஞாநாந்தரத்தாலபேக்ஷையறத்தானே ப்ரகாசிக்கை. யஹிஹேத**

---

ரணமான தர்மங்களை நிரூபித்தருளுகிறார். ஆகையினால் புனருக்தியில்லை. ஏற்றம் - அஸாதாரணம். '**ஆத்மத்வத்துக்கு**' என்பதினால் இந்த ப்ரத்யக்த்வம் ஸ்வரூப ப்ரயுக்தம் என்பது தெரிவிக்கப்படுகிறது. கீழ் அருளிச்செய்த ஜ்ஞாநத்வாதிகளை நிரூபித்தருளுகிறார்—'**ஜ்ஞாநத்வம்**' என்றாரம்பித்து. **ஸ்வஸந்நிதியில் ப்ரகாசகத்வம்** - ஏதாவதொன்றை ப்ரகாசம் செய்கை. இத்தையே விவரிக்கிறார்—'**அதாவது**' என்றாரம்பித்து. '**தன்னுடையவாகவுமாம்**' என்பதினால் ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஜ்ஞாநத்வமும், '**வேறொன்றினுடையவாகவுமாம்**' என்பதினால் தர்மபூத ஜ்ஞானத்தினுடைய ஜ்ஞாநத்வமும் நிரூபிக்கப்பட்டது. '**வ்யவஹாராநுகுண்ய**'மாவது அங்கீகரிப்பது, தள்ளுவது, முதலிய கார்யங்களுக்கு யோக்யமாயிருக்கை. அதாவது ஜ்ஞானத்தினால் ஒரு வஸ்து ப்ரகாசிப்பிக்கப்பட்ட பிறகு அதைப்பற்றிய வ்யவஹாரம் உண்டாகிறது என்று தாத்பர்யம். இத்தால் ஜ்ஞான என்பதின் அர்த்தம் '**வ்யவஹாராநுகுண்யத்தைப் பண்ணுகை**' என்பது, மற்றவை வ்யத்யாஸத்தைத் தெரிவிக்கின்றன என்பது த்யோதிதம். **விஷயீகரி**ப்பது-ப்ரகாசம் செய்யக்கூடியது. தர்மபூத ஜ்ஞானம் தனக்கு ஆஶ்ரயமான ஆத்மாவிற்கு ப்ரகாசிக்கிறபடியினாலே ஆதாரமாகிய ஆத்மாவை அபேக்ஷித்த போதிலும் அந்தத் தர்மி ஸ்வரூபம் இதை விஷயீகரிப்பதில்லாமையினாலே இது '**ஜ்ஞாநாந்தரத்தாலபேக்ஷையறத்தானே ப்ரகாசிக்கி**றது' என்றது ஸங்கதம் என்று தாத்பர்யம். '**ஜ்ஞாநாந்தரத்தால்**' என்பதினால் தன்னைத்தானே விஷயீகரிப்பது விலக்கப்படுகிறது. '**விஷயித்வம்**' என்பதற்கு ஏதாவது ஒன்றை ப்ரகாஶம் செய்வது என்றர்த்தமாகையினாலே, அது தன்னையே ப்ரகாஶம் செய்துகொள்ளுகிற ஆத்மாவிற்கும் ஸம்பவிக்கு

**ஜ்ஞாநத்துக்கு விஷயித்வமாவது தன்னை யொழிந்த தொன்றைக் காட்டுகை. ஆத்மாக்களுக்குப் ப்ரத்யக்த்வ மாவது ஸ்வஸ்மை பாஸமாநத்வம், அதாவது தன் ப்ரகாஶத்துக்குத் தான் பலியா யிருக்கை யென்ற படி. ஏதேனுமொரு வஸ்துவின் ப்ரகாஶத்துக்கு பலியென்கிற ஸாமாந்யாகாரத்தைத் தன் ப்ரகாஶத் துக்குத் தான் பலியென்று விஶேஷித்தவாறே ப்ரத்ய**

---

மாகையினல் தர்மபூத ஜ்ஞானத்திற்கு அது அஸாதாரணமாவ தற்காக '**தன்னை யொழிந்ததோன்றை**' என்பதினுல் விவரிக்கப்படு கிறது. **ஸ்வஸ்மை** - தன்னுடைய ப்ரயோஜனத்திற்காக, **பாஸமாநத்வம்** - ப்ரகாஶித்துக் கொண்டிருக்கை. **பலீ** - பலத்தை யனுபவிக்கிறவன். கடம் முதலிய வஸ்துக்கள் ப்ரகாஶிப்பதினுல் உண்டாகிய ப்ரயோஜனத்தை. அந்தக் கடாதிகள் அனுப விக்கிறதில்லை, அப்படிக்கில்லாமல் ஆத்மா நான் என்று தோற்றும்பொழுதுண்டாகும் பலத்தைத்தானே யனுபவிக்கிறது என்று தாத்பர்யம். எல்லா வஸ்துக்களினுடைய ப்ரகாஶத்தை யும் ஆத்மாவே அனுபவிக்கிறபடியினுலே ப்ரகாஶபலியா யிருக்கையாகிற ஆத்மத்வத்திற்கும், கீழ்ச்சொன்ன ப்ரத்யக் த்வத்திற்கும் பேதத்தை நிரூபித்தருளுகிறுர்—'**ஏதேனும்**' என்றுரம்பித்து. '**ஸாமாந்யாகாரத்தை**' என்பதோடு எல்லா ஜீவாத்மாக்களுக்கும் என்று சேர்த்துக்கொள்ளவும். இத்தால் ப்ரகாஶ பலித்வம் எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவாகையி னுல் அதுவே ப்ரத்யக்த்வமாகில் '**அஹம் புத்த்யா பராக்பூதா த் ப்ரத்யக்த்வேநாஹி பித்யதே**' என்று ஸ்ரீ ஆத்மஸித்தியில் அருளிச் செய்திருக்கிறபடியே ப்ரத்யக்குக்கு நான் என்று தோன்றக்கூடிய ஸ்வபாவமுண்டாகையினுல் மற்றஆத்மாக்களும் நான் என்று தோன்றும்படியாகும். அப்படிக்கில்லாமல் அவ ரவர் ஆத்மாக்கள் மாத்திரம் அவரவர்களுக்கு நான் என்று தோன்றுகிறபடியினுல் ப்ரத்யக்த்வமும் ஆத்மத்வமும் வெவ் வேறு என்பது த்யோதிதம். '**விஶேஷித்தவாறே**' என்பதற்குப் பொதுவான ஆகாரத்தை '**தன்**' என்று ஒரு பதத்தைச் சேர் த்து விஶேஷித்தால் என்றர்த்தம். இது தனி ஸ்வபாவமல்ல, அவ ரவருடைய ஆத்மா அவரவர்களுக்கு ப்ரத்யக்கென்று தாத்பர்

**க்ஷமாம். இவ்விஶேஷமில்லாத வஸ்துவுக்கிஸ்ஸாமாந்யமு மித்தோடு வ்யாப்தமான சேதநத்வமுமில்லை. இத் தர்மதர்மிகளிரண்டும் ஸ்வயம்ப்ரகாஶமாயிருந்தாலும் நித்யத்வாதி தர்ம விஶேஷ விஶிஷ்டத்வங்களாலே ஜ்ஞாநாந்தரவேத்யங்களுமாம். தன்னுடைய தர்ம-**

---

யம். இப்படி ப்ரகாஶ பலித்வமும் ப்ரத்யக்த்வமும் ஸாமாந்ய விஶேஷ தர்மங்களாகில் விஶேஷ தர்மமில்லாத இடத்தில் ஸாமாந்ய தர்மமிருக்கலாமே என்னில்? அதற்கு ஸமாதான மருளிச் செய்கிறார்—'இஸ்ஸாமாந்' என்றாரம்பித்து. கறுப்புக்குடமில்லை என்று விஶேஷத்தை இல்லை என்று சொல்லுகிற இடத்தில் ஸாமாந்யமான குடம் இருக்கக்கூடும், அதைப்போல அல்ல இங்கு என்று தாத்பர்யம். ஒவ்வொருவனும் தன்னையறிந்துகொண்டு தனக்கு வேண்டியதற்காகச் சில வஸ்துக்களை அங்கீகரிப்பதும் வேண்டாதவஸ்துக்களை நிராகரிப்பதும் செய்யவேண்டு மாகையினாலே தன்னையறியாத ஒருவனுக்கு இவ்விரண்டும் ஸம்பவிக்காதாகையினாலும், இதர வஸ்துக்களினால் உண்டாகும் ப்ரகாஶத்தை யனுபவிக்கும்பொழுது தன்னைத்தான் அறிந்துகொண்டே யாகவேண்டுமாகையினாலும் இந்த விஶேஷம் ஸாமாந்யத்திற்குக் காரணமாகையினால் விஶேஷ மில்லாதவனுக்கு ஸாமாந்யமும் இல்லை என்று தாத்பர்யம். **இத்தோடுவ்யாப்தமான** — இது இருக்கிற இடத்திலே இருக்கக்கூடியதான. இவைகளுக்குச் சில ஸ்வபாவங்களோடு சேர்த்தறியும்பொழுது அஸ்வயம்ப்ரகாஶத்வமும் உண்டென்றருளிச் செய்கிறார்—'**இத்தர்ம**' என்றாரம்பித்து. **தர்மதர்மி** - தர்மபூத ஜ்ஞானமும், ஆத்ம ஸ்வரூபஜ்ஞானமும். '**ஸ்வயம் ப்ரகாஶமாயிருந்தாலும்**' என்பதோடு ஏகத்வம், அனுகூலத்வம், முதலிய ஸ்வபாவங்களோடு என்று சேர்த்துக்கொள்ளவும். '**நித்யத்வாதி**' என்கிற இடத்தில் '**ஆதி**' ஶப்தத்தினால் தேஹாதிரிக்தத்வமும், அதீதத்வாதிகளும் (முன்பு கழிந்தமை) குறிக்கப்படுகின்றன. இத்தால் ஶாஸ்திரத்தாலே தேஹாதிரிக்த ஜ்ஞானம் பிறக்கவேண்டு மென்பதற்கு விரோதமில்லை என்பதும் த்யோதிதம். ஒரு ஜீவனுக்குத் தர்மபூத ஜ்ஞானம் ஒன்றேயாயிருக்க அதுஜ்ஞாநாந்தர வேத்யமாகும்படியை நிரூபித்தருளுகிறார்—'**தன்னுடைய**' என்று

பூதஜ்ஞானம் தனக்கு ஜ்ஞாநாந்தரவேத்யமாம்போது ப்ரஸரணபேதாத்தாலே ஜ்ஞாநாந்தரவ்யபதேசம்.

அசேதன நிரூபணம்.

த்ரவ்யாசேதநங்களும் பரருக்கே தோன்றக் கடவனவாயிருக்கும். அசேதநத்வமாவது ஜ்ஞாநாஶ்ரயமன்றிக்கே யொழிகை. பிறருக்கே தோன்றுகையாவது தன் ப்ரகாஶத்துக்குத் தான் ஸாக்ஷியன்றிக்கே யொழிகை. இவையிரண்டும் தர்மபூதஜ்ஞாநாதிகளுக்கும் துல்யம். த்ரவ்யாசேதநங்களென்றெடுத்தவற்றில் ப்ரக்ருதியும் காலமும் ஜடங்கள்.

ஶுத்தஸத்த்வத்தின் ஸ்வயம் ப்ரகாஶத்வம்.

ஶுத்தஸத்த்வமான த்ரவ்யத்தையும் அஜடமென்று சிலர் சொல்லுவார்கள். அஜடத்வமாவது ஸ்வயம்ப்ரகாஶமன்றிக்கே யிருக்கை. ஸவஜ்ஞாநாதிவ்யா

---

ரம்பித்து. ப்ரஸரணபேதாத்தாலே - இந்திரியங்களின் வழியாகப் பரவுவதின் வ்யத்யாஸத்தினாலே. 'பேதாத்தாலே' என்பதினால் ஜ்ஞானம் வெவ்வேறானதினாலல்ல, அதின் பரவுதலில் மாத்திரம் பேதம் என்பது தெரிவிக்கப்படுகிறது. ஜ்ஞாநாந்தரவ்யபதேசம்- ஜ்ஞாநாந்தரம் என்று சொல்லுகிறது.

அசேதன ஸ்வரூபங்களை நிரூபித்தருளுகிறார்—'த்ரவ்ய' என்றாரம்பித்து. பரருக்கே - அயலாருக்கே. ஏகாரத்தினால் இதரர்களுக்குத்தர்மபூதஜ்ஞானத்தினால் ப்ரகாஶம்செய்யக்கூடிய ஆத்மா விலக்கப்படுகிறது. எப்படி யென்னில்—அவைகள் பரருக்குத் தோன்றினாலும் தங்கள் தங்கள் ஆத்மா தங்கள் தங்களுக்கும் தோன்றுகிறபடியினால். ஜ்ஞாநாஶ்ரயமன்றிக்கேயொழிகை- தர்மபூத ஜ்ஞானத்திற்கு ஆஶ்ரயமாகாமலிருக்கை. இந்த அசேதனத்வம், பராக்த்வம், இரண்டும் தர்மபூத ஜ்ஞானத்திற்கும் உண்டென்றருளிச் செய்கிறார்—'இவை இரண்டும்' என்றாரம்பித்து. ஶுத்தஸத்த்வமான வஸ்துவைப்பற்றி அபிப்ராயபேதத்தை நிரூபித்தருளுகிறார்—'ஶுத்தஸத்த்வ' என்றாரம்பித்து. 'சிலர் சொல்லுவார்கள்' என்பதற்கு அப்படிச் சொல்லுமவர்களுக்கு ஸ்ரீ பாஞ்சராத்திரஶாஸ்திரம் முதலியவை விரோதிக்கும் என்று தாத்பர்யம். ஸ்வயம்ப்ரகாஶமன்றிக்கேயிருக்கை- தர்மபூத ஜ்ஞானத்தைக்

மர்ஶம் பண்ணினவர்கள் ஜ்ஞாநத்ருஷ்டத்வம் ஶாஸ்த்ரஸித்த மாகையாலே ஶுத்தஸத்த்வத்ரவ்யத்தை ஸ்வயம்ப்ரகாஶ மென்பார்கள். இப்படி ஸ்வயம்ப்ரகாஶமாகில் ஸம்ஸாரி களுக்கு ஶாஸ்த்ரவேத்யமாக வேண்டாதே தானே தோன்ற வேண்டாவோ வென்னில்? ஸர்வத்ருக்க ளுடையவும் ஸ்வரூபமும் தர்மபூதஜ்ஞாநமும் ஸ்வயம் ப்ரகாஶமாயிருக்க ஸ்வரூபம், தனக்கே ஸ்வயம்ப்ரகாஶ மாய் வேறெல்லார்க்கும் ஜ்ஞாநாந்தரவேத்யமானாற்போ லவும், தர்மபூதஜ்ஞாநம் ஸ்வாஶ்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகா ஶமாயிதரருக்கு ஸ்வயம்ப்ரகாஶமல்லாதாப்போலவு மிதுவும் நியதவிஷயமாக ஸ்வயம்ப்ரகாஶமானால் விரோ

---

கொண்டே ப்ரகாஶம் செய்யவேண்டியதாயிருக்கை. **'ஸர்வஶாஸ்த்ர'** என்பதினால் 'ஜ்ஞாநாநந்தமயோ லோக:' இத்யாதி ப்ரமாணங்கள் விவக்ஷிதங்கள். **'லோக'** ஶப்தத்தினால் 'அந்த லோகம் ஜ்ஞான ஸ்வரூபம்' என்றர்த்தமுள்ள ரஹஸ்யாம்நாயவாக்யம் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. **பராமர்ஶம் பண்ணினவர்கள்** - ப்ரமாணங்களுக்கு அனுகுணமாக யுக்திகளைக் கொண்டு விசாரம் பண்ணினவர்கள். இப்படி ஸ்வயம் ப்ரகாஶத்வம் ஶுத்தஸத்வத்திற்கு அங்கீகரிக்கில் யுக்திகளுக்கு வரும் விரோதங்களை ஆக்ஷேபித்துக்கொண்டு அவைகளைப் பரிஹரித்தருளுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. **'ஸம்ஸாரிகளுக்கு'** இத்யாதியினால் வஸ்துவின் ஸ்வபாவமாகில் சிலருக்கு ஸ்வயம் ப்ரகாஶமாயும், சிலருக்கு அஸ்வயம்ப்ரகாஶமாயும் தோன்ற வேண்டியதில்லையே? எல்லாருக்கும் ஸ்வயம்ப்ரகாஶமாகில் ஸம் ஸாரிகளுக்கு ஶாஸ்திரம் கொண்டே அறிய வேண்டியதா யல்லாமல் ஸ்வயமே தோன்ற வேண்டுமே? என்று ஶங்கை யின் தாத்பர்யம் த்யோதிதம். இதற்கு ஸ்வயம் ப்ரகாஶமா யிருந்தாலும் சில வஸ்துக்களுக்கு அஸ்வயம்ப்ரகாஶமா யிருக்கை உண்டென்று ஸத்ருஷ்டாந்தமாகப் பரிஹாரமருளிச் செய்கிறார்—'**ஸர்வத்ருக்களுடையவும்**' என்றாரம்பித்து. ஈஶ்வர நித்யமுக்தர்கள் எல்லா வஸ்துக்களையும் எப்பொழுதும் ப்ரத்யக்ஷமாக அறியும் ஸ்வபாவமுடையவர்க ளாகையினாலும், ஶுத்தஸத்வம் அவர்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு அஸ்

யமில்லை. 1 ‘யோ வேத்தி யுகபத்ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: । தம் ப்ரணம்ய ஹரிம் ஶாஸ்த்ரம் ந்யாயதத்த்வம் ப்ரவக்ஷ்யதே ॥’ என்கிறபடியே யுகபதேவ ஜ்ஞானத்தாலே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரித்துக்கொண்டிருக்கிற ஈஶ்வரனுக்கு ஶுத்தஸத்த்வமும் ஸ்வயம்ப்ரகாஶமாயிருக்கிறபடி யெங்ஙனே யென்னில்? இவனுடைய

---

வயம் ப்ரகாஶமாயிருப்பதினாலும் இதற்கு ஸ்வயம் ப்ரகாஶத்வம் அங்கீகரிப்பது வ்யர்த்தமன்றோ என்று ஶங்கித்துக்கொண்டு ஸமாதான மருளிச் செய்கிறார்—‘**யோ வேத்தி**’ என்றாரம்பித்து. **ய:** - எந்தப் பகவான், **ஸர்வம்** - எல்லா வஸ்துக்களையும், **யுகபத்** - ஒரே காலத்தில், **ஸதா** - எப்பொழுதும், **ஸ்வத:** - ஸ்வபாவத்தினாலேயே, **ப்ரத்யக்ஷேண** - ப்ரத்யக்ஷமாக, **வேத்தி** - அறிந்துகொள்ளுகிறாரோ, **தம்** - அப்படிப்பட்ட, **ஹரிம்** - பகவானை, **ப்ரணம்ய** - ஸேவித்து, **ந்யாயதத்த்வம்** - ந்யாயதத்வம் என்கிற, **ஶாஸ்த்ரம்** - ஶாஸ்திரத்தை, **ப்ரவக்ஷ்யதே** - சொல்லுகிறோம். இதில் முதல் பாதி ஶ்லோகமே இவ்விடத்தில் விவக்ஷிதமான அர்த்தத்திற்கு ப்ரமாணமாய் உதாஹரிக்கப்பட்டது. இது இன்ன க்ரந்தத்தில் இன்னாரால் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது என்று இதின் ப்ராமாண்யத்தைத் தெரிவிப்பதற்காக மேல்பாதியும் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. ‘**எங்ஙனே யென்னில்**’ என்பதற்குப் பகவானுடைய தர்மபூத ஜ்ஞானம் எப்பொழுதும் எல்லா வஸ்துக்களையும் விஷயீகரிக்கிறது என்பதும், ‘**ஸ்வயம் ப்ரகாஶத்வ**மாவது தன்னை **விஷயீகரி**ப்பதொரு **ஜ்ஞானாந்தர**த்தாலபேக்ஷையற **ப்ரகாஶி**க்கை’ என்று கீழ் லக்ஷணம் அருளிச் செய்யப்பட்டிருப்பதும் விரோதிக்கிறபடியினால் இவை ஸங்கதமாகும்படி எப்படி? என்று தாத்பர்யம். பகவானுடைய ஸ்வரூபம் ஸர்வத்தையும் விஷயீகரிக்கிற தர்மபூத ஜ்ஞானத்திற்கு விஷயமாயிருக்க, அதுக்கு ஸ்வயம் ப்ரகாஶத்வம் ஒப்புக்கொள்ளுவதைப்போல இங்கும் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று ஸமாதான மருளிச் செய்கிறார்—‘**இவனுடைய**’ என்றாரம்பித்து. அதாவது ப்ரயோஜனமில்லை என்கிற காரணத்தைக் கொண்டு ப்ரமாணங்களினாலேற்பட்ட ஸ்வயம் ப்ரகா

---

1 ஸ்ரீமந் ந்யாய தத்வம் - மங்கள ஶ்லோகம்,

**தர்மபூதஜ்ஞாநம் திவ்யாத்மஸ்வரூபம் முதலாக ஸகலத்**
**தையும் விஷயீகரியா நிற்க இத்திவ்யாத்மஸ்வரூபம்**
**ஸ்வயம்ப்ரகாஶமாயிருக்கிறாப்போலே இதுவும் ஸ்வயம்**
**ப்ரகாஶமாயிருக்கலாம். இப்படி நித்யருக்கும்**
**முக்தரும். விஷயப்ரகாஶகாலத்திலே தர்மபூதஜ்ஞா**
**நம் ஸ்வாஶ்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகாஶமானாற்போலே**
**முக்தருக்கும் அவ்வவஸ்தையிலே இது ஸ்வயம்ப்ரகாஶமா**
**னால் விரோதமில்லை, தர்மபூதஜ்ஞாநத்தினுடைய**

---

ஶத்வத்தை நிஷேதிக்கை அநுசிதம் என்று தாத்பர்யம். திவ்யாத்ம ஸ்வரூபம் வேறு சில தர்மங்களோடு சேர்ந்து தோன்றும் பொழுது தர்மபூத ஜ்ஞானத்தினல் விஷயீகரிக்கப்பட்டபோதிலும், 'நான்' என்று தோன்றும்போது ஸ்வயம் ப்ரகாஶமாய்த் தோன்றுவதைப்போல இந்த ஶுத்தஸத்வமும் ஸ்வரூபேண தோன்றும்பொழுது ஸ்வயம் ப்ரகாஶமாய்த் தோன்றுகிறபடியினல் விரோதமில்லை என்று ஸ்ரீ ஸாராஸ்வாதிநியில் வ்யாக்யாதம். இப்படிப் புருஷபேதத்தினலே ஸ்வயம் ப்ரகாஶமாகவும் அஸ்வயம் ப்ரகாஶமாகவும் இருப்பது ஸங்கதமானலும் ஒரே ஆத்மாவுக்கு பத்த தஶையில் ப்ரகாஶியாமல் முக்த தஶையில் ஸ்வயம் ப்ரகாஶமாவது ஸங்கதமாகுமோ வென்னில்? அதற்கு ஸமாதான மருளிச் செய்கிறர்—'**விஷயப்ரகாஶ**' என்றாரம்பித்து. **அவ்வவஸ்தையிலே** - முக்தாவஸ்தையிலே. இப்படி ஸ்வயம் ப்ரகாஶத்வம் வஸ்துவுக்கு ஸ்வாபாவிகமான தர்மமாக இருந்தால் சில காலத்தில் இருந்து சில காலத்தில் இராமலிருப்பது ஸங்கதமாகுமோ வென்னில்? ஸ்வயம் ப்ரகாஶமாயிருந்தாலும் தானே தன்னைத் தெரிவித்துக்கொள்ளக்கூடிய ஶக்தி இவனுடைய கர்மங்களினல் தடுக்கப்பட்டிருக்கிறது என்று ஸத்ருஷ்டாந்தமாக நிரூபித்தருளுகிறர்—'**தர்மபூதஜ்ஞாநத்தினுடைய**' என்றாரம்பித்து. தர்மபூத ஜ்ஞானம் பத்ததஶையில் சில ஸமயங்களில் ஸ்வயம் ப்ரகாஶமாய்ச் சில காலங்களில் அஸ்வயம் ப்ரகாஶமாய் இருக்கிறபடியினலே ஸ்வயம் ப்ரகாஶத்வம் ஸ்வபாவமென்றும், கர்மங்களினல் சில ஸமயத்தில் மறைக்கப்படுகிறதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஶுத்தஸத்வ த்ரவ்யமோ அப்படிக்கில்லாமல் பத்ததஶை முழுவதும் அஸ்வயம் ப்ரகாஶமாய்,

**ஸ்வாபாவிகப்ரகாச ஶக்தி**யானது விஷய**ப்ரகாச**மில்லாத **கால**த்தில் **கர்ம**விசேஷங்களாலே **ப்ரதிபத்தையா**னாற்போலே **ஶாஸ்த்ர**த்தினுடைய **ஸ்வாபாவிகப்ரகாச ஶக்தி**யும் **ஸம்ஸாரத்தி**ல் **ப்ரதிபத்தை**யாகையாலே **ஶாஸ்த்ர**மும் **ஸர்வர்க்கு ப்ரகாசி**யாதொழிகிறது.

> **தியஸ்ஸ்வயம்ப்ரகாசத்வம் முக்தௌ ஸ்வாபாவிகம் யதா |**
> **பத்தே கதாசித்ஸம்ருத்தம் ததா ஶாஸ்த்ரேऽபி நியம்யதே ||**

இவ்வளவு **ஸர்வஸ்யாஜ்ஞாநவத்தி விகாஸிஸ்வத்து**

---

முக்த தசையில் மாத்திரம் ஸ்வயம் ப்ரகாஶமாய்த் தோன்றுகிற படியினலே இந்த உதாஹரணம் அஸங்கதமாகாதோ வென்னில்? நிஷ்க்ருஷ்டமான ஸமாதானத்தை ஒரு காரிகாரூபமாக வருளிச் செய்கிருர்—'**தியஃ**' என்றுரம்பித்து.

ப-ரை] **முக்தௌ** - மோக்ஷதசையில், **தியஃ** - தர்மபூத ஜ்ஞானத்தினுடைய, **ஸ்வாபாவிகம்** - ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டதான, **ஸ்வயம் ப்ரகாஶத்வம்** - ஸ்வயம் ப்ரகாஶத்வமானது, **பத்தே**-பத்த ஜீவர்களிடத்தில், **கதாசித்** - சிலஸமயத்தில், **ஸம்ருத்தம்.** (எப்படி) தடுக்கப்பட்டிருக்கிறதோ, **ததா**-அப்படியே, **ஶாஸ்த்ரேऽபி** - இந்த ஶாஸ்த்ரஸத்வத்திலும், **நியம்யதே** - நியமம் சொல்லப்படுகிறது. அதாவது மோக்ஷதசையில் தர்மபூத ஜ்ஞானத்திற்கு ஸ்வயம் ப்ரகாஶத்வம் உண்டானதற்குப் பிறகு அது ஒருக்காலும் தடுக்கப்படுவதில்லை, அதுவே ஸ்வபாவத்திலேற்பட்டது, பத்ததசையில் அதின் ஸ்வயம் ப்ரகாஶத்வம் மாறிமாறி வருகிறது, ஆகையினல் ஸ்வபாவஸித்தமாய்த் தடங்கலில்லாத ஸ்வயம் ப்ரகாஶத்வம் பத்ததசையில் ஒருகாலத்திலும் உண்டாகாமல் முக்ததசையில் மாத்திரம் உண்டாவதைப்போல ஶாஸ்த்ரஸத்வத்தின் ஸ்வயம் ப்ரகாஶத்வமும் பத்த தசையில் ஒரு பொழுது முண்டாகாமல் முக்த தசையில் ஸம்பவிக்கலாம் என்று தாத்பர்யம்.

ஆகிலும் சில ஸமயத்தில் ஸ்வயம் ப்ரகாஶமாயிருப்பது சில ஸமயத்தில் அஸ்வயம் ப்ரகாஶமாயிருப்பதாகிற விருத்தமான அம்ஶங்கள் கூடுமோ வென்னில்? ஸமாதானமருளிச்செய்கிருர்— 'இவ்வளவு' என்றுரம்பித்து. இவ்வளவு **ஸர்வஸ்யாஜ்ஞாநவத்தி**-

**க்கு விரோதமன்று. ஆகையாலே ப்ரமாணப்ரதிப ந்நார்த்தத்துக்கு யுக்திவிரோதஞ்சொல்ல வழியில்லை. இங்ஙனன்றிக்கே உபசாரத்தாலே நிர்வஹிக்கப் பார்க்கிலாத்மஸ்வரூபத்திலும் ஜ்ஞாநாதி ஶப்தங்களை உபசாரத்தாலே ப்ரயோகங்களாக்கலாம். ஸ்வயம் ப்ரகாஶத்துக்கு ரூபரஸாதி குணங்களுமவையடியாகவந்த ப்ருதிவ்யாதிவிபாகமும் பரிணாமாதிகளுங் கூடுமோ வென்கிற சோத்யமும் தர்மபூதஜ்ஞாநத் துக்கும் தர்மிஜ்ஞாநத்துக்குமுண்டான வைஷம்யங்**

---

அல்பமான இப்படிப்பட்ட வெவ்வேறு அவஸ்தைகளையடைகை, **விகாரித்ரவ்யத்துக்கு** - (மண்டபம், கோபுரம், முதலிய) மாறுதல்களை யடையக்கூடிய ஶுத்தஸத்வ த்ரவ்யத்திற்கு. இத்தால் ஸ்வரூபத்திலேயே விருத்தங்களான பெருத்தல் சுருங்குதல் முதலிய மாறுதல்களை யடையக்கூடியதான ஶுத்தஸத்வ த்ரவ்யத்திற்கு, நித்யவஸ்துக்களுக்குக்கூட ஸம்பவிக்கக் கூடியதான ஸ்வபாவத்தில் மாறுதலாகிய இந்த மாறுதல்கள் ஸம்பவிக்கலாம் என்பது தெரிவிக்கப்படுகிறது. கீழ்ச்சொல்லிய அர்த்தங்களைச் சேர்த்து நிகமனம் செய்தருளுகிறார்— '**ஆகையால்**' என்றாரம்பித்து. '**சொல்லவழியில்லை**' என்பதற்கு யுக்தி விரோதத்தினாலே ப்ரமாணப்ரதிபந்நமான அர்த்தத்தை அந்யதாகரிப்பது அஸம்பாவிதம், அப்படி விரோதம் சொல்லுவதற்கு யுக்தியும் கிடையாது என்று தாத்பர்யம். **இங்ஙனன்றிக்கே**- கீழ்ச் சொல்லிய ந்யாயத்தினாலே ப்ரமாணங்களுக்கு அந்யதாஸித்தியும், யுக்தி விரோதமுமில்லாமலிருக்க. **உபசாரத்தாலே நிர்வஹிக்கப்பார்க்கில்** - ஶுத்த ஸத்வத்திற்கு ஸ்வயம்ப்ரகாஶத்வத்தை ப்ரதிபாதிக்கிற வசனங்களுக்கு ஔபசாரிகமாக அர்த்தம் சொல்லில். '**ஸ்வயம் ப்ரகாஶத்துக்கு**' என்றது ஹேதுகர்ப்ப விஶேஷணம், அதாவது ஸ்வயம் ப்ரகாஶமாகையினாலே என்று தாத்பர்யம். அதாவது ஸ்வயம் ப்ரகாஶமான தர்மபூத ஜ்ஞானத்திற்கு ரூப ரஸாதி குணங்களும் ப்ருதிவ்யாதி விபாகங்களுமில்லையே, இதற்கு மாத்திரம் ஸம்பவிக்குமோ என்று ஶங்கையின் தாத்பர்யம். '**வைஷம்யங்களை**' என்பதற்குத் தர்மதர்மிகள் இரண்டும் ஜ்ஞானமாயிருக்க ஒன்றுக்கு ப்ரத்

களை ப்ரதிவசநியாகக்கொண்டுப் ப்ரமாணபலத்தாலே பரிஹ்ருதம். இப்படி ஸ்வயம்ப்ரகாசமான சுத்தஸத்வத்ரவ்யத்தை ஜ்ஞாத்ருத்வமில்லாமையாலே த்ரிவிதாசேதநங்களென்று சேரக்கோத்தது. இவ்வசேதநங்கள் மூன்றுக்கும் ப்ரவ்ருத்தியாவது ஸம்ஶ்லேஷவிஶ்லேஷணாதிபேதங்களான விசித்ரபரிணாமாதிகள்.

இவற்றில் த்ரிகுணத்ரவ்யத்துக்கு ஸ்வரூபவிசேஷம் குணத்ரயாஶ்ரயத்வம். ஸததபரிணாமஶீலமான

**த்ரிகுணத்ரவ்ய நிரூபணம்.** இத்த்ரவ்யத்துக்கு ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்கள் ந்யூநாதிக்யம் ஸமமானபோது ப்ரளயம்.

---

யக்த்வம், ஒன்றுக்கு பராக்தவம், விஷயித்வம், ஸ்வஸ்மைபாஸமானத்வம், இத்யாதி வ்யத்யாஸங்களை என்றர்த்தம். **ப்ரதிவசநியாகக்கொண்டு** - பதில் ஸமாதானமாக வைத்துக்கொண்டு, **ப்ரமாணபலத்தாலே**-ப்ரமாணத்தில் சொல்லியிருப்பதினாலே. ப்ருதிவ்யாதி விபாகம் அஸம்பாவிதம் என்கிற ஶங்கைக்கு ஸ்வயம் ப்ரகாஶமான வஸ்துக்களுக்கே ஒன்றுக்கொன்று வ்யத்யாஸமான ஸ்வபாவாதிக ளிருப்பதைப்போல இதுவும் ஸம்பாவிதம். ப்ரமாணங்கள் இந்தவிபாகம் உண்டென்று சொல்லுகிறபடியினால் இவை ஒப்புக்கொள்ளப்படுகிறது என்று தாத்பர்யம். இப்படி ஸ்வயம்ப்ரகாஶமான ஶுத்தஸத்வத்தை மாகிய ப்ராக்ருதி, காலம், இவைகளோடு சேர்த்தருளிச்செய்ததற்குக் காரண மருளிச் செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. **ஜ்ஞாத்ருத்வ** மில்லாமையாலே - ஜ்ஞானத்திற்கு ஆஶ்ரயமல்லாமையாலே. இது ஜடமல்லவாகிலும் ஜ்ஞானாஶ்ரயத்வ மில்லாமையினால் அசேதன மென்னக் குறையில்லை என்று தாத்பர்யம். அசேதனங்களென்று சொன்னதினாலேயே ஸ்வரூபமும், அது நித்யாநித்ய வஸ்துக்களுக்கு ப்ரமாண ப்ரதிநியதமாயிருக்கும் என்பதினால் ஸ்திதியும் அருளிச்செய்யப்பட்டபடியினாலே ப்ரவ்ருத்தியை யருளிச் செய்கிறார்—'**இவ்வசேதநங்கள்**' என்றாரம்பித்து. '**பரிணாமாதி**' என்கிற இடத்தில் '**ஆதி**' ஶப்தத்தினால் உத்பத்தி விநாஶங்கள் க்ரஹிக்கப்படுகின்றன. ப்ரக்ருதியின் ஸ்வரூபாதிகளை நிரூபித்தருளுகிறார்—'இவற்றில்' என்றாரம்பித்து. **ஸததபரிணாமஶீ**

விஷமமானபோது ஸ்ருஷ்டிஸ்திதிகள். குணவைஷம்யமுள்ள ப்ரதேசத்திலே மஹதாதி விகாரங்கள். இதில் விக்ருதமல்லாத ப்ரதேசத்தையும் விக்ருதமான ப்ரதேசத்தையுங்கூட ப்ருக்ருதிமஹதஹங்காரதந்மாத்ர பூதேந்த்ரியங்களென்றிருபத்தினலு தத்வங்களாக சாஸ்த்ரங்கள் வகுத்துச் சொல்லும். சில விவக்ஷா விசேஷங்களாலே யோரொருவிடங்களிலே தத்வங்

---

ருமான - எப்பொழுதும் விகாரத்தை யடையும் தன்மை யுடைய. இத்தால் ப்ரளய தசையிலும் மூன்று குணங்களின் ஸாம்யத்தையுடைய அவஸ்தைகள் மாறிவருகின்றன என்பது தெரிவிக்கப்பட்டது. விஷமமானபோது - ஏதாவது ஒரு குணம் அதிகப்பட்டு மற்றவை குறையும்பொழுது. 'குண வைஷம்யமுள்ள ப்ரதேசத்திலே' இத்யாதிக்கு எங்கும் நிறைந்ததான ப்ரக்ருதியில் எந்தப் பாகத்தைக்கொண்டு ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று பகவத் ஸங்கல்பம் உண்டாகிறதோ அந்த இடத்தில் குணங்களின் வ்யத்யாஸமுண்டாகி மஹாந் என்கிற தத்வம் உண்டாகிறது, இப்படியே மற்ற அஹங்காராதிகளிலும் என்று திருவுள்ளம். ஆகையினால் ப்ரக்ருதி முழுவதும் மஹத்தாகமாறி, அப்படியே மற்றவைகளும் மற்றவைகளாக மாறிவந்தால் பஞ்சபூதங்களின் பஞ்சீகரணாதிகளுக்கு ப்ரஸக்தி இல்லாமற்போவதுடன், தத்வங்கள் இருபத்திநாலென்று சொல்லுவதும் ஒரே தத்வமே நிற்கிறபடியினால் ஸம்பவிக்காதே என்கிற சங்கை கீழ்ச் சொல்லிய காரணத்தினாலே பரிஹரிக்கப்பட்டதென்று நிரூபித்தருளுகிறார்— 'இதில்' என்றாரம்பித்து. தந்மாத்ர - என்றது சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்த, என்று ஐந்துவகை. 'பூத' என்றது ப்ருதிவீ, அப்பு, தேஜஸ்ஸு, வாயு, ஆகாசம், என ஐந்துவகை. 'இந்த்ரியங்கள்' என்றது கண், மூக்கு, நாக்கு, தோல், காது ஆகிய ஜ்ஞாநேந்திரியங்கள் ஐந்து; கால், கை, வாய், பாயு, உபஸ்தம் என ஐந்து கர்மேந்திரியங்கள்; மனது ஒன்று; ஆகப் பதினொன்று. 'சில விவக்ஷாவிசேஷங்களாலே' என்பதற்கு அக்ஷரம், தமஸ்ஸு, என்று சொல்லப்படுகிற ப்ரக்ருதியின் அவஸ்தைகள் மிகவும் ஸூக்ஷ்மமான வ்யத்யாஸத்

களை யேறவுஞ் சுருங்கவுஞ் சொல்லா நிற்கும். இத் தத்வங்களிலவாந்தர வகுப்புக்களு மவற்றிலபிமாநிதே வதைகளு மவ்வோவுபாஸநாதிகாரிகளுக் கறிய வேணும். முமுக்ஷுவுக்கவற்றிற்காட்டில் வ்யாவ்ருத்தி யறிகை இங்கு நமக்கு அபேக்ஷிதம். இவையெல்லாம் ஸர்வேஶ்வரனுக் கஸ்த்ரபூஷணாதி ரூபங்களாய் நிற்கும் நிலையை—

புருடன் மணிவரமாகப் பொன்றா மூலப்
பிரகிருதி மருவாக மான்றண்டாகத்
தெருண்மருள் வாண்மறைவாக வாங்காரங்கள்
சார்ங்கஞ்சங்காக மனந்திகிரியாக
இருடிகங்களைந்துஞ் சரங்களாக
விருபூதமாலை வனமாலையாகக்
கருடனுருவா மறையின்பொருளாங் கண்ணன்
கரிகிரிமேனின்றனைத்துங் காக்கின்றானே 41

---

தோடு கூடினவைகளாகையினாலே அவைகளைத் தனித்துச் சொல்லுவது, சொல்லாததாகிய தாத்பர்ய பேதங்களாலே என்றர்த்தம். **சொல்லா நிற்கும்** - ஶாஸ்திரங்களில் சொல்லும். **அவாந்தர வகுப்புக்களும்**-உட்பிரிவுகளும். **அவ்வோ உபாஸநாதிகாரிகளுக்கு** - அந்தந்தத் தத்வங்களை உபாஸிக்கிறவர்களுக்கு. ஆகில் இங்கு அவைகளை நிரூபிப்பதற்குக் காரணத்தையருளிச் செய்கிறார்—'**முமுக்ஷுவுக்கு**' என்றாரம்பித்து. **நமக்கு** - முமுக்ஷுக்களாய்,அகிஞ்சனர்களாயாகையினாலே ப்ரபத்தியிலதிகாரியான நமக்கு. '**அபேக்ஷிதம்**' என்பதற்கு அதற்குபயுக்தங்களான சேதனத்வாசேதனத்வாதிகளான ஆகாரங்களை யறிகை ஆவஶ்யகம் என்று தாத்பர்யம். இப்படியாகில் அசேதனம், சேதனம், என்கிற விபாகம் பண்ணினதினாலேயே ஆத்மாவிற்கு ப்ரக்ருதியை விட பேதம் ஏற்படுகிறபடியினால் ப்ரக்ருதியின் பரிணாமங்களை இருபத்திநாலு என்று கணக்கிடுவதற்குக் காரணம் அவைகள் பகவானுக்குச் அஸ்திரங்களாகவும் பூஷணங்களாகவும் இருக்கின்றன என்று அஸ்திர பூஷணாத்யாயங்களில் சொல்லப்படுகிறபடியினாலே அப்படிப்பட்ட பகவானுடைய பெருமையை

அறிவதற்காக இங்கு நிருபிக்கப்பட்டிருக்கிறது என்று திருவுள்ளம்பற்றி அதை ஸுலபமாயறிவதற்காக ஒருபாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிருர்—‘ இவை யெல்லாம்’ என்ருரம்பித்து.

ப - ரை] **புருடன்** - ஜீவாத்மா, **மணிவரமாக** - கௌஸ்துப மணிரூபமாகவும், **பொன்ரு**-நஸிக்காத, **மூல ப்ரக்ருதி, மருவாக**-ஸ்ரீவத்ஸம் என்கிற மருவாகவும், **மான்** - மஹத், **தண்டாக**-கதையாக, மஹத்தை புத்தி தத்வமென்றும் வ்யவஹரிப்பதுண்டு, **தெருள்** - ஜ்ஞானம், **மருள்** - அஜ்ஞானம், **வாள்** - கத்தியாகவும், **மறைவு** - அதின் உறையாகவும், **ஆங்காரங்கள்** - ஸாத்விகாஹங்காரமும், தாமஸாஹங்காரமும், **சார்ங்கம் சங்காக** - சார்ங்கமாகவும், சங்காகவும், இங்கு ராஜஸாஹங்காரத்தை யருளிச்செய்யாதது அது தனித்தொன்றுக்குக் காரணமாகாமல் இந்த இரண்டு அஹங்காரங்களுக்கும் ஒத்தாசையா யிருக்கிறதென்று ஶாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பதினுல். ‘**ரயாம்ஶஸம்வாஸிதஷாயநாந்வபூர்ணோ:**’ என்கிற ஸ்ரீஸ்தோத்திரரத்ன ஸ்லோகத்திற்கு வ்யாக்யானம் செய்தருளுமிடத்தில் ‘**ரயாம்ஶாதய:வம்ஸதேநஹ ஸதாமஸாஹங்கார ஸ்ருஷ்டேஃ ஜ்ஞாநவ்ருத்தி தத்வ ஸாத்த்விகாஹங்காராவிர்போகேந வ்ருத்திஃ**’ என்று நிருபித்திருப்பது இங்கனுஸந்தேயம். **மனம்** - மனது, **திகரியாக** - சக்கரமாக, **ஈரைந்தும்** - ஜ்ஞானேந்திரியமைந்து, கர்மேந்திரியமைந்து என்று பிரிக்கப்பட்ட, **இருடீகங்கள்** - இந்திரியங்கள், **ங்களாக** - பாணங்களாகவும், **இரு** - ஸ்தூல ஸூக்ஷ்மமாக இருவகையான, **பூதமாலை** - பூதங்களின் வரிசை, அதாவது தந்மாத்ரைகள் ஸூக்ஷ்ம பூதங்கள், ப்ருதிவ்யாதிகள் ஸ்தூலபூதங்கள் என்று தாத்பர்யம், **வனமாலையாக** - வைஜயந்தி என்று சொல்லப்படுகிற வனமாலையாகவும், இதற்குப் ‘ **பொருளாம்** ’ என்பதோடந்வயம். **கருடனுருவாம்** - கருடனுக்குச் ஶரீரபூதங்களான, இவ்விடத்தில் ‘**நேத்ரம் காயத்ரம் த்ரிவ்ருதிதி ச ஶிரோ நாமதேயம் யஜூம்ஷி சந்தாம்ஸ்யங்கானி திஷ்ண்யாஸ்ஸிரஜநிஶபாஃ விக்ரஹோ வாமதேவ்யம் । யஸ்ய ஸ்தோமாத்மநாஸௌ ப்ருஹதிதர கருத் யஜ்ஞாயஜ்ஞீய புச்சஃ ஸர்வஸ்வம் நஃ ப்ரஸீதன் ஶ்ருதிஶிகர ஶிகராஹிஷ்டிதாத்மா கருத்மாந் ॥**’ என்கிற ஸ்ரீ கருடபஞ்சாஶத் ஸ்லோகம் அனுஸந்தேயம். **மறையின்** - வேதத்திற்கு

என்கிற கட்டளையிலே யறிகை யுசிதம். இருபத்தினலு தத்வங்களுக்கு ஸங்க்யாநமும் ஸ்வரூபவிசேஷமவ்வோலக்ஷணங்களாலே விவேகம். இவற்றில் காரய

---

பொருளாம்-அர்த்தமாகிய, அதாவது இப்படி ஸர்வ தத்வங்களுக்கும் ஆஸ்ரயமான திவ்ய மங்கள விக்ரஹத்தை யுடையவனுக வேதத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற என்றர்த்தம். இத்தால் ஸர்வ தத்வங்களுக்கும் ஆதாரமான திவ்ய மங்கள விக்ரஹத்தை யுடையவனுகையினுலும், ஸர்வவேத மயமான வாஹனத்தை யுடையவனுகையினுலும், அவனே ஸர்வோத் க்ருஷ்டன் என்பதும் த்யோதிதம். **கண்ணன்** - ஸ்ரீ க்ருஷ்ணன், **கரிகிரிமேல்** - ஸ்ரீ ஹஸ்திகிரியின் ஸிகரத்தில், **நின்று** - அவதாரங்களைப்போல தீர்த்தம் ப்ரஸாதித்துப் போகாமல் ஸ்திரமாக நின்று, அன்றிக்கே ஸர்வரும் ஆஸ்ரயிக்கும்படி நின்று என்றுகவுமாம். அதாவது ‘ஆதி யுகத்தயன் கண்டிட நின்றவருள் வரதர்காதலுயர்த்தகளிற்றைத் திரேதையில் காத்தளித்து வாதுயர் தேவகுருவுக்கிரங்கித் துவாபரத்தில் சோதியனந்தன் கலியில் தொழுதெழ நின்றனரே’ என்கிற ஸ்ரீ ஹஸ்திகிரிமாஹாத்ம்யப்பாட்டின்படி ஸர்வகாலங்களிலும் ஸர்வஜனங்களும் தன்னை ஆஸ்ரயித்து உஜ்ஜீவிக்கும்படி நின்று, **அனைத்தும்** - ஸர்வலோகத்தையும், **காக்கின்றனே** - ரக்ஷிக்கின்றனே. இங்கு ‘அனைத்தும்’ என்பதற்கு அவனுடைய ரக்ஷணத்திற்கு விஷயமாகாததில்லை என்று தாத்பர்யம். ‘வேதஸ்ருங்க்ருதி வேதநாவிராசி: தத்த்வம் வ்யக்திஸ்த்ராவிகா ஹந்தாநி ஸர்வேணாஹங்க்ருதி யாதம் ஸம்வேத ஸாந்த்ரயதே । பாணா: வாநி உஸாவிகள ஸ்த்ராஹஹேணிஜீவ: ஸ்ரியாநம் வார்த்த: ஸ்ரீவத்ஸ: கௌஸ்துபதே தவ ஸுந்தராஹ: ஸேநாங்கம் வாஜா:’ என்றிந்தப் பாட்டின் அர்த்தம் குமாரநைனுராசார்யரால் ஸங்க்ரஹிக்கப்பட்டது. இப்படி இத்தத்வங்கள் பகவானுடைய திருமேனியில் அஸ்திரமாயும் பூஷணமாயும் நிற்கும் ப்ரகாரம் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் அஸ்திர பூஷணுத்யாயத்தில் பரக்க நிருபிக்கப்பட்டிருக்கிறது. ப்ராக்ருதங்களான இருபத்து நான்கு தத்வங்களுக்கும் ஸ்வரூபாதி பேதங்களை நிருபித்தருளுகிருர்—‘இருபத்து நாலு’ என்றாரம்பித்து. **ஸங்க்யாநம்**-ஒன்றுக்கொன்று. **அவ்வோலக்ஷணங்களாலே** - அந்தந்த வஸ்துக்களுக்கு (ஸ்ரீமந் ந்யாய ஸித்தாஞ்

மான விருபத்துமூன்று தத்த்வங்களுக்கு மிவற்றுள் ஸ்தூலங்களான வற்றுக்கும் ஸ்திதியில் வருமேற்றச் சுருக்கங்கள் புராணங்களிலே ப்ரஸித்தமானபடியே கண்டுகொள்வது. 1 'ஸ்வஸத்தாபாஸகம் ஸத்த்வம் குணஸத்த்வாத்விலக்ஷணம்', 2 'தமஸ: பரமோ தாதா', 3 'அப்ராக்ருதம் ஸுரைர்வந்த்யம்' இத்யாதிகளாலே தமஸ்ஸுக்கு

---

ஜனம் முதலிய க்ரந்தங்களில்) நிரூபிக்கப்பட்டிருக்கும் லக்ஷணங்களாலே. அங்கு பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று திருவுள்ளம். இவற்றின் ஸ்திதி பேதத்தை அருளிச் செய்யத் திருவுள்ளம்பற்றி மூலப்ரக்ருதி நித்யமாகையினுலே அதுக்கு ஸ்திதி நித்யம் என்பது ஸித்தம் என்று திருவுள்ளத்தில் கொண்டு அதிலிருந்து உண்டாகும் மற்ற இருபத்து மூன்று தத்வங்களின் ஸ்திதியை நிரூபித்தருளுகிறார் — 'இவற்றில்' என்றாரம்பித்து. இவற்றில் - இந்த இருபத்து நாலு தத்வங்களுக்குள், **கார்யமான** - ப்ரக்ருதியிலிருந்து உண்டாகிய. **ஸ்தூலங்களான வஸ்துக்களுக்கும்** - பஞ்சீகரணம் செய்த பிறகு உண்டாக்கப்படும் அண்டத்திற்கும் அதற்குள்ளிருக்கும் வஸ்துக்களுக்கும். **புராணங்களிலே** - விஷ்ணு புராணம் முதலியவைகளிலே. ப்ரக்ருதிக்கு அளவில்லை, எவ்விடத்திலும் பாவி நிற்கிறது என்று சொல்லுவதும், ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத ஶுத்த ஸத்வம் இருக்கிறதென்று சொல்லுவதும் விரோதிக்கிறபடியினுல் ப்ரக்ருதியின் பரிணுமங்களிலேயே ரஜோகுண தமோகுணஸம்பந்தமில்லாத ஸாத்விகாஹங்காரம் முதலியவைகளைப்போல் கேவலம் ஸத்வகுணத்திற்கு மாத்திரம் ஆஶ்ரயமான ஒரு த்ரவ்யமே ஶுத்தஸத்வம் என்னப்படுகிறது என்னில்? அதற்கு ஸமாதானமருளிச் செய்கிறார்—'**ஸ்வஸத்தா**' என்றாரம்பித்து. **ஸ்வஸத்தாபாஸகம்** - தானிருப்பதினுலேயே ப்ரகாஶித்துக்கொண்டிருக்கிற, அதாவது ஸ்வயம் ப்ரகாஶமான, **ஸத்த்வம்**-ஸத்வமானது, **குணஸத்த்வாத்** - ரஜஸ் தமோகுணங்களோடு சேர்ந்திருக்கும் ஸத்வத்தைக்காட்டிலும், **விலக்ஷணம்**- வேறுபட்டது, **அப்ராக்ருதம்** - ப்ரக்ருதியின் பரிணுமமாக

1 ஸ்ரீபாஞ்சராத்திரம். 2 ராமா-யுத்-114-15. 3 ஜிதந்தா-2-21.

மேலான தேசவிசேஷம் ஸித்திக்கையாலே 1 'அநந்தஸ்ய ந தஸ்யாந்த: ஸங்க்யாநம் வாபி வித்யதே', 2 'ததநந்தமஸங்க்யாதப்ரமாணஞ்சாபி வை யத:' இத்யாதிகள் நித்யவிபூதியாலவச்சிந்நமல்லாத ப்ரதேசத்தாலே உபரிதிக்காநந்த்யஞ் சொல்லுகின்றன. த்ரிகுணத்ரவ்யத்துக்குப் ப்ரவ்ருத்திபேதம் பத்தசேதநருடைய போகாபவர்க்கங்களுக்கு ஈஶ்வரனுடைய லீலாரஸத்துக்குமாக ஸமமாகவும் விஷமமாகவும் பரிணாமஶக்தியை யுடைத்தாய் தேஹேந்த்ரியாதிரூபத்தாலே அவ்வோவ்யாபாரங்களையும் பண்ணுகை. இது

---

அல்லாதது, ஸுரேசவந்த்யம் - தேவதைகளினால் ஸேவிக்கத் தகுந்தது. இந்த வசனங்கள் ப்ரக்ருதியிலிருக்கும் ஸத்வத்தைவிட வேறுபட்டதென்றும், ப்ரக்ருதியின் ஸம்பந்தம் அந்த ஸ்தானத்தில் இல்லையென்றும் ஸ்பஷ்டமாகச் சொல்லுகையாலே அவ்விடத்திலும் ப்ரக்ருதி வ்யாபித்திருக்கிறதென்பது விருத்தமாகும். ஆகையினால் ஶுத்த ஸத்வம் என்பது ப்ரக்ருதி ஸம்பந்த மற்ற ஒரு த்ரவ்யம் என்று ஒப்புக்கொள்ளவேண்டும் என்று தாத்பர்யம். 'தமஸ:' என்பது தமோகுணத்திற்கு ஆஶ்ரயமான ப்ரக்ருதியைச் சொல்லுகிறது. **அநந்தஸ்ய**-அநந்தமென்று ஶாஸ்திரங்களில் சொல்லப்படுகிற, **தஸ்ய** - அந்த ப்ரக்ருதிக்கு, **அந்த:** - நாஶமும், **ஸங்க்யாநம் வாபி** - அளவும், **ந வித்யதே**-இல்லை, **யத:**-எந்தக் காரணத்தினால், **தத்** - அந்தவஸ்து, **அநந்தம்**-நாஶமில்லாததோ, **அஸங்க்யாத ப்ரமாணம் ச**-கணக்கில்லாத அளவையுமுடையதோ. **நித்யவிபூதியாலவச்சிந்நமில்லாத** - நித்ய விபூதி இருக்கும் இடத்தைத்தவிர மற்ற. ப்ரவ்ருத்தியை நிரூபித்தருளுகிறார்— '**த்ரிகுணத்ரவ்யத்துக்கு**' என்றாரம்பித்து. **ஸமமான**-குணஸாம்யமுடையதாயும், **விஷமமாயும்** - ஏற்றத்தாழ்வை யுடையதாயும், **அவ்வோவ்யாபாரங்களை**-தத்வஜ்ஞானத்தை மறைப்பது, முதலிய கீழ்நிரூபிக்கப்பட்ட வ்யாபாரங்களை. ஒரே ப்ரக்ருதி பரஸ்பர விருத்தமாக போகத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமாகும்

---

1 வி-பு-2-7-25. 2 வி-பு-2-7-26.

ரஜஸ்தமஸ்ஸுக்களையிட்டு ஜ்ஞாநர்க்கு தத்வங்களிலுண்மையை மறைத்து விபரீதஜ்ஞாநத்தை யுண்டாக்குகிறது பத்தமாயையுமாக. இது தானே பகவத்ப்ராப்திரோதியுமாக ஸத்வவிவ்ருத்தியாலே தத்வங்களை யதாவஸ்தமாக ப்ரகாஶிப்பிக்கிறது. இவையெல்லா மீஶ்வரனுக்கு லீலோபகரணமாயிருக்கும். ஶுத்தஸத்வத்துக்கு ஸ்வரூபம்

ஶுத்த ஸத்வ நிரூபணம்.

ரஜஸ்தமஸ்ஸுக்களோடு கலசாத ஸத்வமாத்ராஶ்ரயமாயிருக்கை. இதின் ஸ்திதி நித்யமான அண்டவிமாநாதிகளிலும் ஈஶ்வரனுடையவும் நித்யருடையவும் விக்ரஹவிஶேஷங்களிலும் நித்யமாயிருக்கும். நித்யருடையவும் முக்தரு

---

ப்ரகாரத்தை யருளிச் செய்கிறார்—'இது' என்றாரம்பித்து. **ரஜஸ்தமஸ்ஸுக்களையிட்டு** - அதிகமாக விருத்தியடைந்திருக்கிற ரஜஸ்தமோகுணங்களைக்கொண்டு. **இதுதானே** - இப்படி மோக்ஷத்திற்கு ப்ரதிபந்தகமா யிருக்கிற ப்ரக்ருதியே, **ஸத்வவிவ்ருத்தி யாலே** ஸத்வகுணத்தின் மிகுந்த விருத்தியாலே, ஸாதாரணமான ஸத்வம் '**ஸுகஸங்கேந பத்நாதி**' என்று ஸ்ரீ கீதையிலருளிச் செய்திருக்கிறபடியே பந்தகமாகையினால் உத்கட ஸத்வத்தின் வ்ருத்தியே மோக்ஷகாரணமாகும் என்பதைத் தெரிவிப்பதற்காக '**விவ்ருத்தி**' என்று வ்ருத்தியின் விஶேஷம் அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. ஆகையினால் ஒரே ப்ரக்ருதி ஸத்வ விவ்ருத்தி முகத்தாலே மோக்ஷத்திற்குக் காரணமாயும், ரஜஸ்தமோகுணங்களின் விருத்தியாலே ப்ரதிபந்தகமாயும் இருப்பது த்வாரபேதத்தாலே ஆகையினால் விரோதமில்லை என்று தாத்பர்யம். **இவையெல்லாம்**-இந்த ப்ரக்ருதியின் ப்ரவ்ருத்தியெல்லாம். ஶுத்த ஸத்வத்தை நிரூபித்தருளுகிறார்—'**ஶுத்தஸத்வத்திற்கு**' என்றாரம்பித்து. **கலசாத**-ஸம்பந்தப்படாத. ஸ்திதியை யருளிச்செய்கிறார்—'**இதின்**' என்றாரம்பித்து. **நித்யமானஅண்டம்**-ஸ்ரீ வைகுண்டத்தில் திருமாமணி மண்டபம் முதலியவை. **ஈஶ்வரனுடையவிக்ரஹவிஶேஷம்** - பகவானுடைய பரரூபம், வ்யூஹரூபம், முதலியவைகள். '**நித்யருடைய விக்ரஹவிஶேஷ**' ங்களாவது பரவாஸுதேவனுக்கு ஆஸனமாகிறஆதிஶேஷனுடையவிக்ரஹம்

டையவும் ஈச்வரனுடையவும் **அநித்யேச்சையாலே** வந்த **விக்ரஹாதிகளில் அநித்ய**மாயிருக்கும். இதின் **ப்ரவ்ருத்திஹேதும்** இவர்களுடைய **இச்சை**க்கீடான **பரிணாமாதிகளாலே சேஷிக்கு போகோபகரண**மாயும் **சேஷபூத**னுக்குக் **கைங்கர்யோபகரண**மாயும் நிற்கை. **காலத்துக்கு ஸ்வரூபஹேதும் ஜடமாய் விபுவா**யிருக்கை. இதின் **ஸ்திதி காலாவச்சேத**மில்லாமையாலே **நித்யை**யாயிருக்கும். **ப்ரவ்ருத்திஹேதும் கலாகாஷ்டாதி விபாக**த்தாலே **ஸ்ருஷ்ட்யாதி**களுக்கு**உபகரண**மா யிருக்கிறபடியிலே கண்டுகொள்வது. இத் **த்ரவ்ய**ங்களெல்லாம் **ஸ்வரூபேண**

கால நிரூபணம்.

---

முதலியவை. **அநித்யேச்சையாலே** - அந்தந்த ஸமயங்களில் உண்டாகும் ஸங்கல்பங்களினுல். 'அவன் பிதாக்களோடுகூட இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிருனேயானுல் அவனுடைய ஸங்கல்பத்தினுல் பித்ருக்கள் உண்டாகிருர்கள்' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தில் சொல்லப்படுகிற அந்தந்தக் காலங்களில் உண்டாகும் ஸங்கல்பங்கள் என்றர்த்தம். '**ஆதி**' பதத்தினுல் சத்ரசாமராதி கைங்கர்யோபகரணங்கள், மண்டப கோபுராதிகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. ப்ரவ்ருத்தியை நிரூபித்தருளுகிருர்—'இதின்' என்றுரம்பித்து. 'இவர்களுடைய - நித்யமுக்தர்களுடைய. காலத்தின் ஸ்வரூபாதிகளையருளிச்செய்கிருர்—'**காலத்துக்கு**' என்றுரம்பித்து. '**ஜடமாய்**' என்றது திவ்யாத்ம ஸ்வரூபத்தை விலக்குகிறது. ப்ரக்ருதியை விலக்குவதற்காக '**விபுவாய்**' என்னும் பதம். **காலாவச்சேத**மில்லாமையாலே - காலம் என்கிற தத்வம் இல்லாத காலமில்லாமையினுலே, **கலாகாஷ்டாதி** - விநாடி, நிமிஷம், முதலிய. '**ஆதி**' பதத்தினுல் நாள், வாரம், பக்ஷம், முதலிய மற்ற விபாகங்கள் குறிக்கப்படுகின்றன. **உபகரண**மாயிருக்கிற - ஒத்தாசையா யிருக்கிற. இத்**த்ரவ்ய**ங்களேல்லாம் - ப்ரக்ருதி, காலம், **சுத்த** ஸத்வம், இவைகளெல்லாம். இத்தால் கார்யவஸ்துக்கள் இதற்குமுன் இல்லாமலிருந்து இப்பொழுது உண்டாகிறது என்று சொல்லுகிற தார்க்கிகர்கள் பக்ஷம் நிராகரிக்கப்

நித்யங்களாயிருக்கும். நாமாந்தரபஜநார்ஹாவஸ்தாவிசேஷவிசிஷ்டதையையிட்டு சிலவற்றை யநித்யங்களென்கிறது. அழிந்ததோடு ஸஜாதீயங்களான வவஸ்தாந்தரங்கள் மேலும் முழுக்க வருகையாலே ப்ரவாஹநித்யங்களென்று சொல்லுகிறது. இப்பதார்த்தங்களெல்லாவற்றினுடையவும் ஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திபேதங்கள் ஈச்வரனுக்கு ஸ்வாதீநங்களாயிருக்கையாவது ஸங்கல்பஸத்தையையு மீச்வரேச்சையையு மொழிய இவற்றுக்கு ஸத்தாதிகள் கூடாதொழிகை. ஆகையால் ஸகலவஸ்துக்களுக்கும் ஸ்வாபாவஸித்தாநா

---

பட்டது. நாமாந்தரபஜநார்ஹ - வேறுபெயரை அடையத் தகுந்த, அவஸ்தாவிசேஷ - ஒருவிதமான அவஸ்தையோடு, விசிஷ்டதை - சேர்ந்திருத்தல். ஜீவாத்மாக்களுக்குப் பத்தர் முக்தர் என்கிற அவஸ்தை வந்தபோதிலும் அவைகள் நாமாந்தரபஜனார்ஹமல்லாமையினலே அவைகளுக்கு நித்யம் என்கிற வ்யவஹாரம், அவ்வவஸ்தைகளுள்ளவைகளாகையினல் ப்ரக்ருதியின் மாறுதல்களுக்கு அநித்யங்கள் என்று வ்யவஹாரம், என்று தாத்பர்யம். சிலவற்றை - இப்படிப்பட்ட அவஸ்தையை யடையக்கூடிய வஸ்துக்களை. அழிந்ததோடு ஸஜாதீயங்களான வவஸ்தாந்தரங்கள்-நாமாந்தர பஜநார்ஹாவஸ்தையிலே முன் நாமமடைந்ததற்கு ஸமமான அவஸ்தைகள், அதாவது மஹத், அஹங்காரம், முதலிய பரிணமங்கள் பூர்வகல்பத்தில் போல மறுபடியும் உண்டாகின்றன என்று தாத்பர்யம். இப்படி நித்ய வஸ்துக்களின் ஸ்வரூபமும் பகவததீனமென்னில் அவைகள் ஈஸ்வர ஸங்கல்பத்தினல் உண்டாகிறவைகளென்றேற்படுகிறபடியினலே அநித்யத்வம் வருமேயென்னில்? அதற்கு ஸமாதானமாக 'அதீந' என்னும் பதத்தின் அர்த்தத்தையருளிச் செய்கிருர்—'இப்பதார்த்தங்கள்' என்றுரம்பித்து. ஸத்தை - ஸ்வரூபம், இச்சை - ஸங்கல்பம். இவற்றுக்கு ஸத்தாதிகள் - இவைகளுக்கு ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள், அதாவது பகவானுடைய ஸங்கல்பமில்லாவிடில் இல்லாமற்போகவேண்டிவரும் என்னும்படி சொல்லக்கூடியதாயிருக்கை என்று தாத்பர்யம். ஸ்வாபாவஸித்தாநாமபி-ஸ்வபாவத்திலேயே

கர்ம ஈஶ்வரேச்சாயத்தம். இத்தாலே ஈஶ்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் ஸர்வமு மநுகூலமாயிருக்கும். பத்தருக்குக் கர்மாநுகூலமாகப் பரிணாம ஹேதுத்தாலும் கால ஹேதுத்தாலு மிவற்றில் ஜ்ஞாதி கர்மங்களு மநுகூலங்களும் நடவா நிற்கும். இப்பத்தர்தங்களுக்கும் ஸ்வாத்மஸ்வரூபம் ஸர்வதா அநுகூலமாக ஈஶ்வரேச்சாஸித்தம். இப்படி அநுகூலமான ஸ்வாத்மஸ்வரூபத்தோடே தேஹாத்மப்ரமத்தாலும் கர்மவஶத்தாலுமிறே ஹேயமான ஶரீரம் ஜ்ஞாநஹீநர்க்கு அநுகூலமாய்த் தோற்றுகிறது. இவற்றுக்கு கர்மோபாதிகமான ஜ்ஞாதிகர்மத்தாலே முமுக்ஷுவைப்பற்ற த்யாஜ்யத்வம். ஸ்வாபாவிகமான அநு

---

ஏற்பட்ட அனுகூலமா யிருக்குந்தன்மை. ஈஶ்வரேச்சாயத்தம் - பகவானுடைய ஸங்கல்பத்தினாலுண்டானது, அதாவது பகவான் இந்த வஸ்துக்களை நித்யமாக இருக்கவேண்மென்று ஸங்கல்பித்து வைத்திருப்பதினால் நித்யங்களா யிருக்கின்றன. இப்படி ஸங்கல்பித்திருப்பதும் அனுகூலமாய் இருப்பதினாலேஎன்று தாத்பர்யம். இத்தாலே - எல்லாம் பகவானுடைய விபூதியாகை யாலே பகவானுக்கு அனுகூலமா யிருக்கிறபடியினால். இப்படி ஸர்வ வஸ்துக்களும் பகவானுக்கு அதீனம் என்று தெரிந்து கொள்ளுவதின் ப்ரயோஜனம் ஸர்வ வஸ்துக்களையும் அனுகூலமாய் அனுபவிக்கை என்பது தெரிவிக்கப்பட்டது. 'பத்தருக்கு' இத்யாதியினால் கர்மத்தினால் சுருங்குவது பெருப்பது முதலியது தர்மபூத ஜ்ஞானத்திற்கே ஒழிய ஆத்ம ஸ்வரூப ப்ரகாஶத்திற்கு ஸங்கோசாதிகளில்லை என்பது த்யோதிதம். ஸ்வாத்மஸ்வரூபம்-அவரவர்களின் ஆத்மஸ்வரூபம். தேஹாத்மப்ரமத்தாலும் - தேஹமும் ஆத்மாவும் ஒன்றென்கிற ப்ரமத்தினாலும் ஜ்ஞாநஹீநர்க்கு-தேஹாத்ம விவேகமில்லாதார்க்கு 'கர்மோபாதிகமான' இத்யாதிக்குக் கர்மங்களினாலுண்டாகிய தத்வஜ்ஞானத்தை மறைப்பது முதலிய விரோதம் செய்கிற ஸ்வபாவத்தினாலே என்றர்த்தம். முமுக்ஷுவைப் பற்ற-முமுக்ஷுவுக்கு. இத்தால் மோக்ஷத்தில் இச்சையுடைய

**கர்மவச்யத்வத்தாலே** அ**ஜ்ஞ**னைப்பற்ற அவைதனக்கே **யுபாதேயங்களாகவும்.** **ஸர்வஜ்ஞனான ஸர்வஜ்ஞ**னுங்கொண்டு தனக்கென்று **ஸ்வீகரி**க்குமவையெல்லாம் **ஆநுகூல்ய**ங்களாம். **ஸ்வரூபஜ்ஞாநம்** பிறந்து **ஸ்வாமிசேஷ**மென்று காணப்புக்காலெல்லாம் **ஆநுகூல்ய**மாம். இவ்**வர்த்தம்** **பரிபூர்ணப்ரஹ்மாநுபவ**ஞ்சொல்லுமிடத்திலே பரக்கச்சொல்லக்கடவோம்.

ஈஶ்வரதத்வ நிரூபணம்.

இப்படி **ஸ்வாதீநஸத்தாதி**களையுடையவனுமிருக்கிற **ஈச்வர**னுடைய **ஸ்வரூபம்** **ஸத்யாதி**களாகிற **ஸ்வரூபநிரூபகதர்ம**ங்களாலே **ஸத்ய**மாய் **ஜ்ஞாந**மாய் **அநந்த**மாய் **ஆநந்த**

---

வனுக்கு அப்பொழுது அவஶ்யம் வேண்டிய தத்வஜ்ஞானாதிகளுக்கு விரோதியாகையினாலே இதை த்யாஜ்யம் என்று சொல்லுகிறது. மோக்ஷத்தை யடைந்தவனுக்குக்கர்மங்கள் நஶித்துவிட்டபடியினால் அஜ்ஞானாதிகள் ஸம்பவிக்காதாகையினாலே விரோதம் செய்யாது. அப்பொழுது அனுகூலமாய்த்தோன்றுகிறது. இவ்**வர்த்தம்** - சில அவஸ்தைகளில் ப்ரதிகூலமாய்த் தோன்றுகிறது, மற்ற அவஸ்தைகளில் அனுகூலமாய்த் தோன்றுகிறது என்கிற அர்த்தம். **பரிபூர்ணப்ரஹ்மாநுபவம் சொல்லுமிடத்திலே** - பரிபூர்ண ப்ருஹ்மானுபவாதிகாரத்திலே. **பரக்க** - விஸ்தாரமாக, அதாவது யுக்திகளுடனும், த்ருஷ்டாந்தங்களுடனும்.

ஈஶ்வரனுடைய ஸ்வரூபாதிகளை நிரூபித்தருளுகிறார் — '**இப்படி**' என்றாரம்பித்து. '**ஸ்வாதீந**' இத்யாதிக்கு சேதனாசேதன வஸ்துக்களைத் தனக்குச் ஸ்வாதீநமாகவுடையவன் என்று சொல்லப்பட்ட என்றர்த்தம். '**ஸ்வரூப நிரூபக தர்மங்களாலே**' என்பதற்கு அவைகளுடன் சேர்த்து என்றர்த்தம். '**ஸத்யாதி**' களாலே என்று தனித்தருளிச்செய்திருப்பதினால் ஸத்யாதி பதம் கேவலம் அஸத்யாதி பதங்களைவிட வேறுபட்டதைச் சொல்லுகின்றன என்கிற அத்வைதி பக்ஷம் நிராகரிக்கப்பட்டது என்று தாத்பர்யம் இதற்கு ப்ரமாணங்களைநிரூபித்தருளுகிறார்—'இவ்**வர்த்த**த்தை' என்றாரம்பித்து.

மாய் ஸுகமாயிருக்கும். இவ்வர்த்தத்தை 1 'நந்தா விளக்கே யளத்தற்கரியாய்' என்றும், 2 'உணர்முழு நலம்' என்றும், 3 'சூழ்ந்ததனிற் பெரியசுடர் ஞான வின்பம்' என்றும், 4 'அமலன்' என்று மித்யாதிகளாலே யாழ்வார்களநுஸந்தித்தார்கள். மற்றுள்ள குணங்களும் திவ்யமங்களவிக்ரஹாதிகளுமெல்லாமீஶ்வரனுக்கு நிரூபித ஸ்வரூப விஶேஷணங்களாயிருக்கும். இக்குணங்களில் ஜ்ஞாநபலைஶ்வர்யவீர்யஶக்தி தேஜஸ்ஸுக்களென்கிற குணங்கள் ஸர்வகார்யோபயுக்தங்களாயிருக்கும். ஸௌஶீல்யவாத்ஸல்யாதிகள் ஸமாஶ்ரயணோபயுக்தங்களாயிருக்கும். இக்குணங்களெல்லாம் ஸர்வகாலத்திலும் ஸ்வரூபாஶ்ரிதங்களாயிருக்கும். பரவ்யூஹாதி விபாகங்களில் குணநியமஞ் சொல்லுகிற தெல்லா மவ்வோரூபங்களை யநு

---

சூழ்ந்து-எல்லாவற்றையும்வ்யாபித்து, அதனில்பெரிய-அதைக்காட்டிலும் பெரியதான, சுடர்-ப்ரகாஶமான, ஞானம்-ஆநந்தம், அமலன்-ஹேயப்ரத்யநீகனானவன். மற்றுள்ள குணங்கள் - ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வாதிகுணங்கள். 'ஆதி' ஶப்தத்தினால் ஶரீரங்களாகிய சேதனாசேதனவஸ்துக்கள் குறிக்கப்படுகின்றன. இக்குணங்களில்-நிரூபித ஸ்வரூபவிஶேஷணங்களான குணங்களில். இப்படி இந்தக் குணங்களேபரத்வோப யுக்தங்களென்னில் இக்குணங்களில்லாதபோது பகவானுக்கு பரத்வமில்லாமல் போகவேண்டி வருமே என்னில்? அதற்கு ஸமாதானம் அருளிச் செய்கிறார்—'இவைகளேல்லாம்' என்றாரம்பித்து. இப்படியாகில் பரவ்யூஹாதி தஶைகளில் சிற்சில குணங்கள் உண்டென்று சொல்லுகிற ஶாஸ்திரங்களுக்குவிரோதம் வாராதோ என்னில்? ஸமாதான மருளிச் செய்கிறார்—'பரவ்யூஹாதி' என்றாரம்பித்து. 'ஆதி' ஶப்தத்தினால் விபவம், அர்ச்சை, குறிக்கப்படுகிறது. குணநியமஞ் சொல்லுகிறதெல்லாம் - சிற்சில குணங்களே அனுஸந்தேயம் என்று சொல்லுகிறதெல்லாம். ரூபங்களையிட்டு - அந்தந்த

---

1, 2 173-ம் பக்கம் பார்க்க.

3 திருவாய்மொழி-10-10-10. 4 அமலனாதிப்பிரான்-1

**ஸந்திப்பார்க்கு ஸர்வேச்வரனாவிஷ்கரிக்கும் குணவிசே ஷங்கள்** சொல்லுகைக்காக **வத்தனை. ஔபநிஷத வித்யாவிசேஷங்கள்**தோறும் **அநுஸந்தேய குணவிசே ஷங்கள் நியதங்களா**னாற்போல **பாஞ்சராத்ரோக்தமா ன ரூபவிசேஷாநுஸந்தாநத்துக்கும் குணவிசே**

பர ரூபம். **ஷங்கள் நியதங்கள்.** அவ்விடத்தில் **பரரூபத்தில் ஜ்ஞாநாதிகுண**ங்களாறும் **வேத்யங்**

வ்யூஹ ரூபம். **கள். வ்யூஹங்கள்** நாலென்றும் மூன் றென்றும் **சாஸ்த்ரங்கள்** சொல்லும். நாலு **வ்யூஹ**

---

ரூபங்களை விசேஷணமாக்கி, **ஆவிஷ்கரிக்கும்**-ப்ரகாசம் செய்யும், அதாவது எல்லாக் குணங்களையும் அனுஸந்தானம்செய்வது அசக்யமாகையினால் சில ரூபங்களை யனுஸந்திப்பார்க்குச் சில குணங்களை மாத்திரம் பகவான் தன்னுடைய க்ருபையினால் ப்ரகாசம் செய்திருக்கிறான், அப்படிப்பட்டவைகளைச் சொல்லுகைக்காக இந்த நியமம் என்று தாத்பர்யம். '**அத்தனை**' என்பதினால் மற்றக்குணங்கள் அந்த ரூபத்தில் இல்லை என்பதில்லை என்பது த்யோதிதம். '**ஔபநிஷத**' இத்யாதிக்கு பகவான் ஸகல கல்யாணகுண விசிஷ்டனு யிருந்தாலும் ஸத்வித்யை, தஹர வித்யை, முதலிய உபநிஷத்தில் சொல்லப்படும் உபாஸநங்களில் அந்தந்த உபாஸகர்கள் ஸுலபமாய் உபாஸிப்பதற்காகச் சிற்சில குணங்களே விசேஷித்து அனுஸந்தேயங்களாக விதிக்கப்பட்டிருப்பதைப்போல ஸ்ரீ பாஞ்சாரத்திர சாஸ்திரத்திலும் பரவ்யூஹாதி ரூப உபாஸநங்களில் குணநியமம் சொல்லியிருக்கிறது என்று தாத்பர்யம். பரரூபாதிகளில் வேத்யங்களான குணவிபாகங்களை நிரூபித்தருளுகிறார்—'அவ்விடத்தில்' என்றாரம்பித்து. **பரரூபத்தில்** - பரவாஸுதேவரூபத்தில். **ஜ்ஞாநாதிகுண**ங்களாறும் - ஜ்ஞானம், சக்தி, பலம், தேஜஸ், ஐஸ்வர்யம், வீர்யம், என்கிற ஆறுகுணங்களும், **வேத்யங்கள்** - உபாஸ்யங்கள். '**வ்யூஹங்கள்' இத்யாதி** - வஸ்து ஸ்திதியில் விகல்பம் அஸம்பாவிதமாகையினால் இப்படிச் சொல்லுகிற பக்ஷங்களுக்குக் கதியை நிரூபித்தருளுகிறார்—'நாலு' என்றாரம்பித்து. '**வ்யூஹவாஸுதேவ**' இத்யாதிக்கு வ்யூஹ வாஸுதேவனுடைய உபாஸனத்திலும், பரவாஸுதேவனு

முண்டாயிருக்க வ்யூஹவாஸுதேவ ரூபத்துக்கு பரரூபத்திற் காட்டில் ஸம்ஸ்ருஷ்டகுணஷட்கமில்லாமையாலே த்ரிவ்யூஹமென்கிறது. இப்பக்ஷத்தை 1 'குணைஷ் ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதரமூர்த்திஸ்தவ பபௌ। ததஸ்திஸ்ரஸ்தேஷாம் த்ரியுக யுகளைர் ஹி த்ரிபிரபூ:॥' என்கிற ஶ்லோகத்திலே ஸங்க்ரஹித்தார்கள். இப்பரவ்யூஹங்களில் குணக்ரியாவிபாகங்கள் 2 'ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸ பவாந் முக்தபோக்யோ பலாட்யாத் போதாத் ஸங்கர்ஷணஸ்த்வம் ஹர

---

டைய உபாஸனத்திலும் ஆறுகுணங்களே உபாஸ்யங்களாகையினால் இரண்டையும் ஒன்றாக வைத்துக்கொண்டு மற்ற ஸங்கர்ஷணாதிகளை மூன்றென்று சொல்லுகிறதென்று தாத்பர்யம். **இப்பக்ஷத்தை**-மூன்று வ்யூஹம்என்கிறபக்ஷத்தை. **ஏதை:**- இந்த, **ஷட்பி:** - ஆறு, **குணை:**-குணங்களினால், **தவ** - உம்முடைய, **ப்ரதமதரமூர்த்தி:** - முதலாவது பரவாஸுதேவ மூர்த்தியானது, **பபௌ** - ப்ரகாஶித்தது, **தத:** - பிற்பாடு, **த்ரியுக** - மூன்று இரண்டை (ஆறு குணங்களை)யுடைய பகவானே, **திஸ்ர:** - ஸங்கர்ஷண, ப்ரத்யும்ந, அநிருத்த, என்கிற மூன்று ரூபங்கள், **தேஷாம்** - அந்தக் குணங்களினுடைய, **த்ரிபி:** - மூன்றுகளாகிய, **யுகளை:** - இரண்டுகளினால், அதாவது ஒவ்வொன்றிலும் இரண்டு இரண்டு குணங்களாக, **அபு:** - ப்ரகாஶித்தன. இந்த வ்யூஹாதிகளில் ப்ரகாஶிக்கும் குணங்களை நிரூபித்தருளுகிறார்—'**இப்பரவ்யூஹ**' என்றாரம்பித்து. **குண** - ஜ்ஞாந ஶக்த்யாதிகள், **க்ரியா** - ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகள், இவைகளின். **ஸ பவாந்** - அப்படிப்பட்ட நீர், **ஷாட்குண்யாத்** - ஆறு குணங்களினால், **பர:வாஸுதேவ: இதி** - பரவாஸுதேவனென்று (சொல்லப்பட்டவராய்), **முக்தபோக்ய:**-முக்தர்களினால் அனுபவிக்கப்பட்டு வருகிறீர், **ததா**-அப்படி, **பகவந்**-பகவானாகிய, **ரங்காதிராஜ** - ஸ்ரீரங்கநாதனே, **வ்யூஹ்ய**-வ்யூஹாவதாரம் செய்து, **பலாட்யாத்** - பலத்துடன் சேர்ந்த, **போதாத்** -

---

1 வரதராஜஸ்தவம்-16 2 ஸ்ரீரங்கராஜஸ்தவம்-2-39.

**ஸி விதநுஷே ஶாஸ்த்ரம் ஷாட்³கு³ண்யவீர்யயுக்த: । ப்ரத்³யும்ந: ஸர்க³த⁴ர்மௌ நயஸி ச ப⁴க³வந் ஶக்திதேஜோऽநிருத்³தோ⁴ பி³ப்⁴ராண: பாஸி தத்த்வம் க³மயஸி ச ததா² வ்யூஹரூபேண ரங்கா³தி⁴ராஜ ।'** என்கிற ஶ்லோகத்திலே ஸங்க்³ரஹிக்கப்

---

ஜ்ஞானத்தினால், **ஸங்கர்ஷண:**-ஸங்கர்ஷணனாயிருக்கிற, **த்வம்** - நீர், **ஸம்ஹரஸி** - (லோகத்தை) ஸம்ஹாரம் செய்கிறீர், **ஶாஸ்த்ரம்**- ஶாஸ்திரத்தை, **விதநுஷே** - கொடுக்கிறீர், **ஷாட்³கு³ண்யவீர்யயுக்த:** - ஐஸ்வர்யத்துடன் சேர்ந்த வீர்யத்தினால், **ப்ரத்³யும்ந:**- ப்ரத்யும்நனாக இருந்து, **ஸர்க³த⁴ர்மௌ** - ஸ்ருஷ்டியையும், தர்மத்தையும், **நயஸி** - நடத்துகிறீர், அதாவது ஸ்ருஷ்டி செய்கிறீர், தர்ம ப்ரவசனம் செய்கிறீர் என்றர்த்தம். **ஶக்திதேஜ:** - ஶக்தி, தேஜஸ்ஸு, இவைகளை, **பி³ப்⁴ராண:** - தரித்துக்கொண்டு, **அநிருத்³த⁴:** - அநிருத்தனாயிருந்து, **பாஸி** - லோகத்தை ரக்ஷிக்கிறீர், **தத்த்வம் க³மயஸி** - தத்வத்தையும் அறிவிக்கிறீர். ஸ்ரீவைகுண்டத்தில் விசாகஸ்தம்பமென்று சொல்லப்படுகிற ஒரு பெரிய அப்ராக்ருதமான ஸ்தம்பம் இருக்கிறது. அது நாலு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகத்திலும் நான்கு பக்கங்கள். நான்கு பக்கங்களிலும் வாஸுதேவாதி ரூபங்களுடன் பகவான் எழுந்தருளியிருக்கிறார். முதலில் ஜாக்ரத் ஸ்தானமென்றும், அதற்கு மேல் ஸ்வப்ந ஸ்தானமென்றும், அதற்குமேல் ஸுஷுப்தி ஸ்தானமென்றும், அதற்கு மேல் துரீய ஸ்தானமென்றும் சொல்லப்படுகிறது. ஜாக்ரத் ஸ்தானத்தில் இருக்கிற நாலு வ்யூஹரூபங்களில் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்கள், ஆயுதங்கள், வாஹனங்கள், சின்னங்கள், முதலியவைகள் ஸ்பஷ்டமாய்த் தோன்றுகின்றன. ஸ்வப்ன ஸ்தானத்தில் இருக்கும் ரூபங்களில் ஸ்ருஷ்டி முதலியவைகளில் இச்சைமாத்திரமுண்டு. மிகவும் மலிநங்களான வர்ணம். சின்னங்கள் முதலியவை ஸ்பஷ்டமாக ப்ரகாஶிப்பதில்லை. ஸுஷுப்தி ஸ்தானத்திலிருக்கும் ரூபங்களுக்கு ஜகத்வ்யாபாரத்தில் இச்சையுமில்லை. ஸ்வாத்மாநந்தத்தைமாத்திரம் அநுபவித்துக் கொண்டிருக்கிறது. வர்ணங்களுமில்லை. சின்னங்கள் கோடுகளாக இருக்கின்றன, ஆயுதங்களுமில்லை. துரீய ஸ்தானத்தில் ரூபங்களுக்கும் ஶரீரம், சேஷ்டாதிகள், ஒன்று

பட்டன. ஜாக்ரதாதிபதபேதங்களிலுள்ள விசேஷங்களெல்லாம் 1 'ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்ததுரீயப்ராயத்யாத்ருக்ரமவதுபாஸ்ய: । ஸ்வாமிந் தத்ததுசிதகுணபரிபர்ஹஶ்சாதுர்வ்யூஹ்யம் வஹஸி சதுர்தா ॥' என்று ஸங்க்ருஹீதங்களாயிற்று. கேசவாதிகளான பன்னிரண்டு ரூபங்களும் வ்யூஹாந்தரங்கள். விபவங்களாவன பத்மநாபாதிகளான முப்பத்துச்சின்னரூபங்கள். இவற்றில் உத்க்ருஷ்ட

விபவ ரூபம்.

---

மில்லை. உபாஸனம் செய்கிறவனுக்குப் புத்தியை ஸ்வரூபத்தில் லயம் செய்யவேண்டியதற்காகப் பகவானால் இந்த வரிசையை யனுஸரித்து ப்ரகாசம் செய்யப்பட்டிருக்கிறது என்று சாஸ்திரங்களில் ப்ரஸித்தமானதை ஸங்க்ரஹித்து நிரூபித்தருளுகிறார்—'ஜாக்ரதாதி' என்றாரம்பித்து. பதபேதங்களில்-ஸ்தானங்களின் வ்யத்யாஸங்களில். ஸ்வாமிந் - ஸ்வாமியாகிய ரங்கநாதனே, ஜாக்ரத் - விழித்துக் கொண்டிருப்பவன், ஸ்வப்ந -ஸ்வப்ந தசை யடைந்தவன், ஸுஷுப்த - ஸுஷுப்தி தசை யடைந்தவன், துரீய - மூர்ச்சை யடைந்தவன், ப்ராய-இவர்களுக்கு ஸமானமான, த்யாத்ருக்ரமவத் - த்யானம் செய்பவர்களின் வரிசையைப்போல, உபாஸ்ய: - த்யானம் செய்யப்படுகிறவரான நீரும், தத்ததுசிதகுணபரிபர்ஹ: - அததற்கு உசிதங்களான குணம், ஆயுதம், சின்னம், இவைகளை யுடையவராய்க்கொண்டு, சாதுர்வ்யூஹ்யம் - நாலு வ்யூஹத்தையும், சதுர்தா - நாலுவிதமாக, வஹஸி - தரிக்கிறீர். உபாஸனம் செய்கிறவனுக்கு இந்திரியாதிகள் எல்லா விஷயங்களிலும் வ்யாபரித்துக் கொண்டிருப்பது ஜாக்ரத்தசை. ஸ்வப்நதசையில் வெளி இந்திரியங்கள் அடங்கி மனோவ்யாபாரம் மட்டும் இருக்கிறது. மனதின் வ்யாபாரமும் அடங்கித் தன்னிடத்திலேயே தான் லயிப்பது ஸுஷுப்திதசை. தன் தேஹம் முதலியவைகளையும் தன்னையும் மறந்து நிற்கும் தசை துரீயதசை. இப்படி உபாஸகனுடைய தசைக்கு அனுகுணமாக உபாஸ்யனான பகவானும் ரூபங்களைத் தரிக்கிறார் என்று ஶ்லோகத்தின் தாத்பர்யம்.

---

1 ஸ்ரீரங்கராஜஸ்தவம்-2-40.

ஸ்யாதிகளான வவதாரங்களொரு ப்ரயோஜநவஶத்தாலே விஶேஷித்துச் சொல்லப்பட்டன. இவ்விபவங்களி லீஶ்வரனவ்வோகார்யவிஶேஷங்களுக் கீடாகத் தான் வேண்டின குணங்களை வேண்டினபோது மறைத்தும் வேண்டினபோது ப்ரகாஶிப்பித்தும் நடத்தும். இவற்றிலவாந்தரபேதங்கள் [1] ‘க்ருஷ்ணரூபாணி ஸஹஸ்ராணி’ இத்யாதிகளிற்படியே யநந்தங்கள். இப்படியே விபவாந்தரங்களும் கண்டுகொள்வது.

---

**வ்யூஹாந்தரங்கள்**-வ்யூஹத்திலிருந்து உண்டாகிய உட்பிரிவுகள். **பத்மநாபாதி**-பத்மநாபன் என்கிற ரூபம் முதலான. **முப்பத்துச்சின்ன** - முப்பதும் மேலே சில்லரையும். ஸம்ஹிதா பேதங்களில் முப்பத்தாறு என்றும், முப்பத்தெட்டென்றும் சொல்லப்பட்டிருப்பதினால் பொதுவில் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இவைகளில் தஶாவதாரங்களைத் தனித்து எடுத்ததற்குக் காரணத்தை யருளிச் செய்கிறார்—‘இவற்றில்’ என்றாரம்பித்து. **ப்ரயோஜநவஶத்தாலே** - ஆஶ்ரயண ஸௌகர்யம், ஸௌலப்யம், முதலிய ப்ரயோஜனங்களினாலே. இந்த விபவ ரூபங்களில் வ்யூஹாவதாரங்களில்போலகுணநியமமில்லையென்றருளிச் செய்கிறார்—‘**இவ்விபவங்களில்**’ என்றாரம்பித்து. ‘**அவ்வோ**’ இத்யாதிக்குச் சில குணங்களை ப்ரகாஶம் செய்வது, சிலவற்றை மறைப்பது, இவைகள் கர்மவஶத்தினால் உண்டாகாதபடியினால் ஜீவாத்ம ஸாம்யம் ஶங்கிக்க வொண்ணாது என்பதற்காக ஸர்வேஶ்வரன் தன்னிச்சைகளினாலே அந்தந்தக் கார்யங்களுக்குத் தக்கபடி குணங்களின் ப்ரகாஶத்தையும், மறைப்பதையும் செய்கிறான் என்று தாத்பர்யம். ‘**கார்யவிஶேஷங்க**’ளாவது ஸாதுக்களுக்குப் பக்தியை வ்ருத்தி செய்வதும் அஸுராதிகளை மோஹம் செய்வதும். இவற்றில் **அவாந்தரபேதங்கள்**-விபவாவதாரத்தில் உட்பிரிவுகள். **க்ருஷ்ணரூபாணி** - ஸ்ரீக்ருஷ்ணனுடைய ரூபங்கள், **ஸஹஸ்ராணி** - கணக்கிட முடியாதவைகள். இப்படியே **விபவாந்தரங்களும்** - மற்ற அவதாரங்களில் உட்பிரிவுகளும். விபவாவதாரத்தின் உட்பிரி

---

1 ஸ்ரீபாஞ்சராத்திரம்.

சில ஜீவர்களை விக்ரஹவிசேஷத்தாலும் சக்திவிசேஷத்தாலுமதிஷ்டித்த திசயிதகார்யங்களை நடத்துகிறதும் விபவவிசேஷம்.

**அர்ச்சா ரூபம்.** வரவர்ணஹாதி ரூபங்கள்தானே யாசிதர்க்காக அவர்களபேக்ஷித்தபடியிலே 1 'பிம்பாகாரத்வாதனா பிம்பே ஸாந்நித்யமவதிஷ்டதே' என்கிறபடியே நிற்கிற நிலை அர்ச்சாவதாரம்.

**அந்தர்யாமி ரூபம்.** ஸர்வருடையவும் ஹ்ருதயங்களிலே ஸூக்ஷ்மமாயிருப்பதொரு

---

வான அம்சாவதாரத்தை நிரூபித்தருளுகிறார்—'சில ஜீவர்களை' என்றாரம்பித்து. ஜீவர்களை - ஹிரண்ய கர்ப்பாதிகளை, விக்ரஹவிசேஷத்தாலும் - அஸாதாரணமான விபவ ரூபத்தைக் கொண்டும். விபவவிசேஷம்-விபவத்தின் உட்பிரிவு. ஹிரண்ய கர்ப்பாதிகள் 'வித்யாயி தேவாதி ரூபாதிரூபங்களாலே அதிஷ்டிதர்கள்' என்று ஸ்ரீ பரமத பங்கத்தில் இவர் தம்மாலேயே அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அர்ச்சாவதாரத்தை யருளிச் செய்கிறார்—'வரவர்ணஹாதி' என்றாரம்பித்து. 'ஆதி' சப்தத்தினால் விபவாவதாரம் சொல்லப்படுகிறது. ரூபங்கள் தானே-ரூபங்களே. அவர்களபேக்ஷித்தபடியிலே-'யே யதாமாம் ப்ரபத்யந்தே' இத்யாதிகளிற்படியே பக்தர்களினால் ப்ரார்த்திக்கப்பட்டபடியே. பிம்பாகாரத்வாதனா- நம்மால் செய்விக்கப்பட்ட பிம்பத்தினுடைய ஆகாரம்போன்ற ஆகாரத்தையுடைய தன்னுடைய அஸாதாரண அப்ராக்ருத திருமேனியைக் கொண்டு, பிம்பே- இந்த பிம்பத்தில், ஸாந்நித்யம் - ஸாந்நித்யத்தைச் செய்து, அவதிஷ்டதே - இருக்கிறார். நிற்கிற நிலை - நிற்கும் தசை. 'ஸர்வருடையவும்' என்பதினால் 'ஹ்ருத்யபேக்ஷயா து மனுஷ்யாதிகாரத்வாத்' என்கிற ஸூத்திரத்தில் சொல்லியிருக்கிறபடி உபாஸனத்தில் அதிகாரமுள்ள மனுஷ்யாதிகளின் ஹ்ருதயத்திலேயே இந்த ரூபம் ஆவிர்பவித்திருக்கிறது, பசுமுதலியவைகளுக்கு இல்லையென்பது தெரிவிக்கப்படுகிறது. ஹ்ருதயங்களிலே - ஹ்ருதய கமலங்களிலே, ஸூக்ஷ்மமாயிருப்பதொரு-கட்டைவிரல்போன்றிருக்கிற.

---

1 ஸ்ரீஸாத்வதஸம்ஹிதை-6-22.

**ரூவவிஶேஷத்தைக்கொண்டு நிற்கிற நிலே ஸஞயபூரூவதாரம். இது ஸவபூரஞயபூரசியான ஷிவ்ராதூஸ்வரூவத்தை யஙாஸநிக்க இழிவார்க்குத் துறையாக 1 'ஸஷூராஜயொமஸிஊரநாஂ ஹூரசுபூரமநிரதாதூநாஂ । யொமிநாசயிகாரஸ்ஸூர ஒெகஃஷிது ஹூரசயெஶயெ ॥' ஐதூரஷிகளிலே சொல்லுகையாலே ஸஞயபூரசிரூவ**

---

ஶ்ருதிகளில் எங்கும் நிறைந்த திவ்யாத்ம ஸ்வரூபத்தை அந்தர்யாமியென்று சொல்லியிருக்க இந்த ரூபத்தை அந்தர்யாமி என்று சொல்லுவதற்குக் காரணத்தை யருளிச் செய்கிறார்—'**இது**' என்றாரம்பித்து. **ஸவபூரஞயபூரசியான** - எங்கும் நிறைந்ததான, **ஸஙாஸ**நிக்க - உபாஸனம் செய்ய, **இழிவார்க்கு** - ஆரம்பிவிக்கிறவர்களுக்கு, **துறையாக** - மார்க்கமாக, அதாவது அந்தர்யாமியான ஸ்வரூபத்தை உபாஸனம் செய்வதற்கு த்வாரமாக இருப்பதினாலே இந்த ஹார்த்த ரூபத்தையே அந்தர்யாமி ரூபமென்று சொல்லுகிறது என்று தாத்பர்யம். இதில் ப்ரமாண மருளிச் செய்கிறார் — '**ஸஷூராஜயொம**' என்றாரம்பித்து. **ஸஷூராஜயொம** - யம, நியம, ஆஸந, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, தாரண, த்யான, ஸமாதி, என்கிற எட்டு அங்கங்களோடு கூடிய யோகத்தில், **ஸிஊரநாஂ** - ஸித்தி யடைந்தவர்களாயும், அதாவது ஆத்மாவலோகனத்தை யடைந்தவர்களாயும் என்றபடி, **ஹூரசுபூரமநிரதாதூநாஂ** - ஹ்ருதயத்திலிருக்கிற பகவானை யாராதனம் செய்வதில் ஆசையுடன் கூடிய மனதையுடையவர்ளாயு மிருக்கிற, **யொமிநாஂ** - யோகிகளுக்கு, **ஒெகஃஷிது** - ஒரு மூர்த்தியாகிய, அதாவது ஒரு மூர்த்தி என்று சொல்லப்படுகிற, **ஹூரசயெஶயெ** - ஹார்த்தனான பகவானிடத்தில், அதாவது அவனை ஆராதிப்பதில், **ஸயிகாரஃ** - அதிகாரம், **ஸ்ராத்** - உண்டாகும். இந்த ப்ரகரணத்தில் பரிஶுத்தமான பரமாத்மோபாஸனத்தைச் சொல்லி அதற்குபாயமாக ஆகாரத்தோடு கூடிய பகவானை த்யானம் செய்யவேண்டுமென்று நிரூபித்து, அதை ஏக மூர்த்தி சதுர்மூர்த்தி என்று பிரித்து, ஹார்த்தரூபத்தை '**ஒெகஃஷிது**' என்று ஏகமூர்த்தியாகச்சொல்லி, இதில் அதிகாரமில்லாத

---

1 **ஸ்ரீஸாத்வஸம்ஹிதை-2-7,8.**

மென்று சொல்லப்பட்டது. இப்படி யவதரிக்கிற ப்ராதுர்பாவங்களில் வகைகளெல்லாம் சுத்தஸத்வத்ரவ்யமயங்களாய் கர்மஸம்பந்தங்களோடு துவக்கறவருகையாலே சுத்தஸ்ருஷ்டியென்று பேர் பெற்றிருக்கும். இவ்வவ

அவதார ரஹஸ்யம். தாரங்களெல்லாம் ஸத்யங்களென்றும், இவற்றி லீச்வரனுக்கு ஜ்ஞாநாதிஸங்கோசமில்லையென்றும், இவ்விக்ரஹங்கள் சுத்தஸத்வமயங்களென்றும், இவற்றிற்கீச்வரேச்சாமாத்ரமே காரணமென்றும்,

---

வர்களுக்கு சதுர் வ்யூஹத்தில் அதிகாரம் என்று சொல்லியிருப்பதினால் இது பரமாத்மஸ்வரூபோபாஸனத்திற்கு வழி என்பது தெரிவிக்கப்படுகிறது. இப்படி அவதாரங்களை அருளிச் செய்து இதில் பரரூபம் முதலானஐந்துவிதமான ரூபங்களும் பரிசுத்தமான அப்ராக்ருத ரூபமென்றருளிச் செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. **கர்மஸம்பந்தங்களோடு** - புண்ய பாபரூபமான கர்மங்களோடும், அதின் பலமான ஸுகதுக்கங்களோடும், **துவக்கற** - கார்யகாரணபாவ ஸம்பந்தமில்லாமல். இந்த அவதாரங்களின் ரஹஸ்யார்த்தங்களையும், இதை அறிவதின் ப்ரயோஜனத்தையும் கீதாசார்யன் விஸ்தாரமாக நிரூபித்திருக்கிறான் என்று அங்கருளிச் செய்யப்பட்டிருக்கும் அர்த்தங்களை ஸங்க்ரஹித்தருளுகிறார்—'**இவ்வவதாரங்கள்**' என்றாரம்பித்து. '**ஸத்யங்களென்றும்**' என்பதற்கு இந்திர ஜாலாதிகளைப்போல மித்யையல்ல என்று தாத்பர்யம். இது 'பஹூநி மே வ்யதீதாநி' என்கிற ஶ்லோகத்தின் ஸங்க்ரஹம். அங்கு 'பஹூநி' என்றும், அர்ஜுநனுடைய ஜன்மத்தைஉதாஹரணமாகவும்சொல்லியிருப்பதினால் அவதாரங்கள் ஸத்யங்கள் என்பது த்யோதிதம். '**இவற்றில்**' இத்யாதியினால் 'அஜோ'பி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீச்வரோ'பி ஸந்' என்பதினர்த்தம் ஸங்க்ரஹீதம். அங்கு பரமாத்மாவின் அஸாதாரணங்களான குணங்களைஒன்றும்விடாமல் அவதரிக்கிறான் என்பது சொல்லப்படுகிறது. '**இவ்விக்ரஹங்கள்**' இத்யாதியினால் '**ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய**' என்பதினர்த்தம் சொல்லப்படுகிறது. அங்கு தனக்கு அஸாதாரணமான த்ரவ்யத்தை அதிஷ்டானம் செய்துகொண்டு அவதரிக்கிறான் என்று சொல்லப்படுகிறது. '**இவற்றிற்கு**' இத்யாதியினால்

தர்மரக்ஷணம் பண்ணவேண்டும் காலமே காலமென்றும், ஸாதுபரித்ராணாதிகளே ப்ரயோஜநங்களென்றும், இவ்வர்த்தந் தெளிந்த அநுஸந்திப்பார்க்கு தேஹஜந்மத்திலே ஸ்வாதிகாராநுகுண ஸாத்யோபாயவ்ருத்தியாலே ஜந்மாந்தரம் ஸம்பவியாதே முக்தராகலாமென்றும் 1 'பஹூநி மே வ்யதீதாநி' என்று துடக்கிய ஞ்சு

---

'ஸம்பவாம்யாத்மமாயயா' என்பது ஸங்க்ரஹீதம். அங்கு 'மாயா' ஶப்தம் 'மாயா வயுநம் ஜ்ஞாநம்' இத்யாதி நிகண்டுவின்படியே ஸங்கல்பமாகிற ஜ்ஞானத்தைச் சொல்லுகிறது. 'தர்மரக்ஷணம்' இத்யாதியினால் 'யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத। அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்॥' என்பதினர்த்தம் ஸூசிதம். 'ஸாதுபரித்ராணாதிகள்' என்கிற இடத்தில் 'ஆதி' ஶப்தத்தினால் துஷ்டர்களின் விநாஶம குறிக்கப்படுகிறது. இத்தால் 'பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம்। தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே॥' என்பது ஸங்க்ரஹீதம். 'இவ்வர்த்தம்' இத்யாதியினால் 'ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத:। த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந॥' என்பதின் அர்த்தம் சொல்லப்படுகிறது. 'தெளிந்த அநுஸந்திப்பார்க்கு' என்றது 'ஏவம் யோ வேத்தி தத்த்வத:' என்பதின் தாத்பர்யம். 'ஸ்வாதிகாராநுகுண ஸாத்யோபாய வ்ருத்தியாலே' என்பதினால் பக்தி ப்ரபத்திகளை விதிக்கிற ஶாஸ்திரங்கள் வ்யர்த்தமாகாது என்பது தெரிவிக்கப்படுகிறது. இவ்வவதாரரஹஸ்ய சிந்தனம் பக்தி ப்ரபத்திகளாகிற உபாயங்களை ஸரியாக முடிவுபெருமல் தடுத்துக்கொண்டிருக்கிற பாபங்களை நிவ்ருத்தி செய்கிறது. ஆகையினால் ஒரே ஜந்மத்திலேயே உபாயம் பூர்த்தியாகிறதாகையினால் அடுத்த ஜந்மமில்லாமலே மோக்ஷமுண்டாகிறது. ஆகையினால் இந்த அவதாரரஹஸ்ய சிந்தனம் அடுத்த ஜந்மத்தை நிவ்ருத்தி செய்யக் கூடிய உபாயபூர்த்திக்குக் காரணமாகிறது என்றர்த்தம். மே -

---

1 கீதை-4-5.

ஶ்லோகத்தாலே கீதாசார்யனருளிச் செய்தான். இது ஸ்வதந்த்ர ப்ரபத்திநிஷ்டனுக்கு ஶரண்யகுணவிஶேஷ ஜ்ஞாநஜந்யத்தாலே உபாயாநுஷ்டாநக்ஷணத்திலே மஹாவிஶ்வாஸாதிகளை ஸ்வீகரித்து உபகாரகமாம். இப்படியே அர்ச்சாவதாரமும் மிறுக்கற மோக்ஷத்தைத்

---

எனக்கு, **பஹூநி** - அநேகங்களான (ஜன்மங்கள்), **வ்யதீதாநி** - முன்னால் உண்டாயின. இந்த அவதார ரஹஸ்ய ஜ்ஞானம் ப்ராரப்த கர்மத்தையும் ஸ்வபாவத்திலேயே போக்கடிக்கக்கூடிய ஶக்தியையுடைய ப்ரபத்தியாகிற உபாயத்துக்கு எப்படி ஸஹாயமாகிறது என்பதை நிரூபித்தருளுகிறார்—'இது' என்றாரம்பித்து. **ஸ்வதந்த்ர ப்ரபத்திநிஷ்டனுக்கு** - பக்தியோகத்திற்கு அங்கமாகவல்லாமல் நேராக மோக்ஷமாகிற பலத்திற்காக ப்ரபத்தியை அநுஷ்டித்தவனுக்கு. **ஶரண்யகுணவிஶேஷஜ்ஞாநஜந்யத்தாலே** - ஶரண்யனாகிய பகவானுடைய ஸௌலப்ய ஸௌஶீல்ய காருண்யாதி ஶரண்யத்வோப யுக்த குணவிஶேஷங்களை யறிவதினாலே, **ஸ்வீகரித்து** - த்ருடப்படுத்தி, அதாவது ப்ரபத்தியை யனுஷ்டிக்கும்பொழுது மஹா விஶ்வாஸம் த்ருடமாயில்லையாகில் மஹா விஶ்வாஸம் வரும் வரையில் பலம் விளம்பிக்குமாகையினால் ஜந்மாந்தராதி ஸம்பாவனையுமுண்டு. அப்படிக்கில்லாமல் பின்னால் ஒரு ஸமயத்திலும் கலக்க முடியாதபடியான மாஹவிஶ்வாஸத்தை ப்ரபத்தி அநுஷ்டான காலத்தில் உண்டாக்கி சீக்கிரமாக உபாயம் யதாவத்தாக முடிவுபெறுவதற்கு (பலபர்யந்தமாவதற்கு), இது காரணம் என்று தாத்பர்யம். விபவாவதாரங்களில் இந்த உபகாரம் ஸம்பவித்தபோதிலும் அர்ச்சாவதாரத்தில் இந்த ப்ரயோஜனம் ஸம்பவிக்குமோ? நம்மால் செய்யப்பட்ட ப்ராக்ருதமான அர்ச்சை த்யானார்ச்சனாதி விஷயமாய்க் கொண்டு பாப நிவர்த்தகமாகுமோ? அதில் கலந்திருக்கும் அப்ராக்ருதபாகம் ஶாஸ்திரைக வேத்யமாகையினாலே பரரூபம் முதலியவைகளுக்குத் துல்யமாகையினால் நிஷ்ப்ரயோஜன மன்றோ? என்றிவை முதலிய ஶங்கைகளுக்குப் பரிஹாரம் அருளிச்செய்கிறார்— 'இப்படியே' என்றாரம்பித்து. **மிறுக்கற** - ப்ரயாஸ மில்லாமல். த்யானார்ச்சனாதிகளுக்கு ஸுலபமாய் விஷயமாயிருக்கிற இந்த

தருமென்னுமிடத்தை [1]'𑌸𑍁𑌰𑍂𑌪𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌂। 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌕𑌰𑍀𑌂 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌰𑌜𑌤𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ॥ 𑌤𑌾𑌮𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑍍𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍇𑌤𑍍𑌤𑌾𑌂 𑌯𑌜𑍇𑌤𑍍𑌤𑌾𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍। 𑌵𑌿𑌶𑌤𑍍𑌯𑌪𑌾𑌸𑍍𑌤𑌦𑍋𑌷𑌸𑍍𑌤𑍁 𑌤𑌾𑌮𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌂॥' என்று 𑌶𑍍𑌰𑍀𑌶𑍌𑌨𑌕

ப்ராக்ருத த்ரவ்யமயமான ரூபமே அப்ராக்ருத த்ரவ்யத்தோடு கலந்திருப்பதினுலே அது செய்யும் ப்ரயோஜனத்தையும் கொடுக்கிறது என்று தாத்பர்யம். இதற்கு ப்ரமாணம் நிரூபித்தருளுகிருர்—'**𑌸𑍁𑌰𑍂𑌪𑌾𑌂**' என்ருரம்பித்து. **𑌸𑍁𑌰𑍂𑌪𑌾𑌂** - அழகிய ரூபத்தோடு கூடியதாயும், **𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌂** - ப்ரஸந்நமான முகம், கண், இவைகளை யுடையதாயும், **𑌆𑌤𑍍𑌮𑌨𑌃** - தனக்கு, **𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌕𑌰𑍀𑌂** - ப்ரீதியைக் கொடுக்கக் கூடியதாயு மிருக்கிற, **𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃** - பகவானுடைய, **𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌂** - பிம்பத்தை, **𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌰𑌜𑌤𑌾𑌦𑌿𑌭𑌿𑌃** - தங்கம், வெள்ளி, முதலியவைகளினுல், **𑌕𑍃𑌤𑍍𑌵𑌾** - செய்து வைத்து, **𑌤𑌾𑌂** - அதை, **𑌅𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑍍** - ஆராதனம் செய்ய வேண்டும், **𑌤𑌾𑌂** - அதை, **𑌪𑍍𑌰𑌣𑌮𑍇𑌤𑍍** - ஸேவிக்க வேண்டும். **𑌤𑌾𑌂** - அதை (குறித்து), **𑌯𑌜𑍇𑌤𑍍** - யாகம் செய்ய வேண்டும், **𑌤𑌾𑌂** - அதை, **𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍** - த்யானம் செய்ய வேண்டும், **𑌅𑌪𑌾𑌸𑍍𑌤** - போக்கடிக்கப் பட்ட, **𑌦𑍋𑌷𑌸𑍍𑌤𑍁** - தோஷங்களை யுடையவனுய்க் கொண்டு, **𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌂** - பரப்ரும்ம ஸ்வரூபமாகிய, **𑌤𑌾𑌮𑍇𑌵** - அந்த ரூபத்தையே, **𑌵𑌿𑌶𑌤𑌿** - அடைகிருன். இத்தால் இதுவே பரமாத்ம ஸ்வரூபம் என்றனுஸந்தானம் செய்யவேண்டுமென்பது த்யோதிதம். அப்படியே ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகையில் '**𑌅𑌰𑍍𑌚𑌾𑌵𑌤𑌾𑌰𑌰𑍂𑌪𑌵𑌿𑌷𑌯𑍇 𑌪𑌰𑌰𑍂𑌪𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌂 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌂। 𑌯𑌥𑌾𑌽𑌽𑌹— '𑌤𑌾𑌮𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌂' 𑌇𑌤𑌿**' என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இங்கு '**𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌂**' என்பதற்கு அந்த அப்ராக்ருத ரூபமும் இதுவும் பிரிக்க வொண்ணுதபடி சேர்ந்திருக்கிறது என்று தாத்பர்யம். ப்ரபத்தி ஶாஸ்திரத்திற்கு விஶேஷ ப்ரவர்த்தகர்களான ஆழ்வார்களும் இதையே விஶேஷமாக அனுஸந்தித்து

1 விஷ்ணுதர்மம்-13-16.

பகவானருச்செய்தான். ஆழ்வார்களு மிவ்வவதார ரஹஸ்யத்தையு மவதாரவைலக்ஷண்யத்தையும் ப்ரசுரமாக அநுஸந்தித் திதற்குப் பேரணியாகப் பரத்வத்தைக்கண்டு போந்தார்கள். இப்படியிருக்கிற ஈஶ்வரன் தன்னாநந்தத்துக்குப் பரீவாஹமாகப் பண்ணும் வ்யாபாரங்கள் ஸகலஜகத்ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரமோக்ஷ ப்ரஶாஸநாதிகள்.

**லக்ஷ்மீதத்வ நிரூபணம்.**

இவ்வீஶ்வரன் 1 'நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ' இத்யாதிகளிற்படியே ஸர்வாவஸ்தையிலும் ஸபத்நீகனாய்க்கொண்டே யிருக்குமென்னுமிடத்தை 2 'தவைவ ந

---

இது அப்படிப்பட்ட பரமாத்மாவினுடையது என்பதற்காக பரரூபத்தையும் சில இடங்களில் அநுஸந்தித்திருக்கிறார்கள் என்றருளிச் செய்கிறார்—'ஆழ்வார்களும்' என்றாரம்பித்து. **ப்ரசுரமாக**-அதிகமாக. **பேரணியாக** - மூல காரணமாக. ஸ்திதி ஸித்தம் என்று திருவுள்ளம் பற்றி ப்ரவ்ருத்தியை யருளிச்செய்கிறார்—'**இப்படி யிருக்கிற**' என்றாரம்பித்து. '**தன்னாநந்தத்துக்கு**' இத்யாதியினால் பரிபூர்ணனான ஈஶ்வரன் ஜகத் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களைச் செய்வதற்குக் காரணம் த்யோதிதம். '**ஶாஸந**' பதத்தினால் அந்த:ப்ரவிஶ்யநியமனம் குறிக்கப்படுகிறது.

இப்படிப்பொதுவாக ஈஶ்வர தத்வத்தை நிரூபித்து அதின் உட்பிரிவாகிய லக்ஷ்மியின் ஸ்வரூபாதிகளை நிரூபிக்கவேண்டுமிடத்தில் கீழ் நிரூபிக்கப்பட்ட ஈஶ்வரதத்வத்தின் ஸ்வரூபாதிகளைப்போலவே இவளுடைய ஸ்வரூபாதிகளும்என்றுசொல்லுவதற்காக அப்படிப்பட்டதத்வம் உண்டு, அவள் ஸர்வப்ரகாரத்தாலும் ஈஶ்வரனுக்கு ஸமமானவள்,என்கிறவிஷயங்களில் ப்ரமாணங்களை நிரூபித்தருளுகிறார்—'**இவ்வீஶ்வரன்**' என்றாரம்பித்து. **ஜகந்மாதா** - லோகங்களுக்குத் தாயாராகிய, **ஏஷா**-இந்த, **ஶ்ரீ:**- லக்ஷ்மி யானவள், **விஷ்ணோ:** - பகவானுக்கு, **நித்யைவ** - எப்பொழுது மிருக்கிறாள், **அநபாயிநீ** - விட்டுப் பிரியாதவள். **ஸர்வாவஸ்தையிலும்** - உபாய தசை, உபேய தசை, காரண

---

1 வி-பு-1-22-53 2 ஆள - ஸ்தோ-4.

**யஃ'**, 1 **'ஶாதாவிதா'** என்கிற **ஶ்லோகங்களிலே யுவகார விஶேஷத்தாலே ஸாக்ஷமாக விஶேஷித்துச் சொல்லப் பட்ட வராஶரவராஜ்ஞாஶஹூவஙங்களிலே தெளிந்து கொள்வது. இவ்விடத்தில் ஊஜயாரகவமும், வாராஷ காரகவாஷிகளுமெம்பெருமானுக்கும் பிராட்டிக்கும்**

---

தசை, அவதார தசை முதலிய எல்லாத் தசைகளிலும். பராஶர பராங்குஶர்களின் ஆப்ததமத்வத்தை நிரூபித்தருளுகிறார்— **'தசெவ ந'** என்றாரம்பித்து. **உவகாரவிஶேஷத்தாலே** - அவ ரவர்கள் செய்த உபகாரத்தினாலே, அதாவது அந்தந்த ஶ்லோ கங்களில் அவரவர்கள் செய்த உபகாரமும் நிரூபிக்கப்பட்டிருக் கிறது என்று தாத்பர்யம். **'ஹூவஙங்களிலே தெளிந்துகோள் வது'** என்பதற்கு ஸ்ரீவிஷ்ணு புராணம், திருவாய்மொழி,முதலிய வைகளில் இவ்வர்த்தம் விஸ்தாரமா யருளிச் செய்யப்பட்டிருக் கிறது, அங்கு கண்டுகொள்வது என்று தாத்பர்யம். இப்படி ஸர் வாகாரத்தாலும் ஸத்ருஶை என்பது உபபந்நமாகுமோ? பிராட் டிக்குப் புருஷகாரத்வமும், எம்பெருமானுக்குத் தண்டதரத்வ மும், அதற்கு உபயுக்தங்களான காருண்ய ஶௌர்யத்வாதிக ளும் அங்கீகரிக்க வேண்டாவோ? எம்பெருமானுக்குப் புருஷ காரத்வமும் பிராட்டிக்குத் தண்ட தரத்வமும் ஒப்புக் கொண் டால் அநவஸ்தாதி தோஷங்கள் வாராதோ என்னில்? இதற்கு ஸமாதான மருளிச் செய்கிறார் — 'இவ்விடத்தில்' என்றாரம் பித்து. **'வாராஷகாரகவாஷிகளும்'** என்கிற இடத்தில் **'ஆஷி'** ஶப்தத்தினால் ம்ருதுத்வம், பதிஶேஷத்வம், முதலியவை ஸங்க்ரஹிக்கப்படுகின்றன. **கூறுக விஹஜித்த**-அவரவர்கள் பாக மாகப் பங்கு பிரித்துக்கொண்ட. **'விஹாமொநாஃ ஊவ்யஸஊஷா ய விஷயாணாஃநெகஷாவ்யோநாம தஷெகஷெஶெஷு வ்யவஹாவ நா'** என்று மிதாக்ஷரியில் வ்யவஹார காண்டத்தில் விபாக என் னும் பதத்திற் கர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சில த்ரவ்யங்களின் ஸமுதாயத்தில் அனேகம் பேர்களுக்கு ஓரே விதமான ஸ்வாமித்வம் ஏற்பட்டிருக்க, அவர்கள் தங்கள் தங்கள் ஸ்வாமித்வத்தை அந்த த்ரவ்யங்களின் ஏகதேஶத்தில் மாத்திரம் வைத்துக்கொள்ளுகை என்றர்த்தம். ஆகையினால்

---

1 ஆள - ஸ்தோ-5.

**கூறுக விபஜித்த வ்யாபாரங்கள். உபதிஷ்டகாந ப்ரகரணத்திற் காட்டி அதிதிஷ்டகாந ப்ரகரணத்துக்கு விசேஷம் ஸ்வத: ஸித்தமென்று உவரருளிச் செய்த**

---

இங்கு எல்லாக் குணங்களிலும் பிராட்டிக்கும் எம்பெருமானுக்கும் பாத்யதை இருந்தபோதிலும் இவர்களே ஏகதேசத்தில் பாத்யதையை பிரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது '**விபஜித்த**' என்றருளிச் செய்திருப்பதினாலேற்படுகிறது. இத்தால் எல்லாவிதக் குணங்களும் இருவருக்கும் இருந்தபோதிலும் ரஸானுபவத்திற்காகப் பிரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் த்யோதிதம். '**உபதிஷ்ட**மான' இத்யாதி—வேதங்களில் ப்ரக்ருதி யாகத்தில் எல்லா அங்கங்களையும் நேரிலேயே நிரூபித்து விக்ருதியாகங்களைச் சொல்லும்பொழுது ப்ரக்ருதி யாகத்தைப் போல் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. எந்த இடத்தில் எல்லாத் தர்மங்களும் சொல்லப்பட்டிருக்கிறதோ அதற்கு '**உபதிஷ்டகாந ப்ரகரணம்**' என்று பெயர். அப்படிக்கில்லாமல் கீழ்ச் சொல்லியதைப்போல என்று சொல்லியிருப்பதற்கு '**அதிதிஷ்டகாந ப்ரகரணம்**' என்று பெயர். இங்கு ப்ரக்ருதி யாகத்தைக் காட்டிலும் விக்ருதியாகம் வேறு? ஒன்று? என்று ஸம்சயம் உண்டாகில் எப்பொழுது அதைப்போல் இதைச் செய் என்று அதிதேசம் செய்திருக்கிறதோ அதினாலேயே ந்யாயாந்தரங்களை அபேக்ஷிக்காமலே இவை இரண்டுக்கும் ஸ்வரூபத்தில் பேதமுண்டென்பது ஸித்தம் என்று பூர்வமீமாம்ஸையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல '**யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம**', '**நித்யைவைஷாநபாயிநீ**' என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் அருளிச்செய்திருக்கிறபடியே எம்பெருமானுடைய குணங்களை நிரூபித்து பிராட்டி அதற்கு ஸமமான குணங்களையுடையவளென்று சொல்லியிருப்பதினால் '**அதிதிஷ்டகாந ப்ரகரணம்**' பிராட்டி, '**உபதிஷ்டகாந ப்ரகரணம்**' பகவான் என்பதேற்படுகிறது. ஆகையினால் இவர்களுக்கு ஸ்வரூபத்திலேயே பேதம் ப்ரமாணாந்தர மன்றிக்கே ஸித்திக்கும். எல்லாக்குணங்களும் இருவர்களுக்குமுண்டு. ஆனாலும் இவர்கள் கூறுக விபஜித்துக் கொண்டிருக்கிறார்கள் என்னில் ஸ்வரூபத்திற்கு வைஷம்யமுண்டு என்று சொல்லுகிற

துக்குமிப்படி விபாகத்தால் வந்த வைஷம்யத்திலே தாத்பர்யம். இது [1] 'யௌவநாதிஷு துல்யேஷ்வபி' என்கிற ஶ்லோகத்திலே நிர்ணீதம். [2] 'இறைநிலையுணர்வரிது'

---

மீமாம்ஸா ந்யாயத்திற்கு விரோதம் வருகிறதே என்று ஶங்கை த்யோதிதம். 'உவர்' என்றது மத்யஸ்தர்களான மீமாம்ஸகர்கள். 'இப்படி விபாகத்தால் வந்த வைஷம்யத்திலே தாத்பர்யம்' இத்யாதிக்கு 'ஸ்வத: ஸித்தம்' என்பதற்கு ஸ்வரூபத்திலேயே பேதம் ஏற்பட்டது என்று தாத்பர்யமல்ல. இப்படி அதிதேஶம் செய்ததினாலேயே வேறு ப்ரமாணம் ந்யாயம் முதலியவைகளினால் நிரூபிக்காமல் பேதம் ஸித்திக்கிறதுஎன்பதில் மாத்திரம் தாத்பர்யம். ஆகையினால் இது இந்த விபாகத்தினால் வந்தபேதத்தையே குறிக்கிறது. இந்த விபாகமும் இவர்களுடைய ஸ்வபாவத்தினாலேற்பட்டது என்பதைச் சொல்லுகிறபடியினாலே விரோதமில்லை என்று தாத்பர்யம். இங்கும் ப்ரமாணபராமர்ஶமில்லாமலே இந்தப்பேதம் ஸித்திக்கிறபடியினால் 'ஸ்வத: ஸித்தம்' என்னக்குறையில்லை என்று திருவுள்ளம். 'வைஷம்யத்திலேதாத்பர்யம்' என்பதற்கு இந்தவைஷம்யம்ப்ரமாணநிரபேக்ஷமாகஏற்படுகிறது என்று அர்த்தம். இப்படி இந்த விபாகம் இவர்கள் இருவரும் ஸம்மதித்துச் செய்து கொண்டதென்பதற்கு ஸாம்ப்ரதாயிகமான ப்ரமாணம் காட்டியருளுகிறார்—'யௌவநாதிஷு' என்றாரம்பித்து. 'யௌவநாதிஷு துல்யேஷ்வப்யபரவஶதா ஶத்ருஶாட் நவஷ்டிரகாதீந் க்ருத்வா பகவதி குணாந் பும்ஸஸாதாரணாந்| த்வயி ஸ்ரீஸௌகுமார்ய பதிவ்ரதாத்வ கருணாக்ஷாந்தீந் ஸ்த்ரீ போக்யம் பவதி யுவயோ ராத்மநிஷ்டா||' என்று பூர்ணஶ்லோகம். யௌவனம் முதலிய குணங்களெல்லாம் உங்கள் இருவருக்கும் ஸமானமாயிருக்க ஒருவருக்கும் கீழ்ப்படியாமை, ஶௌர்யம், தைர்யம், முதலிய புருஷர்களுக்கு அவஶ்யம் வேண்டிய குணங்களைப் பகவானிடத்தில் வைத்து, ஸ்திரீகளுக்கு ஸ்வாபாவிகங்களான மார்த்தவம், தயை, பர்த்தாவிற்குக்கீழ்ப்படிந்திருக்கும் தன்மை முதலியவைகளை, உம்மிடத்தில் வைத்துக்கொண்டிப்படி அனுபவிப்பதற்காக உங்களிருவர்

---

1 ஸ்ரீ குணரத்னகோசம் - 34. 2 திருவாய்மொழி-1-3-6.

என்றாழ்வாரருளிச்செய்த நிலத்திலேயேதேனுமொருவர்யா நிஷேத்யமாகாது.[1] '**க்ஷுத்ராநர்த்தாம்ஸ்தத: கேசிதக்ஷுத்ராம்ஸ்தத்ர குர்வதே**' என்கிறபடியே **தர்க்கவாக்ஜால**த்தாலே நினைத்ததெல்லாம் **ஸா**யிக்கலாயிருக்கச்செய்தேயிறே நாம் **ப்ரமாணஶரண**ராய்ப் போருகிறது. ஆகையால்லிவ்வீ**ஶ்வர**தத்வத்தையு மீ**ஶ்**

---

களுக்குள் ஏற்பட்ட பிரிவு இது என்று தாத்பர்யம். **இறை** - ஈஶ்வரனுடைய, **நிலை** - ஸ்திதியின், **உணர்வு** - அறிகை, **அரிது** - அஶக்யம். 'ஆழ்வாரருளிச்செய்த நிலத்திலே' இத்யாதிக்கு 'மயர்வறமதிநலமருளினன்' என்கிறபடியே இவ்விஷயத்தில் ஸர்வஜ்ஞனான ஆழ்வார் ப்ரமாண ப்ரதிபந்நமானபடியே யறியவேண்டியதே தவிர யுக்திகளினால் கல்பிக்கமுடியாது என்றருளிச் செய்திருக்கும் இடத்தில் அஜ்ஞர்களான நாம் நிஷ்ப்ரயோஜனமான நிர்பந்தங்களைச் செய்யலாகாது என்று தாத்பர்யம். இந்தத் தத்வங்களில் யுக்திகளினாலே வாஸ்தவார்த்தை அந்யதாகரிக்க ஶக்தியுடையவனா யிருந்தும் ப்ரமாணத்தைக் கொண்டே நிரூபித்திருக்கிறோம் என்றருளிச் செய்கிறார்—'**க்ஷுத்ராநர்த்தாந்**' என்றாரம்பித்து. அன்றிக்கே அப்படி வ்ருதா நிர்ப்பந்தம் பண்ண யத்தனித்தால் அதிலும் நமக்கு ஶக்தியில்லாமையினால் இல்லை, நம்மிஷ்டத்தை ஸாதித்துக்கொள்ளக்கூடிய ஶக்தியுடையவராக இருந்தபோதிலும் வஸ்து ஸ்திதியைச் சொன்னோம் என்றருளிச் செய்கிறாராகவுமாம்—'**க்ஷுத்ராநர்த்தாந்**' என்றாரம்பித்து. **தத:** - ஸவனங்கள் முடிந்த பிறகு, **தத்ர** - அந்தத் தர்மபுத்திரருடைய யாக ஶாலையில், **க்ஷுத்ராந்** - அல்பங்களான, **அர்த்தாந்** - அர்த்தங்களை, **கேசித்** - சிலர், **அக்ஷுத்ராந்** - பெரியதுகளாக, **குர்வதே** - செய்கிறார்கள். **நினைத்த தெல்லாம்** - ப்ராமாணிகமாகவோ அப்ராமாணிகமாகவோ நினைத்த எல்லாவற்றையும், **ஸாயிக்கலாயிருக்கச் செய்தே**-ஸ்தாபிக்கக்கூடியஶக்தி உடையவனாயிருக்கச் செய்தே. இப்படி ப்ரமாணங்களில் சொல்லியபடி ஈஶேஶிதவ்ய தத்வங்களைத் தெளியவேண்டிய தவஶ்யமானாலும் புவனகோஶங்கள்,

---

1 பார-ஸபா-39-5.

தத்த்வங்களையும் யதாவஸ்தாநந் தெளியப் ப்ராப்தம். இவ்விடத்தில் ஸர்வஜ்ஞனாகவும் வேண்டா, ப்ரக்ருத்யவயவங்களிற் போலே ப்ரஹ்மாண்டாவயவங்களான வற்றி லபிநிவேசம்பண்ணவும் வேண்டா, அவகாஹ்யமான கடலிலே படகோடுவார் வழி முதலாக வேண்டுவன தெளியுமாப்போலே யிவ்வளவு விவேகிக்கை யவஶ்யாபேக்ஷிதம். இது ப்ரதிஷ்டிதமாகைக்காக இவற்றின் விரிவுகளெண்ணுகிறது.

---

அதின் பரிணாமாதிகள், ப்ரக்ருத்யாதிகளுடைய காலவிபாகங்கள், முதலியவைகளை நிரூபிக்காததற்குக் காரண மருளிச் செய்கிறார்—'**இவ்விடத்தில்**' என்றாரம்பித்து. **இவ்விடத்தில்** - இத்தத்வங்களைப்பற்றிய ஜ்ஞானத்தில். **ப்ரக்ருத்யவயவங்கள்** - ப்ரக்ருதியின் அவயவங்களும், அதின் காலபரிணாமாதிகளும். **ப்ரஹ்மாண்டாவயவங்கள்** - அண்டாவரணம் முதலியவைகளைப்பற்றிய ஜ்ஞானம், **அபிநிவேசம்** - அவைகளை யறியவேண்டுமென்கிற ஆசை. இவ்விடத்தில் '**நிஶ்ஶேஷாம்ஶஸ்த்தவ்ருத்திம் நிகில குணஸமுதாயாந்வயம் த்ரவ்யமேகம் ஸம்வேத்தி ஸூத்ரீநாம் । நிஷ்கர்ஷகம் கஸ்த்விதந்ய: ப்ரஹ்மாண்டாவயவக்ஷணாவாயத்தாநாம் க்ஷேத்ரஜ்ஞாவாயத்த ஶிக்ஷா ஶதஶாணிதஶேத ப்ரத்யக்தாதத்த:॥**' என்று ஸ்ரீதத்வ முக்தாகலாபத்தில் அருளிச் செய்திருப்பது அனுஸந்தேயம். இப்படி ஜ்ஞாதவ்யங்களில் சிலவற்றை ஆவஶ்யகமென்றும் சிலவற்றை அநாவஶ்யகமென்றும் தள்ளுவதற்கு ஸத்ருஷ்டாந்தமாகக் காரணம் காட்டி யருளுகிறார்—'**அவகாஹ்யமான**' என்றாரம்பித்து. **படகோடுவார்** - கப்பலை நடத்துபவர்கள். '**வேண்டுவன தெளியுமாப்போல**' என்பதற்குக் கப்பல் ஓட்டுவதற்கு அனுபயுக்தங்களான ஸமுத்திரத்தின் அடியில் இருக்கும் மண்முதலியவைகளின் வர்ணம் முதலியவைகளை அறிகிறதில்லை, போகும் வழி முதலியவைகளை மாத்திரம் அறிந்துகொள்ளுகிறார்கள், அதைப்போல என்று தாத்பர்யம். ஆனாலும் ஸ்ரீமந் ந்யாயதத்வம், ஸ்ரீஸித்தித்ரயம், ஸ்ரீமந் ந்யாயபரிஶுத்தி, ஸ்ரீமந் ந்யாயஸித்தாஞ்ஜனம், முதலிய க்ரந்தங்களை யருளிச் செய்திருப்பதற்கு ப்ரயோஜனம் நிரூபித்தருளுகிறார்—

தத்வங்களில் ஏறவும் சுருங்கவும் பண்ணும் விபாகங்களின் தாத்பர்யம்.

இப்படி மூன்று தகூவங்களாக வகுத்து விஷித் தாற்போலே ஸவ-ுவிஶிஷு வெஷத்தாலே யீஶ்வரனேக தகூவமாக வ நுஹவஸாஙிப் பார்க் கும், ஶுஂமெஶுஶிதவுங்கள் ஆுதாநாதுாக்கள் உவாயெர வெவயங்க ளென்றாற்போலே யிரண்டய-ும் ஜ்ஞாதவுமாக வகுப்பார்க்கும், ர க்ஷ்ும் ரக்ஷகன் ஹெயமுவாஜெய மென்றிப்புடைகளிலே கூய-ுவதுா ஷுயம் ஜ்ஞாதவுமாக ஸஂரூஹிப்பார்க்கும், முன்பு சொன்னபடியே கூய-ுவஞுகும் ஷடய-ுங்களென்று விவெகிப்பார்க்கும், ரஹஸு ஶாஸுங்களிற்படியே ஸுவஷாய-ுவிஞாதிகள் பண்ணுவார்க்கும், அவ் வோஜ்ஞாநாநுஷ்ாந வூதிஷ்ாரவெங்களான வூயொ

---

'இது' என்றாரம்பித்து. இது-இத்தத்வவிவேகம். வூதிஷ்தமா கைக்காக - ஸ்திரமாய் நிற்பதற்காக, அதாவது ப்ரதிவாதிகளி னுடைய யுக்திகளாலே கலக்கப்படாமலிருப்பதற்காக என் று தாத்பர்யம். விரிவுகள் - விஸ்தாரமாக நிரூபிக்கும் ஶாஸ் திரங்கள். தத்வங்கள் ஒன்றென்றும், இரண்டென்றும், அங்கங் கே நிரூபித்திருப்பதற்கும், இங்கு மூன்று தத்வங்கள் என்று நிர்த்தாரணம் செய்திருப்பற்கும் தாத்பர்ய மருளிச் செய்கிறார்— 'இப்படி' என்றாரம்பித்து. ஸவ-ு விஶிஷு வெஷத்தாலே- சேதனுசேதனங்களை ஶரீரமாகவுடையவனுயிருக்கிற ஆகாரத்தி னாலே. ஏகதகூவம் - ஒரு தத்வம். இது ஸ்ரீமந் ந்யாய ஸித் தாஞ்ஜனத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. 'அவ்வோஜ்ஞாநாநு ஷ்ாந' இத்யாதிக்கு அப்படித் தெரிந்து கொள்ளுவதினுல் அததற்குத் தகுந்த அனுஷ்டானங்களும் அனுஸந்தானங்களு மாகிற ப்ரயோஜன விஶேஷங்கள் உண்டென்று அறிந்துகொள் ளவும் என்று தாத்பர்யம். அதாவது தத்வம் ஒன்றென்று நிரூ பித்திருப்பதற்கு ப்ரபஞ்சங்கள் எல்லாம் அவனுக்குப்பராதீனம், அவனொருவனுமே ஸ்வதந்திரன் என்கிற ஜ்ஞானத்தின் ப்ரதிஷ் டையும்; இரண்டென்று நிரூபித்திருப்பதற்குத் தேஹாதிகள் ஆத்மாவல்ல, உபாயமும் ப்ராப்யமும் பகவானே, மற்றவை

**ஜந விஶேஷங்கள் கண்டுகொள்வது. 1 'ஶாஸ்த்ரஜ்ஞா நம் பஹுக்லேஶம் புத்தேஶ்சலநகாரணம் | உபதேஶாத் ஹரிம் புத்வா விரமேத் ஸர்வகர்மஸு ||' என்கிறது உபயுக்தமான ஸாராம்ஶத்தைக் கடுக ஶ்ரவணம் பண்ணி க்ருஷிபண்ணுதே யுண்ணவிரகுடையவன் க்ருஷி விளைவையை விடுமாப்போலே விரிவுகற்கைக்கீடான**

ஸ்வரூபானுசிதம் என்கிற ஜ்ஞான ப்ரதிஷ்டையும்; நான்கு என்று நிரூபித்திருப்பதற்கு அநந்யகதித்வ ஜ்ஞான ப்ரதிஷ்டையும், ஹேயோபாதேயவிபாக ஜ்ஞான ப்ரதிஷ்டையும்; அர்த்த பஞ்சக ஷடர்த்த நிரூபணங்களுக்குக் கீழ் அதிகாரங்களில் நிரூபிக்கப்பட்ட ஜ்ஞான ப்ரதிஷ்டையும்; ஏழு பதார்த்தம் என்றதற்கு ஸ்வாதீந கர்த்ருத்வ போக்த்ருத்வம், ஸ்வார்த்த கர்த்ருத்வம், போகத்ருத்வம், இவைகளை நிவ்ருத்தி செய்கிற ஜ்ஞான ப்ரதிஷ்டையும் ப்ரயோஜனங்கள் என்று தாத்பர்யம். இப்படி தத்வத்ரயங்களை அவஶ்யமறிய வேண்டுமென்பதற்கும், 'உபதேஶாத்ஹரிம்புத்வாவிரமேத்ஸர்வகர்மஸு' என்று சொல்லியிருப்பதற்கும் தாத்பர்ய விரோதமில்லை என்று நிரூபித்தருளுகிறார்— '**ஶாஸ்த்ரம்**' என்றாரம்பித்து. **ஶாஸ்த்ரஜ்ஞாநம்** - ஶாஸ்திரத்தைத் தெரிந்துகொள்ளுவது, **பஹுக்லேஶம்** - அதிகக்கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது, **புத்தேஃ** - புத்தியின், **சலநகாரணம்** - சலிப்பதற்குக் காரணம், (ஆகையினால்) **உபதேஶாத்** - ஆசார்யர்களின் உபதேஶத்தினாலே, **ஹரிம்** - பகவானை, **புத்வா**- அறிந்து, **ஸர்வகர்மஸு**-எல்லாக் கர்மங்களிலிருந்தும், **விரமேத்** - ஓய்வை யடையவேண்டும். இதற்கு அவஶ்யம் ஜ்ஞாதவ்யங்களான தத்வத்ரயங்களைப்பற்றிய ஜ்ஞானத்தை ஸம்பாதிக்க வேண்டாமென்பதில் தாத்பர்யமல்ல. ஶாஸ்திரம் முதலியவைகளில் பரிசயப்பண்ண இஷ்டமும் ஶக்தியும் இல்லாதவன் உபயுக்தமாய் அவஶ்யம் ஜ்ஞாதவ்யங்களான அர்த்தங்களை சீக்கிரத்தில் தெரிந்துகொண்டு உபாயத்தில் த்வரைப்படவேண்டும் என்பதில் தாத்பர்யம். இதற்கு உதாஹரணம் அருளிச் செய்கிறார்— '**க்ருஷிபண்ணுதே**' என்றாரம்பித்து. '**ஸர்வகர்மஸு**' என்பதற்கு எல்லாக் கர்மங்களையும் விட்டுவிடவேண்டும் என்றர்

1

ஶாஸ்த்ராப்யாஸாதிகாரணங்களிலுபரததனாய்க் கடுக ஶோ
க்ஷோபாயத்திலே மூள ப்ராப்தமென்றபடி.

உபயுக்தேஷு வைஶத்யம் த்ரிவர்க்க நிரபேக்ஷதா |
கரணத்ரயஸாரூப்யமிதி ஸௌக்யரஸாயனம் ||

தேற வியம்பினர் சித்துமசித்துமிறையுமென
வேறுபடும் வியன்றத்துவமூன்றும் வினையுடம்பில்
கூறுபடுங் கொடுமோகமுந் தானிறையாங் குறிப்பும்
மாற நினைந்தருளான் மறைநூல்தந்த வாதியரே.

---

த்தமல்ல. புத்தியை சலிப்பிக்கக்கூடியதாகக் கீழ்ச் சொல்லப்பட்ட ஶாஸ்திராப்யாஸத்திலிருந்து ஓயவேண்டும் என்று தாத்பர்யம். ஆகையினுல் உபயுக்தாம்ஶத்தில் அவஶ்யம் ஜ்ஞாதவ்யாம்ஶத்தை ஸம்பாதிக்கவேண்டுமென் றருளிச் செய்கிறுர்—'உபயுக்தேஷு' என்றுரம்பித்து.

ப-ரை] **உபயுக்தேஷு** - உபயுக்தமான அர்த்தங்களில், **வைஶத்யம்** - தெளிவும், அதாவது ஸம்ஶயாதிகளற்ற ஜ்ஞானமும், **த்ரிவர்க்க நிரபேக்ஷதா** - தர்மார்த்த காமங்களாகிற மூன்று புருஷார்த்தங்களில் ஆசையில்லாமையும், **கரணத்ரயஸாரூப்யம்** - மனுேவாக்காயங்களாகிற மூன்று கரணங்களும் ஒரே மாதிரியாக இருப்பதும், **இதி** - என்கிற இவைகள், **ஸௌக்யரஸாயனம்** - ஸௌக்யத்திற்கு ஓர் ரஸாயனம். '**இதி**' என்பதற்கு இதுவும், இதைப்போன்றவைகளும் என்றர்த்தம்.

கீழ்க் குறித்த தத்வத்ரயங்களின் ஸ்வரூபாதிகளை நம் பூர்வாசார்யர்கள் தமக்குத் தேஹாத்ம ப்ரமாதிகள் நிவ்ருத்திப்பதற்காக வுபதேஶித்தார்கள், ஆகையினுல் ஶாஸ்திரங்களில் பலவிதங்களாகச் சொல்லியிருந்தபோதிலும் இத்தத்வத்ரயங்களைப்பற்றி நிஷ்க்ருஷ்டமான ஜ்ஞானத்தைப் பெற்றேும் என்றவர்களிடத்தில் க்ருதஜ்ஞதானுஸந்தானத்தையும், இதின் ஸாம்ப்ரதாயிகத்வத்தையும் ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறுர்—'**தேற வியம்பினர்**' என்றுரம்பித்து.

ப-ரை] **மறைநூல்** - வேதாந்த ஶாஸ்திரத்தை, **தந்த** - நமக்கு உபதேஶித்தவர்களான, **ஆதியர்** - நம்பூர்வாசார்யர்கள், அன்றிக்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இதி ஸ்ரீ கவிதார்கிக ஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரே

தத்த்வத்ரயசிந்தநாதிகார: பஞ்சம:

—

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

சீரார்தூப்புற்றிருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

---

கே, **வாதியர்** - வாசாலகர்களான நம்பூர்வாசார்யர்கள் என்ருகவுமாம், **வினையுடம்பில்** - கர்மங்களோடு சேர்ந்ததான ஶரீரத்தில், **கூறுபடும்**-கூருகப்படும், அதாவது அதிகப்பாகமாக உண்டாகும் என்றர்த்தம், தேஹேந்திரியாதிகளில் ஆத்ம ப்ரமும் ஸ்வதந்திராத்மப்ரமுமாகிய இவைகளுக்குள் தேஹமே ஆத்மாஎன்கிற ப்ரமம் பெரும்பாலும் உண்டாகிறது என்று திருவுள்ளம். அன்றிக்கே, **கூறுபடும்** - அந்தத்தேஹத்தின் ஏகதேஶங்களில் உண்டாகும் என்றர்த்தமாகவுமாம், **கோடு** - க்ரூரமான, **மோகமும்** - அஜ்ஞானமும், இங்கு 'கோடு' மையாவது லோகாந்தரங்களில் அனுபவிக்கிற புருஷார்த்தங்களுக்கு உபாயங்களான வைதிகக் கார்யங்களெல்லாவற்றிலும் அதிகாரியல்லாமல் செய்வது. **தானிறையாம்** - தானே ஈஸ்வரனுகும், அதாவது ஸ்வதந்த்ரனுகும், **குறிப்பும்** - எண்ணமும், **மாற நினைந்து** - நஶிக்கவேண்டும் என்று நினைத்து, **அருளால்** - க்ருபையினுல், **சித்தும்**-சேதனமும், **அசித்தும்** - அசேதனமும், **இறையும்** - ஈஸ்வரனும், **என** - என்று

சொல்லப்பட்ட, **வியன்**-விலக்ஷணங்களான, **தத்துவம் மூன்றும்**-மூன்று தத்வங்களையும், **தேற** - தெளியும்படி, அதாவது பரவாதிகளின் யுக்தி முதலியவைகளினுல் கலங்காமலிருக்கும்படி, **இயம்பினர்** - உபதேஸித்தார்கள்.

இப்படி 'அவ்வோஜ்ஞாநாநுஷ்டாந ஹ்ருதிஷ்டாரங்களான'வென்றருளிச் செய்திருப்பது ஸங்கதமாகுமோ? இதற்கு முன் ஏற்பட்ட மதங்களை நிராகரித்து தத்வத்ரயங்களை ஸ்தாபித்ததினுல் இதற்குமுன்னேற்பட்ட ஸங்கைகளைப் பரிஹரித்த போதிலும் இனிவரப்போகிற மதங்களினுல்அனேகம் ஸங்கைகள் உண்டாகுமாகையினுல் அவைகளினுல் இந்தத்தத்வத்ரயஜ்ஞான த்திற்குக் கலக்கமுண்டாகுமே? என்றிவை முதலிய ஸங்கைகளைப் பரிஹரித்தருளுகிறுர்—'**ஆவாபோத்வாபத:**' என்றாரம்பித்து.

ப-ரை] **தத்தத்வஸ்துஷு** - அந்தந்த வஸ்துக்களில், **அஸ்திநாஸ்தீதி** - உண்டு, இல்லை, என்கிற வார்த்தைகளின், **ஆநந்த்யாத்** - எல்லையில்லாமையினுலே, அதாவது இப்படிப்பட்ட வார்த்தைகள் அனேகங்களாகையினுலே, **ஆவாபோத்வாபத:** - சேர்த்துக் கொள்ளுதல், தள்ளுதல், இவைகளினுலும், **அநவதி** - எல்லை இல்லாத, **கூஹநாயுக்தி** - கபடயுக்திகளினுலே, **காந்தா:** - அழகான, **க்ருதாந்தா:** - ஸித்தாந்தங்கள், **கவிபிரிவ ஸ்ருஷ்டா:** - கவிகளினுடையபுத்தியினுலேற்படுத்தப்பட்ட விசித்திரங்களைப்போல, அதாவது விசித்ரங்களான அர்த்தங்களைப்போல, **கதிகதி** - எவ்வளவு, **ஸ்யு:** - இருக்கக்கூடும் (இனிஉண்டாகக்கூடும் என்று தாத்பர்யம்), **நிஸ்ஸங்க:** - தனக்கு ஸத்ருஸமொன்றில்லாத, **தத்வாலோகஸ்து** - தத்வஜ்ஞானம், **ஸஹஸா**-சீக்கிரத்தில், **தாந்**-அந்த, **ஸர்வாந்**-எல்லாவற்றையும், **ரோத்தும்** - போக்கடிப்பதற்கு, **ப்ரபவதி** - ஸக்தியுடையதாகிறது, **பும்ஸ:** - புருஷனுயிருக்கை, **தத்வேந** - உண்மையாக, **த்ருஷ்டேஸதி** - பார்க்கப்பட்டிருக்கும்பொழுது, **ஸ்தாணுத்வாதி:** - கட்டை முதலியதாயிருப்பது, **புநரபி** - மறுபடியும், **நப்ராணிதாபுந:** - உயிரோடிருக்கப் போகிறதில்லையல்லவா.

'கவியீவிதூவக' என்பதற்குக் கவிகள் ஒரு அர்த்தத்தையே தங்கள் தங்கள் புத்தியினுல் சில விஸேஷங்களைச்சேர்த்துக்கொண்டும், சில விஸேஷங்களைத் தள்ளிவிட்டும், பலவிதமாக எழுதுவதைப்போல என்றர்த்தம். 'ஸுஷிநாஷெஷூா:' என்பதற்கு ஸர்வமும் ஸூந்யம் என்றும், ஜ்ஞானம்மாத்திரம் உண்டு என்றும், இப்படி இருக்கிறது இல்லை என்று சொல்லுவது என்றர்த்தம். 'ஸூவாவொஷாவத:' என்பதினுல் ஜ்ஞானம் என்று ஒன்றை ஒப்புக்கொண்டு அது க்ஷணிகமென்றும், அது நித்யமென்றும், அது நிராஸ்ரயமென்றும், ஆஸ்ரயத்தையுடையதென்றும் சொல்லுவது தெரிவிக்கப்படுகிறது. 'கூஹநாயூக்தி' என்பதற்கு விசாரிக்கும் இடத்தில் யுக்திகளல்லாமற்போகுமவைகளான சலம், ஜாதி, முதலிய யுக்த்யாபாஸங்களையும், ஹேத்வாபாஸங்களையும், யுக்திகளாகச் சொல்லுகிருர்கள் என்று தாத்பர்யம். 'நிஷூஃ:' என்பதினுல் தனக்கு ஸமமானதும், மேற்பட்டதுமில்லை என்று அர்த்தாத் ஸித்திக்கிறபடியினுலே தன்னைவிட அதிகப் பலமுள்ள ப்ரமாணத்தினுல் விரோதமாகிற பாதமும், ஸமமான பலமுள்ள ப்ரமாணத்தினுல் தடுக்கப்படுவதாகிய ப்ரதிரோதமும் இல்லை என்பது தெரிவிக்கப்படுகிறது. 'ஸஹஸா' என்பதினுல் வேறொரு யுக்தி முதலியவைகளை எதிர்பாராமல் அவைகளைத்தானே நாசம் செய்துவிடுகிறதென்று தாத்பர்யம். 'வாஂஷெஸு' இத்யாதி இதற்குப் பொதுவான உதாஹரணம். இதின் கருத்தாவது—ஒரு வஸ்துவைப் பார்க்கும்பொழுது பெருத்து உயரமாய் நிற்கிற நிலையில் புருஷனே, மரக்கட்டையோ என்கிற ஸம்ஸயம் உண்டாகிறது. பிறகு கை கால் முதலிய அவயவங்களின் அமைப்புக்களை ப்ரத்யக்ஷமாகப் பார்த்ததினுலே புருஷனென்றுநன்றுயறிந்த பிறகு கட்டை என்ருவது, புருஷன் என்பதற்கு விரோதமான மற்ற வேறு எதுவாவது என்கிற ஸந்தேஹம் உண்டாகாது. அதைப்போலத் தத்வஜ்ஞானம் ஸரியாக நிரூபிக்கப்பட்டிருந்தால் இனிவரப்போகிற ஸகல ஸம்ஸயங்களையும் நிவ்ருத்தித்துவிடும் என்று தாத்பர்யம். அன்றிக்கே வேதாந்த ஸித்தமான மற்றொரு அர்த்தத்தை இங்கு உதாஹரித்தருளுகிருரா கவுமாம்—'வாஂஷெஸு' என்ருரம்பித்து. ஜகத்காரண வஸ்துவுக்குப் புருஷத்வம் உண்மையாக அறியப்பட்டதேயா

ணுல் அதற்கு ருத்திரனுயிருக்கை முதலிய ஸம்ஸயம் பிறபாடு உண்டாகாது. புருஷன் என்கிற ஸப்தம் புருஷ ஸூக்தம், புருஷ நிர்ணயம், முதலிய க்ரந்தங்களில் ஸ்ரிய:பதியான பகவானையே சொல்லுகிறதென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ‘ஹரவாநிதி ஸெவொட௦ தயா வாஉாஷ உதாவி। நிராவாய வ வமெதவெத வாஸாஷெவெ ஸநாதமெந॥’ இத்யாதி ப்ரமாணங்களினுல் பகவத் பரமென்றேற்பட்டிருப்பதினுல் ஜகத் காரண வஸ்து ருத்திரன் என்றிவை முதலிய ப்ரமம் உண்டாகாது என்று தாத்பர்யம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம்
**ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமிகளினுல்**
செய்யப்பட்ட

**ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார வ்யாக்யானத்தில்**
**தத்வத்ரயசிந்தநாதிகாரம்**
முற்றிற்று.